
உடையார்
பாகம்-3
பாலகுமாரன்

# உடையார்

## (மூன்றாம் பாகம்)

பாலகுமாரன்

**மின்னூலாக்கம் : செல்லா**

**விசா பப்ளிகேஷன்ஸ்**
புதிய எண்: 16, பழைய எண் 55,
வெங்கட் நாராயணா சாலை,
தி.நகர், சென்னை—600 017.
☎: 24342899
Fax: 91 - 44 - 24341559

முதற் பதிப்பு: டிசம்பர், 2004

உரிமை: ஆசிரியருக்கு

# மாமன்னன் இராஜராஜ சோழனின் வரலாறு

விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

**UDAIYAAR - PART III** (History of Cholas)

By: Balakumaran

First Edition: December, 2004

No. of Pages: 504 + VIII = 512

Size: Demy

Paper used: N.S. 70 G.S.M. Maplitho

**விலை ரூ. 225/–**

Available at:
**THIRUMAGAL NILAYAM**
New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017
Phone: 24342899

Laser Typeset By: Sivaa Graphics, Chennai-94. Ph: 23610810

Printer at: உதயம் ஆப்செட்ஸ், சென்னை – 2. ✆ 2845 1906

என் மீதும் என் குடும்பத்தினர் மீதும்
அன்பும் அக்கறையும் கொண்ட என் நண்பர்

**கோவை ஸ்ரீ ரவிச்சந்திரனுக்கும்**

அவர் குடும்பத்தினருக்கும்

இந்த **உடையார் மூன்றாம் பாகம்**

சமர்ப்பணம்

IV

யோகிராம்சுரத்குமார்

இனிய ஸ்நேகிதங்களுக்கு வணக்கம்,

வாழிய நலம்,

ஒரு வாரப்பத்திரிகையில் தொடராக வந்த அத்தியாயங்கள் தொகுக்கப்பட்டு முதல் இரண்டு பாகங்களாக வெளிவர, உடையார் கதை முடியாத இந்த நிலையில் மீதிப் பகுதியை எப்படி எழுதுவது என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது நான் வழக்கமாக மாதாமாதம் எழுதிவரும் பல்சுவை நாவலில் தொடராக வெளியிடலாம் என்ற யோசனை எழுந்தது. அதன் ஆசிரியர் பொன் சந்திரசேகர் அவர்கள் இதை அவ்விதம் வெளியிடுவதற்கு ஆர்வமாக முன்வந்தார். நான்கு மாத நாவல்கள் கொண்டது ஒரு பாகம் என்று கணக்குப் போட்டு அவ்விதமாகவே எழுதப்பட்டது. பாகம் பிரித்தது புத்தகத்தின் பைண்டிங் வசதியை கருதித்தானே தவிர, புத்தகத்தை கையாளுவதற்கு வசதியாக இருக்கவேண்டுமே என்ற நினைப்பைத் தவிர வேறு எதுவும் இல்லை. வாராவாரம் எழுதுகின்ற சௌகரியம் இல்லையே இது எப்படி ஒட்டுமொத்தமாய் எழுதமுடியும். அந்த வலிவு நம்மிடம் உண்டா என்று மெல்லிய சந்தேகம் எனக்கு இருந்தது. ஆனால், நான் தொடர்ந்து எழுதப்போகிறேன் என்று கேள்விப்பட்டதும் என்னுடைய பல நண்பர்கள் மிகவும் உற்சாகப்படுத்தினார்கள் எழுதிவிடலாம். கதையை எங்கு ஆரம்பிப்பது. என்னவெல்லாம் சேர்ப்பது. மூன்றாம் பாகத்தில் வரவேண்டிய விஷயங்கள் என்ன. எங்கே முடிக்க வேண்டும் என்று விவாதித்தார்கள். நானும் எந்த வேலையில் ஈடுபட்டிருந்தாலும் மனம் முழுவதும் உடையாரில் லயித்து எப்படி இந்த நாவலை கொண்டு செல்ல வேண்டுமென்ற திட்டத்தோடேயே உழன்றுகிடந்து என் குருநாதர் யோகிராம் சுரத்குமார் அவர்களை நெஞ்சில் நிறுத்தி எழுதத் துவங்கினேன்.

ஒரு நாவலாசிரியன் ஒரு சரித்திரக்கதையை தன்னுடைய கற்பனைக் கேற்றவாறு அழைத்துச் செல்ல முடியுமென்றாலும் நான் அவ்விதம் செய்ய விரும்பவில்லை. சரித்திரத்தை ஒட்டியே எழுத விரும்பினேன். கல்வெட்டில் இடம்பெறாத பெயர்களை கொண்டுவந்து அவர்களை முக்கியப்பாத்திரங்களாக அமைத்து சோழ சரித்திரத்தில் திருப்பு முனையாக அவர்கள் இருந்தார்கள் என்று எழுதுவதற்கு எனக்கு விருப்பமில்லை.

உடையார் ஸ்ரீ ராஜராஜத் தேவர் காலத்தில் அவருக்கு அண்மையில் இருந்தவர்களை மையமாக வைத்து உடையார் ஸ்ரீ ராஜராஜத்தேவருடைய கதையைச் சொல்ல வேண்டு மென்பது தான் என் விருப்பமாக இருந்தது. அருகிலுள்ளவர்கள் எவ்வளவு முக்கியமானவர்கள். ஏன் முக்கியமானவர்கள் என்று என்னை நானே கேள்வி கேட்டுக்கொள்ள வேண்டியிருந்தது. பட்டீஸ்வரத்தின் மேற்குபுறத்தில் இருக்கின்ற உடையார் ஸ்ரீ ராஜராஜத்தேவருக்கு மனைவியாக இருந்த பழுவூர் நக்கன் பஞ்சவன்மாதேவி பெயரில் எழுப்பப்பட்ட பள்ளிப்படை கோயிலுக்கு பலமுறை சென்ற போதும் அந்தக் கோயில் சிதிலமடைந்து கிடந்ததை பார்க்கும்போதும் உள்ளே ஒரு குமுறல் ஏற்படும்.

பள்ளிப்படை கோயில் என்று எழுப்பவேண்டிய காரணம் என்ன. அவள் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவளா. அப்படியொரு பள்ளிப்படை கோயில் எழுப்பியது ராஜராஜர் மகன் ராஜேந்திரன். ராஜேந்திரன் தன் சிற்றன்னைக்கு ஏன் கோயில் எழுப்ப வேண்டும்.

இளவரசன் ராஜேந்திரன் வானவன்மாதேவிக்குப் பிறந்தவன். வானவன்மாதேவி பட்டமகிஷியா.

இல்லை தந்தி சக்தி விடங்கி என்பவர்தான், பட்டமகிஷி. தந்திசக்தி விடங்கிக்கு பள்ளிப்படை கோயில் உண்டா.

தெரியாது.

ராஜேந்திரனுடைய தாயான வானதி என்கிற வானவன்மா தேவிக்கு கோயில் உண்டா.

இருந்ததாக எந்தவித கல்வெட்டு ஆதாரமும் இல்லை. ஆனால் பஞ்சவன்மாதேவிக்கு மிக மிக அழகான மிக அற்புதமான கோயில் இருக்கிறது. அதுவும் இடிந்து கொண்டிருக்கிறது. இன்னும் ஐம்பது வருடத்தில் அது மண்மேடிட்டுவிடும். விரைவில் அதை சீர்செய்ய வேண்டும். விரைவில் அக்கோயிலை சுற்றி சுற்றி வரும்போது தான் பஞ்சவன்மாதேவியை என் கதாநாயகியாக நான் தீர்மானித்தேன்.

உடையார் ஸ்ரீ ராஜராஜத்தேவருடைய கதை சொல்வதற்கு இந்தப் பெண்மணிதான் ஏற்றவள் என்று உள்ளே முடிவு செய்தேன்.

சரித்திரக் கட்டுரைகள் எழுதுவது வேறுவிதம். அங்கு தெரிந்ததை மட்டுமே பேச வேண்டும். தெரியாததை தெரியாதது என்று சொல்ல வேண்டும். இப்படி இருக்கக் கூடும். என்று யூகம்கூட தவறு என்று தான் சொல்வார்கள். ஆனால் இப்படி இருக்கலாம். என்ற யூகத்தை ஒரு சரித்திர ஆசிரியன் செய்யலாம். பஞ்சவன்மாதேவிதான் சோழ சரித்திரத்தின் ஆதாரமாக இருந்திருக்கக்கூடும் என்று அந்தப் பள்ளிப்படைக் கோயிலை பார்த்து அதன் கல்வெட்டுகளைப் புரிந்து கொண்டு உடையார் ஸ்ரீ ராஜராஜத்தேவர் காலத்தில் இவள் முதன்மை பொருந்தியவளாக இருக்க வேண்டும். முக்கியமானவளாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் எழுந்தது. இது முற்றிலும் உண்மை என்று ஆதரிக்கவும் முடியாது. இல்லை என்று மறுக்கவும் முடியாது. ஆனால் பஞ்சவன்மாதேவிக்கு பள்ளிப்படை கோயில் கட்டியிருந்தாலும், அந்தப்பள்ளிப்படை கோயில் நிறுவப்பட்ட இடமும் பஞ்சவன்மாதேவி கொடுத்த பல கொடைகளும், அவர்களைப்பற்றிப் பேசுகின்ற கல்வெட்டுக்கள் வெவ்வேறு ஊர்களில் இருந்தலையும், தஞ்சாவூர் கோயிலுக்குள் இருக்கின்ற ஓவியத்தில் நிற்கின்ற ராஜராஜர் அவருக்கு அருகே நின்று மூன்று தேவியர் சித்திரத்தையும் உற்றுப்பார்க்கும் போது ஏற்பட்ட உணர்வுகளை ஒன்று கூட்டி இந்தக்கதையை நகர்த்த துவங்கினேன்.

கி.பி. ஆயிரமாவது வருஷத்து சோழ கலாச்சாரத்தை ஒட்டி அவர்கள் வாழ்ந்த விதத்தை ஒட்டிய வண்ணமே இந்தக்கதை எழுதப்பட்டிருக்கிறது. முடிந்தவரையில் சரித்திர நிகழ்ச்சியை வைத்துக்கொண்டே இந்தக்கதையை பின்னியிருக்கிறேன். கோயில் கட்டுமானத்தை திரும்பத்திரும்ப பார்த்து மனதில் இருத்திக் கொள்ளத்தான் மிகவும் பிரயத்தனப்பட வேண்டியிருக்கிறது.

சரித்திர ஆராய்ச்சியாளர் தொல்பொருள் இலாகாவின் முன்னாள் இயக்குனர். டாக்டர் திரு. நாகசாமி அவர்களின் கட்டுரைகள் எனக்கு மிகப்பெரிய உதவியாக இருந்தன. வரலாறு என்ற மிக அரிதான, உயர்வான காலாண்டு சரித்திர சஞ்சிகையை நடத்திவரும் டாக்டர் கலைக்கோவன் அவர்கள் கொடுத்த உற்சாகம் என்னை வேகப்படுத்தியது. ஒவ்வொரு முறை தஞ்சாவூர் செல்லும் போதும் டாக்டர் குடவாயில் பாலசுப்ரமணியம் அவர்களை சந்திக்காமல் நான் வருவதில்லை. அவரோடு ஊர் சுற்றாமல் சென்னை திரும்புவதில்லை.

"நாங்க எழுதினா எல்லோரும் படிக்கமாட்டாங்க ஸார். நீங்க எழுதினா நிறையபேர் படிப்பாங்க. பெரிய கோயில் பற்றியும் ராஜராஜசோழனைப் பற்றியும் நிச்சயமாக எழுதுங்க ஸார். எல்லா ஜனங்களுக்கும் அந்தச் செய்தி போகணும். இதுக்கு என்ன உதவி வேண்டுமானாலும் நான் செய்யத் தயாரா இருக்கேன். எப்போ கூப்பிட்டாலும் நான் வரத்துக்கு தயாரா இருக்கேன்" என்று என்னை உற்சாகமூட்டிய பெரிய மனிதர் அவர். அவ்வண்ணமே செய்தவரும் கூட.

பட்டீஸ்வரத்திற்கு மேற்கே ஒரு மதகுக்கு அருகில் இருக்கின்ற ராமனாதன் கோயில் என்று இப்பொழுது அழைக்கப்படும் அந்த பஞ்சவன்மாதேவீஸ்வரத்திற்கு பலமுறை அவர் அழைத்துப் போய் காட்டியிருக்கிறார். அந்த ஊர் மக்களெல்லாம் எனக்கு நண்பர்களாகிவிட்டார்கள். பஞ்சவன்மாதேவீஸ்வரத்தில் நிறுவப்பட்டிருக்கிற லிங்கத்திற்கு புதுத்துணி கொடுத்தும், கங்கை நீரால் அபிஷேகம் செய்தும், விளக்கெரிக்க எண்ணெய் கொடுத்தும், நானும் என்னுடைய உற்ற நண்பர்களும் அந்தக்கோயிலை கொண்டாடியிருக்கிறோம்.

என்னுடைய நண்பர் சுந்தர் பரத்வாஜ் சென்னை மத்திய தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தில் கல்வெட்டு ஆயாவாளராக இருக்கின்ற திரு. இராஜவேலு, ஜோதிடரும் நண்பருமான ஜோதிடரத்னா திரு.கே.பி. வித்யாதரன் தன் வசமி ருந்த பல ஆதாரங்களை எனக்கு கொடுத்து உதவிய அரியலூர் கலைக்கல்லூரியின் சரித்திரப்பேராசிரியர் டாக்டர் தியாகராஜன் ஆகியோரின் அன்பால் இந்த நாவல் மிகச் செம்மையாக வளர்ந்து வந்திருக்கிறது. இவர்கள் அனைவரும் சமூகத்தின் மிகப் பொறுப்பான பதவியில் இருப்பவர்கள் ஆதாரங்களை இவர்களிடமிருந்து வாங்கிக்கொள்ளலாமே தவிர நாவல் எப்படி எழுதுவது என்பது இவர்களோடு அமர்ந்து விவாதித்தல் என்பது முடியாதகாரியம்.

ஆனால் நாவலை எப்படி எழுதப்போகிறேன் என்று நான் உரத்து விவாதிக்கத்தான் வேண்டும். எப்பொழுதுமே எனக்கு விவாதத்திற்கென உற்ற தனித்த ஆர்வமிக்க நண்பர்கள் உண்டு.

தென்னிந்திய ரயில்வேயில் வேலைசெய்யும் சம்பத் லக்ஷ்மி யும், குடும்பத்தலைவியான பாக்யலக்ஷ்மி சேகரும், இரண்டு வளர்ந்த குழந்தைகளுக்கு தாயான இந்திரா பாஸ்கரும் கல்லூரிப்பேராசிரியை ஜெயனப்புக்கனி அவர்களிடமும் இன்னது எழுதப்போகிறேன். இன்ன விதமாகப் பேசப்போகிறேன் என்று உரத்துச் சொல்ல அவர்கள் உற்றுக் கவனித்து அபிப்ராயம் சொல்வார்கள்.

எழுதுவது போல கதை சொல்லல் எனக்கு கைவந்த கலை. நண்பர்களிடையே சொல்லும் போது எப்படி எழுத வேண்டும் என்ற தீர்மானமும் என்னுள் மிகத்திடமாக எழும்புகிறது. பிறகு ஒலிநாடாவில் கதை சொல்ல அதை என் உதவியாளர் எழுதிக் கொடுத்துவிடுவார். பிறகு அது பல்சுவைநாவலுக்கு அச்சுக்குப்போகும். அச்சடித்த காகிதம் திருத்தப்பட்டு வர அதையும் என் நண்பர்கள் படிப்பார்கள். அபிப்ராயம் சொல்வார்கள். அதில் பிழைத்திருத்தம் செய்து அதில் வரும் சந்தேகங்களை தெளிவாக்கி வாக்கியங்களை மாற்றியமைக்கச் சொல்கின்ற உதவியை என் உடன் பிறந்த சகோதரி சரித்திரத்தில் எம்.ஏ. பட்டம் பெற்ற ஆசிரியை சிந்தாரவி

திறம்பட ச் செய்வார். இவர்கள் உதவி இல்லையெனில் என் பணி மிகமிகக் கடினமாக மாறியிருக்கும். இதை எளிதாக்க இவர்கள் அன்பு உதவி செய்தது.

சிவகாசியிலுள்ள எனது நண்பர். திரு.வேல்சங்கர் கோவை தொழிதிபர். திரு. ரவிச்சந்திரன், நெடுங்காடி வங்கியில் அதிகாரியாகப் பணிபுரியும் திரு. மோகன் அவர் நண்பர் நெடுங்காடி வங்கி அதிகாரி திரு. கிருஷ்ணன் டாட்டா கன்ஸல்டன்ஸி அதிகாரி திரு.சுசீந்திரன் போன்றவர்கள் என் பணியில் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். இவர்களுக்கெல்லாம் நான் மிகுந்த நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். ஆனால் அவர்களோ உங்கள் நட்பு பெரிய கொடுப்பினை என்று பதிலுக்கு நன்றி தெரிவிப்பார்கள். உண்மையான ஸ்நேகிதம் கொடுக்கும் ஆரோக்கியம் போல வளமான விஷயம் உலகத்தில் எதுவும் இல்லை. நான் நல்லநட்பை அனுபவித்திருக்கிறேன். அகமகிழ்ந்திருக்கிறேன். தஞ்சை பெரியகோயிலில் உள்ள அறநிலையத்துறை அதிகாரிகளும், தொல்பொருள் துறை அதிகாரிகளும் என்மீது மிகுந்த அக்கறையும் கொண்டு நான் கேட்டபோதெல்லாம் விமானத்தின் மேல்பகுதியை திறந்துவிட்டு பலமுறை அந்தச்சிற்பங்களையும், கட்டுமானத்தையும் ஓவியங்களையும் பார்க்க அனுமதித்திருக்கிறார்கள். மணிக்கணக்கில் அந்த ஓவியங்களைப் பார்த்த உணர்வு தான் என்னை இந்த நாவல் களத்தில் ஆழ்ந்து கிடக்க வைத்தது.

நான்காவது பாகமும் எழுதி முடித்துவிட்டேன். ஐந்தாவது பாகம் செய்து கொண்டிருக்கிறேன். ஐந்தாவது பாகம்தான் உடையார் நாவலின் கடைசிப்பாகம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். எழுத எழுததான் தெரியவரும். இந்த நாவல் எழுதும் போது உண்டான சந்தோஷம் மிகப்பெரியது. அதிலேயே ஆழ்ந்து கிடப்பது மிகச்சுகமாக இருந்தது. நடுவே ஒரு சமூக நாவல் எழு முற்பட்ட போது மிகப்பெரிய அவஸ்தைக்கு ஆளானேன். உடையார் நாவலை மறக்க முடியாமல். சமூக நாவலில் முன்னேற முடியாமல் ஒரு தேக்கநிலை வந்தது. மனம் அத்தனை வேகமாக, அத்தனை ஆழமாக இந்த சோழர் கால சரித்திரத்தோடு பின்னிக் கிடந்தது.

நாவலாசிரியனாக இருப்பது ஒரு பணம் கொழிக்கும் தொழில் அல்ல. அதே சமயம். வருமானம் இல்லாமலும் இல்லை. இந்த வருமானத்தின் பெரும்பகுதியை இதற்குண்டான பயணத்திற்காகவே நான் அதிகம் செலவு செய்தேன். என் சத்குரு திருவண்ணாமலை மகான் யோகிராம் சுரத்குமார் அருளால் இந்தச் செலவை செவ்வனே என்னால் செய்ய முடிந்தது. மிக உபயோகமாக செலவழிக்க முடிந்தது.

இந்த நாவலில் பல இடங்கள் என்னை மீறியும் நான். சிறப்பாக எழுதியிருப்பது எனக்குத்தெரியும். வெறும் புத்தியின் வரைபடத்தால் மட்டுமில்லாது கதைத் தந்திரங்களின் கணக்கால் மட்டுமில்லாது வேறு ஒரு தெய்வீக உந்துதலிலும் இந்த நாவல் எழுதப்பட்டது. இதை எனக்கு நெருங்கியிருந் தவர்கள் நன்கு உணர்ந்தார்கள்.

முதல் பாகம் விரைவில் விற்றுப்போய்விட்டதாக திருமகள் நிலையத்தார் சந்தோஷமாகச் சொன்னார்கள். அவர்களுடைய ஈடுபாடும் அக்கறையும் தான் இந்த நாவல் நல்லதொரு புத்தகமாக உருவெடுத்திருக்கிறது.

சிவா கிராபிக்ஸ் மணிகண்டன் சகோதரர்கள் பிழைத் திருத்தங்களை சீராகச் செய்து நல்ல முறையில் லே-அவுட் செய்து புத்தகத்திற்கு பொலிவூட்டினார்கள்.

உங்களைப் போன்ற வாசகர்களால் உடையாருக்குக் கிடைத்த பாராட்டுக்கள் என்னை இதில் ஈடுபட பெரிதும் உதவி செய்தன. கடிதம் மூலமாகவும், தொலைபேசி மூலமாகவும் நேரில் சந்தித்தபோதும், கல்யாண வீட்டில் அமர்ந்திருந்த போதும், காவிரிக்கரையில் குளித்துக் கொண்டிருக்கும் போதும், கோயில் கர்ப்பக்கிரகத்திலும் உணவுக் கூடத்தில் கையலம்பும் போதும் ஓடிவந்து பாராட்டி வாழ்த்து தெரிவித்த வாசகர் நெஞ்சங்களால்தான் இந்த நாவல் சாத்தியமாயிற்று. எழுத எழுத என் நிறைவு கூடிக்கொண்டே போனது. நான் கதை எழுதத் துவங்கியதே பல நாவல்கள் எழுதியதே இந்த நாவல் எழுதத்தானோ என்ற எண்ணம் எனக்குள் வருகிறது. நான்

வாழ்ந்த வாழ்க்கைப்பற்றி ஒரு திருப்தி எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அதற்கு உடையார் என்கிற இந்த நாவலும் காரணம்.

கமலாவும், சாந்தாவும், ஸ்ரீ கௌரியும், சூர்யாவும் நிறைந்த என் குடும்பம் என் தினசரி செயல்களுக்கு பக்கபலமாக இல்லையெனில் என்னால் எழுத்தாளனாக பரிமளித்திருக்க முடியாது. என்னை கண்ணின் இமைபோல் என் குடும்பம் காத்து வருகிறது. அவர்களுக்கும் நான் தீர்க்க முடியாத நன்றிக்கடன்பட்டிருக்கிறேன்.

பல்வேறு குழப்பமான சிந்தனைக்குள் கிடந்த என்னை வெளியில் எடுத்து தெளிவாய் சிந்திக்கவும், செயல்படவும், நிதானமாய் ஆழ அமிழ்ந்திருக்கரும், கடவுள் நோக்கி கவனம் திருப்பவும், அதில் லயித்துக் கிடக்கவும், அந்த தன்மையோடே பிரச்சினையை அணுகவும் சொல்லாமல் சொல்லிக்கொடுத்த என் சத்குருநாதன் திருவண்ணாமலை மகான் யோகிராம் சுரத்குமார் பாதங்களில் சிரம்பணிந்து அவரை நெஞ்சு நிறைய நினைத்துக் கொள்கிறேன். அது ஞானசூரியன். பரப்பிரம்மம். என்னையும், என் நண்பர்களையும், என் வாசகர்களையும் ஆசிர்வதிக்குமாறு அவரைப் பணிக்கிறேன் தொடர்ந்து மற்ற பாகங்கள் படித்துவிட்டு உங்கள் அபிப்ராயத்தை தயவு செய்து எனக்கு எழுதுங்கள். அதைவிடப் பெரும்பரிசு எனக்கு வேறு எதுவுமில்லை.

**5-11-2004** **என்றென்றும் அன்புடன்**
**சென்னை - 4** **பாலகுமாரன்**

31.05.2004

டாக்டர் இரா. கலைக்கோவன்
ஆசிரியர் : வரலாறு
சரித்திர ஆய்வாளர்

C87, பத்தாம் குறுக்கு தெரு,
தில்லை நகர் மேற்கு
திருச்சி

அன்பிற்கினிய திரு. பாலகுமாரன், தஞ்சாவூர் ராஜராஜிசுவரத்தை நீங்கள் பலமுறை பார்த்திருப்பீர்கள். பல அறிஞர்களுடன் பார்த்திருப்பீர்கள். உங்கள் உள்ளத்தில் உயர்ந்தோங்கி நிற்கும் கந்தக் கட்டுமானம் தமிழ்நாட்டின் லட்சோப லட்ச வாசகர்களிடம் உங்கள் எழுத்துக்கள் வழி போய்ச் சேரவிருக்கிறது. மக்கள் அந்தக் கோயிலை உள்வாங்கி இருத்திக் கொள்ளப்போவதுடன், தலைமுறைகளுக்கும் தரப்போகிறார்கள். எழுத்து வலிமையானது பாலகுமாரன். அதுவும் உங்களை நேசிப்பவர்களை நான் நேரடியாகவே சந்தித்து வருவதால் அவர்களின் வாழ்க்கையில் உங்கள் எழுத்துக்கள் ஏற்படுத்தியிருக்கும் தடங்களைப் பார்க்க முடிவதால், இந்த வேண்டுகோளை அந்த கோயிலை நேசிக்கும் இன்னோர் ஆத்மா என்ற முறையில் உங்கள் முன் வைக்க விழைகிறேன்.

உங்கள் கற்பனைச் சிறகுகளுக்கு வானமே எல்லை. ஆனால் உங்கள் பேனா எழுதப்போகும் ஒவ்வொரு வரியும் இந்த மண்ணை தலைநிமிர வைத்திருக்கும் ஒரு மகத்தான மனிதனின் வருவடிவத்தை அந்தக் கட்டுமானம், வழி இந்த மன்னரின் மைந்தர்களுக்குக் காயப்போவதை அன்புகூர்ந்து தொடர்ந்து நினைவில் வைத்திருங்கள். இராஜராஜீசுவரம் தமிழ் அறிவின், பண்பாட்டின் உச்சம். இந்தியாவிலேயே வேறெந்தத் திருக்கோயிலிருந்தும் காணமுடியாத பல அரியன, புதியன முதன்மையான இங்கு மட்டுமே உண்டு. பல முதல்கள் கோடுகள் தாண்டி உருவாக்கியவர், இராஜராஜர். இந்த சந்தார விமானம் ராஜசிம்மனின் கைவண்ணமாய்க் கருக்கொண்டு (காஞ்சிபுரம் கயிலாசநாதர்) இராஜராஜன் கற்பனை வீச்சுகளில் முழுமையடைந்து சோழச்சிற்பிகளால் நிஜமாக்கப்பட்ட ஓர் உன்னத பொறியியல் அற்புதம். எழுதும்போது இராஜராஜீசுவரம்

*செல்லுங்கள். விமானம் உங்களுக்கு உரியன வழங்கும். அதற்கு முன் வாய்ப்பிருந்தால் ஒரு நடை காஞ்சிபுரம் (ராஜசிம்மேசுவரம் தற்போது கயிலாசநாதர் கோயில்) உத்திரமேரூர் (கயிலாசநாதர் கோயில் சாந்தார விமானம்) சென்று பாருங்கள். இந்த இரண்டு ஊர்களிலுமிருந்து இராஜராஜனுக்கு வழிகாட்டிய கட்டுமான அற்புதங்கள் உங்கள் கதைவளரக் கருவுயிர்க்கும் கற்பனைகளை மென்மையாகவும் உண்மைகளை முழுமையாக வும் தந்து 'உடையாரை' உயிர்த்துக் கங்கைகொண்ட சோழீச்சுரம் விமானப் பயணமும் உதவும்.*

*கேட்பதில் தங்களுக்கிருக்கும் ஆர்வமே எழுதத் தூண்டியது. உங்களை நேசிப்பவர்களின் தரிசனமும் ஒரு காரணம். உங்கள் எழுத்துக்கள் வலிமையாக இருப்பதை உணர்கிறேன். அந்த எழுத்துக்கள் தமிழ்நாட்டுக் கலைவரலாற்றின் முத்திரைப் பிறப்பைச் சரியாகப் படம்பிடித்திருக்குமென்று நம்பிக்கையுடன் விடைபெறுகிறேன்.*

**அன்புடன்**
**டாக்டர் கலைக்கோவன்**

முனைவர் குடவாயில்
**எம்.பாலசுப்பிரமணியன்**
சரித்திர ஆராய்ச்சியாளர்

6, நிர்மலா நகர்,
வல்லம் ரோடு,
தஞ்சாவூர்-613007

*பேரன்புடையீர்!*

*வணக்கம், பெருவுடையாரான இராஜராஜேச்சர முடையார்க்கும், உடையார் இராஜராஜ தேவர் எழுப்பிய ஆலயம் பற்றியும், அப்பேரரசன் காலத்து நிகழ்வுகளையும் கண்முன்னே காண்கின்ற அற்புதத்தைத் தகுதி உடையாரான தாங்கள் "உடையார்" மூலம் சாதித்திருக்கிறீர்கள். வரலாறு எழுதும் எழுத்தாளர்களான எங்களது படைப்புகள் ஒருபோதும் கடைக்கோடியில் உள்ள ஒரு பாமரனிடம் சென்றடைந்ததில்லை. காரணம் அவை புள்ளிவிவரங்கள் தாம். அந்தப்புள்ளிகளைக் கோலமாக்கிக் காட்டும் மாயாஜாலம் தங்களைப் போன்றலர்களால் மட்டுமே இயலும்.*

*உடையாரைப் படைப்பதற்குத் தாங்கள் புரியும் களவேள்வி, கல்வெட்டுப் படிப்பு, தேடும் ஆதாரங்கள் உண்மைகாண முயலும் தவிப்பு ஆகியவற்றை நன்கறிந்தவன் என்ற முறையில் எழுதுகிறேன். தங்களின் இப்புதினம் அஸ்வமேத வெற்றி. வரலாற்றில் ஒரு சில மாறுதல்களுக்காகச் சிலர் முணுமுணுக்கலாம். அப்படியே வரலாறு எழுதுவது புதினமாகாது. ஆங்காங்கே கற்பனை எனும் தேனருவி பாய வேண்டும். அந்த அருவியின் குளிர்ச்சியை, மூலிகைக் கலப்பின் சுகத்தை என்னால் முழுதும் நுகர முடிந்தது. வரலாற்றுப் புதினம் எழுதுவது என்பது பின்னோக்கிப் பயணிக்கும் ஜாலவித்தை. அப்பயணத்தில் எத்தனையோ மேடுபள்ளங்கள், வழுக்குப்பாறைகள், அத்தனையும் கடந்து வாசகர்களுக்கோர் சுகமான தடத்தைக் காட்டி அதில் உடையாரைப் பயணிக்கச் செய்திருக்கிறீர்கள். தாங்கள் பணி தொடர எல்லாம் வல்ல இராஜராஜச்சரமுடைய பரமசாமி என்றும் துணைநிற்பான்.*

அன்புடன்
குடவாயில் **எம். பாலசுப்பிரமணியன்**

09.09.2004
சென்னை - 37.

அன்புள்ள எழுத்துசித்தர் பாலகுமாரன் அவர்களுக்கு,

நலம், அதே போல் நீங்களும் நலமென்று எண்ணுகிறேன்.

சமீபமாக வந்து கொண்டிருக்கிற தங்களின் "உடையார்" என்கிற நாவலை நானும் படித்துக் கொண்டிருக்கிறேன். என்னால் உடையாரின் முதல் மற்றும் இரண்டாம் பாகங்களை படிக்க இயலவில்லை. எனினும் மூன்றாம் பாகத்தின் ஆரம்பத்தில் முதல் இரண்டு படித்து விட்டு மூன்றாம் பாகத்தை தொடர்ந்து படிக்கத் துவங்கினேன். இந்த கடிதம் எழுதும் சமயம் நான் மூன்றாம் பாகத்தின் நான்காம் பகுதியினை முடித்திருக்கிறேன். அதாவது மூன்றாம் பாகம் முழுமையும் முடிவுற்ற நிலையில் இக்கடிதத்தை எழுதுகிறேன்.

என்னை பொறுத்தவரையில் உங்களின் இந்த "உடையார்" என்கிற நாவல் மிகப்பெரிய இமாலய முயற்சியாகும். அதை நீங்கள் மிக அற்புதமாக இறையருளாலும், தங்களின் குருவருளாலும் எந்த குறையுமின்றி செய்து கொண்டிருக்கிறீர்கள். பல்லாயிரக் கணக்கான தமிழ் நெஞ்சங்களை கொள்ளை கொண்ட "பொன்னியின் செல்வன்" நாவலின் பிரியன் தான் நானும். இன்னும் சொல்லப் போனால் நான் முதல் முதலில் படித்த நாவலும் அதுவே. மிக அற்புதமான ஒரு நாவலை எனது முதல் நாவலாக படித்ததை எண்ணி பல முறை நான் ஆனந்தப்பட்டிருக்கிறேன். அந்த நாவல் படிக்கின்ற சமயம், வந்திய தேவனையும், குந்தவையும், அருண்மொழியையும், ஆழ்வார்கடியானையும், பூங்குழலியையும், வானதியையும், நினைக்காத நாளில்லை என்று கூறும் அளவிற்கு அந்த கதையும், அதன் கதாபாத்திரங்களும், மனதில் ஆழமாகவும், சிநேகமாகவும், பதிந்து விட்டிருந்தன.

கடந்த சில வருடங்களாக நான் தங்களின் ஆன்மிக, சமூக நாவல்களை தொடர்ந்து படித்துக் கொண்டிருக்கிறேன். ஓரிரு முறை கடிதங்களையும் எழுதி அனுப்பிருக்கிறேன். அவைகள் தங்களிடன் வந்து சேர்ந்தவலா என்று தெரியவில்லை. அந்த ஒரு சிறு சந்தேகம் காரணமாகத் தான் இம்முறை தங்களின் வீட்டு முகவரிக்கே கடிதம் அனுப்புகிறேன்.

சரி, உடையாருக்கு வருவோம்...

முன்பே சொன்னது போல "உடையார்" ஒரு அற்புதமான, பிரம்மாண்டமான முயற்சி. என்னை பொருத்தவரையில் உடையாரையோ அல்லது பொன்னியின் செல்வனையோ ஆழ்ந்து படித்து அக்கதையிலேயே மூழ்கி போகிற ஒவ்வொருவரும் சோழ சாம்ராஜ்ஜியத்தில் முன் ஏதோ ஜென்மத்தில் சம்பந்தப்பட்டிருப்பார்களோ என்று நினைக்கத் தோன்றுகிறது. சம்பந்தப்பட்டதாகவே இருக்கிறது. பொன்னியின் செல்வனில் பார்த்திர்களானால் வந்திய தேவன், குந்தவை, நந்தினி என்று ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு கதாபாத்திரங்கள் எழுச்சியோடு இருக்கும். ஆனால் உடையாரில் முழுக்க முழுக்க ராஜராஜன் தான் ஆளுகிறான்.

அதேபோல "உடையாரில்" நந்தினி, ஆழ்வார் கடியான் போன்ற கற்பனை கதாபாத்திரங்கள் இல்லாதது ஒரு வகையில் நல்லதே. இது முழுக் கதையையும் படித்து முடித்த பிறகு ஒரு முழுமையை கொடுக்கும் என்பது என் எண்ணம்.

கோயில் கட்டும் பணியில் ஈடுபடும் ஒவ்வொருவரும் பரிமாறிக்கொள்ளும் சில நுணுக்கமான தகவல்கள் என்னை மிகவும் பிரமிப்பில் ஆழ்த்துகிறது. எந்தவொரு விஞ்ஞான கண்டுபிடிப்புகளும் இல்லாத அந்த காலத்திலேயே நம்மவர்கள் என்ன போடுபோட்டிருக்கிறார்கள் என்று மிகவும் வியப்பாக இருக்கிறது.

ராஜராஜன் ஒரு அற்புதமான பண்பாட்டையும், கலாச்சாரத்னதயும் கோயில் கட்டும் பணிமூலம் இந்த தேசத்தில் உருவாக்கியிருக்கிறான் என்று எங்களால் உணர முடிகிறது. அதற்கும் மேல் இவை அனைத்தையும் சேகரித்து அற்புதமாக நாவலாக உருவாக்கி கொண்டிருக்கும் தங்களை நினைத்தும் வியக்காமல் இருக்க முடியவில்னல. அதே நேரத்தில் தங்களை தவிர வேறு எவராலும் இது போன்ற கடினமான கதை களத்னத கையாளமுடியாது என்பதையும் வெகு சுலபமாக உணரமுடிகிறது. இது தங்களின் தவ வலிமையாளும், குருவருளாலும் மட்டும் சாத்தியம். ஒரே ஒரு சின்ன குறைமட்டும் இருக்கிறது. அநேகமாக, பலபேர் தங்களிடம் இதை கூறியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். நாவல்களுக்கு இடையே கதையோடு ஒட்டி வரைபடங்களும் இருந்தால் இன்னமும் அற்புதமாக இருந்திருக்கும். இது கொஞ்சம் அதிகம் என்றாலும் சொல்லாமல் இருக்க முடியவில்னல. மாத நாவலில் அதுவும் இவ்வளவு மலிவான விலையில் நீங்கள் எல்லா ஜனங்களுக்கும் இந்நாவல் கினடக்க எடுத்துக் கொள்ளும் முயற்சி பாராட்டத்தக்கதாகும். கூடவே படங்கள் என்பது சற்று கடினம் என்பதை உணர முடிகிறது. இருந்த போதிலும் ஏதாவது எளிய அதே சமயம் தெளிவான முறையில் அற்கும் ஒரு ஏற்பாடு செய்ய முடியும் என்று எனக்கு தோன்றுகிறது.

மொத்தத்தில், நீங்கள் தஞ்சை பெரிய கோயிலையும் ராஜராஜனையும் சந்திர - சூரியர் உள்ள வரையில் இந்த உலகம் மறவாது என்று அடிக்கடி குறிப்பிடுவீர். என் எண்ணம் என்னவென்றால் அதே சந்திர - சூரியர் உள்ள வரையிலும் தங்களையும் தங்கள் “உடையாரை”யும் இவ்வுலகம் பாராட்டிக் கொண்டிருக்கும். அதற்கும் என்னால் ஆன எல்லா உதவிகளையும் பிராத்தனை களையும் நான் செய்யக்கடமைப்பட்டிருக்கிறேன்.

என் நண்பர் மற்றும் அவரது ஒரு சிறு குழுவும் சேர்ந்து www.varlaaru.com என்கிற இணையதளம்

அமைத்து அதில் பல வரலாற்றுக் குறிப்புகளை சேகரித்து வருகின்றனர். குறிப்பாக சோழர் கால குறிப்புகளை அதிகம் அவர்கள் ஆவலுடன் சேகரிக்கின்றனர். நீங்களும் அந்த இணைய தளத்தைப் பார்த்து ஏதாவது எடுத்துக்கொள்ளவோ அல்லது கருத்து பரிமாரிக்கொள்ளவோ உபயோகிக்கலாம் என்னைப் பற்றி ஒரு சிறு குறிப்பு.

நான் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எனது பொறியியல் படிப்பினை கோவை கல்லூரியில் முடித்து பிறகு சரியான வேலை கிடைக்காமல் அங்கும் இங்கும் அல்லல்பட்டு இப்போது நானும் என் நண்பர்களும் சேர்ந்து சிறிதாக ஒரு ஆட்டோ மொபைல் ஸ்பேர்ஸ் பார்ட்ஸ் செய்யும் கம்பெனி ஒன்றை தொடங்கியுள்ளோம். அதற்கான பல முயற்சிகளைதான் கடந்த பல மாதங்களாக செய்து கொண்டிருக்கிறோம். விரைவில் கம்பெனி நல்ல முறையில் துவங்கபட வேண்டும் என தங்களின் ஆசிகளை கோருகிறேன்.

தங்களின் குடும்பத்தினர் அனைவரையும் விசாரித்த தாகவும், எனது அன்பை தெரியப்படுத்தியதாகவும் கூறவும்.

நன்றி வணக்கம்.

அன்புடன்
**கோ. டில்லிபாபு,**
**சென்னை - 39.**

16.03.2004
சென்னை - 20

பெருமதிப்பிற்குரிய திரு. பாலகுமாரன் அவர்களுக்கு,

வணக்கங்களுடன் கிருஷ்ணவேணி எழுதிக்கொள்வது, நலம். நலமே அறிய ஆவல். நான் வேதியியல்துறை ஆராய்ச்சி மாணவி; 'காகும் பிறப்பும்' நாவல் குறித்து, தங்களிடம் சில நாட்கள் முன்பு தொலைபேசியில் பேசியது நினைவிருக்கலாம்.

'உடையார்' இரண்டு பாகங்களும் வாசித்தேன். என்னுடைய சொந்த ஊர் தஞ்சையிலிருந்து 38கி.மீ. தொலைவிலுள்ள மன்னார்குடி. (திரு. கரிச்சான் குஞ்சு அவர்கள் என் தாத்தாவின் சிநேகிதர்) அமரர் கல்கியின் 'பொன்னியின் செல்வ'னை பலமுறை வாசித்திருக்கிறேன். ஆனால் ஒரு அரசராக, சிவபெருமானுக்காக கோயில் கட்டுவதையே தனது பெரும் லட்சியமாகக் கொண்ட அடியவராக ஸ்ரீ ராஜராஜ சோழரைப் பற்றி அறிந்து கொள்ள முடியவில்லையே என்று ஆதங்கம் இருந்து கொண்டிருந்தது. அதை தீர்த்துவைத்து விட்டீர்கள்.

முதலில், கோயில் இல்லாத தஞ்சையை கற்பனை செய்வதே கடினமாக இருந்தது. கோயிலுக்கு பல முறை சென்றிருந்தாலும், கடைசியாக என் தோழி உஷாவை அழைத்துச் சென்றேன்; நாங்கள் இருவரும் ஒன்றாக கல்லூரியில் படித்தோம். இருவருக்குமே கிட்டப் பார்வை; கண்ணாடி அணிந்திருப்போம். எந்த கோயிலுக்கு சென்றாலும், அருகே செல்லும் வாய்ப்பு கிடைத்தாலொழிய இறைவனை நன்கு தரிசிக்க முடியாமல் இருந்தது.

முதன்முறையாக என்னுடைய தோழி தஞ்சை பெரிய கோயிலைக் காண வந்தாள். இருவரும் கண் குளிர இறைவனை தரிசித்தோம். பிரகாரத்தில் வந்து அமர்ந்து கொண்டு, என் தோழி அழவே ஆரம்பித்துவிட்டாள். நாங்கள் இருவரும் உடையார் ஸ்ரீ ராஜராஜருக்கு மனதார நன்றி கூறினோம். இவ்வளவு பெரிய லிங்கத்தை ஸ்தாபித்து, எத்தனை

*தொலைவிலிருந்தும் பார்க்கக் கூடிய வகையில் அவர் உதவியிருப்பது எவ்வளவு பெரிய விஷயம்.*

*நாங்கள் சாதாரணமானவர்கள் உங்களைப் போல கல்வெட்டு ஆராய்ச்சி எல்லாம் எங்களுக்கு செய்யத் தெரியாது. ஆயிரம் வருங்களுக்கு முன்பு இங்கு மக்கள் எப்படி வாழ்ந்து இருப்பார்கள் என்று அறிந்து கொள்ளும் ஆர்வம் இருப்பினும், அதற்கான சரியான முயற்சியில் இறங்க முடியவில்லை.*

'முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்'

*என்ற குறளுக்கிணங்க, மக்களால் மிகவும் நேசிக்கப்பட்ட மன்னன் ஒருவன் இருந்தான், பெரிய கோயிலைக் கட்டி தொண்டு புரிந்தான் என்பதையெல்லாம் பற்றி அறிந்து கொள்ள உங்கள் புத்தகம் பேருதவி புரிந்தது. உங்களுடைய இந்த மகத்தான பணி மேன்மேலும் தொடர, இறையருள் உங்களுக்கு என்று துணை நிற்க வேண்டும் என மனதார ப்ரார்த்திக்கிறேன்.*

என்றும் அன்புடன்
**க்ருஷ்ணவேணி**
சென்னை

# பதிப்புரை

சோழப் பேரரசின் புகழ்பெற்ற இராஜராஜ சோழரின் வளர்ச்சி, வீரம், விவேகம், அரசியல், வாழ்க்கை வரலாறு, பண்பாடு, நாகரிகம் ஆகியவை பற்றி 'உடையார்' என்னும் நூலின் மூலம் திரு. பாலகுமாரன் அவர்கள் விரிவாக எடுத்துரைக்கிறார்.

'உடையார்' பாகம் - 1, பாகம் - 2 என இரு தொகுதிகளாக வெளிவந்துள்ளது. தற்போது 'உடையார்' 3 ஆம் பாகமாக தங்கள் கைகளில் தவழ்கிறது.


ஆசிரியர் தமக்கே உரிய நடையில் மிகச் சிறப்பாக எழுதி உள்ளார். சமூக சிந்தனை, கற்பனை வளம், காதல், வாழ்க்கை ஆகியவற்றை இந்த நூலின் மூலம் மிகச் சிறப்பாகக் கையாண்டு உள்ளார். படிப்பதற்கு எளிமையாகவும் நிறைந்த கருத்துச் செறிவும் கற்பனை வளமும் நிறைந்து உள்ளது.


முற்கால தமிழர்களின் வாழ்வு, அவர்களின் வீரம், பண்பாடு, கலாசாரம், காதல், பெண்ணுரிமை, பெண்களின் நிலை, அரசியலில் பெண்களின் பங்கு ஆகியவையும் இந்நூலில் மிகச் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது.

பாலகுமாரன் அவர்களின் தெளிந்த நீரோடை போன்ற நடை அனைவரையும் கவரும் வண்ணம் அமைந்துள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க 'உடையார்' நாவலின் மூன்றாவது பாகம் இது.

எங்கள் வெளியீடுகளை தொடர்ந்து வாங்கும் வாசகர்கள் என்றும்போல் தங்கள் ஆதரவை தர வேண்டுகிறோம்.

— பதிப்பகத்தார்



Ellora
(Bombay)
RASHTRAKUTA
Godavari
Bhima
(Hydarabad)
CHALUKYA DE VENGI
Samarlakota
Draksarama
Vengi
Bhimesvara
Amaravati
Chebrolu
CHALUKYA
Krishna
Pattadakal
Aihole
Badami
Alampur
Tungabhadra
Vijayanagar
(Bangalore)
Kanchi uram
(Madras)
PALLAVA
Uttaramerur
Mahabalipura
Tiruvannamalai
Kaveri
(Pondichéry)
Tiruvadigai
Chidambaram
GANGAIKONDACHOLAPURA
CHOLA
Srirangam
TANJAVUR
Narttamalai
PANDYA
Madurai
Anuradhapura
Polonnaruva
SRI LANKA



PALACE
BRIHADISVARA TEMPLE


GANGAIKONDACHOLAPURAM
Mayiladuturai
Karikal
Nagapattinam
TRIBHUVANAM
KUMBHAKONAM
DARASURAM
TANJAVUR
Mannargudi
LOWER ANICUT
Jayamkondacholapuram
Udaiyarpalaiyam
TIRUPATTUR
KILAIYUR-MELAPPALUVUR
GRAND ANICUT
SRIRANGAM
Tiruchirappalli
SRINIVASANALLUR
KAVERI
50 km
10
0
N

# உடையார்

## (மூன்றாம் பாகம்)





## 121

**கொ**டி ஆழமாய் நடப்பட்டது. காற்றில் படபடத்து அசைந்தது. மாவிலைகள் கட்டிய கொடிக் கம்பத்தில் கொடி பறப்பதைப் பார்த்து சிறு முரசுகள் அதிர்ந்தன. எக்காளம் முழங்கியது. 'சோழம்.. சோழம்.. சோழம்..' என்ற சிற்பிகளும், மறவர்களும் உரத்துக் கத்தினார்கள்.

'திருமகள் போல பெருநிலச்செல்வியும் தமக்கே உரிமை பூண்டமை மனக்கொள காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி... என்று சக்ரவர்த்தியின் கட்டியத்தை ஒருவன் உரக்கக்கூற 'உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் வாழ்க.. வாழ்க.. என்று கூட்டம் ஒருசேர வேகமாய் முழங்கிற்று.

நார்த்தாமலை உச்சியில் நடப்பட்ட அந்தக் கொடியை சதாசிவாச்சாரி கண்குளிரப் பார்த்தார். வாழ்க்கை வளத்தைப்

பற்றி எந்தக் கலவையும் இல்லை என்று அவருக்குத் தோன்றியது. அவருடைய வாழ்க்கை மட்டுமல்ல. அவருடைய மகன்கள் வாழ்க்கை. அவருடைய பேரப்பிள்ளைகள் வாழ்க்கை எதுவுமே இனி கலவைப்படத்தக்க விஷயமில்லை.

சிற்பிகள் வாழ்க்கை மட்டுமல்லாது மறவர்கள் வாழ்க்கையும், வணிகர்கள் வாழ்க்கையும், அந்தணர்கள் வாழ்க்கையும், ஆடல்பாடல் செய்கிற தேவரடியார்கள் வாழ்க்கையும், மற்ற தொழிலாளர்கள் வாழ்க்கையும், ஏன் இந்த அடிமை வீரர்கள் வாழ்க்கையும்கூட இனி சிறப்பானதாக மாறும்.

கரும்பச்சையாய், அடர்த்தியாய் வளரும் நாரத்தை செடிகள் நிறைந்த இந்த நார்த்தாமலைப் பகுதி பாறைகள் பிளக்கப்பட்டு தூண்தூணாக தஞ்சை நோக்கிப் பயணப்படும்.

இன்று மங்கலமான நாள். வளர்பிறை திருதியை மிக உன்னதமாக நாள். இன்று எந்த வேலை ஆரம்பித்தாலும் மிக அற்புதமாக வளரும். நல்ல பலன் தரும். பேரும் புகழும் நிலைத்து நிற்கும் இன்றைக்கு சுக்கிர ஹோரையில் முதல்முதல் நீண்ட ஆணியைப் பாறைக்குள் அடிக்கச் சொல்லியிருக்கிறார்கள். சுக்கிர ஹோரைக்கு இன்னும் இரண்டே கால் நாழிகை இருக்கிறது. வேலை துவங்கும் முன் இது எங்களுடைய பூமி என்று சொல்லும் வண்ணம் புலிக்கொடியை ஏற்றிவிட்டாகிவிட்டது. சோழ தேசத்தின் கொடி பட்டொளி வீசிப் பறக்கிறது. இனி பூமி பூஜை.

ஹே.. பூமாதேவி உன்னுடைய சொத்தில் மிகச்சிறிய ஒரு பகுதியை நாங்கள் எடுத்துக் கொள்கிறோம். பொறுத்துக் கொள்ளம்மா என்று வேண்டுகிற பூஜை. பிறகு மலை பூஜை. மலையிலுள்ள தேவகணங்களும், பூதகணங்களும் பைசாசங்களும் வேறு நல்ல விஷயங்களும் மலைக்குள் குடியிருக்கின்ற வௌவாலும், ஆந்தையும், பாம்பும், சிறுபிராணிகளும் இந்த இடத்தை விட்டு அகன்று எங்களுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாதவாறு நகர்ந்து வேறு இடத்திற்குக் குடிபோய் தாங்களும் வாழ்ந்து எங்களையும் வாழ்விக்க வேண்டுமென்கிற மலைபூஜை. பிறகு நான்கு திக்கிலும் நான்கு ஆட்டுகடாக்களை நிற்க வைத்து வெட்டுதல். திசைகளைக் கும்பிடுதல். எந்தத் திசையிலிருந்தும் எந்தத் தீங்கும் நேரா வண்ணம் காக்க வேண்டுமென்று இறைவனை வேண்டுதல். பிறகு உளியும், சுத்தியும், அரணிக் கட்டைகளையும் வைத்து ஆயுத பூஜை. பிறகு சிற்பிகளுக்கு சன்மானம். பிறகு பார

வண்டிகளுக்குச் சன்மானம் பிறகு கல்தூக்குகின்ற அடிமை வீரர்களுக்குச் சன்மானம். அதற்குப்பிறகு நீண்ட இரும்பு ஆணியை மூன்று பேர் பிடித்துக்கொள்ள பாறைப்பிளப்பில் ஆணியை அடித்து உள்ளே இறக்கி பாறை விரிசலைப் பெரிதுபடுத்தி அந்தப் பாறையில் ஆணிக்கொக்கி மாட்டி யானையை விட்டு இழுத்துப் புரட்டிப்போட வேண்டும். புரட்டிப் போட்ட பாறைப் பாளங்கள் பதினாறு சக்கரங்கள் பொருத்திய பாரவண்டிகளில் ஏற்றப்பட்டு தஞ்சை நோக்கிப் பயணமாகும். அப்படி பாரவண்டியில் ஏற்றுவதற்கு முன்னே இளஞ்சிற்பிகள் பாறையைச் சமன்செய்து விடுவார்கள். கட்டைப் பலகையாகவோ, அடிக்கட்டையாகவோ, உத்திர மாகவோ தூணின் ஆரம்பநிலையாகவோ செதுக்கி தேவை யற்ற பாறைகளை விலக்கி வண்டியில் ஏற்றிவிடுவார்கள்.

தஞ்சைக்குப் போனபிறகு அது மேலும் சமன் செய்யப் படும். தூணாக இருந்தால் சிற்பவேலைகள் நடக்கும். உத்திரக் கட்டையாக இருந்தால் அளவு பார்த்து கட்டைகள் பிளந்து சரியானபடி மாட்டுவார்கள். வெறும் அடிக்கல் அல்லது படிக்கல்லாக இருந்தால் அளவு பார்த்து இரண்டு புறமும் நறுக்குவார்கள் முனைகள் கூரில்லாதபடி மழுங்க வைப்பார்கள். அஸ்திவாரக் கல்லாக இருந்தால் அதிகம் சமன் செய்யாது அதற்கான குறியை எழுதி அனுப்பி விடுவார்கள். கல்லைப் புரட்டிப்போடவும், இழுக்கவும் ஏற்றி அனுப்பவும் ஒரு யானை முன்னே இழுக்க, இன்னொரு யானைபின்னே தள்ள பாறைகளைச் சமன் செய்து கொண்டு சக்கரங்களில் கைகொடுத்து தள்ளிக்கொண்டு போவதற்கு நூற்றுக்கணக்கில் அடிமை வீரர்கள் இருக்கிறார்கள். கல்லில் ஆணி இறக்க நூறு பேரும், அதைத் தரைக்குக் கொண்டுவர நூறுபேரும், தரைக்குக் கொண்டு வந்ததை வண்டியில் ஏற்ற நூறு பேருமாக அடிமைவீரர்கள் இருக்கிறார்கள். இதைத்தவிர நூற்றைம்பது இளஞ்சிற்பிகள் சமன் செய்யும் வேலைக்குத் தயாராக இருக்கிறார்கள். அத்தனை பேருக்கும் பெரிய அளவில் கூட்டாஞ்சோறு செய்ய சமையல்காரர்கள் இருக்கிறார்கள். கூழ் கரைக்கவும், மோர் கரைக்கவும், பருப்பு அரைக்கவும், துவையல் அரைக்கவும், கீரை மசிக்கவும் பல பெண்கள் இருக்கிறார்கள்.

நார்த்தாமலையில் மிக அழகான ஒரு மாரியம்மன் கோவில் இருக்கிறது. அங்கு பூஜை செய்ய இரண்டு அந்த ணர்கள் இருக்கிறார்கள். கோவிலைச்சார்ந்த தேவரடியார்கள்

பத்து பேர் இருக்கிறார்கள் வந்தவர்கள் எல்லோரும் தங்குவதற்கு ஓலைக் குடிசைகள் அழுத்தமாய் போடப்பட்டு விட்டன. ஓலைக் குடிசைகளின் உள்ளேயும், வெளியேயும் விளக்கேற்ற சிறுவர்கள் இருக்கிறார்கள். அரசரோ, சேனாதிபதிகளோ வந்தால் தங்குவதற்கு மிக உயரமான அளவில் கூரைப் பந்தலிட்டு, அதற்கு மேல் புகைபோக வழி ஏற்படுத்தி, எப்படி மழை அடித்தாலும் உள்ளுக்குள் ஒரு சொட்டு நீர் வராதவாறு பலத்த மண்சுவர்கள் ஏற்படுத்தி, உள்ளுக்குள் கல்நட்டு மரப்பலகைகள் வைத்து நீண்ட ஆசனங்கள் தயார் செய்யப்பட்டுவிட்டன. அரசர் வந்தால் அமருவதற்கு ஒரு தனிமர ஆசனம் செய்யப்பட்டிருக்கிறது அதன்மீது அரசர் எழுதிக் கொடுத்த ஓலை இருக்கிறது.

நார்த்தாமலை கிராமத்தலைவர் அந்த ஓலையை வாங்கி கண்ணில் ஒற்றி தனக்குப் படிக்கத் தெரியாது என்று ஒரு புலவரிடம் கொடுக்க, அந்தப் புலவர் உரத்துப் படித்துச் சொன்னார்.

நார்த்தாமலையும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களும் இனி சோழ முதன்மைச்சிற்பி சதாசிவ ஆச்சாரியின் கட்டுப்பாட்டிற்கு வரும். அங்கு இனிமேல் அவர் வைத்ததுதான் சட்டம். அவர் தீர்ப்பே முடிவானது. மீறுபவர்கள் தண்டிக்கப் படுவார்கள் என்று எழுதி முத்திரையிட்டு, இவை என் எழுத்து என்று உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் கையெழுத்தும் இட்டிருந்தார்.

புலவர் படித்து முடித்ததும் ஓலையை வாங்கி கண்ணில் ஒற்றி மறுபடியும் குழலில் சொருகி, அந்தக் குழலை ஒரு தாம்பாளத்தில் வைத்துக் கொண்டு, அதன்மீது பட்டுத்துணி போர்த்தி அந்த பட்டுத்துணி போர்த்திய தாம்பாளத்தை அந்த கிராமத்தலைவர் தலையில் வைத்துக்கொண்டு சிறுமுரசும் எக்காளமும் முழங்க நார்த்தாமலை முழுவதும் சுற்றி வந்து, நார்த்தாமலை அருகிலிருக்கும் கிராமங்களுக்கும் போய் அரசரால் அனுப்பப்பட்ட ஓலை இது. இதில் இன்னது எழுதியிருக்கிறது என்று அங்கங்கே நின்று உரக்கச் சொல்லி ஜனங்கள் சரியென்று தலையசைத்தார்கள். அரசருடைய ஓலையை தொட்டுக் கும்பிட்டார்கள். கிராமத்தலைவரை விழுந்து வணங்கினார்கள். சதாசிவ ஆச்சாரியரை விலகி நின்று கைகூப்பிப் பார்த்தார்கள். ஏதும் வேண்டுமா என்று கைகட்டிப் பணிவாகக் கேட்டார்கள்.

சதாசிவ ஆச்சாரிக்கு குளிர்ந்த மோரும், கிச்சிலி ஊறு காயும் கொடுத்தார்கள். பதிலுக்கு சதாசிவ ஆச்சாரி கொடுத்த சோழ தேசத்து தங்க நாணயங்களை வாங்கி கண்ணில் ஒற்றிக் கொண்டார்கள். கிராமத்து சபையில் வரவு என்று கணக்கு வைத்துக் கொண்டார்கள்.

ஊருக்கு வந்தவர்கள் அனைவருக்கும் தினமும் சமை யலுக்கு இறைச்சியும், மீனும், காய்கறிகளும் அனுப்புவதாய் வாக்களித்தார்கள். ஆனால், நார்த்தாமலை சுற்றியுள்ள கிராமங்கள் அத்தனை வளமையானவை அல்ல. வானம் பார்த்த பூமி அதேநேரம் ஊறுணிகளும், வயல்வெளிகளும் உண்டு. எனினும் மூன்றுபோகம் விவசாயமெல்வாம் இல்லை. ஒரு போகம் என்பதே சிலசமயம் போக்குக்காட்டி விடுகிறது. அதனால் நார்த்தாமலை சுற்றியுள்ள கிராமங்களில் தங்களுக் காக ஒரு போகம் நெல் விதைத்துக் கொண்டாலும், வியாபா ரத்திற்காக நிறைய காய்கறிகள், பழமரங்கள், பூச்செடிகள் நட்டு அவைகளை வல்லத்துக்கோ, தஞ்சைக்கோ அனுப்பி விடுகிறார்கள். வல்வத்துக் கோட்டையில் நார்த்தாமலை காய்கறிகள் மிகப்பிரசித்தம். வல்லத்துக் கோட்டையைச் சுற்றியுள்ள போர்வீரர்களின் குடியிருப்புகளில் நார்த்தாமலை ஆட்டிறைச்சியும், மீனும் நன்கு விற்பனையாகும். கோவில் குளங்களைக் குத்தகைக்கு எடுத்து சுற்றி வவைகட்டி. சிறு இறைச்சித் துண்டங்களும், எலும்பு மஜ்ஜைகளும் தூவி மீன் வளர்ப்பார்கள். மீன்கள் கொழுத்து வளர்ந்தபோது சிறு வலைகளில் அதை அள்ளித்தூக்கி விற்பனைக்குக் கொண்டு வந்து விடுவார்கள். குளத்து மீனை நெடுக அரிந்து முள் அகற்றி உள்ளுக்குள் காரக்கலவையும், பருப்புத் துவையலும் ஊற்றி, புளிச்சாறு ஊற்றி சட்டியில் குறைவாக எண்ணெ யிட்டு மீனைப் புரட்டிப்புரட்டி பக்குவமாக்கி சிறு பெண்கள் விற்பனைக்குக் கொண்டு வருவார்கள்.

ஒரு பானைக்கஞ்சியும் மூன்று துண்டு மீனும், சாப்பிடு பவரைச் சொக்க வைத்துவிடும்.

வீரர்கள் வரப்போகிறார்கள் என்று முன்னமே கிராம மக்களுக்குத் தெரிந்துவிட்டதால் பல நிலங்களைக் கீறி பண்படுத்தி கத்தரி, வெண்டை, அவரை, துவரை என்று தாவரங்கள் வளர்த்து வேலிகள் நட்டு எப்போது எப்போது என்று காத்திருந்தார்கள் ஆள் நடமாட்டமே இல்லாத நார்த்தாமலை கிராமப்பகுதிகள் இப்பொழுது தினந்தோறும்

திருவிழாவாக, ஆட்டமும், பாட்டமும் கூச்சலும், குதூகல முமாய் இருக்கின்றன. முதன்மைச் சிற்பி சதாசிவாச்சாரி மற்ற பூஜைகளை நடத்துமாறு தன்னுடைய சிற்பிகளுக்குச் சொல்ல, அவர்களும் வெவ்லேறு திசையில் நகர்ந்தார்கள்.

ஆயுத பூஜை செய்ய ஒருவரும், மலைக்கு பூஜை செய்ய ஒருவரும், ஆட்டுக்கெடா வெட்ட இருவரும் சன்மானத் திற்கான காசுகளை– மேல்துண்டுகளை– பிரிப்பதற்காக இன்னொரு சிற்பியும் நகர்ந்தார்கள்.

சதாசிவாச்சாரி மலையின் உச்சியிலிருந்து மெல்ல கீழிறங்கி முகப்புப்பந்தல் நோக்கி நடந்தார். சமன் தரைக்கு வந்ததும் அவரை கணக்கர் எதிர்கொண்டார். அவர் தோளில் ஒரு சிறிய மூட்டை இருந்தது. மூட்டையிலிருந்து ஓலைச் சுவடிகள் துருத்திக் கொண்டிருந்தன செலவுக்கணக்கு அடிமைக்கணக்கு, கிராமக்கணக்கு என்று தனித்தனியே ஓலைக்கட்டுகள் வைத்திருப்பார்.

செலவுக்கணக்கு எழுதுகின்ற அந்தக் கணக்கர் தினந்தோறும் சதாசிலாச்சாரியோடு கால்நாழிகை பேசுவார். அவரும் முகம் மலரக் கைகூப்பினார்.

“ஐயா... விடிந்ததிலிருந்து இப்போது வரை இருநூற் றைம்பது பொற்கழஞ்சுகள் செலவாகியிருக்கின்றன. இன்று செலவு அதிகம் இருக்குமென்று நான் எதிர்பார்த்திருந்தாலும் கூடுதலாய் முப்பத்தைந்து பொற்கழஞ்சுகள் கொடுத்திருக் கிறேன். இன்று கை நீட்டினால் காசு கிடைக்கும் என்று தெரிந்து எல்லா கிராம சபையினரும் வந்திருக்கிறார்கள். கைநீட்டி காசு பெற்றுப் போயிருக்கிறார்கள்.

ஆளுக்கொரு பொற்காசு வீதம் கொடுத்தாலும் அலர்கள் திருப்தியடையவில்லை. இன்னும் கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். அரிசியும், உப்பும் கொண்டு வந்து தரமுடியுமா என்றும் கேட்கிறார்கள். இப்பொழுது வருகின்ற அரிசியிலிருந்து ஒரு பகுதி அவர்களுக்கும் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அரிசி செலவு மட்டு மல்லாமல் தானியமும் அவர்களுக்காக நாம் செலவு செய்ய வேண்டியிருக்கும். தானியக்கணக்கும், காசு கணக்கும் என்னிடம் இருக்கின்றன. ஆனால், என்னையே எத்தனை பாரவண்டி கல் போயிருக்கிறது என்று குறிப்பெடுக்கச் சொல்லியிருக்கிறார்கள்.

இது முடியாத காரியம். அதற்கென்று தனி கணக்கர் இருப்பது தான் நல்லது. உங்களில் எவரேனும் ஒருவர் இந்தக் கணக்குப் பொறுப்பை வைத்துக்கொள்வது எனக்கு மிகப் பெரிய நிம்மதியை அளிக்கும். இல்லையெனில் இன்னொரு மூட்டை இந்தக் கையில் நான் சுமக்க வேண்டியிருக்கும். எவ்வளவுதான் சுமப்பது. நீங்களே சொல்லுங்கள்." என்று பரிதாபமாகப்பேச சதாசிவாச்சாரி சிரித்தார்.

"உங்களிடம் அந்தக் கணக்கை நான் நிச்சயம் தரமாட்டேன். என் மனதிற்குள் ஒரு கணக்கு இருக்குமென்றாலும் இதை மிகச் சீராக வைத்துக்கொள்ள எங்கள் பக்கத்து இளைஞர்கள் சிலரைப் பழக்கியிருக்கிறேன். அதில் இரண்டு பேர் பாரவண்டி கணக்குகளை வைத்துக் கொள்வார்கள். எத்தனை கற்கள் போயிருக்கின்றன என்று கணக்குச் சொல்வார்கள். கல்லில் எண் குறிப்பார்கள். அதுமட்டுமல்லாது திருவல்லம் ஊர் எல்லையில் வந்த கற்களை மறுபடியும் கணக்கு எடுத்து தஞ்சைக்கு அனுப்பும் முன் சரிபார்க்க இன்னும் இளைஞர் பட்டாளத்தையும் ஏற்பாடு செய்திருக்கிறேன் அந்தக் கூட்டத்தில் மூன்று பெண்களும் இருக்கிறார்கள். தஞ்சையில் இதே கணக்கை நேர்செய்து கல் வாங்குவதற்கான ஆட்களும் உண்டு. எனவே கல் கணக்கும், கருவிகள் கணக்கும், இங்குள்ள ஆட்கள் கணக்கும் உங்களுக்கு வேண்டாம். எவ்வளவு தானியம் பொற்கழஞ்சு செலவு என்பதை மட்டும் எனக்காக அல்ல, அரசருக்காக எழுதி வைத்துக்கொள்ளுங்கள். கேட்கிற நேரமெல்லாம் நீங்கள் காசு கொடுக்க வேண்டும் என்பதுதான் என் கவலையே தவிர, உங்கள் கணக்கு என்ன என்பதுபற்றி எனக்குக் கவலையில்லை. அதை உரியவர் தணிக்கை செய்வார். அவருக்கு நீங்கள் பதில் சொல்லிக் கொள்ளுங்கள். இப்பொழுது கையிருப்பு எவ்வளவு உள்ளது."

"கையிருப்பு அதிகமிருக்கிறது கவலைப்படாதீர்கள்"

"பணத்தை எங்கு வைத்திருக்கிறீர்கள்."

"நம்முடைய முகப்புப் பந்தலில்தான்"

இல்லை. முகப்புப்பந்தல் பாதுகாப்பான இடமல்ல. எங்கு காசு இருக்கிறதோ அது அரசு கருவூலமாகச் செயல்பட வேண்டிய இடம். சுற்றி சுவர் எழுப்பி ஓடு போட்டு வைத்திருக்க வேண்டும். இந்தக் கிராமத்தில் ஏதேனும் ஒரு ஓட்டு

வீட்டை நீங்கள் தேர்ந்தெடுத்து குடியமர்த்திக் கொள்ளுங்கள். அந்த வீட்டிற்கு வாடகை கொடுத்துவிடலாம். இல்லையெனில் வீட்டையே கூட வாங்கி விடலாம். ஒரு முழு வீட்டை விலைக்கு வாங்கி விட்டால், முன்பக்கத்து அறை உங்களுக்கும், கூடம் மற்றும் அறைகளை வந்துபோகும் சேனாதிபதிகள் தங்குலதற்கும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ஒரு வீட்டை விலை பேசுங்களேன்." சதாசிவாச்சாரி சொல்ல, கணக்கர் சரியென்று தலையசைத்தார்.

"கையிருப்பு எல்வளவு என்று சொல்லலே யில்லையே."

அதைப்பற்றிக் கலலையேபடாதீர்கள்"

"ஏன். என்னிடம் சொல்லுலதற்கும் பயமா."

"அது உங்களுக்கு முக்கியமில்லை சதாசிலத்தாரே. அது என் கவலை. நீங்கள் கேட்டபோதெல்லாம் காசு கொடுக்க லேண்டியது என்னுடைய பொறுப்பு. எனக்கு வீடு ஒழித்து முன்பக்கத்து அறையைக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் நான்கு மறலர்களையும் துணையாக வைக்க வேண்டிய அவசியம் உண்டு. இப்பொழுதே இரண்டு மறவரை நான் என் பக்கம் தனிக்கூலி பேசி சேர்த்திருக்கிறேன். இன்னும் இரண்டு மறவர்களை உங்கள் பக்கமிருந்து எடுத்துக் கொள்ளப் போகிறேன்."

"ஆஹா அதற்கென்ன தாராளமாக செய்து கொள்ளுங்கள். வேலை எப்பொழுது துவங்கும்."

"இதோ இன்னும் ஒன்றரை நாழிகையில் துவங்கி விடும்."

"ரத்தம் தெளித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆட்டுக் கடாக்களை அறுத்துவிட்டார்கள் என்று நினைக்கிறேன். இப்பொழுது படையல் போடுவார்கள். ஹா.. குலலைச் சத்தமும் கேட்கிறது. படையலும் முடிந்துவிட்டது. ஒரு நடை மாரியம்மன் கோவிலுக்குப் போய் சிற்பிகள் சம்பாவனை எப்படி நடக்கிறது என்று பார்க்கலாம்."

கணக்கர் என்று அழைக்கப்படும் அந்த அதிகாரி லயதானவராக, ஆனால் உறுதியான நடை உள்ளலராக இருந்தார். அதிகம் பேசாது கூர்மையான பார்லையோடும், வேகமான நடையோடும் தன் தோள் பட்டையைவிட்டு அந்த மூட்டையைச் சற்றுகூட இறக்கி லைக்காமல் எல்லாவற்றையும் சந்தேகத்தோடு பார்க்கின்ற பார்வையோடு இருந்

தார். அதிகம் சிரிக்கக்கூடாது என்ற உறுதியும் அவரிடம் இருந்தது. அவர் அதிகம் சிரிக்காததாலேயே அவரைச்சுற்றி இருந்த ஆட்கள் சிரிப்பலைகளை அலைய விட்டுக் கொண் டிருந்தார்கள். அவரைச் சிரிக்க வைக்க முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் அவர் சிரிக்க மறுத்தார். சிரித்தால் காசு கேட்பார்கள் என்று அவருக்குத் தெரியும்.

எவரோ கைநீட்ட வாரி வழங்குவதற்கு இதென்ன அவர் சொந்தக்காசா. அரசர் காசு. அரசாங்கக்காசு. அவரிடம் இன்றைய செலவு போக ஆயிரத்து அறுநூற்று ஐம்பது பொற் காசுகள் இருக்கின்றன. ஆனால் அவருக்கு வருடத்திற்கு பன்னிரெண்டு பொற்காசுகள்தான் சம்பளம். ஆனால் எங்கு தங்கினாலும் வீடு இலவசம். வண்டிச்சத்தம், குதிரைச்சத்தம் போன்றவைகளை அவர் கணக்கு எழுதிக் கொள்ளலாம். எங்கேயும் நுழைவு வரி கணக்கருக்குக் கிடையாது. முதலாவ தாகக் கூப்பிட்டு மரியாதை செய்யமாட்டார்களே தவிர, முக்கியமாய்க் கூப்பிட்டு மரியாதை செய்வார்கள்.

ஆயிரத்து அறுநூற்றைம்பது பொற்காசுகளும் ஒரு மரப் பெட்டியில் போடப்பட்டு பூட்டப்பட்டிருக்கிறது. அதற்குக் காவலாய் இரண்டு தஞ்சை மறவர்களை வைத்திருக்கிறார்கள். அந்தத் தஞ்சை மறவர்கள் கைக்கோளப் படையினர்கள். இடங்கை வீரர்கள். மிக உண்மையானவர்கள். அப்பாவிகள், நூறு காசு தரையில் கொட்டி எண்ணிச்சொல் என்றால், அவர்களால் எண்ணவும் முடியாது. ஆனால், பொற்காசு களை ஐம்பதாகப் பத்தாகப் பட்டுத்துணியால் வைத்து அப்படியே சுற்றி பட்டுக்கயிறால் இறுக்கி முடிச்சுப் போட்டு வைத்திருக்கிறார். காசு வேண்டுமெனில் துணியைக் கிழித்தா லொழிய, முடிச்சை அறுத்தாலொழிய எடுக்க முடியாது. கர்ணம் என்று பிற்பாடு மருவிற்று. இம்மாதிரி காசு வைத்து கணக்கு எழுதுபவர்களுக்கு கரணத்தார் என்ற பெயரும் உண்டு.

எந்த வகையான கரணம் என்று தெரிந்து கொள்வதற்காக செய்யும் தொழிலையொட்டி இன்னவகையான கரணத்தார் என்றும் பேசப்படுவதுண்டு. நிலங்களை அளந்து கணக்கு வைத்துக் கொள்பவர்கள் தரைகண்காணிகரணத்தார். கல்தச்சக வகையை சேர்ந்தவர் என்பதால் கல்தச்சுக் கரணத்தார் என்று இவருக்குப் பெயர் படைவீரர்களுக்கு கூலி கொடுக்க படைவீர கரணத்தார் என்றும், ஆனை கரணத்தார், குதிரைக்

கரணத்தார் என்றும் பலபேர் இருந்தார்கள். அரண்மனையில் உள்ளவர்களுக்கு பொதுக்கணக்குக் கரணத்தார் என்று பெயர். இதைத்தவிர கோயில் கரணத்தார். கிராமக்கரணத்தார் என்றும் பலர் இருந்தார்கள்.

இது பரம்பரை வேலை. என் தகப்பனார் கிராமக் கரணத்தாராகவும். பொதுக்கணக்குக் கரணத்தாராகவும் இருந்தார். என்னுடைய சிற்றப்பனும், பெரியப்பனும் இந்த மாதிரி கணக்குப் புத்தகம் எழுதி வைக்கின்ற வேலை பார்த்தார்கள் அதாவது கரணத்தாருக்குக் கீழே வேலை பார்த்தார்கள். வேறு சில இடங்களில் கரணத்தார் இல்லாமல் மத்தியஸ்தர்கள் இருந்தார்கள். அந்த மத்தியஸ்தர்களுக்கும் கணக்குப் புத்தகம் எழுதுபவர் தேவைப்பட்டது. மத்தி யஸ்தர்கள் நடுநிலையாளர்களாக இருந்து இந்த செலவு அவசியம்தானா, இல்லையா என்பதைச் சீர்தூக்கிப்பார்த்து அரசாங்கப்பணத்தை செலவழிப்பவர்களாக இருந்தார்கள். ஆள் நிர்ணயம், கூலி நிர்ணயம் போன்றவற்றை அவர்கள் செய்து வந்தார்கள்.

இங்கே இவர் தலைக்குமேல் கரணத்தாராக எவரும் இல்லை. ஆனால், சதாசிவாச்சாரி முதன்மைச்சிற்பியாக இருந்து இங்கிருந்து பாறைகள் அனுப்புகின்ற வேலையை ஒப்புக் கொண்டிருந்தார். இந்த வேலை முடியும்வரை நார்த்தாமலை கிராமப்பகுதிகளில் அவர் வைத்ததுதான் சட்டம். ஒரு சிற்றரசர்போல அவருக்கு மரியாதை தரப்படும். செல்வாக்கு இருக்கும். சதாசிவாச்சாரி நல்லவர் செய் தொழிலில் வல்லவர். ஆனால் சற்று கர்வி.

சிற்பிகளில் சதாசிவர் கோட்டை கட்டுகிறவர். அகழி அமைக்கிறவர். அவரை கோயில் கட்டும் இடத்திற்கு வைக் காமல் நார்த்தாமலைக்குப் பாறைகள் பிளக்க அனுப்பி விட்டார்கள் என்ற வருத்தம் அவருக்குக்குண்டு. அந்த வருத்தத்தை மறைக்க ராஜராஜப் பெருந்தச்சர் அவருக்குக் கூடுதலான அதிகாரங்கள் கொடுத்தனுப்பியிருக்கிறார்.

ஒரு ஊருணிக்கருகே நல்ல நிலம் தேர்ந்தெடுத்து அவரைப் புதிதாய் வீடு கட்டிக்கொள்ளச் சொல்லி அவர் வீட்டுப் பெண்களையும் நார்த்தாமலைக்கே அழைத்துக் கொள்ளலாம் என்றும் அனுமதியளித்திருக்கிறார் அதுமட்டு மல்லாது தங்கு தடையின்றி காசு வழங்க வேண்டுமென்றும் கணக்கரிடம் உத்தரவிட்டிருக்கிறார். காசும், கணக்கு வழக்கும்,

கணக்கு புத்தகமும் கல்தச்சுக் கரணத்தாரிடம் இருப்பினும் அதை அனுபவிக்கிற ஏகபோக பாக்கியதை சதாசிவாச் சாரிக்கு உண்டு.

இரண்டாம் வகை சிற்பிகளும், மூன்றாம் வகைசிற்பி களும், மறவர்களும், சதாசிவாச்சாரியை மிகப்பணிவாக வணக்கத்தோடு பார்ப்பதும் பேசுவதும் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்

ஆனால், சதாசிவாச்சாரி கெட்டிக்காரர். தன்னுடைய கர்வத்தை உதவியாளர்களிடமோ, மறவர்களிடமோ, அடிமை வீரர்களிடமோ காட்டவில்லை. உள்ளுக்குள்ளே அடக்கி வைத்துக் கொண்டிருக்கிறார். இன்னொரு விதமான முதன் மைச் சிற்பி கருவறை வேலை செய்பவர் ஆலோசனைகள் என்று சொல்ல முன் வந்தபோது அவரைக் கடித்துக்குதறி அனுப்பினார்.

உனக்கு வரும் கற்களைக் கொண்டு வேலையைச் செய். எந்தக் கற்களை எங்கு வெட்டுவது, எப்படி வெட்டுவது எதை முதலில் வெட்டுவது எது பிற்பாடு என்றெல்லாம் நாங்கள் எதுவும் முடிவு செய்யவில்லை. எது எளிதாக இயலுமோ அப்படி வேலை துவங்க எண்ணியிருக்கிறேன். இந்த வீரர் களோடும், அடிமைகளோடும் என்னுடைய உதவியாளர் களோடும் எனக்கு இன்னும் நல்ல பழக்கம் ஏற்படவில்லை. இவர்களுக்கும் இந்த இடத்தினுடைய தன்மை புரியவில்லை. சிறிது நேரத்தில் வந்து கத்தரிக்காய், அவரைக்காய் போல் எனக்கு இதுவேண்டும் என்று கேட்டால் வாரிக் கொடுக்க நான் இங்கு வகைவகையாகவா வைத்திருக்கிறேன். என்ன கேட்பது என்று தெரியவேண்டாம். எப்பொழுது கேட்பது என்று புரிய வேண்டாம் என்று சீற, அந்தக் கருவறைச் சிற்பி வாயடைத்து மௌனமாகத் திரும்பினார்.

சதாசிவாச்சாரி உதவியாளர்கள் நமுட்டுச் சிரிப்போடு அவர் வேதனையை ரசித்துக் கொண்டிருந்தார்கள். காவலுக்கு வந்த மறவர்கள் இவர்கள் சண்டையை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். அடிமை வீரர்களுக்கும் இவர் கோபம் பற்றி ஒன்றும் புரியவில்லை. ஆனால் கணக்கரான கல்தச்சுக் கரணமான இவருக்கு மட்டும் இது கர்வத்தின் உச்சக்கட்ட வெளிப்பாடு என்பது புரிந்திருந்தது. அது இன்னும் கிளை விட்டு வளரும் என்று தெரிந்திருந்தது. யாரும் கிடைக்கா விட்டால் இந்தக் கர்வம் தன்னைப்பிடித்து குதறிக் கிழிக்கும்

என்று அவர் அறிந்திருந்தார். இதைச் சமாளிக்க வேண்டிய துர்பாக்கியம் தனக்கு வந்துவிட்டது என்ற கலவையும் அவருக்கு இருந்தது.

கோவில் கணக்காக இல்லாமல், பொதுக்கணக்காக இல்லாமல் இப்படி கல்தச்சுக் கரணமாக வந்து உட்கார்ந்திருக்கிறோமே என்கிற வேதனையும் இருந்தது.

எனக்கு வீடு இல்லையா. என் வீட்டில் பெண்டுகள் இல்லையா. என் பேரக்குழந்தைகளோடு நான் விளையாடிக் களிக்க வேண்டாமா. இதற்கு யாரிடம் அனுமதி கேட்பது.

சதாசிவச்சாரியிடம் கேள் என்று சொல்வார்கள். எப்பொழுது என்ன சலுகை கேட்கப்போகிறேன் என்று இந்தச்சிற்பி காத்திருக்கிறான். கேட்டால் எகத்தாளம் செய்வான். எனவே எதுவும் கேட்காது இருப்பதே நல்லது என்று எண்ணினார்.

யோசிக்க யோசிக்க குமைச்சல் அதிகமாகியது. ஆனால், இது சிற்பிகளின் காலம். கருமார்கள் ஏற்கனவே ஸ்ரீ இராஜராஜத் தேவரிடம் அழுது புலம்பி முறையிட்டு சில சலுகைகள் வாங்கிவிட்டதாகச் சொல்கிறார்கள். செப்புப் பட்டயத்தில் அந்த சலுகை அடித்துக் கொடுக்கப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் சலுகை வழங்கப் படும் என்று சொன்னதோடே இராஜராஜர் மௌனமாக இருந்தார். மேற்கொண்டு அதுபற்றிப் பேசவில்லை. அவர்கள் கேட்ட பலவித சலுகைகளில் மூன்று மட்டுமே கொடுத்திருப்பதாக அந்தணர்கள் உரத்துச் சொல்கிறார்கள். மற்றதைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்கிறார்கள். முன்னும், பின்னும் வாசல் வைத்து வீடு கட்டிக் கொள்ளவும், வீட்டிற்குச் சுண்ணம் அடித்துக் கொள்ளவும், வாசலில் திண்ணை கட்டிக்கொள்ளவும் சலுகை வழங்கியதாக சொல்கிறார்கள். அது தவிர அவர்கள் கேட்ட காலுக்கு செருப்பணிந்து கொள்கிற, மேலே சால்வை போர்த்திக் கொள்கிற, நல்லது கெட்டதிற்கு சங்கு ஊதிக்கொள்கிற, பல்லக்கில் ஏறிப்போகிற, பூணூல் அணிந்து கொள்கிற பல சலுகைகளைப்பற்றி வாயே திறக்கவில்லை என்றும் பேசுகிறார்கள்.

கருமார்களுக்கு இது வெற்றியா? தோல்வியா?

தெரியவில்லை. வெறுமே வாயடைத்து விட்டார்கள். இனி கருமார்கள் வாய்மூடி வேலை செய்ய வேண்டியதுதான். தொடர்ந்து செய்தால்தான் மற்ற சலுகைகள் கிடைக்கும் என்பது போல ஸ்ரீ இராஜராஜத்தேவர் வைத்துவிட்டார். இது மிகப் பெரிய ராஜதந்திரம் என்று சொல்கிறார்கள். ஆனால், கருமார்கள் இதை வேறுவிதமாகப் பார்க்கிறார்கள். இந்தச் சலுகைகளில் மூன்று கிடைத்துவிட்டது. மற்றதையும் போராடி வாங்குவோம். ஏனெனில் இளவரசர் இராஜேந்திரர் எங்கள் பக்கம். மிக முக்கியமான வேலையில் இராஜராஜத் தேவர் ஈடுபட்டிருப்பதால் அதற்கு எந்தத் தீங்கும் வராமல் பார்த்துக்கொள்வோம். வேலையில் முழுமனதோடு ஈடுபடுவோம். ஈடுபட்டுவிட்ட பிறகு இராஜேந்திரரிடம் பேசி மொத்த சலுகைகளையும் வாங்கியே தீருவோம். என்று கருப்பு மண்ணில் அறைந்து சபதம் செய்திருக்கிறார்கள். தாங்க ளல்லவா கேட்டிருக்க வேண்டும் இந்தச் சலுகையை, தாங்கள் கேட்டிருந்தால் நிச்சயம் கிடைத்திருக்கும். கருமார்கள் அவசரப்பட்டு கேட்டுவிட்டார்கள் என்று சிற்பிகளுக்குள்ளே பேச்சு நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், இராஜராஜப் பெருந்தச்சரோ இது லேலையற்ற வேலை, தேவையற்ற கோரிக்கை என்று கடிந்து கொண்டாராம்.

அந்தச் செய்தி கருமார்களுக்குப்போய் கோபமடைந்த தாகவும், ஊர் பெரியவர்கள் கோபமுற்ற இளைஞர்களை அடக்கியதாகவும் செய்தி லந்தது.

கோவில் கட்டவேண்டும் என்று ஆரம்பித்து அதற்குப் பிற்பாடு ஏற்பட்ட இந்தச் சமூக மாற்றங்கள் குறித்து தஞ்சை மட்டுமல்ல சோழதேசம் முழுவதுமே பரலலாக பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. பாண்டியர்கள் இது குறித்து மிகக் கேலியாகப் பேசினார்களாம். யாரோ சில பாண்டிய வீரர்கள் மெல்லிய தாம்புக்கயிறை குறுக்கே போட்டு எங்கள் தேசத்தில் எங்களுக்குப் பூணூல் அணிந்துகொள்ள அனுமதி கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னார்களாம். அதைப் பார்த்துவிட்டு கங்கர்களும், இராஷ்டிர கூடர்களும் வாய் விட்டுச் சிரித்தார்களாம். வெற்றி பெற்ற ஒரு தேசத்தை நோக்கி, வளமையான ஒரு நாட்டை நோக்கி எப்படியெல் லாம் கொக்கரிக்கிறார்கள். சின்னச்சின்ன விஷயங்களையும் கவனித்து எப்படி கேலி செய்கிறார்கள் என்று ஆதங்கமாக இருந்தது.

சவுக்கால் அடித்து லாயடைத்து விடலாம். ஆனால் கேலி கேலிதானே.

சதாசிவாச்சாரியின் பின்னாடி நடந்தபடியே அந்தக் கல்தச்சுக் கரணம் தோளில் மாட்டியிருந்த சுமையை மறுதோளுக்கு மாற்றிக் கொண்டு கோயிலுக்கு அருகே போய் சாமி கும்பிட்டுவிட்டு வெண்ணெயும், மோரும் பிரசாதமாக வாங்கிக்கொண்டு கல்லில் ஆணி அடித்து புரட்டுகின்ற இடம் நோக்கிப் போனார்.

நாற்பது தப்படி மேலே ஏற வேண்டியிருந்தது. உள்ளே துருத்திக் கொண்டிருந்த ஒரு பாறையின் சந்தில் நீண்ட ஆணியை வைத்து இரண்டு வீரர்கள் குத்திட்டு அமர்ந்து பிடித்துக்கொள்ள மேலே ஒருவனும் கீழே ஒருவனுமாய் மலையில் நின்றார்கள். மேலே நின்றவன் சரியாக கால் ஊன்ற முடியாமல் தவித்தான். அவன் கால் ஊன்றிக் கொள்ள சிறு பாறைக்கற்கள் போடப்பட்டன. அதில் கால் ஊன்றி நின்றான்.

தீபம் ஏற்றப்பட்டது. எல்லோரும் கைகூப்பினார்கள். தென்னாடுடைய சிவனே போற்றி என்று உரக்கக் கூவி னார்கள். 'நார்த்தாமலை மாரியாத்தா எங்கள் மீது கருணை வைய்யம்மா.'

கைகூப்பி கோவில் இருந்த திசை நோக்கி சதாசிவாச்சாரி வணங்கினார். துவங்குங்கள் என்று சொன்னார்.

சிற்பிகள் அழுத்தமாக ஆணியைப் பிடித்துக்கொள்ள முதலில் மெல்ல ஆணி அடித்து அது கல்லில் ஒரு கை இறங்கியதும், வேகமாகச் சுழற்றிச் சுழற்றி அடித்துத் தாக்கினார்கள். விரிசலில் ஆணி சுலபமாக இறங்கியது. அந்த விரிசலின் தடத்தைப் பிடித்துக் கொண்டே வேறு இடத்தில் நீண்ட ஆணிகளைப் பொருத்தி அடித்தார்கள். இன்னும் விரிசல் பெருசாயிற்று. எங்கு விரிசல் விடவில்லையோ. அங்கு சிறு உளியால் மடமடவென்று துளை போட்டார்கள். நடு மையத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். அங்கு கடப்பாறை போன்ற பெரிய ஆணியை வைத்து அழுத்தி அடித்தார்கள். இன்னும் பலமாகத் தாக்குங்கள் பாறை பிளந்து விடும் என்று சதாசிவாச்சாரி சொல்ல, ஆணிமேல் இன்னும் பலமாகத் தாக்க பட்டென்று பாறை விடுபட்டது. பாறை விடுபட்டதும் சதாசிவாச்சாரி கத்தினார்.

நகர்ந்து போங்கள் நகர்ந்து போங்கள் என்று சொன்னார். ஆனால் கீழே சரிவில் பத்தடி தூரத்தில் இருந்த அடிமைவீரர்கள் நகரவில்லை. சிற்பிகள் வேகமாக நகர அவர்கள் வியந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒருவேளை சொன்னது புரியவில்லை என்று சதாசிவாச்சாரி கையை ஆட்டி அவர்களை விலக்க, அந்தப்பாறை மண்ணிலிருந்து மெல்ல அசைந்து துருத்திக் கொண்டிருந்த பாறை என்பதால் பளிச்சென்று வலதுபக்கம் சாய்ந்தது. பாறை வலதுபக்கம் சாய்ந்திருப்பது பார்த்தாவது அந்த வீரர்கள் விலகியிருக்க வேண்டும். இடதோ வலதோ நகர்ந்திருக்க வேண்டும். அப்படியல்லாது அவர்கள் சற்றுப் பின்னடைய அந்தப்பாறை வேகமாக உருண்டு வந்தது. ஒன்று.. இரண்டு.. மூன்று.. நான்கு.. என்று சுழல எல்லோரும் ஓவென்று கத்த அந்த வீரர்கள் மேலும் பின்னடைந்தார்கள். சமதளத்திற்கு வந்தும் அந்தப்பாறை வேகத்தின் காரணமாய் நாலைந்து முறைகள் உருண்டு ஒரு அடிமை வீரனை நச்சென்று தாக்கியது. அவன் அடிபட்டுக் கீழே விழ, அவன் மீது பாறை புரண்டு ஏறி அழுத்திற்று.

அந்தச் சாளுக்கிய வீரன் உரக்கக் கத்தினான் சட்டென்று அவன் குரல் அடங்கிப் போயிற்று. பாறையின் கீழிருந்து விரைவாய் ரத்தம் பரவ ஆரம்பித்தது. வீரர்கள் அலறினார்கள். ஓடிவந்து கடப்பாறையைக் கொடுத்து பாறையைத் தூக்க முயற்சித்தார்கள். ஆனால் பாறையை அசைக்கக்கூட முடியவில்லை. யானை வந்து பாறையை முட்டுக் கொடுத்து தூக்க கீழே அந்தச் சாளுக்கிய வீரன் உடல் கிட்டத்தட்ட பாதி கூழான நிலையில் இருந்தது.

நார்த்தாமலையில் முதல் வேலையில் நரபலி விழுந்தது.

சதாசிவாச்சாரி கவலையானார். அவர் கவலையைப் பார்த்து, கல் தச்ச கரணமான கணக்கருக்குச் சந்தோஷம் வந்தது.

# 122

**“எ**ன்ன நாரத்தை மலையில் நரபலி நடந்துவிட்டதா.”

பஞ்சவன்மாதேவி திடுக்கிட்டு எழுந்து நின்றாள்.



உடையார் ஸ்ரீ இராஜ ராஜத்தேவரின் மூன்றாவது மனைவியும் அவருடைய நெருங்கிய அன்புக்கு பாத்திர மானவளும் சோழதேசத்து அரசியலில் ஆளுமை மிக்க வளும் பழுவூர் கோட்டத்தைச் சொந்த ஊராகக் கொண்ட வளும், பழுவூர் பரமேஸ்வர ருக்கு தன்னை அர்ப்பணித்த குடும்பத்தைச் சேர்ந்தவளும் அங்கே தலைக்கோலியாக இருந்து பிறகு இராஜராஜரின் பார்வைபட்டு அவருக்கு உதவ வந்தவளாகி இராஜராஜருக்குப் பிறந்த இராஜேந்திர சோழ னைக் கவனமாக வளர்த்து வந்தவளும், கருணையும் கண் டிப்பும் ஒருங்கே பெற்றவளு மான பஞ்சவன் மாதேவியைச் சுற்றி பல அதிகாரிகள் இருந் தார்கள். வேறு எந்த தேசத்து நாகரிகத்திலுமில்லாத ஒரு அற்புதமான வழக்கம் சோழ தேசத்தில் இருந்தது.

ஆண்கள் எல்லோரும் யுத்தத்திற்குப் போய்விட்ட படியால் நாட்டு நடப்பை, ஊர் பொது நிர்வாகத்தைப் பெண்களில் கெட்டிக்காரர்கள் ஏற்று நடத்தி வந்தார்கள். வேறு வழியில்லாமல் ஆள்பற்றாக் குறையால் ஆரம்பித்த இந்த வழக்கம் பிறகு சீர்பட்டு அவ்வித பெண்களுக்கு அதிகாரிச்சிகள் என்கிற பதவி கொடுத்து நல்ல சன்மானம் கொடுத்து பல அதிகாரங்கள் கொடுத்து மிக மரியாதையாய் சோழ தேசம் நடத்தி வந்தது. குறிப்பாய் அரண்மனை சுற்றியுள்ள பகுதிகளில் அவர்கள் மிக கம்பீரமாய் ஆட்சி செய்து வந்தார்கள்.

சில சமயம் அரசரைக்கூட எங்கே போகிறீர்கள் என்று கேட்கக்கூடிய அதிகாரம் அந்த அதிகாரிச்சிகளுக்கு இருந்தது. அரசரின் பட்டமகிஷியும் மற்ற மனைவியரும் அதிகாரிச்சி களுக்கு அடங்கியே அவர்களின் காவலோடேயே வாழ்ந்து வந்தார்கள் ஆனால், பஞ்சவன்மாதேவி அதிகாரிச்சிக் கெல்லாம் அதிகாரியாக இருந்தபடியால் சோழதேசத்து

அரசியலில் சகல விவரமும் தெரிந்தபடியால் அலசியமெனில் வாளெடுத்து போராட முறையாய் கற்றிருந்தமையால் அத்து மீறுகிற யாரையும் ஒரு பார்வையில் அடக்குகிற திண்மை பெற்றிருந்தபடியால் யார், எப்படி, எதற்கு நகருவார்கள் என்ற அனுமானம் கொண்டிருந்தபடியால் அவரைப் பலரும் மிகுந்த பணிவோடேயே கவனித்தார்கள்.

அவர் திடுக்கிட்டு எழுந்ததும் பலரும் சுறுசுறுப் பானார்கள். என்ன என்று வியந்து அவரை உற்றுப்பார்த் தார்கள்.

"இது சக்ரவர்த்திக்குத் தெரியுமா"

பஞ்சவன்மாதேவி மிகச்சரியாக சிந்திப்பவள் என்பதை இந்தக் கேள்வி உறுதிப்படுத்தியது.

அதிகாரிச்சி முத்தான பொன்நங்கை இந்த கறுகறுப்பைப் பார்த்து வியந்தாள்.

கேட்டது ஐந்து நொடி. அடுத்த ஐந்து நொடியில் என்ன வேண்டுமென்று சிந்தித்துவிட்டு பதினோராவது நொடியில் கேள்வியை பஞ்சவன் மாதேவி கேட்டுவிட்டார்.

என்ன வேகம், என்ன தெளிவு என்று வியந்தாள்.

"இந்தச் செய்தி வேறு யார்யாருக்கெல்லாம் தெரியும். நீ எங்கிருந்து வருகிறாய். உன்னுடன் வேறு யாராவது வந்தார்களா."

"இராஜராஜப் பெருந்தச்சருக்கு இந்தச் செய்தி அனுப்பப் பட்டுவிட்டது."

"அவரிடம் சேர்ந்து விட்டதா"

"இல்லை."

இந்தக் கேள்விகள் அனைத்துமே அரசியல் தொடர்புகள் உடையவனாக இருந்தன.

சிற்பிகள் இராஜராஜப் பெருந்தச்சருக்கு கட்டுப்பட்ட வர்கள். முதலில் அவருக்குத்தான் தகவல் தெரிவிப்பார்கள். அப்படி பெருந்தச்சருக்கு தகவல் தெரிந்ததெனில் அந்தச் செய்தியை உடனடியாக சக்ரவர்த்திக்குச் சொல்ல பெருந்தச்சர் ஆசைப்படுவார்.

ஒரு சிற்பியின் உதவியால் முதன்முதவாக பாறை பிளக்கப்படும்போது உயிர்நீத்தான் என்று சக்ரவரத்திக்கு சற்று தூக்கவாகவே சொல்லப்படும். புலம்பவாகவே விளக்கப்படும்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரின் மனநிலை அதனால் நிச்சயம் பாதிக்கப்படும்.

வேறு எவரும் இந்த விஷயத்தைச் சொல்லும் முன்பு சக்ரலர்த்திக்கு தான் இந்த விஷயத்தைச் பக்குவமாகச் சொல்லி அவரைத் தயார்படுத்தி விட்டால் அது நல்லது. சந்தோஷச் செய்தியை யார் வேண்டுமானாலும் சொல்லி என்ன சன்மானம் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளட் டும். ஆனால் கோவில் கட்டுவதற்கு இடைஞ்சலாக ஒரு விஷயம் நடந்திருக்கிறது என்கிற போது, அதைப் பக்குவமாகச் சொன்னால்தான் முடியும். இல்லையெனில் இந்தப் பெரிய காரியத்திற்கு ஏதேனும் இடைஞ்சல் வந்துவிடும்.

“சக்ரவர்த்தி எங்கே.”

பஞ்சவன்மாதேவி விசாரித்தாள்.

“அஸ்திலாரம் தோண்ட ஆரம்பித்து விட்டார்களல்லலா. நடுவே நல்ல மழை பெய்ததல்லவா. அதனால் பூமி நன்கு இளகியிருக்கிறது. தொடர்ந்து அஸ்திவாரம் வெட்டும் பணி நடந்து கொண்டிருக்கிறது. அடிமை வீரர்களும், சோழதேசத்து மறலர்களும் முழுவதுமாய் அதில் ஈடுபட்டுக் கொண்டிருக் கிறார்கள். கூடை கூடையாய் மண் எடுத்துக் கொண்டுபோய் தொலைதூரம் கொண்டு போய் கொட்டிவிட்டு வருகிறார்கள்.

நாலாபக்கமும் அஸ்திலாரம் தோண்ட ஆரம்பித்து விட்டார்கள். சக்ரவர்த்தி அந்த வீரர்களுக்கு உணவு சமைக் கும் இடத்தில் சற்று முன்பு இருந்தார். உணவு சமைப்பதற்கு சமையல்காரர்கள் இருந்தாலும் தேவரடியார்களும் உதவுகிறார்கள். கோவிலுக்கான இடம் என்பதால் மரக்கறி உணவுதான் அங்கு சமைக்கப்படுகிறது. இரவு நேரம் வீரர்கள் தங்குமிடத்தில் மது வகைகளோடு மாமிச உணவுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சக்ரவர்த்திக்குத் துணையாய் பழுவேட்ட ரையரும் வேறு சில குறுமன்னர்களும் சூழ்ந்திருக்கிறார்கள்.

சக்ரவர்த்தியின் மெய்க்காவல் படை கூடவே இருக்கிறது. அதிகாரிகளைத் தவிர வேறு யாரும் சக்ரவரத்தியை அண்ட

விடுவதில்லை. ஒருவேளை சக்ரவர்த்தி அழைத்தால் சோதனையிட்ட பிறகே அருகே அனுப்புகிறார்கள்.

மன்னரிடம் மண்வெட்டியைக் காட்ட வந்த ஒரு கங்க இளைஞனை வேகமாக அப்புறப்படுத்தி விட்டார்கள் இதனால் கங்கர்கள் லேசாக கோபம் அடைந்ததாகவும் சக்ர வர்த்தி சமாதானம் செய்தததாகவும் காலைச் செய்தி வந்தது. அந்த கங்க இளைஞன் மண்வெட்டி இப்படி இருக்கலாகாது இன்னும் நீண்ட கைப்பிடி வேண்டும். அப்பொழுதுதான் வெட்டு வேகமாக விழும் என்று சொல்லி வேறு கைப்பிடி பொருத்திக் காட்டினான் மரத்தச்சர்கள் அதைக் குறிப்பெடுத்துக்கொண்டார்கள். நீண்ட கைப்பிடி இருந்தால் இன்னும் அகலமாக மண்வெட்டி இருக்கலாம் என்றும் சொல்லப்பட்டது.

இளவரசர் இராஜேந்திரர் திருவல்லம் கோட்டையில் போய் ஓய்வெடுத்துக்கொண்டதாகவும், அங்கே தான் பயிற்சியின் போது சந்தித்த பழைய வீரர்களைப் பார்த்து பேசிக் கொண்டிருப்பதாகவும். ஒற்றர்களோடு ஒரு கூட்டம் நடத்தியதாகவும் இராஜேந்திரசோழனுக்கருகே அருண் மொழிப்பட்டன் இருப்பதாகவும் அங்கே குதூகலமான ஆடல்பாடல் விஷயங்கள் நடைபெறுவதாகவும் செய்தி வந்தது.

திருவல்லத்திற்கு அடிமை வீரர்கள் போயிருப்பதாகவும் அங்குள்ள அடிமை வீரர்கள் இராஜேந்திரரை ஆவலோடு பார்த்துக் கொண்டிருப்பதாகவும், மக்களோடு எளிதாகக் கலந்து விட்டதாகவும் சொல்கிறார்கள். திருவல்லத்துக் கோட்டையிலுள்ள குழந்தைகள் இராஷ்டிரகூட கங்க வீரர்களோடு தொடர்ந்து பேசுகிறார்கள். சாளுக்கிய வீரர்கள் மூன்று பேர் மட்டுமே திருவல்லத்திற்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் தனிமையில் உட்கார்ந்திருக்கிறார்கள்.

ஆனால், கோயில் வேலை செய்கிற அரசருக்கு அருகே இருக்கின்ற எல்லோருமே தனிக்குழுவாக, அதேசமயம் சுமூக மாக இருக்கிறார்கள். பாண்டிய வீரர்கள் பலபேர் கோயில் கட்டுவதில் ஆர்வமாக இருக்கிறார்கள். பெருந்தச்சரிடம் வேலை செய்வதற்கு பாண்டிய வீரர்கள் அதிகம் முயற்சி செய்கிறார்கள்.

இரவு நேரம் தளிச்சேரி பெண்களுடைய ஆட்டத்தைப் பார்க்கவும், அவர்களோடு பேசிப்பழகவும் அவர்களில்

பலருக்கு விருப்பம் இருக்கிறது. பெண்களைக் கவர அலர்களும் வேஷம் கட்டுகிறார்கள். கூத்தாடுகிறார்கள். முதலில் அலர்கள் ஆடப் போகிறேன் என்று சொன்னதும் ஒரு சிறிய கவலை படைவீரர்களுக்கு வந்தது."

"எதைப்பற்றி ஆடப்போகிறாய். வீரபாண்டியன் செத்துப் போனதை ஒப்பாரியாகப் பாடுகிறீர்களே அதை நாட்டியமாக ஆடலாம் என்று நினைக்கிறாயா." என்று முறைப்பாக சோழவீரர்கள் கேள்வி கேட்க, பாண்டிய வீரர்கள் பணிவாக மறுத்துவிட்டார்கள்.

''அந்த வம்புதும்பெல்லாம் நாங்கள் செய்யப் போவதில்லை. வீரபாண்டியர் செத்துப்போனது எங்களுக்கு துக்கம்தான் என்றாலும், அதை இங்கே இந்த மண்ணில் ஆடுவதில் எந்தப் பயனும் இல்லை. நாங்கள் ஆடப்போலது ஹனுமன் கதை என்று சொன்னார்கள். ஸ்ரீ ராமதூதரான ஹனுமனின் பிறப்பு, வளர்ப்பு, ராமரைத் சந்தித்தது. கடல் தாண்டியது. சீதாதேவிக்கு கணையாழி கொடுத்தது. சூடாமணியை ராமரிடம் காட்டியது. ராவணனோடு யுத்தம் செய்தது. சஞ்சீவிபர்லதம் கொண்டு வந்தது. ராவணனைக் கொன்றது. சீதையின் அக்னிப்பிரவேசம். பிறகு விமானம் ஏறி அயோத்திப் பயணம். ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் என்று கதை சொல்லி முத்தாய்ப்பாக பட்டாபிஷேக விருந்து என்று நடித்துக் கொண்டிருப்பார்கள். ஹனுமனில் ஆரம்பித்து ஒரு நீண்ட பந்தி வானரங்களுக்காக ஏற்பாடு செய்து கடைசியில் குரங்குக்குட்டி ஒன்று உட்கார்ந்திருக்க.... அவர்களுக்குப் பிடித்த அரிசி சோறும் பவ காய்களெல்லாம் போட்ட மொச்சைக்குழம்பும் பரிமாறப்பட்டன.

ஒரு மொச்சையை எடுத்து அந்த குட்டிக்குரங்கு தோல் அழுத்த நன்கு வெந்த அந்த மொச்சைப்பயறு பளிச்சென்று துள்ளிக்குதித்து வெளியே வந்து விழுந்தது. குரங்குக்குட்டி மொச்சை துள்ளிக் குதிப்பது பார்த்து அதுவும் பயந்து குதித்தது. குட்டி குதிக்கிறது என்று அடுத்த குரங்கு குதிக்க.. அடுத்த குரங்கும் குதிக்க.. அடுத்த குரங்கும் குதிக்க பலநூறு வானரங்கள் ஒன்று மாற்றி ஒன்று எகிறிக் குதித்தன. கடைசியாக இருந்த ஹனுமன் வேறு யாரேனும் அரக்கர் தான் வந்துவிட்டார்கள். என்று இன்னும் உயர வெகு உயரே எம்பிக் குதித்ததை அயோத்தி மக்கள் அனைலரும் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள் என்று கூத்து முடித்தார்கள்."

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே என்று பாடினார்கள்.

சோழதேசத்து மறவர்களும், பொதுமக்களும், தளிச்சேரி பெண்டுகளும், அரச குடும்பத்தினரும் அந்தக் குரங்கு குதியலை அவர்கள் நடித்துக் காண்பித்ததைப் பார்த்து வயிறு பிடித்துக் கொண்டு புரண்டு புரண்டு சிரித்தார்கள். அந்த இடமே குலுங்கும்படி நகைத்தார்கள். வெகுநாளைக்குப்பிறகு சக்ரவர்த்தியும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

பத்தே பத்து பாண்டிய வீரர்கள் நூற்றுக்கணக்கான குரங் குகள் குதிப்பதைக் கண்முன்னே நாடகமாய் நிறுத்திக் காட்டி விட்டார்கள். சக்ரவர்த்தி எழுந்து போய் கதம்பமாலை அணிவித்து நெற்றியில் திருநீறு இட்டு, பணமுடிப்பும் கொடுத்தார். அடிமைவீரர்கள் பலபேருக்குப் பாண்டிய வீரர் களின் வேகமான தமிழ்ப் பாட்டு புரியவில்லை. ஆனாலும், இராமாயணம் புரிந்திருந்தது. ஆனால் சாளுக்கிய வீரர்கள் அதிகம் கலந்துகொள்ளாது நாடகம் பார்த்துவிட்டு நகர்ந்து விட்டார்கள்.

எப்படியிருந்தது என்று கேட்டபோது, “நாங்கள் வீர சைவர்கள். எங்களுக்கு அவ்வளவாக ரசிக்கவில்லை.” என்று கூறி விலகி விட்டார்கள். பிறகு பந்தலில் அமர்ந்து தங்கள் இடத்தில் ஒரு சிலலிங்கம் ஸ்தாபிப்பதுபற்றி பேசத்துவங்கி விட்டார்கள்.

சிவலிங்கம் என்பது இவர்கள் சொல்வதுபோலத் தான் இருக்க வேண்டுமா. லிங்கம் என்ற சொல்லுக்கு அடை யாளம் என்பது பொருள். கடவுள் நினைப்பாய் ஒரு அடை யாளம் வேண்டும். அவ்வளவுதானே. இப்பொழுது இதுதான் கடவுள் என்று ஒரு கற்பலகையை உயர நிறுத்தி, பிறகு அதை ஒரு அடி ஆழம் புதைத்து வேறு கல்லை முட்டுக்கொடுத்து அதற்கு மஞ்சள் பூசி திருநீறு இட்டு நடுவே குங்குமம் வைத்து சுற்றி அமர்ந்து சிலபஞ்சாட்சரி மந்திரம் சொன்னார்கள். வேண்டுமென்றே விலகி இருக்கிறார்கள் என்று அவர்களைப் பற்றி மறவர் கூட்டம் குறை சொல்லிற்று.

ஆனால், சோழ மக்களோ அதிகாரிகளோ அதை அதிக மாகப் பாராட்டவில்லை. வம்பு செய்யாமல் இருந்தால் சரி என்று மௌனமாக இருந்தார்கள் சிற்பிகளுக்கு அந்தக் குரங்குக் கதையும், வீரர்கள் குதித்ததும் மிகச்சந்தோஷமாக இருந்தது.

பாண்டிய வீரர்களை அருகே அழைத்து குசலம் விசாரித்து அவர்களில் யார் யாருக்கு சிற்பம் செய்ய ஆசை இருக்கிறது என்று தெரிந்து, சிலரைத் தேர்ந்தெடுத்து பெருந்தச்சரிடமும், சிலரை முதன்மைச் சிற்பிகளிடமும் அனுப்பியிருக் கிறார்கள்.

"பாறைகளைப்பற்றி தெரிந்துகொள்ளப் போக வேண்டாமா. உங்களில் சிலர் பாறைகளைத் தெரிந்து கொள்ள நிச்சயம் போகவேண்டும். அதுதான் அடிப்படை இங்கிருக்கிற கல்லைப் பார்த்துப் புண்ணியமில்லை. மலையிலுள்ள கல்லை நிறம்பார்த்து குணம் பார்த்து பிரித்து எடுத்து வர வேண்டும். மலையிலிருந்து கல்பிரிப்பது எப்படி என்று கற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லி பதினாறு பேரை சதாசிவாச் சாரியோடு நாரத்தை மலைக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆனால், முதல் நரபலி ஆனது பாண்டியனில்லை என்பது நல்ல செய்தி."

பஞ்சவன்மாதேவி அரண்மனை வாசலில் நின்று கோட்டைக்கதவு பக்கம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். அதிகாரிச்சி முத்தான பொன் நங்கையிடம் உடனே சிறுதேர் ஏற்பாடு செய்யும்படி சொன்னார்.

தேர் வந்து நின்றதும் ஏறி குதிரைகளின் லகானை பிடித்துக் கொண்டாள். இரண்டு புரவிகள் பூட்டிய சிறுதேர் அது. முத்தான பொன்நங்கை அந்த சிறுதேரின் பின்பக்கம் கொடிமரம் பிடித்தபடி ஏறிக்கொள்ள, 'தேர் நிதானமாய் கோட்டை வாசலுக்குப் போயிற்று. கோட்டைக் கதவு திறந்ததும் வெளியே நின்றது.

சக்ரவர்த்தியின் மெய்க்காவல் படையைச் சேர்ந்த இரண்டு பேர் முன்னே போக பின்னே ஒருவர் வர அரண் மனையிலிருந்து விரைவாக கோவில் கட்டும் புல்மேடு நோக்கி வேகமாய்ப் போயிற்று.

அங்கு அமர்ந்திருந்த இரண்டு கிழவர்கள் இறங்கி கைகூப்பினார்கள். பெண்கள் பல் தெரிய சிரித்தார்கள்.

ஆதுரச்சாலையிலிருந்து தாதிப் பெண்கள் ஓடிவர.... பிறகு வருகிறேன் என்றுசொல்லி பஞ்சவன்மாதேவி தேரை விரைவாகச் செலுத்தினார்கள் உள்ளே அரசர் இருப்பதற் குண்டான அடையாளங்கள் தெரிந்தன

புலிக்கொடியும் அருகே சிகப்பு நிறக்குடையும் அதற் கருகே உயர்ந்த எக்காளமும் தொலைவிலிருந்தே தெரிந்தன.

மெய்க்காவல்படை கருப்பு உடை அணிந்து வட்டமாக நிற்பது தெரிந்தது.

கோவில் வேலிக்கருகே சிறுதேரை நிறுத்திவிட்டு பஞ்சவன்மாதேவி கீழிறங்கினாள்.

குதிரை தரட்டுமா என்று ஒரு வீரன் கேட்க, மறுத்து விட்டு வேகமாக நடந்தாள். சக்ரவர்த்தி அருகே மௌனமாக நின்றாள்.

மாதிரி ஓவியங்களைக் கையில் வைத்துக்கொண்டு அங்கங்கே கோல் அளவு அளந்துகொண்டு சக்ரவர்த்தி பெருந்தச்சரோடும், மற்ற சிற்பிகளோடும் பேசிக்கொண் டிருக்க.... பஞ்சவன்மாதேவி வந்து நிற்பது அவருக்குக் காதோரம் சொல்லப்பட்டது. சக்ரவர்த்தி நிமிர்ந்து பார்த்தார். சிரித்தார். என்ன வேண்டும் என்று வினாலாய் புருவம் உயர்த்தினார்.

பிறகு சொல்கிறேன் என்று பஞ்சவன்மாதேவி சொல்ல, அது ஏதோ முக்கியமான விஷயம் என்பதைப் புரிந்து கொண்டு, அவர் கையிலிருந்த மாதிரி ஓவியத்தை சிற்பிகளிடம் கொடுத்துவிட்டு மெல்ல இரண்டு கைகளையும் நீட்ட, அந்தக் கைகள் கழுவிக்கொள்ள தண்ணீர் ஊற்றி னார்கள்.

கோல் பிடித்ததால், திரைச்சீலை பிடித்ததால் உண்டான தடயங்கள் கையிலிருந்து நீங்கின.

கைகழுவி முடித்ததும் ஒரு தேவரடியார் நறுமண சந்தனத்தை அரசரது உள்ளங்கையில் வைக்க அவர் அதை வேகமாகத் தேய்த்து நெஞ்சில் தேய்த்தும் கொண்டு இரண்டு கைகையும் குவித்து முகர்ந்தும் பார்த்தார். மீதி உள்ளதைப் பிடரியில் தடவிக் கொண்டார். மெல்ல பஞ்சவன்மாதேவியை நோக்கி வந்தார்.

"என்ன விஷயம்"

அடிக்குரலில் கேட்டார்

"நாரத்தை மலையிலிருந்து செய்தி வந்திருக்கிறது."

"சொல். என்ன செய்தி."

“ஒரு கல் பிடுங்கப்பட்டது. பிடுங்கப்பட்ட கல் உருண்டு கீழே வந்தது.”

“யாருக்கேனும் காயமா.”

பஞ்சவன்மாதேவி மௌனமாக இருந்தாள்.

என்ன இப்படி கேட்கிறீர்கள் என்பது போல் புருவம் உயர்த்தினாள்.

“ஒரு கல் புரண்டு விழுந்தது முக்கியமான செய்தி என்றால், அது யாரையோ தாக்கியிருக்க வேண்டும் என்று தானே அர்த்தம். அதனால்தானே கல் புரண்டது செய்தியாகி விட்டது.” என்று சொன்னார்.

கூர்மையான புத்தி உள்ளவராலேயே இப்படி பேசமுடியும்.

பஞ்சவன்மாதேவி மௌனமாக இருந்து மறுபடியும் பேச எத்தனித்தபோது, “ஓ.. இறப்பே நிகழ்ந்து விட்டதா” என்று சக்ரவர்த்தி சட்டென்று பேசினார்.

“எப்படி பேசுகிறீர்கள் என்று அவள் கேட்க, “தயங்கினாய். காயம்பட்டது என்றால் ஆமாம் என்று தலை யசைத்திருப்பாய். நீ காயம்பட்டது பற்றிச் சொல்லவில்லை என்றபோது கல்புரண்டு யாரையோ பலிவாங்கி விட்டது என்பது தெரிந்துவிட்டது. அப்படித் தானே.” என்று சொல்ல “ஆமாம்..” என்று சொன்னாள்.

“ஒருவரா அல்லது பலபேரா.”

“இல்லை. வேறு எவருக்கும் காயமில்லை. ஒருவர் மட்டும் கல்லுக்கடியில் சிக்கி இறந்து போனார்.”

“சரி. இப்படித்தான் சிலசமயம் நடக்கும். மலை பலி கேட்கும். ஆட்டுக்கடாக்களைப் பலிகொடுக்கவில்லையா.”

“எல்லாம் முடிந்து பூஜை முடிந்து இந்த வேலையை ஆரம்பிக்கும்போது இது நிகழ்ந்துவிட்டது என்று தூதுவன் சொன்னான்.

“நாரத்தைமலையில் கல் உடைக்கப் போனது யார்.”

“சதாசிவாச்சாரி”

“நல்ல மனிதர் பாவம். பதறியிருப்பார் எதற்கும் கவலைப்பட வேண்டாம் என்று சொல். நிசும்பசூதனி

கோயிலிலிருந்து பிரசாதம் எடுத்துக் கொண்டுபோய் அவருக்குக் கொடு.

மலர்மாலையை அங்குள்ள சிற்பிகளுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய். உடனே நிசும்பசூதனி பிரசாதங்களோடு ஒரு வீரன் நாரத்தை மலை நோக்கி நகரட்டும். அந்த இறந்துபோன மனிதன் யார்."

"இராஷ்டிரகூடத்தைச் சேர்ந்த இளைஞன் என்று சொன்னார்கள்."

"அப்படியா. அவன் மனக்கேதம் தீரும் பொருட்டு அவன் இறந்த இடத்துக் கல்லின்மீது தினமும் மாலை நெய் விளக்கை ஏற்றச்சொல். மற்ற அடிமை வீரர்களுடைய மனோநிலை எப்படியிருக்கிறது."

"இறந்தவனைக் கடிந்து கொள்கிறார்கள். எல்லோரும் விலகி ஓட இவன் மட்டுமே பிரமை பிடித்தது போல நின்று கொண்டிருந்தான் என்று சொன்னார்கள்."

"நடக்கும். சில சமயம் பெரிய வேலைகள் செய்யும் போது இப்படி சிலவை நடக்கும். கவலை வேண்டாம். ஒரு நடை நான் நாரத்தை மலைக்குப் போய்வருவேன் எப்பொழுது என்பதை பிற்பாடு சொல்வேன். எனக்குச் சற்று நினைவூட்டு இன்றைக்கு நிசும்பசூதனி பிரசாதம் போவதற்கு மட்டும் ஏற்பாடு செய். திரிசிரபுரத்திற்கு அருகே உறையூர் கொற்றவை குடியிருக்கிறாள். அவளுடைய பிரசாதமும் போகட்டும். உற்சாகமாக வேலையைத் துவங்கச் சொல்லுங்கள். அந்தப்பாறை மட்டும் அங்கேயே இருக்கட்டும். எடுக்க வேண்டாம். இப்பொழுது என்னிடம் சொன்ன தகவலைப் பெருந்தச்சரிடமும் சொல்லவேண்டும். நீ சொல்ல வேண்டாம். உனக்கு யார் தகவல் கொண்டு வந்தார்களோ அவர்களைப் பெருந்தச்சர் நோக்கிப் போகச் சொல். உனக்கு எப்படி தகவல் வந்தது சதாசிவாச்சாரி சொன்னாரா."

"இல்லை, சதாசிவம் நமக்கு முதல் தகவல் சொல்ல மாட்டார். சோழதேசத்து மறவர்படை ஆட்கள் அங்கேயிருக் கிறார்களல்லவா அவர்களின் தலைவன் உடனே ஒரு ஆளிடம் இந்த விஷயங்கள் சொல்லி ஒரு ஓலை நறுக்கும் அனுப்பியிருக்கிறான்."

"யார் ஏற்பாடு அது."

"எந்த ஏற்பாடு."

"அங்கே சோழப்படையில் உடனே தகவல் சொல்கின்ற நியதி வைத்தது யார் ஏற்பாடு."

சக்ரவர்த்தி கரகரத்த குரலில் கேட்டார்.

"பிரம்மராயர் ஏற்பாடாக இருக்கலாம்."

மிருதுவான குரலில் பஞ்சவன்மாதேவி பதில் சொன்னார்.

"உன்னுடைய ஏற்பாடாகவும் இருக்கலாமோ."

பஞ்சவன்மாதேவியைப் பார்த்து சக்ரவர்த்தி கேட்டார்."

"எனக்கும், உங்களுக்கும் அவர்கள் கட்டுப்பட்டவர்கள் தான்."

பஞ்சவன்மாதேவி பதில் சொன்னார்.

"உவகத்தில் வேறென்ன விசேஷங்கள்."

சக்ரவர்த்தி சட்டென்று குரல் மாற்றி முகம் மாற்றி பேசினார்..

"அது உன்வேலைதான் எனக்குத் தெரியுமடி கள்ளி. நீ அங்கங்கே ஆள் வைத்திருக்கிறாய்" என்று அவர் குரல் சொல்லாமல் சொல்லியது.

"குடந்தை அந்தணர்கள் உங்களைச் சந்திக்க வேண்டு மென்று ஓலை அனுப்பியிருக்கிறார்கள்."

"எது குறித்து இந்தச் சந்திப்பு."

"கருமார்களின் நிலைகுறித்து பேசவேண்டுமென்று குறிப்பு எழுதியிருக்கிறார்கள்."

"மறுபடி மறுபடி ஏன் பேசி இனதப் பிரச்சினையாக்கு கிறார்கள்."

"முப்புரிநூல் அணிந்து கொள்ளும் உரிமை கருமார் களுக்குக் கொடுத்துவிடுவீர்களோ என்று பயப்படுகிறார்கள்.

"சந்திக்க இஷ்டமில்லை என்று சொல்லிவிடு. இதைப் பற்றிப் பேசவேண்டிய அவசியமில்லை என்று எச்சரித்து வை."

"இல்லை. அப்படிச் சொல்லமுடியாது. அவர்கள் ஈசான சிவபண்டிதரைப் போய் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள்.

பஞ்சவன்மாதேவி அடிக்குரலில் ரகசியம் போலும் சொன்னாள்.

சக்ரவர்த்தி திகைத்தார்.

பஞ்சவன்மாதேவியை உற்றுப் பார்த்தார்.

"மறுபடியும் சொல்."

"நமது ஆஸ்தான குருவான ஈசான சிவபண்டிதரை அவர்கள் சந்தித்துப்பேசி திரும்பியிருக்கிறார்கள். ஈசான பண்டிதர்தான் இதை அரசரிடம் நேராய் போய் முறையிடுங்கள். நேராகச் சொல்லியிருந்தால் புரிந்திருக்குமே என்று அரசன் பிற்பாடு சொல்லாதிருக்கட்டும் என்று சொன்னாராம்."

"அதாவது எனக்கு இந்த விஷயம் இன்னும் புரிய வில்லை என்று ஈசான சிவபண்டிதரும் சொல்கிறாரா."

சக்ரவர்த்தி உரத்துக்கேட்க பஞ்சவன்மாதேவி மௌன மாக இருந்தாள். சக்ரவர்த்தியின் முகத்தில் கவலை தெரிந்தது.

"நமது குருவை. ஈசான சிவபண்டிதரை எங்குபோய் பார்த்தார்கள்."

"அந்த அந்தணர்கள் தஞ்சையிலிருந்து கிளம்பி ஏழாயிரம் பிரம்மதேசம் கிராமங்களுக்குப் போய் அங்கு மூன்று நாட்கள் தங்கி பேசிவிட்டுத் திரும்பியிருக்கிறார்கள்."

"வரட்டும். நான் வேறுவிதமாக அந்தணர்களை விசாரிக்கிறேன். வேறென்ன செய்தி."

"எல்லா சிற்றரசர்களும் சக்ரவர்ததி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் ஆரம்பித்திருக்கும் இந்தப் பெரும் வேலைக்குச் சன்மானம் அனுப்பிக் கொண்டேயிருக் கிறார்கள். புலி இலச்சினை பொருந்திய சோழர்காசுகளும், மேலைச்சாளுக்கிய கங்கதேச காசுக்களும் பெட்டி பெட்டியாய் வந்திருக்கின்றன. குதிரைகளும், எருதுகளும், வண்டிகளும், ஆட்களும் வரத்துவங்கி விட்டார்கள்."

"உலகத்தில் வேறு என்ன விசேஷம்"

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ ராஜராஜத்தேவர் மூன்றாம் முறையாக பஞ்சவன்மாதேவியிடம் கண் சிமிட்டி சிரித்து

விசாரிக்க, அவர் உற்சாகமாகிவிட்டார் என்று பஞ்சவன் மாதேவி தெரிந்து கொண்டார்.

"தஞ்சையின் உள்ளாலையைச் சேர்ந்த மூன்று இளம் மறவர் பிள்ளைகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்."

"ஏன்"

சக்ரவர்த்தி திகைத்தார்.

"தற்கொலை முயற்சி செய்தார்களாம்."

"என்ன மறவர் பிள்ளைகளா தற்கொலை முயற்சியா. என்ன இது."

சக்ரவர்த்தியின் குரலில் சீற்றம் மெல்ல எழுந்தது.

"உங்களுடைய கோவில் வேலை பழுதுபடாமல் தொடர்ந்து நடக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் நவகண்டம் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்தார்களாம். அதில் ஒரு இளம்பிள்ளை தகப்பனின் நீண்டவாளை திருடிக் கொண்டு போகும் போது, அவன் தமக்கை பார்த்துவிட்டு தந்தையிடம் சொல்ல, தந்தை பின்தொடர கழுத்தில் அரளி மாலை போட்டுக்கொண்டு தன் குடுமியை மூங்கில் நுனியில் கட்டிக் கொண்டு மண்டியிட்டு தூக்க முடியாமல் கத்தியைத் தூக்கியிருக்கிறான். தந்தை பாய்ந்து ஓடிப்போய் தடுத்திருக் கிறார். அவரது இடதுகையில் காயம் ஏற்பட்டு விட்டது. அவனுடைய தோழர்கள் இரண்டு பேர் ஓடி விட்டார்கள். ஆனால் இந்த விஷயம் பெரியவருக்குச் சொல்லப்பட்டு, அவர் மூலம் ஈராயிரம் பல்லவரையர் பெருந்தரத்து அதிகாரி யிடம் சொல்லப்பட்டு அவர் உத்தரவின் பேரில் படை வீரர்கள் நாலாபக்கமும் கிளம்பி அந்த இரண்டு சிறுவர் களையும் கைப்பிடியாகக் கொண்டு வந்து விசாரித்திருக் கிறார்கள். அந்த இளைஞர்கள் உங்களைச் சந்தித்ததாகவும், நீங்கள் நடுகல்லை கழுவிக் குளிப்பாட்டி மாலையிட்டதற்குப் பாராட்டியதாகவும், எனவே உங்களுடைய வேலை நன்கு நடைபெற வேண்டுமென்று கழுத்தில் அரளிமாலையிட்டு, தன் கழுத்தை தானே துண்டித்துக்கொள்ள முயற்சித்ததாக வும்.. பஞ்சவன்மாதேவி நா தழுதழுக்கச் சொல்ல, அரசர் மேற்கொண்டு சொல்லவேண்டாம் என்று கையசைத்தார்

அந்த இளைஞர்கள் முகம் அவரின் நினைவுக்கு வந்தது.

"அடித்துவிட்டார்களா."

உடனே அவசரமாய் ஆதுரமான குரலில் வினவினார்.

பஞ்சவன்மாதேவிக்குச் சக்ரவர்த்தியின் அக்கறை பிடித்திருந்தது.

"அடிக்கவில்லையாம். அடிக்கக்கூடாது என்று நான் உத்தரவிட்டிருக்கிறேன். ஆனால், ஈராயிரம் பல்லவரையர் பயமுறுத்தியிருக்கிறார்."

"எப்படி"

"நீயாக எதற்கடா நவகண்டம் கொடுக்கிறாய். நானே உன்னைப் பலி போட்டு விடுகிறேன் என்று சொல்லி வாள் உருவி அவனைக் குனிய வைத்திருக்கிறார். இளைஞன் திமிறியிருக்கிறான். பயப்படுகிறானோ என்று எல்லோரும் நினைக்க, அவன் கைகூப்பி சக்ரவர்த்திக்காக இறக்கிற உரிமையை எனக்குக் கொடுங்கள் என்று அவன் வேண்டியிருக்கிறான். ஈராயிரம் பல்லவரையர் அவன் வேண்டுகோளுக்கு அடங்கிப் போயிருக்கிறார். மெல்ல அணைத்துக்கொண்டு தேவையில்லை எல்லாமும் நல்லபடியாக முடியும் கவலைப் படாதே என்று ஆறுதல் சொல்லியிருக்கிறார். அதற்குள் அவன் தந்தையும், தாயும், இன்னபிற உறவுகளும் வந்து அவறி அழுது அவனை அடித்திருக்கிறார்கள். அவர்களிடமிருந்து அவனை விடுவித்து கோட்டை வாசலில் அவனை அமர வைத்திருக்கிறார்கள். புறம்படிக்கு அருகேயுள்ள கோட்டை வாசலில் அந்த இளைஞர்கள் இருக்கிறார்கள். குடிக்க மோரும், கேழ்வரகுக் கூழும் கொடுக்கப்பட்டன."

சற்று நேரம் அமைதியாக இருந்த சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் மெல்ல தலை நிமிர்ந்தார்.

"சரி. உலகத்தில் வேறு என்ன செய்திகள்." என்று மறுபடியும் பஞ்சவன்மாதேவியை நோக்கி வினவினார்.

இந்த முறை அவர் குரல் மிருதுவாக இருந்தது.

"நாயன்மார்கள் கதை சொல்வதற்கு மறுபடியும் அரசர் அந்தப்புரம் வருவாரா. ஓய்வெடுத்துக்கொள்ள இரவுநேரம் அந்தப்புரம் வந்தால் நன்றாக இருக்காதா என்று உங்கள் பட்டமகிஷியும் மற்றவர்களும் கேள்வி கேட்கிறார்கள். நான் பேசிப்பார்க்கிறேன் என்று பதில் சொன்னேன். அந்தப் பாண்டிய வீரர்களின் நாடகத்தை அரண்மனை வளாகத்தில்

நடத்தலாமா என்றும் கேள்வி கேட்டார்கள். நான் அதற்கும் கேட்டு பதில் சொல்லதாய் தெரிவித்திருக்கிறேன்."

"அந்தப் பாண்டிய வீரர்களை மெய்க்காவல் படையினரிடம் ஒப்படைத்து அரண்மனை லளாகத்திற்கு அழைத்துப் போ. கோட்டையின் பெருந்திடலில் கோட்டைக்காவலர்களும், அதிகாரிச்சிகளும், பணிப்பெண்களும், நம் பெண்டுகளும் பார்க்க அந்த நாடகத்தை மறுபடியும் நடத்தச் சொல். நேற்றும், நேற்று முன் தினமும் சிற்பிகளோடும், அடிமை வீரர்களோடும் இருந்தேன். இன்று நான் தளிச்சேரி பெண்டுகள் வீட்டில் இருப்பேன். நாளை மறுநாள் ஏதேனும் ஒரு நாயன்மார் கதையை வந்து சொல்லேன் என்று சொல்."

சட்டென்று மெல்லியதாய் ஒரு முகவாட்டம் பஞ்சவன்மாதேவியிடம் தோன்றியது.

"உங்களுக்குத் துணையாக யாரையேனும் அனுப்ப வேண்டுமா."

லேகமாய் பஞ்சவன்மாதேவி கேட்க, வேண்டாம் என்று சொல்ல ஆரம்பித்தவர் சட்டென்று நின்றார்.

"எனக்கு துணையாகத்தான் நீ வரப்போகிறாயே. நீ ஒருத்தி போதாதா." என்று சக்ரவர்த்தி பதில் சொல்ல, பஞ்சவன்மாதேவி முகம் லேசாய் மலர்ந்தது.

"நான் லருலேன். ஆனால் பாண்டிய வீரர்களுடைய நாடகத்தைப் பார்க்க லேண்டுமென்று எனக்கும் ஆசையாக இருக்கிறது. ஒரே லயிறு குலுங்கும் சிரிப்பாமே. நான் அதைப் பார்க்கட்டுமா." என்று கேட்டாள்.

"ஏன். என்னோடு இருக்க விரும்பமில்லையா."

"ஆமாம்."

பஞ்சலன்மாதேவி பதில் சொன்னாள்.

"எதனால்."

சக்ரவர்த்தி கூர்மையாகக் கேட்டார்.

"உங்களோடு இருந்தால் ஒருலேளை நீங்கள் நன்றாக தளிச்சேரி பெண்டுகளோடு சல்லாபிப்பது கெடும், இரண்டாவதாக நீங்களும் நானும் மட்டும் அவர்கள் இல்லத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம் என்றால், பட்டமகிஷிக்

கும், மற்ற அரசிகளுக்கும் மெல்லியதாய் ஒரு கோபமும், வேதனையும், பொறாமையும் ஏற்படும். அவர்களுக்கு நாடகத்தில் மனம் செல்லாது. எனவே, நான் அவர்களோடு அமர்ந்து நாடகம் பார்க்கிறேன். நீங்கள் எந்தத் தொந்தரவும் இல்லாமல் தளிச்சேரி பெண்டுகளோடு பேசிவிட்டு வாருங்கள்." என்று சொன்னாள். தொந்தரவு என்பதை வேண்டுமென்றே அழுத்திப் பேசினாள்.

அரசர் வாய்விட்டுச் சிரித்தார்.

''பஞ்சவன்மாதேவியே உன்னைப் போல ஒரு அற்புதமான பெண்ணை நான் சந்தித்ததேயில்லை. எல்லா விஷயத்தையும் மற்றவர் பார்வையிலிருந்து சிந்திக்க வெகுசில பெண்களுக்கே தெரியும். உனக்கு வெகு அதிகம் தெரிகிறது. உண்மையில் நீ பட்ட மகிஷியாக இருக்க வேண்டியவள். ஏனோ... என்று சொல்ல பஞ்சவாமன்தேவி எகிறி அவர் வாய் பொத்தினாள்.

"யார் யார் எங்கு இருக்க வேண்டுமோ அங்கு இருப்பது தான் சிறப்பு. நான் பட்டமகிஷியாக இருந்தால் சட்டென்று தேரேறி இப்படி வரமுடியாது. எக்காளம் முழங்க, முரசு அதிர, யானை மீது உட்கார்ந்து திரை போர்த்திக் கொண்டு வரவேண்டும். எனக்கு அந்த வேகம் போதாது. இப்படி குதிரையில் ஏறி மின்னவாய் பறப்பதுதான் என் வாழ்க்கை. நாலா பக்கமும் அரசர் வேலைக்காக அலைவதுதான் என் தொழில்." என்று சொல்லி நிறுத்தினாள்.

"உலகத்தில் வேறு என்ன செய்திகள்."

சக்ரவர்த்தி குறிப்பாக இந்தமுறை அவளுக்கருகே போய் நின்று, அவள் தலையைத்தடவி நெற்றியில் முத்தமிட்டு தோளை அணைத்துக்கொண்டு கேள்வி கேட்டார்.

"வயதாகிவிட்டது என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். காலாகாலத்தில் ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும். என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். வெய்யில் அதிகமில்லை யென்றாலும் இந்த வெட்ட வெளியில் இந்த ஊதற்காற்றில் நீங்கள் நின்று கோயில் பணி செய்வது எனக்குக் கவலையாக இருக்கிறது. காலைநேரம் எல்லோரையும் ஒன்று கூடச்செய்து பேசி வேலைகளைச் செய்யும்படி அனுப்பினால் போதாதா. நீங்கள் நின்று பார்வையிடத்தான் வேண்டுமா என்ற எண்ணம் வருகிறது. சொன்னால் நீங்கள் காது கொடுத்துக்

கேட்க மாட்டீர்கள். ஏதோ சொல்ல வேண்டியது என் கடமை. உங்கள் உடல்நலம் சோழ தேசத்தின் நலம் என்ப தால் உரக்கச் சொல்லுகிறேன். அதிகம் வெளியே அலையா தீர்கள். அதிகம் கண் விழிக்காதீர்கள். இதுதான் என் கோரிக்கை. இதுதான் என்னுடைய செய்தி."

பணிவான குரலில் பஞ்சவன்மாதேவி அவரிடம் பேசினாள்.

"பணியின் ஆரம்ப நாட்களில் நான் அருகே இருப்பது நல்லது என்று நினைக்கிறேன். அவர்களுக்கு உற்சாகம் தரும் என்று நினைக்கிறேன். மேலும் இராஜராஜப் பெருந்தச்சரே நேரடியாக ஈடுபடுவதால் அவரை மட்டும் விட்டுவிட்டு நான் விலகியிருப்பது நல்லதல்ல. என்னுடைய இருப்பு அங்கே இராஜராஜப் பெருந்தச்சருக்கு உதவியாக இருக்கும். ஒருவேளை நானே செய்கிறேன் என்று கர்வம் அவருக்கு வராமல் தடுக்கவும் கூடும்."

"பெருந்தச்சருக்கு அப்படியொரு கர்வம் இருக்கிறதா."

வியப்போடு பஞ்சவன்மாதேவி கேட்டாள்.

"வரத்தான் செய்யும். சிலசமயம் என்னைவிட அவரே பெரியவர் என்ற எண்ணமும் எழக்கூடும். அதை நோகாமல் கிள்ளியெறிய வேண்டியது நம்முடைய வேலை."

"அப்படியா, வியப்பாக இருக்கிறதே பெருந்தச்சர் அடக்கமானவராயிற்றே."

"இல்லை. வேலை மிகப்பெரியது. பாதி செய்யும் போது கொம்புகள் மண்டையிலிருந்து கிளைவிடும். நானல்லவா செய்தேன் என்ற அகங்காரம் முளைத்தெழும். எனவே என் இருப்பு அங்கே மிக முக்கியம். பெருந்தச்சரின் முகத்தில் தோன்றும் கர்வத்தைப் பார்க்கும்போது எனக்கும் அது வசதியாக இருக்கிறது."

"என்ன வசதி."

"இதேவிதமான கர்வம் எனக்கும் வரக்கூடும். அந்தக் கர்வத்தை நான் படக்கூடாது என்ற பய உணர்வு எனக்கும் வரும். இந்தக் கோயில் எழுப்புவது நானோ, என்னுடன் இருக்கின்ற க்ஷத்திரியர்களோ, கல்தச்சர்களோ, அடிமை வீரர்களோ, பொற்கழஞ்சுகள் கொடுக்கின்ற குறுநில மன்னர்களோ, வைசியர்களோ, தளிச்சேரிப் பெண்டுகளோ,

கருமார்களோ, தச்சர்களோ, பொதுமக்களோ இல்லை சிவனே விரும்பி இப்படி தனக்கு ஒரு ஆலயத்தை எழுப்பிக் கொண்டான் என்றுதான் இங்குள்ள அனைவருக்கும் தோன்ற வேண்டும். இன்று கருவறைக்கான அஸ்திவாரமும். முதல் மண்டபத்திற்கான அஸ்திவாரமும் தோண்டப்பட்டு விட்டன. அங்கிருந்து வாசல் எங்கேயிருக்கும் என்று நான் காலால் அளந்து பெருந்தச்சர் குறியிட்ட இடத்திலிருந்து திரும்பிப் பார்த்தேன். கோயிலின் பிரமாண்டம் என்னை ஆட வைத்துவிட்டது. என்னால் பேசவே முடியவில்லை. என் செய்கை எனக்கே வியப்பாயிருக்கிறது. எனக்கேன் இப்படி தோன்றியது. என்ன காரணம் என்று திகைத்துப்போய் உட் கார்ந்திருக்கிறேன். இதைச் செய்வது நானா, என்னுள்ளிருந்து இதைத் தூண்டியது யார்? எப்பொழுது என்று கேட்டுக் கொண்டிருக்கிறேன் இராஜேந்திரன் ஏன் கோயில் கட்டுகிறாய் என்று கேட்கிறான். அவனுக்கு என்ன பதில் சொல்வது என்று உள்ளே ஒன்று தோன்றிவிட்டது. அந்தப் பதில் அவனைச் சமாதானப்படுத்தும்."

"என்ன பதில்"

ஆவலாக பஞ்சவன்மாதேவி கேட்டாள்.

"இப்போது சொல்ல வேண்டாம் என்றிருக்கிறேன். என் தமக்கை குந்தவை, என் மகன் இராஜேந்திரன், நமது வீட்டு மருமகனார் வந்தியத்தேவர். நீ, என் பட்டமகிஷி, பிரம்ம ராயர், அவன் மகன் அருண்மொழிப்பட்டன், ஈசான சிவ பாண்டிதர், கருவூர்த்தேவர் என்று ஒரு சபை கூடுமல்லவா அப்போது நான் ஏன் கோயில் கட்டுகிறேன் என்கிற மிகத் தெளிவான ஒரு பதிலை அந்தச் சபை முன்பு நான் சொல்ல தாக இருக்கிறேன்.'

"என்னிடம் இப்போது சொன்னால் என்ன."

''இல்லை. எனக்கு இன்னும் அதில் முழுமை வரவில்லை. திரும்பத் திரும்ப பல்வேறு கோணங்களில் நான் யோசிக்க ஆரம்பித்துவிட்டேன். ஒவ்வொரு கோணத்தி லிருந்தும் ஒவ்வொரு பதில் கிடைக்கிறது. அந்தப் பதில்கள் அனைத்தையும் திரட்டி இதுதான் காரணமென்று நான் சொல்வதற்கு ஆசைப்படுகிறேன்."

"ஒரு கோயில் கட்ட பல காரணங்கள் இருக்கின்றனவா."

"ஆமாம். ஒரேயொரு காரணத்தால் மட்டும் எந்தக் காரியமும் நடைபெறுவதில்லை. ஒரு காரியத்தைச் சுற்றி பல காரணங்கள் இருக்கின்றன என்பதுதான் வாழ்வின் அடிப்படை விதி. அந்தச் செடி ஏன் தலையசைக்கிறது. காற்று வீசுவதால் என்று மட்டுமே பதில் சொல்ல முடியாது. வேர் பூமியில் ஊன்றியிருப்பதால் என்றும் சொல்லலாம். இல்லையெனில் வீசும் காற்றுக்கு அது வேறெங்கோ குப்பையாகப் போய்விடுமல்லவா. அது தலையசைக்க வேர் காரணம். அந்த வளைந்த தண்டு காரணம் என்று சொல்லலாம். அந்தத் தண்டு முழுவதும் நீரால் நிரப்பப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம்.. அந்தத் தண்டில் பச்சையம் நன்றாகப் பதிந்திருக்கிறது என்று சொல்லலாம். மண் கொடுத்த பச்சையம். உறிஞ்சப்பட்ட நீர். கொழுந்து வளர்ந்த இலை என்று பல்வேறு விஷயங்கள் அந்தச் செடியாகக் காரணம், ஆனால், ஏன் செடி ஆடுகிறது என்று கேட்டால் காற்றினால் என்று எல்லோரும் பதில் சொல்லார்கள். உண்மை பல்வேறு திக்கிலும் பரவியிருக்கிறது என்பதை உற்றுப் பார்த்தால்தான் தெரியும்."

அடிக்குரலில் சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ ராஜராஜத் தேவர் சொல்ல, பஞ்சவன்மாதேவி மெல்ல நகர்ந்து அவர் தோளைப்பற்றி அலர் புஜத்தில் தன் இதழைப் பதிய வைத்தாள்.

அந்தப் பாராட்டு சக்ரவர்த்திக்கு பிடித்திருக்கிறது.

பெருந்தச்சர் வேகமாய் வருவதாய் அவருக்கு செய்தி கிடைத்தது.

பஞ்சவன்மாதேவி குனிந்து சக்ரவர்த்தியை வணங்கினாள்.

"பெருந்தச்சர் அந்தக் கல் புரண்ட சம்பவத்தைச் சொல்வதற்குத்தான் வருகிறார். நான் விடை பெற்றுக் கொள்கிறேன்."

அவள் நகர்ந்து விலகிப்போக சிறுதேர் அவளுக்கருகே வந்தது. அவள் தேரில் ஏறிக்கொண்டு திரும்பவும் சக்ரவர்த்தியைப் பார்த்தாள். சிரித்தாள்.

சக்ரவர்த்தி கையை அசைக்க அவளும் கையசைத்து குதிரையின் கடிவாளங்களைச் சொடுக்கினாள். குதிரை விரைந்து கோவில் கட்டும் புல்வெளிக்கருகே போய் நின்றது.

அங்குள்ள ஒரு அதிகாரியிடம் மன்னர் சொன்ன விஷயங்களை விரைலாக பஞ்சவன்மாதேவி கைகள் ஆட்டிச் சொல்வது தெரிந்தது. அந்த உபசேனாதிபதியின் அருகே யிருந்த வீரர்கள் ஒவ்வொருவராக ஒவ்லொரு திசைநோக்கி பயணப்படுவதை சக்ரவர்த்தி பார்த்துக் கொண்டிருந்தார். அவளுடைய சொற்கள் நாலாபக்கமும் எடுத்துப் போகப் படுவதை தெரிந்து கொண்டார். அருகேயுள்ள மெய்க்காவல் வீரனை அழைத்து பெருந்தன் அதிகாரி ஈராயிரம் பல்லலரை யரிடம் சிறைப்பட்டிருக்கும் மூன்று இளைஞர்களையும் அன்று மாலை தளிச்சேரி பெண்டுகள் குடியிருப்புக்கு அனுப்புமாறும் உத்தரவிட்டார். குறுநில மன்னர்களோ, சேனாதிபதிகளோ, கிராம அதிகாரிகளோ எவர் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டாலும் மாலை வேளையில் தளிச்சேரி பெண்டுகள் குடியிருப்பில் நடு மண்டபத்தில் பார்க்கலாமென்றும் சொல்லச் சொன்னார்.

பழுவேட்டரையர் அருகே வர, தனது அரண்மனைக்கு பாண்டிய வீரர்கள் பத்துப்பேரை ஹனுமன் கதை சொல்ல அனுப்பலாம் என்றிருக்கிறேன். எனவே, நமது அரண்மனைக் கோட்டைக்காவலைச் சற்று பலப்படுத்த வேண்டும். நாடகம் போடுகின்ற வீரர்களல்லாது வேறு எவரும் போக வேண்டிய அவசியமில்லை.

அவர்கள் உள்ளே போனதும் கோட்டைக் கதவுகள் சார்த்தப் படட்டும். காவலை அதிகப்படுத்துங்கள். பாண்டிய வீரர்களுக்கு அரண்மனைக்குப் போகிறோம் என்ற தகவலைச் சொல்லாது இதைச் செய்யுங்கள் என்று உத்தரவிட்டார்.

நாயன்மார் கதைகள் கேட்கவேண்டும் என்று மனைவியர்கள் ஆசைப்படுகிறார்கள். நாளை மறுநாள் அங்கு போனால் என்ன கதை சொல்லலாம். யோசிக்கத் துவங்கினார்.

தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம் என்று சத்தியம் செய்த அந்தக் கதையைச் சொல்லலாமா. சொல்ல லாம். அரண்மனையில் அந்தப்புரத்தில் மனைவிகளுக்குச் சொல்வதற்கு முன்பு இன்று இரவேகூட தளிச்சேரி பெண்டு களிடம் இந்தக் கதையைச் சொல்லலாம். இது என்ன சொல்கிறது என்று அவர்களிடமே கேள்வி கேட்கலாம்.

ஒரு தாசியின் வீட்டிற்கு போனதால்தானே தீண்டுவீரா யின் எம்மைத் திருநீலகண்டம் என்று அந்த அம்மாள்

கூறினாள். அவர்கள் இதற்கு எப்படி எதிரொலிக்கிறார்கள் என்று பார்க்கலாம்.

அரசர் தனக்குள்ளாகவே சிரித்துக்கொண்டார்.

அந்த ஓலைகூடாரத்திற்குள் அவருக்கு சிறப்பான உணவு வந்தது. இராஜேந்திரசோழர் திருவலஞ்சுழியில் இருக்கிறார். திருவலஞ்சுழி தாண்டித்தான் நாரத்தை மலை போக வேண்டும். ஒருவேளை இந்தச்செய்தி கேள்விப்பட்டு இராஜேந்திரர் நாரத்தை மலைக்குப் போயிருப்பானோ. உணவு உண்டபிறகு இராஜேந்திரரைப் பற்றி விசாரிக்க வேண்டுமென நினைத்துக் கொண்டார். ஆனால், உண்டபிறகு அவருக்குத் தூக்கம் வந்தது. ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் வயதாகிவிட்டது என்று பஞ்சவன்மாதேவி சொன்னது நினைவில் வந்தது.

அவர் கண்கள் படுப்பதற்குண்டான கட்டிலைத் தேடின. ஆட்கள் பரபரத்தார்கள். மரப்பலகைக்களைக் கொண்டு வந்து கற்களுக்கு நடுவே போட்டு அதன்மீது பஞ்சணை விரித்து அசையாது இருக்கிறதா என்று செய்தபிறகு தலை யணை போட்டார்கள். நீண்ட விசிறிகளோடு இரண்டு வீரர்கள் வந்தார்கள். மெய்க்காவல் படை சுற்றிமுற்றிப் பார்த்தபிறகு விசிறி வீசுபவர்களை அருகே அனுப்ப அரசர் மெல்ல எழுந்து கட்டிலில் அமர்ந்து கொண்டார். தாம்பூலம் தரித்தார் சாய்ந்துகொண்டு கண்ணுக்குத் தெரிந்த புல்வெளியை அஸ்திவாரம் தோண்டப்படும் இடத்தைப் பார்த்துக் கொண்டேயிருந்தார்.

கண்கள் சுழன்றன. மெல்ல சரிந்தார்.

அவர் மீது வெள்ளை நிற பட்டு ஒன்றைப் போர்த் தினார்கள். விசிறியால் மெல்ல விசிறினார்கள். இரண்டு நாள் முன்பு மழை பெய்து குளிர்ந்திருந்த படியால் காற்றும் குளிராக இருந்தது. வெய்யில் மிதமாக இருந்தது.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் உறங்கத் துவங்கினார். மெய்க்காவலர்கள் பரபரத்து குதிரைகளை அப்புறப்படுத்தினார்கள் கனைப்புச் சத்தம் கேட்க வேண்டாம் என்பதால் விலகச் சொன்னார்கள். தொலைவே வேலை செய்யும் தொழிலாளர்களை சற்று அமைதியாக இருங்கள் என்று சைகை செய்தார்கள்.

அங்கே அமைதியாய், துரிதமாய் வேலை நடக்கத் துவங்கியது.

நிசும்பசூதனியின் பிரசாதங்கள் நார்த்தாமலை நோக்கிப் போய்விட்டனவா என்று இன்னொரு முறை விசாரித்து பஞ்சவன்மாதேவி உறுதிப்படுத்திக் கொண்டாள்.

யார் அனுப்பினார்கள். எவர்மூலம் போயிருக்கிறது என்பதையும் கேட்டு மனதில் நிறுத்திக் கொண்டாள்.

“இன்று இரவுக்குள் போய்விடுவார்களல்லவா. குதிரை சரியாக இருக்கிறதா.” என்றும் விசாரித்தாள்.

“குதிரை கிளம்பி ஒரு நாழிகை ஆகிவிட்டதம்மா. திருலல்லத்தில் குதிரை மாற்றிக் கொள்கிறார். நிற்காது பயணப்பட்டால் நடுநிசியில் போய் சேர்ந்துவிடுவார். முன்னரே விளக்கேற்றும்படி சொல்லியிருக்கலாம். சதா சிவாச்சாரியும் அங்கு விளக்கேற்றியிருப்பார். எல்லோருக்கும் தெரிந்த வழக்கம்தானே.” என்று அலனுக்குச் சமாதானம் சொன்னார்கள்.

அரண்மனைக்குத் திரும்பி பட்டமகிஷிகளுக்கு அரசருக் குச் சொன்ன விஷயங்களைத் தெரிவித்து, தன்னுடைய இருப்பிடம் போய் பழமார்நேரியில் கரையேறிய நக்கன் ராஜராஜியை வரச்சொல்லி ஆள் அனுப்பினாள்.

ஒரு முறை குளித்தால் தேவலாம் போலிருந்தது. ஊதற்காற்று அடித்ததால் வெந்நீரில் குளிக்கலாமா அல்லது தண்ணீரில் குளிக்கலாமா என்று யோசித்தாள். அதிகாரிச்சி முத்தான பொன் நங்கையோடு கலந்து ஆலோசித்தாள்.

“மேல்மாடத்து முற்றத்தில் பெரிய கங்காளங்களில் நீர் இறைத்து வைத்திருக்கிறேன். காலையிலிருந்து சூரியக் கதிர் பட்டு தண்ணீர் வெதுவெதுப்பாக இருக்கிறது. குடந்தை வைத்தியர்கள் கொடுத்த மூலிகைப் பொருளைக் கலந்து வைத்திருக்கிறேன்.’

“யாருக்கு”

பஞ்சவன்மாதேவி முத்தான பொன்நங்கையிடம் விசாரித்தாள்.

“பட்டமகிஷியார் மாலைநேரம் ஒருமுறை குளிக்கிறார். இன்று அரசர் வருவாரோ என்ற எண்ணம் அவருக்கு இருந்தது. அதனால் குளித்துவிட்டு நறுமணம் பூசிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தார் வரவில்லை யென்றதும் குளிக்கப்போகவில்லை. தூங்கப் போய்விட்டார்.”

"அப்படியெல்லாம் திட்டவட்டமாக அரசரைப்பற்றி ஒருகாலும் அனுமானிக்க முடியாது."

பஞ்சவன்மாதேவி பட்டமகிஷியைப்பற்றி அலுப்போடு சொன்னாள்.

"இன்னும் சுறுசுறுப்போடு இருந்திருக்கலாம். தான் மிகப்பெரிய அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற மெல்லிய மமதை பட்டமகிஷியிடமிருக்கிறது. மத்திய வயது தாண்டி விட்டார். உடம்பு பெருத்துவிட்டது. ருசித்து உண்பதில் நாட்டம் வந்துவிட்டது. ஆட்டமும், பாட்டமும், சோழி விளையாட்டும், அரட்டைப்பேச்சும், பகல் தூக்கமும் என்ற வாழ்க்கை உருளுகிறது. எவ்வளவு பெரிய விஷயத்தில் சக்ரவர்த்தி ஈடுபட்டிருக்கிறார் என்ற பிரக்ஞையே இல்லை.

உடையாரின் ஏழாவது, எட்டாவது மனைவிகள் மிகத் தோழமையாக இருக்க, அவர்களைப் பாடச் சொல்லியும், ஆடச் சொல்லியும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கார். பட்டமகிஷி செய்கின்ற மிக நல்ல வேலை பூஜை செய்வது தான். கோட்டைக்குள்ளேயே மிகப்பெரிய நந்தவனம் ஏற்படுத்தி வில்வமும், பூக்களும் கொய்து வரச்செய்து மரகத லிங்கத்திற்கு அபிஷேகமும், நடராஜப் பெருமானுக்கு அலங் காரமும் தினமும் செய்து சோழதேசத்திற்கு வேண்டு கிறார்கள். இது போதும். இதைவிட வேறென்ன காரியம் வேண்டும் என்று சக்ரவர்த்தியே ஒருமுறை வாழ்த்தியிருக் கிறார்.

அரண்மனையைச் சுற்றிவர வேண்டும். அங்கங்கே மரா மத்துப் பணிகளை மேற்பார்வையிட வேண்டும். சுத்தமாக இருக்கிறதா என்று கண்காணிக்க வேண்டுமென்று அவர் முயற்சிப்பதேயில்லை. அதற்குத்தான் நீ இருக்கிறாயே என்று சக்ரவர்த்தி அதையும் பஞ்சவன்மாதேவி தலையில் சுமத்தினார். ஆனால் நல்லவேளை அரண்மனைக்குள் உள்ள அதிகாரிச்சிகள் கெட்டிக்காரர்கள் உள்ளே சுத்தமாக வைத்துக்கொள்கிறார்கள். ஜலதாரைகளையெல்லாம் தினமும் தேய்த்துக் கழுவுகிறார்கள் திரைச்சீலைகளை ஒவ்வொரு அமாவாசையின் போதும் மாற்றுகிறார்கள். முற்பகல் வேளை யில் எல்லா இடத்திற்கும் தூபம் எடுத்துப் போகிறார்கள். நீண்ட கழிகளை வைத்து உச்சிகளைச் சுத்தம் செய்கிறார்கள். என்னதான் அதிகாரிச்சிகள் செய்தாலும் நாம் ஒருமுறை மேல் துணியைப் போட்டுக் கொண்டு எல்லா இடங்களையும்

வலம் வந்தால் வேலை இன்னமும் தெளிவாகவும், சுறுசுறுப்பாகவும் நடக்கும். பட்டமகிஷியர் வந்து மேற்பார்வையிடுவார் என்ற எண்ணமே இன்னும் சுத்தமாக வைத்திருக்கத் தோன்றும். இரவு நாட்டியமாட பாண்டிய வீரர்கள் வருவதால் கோட்டைக்காபந்து பற்றி இன்னொரு முறை விசாரிக்க வேண்டும். ராஜராஜி வந்துவிட்டால் அவளிடம் தளிச்சேரி பெண்டுகளின் குடியிருப்புக்குப் போக உடனே உத்தரவிடவேண்டும். அவளுக்குத் தனிவீடு ஒதுக்கும்படி ஓலை எழுத வேண்டும். ஓலை நறுக்கை எடுத்துக்கொண்டு சாவூர் பரஞ்சோதிக்கு விவாசமிட்டு "நக்கன் காஞ்சி ராஜ ராஜிக்கு உடனடியாக ஒரு தனிவீடு ஒதுக்கவும்" என்று எழுதி தன் முத்திரையிட்டு கையொப்பமும் இட்டாள்.

ஒரு சிறுபையில் இருபது கழஞ்சுகள் போட்டு இறுக்கிக் கட்டினாள். முத்துமணியும், தங்கமணியும் கோர்த்த ஒரு மாலையை எடுத்து வைத்துக் கொண்டாள்.

அதிகாரிச்சி முத்தான பொன்நங்கையோடு நடந்து திறந்தவெளி முற்றத்தில் நெஞ்சிலிருந்து தொடை வரை துணி கட்டிக்கொண்டு தலையை விரித்துக் கொண்டு உட்கார்ந்தாள். இரண்டு மூன்று சேடிகள் மாற்றி மாற்றி தண்ணீர் ஊற்ற ஆனந்தமாய் குளியலை அனுபவித்தாள். பயற்ற மாவினால் முதுகு தேய்த்து விட்டு மஞ்சள் கலந்து கைகால்களுக்குப் பூசி தொடை, அடிவயிறு, மார்பு எல்வாலற்றிலும் வாசனைக் கலவையைத்தடவி சிறிதுநேரம் அமர்ந்திருந்தாள்.

ராஜராஜியிடம் என்ன பேசுவது. அலனை இன்னும் காணோமே என்று உள்ளுக்குள் ஒரு கவவை வந்தது.

"சக்ரவர்த்தி தளிச்சேரிப் பெண்களுடைய இல்லங்களுக்குப் போய் இன்று இரவு அலர்களோடு பேசி பொழுது கழிக்கப் போகிறார். நீயும் போக வேண்டும். சக்ரவர்த்தி யாரோடு பேசுகிறார். என்ன பேசுகிறார். தளிச்சேரி பெண்கள் மனநிலை என்ன என்று நீ அருகேயிருந்து விசாரித்து தெரிந்துகொண்டு வரவேண்டும். சக்ரவர்த்தி போவதற்கு முன்பு நீ அங்கு வண்டிகளோடு போய்விடவேண்டும். அங்குள்ள தலைக்கோலிகளை ஸ்நேகம் பிடித்துக்கொள்ள வேண்டும். காஞ்சிபுரத்திலிருந்து எனக்கு வந்த சேலைகள் பலது இருக்கின்றன. அவைகளைத் தருகிறேன். தலைக்கோலிகளுக்கும், மற்ற பெண்களுக்கும் கொடு. இழுத்து பாவாடையாகத் தைத்துக்கொள்ளச் சொல். பூக்கள் போட்டு

ஓரம் தைத்த மார்புக்கச்சைகளும், மேல் துணிகளும் அவர்களுக்கு வழங்கு. ஓலையில் செய்யப்பட்டு வர்ணம் பூசிய சிறு பூக்கள் திருவண்ணாமலை பகுதிகளில் அதிகம். கடல் மல்லையிலிருந்து சங்கு வளையல்கள் வாங்கிக் கொண்டு வந்தேன். மயிலையிலிருந்து பித்தளைப் பாத்திரம் வாங்கி வந்தேன் என்று சொல். பேசிப்பழகி அந்த விஷயங்களை என்னிடம் சொல்.

நீ இராஜேந்திரருக்கு உளவாளியாக வந்திருக்கிறாய் என்பதை அறிவேன். என்ன வேண்டுமென்றாலும் இராஜேந் திரரிடம் சொல்லிக்கொள். உன்னை வேவு பார்க்கச் சொன் னாலும் அதுபற்றியும் எனக்கு அக்கறையில்லை. தளிச்சேரி பெண்கள் கூட்டத்தில் வேறு எவரும் நுழைந்து விடக்கூடாத படி கண்காணிப்பது முக்கியம். அதிகப்படியான பேச்சால், சிரிப்பால், அலட்டலால் அவர்கள் யாரையும் அதிகம் காயப்படுத்தாமல் இருக்க வேண்டுமென்று பார்த்துக் கொள். சமாதானப்படுத்து. குறை சொல்லுதலைக் குறைத்துக் கொள்ளச்சொல். படையெடுப்புக்கு காடு மலை தாண்டிப் போகிற போர்வீரன் கூடவே பஞ்சமெத்தை வேண்டுமென்று எடுத்துப் போகிறானா அல்லது இருக்குமிடத்தில் கொண்டு வந்து கொடு என்று கேட்கிறானா. இல்லையே, கிடைத்த இடத்தில் படுத்து, கிடைத்த உணவை உண்டு, தொடர்ந்து போய் யுத்தம் செய்கிறானல்லவா அப்படித்தான் தளிச்சேரி பெண்டுகளும் இருக்க வேண்டும். இது போர்க்காலம் என்று சொல். இது வேறுவிதமான போர். மனிதனுடைய எல்லா சக்திகளையும் ஒன்று திரட்டி இறைவனுக்கு அர்ப்பணிக்கின்ற அற்புதமான விஷயம் என்பதை சூசகமாகத் தெரிவி.

பஞ்சவன்மாதேவி யோசித்துக் கொண்டேயிருக்க சேடிகள் அழைத்தார்கள். மறுபடியும் வந்து வெய்யிலில் உட்கார அவள் உடம்பில் நீர் வார்த்தார்கள். தலையை அலசினார்கள். முகத்திற்கு மறுபடியும் கஸ்தூரி மஞ்சள் பூசினார்கள்.

வாசனைப் பொடியை கழுத்து அக்குள் என்று எல்லா இடத்திலும் தடவி விரைவாகத் தண்ணீர் ஊற்றினார்கள். அழைத்துக்கொண்டுபோய் புதுத்துணியைச்சுற்றி, பழைய துணியை அகற்றி தலையை ஈரம்போகத் துவட்டினார்கள். அறைக்கு அழைத்துப் போய் புகை போட்டார்கள். புகை வரும் தணல்மீது கூடையைக் கவிழ்த்து பஞ்சவன்மாதேவி யைப் படுக்க வைத்து தலையை விரித்தார்கள். குடிக்க ரசம்

கொடுத்தார்கள். தலை உலர்ந்ததும் பஞ்சவன்மாதேவி சாப்பிட உட்கார்ந்தாள் சாப்பிட்டு கைகழுவியதும் வெற்றிலை போட்டுக் கொண்டாள்.

ராஜராஜி உள்ளே வியர்க்க விறுவிறுக்க நுழைந்தாள். மண்டியிட்டு பஞ்சவன்மாதேவியை வணங்கினாள்.

"எல்லாச் சித்திரங்களையும் சிற்பிகளிடம் கொடுத்து விட்டேன். தஞ்சை முழுலதையும் சுற்றிப் பார்த்து விட்டேன். இனி எங்கே தங்குவதென்று நானே கேட்கும் நேரத்தில் நீங்கள் ஆள் அனுப்பி விட்டீர்கள் நான் எங்கு தங்க வேண்டுமம்மா." என்று பணிவாகக் கேட்டாள்.

தளிச்சேரி பெண்டுகள் குடியிருப்புக்கு அவளை அழைத் துப் போக உத்தரவிட்டிருப்பதாக பஞ்சவன்மாதேவி சொல்ல சரி என்று தலையசைத்தாள். அருகே அழைத்து தான் சிந்தித்த விஷயங்களை சாவூர் பரஞ்சோதிக்கு எழுதிய ஓலைநறுக்கை அவளிடம் நீட்டினாள்.

"யாரம்மா. இந்த சாவூர் பரஞ்சோதி" என்று ராஜராஜி விசாரித்தாள்.

முத்தான பொன் நங்கை ராஜராஜிக்கு பதில் சொன்னாள்.

"சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் சாவூர் பரஞ்சோதியைக் கோயிலுக்கு ஊழியம் செய்யவரும் தளிச்சேரி பெண்டுகளுக்குக் காவலாய் நியமித்திருக்கிறார். சாவூர் பரஞ்சோதி மிகப்பெரிய வீரன். நல்லவருக்கு நல்லவன். கெட்டவனுக்கு மிக மோசமானவன். முப்பது நாப்பது பேரைத் தனித்திருந்து வீழ்த்தக்கூடிய வல்லமை யுடையவன். அதே சமயத்தில் ஒழுக்கசீலன், மிக மிருதுவான வன். அலன் யவனர் குலத்தைச் சேர்ந்தலன். லடக்கே வெகு தூரத்திலிருந்து மரக்கலத்திலிருந்து வந்த யலனருக்கும், கங்க தேசத்து அழகிய பெண்ணுக்கும் மகனாகப் பிறந்தவன். அந்த யவனர் சிறு வயதிலேயே இவனுக்குப் போர்ப் பயிற்சியைப் பலதும் அளித்து பிறகு நாடு திரும்பினாராம். அவர் தாய் ஒரு தேவரடியார். நாட்டிய மங்கை. அதனால் அந்த யவன ரான சாவூர் பரஞ்சோதிக்கு தேலரடியார்கள் மீதும், பொது வாக பெண்கள் மீதும் மிகுந்த மதிப்பும் மரியாதையும் உண்டு.

அவர் தாயின் வேண்டுகோளின்படி திருமணம் செய்து கொள்ளாமல் பெண்களுக்குப் பாதுகாப்பாக இருப்பதையே

வாழ்வின் நோக்கமாகக் கொண்டிருக்கிறார் கொல்லா புரத்தைச் சேர்ந்த ஈராயிரம் பல்லவரையரின் படையிலிருந்து அவரைப் பற்றித் தெரிந்துகொண்டு அவரைச் சக்ரவர்த்திப் பெருமானார் கட்டப்போகும் கோவிலுக்குத் தளிச்சேரிப் பெண்டிரின் நாயகமாக வேலை கொடுத்திருக்கிறார். சாவூர் பரஞ்சோதி இப்போது ஊரில் இல்லை. ஆனால், வெகுவிரை வில் வந்து பதவியை ஏற்றுக்கொள்வார் என்றும் கோவிலுக் காக வரும் பெண்டுகள் மீது ஒரு சிறு தூசும் படாது பாது காப்பார் என்றும் சொல்லப் படுகிறது."

''சாவூர் பரஞ்சோதி எங்கே போயிருக்கிறார் குடந்தைக்கா."

"இல்லை. கங்க தேசத்திற்கு."

"ஏன்."

"அவனுடைய தாய் மரணத்தருவாயில் இருப்பதாக செய்தி வந்திருக்கிறது. நல்ல குதிரை ஏறி விரைவாகக் கிளம்பி விட்டான். இரண்டே நாட்களில் கொல்லாபுரத்தை அடைந்திருக்கிறான் இவர் வருகைக்காகவே காத்துக் கொண்டிருந்த தாய் இரண்டு நாட்கள் இவரோடு பேசிச் சிரித்தபடி இருந்துவிட்டு இவர் மடியிலேயே நிம்மதியாக உயிர் துறந்தாராம். கொல்லாபுரத்திலிருந்து தாய்க்கு வேண் டிய ஈமக்கடன்களைச் செய்துவிட்டு தான தர்மங்கள் வழங்கி விட்டு அவர் தஞ்சை நோக்கி வந்து கொண்டிருக்கிறான் என்று சொல்கிறார்கள்."

"இன்று மாலை வரை சாவூர் பரஞ்சோதி வரவில்லை. இப்போது வந்திருக்கக்கூடும். அவன் வராது இருந்தாலும் அவனுக்கு கொடுக்கப்பட்ட ஓலையை அவருடைய உதவியாட்கள் பெற்று உனக்கு வேண்டுவன செய்வார்கள்."

முத்தான பொன்நங்கை பேசி முடித்ததும் பஞ்சவன் மாதேவி எழுந்தாள்.

''ராஜராஜி போய் வா நானோ இராஜேந்திர சோழனோ, உடையார் ஸ்ரீ இராஜராஜரோ முக்கியமல்ல. சோழதேசம் முக்கியம் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள். மன்னர் செய்கின்ற மகத்தான பணிக்கு உன்னை ஈடுபடுத்திக் கொள் வெறுமே காஞ்சிபுரத்தையே கனவு கண்டு கொண்டிருக்காதே. காஞ்சிபுரம் ஆயிரம் வருடத்திற்கு முன்பு கட்டப்பட்ட நகரம். நகரமென்றால் அது காஞ்சிபுரம் தான்

என்று வழங்கப்படும் அளவுக்கு பழமையான நகரம். அங்குள்ள சௌகரியங்கள் இங்கு கிடைக்காது போகும். இந்தப் புதுக்குடியிருப்பில் நீ நினைத்தவை நடக்காது போகும். சிலமாதங்கள் பொறுத்துக்கொள். மிக விரைவில்.. மிக விரைவில் எல்லாவித வசதிகளும் அந்தத் தேவரடியார் குடியிருப்பில் ஏற்படும். கோவில் கட்டுவதில் இராஜேந்திரருக்கும், அரசனுக்கும் இடையே அபிப்ராய பேதங்கள் இருந்தாலும் அவர்கள் தந்தையும் மகனுமானவர்கள். ஒருவர்மீது ஒருவர் சொல்லற்கரிய பாசத்தை வைத்திருப்பவர்கள். அந்தப்பாச மிகுதியாலேயே ஒரு உரிமை எடுத்துக் கொண்டு வெறுமே சண்டை போட்டுக் கொள்கிறார்கள் என்றும் எனக்குத் தோன்றுகிறது. அதைப் பெரிதுபடுத்திவிடாதே. ஒருவேளை இராஜேந்திரன் ஏதேனும் கோபமடைந்தால் அவர் கோபத்தைக் குறைக்கின்ற வழியைப்பார்.

பரவை என்பவள் இராஜேந்திரருக்குப் பிரியமானவளாமே. அவளும் தஞ்சைக்கு வந்து விட்டாளாமே. அவள் வந்திருப்பின் அவளையும் நான் சந்திக்க விரும்புகிறேன் என்று சொல்."

"பரவையார் திருவல்லம் போயிருப்பதாக எனக்குச் செய்தி கிடைத்ததம்மா."

"ஆமாம். இங்கு தஞ்சையில் பரவையோடு கொஞ்சினால் எவரும் ஏதேனும் சொல்வார்கள் என்று பரவையை முன்னே அனுப்பி தானும் பின்னே ஓடிப்போய் விட்டார். இரண்டு மனைவிகள் ஒருத்தி பழையாறையிலிருக்க, இன்னொரு மனைவி உடையார்குடியில் ராஜேந்திரர் அகத்தில் இருக்க, இவர் அந்த திருவாரூர் பெண்ணோடு ஆடிப்பாடிக் கொண்டிருக்கிறார். அவளையும் அழைத்துக்கொண்டு பழையாறைக்கோ, மேல்பாடிக்கோ அல்லது திருவொற்றியூருக்கோ போக வேண்டியது தானே. மனைவியருக்கு அருகே இருக்க வைத்து பேசிப்பழக வேண்டியதுதானே. மனைவியர் இருந்தால் தேவரடியாரோடு பேசுவதில் வெட்கம் வந்துவிடுகிறது போலும், தனது அணுக்கியை மனைவிக்கு அறிமுகப்படுத்தி வைத்தால் அணுக்சிக்கு கர்வம் வந்துவிடுமே என்று நினைக்கிறார் போலும், பரவைக்கு கர்வம் வராமலிருக்க வெறும் காடுமேடுகளில் மட்டும் அவளோடு சல்லாபித்துக் கொண்டிருக்கிறார் அந்தப் பெண்ணுக்காவது அறிவு வேண்டாம்."

நொந்தபடி பஞ்சவன்மாதேவி பேசினாள்.

"எல்லோரும் உங்களைப்போல் இருந்துவிட முடியுமா. உங்களுக்குக் கிடைத்த வாழ்க்கை எல்லோருக்கும் கிடைத்து விடுமா. நீங்கள் கொடுத்து வைத்தவர் தேவி. உங்கள் கடும் உழைப்பும், கூரிய புத்தியும் எலருக்கும் இல்லை. சோழ தேசம் பற்றிய காதலோ, சிவத் தொண்டுகள் செய்ய வேண்டும் என்ற ஏக்கமோ இங்கு யாருக்கும் வரவில்லை. எனக்குக்கூட கிடையாது. பழமார்நேரி வெள்ளத்தில் மாட்டிக்கொண்டபோது போதுமடா சாமி எதற்கு இந்த தஞ்சைப் பயணம் நான் காஞ்சிபுரத்திலேயே இருந்திருக்க லாமே என்றுதான் கதறினேன். வந்து தஞ்சை நகருக்குள் நுழைந்து. இந்த அகலமான தெருக்களையும், மாடமாளிகை களைப் பார்க்கும்போதுதான் நான் லந்தது சரியென்று தோன்றியது. மன்னரைப் பார்க்கும்போதுதான் எங்கள் மன்னன் எவ்வளவு கம்பீரன் எனறு தெரிந்தது. இந்த அரண்மனைக்குள் நுழையும்போதுதான் எப்பேர்ப்பட்ட நாகரிகத்தில் நான் இருக்கிறேன் என்பது புரிந்தது. மன்னர் கட்டுகிற கோயிலின் வரைபடம் பார்த்தபோது நான் ஆடி அசந்து அமர்ந்துவிட்டேன். எனக்குப் புரிகிறதம்மா. சரித்திரத் தின் மிக முக்கியமான காலகட்டத்தில் மிக முக்கியமான மனிதரோடு நான் லாழ்ந்து கொண்டிருக்கிறேன். இது பெரிய கொடுப்பினை. ஆனாலும், உங்கள் அளவுக்கு ஈடுபடுத்திக் கொள்ள எனக்கும் புத்திபோறவில்லை. ஐயோ வீடு நன்றாக இருக்க வேண்டுமே. அடுத்த வீட்டில் உள்ளவர்கள் இதமாக இருக்க வேண்டுமே. காஞ்சிபுரத்திலுள்ள என் வீட்டை யாராவது கவனமாகப் பார்த்துக்கொள்ள லேண்டுமே என்று அற்பத்தனமான சிந்தனைகள் ஓடத்தான் செய்கின்றன.

பரவை என்னை விடவும் சிறியவள். இளவரசருடைய மனைவியை அறிமுகப்படுத்தினால் அவள் நாணிக் கோணிக் கொண்டு வெகுதூரம் விலகி நிற்பாள். பழக மாட்டாள்."

"இந்த நிலைமைக்கு நீங்கள் வர எத்தனை விதமான சோதனைகளைச் சந்தித்திருப்பீர்கள் என்று எனக்குத் தெரிகிறது. தேவி நீங்கள் ஒரு மாணிக்கம். எல்லோரும் அப்படி இருந்துவிட முடியாது. உங்களுக்கு முன் நாங்க ளெல்லாம் வெறும் கல், கூழாங்கல். பரவையைச் சந்திக்க நேர்ந்தால் மிகப்பக்குலமாக உங்களுடைய ஆதங்கத்தைச் சொல்கிறேன். இராஜேந்திரசோழரை இன்னும் நல்வழிப் படுத்தவும் அமைதியாக்கவும் தான் உன் வாழ்க்கை லட்சிய மாகக்கொள் என்று கேட்டுக் கொள்கிறேன் நீங்கள்

சொன்னபடி என்ன வசதி இருக்கிறதோ அதை வைத்துக் கொண்டு அந்த தளிச்சேரி பெண்டுகள் கூட்டத்தில் இன்னும் சுமூகமான ஒரு நிலைமை நிலவ நான் ஏற்பாடு செய்கிறேன். கோவில் வரைபடத்தின் மாதிரியை நான் எடுத்துப்போக வேண்டுமென்று விரும்புகிறேன். ஏதோ கோவில் கட்டு கிறாராம் என்றுதான் எல்லோரும் நினைத்துக் கொண்டிருக் கிறார்கள். மனிதரையும், யானையையும் நிற்க வைத்து அதற் கருகே விமானம் வரைந்திருக்கிறார்கள். எவ்வளவு பெரிய விமானம் என்பதை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டு மென்றால் அந்த ஓவியம் முக்கியமென்று கருதுகிறேன். உங்கள் அனுமதி வேண்டும். பெருந்தச்சரிடம் கொடுக்காது நான் மூன்று ஓவியங்கள் வைத்திருக்கிறேன். அது பெருந் தச்சரின் சொத்தல்ல. எனக்காக அங்குள்ள ஓவியர் வரைந்து கொடுத்தது. உங்களுக்காக ஒன்று எடுத்து வந்திருக்கிறேன். இதை அரண்மனையில் மாட்டுங்கள். பட்டமகிஷியும் மற்றவ ரும் இதைத்தெரிந்து கொள்ளட்டும்."

அவள் வெளியே போய் வாசலில் வைத்திருந்த நீண்ட சுருளைக் கொண்டுவந்து பஞ்சவன்மாதேவியின் கையில் கொடுத்தாள்.

பஞ்சவன்மாதேவி அதைப்பிரித்துப் பார்த்தாள்.

மிக உயரமான விமானம். கீழே யானை, அதற்குக் கீழே ஆணும், பெண்ணுமாய் இரண்டு உருவங்கள் நின்றிருந்தன. அதைப் பார்க்கும் போது விமானத்தின் பிரமாண்டம் புரிந்தது.

"நீ சொன்னது சரி. இப்படியொரு சித்திரம் அரண் மனையிலும் இருக்க வேண்டும், இன்னொன்று நீ எடுத்துப் போகிறாய். மூன்றாவது சித்திரம் யாருக்காக."

பஞ்சவன்மாதேவி யோசித்து விழி உயர்த்த, அவள் விழி உயர்வை ராஜராஜி புரிந்துகொண்டாள்.

"அம்மா மூன்றாவது ஓவியம் இராஜேந்திரருக்கு கொடுத்தால் என்ன."

மிருதுவாகக் கேட்டாள்

அவள் கேட்டவிதமும் குரல் அசைவும் பஞ்சவன் மாதேவிக்கு பிடித்திருந்தன.

"நல்லது உன் நடவடிக்கைகள் அற்புதமாக இருக்கின்றன. ராஜராஜி நீ இராஜேந்திரசோழனின் உளவாளியாக இருக்க எல்லாத் தகுதியும் பெற்றிருக்கிறாய். இதுவரை நான் என்ன தெரிந்து கொண்டேன் என்றால், நீ இதுவரை இராஜேந்திரரைச் சந்திக்கவேயில்லை என்பதுதான். சரியா"

"சந்திக்க நினைத்திருந்தால் பெரிய விஷயமல்ல. ஆனால், சந்திக்க வேண்டிய அவசியமில்லை. என் வருகை அவருக்குத் தெரிந்துவிட்டது. நான் இங்கு என்ன செய்ய வேண்டும் என்ற கட்டளையும் எனக்கு இருக்கிறது. உங்களை வேவு பார்க்க அவர் அனுப்பவேயில்லை. உங்களுக்கும் மன்னருக்கும் இடையில் நுழைகின்ற எண்ணம் நெல்முனையளவும் அவருக்குக் கிடையாது. உங்களை அவர் பெரிதும் மதிக்கிறார்.

சக்ரவர்த்தியின் பல சுமைகளை நீங்கள் வாங்கிக் கொள்கிறீர்கள் என்பதை அவர் நன்கு புரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு பிரம்மராயர் மீது கோபம் இருக்கிறது. ஆனால், அருண்மொழிப்பட்டனுக்காக அதை விழுங்கிக் கொள்கிறார். அவருக்கு அந்தணர்கள் மீது கடுங் கோபம் இருக்கிறது. பிரம்மராயரையும் மீறி அந்தணர்கள் செயல்படுவதாக நினைக்கிறார். அதுவொரு தனிக்குழுவாக இந்த சோழதேசத்திற்கும் தனக்கும் சம்மந்தமில்லையென்று விலகிக் கொண்டு, அதேசமயத்தில் சோழதேசத்தின் எல்லா வளங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறார். திருவல்லம் புறப்படும்போதுகூட அவர் வந்தியத்தேவரோடு பேசிக் கொண்டிருந்ததை குந்தவையார் தெரிவித்தார்கள்.

அத்தை குந்தவையாருக்கு முழங்கால் வலி. வயதாகி விட்டதல்லவா. நான் தைலம் தடவி உருவி விட்டேன். நன்றாகத் தூங்கினார்கள். பிறகு எழுந்து எனக்கு முத்துமாலை அணிவித்தார்கள். சில பொற் கழஞ்சுகளைக் கொடுத்தார்கள். வந்தியதேவருக்குக் கழுத்து வலியாம். தைலம் தடவச் சொன்னார்கள். அவர்கள் இருவர் பேசுவதையும் கேட்டேன்.

அந்தணர்கள் வெறுமேதானே இருக்கிறார்கள். கோயில் கணக்கை அவர்களை எழுதச் சொன்னால் என்ன என்று இளவரசர் இராஜேந்திரர் கேட்டாராம். அதற்காக பொதுக் கரணத்தாரையும். கிராம கரணத்தாரையும் எதற்குத் தொந்தரவு செய்ய வேண்டும். இங்குள்ள அந்தணர்கள் எழுதப்படிக்க தெரிந்தவர்கள் தானே. அவர்களை எப்படி

கணக்கு எழுத வேண்டுமென்று கற்றுக்கொடுத்து அவர்களை அரகப் பணிக்கு முற்படுத்த வேண்டும். காலையில் மறவர் களும், சிற்பிகளும் வேலைக்கு வரும்போது அந்தணர்களும் வந்துவிட வேண்டும் என்று கட்டளையிட்டால் தவறா என்று குந்தவையிடமும் சொன்னாராம். குந்தவையார் வேண்டாம், வீண் வம்பு செய்யாதே என்று எச்சரித்தாராம். ஆனால், வந்தியத்தேவர் இது தேவைப்படும் என்று நினைக்கிறேன். அவன் வம்பு செய்வதாக எனக்குத் தெரியவில்லை. எல்லோ ரும் கோவில் பணியில் பங்கெடுப்பதென்றால் அந்தணருக்கும் பங்கு இருக்க வேண்டுமல்லவா அந்தணர்களைக் கோவில் கணக்கு எழுத உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் பிரம்மராயரிடம் சொல்கிறேன் என்று சொன்னாராம். சரி, அந்தணர்களுக்குப் பீடை பிடித்தது என்று குந்தவையார் அலுப்பாகச் சொன்னதைக் கேட்டேன். வெளியே வந்து யோசித்துப் பார்த்தபோது இது சாதாரண விஷயமல்ல என்று புரிந்தது. ஒருவேளை இராஜேந்திரரின் கட்டளை போல அந்தணர்கள் கோவில் பணிக்கு வந்தால் கணக்கு எழுதவேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்பட்டால் என்ன ஆகும் என்று கவலையாக இருந்தது. உங்களைச் சந்திக்கும்போது இதுபற்றிப் பேசவேண்டும் என்று எண்ணியிருந்தேன். பேசிவிட்டேன்."

"இந்த இராஜேந்திரர் ஓயமாட்டார் போலிருக்கிறதே. எதற்கு இத்தனை பிடிவாதம். என் இந்தப் பாரபட்சம். கருமார்களின் உரிமைகளை அந்தணர்கள் எதிர்த்தார்கள் என்பதற்காகவா இத்தனை வேகம் காட்டுகிறார்."

"இல்லை தேவி. அரசு செய்யும் முடிவுக்கும் எந்த ஜாதி யினரும் குறுக்கே நிற்கக்கூடாது என்று தெள்ளத் தெளிவாக இராஜேந்திரர் கூறுகிறார்.

ஒரு கோவில் கட்டுவதில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படப் போகின்றன. ஜாதிப்பிரச்சினையைக் கொண்டு வந்து நிறுத்துவானேன். இதோ நேற்று முன்தினம் பிடுங்கிய முதல் கல் புரண்டு வேகமாக உருண்டு கீழே வந்து ஒரு இராஷ்டிரகூட அடிமை வீரனை அடித்துச் சாய்த்துக் கொன்றுவிட்டது. அடிமை வீரர்கள் துவண்டு போனார்கள். அழுதார்களாம். எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்து, எங்கோ இறந்து போகிறானே என்று நெஞ்சில் அடித்துக்கொண்டு கதறினார்கள். அவன் மனக்கேதம் தீர்ப்பதற்கு இராஜராஜர்

நிசும்பசூதனியின் பிரசாதமும், நெய்விளக்கும் அனுப்பியிருக்கிறார் பஞ்சவன்மாதேவி தொடர்ந்தாள்.

அனுப்பியென்ன. போன உயிர் வருமா? இப்படி எத்தனை உயிர்கள் இந்தக் கோயில் கட்டுவதில் இறக்கப் போகின்றன. உயரம் உயரம் என்று திரைச் சிலையைப் பிரித்து வைத்துக்கொண்டு எல்லோரும் வியக்கிறோமே. மேலே நின்று வேலை செய்கிறவன் கால்தவறி கீழே விழுந்தால் என்ன ஆவான். மலையிலிருந்து கல் புரண்டதுபோல உச்சியிலே இவர்கள் ஏற்றி வைத்திருக்கின்ற ஒரு கல் சரிந்து கீழே விழுந்தால் என்ன ஆகும். எத்தனை பேர் மடிலார்கள் யாருக்கெல்லாம் ஊனம் ஏற்படும். இப்படியொரு நிலைமை ஏற்பட்டால், இதற்கு என்ன விதமாக மாற்று ஏற்பாடு செய்யப் போகிறோம். என்ன சாரம் கட்டி எடுத்துப்போகப் போகிறோம். எதில் கட்டப் போகிறோம். யார் ஏறப் போகிறார்கள். எப்படி கல்லை ஏற்றப்போகிறோம்.

சாரம் கட்.டி ஒரு வரைபடம் இருந்தது கவனித்தாயா. எப்படி சுற்றிச் சுற்றி மேவே போக வேண்டுமென்று அதில் படம் வரைந்திருந்தார்கள். மனிதர் ஏறுவதே சிரமமாக இருக்க, அங்கே கல்லெடுத்துக் கொண்டுபோய் யார் வைப்பது. அந்தக்கல் தவறி விழுந்தால் கீழேயிருக்கும் யானையல்லவா சாகும். யானையே சாகுமென்றால் மனிதருடைய கதி என்ன. இப்படி நினைக்க நினைக்க ஆயிரம் பிரச்சினைகள் கண்முன் தோன்றுகின்றன. ஆனால், இராஜேந்திரர் அந்தணர்களை எப்படி வறுத்தெடுப்பது என்று யோசித்துக் கொண்டிருக்கிறார். இது மிகத்தவறு என்று தோன்றுகிறது. இதை எதிர்த்துக் கேட்டால் நான் பொல்லாதவளாக ஆகிவிடுகிறேன். சிற்றன்னை என்று அழைத்து விடுவாரோ என்று பயமாக இருக்கிறது. திருவல்லம் கோட்டைக்குள் இராஜேந்திர சோழன் பரவையோடு இருக்கிறாரா அல்லது வெளியே கூடாரமெடுத்து தங்கியிருக்கிறாரா."

"இல்லை. கோட்டைக்குள்தான் இருக்கிறார். கோட்டைக்குள் நுழையும்போதே வழியில் பரவையாரைச் சந்தித்து பல்லக்கிலிருந்து இறக்கி தேரில் ஏற்றிக்கொண்டு ஊர் மக்கள் பார்த்த வண்ணம் கையசைத்து அரண் மனைக்குள் நுழைந்திருக்கிறார். திருவல்லத்தில் இருக்கின்ற பரம்பரை பரம்பரையான அரச குடும்பங்கள் இராஜேந்திரரை வரவேற்று பெரிய மரியாதை செய்திருக்கிறார்கள். அந்த

மரியாதையில் சரி சமமான பங்கு பரவையாருக்கும் போயிருக்கிறது. பரவையாருக்கும் ஆரத்தி கரைத்து நெற்றியி லிட்டு குலவை போட்டு கும்பம் காட்டி வரவேற்பு கொடுத் திருக்கிறார்கள்.

அந்தணர்கள், கும்பம் ஏந்தி வந்தபோது இராஜேந்திரர் அந்தக் கும்பத்தைத் தொட்டாராம். பரவையாரையும் தொடு. நீ தொட்டு லரவேற்பை ஏற்றுக்கொள் என்று சொன்னாராம். பரவையார் தயங்கி ஏற்றுக்கொண்டாராம்."

"ஆக, அல்வளவு துரிதமாக செய்தி உனக்கு வருகிறதா."

"இல்லையம்மா. நான் ஒரு செய்தி அனுப்பினேன். செய்தி சொன்னவன் போனபோது வரவேற்பு நிகழ்ந்து கொண்டிருந்தது. வந்தலன் இந்தச் செய்தியைச் சொன்னான்."

"நீ என்ன செய்தியை அனுப்பினாய்."

"கருமார்கள் கேட்கும் எந்தக் கோரிக்கையும் நெல் முனையளவும் கருமாருக்கோ கருமாரின் ஒரே குடியான சிற்பிக்கோ, மரத்தச்சர்களுக்கோ, தங்க நகைகள் செய்யும் ஆச்சாரிகளுக்கோ, நெசவாளர்களுக்கோ உதவி செய்யாது என்று பெருந்தச்சர் உரக்கச் சொன்னதை அவருக்குச் சொன்னேன். பெருந்தச்சருக்கு இதில் பிடித்தமில்லை என் பதை அவருக்கு விளக்குமாறு என் சேவகனைப் பணித்தேன். அதாவது விராட் புருஷனின் ஒரே குடியில் பிறந்த லெவ்வேறு வகை தொழில்களைச் செய்கின்ற இந்த கல்தச்சர். மரத்தச்சர், தங்க நகை செய்லோர், புடவை நெய்லோர், இலர்களுக் கிடையே ஒற்றுமையில்லை என்பதைச் சொன்னேன்."

"இதைச் சொல்லுலதில் என்ன லாபம்."

பஞ்சவன்மாதேவி வியப்போடு ராஜராஜியைப் பார்த்துக் கேட்டாள்.

"இந்தச் பிரச்சினை பூதாகாரமாகாது அவர்களே அழித்து விடுகிறார்கள் அதுதவிர மூன்று சலுகைகள் சக்ரவர்த்தி இராஜராஜர் கொடுத்திருப்பதால் அது இப்போதைக்கு போதுமானது என்பதையும் மெல்லியதாக என் அபிப்ராய மாகச் சொல்லி லைத்தேன்."

"அடேயப்பா.. சோழ அரசியல் தலைக்கோலிகளிடம் சிக்கியிருக்கிறது என்று பிரம்மராயர் கவலைப்படுவது சரிதான். பெண்கள் ஆட ஆரம்பித்துவிட்டார்கள் என்று

அவர் அடிக்கடி புலம்புகிறாராம். அதிகாரிச்சி முத்தான பொன்தங்கையைப் பார்த்தால் அவருக்கு கோபம் வருகிறதாம். இன்னுமா இருக்கிறாய் என்று கேட்கிறாராம். என்றேனும் நீ பிரம்மராயரைச் சந்தித்தால் அனேகமாக வாள் உருவி உன்னைக் கண்டந் துண்டமாக வெட்டிப் போட்டுவிடுவார்.

“அது அவ்வளவு எளிதல்ல தாயே. என்னை வெட்டுவ தாக இருந்தால் எனக்கு ஒரு வாளை கொடுத்துவிட்டு வெட்டு என்று சொல்வேன்.”

“போர். போர்ப்பயிற்சியும் உண்டா.”

“தற்காப்புப் பயிற்சி உண்டு.”

“எங்கு கற்றாய்.”

“புத்த பிட்சுக்களிடம்.”

“எப்போது”

“காஞ்சிபுரத்தில்.”

“புத்தபிட்சுக்கள் போர்ப்பயிற்சி தருகிறார்களா.”

“இல்லை. தற்காப்புப் பயிற்சி தருகிறார்கள். சாதுவான ஒரு புத்தபிட்சுவை எவரும் அடித்து வீழ்த்திடமுடியாது. அந்த அடியைத் தடுப்பது எப்படி என்றும், எப்படி அடித்தால் எதிரி சாய்வான் என்றும் தெரியும். எங்களுக்கு ஆறு மாத காலம் ஒரு புத்தபிட்சு இதைப் போதித்தார். நடனமாடு பவர்களுக்கு தற்காப்புக்கலை வெகு நன்றாக வருமென்று சொல்லி எளிமையாகக் கற்றுக்கொடுத்தார் கோபமில்லாது இருந்தால் பலமாகத் தாக்கலாம். தாக்குதலைத் தடுக்கலாம் என்பதுதான் இதன் முதல் பாடம்.”

“ராஜராஜி உன்னைக் காஞ்சிபுரத்திலிருந்து இங்கு வரவழைத்தது பிசகுதான்.”

“இல்லே தாயே. நீங்கள் வரவழைக்கவில்லை. இராஜேந்திரர் கட்டளையால் வந்தேன்.”

“என்ன இராஜேந்திரர் என்றால் உனக்கும் மயக்கமா.”

“அப்படியில்லை தாயே. நீங்கள் வேறுவிதமாகக் கேள்வி கேட்கிறீர்கள். நான் தேவரடியார் என்பதால் அவரோடு நான் சல்லாபித்திருப்பேனோ என்று சந்தேகப்படுகிறீர்கள்.

என் தாயும், என் பாட்டியும், என் சித்தியும் தேவரடியாராக இருந்து பல வேதனைகளை அனுபவித்திருக்கிறார்கள். காஞ்சி புரத்திலுள்ள அந்தணர்களாலும், வைசியர்களாலும் பல்வேறு வேதனைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவைகளைத் தட்டிக் கேட்க சரியான அமைப்பு இல்லாமல் இருந்தது. காஞ்சி புரத்திலுள்ள புத்த பிட்சுக்கள் இதைத் தட்டிக் கேட்டார்கள். நீங்கள் செய்வது தவறு என்று சுட்டிக் காட்டினார்கள். மறுத்து எகிறிய ஒரு அந்தணக் கும்பலை சில புத்தபிட்சுக்கள் சேர்ந்து அடித்துத் துலைத்தார்கள். அப்போதுதான் புத்த பிட்சுக்களின் வலிமை எனக்குப் புரிந்தது. என்னைப்போன்று பதினாறு பெண்கள் புத்த பிட்சுக்களுக்கு அருகே போய் பாடம் சொல்லித்தரும் படி கேட்டுக் கொண்டோம். அவர் களுக்கும் பயிற்றுவித்தார்கள்."

"எதற்காக? புத்த மதத்தில் மாற வேண்டுமென்றா, சைவத்தை உதற வேண்டுமென்றா."

"இல்லை"

"புத்த பிட்சுக்கள் ஒருகாலும் அப்படி கேட்கவில்லை. சமணர்கள் அப்படிக் கேட்பார்கள் என்று கேள்விப்பட்டிருக் கிறேன். ஆனால், புத்த பிட்சுக்கள் வேறுமாதிரி புத்தரைப் புரிந்துகொண்டு புத்தபிட்சு ஆவதுதான் நல்லதே தவிர, வெறுமே கட்டி இழுப்பதால் எந்த லாபமும் இல்லை. கும்பல் சேர்ப்பதால் ஒரு மதம் எந்த விதத்திலும் உயர்வாகிவிடாது என்று புரிந்து வைத்திருக்கிறார்கள். நீ சைவமாகவே இரு. ஆனால் பௌத்தர்களைத் துன்புறுத்தாதே. பௌத்தம் ஒரு பெரிய விஷயம். புத்தர் அவதாரம் என்று சொல்லப்பட் டிருக்கிறது. அதுவும் தவிர.."

"அதுவும் தவிர..

"சக்ரவர்த்தி இராஜராஜசோழரின்- மகள் சந்திரமல்லி புத்தமதத்தில் சேர்ந்து மாதேலடிகள் என்று பெயர் மாற்றிக் கொண்டு தலைமைப் புத்தபிட்சுவாக இருப்பது பற்றி அவர்களுக்கு மிகுந்த சந்தோஷம். கர்வம். புத்தருடைய கருணையால்தான் இது ஏற்பட்டது என்று சொல்கிறார்கள். தெற்கே இலங்கையில் செழித்ததுபோல காஞ்சியைத் தலை மையாகக் கொண்டு புத்தமதம் வளரும் என்று நம்புகிறார்கள்.

ஜாதிச்சண்டை முடிந்தது. இப்பொழுது மதச்சண்டை துவங்கி விட்டதல்லவா. இந்தப் பரத கண்டம் என்ன

கதியாகப் போகிறது. இந்த சோழதேசம் என்ன கதியாகப் போகிறது என்று எனக்குத் தெரியவில்லை.

அம்மா மாறுதல் என்பது இயல்பான விஷயம். பௌத்தம் என்ற விஷயமே அந்தணர்களுக்கு எதிராகத் தோன்றியிருக்குமோ என்றுகூட புத்த பிட்சுக்களுக்கு நடுவே விவாதம் நடப்பதுண்டு. கடவுள் என்ற பெயரால் வடக்கே உள்ள அந்தணர்கள் மிகப்பெரிய மோசடிகள் நடத்தியிருப்ப தால் அதை எதிர்க்க கடவுளே புத்தாவதாரம் எடுத்துவந்தார் என்றும் அவர்கள் பேசிக் கொள்கிறார்கள் அதைக் கதையாகவும் சொல்கிறார்கள்.

"அப்படியா."

"ஆமாம் அம்மா. புத்தர் ஜாதகக் கதைகள் என்று ஒன்று உண்டு. புத்தர் பலநூறு பிறவிகள் எடுத்து பலநூறு உயிர் களாக வாழ்ந்திருக்கிறார் என்று அந்த ஜாதகக் கதைகளில் சொல்லப்படுகிறது."

"ஒரு கதை சொல்லேன்."

பஞ்சவன்மாதேவி அமர்ந்த பஞ்சணையிலேயே ராஜராஜியும் அமர்ந்து கொண்டாள். மற்ற சேடிகள் மெல்ல விழி உயர்த்தினார்கள். ஆனால், அதுபற்றிக் கவலையில்லா மல் ராஜராஜி பேசத்துவங்கினாள்.

"புத்தர் ஒருமுறை மிக வலிமையுள்ள ஒரு எருதாக பூமி யில் பிறந்தார். அவரை நேசித்த ஒரு குடியானவனிடம் போய் கட்டுப்பட்டு நின்றார். ஊரில் எவருக்கும் கட்டுப் படாத அந்த முரட்டு எருது வலிமைமிக்க மிருகம் தனக்குக் கட்டுப்படுவதைக் கண்டு அந்தக் குடியானவன் மிக மகிழ்ந்தான். அதைத் தடவித் தடவி மிகப் போஷாக்காக வளர்த்து வந்தான். தனக்கு என்ன தின்பண்டம் கிடைத் தாலும் அதை ஓடிப்போய் அதற்கும் கொடுத்து அதனருகே அமர்ந்து சாப்பிடுவான். அதோடு நிறைய பேசுவான். அந்த எருதும் அதாவது புத்தரும் அவன் பேச்சைக் கேட்டு ரசித்துக் கொண்டிருப்பார். குடியானவனுக்கு ஒரு சமயம் வறுமை ஏற்பட்டது. காசில்லாத நிலைமை ஏற்பட்டது. நான் என்ன செய்வேன் என்று எருதிடம் போய் அழுதான். அந்த எருது பேசத் துவங்கியது.

குடியானவன் ஆச்சரியப்பட்டான். என்னால் பேச முடியும். நீ கவலைப்படாதே. நான் நூறு மூட்டை நெல்

வண்டிகள் இழுப்பேன் என்று ஊர்மக்களிடம் சொல். ஊர்மக்கள் முடியாது என்று சொல்வார்கள். பந்தயம் கட்டு. வயலையும், வீட்டையும் பந்தயமாக வை. பதிலுக்கு அவர்களிடம் நூறு பொன் கேள். உன் லயலும், வீடும் நூறு பொன்னைவிட அதிகம். எனவே அலர்கள் பந்தயத்திற்கு ஒத்துக் கொள்வார்கள். நான் நூறு வண்டிகள் இழுப்பேன். உனக்கு நூறு பொற்காககள் சன்மானமாகக் கிடைக்கும் என்று சொல்லிற்று.

அந்த குடியானலன் சந்தோஷமடைந்தான். எருதுகளின் பின்னால் லரிசையாக நூறு வண்டிகள் பூட்டினான். கிராமத் தார் வியப்பாகப் பார்த்தார்கள். அந்த நூறு வண்டிகளையும் என்னுடைய எருது இழுக்கும் என்று சொன்னபோது சிரித்தார்கள். பந்தயம் கட்டினார்கள். எருது சொன்னது போல், அதாவது புத்தர் சொன்னது போல பந்தயப்பணம் நூறு என்றும் தோற்றால், அலனுடைய வீடு, நிலமும் கிராமத் திற்கு எழுதி வைக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டது. பந்தயம் கையெழுத்தானதும் அந்தக் குடியானவன் எருதிடம் போனான்.

ஏய்... எருதே உனக்கு எவ்வளவு சோறு போட்டிருப்பேன். எத்தனை கொண்டாடியிருப்பேன். எப்படியெல்லாம் குளிப் பாட்டியிருப்பேன். உனக்கு நன்றி என்று ஒன்று இருந்தால் மிருகமே அத்தனை லண்டிகளையும் இழு. உடனே இழு என்று சொன்னான்.

எருது அசையவில்லை. சுளீர் சுளீர் என்று அடித்தான்.

எருது அசையவில்லை.

நாயே.. பேயே என்று திட்டினான்.

எருது அசையவில்லை.

ஊர் மக்கள் சிரித்தார்கள் அலனை முட்டாள் என்றார்கள். அவன் நிலத்தையும், வீட்டையும், வாங்கிக் கொண்டு அவன் பந்தயத்தில் தோற்றுவிட்டதாக அறிவித் தார்கள். குடியானவன் நொந்துபோனான். தனியே வந்து அழத் துவங்கினான்.

எருது வந்து அவன் காலை நக்கிற்று. அலன் எழுந்து இப்படி செய்து விட்டாயே என்று புலம்பினான்

என்னை இதமான வார்த்தைகளால் இழுத்துப்போ என்று சொல்லியிருக்கக்கூடாதா நீ கோபித்துக்கொண்டு கெட்ட வார்த்தைகளை இரைத்ததும் நான் மனம் கலங்கி விட்டேன். என்னால் வண்டி இழுக்க முடியவில்லை. இப்போது உனக்கு உதவி செய்வது என்று தீர்மானித்துவிட்டேன். இந்தமுறை ஊர் மக்களிடம் போய் ஆயிரம் வண்டிகளை இழுப்பேன் என்று சொல் என்னையும், உன்னையும் பணய மாக வை. பதிலுக்கு அவர்கள் நிறைய காசு கட்டுவார்கள். இந்தமுறை நிச்சயம் தோற்பாய் என்று அதிகப்படியான பந்தயப்பணம் வைப்பார்கள். அதை அத்தனையும் எடுத்துக் கொள். நான் இருக்கிறேன். ஆனால், ஞாபகம் வைத்துக் கொள். முரட்டுத்தனமாகப் பேசாதே. இதமாகப் பேசு என்று எருது சொல்லியது.

அவன் சரியென்று சொன்னான். சந்தைக்குப் போனான். உரத்த குரலில் ஆயிரம் வண்டிகளைத் தன் எருது இழுக்கும் என்று சொன்னான். ஊர்மக்கள் அவன் தோற்றுப்போவான் என்று தெரிந்து ஆயிரம் வண்டிகளைக் கொண்டு வந்து பூட்டினார்கள்.

கூட்டம் மொத்தமும் கவனித்தது. தோற்றுப்போகப் போகிறான் அவனை யார் அடிமையாகக் கொள்வது என்று சொல்லி பல பேரும் பணம் பந்தயம் கட்டினார்கள். பண மூட்டைகள் ஒரு ஓரமாக வைக்கப்பட்டன.

இவன் எருதிற்கு அருகே போய், அதாவது புத்தருக்கு அருகே போய் ஐயா, நான் உமக்கு நிறைய செய்திருக்கிறேன். இப்பொழுது வறுமையில் இருக்கிறேன். எனக்கு உதவி செய்யக்கூடாதா! நீங்கள் உங்கள் வலிமையான உடலை அசைத்து மெல்ல நடந்தீர்கள் என்றால் இந்த ஆயிரம் வண்டியும் பின்னால் வரும். இதனால் எனக்கு நிறைய லாபம் கிடைக்கும். நான் சந்தோஷமாக வாழ்வேன். உங்களையும் நல்லபடியாகக் காப்பாற்றுவேன். நீங்கள் தயவு செய்து என் பொருட்டு நடக்க வேண்டும் பிரபுவே என்று கேட்டுக்கொள்ள எருது மூச்சிழுத்து, உடம்புத்திமிறி வண்டிகளை இழுத்துக்கொண்டு சர்வ சாதாரணமாக நடந்தது. ஆயிரம் வண்டிகளும் பின் தொடர்ந்தன. வெகு தூரம் வரைபோய் எருது நின்றது.

ஊர்மக்கள் திகைத்தார்கள். ஓடிவந்து குடியானவனைப் பாராட்டினார்கள் பந்தயப்பணத்தை அவனிடமே கொடுத்தார்கள். அந்தக் குடியானவன் பணக்காரனானான்.

இந்தக் கதையிலிருந்து என்ன தெரிகிறது தேவி.''

ராஜராஜி பணிவாகக் கேட்டாள்.

பஞ்சவன்மாதேவி கண்களில் நீர் துளித்தது.

"சொல். சொல்தான் முக்கியம். பேச்சுதான் மனிதர்களுக்கு அடிப்படை அதுதான் உறவு. நிர்ணயம். அதுதான் உற்சாகம் கொடுக்கின்ற மருந்து. அதுதான் உத்வேகத்திற்கு உறுதுணையான மூலிகை. அதுதான் உறவைப் பலப்படுத்துகின்ற விஷயம். அதுதான் ஒரு ஊர் மக்கள் ஒரு தேசத்தைக் கட்டிக் காப்பாற்றுகின்ற விஷயம். இங்கு கடிந்துகொள்வதில் லாபமில்லை. வார்த்தைகள் இரைப்பதில் தலறுகள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. அதனால் வெறும் எதிர்ப்பு ஏற்படத்தான் வாய்ப்பு இருக்கிறது. எந்த நிலை ஏற்பட்டாலும் மிருதுவாய் மரியாதையாய், பணிவாய், கம்பீரமாய் பேச ஒருவர் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படி பேசினால் வெற்றி நிச்சயம்.''

"ஆமாம் தாயே.''

"இந்தக் கதையை நீ இராஜேந்திரருக்கு சொல்லக் கூடாதா..''

ஒரு சிறிய இடைவெளிக்குப்பிறகு காஞ்சிபுரத்து தலைக் கோலியும், தேவரடியாருமான ராஜராஜேஸ்வரி தொண்டையைச் செருமி பேச ஆரம்பித்தாள்.

அவள் பேச்சை சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவரின் பெருமதிப்பிற்குண்டான மனைவி பஞ்சவன் மாதேவி எதிரெதிரே உட்கார்ந்து முழுமனத்தோடு செவிமடுத்தாள்.

"அம்மா திருவொற்றியூர் பாடி வீட்டில் இரண்டு வருடங்கள் தங்கியிருந்த இராஜேந்திரர் காஞ்சிபுரம் போயிருக்க மாட்டாரா. அங்கு அதிக அளவில் இருக்கின்ற புத்த பிட்சுக்களைச் சந்தித்திருக்க மாட்டாரா. அப்படி சந்தித்திருந்தால் புத்த ஜாதகக் கதைகளைப்பற்றி பேச்சுவராமல் இருக்குமா ஒரு ஜாதகக் கதையைக் கேட்டாலே போதும். இருக்கின்ற அத்தனை கதைகளையும் கேட்க வேண்டுமென்ற ஆவல் ஏற்படும். நமது சக்ரவர்த்தியின் திருமகனார் இரண்டாவது

புதல்வி அம்மங்கையார் மயங்கியது ஜாதகக் கதையில்தானே. அதைக் கேட்பதற்கு அடிக்கடி புத்த மடாலயம் போய் அங்கு முழுவதுமாக அந்தக் கதைகளைக் கேட்டு, அந்தக் கதைகளை மனதில் தேக்கி இவை என்ன சொல்கிறது என்று ஆராய்ந்து புத்தரின் கொள்கைகளைப்பற்றி புத்த பிட்கக்களோடு விவாதம் செய்து முழுமனதும், முழு புத்தியுமாய் அவ்வவா புத்த மதத்தில் சேர்ந்தார்.

இன்றைக்கு காஞ்சிபுரத்தில் செல்வாக்கு மிகுந்த பெண் துறவியாக அவர் விளங்குகிறாரே எத்தனை ஆதுரச் சாலைகள். போன வருடம் கூட திருமயிலையில் பெண்களுக் கென்று தனி ஆதுரச்சாலை திறந்தாரே. பேறு காலத்திற்குத் தாய் வீட்டிற்குப் போகமுடியாதவர்கள் இங்கு வந்து அமர்ந்துவிடுங்கள் என்று பறையடித்து அறிவிக்கப்பட்டிருக் கிறதே. தாயும், சேயும் சரியாகப் பிரித்துக் கொடுப்பது எங்கள் கடமைகளில் ஒன்று என்று அந்த ஆதுரச்சாலைகளில் உள்ளவர்கள் சத்தியம் செய்திருக்கிறார்கள்.

சைவர்கள் அதிகம் வாழும் திருமயிலை. வைணவர்கள் அதிகம் வாழும் திருவல்லிக்கேணி. இந்த இரண்டு கிராமங் களும் அருகருகே இருக்கின்றன. ஆனால், அங்கு ஒரு புத்த விகாரத்தின் தோட்டத்தில் மிகப்பெரிய கல் கட்டடம் கட்டி மகளிருக்கான ஆதுரச்சாலை நிறுவியிருக்கிறார். பதிலுக்கு திருமயிலை மாயிலட்டிகள் என்ன செய்தார்கள் தெரியுமா. மாதேவடிகளின் நீர்ப்பந்தல் என்று சொல்லி திருவல்லிக் கேணிக்கும், திருமயிலைக்கும் இடைப்பட்ட இடங்களில் மூன்று நீர்ப்பந்தல் அமைத்திருக்கிறார்கள். வயதானவர்களும், பெண்களுக்கும் அந்த நீர்ப்பந்தல் ஒன்றில் அன்னதானம் செய்கிறார்கள். ஜாதகக் கதைகள் தான் என்னைப் பக்குவப் படுத்திற்று என்று மாதேவடிகளார் மக்களிடையே சொல்லி வருகிறார். மயிலை திருவல்லிக்கேணி மக்களும் புத்தர் ஜாதகக் கதை என்றால் என்ன என்று விசாரிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

தீவிரமாய் யோசித்த பஞ்சவன்மாதேவி சட்டென்று தலைநிமிர்ந்து கேள்வி கேட்டாள்.

“ஏன் ராஜராஜி காஞ்சிபுரத்தில் பௌத்த குடும்பங்களும் பிட்கக்களும் அதிகமோ.”

“மற்ற ஊர்களைக் காட்டிலும் ஓரளவு அதிகம்தான். ஆனால் பெரும்பான்மை வகித்துவிடவில்லை. சனாதன

தர்மத்தினரே அதிகம். அதில் குறிப்பாய் சைவமதத்தினர் அதிகமாக இருக்கிறார்கள். வைணவர்கள் அடக்கமாக வாழ்கிறார்கள். சாக்த உபாசனை செய்கிறவர்கள் சற்று கூடுதலாக இருக்கிறார்கள். காஞ்சியின் நடுமையம் காமாட்சி அம்மன் கோவில்தான் இங்கே ஸ்ரீசக்ர வழிபாடுதான் முக்கியம். ஆனால், அந்தக் கோவிலுக்கு வைணவர்கள்கூட வந்து போவதுண்டு. காஞ்சிபுரத்தில் மிகப்பெரிய ஆதுரச்சாலையும் சகலவிதமான கடிகைகளையும் பௌத்தர்கள் ஆரம்பிப்பதால் அதில் சேருவதற்கு பல திக்கிலிருந்தும் மாணவர்கள் வருகிறார்கள். அனேகமாய் ஈழத்திலிருந்தும், கங்க தேசத்திலிருந்தும் மாணவர்கள் வந்து சேர்ந்திருக்கிறார்கள். கடாரத்திலிருந்தும் சில மாணவர்கள் மஞ்சள் நிறமாய் சிறிய கண்களுடனும் சப்பை மூக்குடனும் ஒரு வினோதமான தோற்றத்தோடு கடிகைக்குள் வலம் வருகிறார்கள். அவர்களைப் பார்க்க ஆரம்பகாலத்தில் பெரிய கூட்டம் வந்தது. இப்பொழுது சகஜமாகிவிட்டது."

"அடியே.. மிக கெட்டிக்காரியாய் இருக்கிறாயேடி. ஏகப்பட்ட விவரங்கள் சொல்கிறாய்."

"அம்மா எனக்கு ஆர்வம் அதிகம். என்னைப் போல நீங்கள் பல தகவல்களைச் சேகரிப்பவர்கள். பல விஷயங்களைத் தெரிந்துகொள்ளும் ஆவலுள்ளவர்கள் என்று நான் அறிவேன். உங்களோடு சிறிது காலமாவது வாழவேண்டுமென்ற ஆசை உண்டு."

குரல் குழைய ராஜராஜி பேசினாள்.

"என்னடி இது. எதற்கு உணர்ச்சிவசப்படுகிறாய். எங்கெங்கோ இருந்த இருவரை இறைவன் கொண்டு வந்து தஞ்சையில் சேர்த்திருக்கிறான். இனி நீயும், நானும் எதிரும் புதிருமடி என்றுதான் இருக்கப் போகிறோம்."

"ஏன் தேவி அப்படி பேசுகிறீர்கள். எதிரும்புதிருமாய் இருப்பதற்காககவா நான் இங்கு வந்திருக்கிறேன். என்மீது உங்களுக்குச் சந்தேகம் போகவே இல்லையே. எப்போதுமே ஒரு கேள்விக்குறியோடுதான் என்னைக் கவனிப்பீர்களா."

"ஆமாம். ராஜராஜேஸ்வரி. சில விஷயங்களில் என்னைக் காட்டிலும் நீ துரிதமாகவும், தெளிவாகவும் இருக்கிறாய். அது மட்டுமில்லாமல் எனக்கு வயதும் ஆகிவிட்டது. உன்னைக்

கொண்டுபோய் அரசருக்குப் பக்கத்தில் வைக்கப் போகிறேன்.''

“அதுவும் கவலையாக இருக்கிறது.''

“என்ன. சக்ரவர்த்தியை எப்படி மயக்குவது என்றா.''

“ஏன் தேவையில்லாது பேசுகிறீர்கள்.''

ராஜராஜியின் குரலில் ஒரு சீற்றம் இருந்தது.

“அரசருக்கு கெட்டிக்காரப் பெண்களைக் கண்டால் பிடிக்கும். தெளிவாகச் சிந்திக்கின்ற பெண்களைக் கண்டால் எந்த ஆண்களுக்கும் விருப்பம். உனக்குப் பேசத் தெரியும். செய்திகளைச் சொல்ல தெரியும். எதிர்காலம் பற்றி அனுமானிக்கத் தெரியும். இறந்த காவத்தை அடுக்கடுக்காய் நினைவு கொள்ளத்தெரியும். இந்த விஷயங்களைச் சீராக எடுத்துக்கொடுக்க உன்னால் முடியும். அப்படிப்பட்ட பெண்ணை ஆளுமை செய்கின்ற அதிகாரமுள்ள எல்லா ஆணும் விரும்புவான். சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ ராஜராஜத்தேவர் உன்மீது காதல் கொண்டாலும் நான் ஆச்சரியப் படமாட்டேன்.''

“ஹா.. எங்கே சக்களத்தியாக வந்துவிடுவாளோ என்ற பயம் வந்துவிட்டது உங்களுக்கு. இப்பொழுதே ஒன்று சொல்லிக் கொள்கிறேன். நான் சக்ரவர்த்தி ஸ்ரீ இராஜராஜத்தேவர் மீது எந்த நாட்டமும் இல்லாதவள். அவரைச் சக்கரவர்த்தியாகவே மதிப்பவள். மற்றபடி வேறு எந்தச் சிந்தனையும் இல்லாதவள்.''

''அப்படியா, அப்படியெனில் உன் உள்ளத்தைக் கவர்ந்தவர் யார்.''

“நான் ஒருவரை வேறொரு இடத்தில் சந்தித்தேன். நான்கு நாட்கள் அவரோடு பயணப்படும்படியாக நேர்ந்தது. தற்காப்புக் கலையில் ஒரு குறிப்பிட்ட விஷயம் பற்றி அவர் அந்த வழியில் போதிக்கவும் செய்தார் அவர் விடைபெறும் போதுதான் அவர் சாதாரண ஆளில்லை. சோழ அரசியலிலே முக்கியப் பங்கு வகிப்பவர் மிக ஆளுமையுள்ளவர் என்று தெரிந்தது.''

“என்ன சொல்கிறாய் ராஜராஜி.''

"என்னுடைய ஜாதகத்தில் ஏழாமிடத்திற்குரிய கிரகம் குரு. அவர் பதினொன்றில் அமர்ந்திருக்கிறார்."

"இதுவேறு கற்று வைத்திருக்கிறாயா."

"எனக்கு நெல்முனையளவும் இந்த ஜாதகம்பற்றித் தெரியாது. ஜோதிடம் பற்றித் தெரியாது. ஏழாமிடம் களத்திரம் என்று சொல்லப்படுகிறது. அந்த இடத்திற்குரியவன் குருவாக இருப்பின் அவன் பதினொன்றில் இருப்பின் அந்தப் பெண்ணுக்கு கணவன் அந்தணனாக இருப்பான் என்று சொல்லப்படுகிறது."

"அடியே.. என்னடி சொல்வ வருகிறாய்."

"நீங்களே யோசித்துக் கொள்ளுங்களம்மா நான் விடைபெறுகிறேன்."

"யாரது."

பஞ்சவன்மாதேவி எழுந்து கைதட்டினாள்.

உள்ளுக்குள் தடதடவென்று பாய்ந்து உருவிய வாட்களோடு அதிகாரிச்சிகள் வந்தார்கள்.

இவ்வளவு வேகமாக பஞ்சவன்மாதேவி கை தட்டினால் பெரும் ஆபத்து என்றுதான் அர்த்தம்.

அறையின் வேறு பக்கத்திலிருந்து முத்தான பொன்நங்கை வேகமாக வந்தாள்.

அவர்கள் வந்த வேகத்தைப் பார்த்து ராஜராஜி மெல்ல துணுக்குற்றாள். பிறகு மெல்ல சிரித்தாள்.

"என்னைக் கைது செய்து என்ன செய்வதாக உத்தேசம் தாயே." என்று மிருதுவாகக் கேட்டாள்.

"யாரை மனமென்னும் சிறைக்குள் வைத்திருக்கிறாய் என்று சொல்லாமல் உன்னை விடுவிப்பதாய் இல்லை.' என்று பஞ்சவன்மாதேவி உரக்கச் சொல்ல அங்கு விளையாட்டாகத்தான் நடந்து கொண்டிருக்கிறது என்று அதிகாரிச்சிகள் தெரிந்துகொள்ள வாளை உறையில் போட்டார்கள். விலகி நின்று கொண்டார்கள்

"என்னை விரட்டிப்பணிய வைக்க வேண்டுமென்று நினைக்கிறீர்கள். எனக்குப் பிடிவாதம் பிடிக்க ஆசைதான் ஆனால், நீங்கள் இட்ட பணிகளை உடனடியாகச் செய்ய

வேண்டும். அதற்காக இப்பொழுது சொல்லி விடுகிறேன். பிரம்மராயரின் மூத்தகுமாரரும் சோழதேசத்தின் மிகப்பெரிய பதவிகளை வகிக்கப் போகிறவரும் சேரதேசத்து காந்தளூர்ச் சாலை கடிகையில் முதல் மாணவனாகத்தேறி தாமிர கேயூரங்களை புஜங்களில் அணிந்தவரும், அந்தணரும் கருவூர்த்தேவருக்கு மிக நெருக்கமானவருமான அருண்மொழி பட்டரை நான் நேசிக்கிறேன்.

"அப்படியா.. அருண்மொழிபட்டன்..?"

"தெரியவில்லை தாயே. இந்த இடத்தில் எவ்வளவு கெட்டிக்காரத்தனம் இருந்தாலும் பெண்கள் பலவீனமான வர்கள். ஆண்கள் உறுதியானவர்கள் அதுவும் அரசியல் பேசும் இளைஞர்கள் அநியாயத்திற்கு ஆணவம் மிக்கவர்கள். கடைசி வரையில் என்னை நேசிப்பதாகவோ, நேசிக்க முயற்சிப்பதாகவோ அவர் வெளியே சொல்லவில்லை. எந்தச் செய்கையும் காட்டவில்லை. ஆனால், ஒரு பலாமரத்தில் தன்னுடைய குத்துவாளால் ராஜராஜி என்று செதுக்கி பெரிய குமுதமலர் ஒன்றை வரைந்திருக்கிறார். இதை என்ன வென்று எடுத்துக்கொள்வது என்று எனக்குத் தெரியவில்லை."

குரலில் சோகம் இழையோட ராஜராஜி சிரித்தாள்.

பஞ்சவன்மாதேவி வாய்விட்டுச் சொன்னாள்.

"ஆஹா.. இறைவனின் கருணையைப் பார்த்தாயா, அவர் உன்னை மிகச்சரியான நேரத்தில் தஞ்சைக்கு அனுப்பியிருக் கிறார். இங்குதான் இனி அருண்மொழிப்பட்டனுக்கு வேலை. அருண் மொழிப்பட்டனின் தந்தையான பிரம்மராயரிடம் எந்தப் பாதுகாப்புமில்லாத தளிச்சேரி பெண்கள் இல்லத்தி லேயே தான் தங்குவதாக நேற்று மாலை பேசி அனுமதி வாங்கியிருக்கிறார். இன்று இரவு சக்ரவர்த்தி அவர்கள் தங்க அருண்மொழிப்பட்டரும் உடனிருக்க சாவூர் பரஞ்சோதியும் வந்து சேர்ந்தால் தளிச்சேரி குடியிருப்பு மொத்தமும் களை கட்டி விடும். ஒருவேளை அரசர் இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்து தங்கினால் வேறுயாரேனும் வந்து கலந்து கொள்ளவும் கூடும்.

திருவல்லத்திலிருந்து இராஜேந்திரரும், பரவை நாச்சியாரும்கூட வந்துவிடலாம். இராஜேந்திரர் வந்தால் மெய்க்காவல்படை இரட்டிப்பாகும். அப்போது பிரம்மராயர் வந்து கலந்துகொள்வார் சோழ சேனாதிபதியான

கிருஷ்ணன்ராமன் பிரம்மராயர் வந்ததும், பழுவேட்டரை யரும், ஈராயிரப் பல்லவரையரும் வேறு சிலரும் வந்துவிடு வார்கள். சிற்பிகளில் பெரியவரான குஞ்சரமல்வப் பெருந்தச் சரும் வந்துவிடுவார். அவர் வந்தால் முதன்மைச் சிற்பிகள் அனைவரும் பங்கு கொள்வார்கள் அதற்குப்பிறகு இது மாபெரும் பொதுக் கூட்டம்தான்."

"இது உங்கள் அனுமானமா. இல்லை இப்படி நடக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களா."

"சில விஷயங்களைப் பேசித் தீர்த்தேயாக வேண்டும் ராஜராஜி. குறிப்பாய் இராஜேந்திரரும், சக்ரவர்த்தியும், சிற்பி களும், அடிமை வீரர்களும், நமது மறவர்களும், தேவரடி யார்களும் என்று பலபேரும் மனம்விட்டுத் தெளிவாய் பேச வேண்டிய அவசியமான ஒரு காலகட்டம் வந்துவிட்டது. என் தேவை இது. என் நிலை இது என்று தெள்ளத்தெளிவாக ஒரு இடத்திற்கு வந்தோமென்றால்தான் இந்த வேலை சரியாகி விடும்"

"ஆமாம். நீங்கள் சொல்வது புரிகிறது பஞ்ச பாண்டவர் களுக்கு நடுவேயுள்ள பிரச்சினையை.. கிருஷ்ணர் இப்படித் தான் தீர்த்தார் என்று சொல்லப்படுகிறது."

"அடிசக்கை. இன்னொரு கதை சொல்லப் போகிறாயா."

"அவசியமென்றால் இப்பொழுதே சொல்கிறேன்."

"இப்பொழுது வேண்டாம். இன்னும் தாமதம் செய்யாதே. தளிச்சேரிக்குப் போ. ஒருவேளை அங்கு அருண்மொழி இருக்கக் கூடும். நீயும் அருண்மொழியும் மனம் விட்டுப் பேசக்கூடிய கால கட்டமும் வந்துவிட்டது என்று நினைக் கிறேன்."

சட்டென்று ராஜராஜி முகம் சிவந்தாள்.

முகத்தை வலதுபக்கம் திரும்பிக் கொண்டு ஜன்னல் வழியே வேறெங்கோ பார்த்தாள். மெல்ல பஞ்சவன்மாதேவி அவள் முகத்தைத் தன் பக்கம் திருப்பினாள்

"என்ன. கண்ணில் ஏன் சட்டென்று ஒரு கலக்கம் வந்துவிட்டது."

"இதுவரை இதை நான் யாரோடும் பகிர்ந்து கொள்ள வேயில்லை. உங்களோடுதான் பகிர்ந்து கொண்டேன். நீங்கள்

மிகச்சரியானபடி என் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தினீர்கள். அங்கு அருண்மொழி இருப்பார் என்று நான் நினைக்கிறேன். அப்படியிருப்பின் அது எனக்கு நல்லதாகத்தான் முடியும்."

"அருண்மொழிக்குத் திருமணமாகிவிட்டதல்லவா. அவருக்கு அந்தணப்பெண்ணை மணமுடித்து விட்டார்களல்லவா."

"ஆமாம். பிரம்மராயரின் மனைவிக்கு நெருங்கிய உறவு என்று அந்தப் பெண்ணைச் சொல்கிறார்கள். இப்பொழுது பேறுகாலத்திற்காக அவள் தாய்வீடு போயிருக்கிறாள்."

மெல்லிய குரலில் ராஜராஜி பஞ்சவன்மாதேவியிடம் சொன்னாள்.

"சரி. உன்னுடைய எண்ணம் என்ன ராஜராஜி. அருண்மொழியை மணந்து கொள்வதா அல்லது வெறுமனே சல்லாபித்துவிட்டு தள்ளிப்போய் விடுவதா."

அத்தனை நேரம் உறுதியாகவும், தெளிவாகவும் பேசிக்கொண்டிருந்த பெண் சட்டென்று தலைகவிழ்ந்து கொண்டாள். மூக்கு உறிஞ்சினாள். நிமிர அவள் கண்கள் கலங்கி கன்னத்தில் நீர் இறங்கியது.

"ஆக, பெண்ணே உனக்கும் ஒரு பலவீனமான இடம் இருக்கிறதல்லவா."

பஞ்சவன்மாதேவி உற்றுப்பார்த்தாள். மெல்ல சிரித்துக் கொண்டாள். அவள் தலையைத் தடவி விட்டாள்.

"இந்தப் பலவீனம்தான் நம்மை ஆட்டிப் படைக்கிறது ராஜராஜி. ஆண்களுக்காக கிறங்கிப்போய் அவர்கள் காலடியில் கிடக்க வேண்டுமென்று ஆசைதான் நம்மில் பலபேர் வாழ்க்கையை மேலும் கீழுமாய் அலைக்கழிக்கிறது ராஜராஜி. காதலிக்க வேண்டுமென்றும், காதலிக்கப்பட வேண்டுமென்றும் ஆசைப்படுகிற பெண் மிகுந்த பிரச்சினைகளைச் சந்திக்கிறாள். பிரம்மராயர் வீட்டுப் பிள்ளையை நீ வளைத்துப் போட நினைத்தால் அது எளிதாக முடியாது. பிரம்மராயரும் மற்ற சேனாதிபதிகளும் என்ன என்று பார்ப்பார்கள். சக்ரவர்த்தி வரையிலும் இந்த விஷயம் போகலாம். எனவே ஒவ்வொரு அடியும் மிகக் கவனமாக மிகத் திடமாக எடுத்து

வைத்த பிறகே நீ இதுபற்றிய முடிவான முடிவுக்கு வரவேண்டும். நான் சொல்வது புரிகிறதா ராஜராஜி.

தலைக்கோலியாய் நடனமாடுவதையே வாழ்க்கையாகக் கொண்ட தேவரடியாரான நீ, குடும்பம் என்ற விஷயத்தை, அதுவும் அரசியல் சார்ந்த ஒரு குடும்பத்தில் பிள்ளையை மணப்பதென்றால், அவனுக்கு வாழ்க்கை முழுவதும் துணை யாக இருப்பதென்றால் அதற்கு பலதையும் நீ இழக்கக்கூடும். சிலசமயம் உன்னை உள்ளே வரவொட்டாமல் அவர்கள் துரத்துவார்கள். உன்னைப் பற்றி கடுமையாக ஆராய்வார்கள். குறை கண்டுபிடிக்க முயல்வார்கள். சொக்கத்தங்கம்தானா என்று உரசிப் பார்ப்பது போல உன்னைக் கதறடித்துப் பார்ப் பார்கள். ஆனால், ராஜராஜி நீ தேர்ந்தெடுத்த ஆண்பிள்ளை அற்புதமானவன். உன்னுடைய புத்திக்கு இப்படிப்பட்ட கணவன்தான் நன்றாக இருக்கும். வெறும் குடிகார தடியனை யும், கோபமுள்ளவனையும், யுத்த வெறியனையும், காசு காசு என்று பேசுகின்றவனையும் திருமணம் செய்து கொள்வதை விட வலிமையும், எளிமையும் நிறைந்த அருண்மொழிப் பட்டன் அற்புதமானவன். ஆனால், அருண் மொழிப்பட்டன் அசைவுகள் சோழதேசத்தின் அசைவுகளாகக் கருதப்படும். ராஜேந்திரருக்கு பிரம்மராயராகப் போகிறவனுக்கு நீ மனைவி யாகப் போகிறாய். அப்படியானால் சோழ தேசத்தின் சேனாதிபதிக்கு மனைவியாகப் போகிறாய். எனவே நீ பொறுப்பு மிக்க ஒரு இடத்திற்குக் குறி வைக்கிறாய் என்பதை மற்றவர்கள் உன்னைவிட வேகமாகப் புரிந்துகொள்வார்கள் எனவே முன்னெப்போதைக் காட்டிலும் நிதானமாகவும், தெளிவாகவும் இரு. உன் உணர்ச்சிகளை ஒரு கட்டுக்குள் வைத்திரு. வெளியிடுதலை மிக அழகாகவும், நேர்த்தியாகவும், திடமாகவும் செய். ஒருவேளை ராஜராஜி இந்த முயற்சியில் நீ தோல்வியுற்றால்."

பஞ்சவன்மாதேவி மிருதுவாகப் பேசினாள்.

ராஜாஜி அவளையே வெறித்துப் பார்த்துக் கொண் டிருந்தாள்.

"ஒருவேளை இந்த முயற்சியில் நீ தோல்வியுற்றால் ஒருகாலும் இடிந்து விடாதே. உன் தோல்வியின்மீது கால் வைத்து வெற்றியை நோக்கிப்போ. எது உனக்கு இல்லை யென்று மறுக்கப்பட்டதோ அந்த மறுக்கப்பட்டதையே மதித்து இன்னும் உயர வா. உன்னை அழித்துக்கொள்ள

நினைக்காதே. உன்னைப் போன்ற பெண்கள் ஒரு தேசத்திற்கு முக்கியம். உன்னைப் போன்ற பெண்கள் பலநூறு பெண் களுக்கு ஆதரவாக இருக்க முடியும். ஆறுதல் சொல்லமுடியும். உன்னைப் போன்ற பெண்கள் உன்னைப் போலவே பத்துப் பெண்களைத் தயார் செய்ய முடியும் எனவே ராஜராஜி உன்னை என் சிவன் செய்ய முடியும். எனவே ராஜராஜி உன்னை என் சிவன் ஆசிர்வதிக்கட்டும்.'' தன் இரண்டு கைகளையும் தூக்கி அவள் தலையில் வைத்தாள்.

தாயைப் போன்ற வயதுடைய பஞ்சவன்மாதேவி ஆசீர் வாதத்திவ் ராஜராஜி நிவைகுலைந்தாள். பெரும் குரலெடுத்து அழத்துவங்கி அவளை இறுக்க கட்டிக்கொண்டாள்.

ராஜராஜியின் அணைப்பில் பஞ்சவனமாதேவி ஆசீர் வாதத்திவ் ராஜராஜி நிவைகுவைந்தாள். பெரும் குரலெடுத்து அழத்துவங்கி அவளை இறுக்க கட்டிக்கொண்டாள்.

ராஜராஜியின் அணைப்பிவ் பஞ்சவன்மாதேவி திக்கு முக்காடினாள். மெல்ல அவளை இழுத்து அணைத்துக் கொண்டு அவளை நெஞ்சிவ் சார்த்திக் கொண்டு போதும் போதும் என்று ஆசுவாசப் படுத்தினாள். ராஜராஜி சட் டென்று சரியானாள். விவகினாள். விழுந்து வணங்கினாள்.

“வருகிறேன் அம்மா'' என்று கைகூப்பினாள். வேகமாக வாசல் நோக்கி நடந்தாள். உடம்பு சக்தி முழுவதையும் இழந்துவிட்டது போவ பஞ்சணையின் மீது பஞ்சவன்மாதேவி பொத்தென்று உட்கார்ந்தாள்.

அவளுக்கு அலனைப்பற்றியும் ஒரு கவவை வந்தது.

ஒருவேளை இந்தக் கோயிவ் கட்டும் முயற்சியிவ் ஏதேனும் குழப்பம் ஏற்பட்டு சக்ரவர்த்தி நீ வேண்டாம் விவகிப்போ, நாங்களே பார்த்துக்கொள்வோம் என்று சொவ்லிவிட்டால், உனக்குத் தோவ்வி வந்துவிட்டாவ் நீ தாங்குவாயா பஞ்சவன்மாதேவி என்று கேள்வி வந்தது.

பயத்திவ் பஞ்சவன்மாதேவி கண்கள் மூடிக் கொண்டாள். வெளியே ஆட்கள் வேகமாகப் படியேறிவரும் சப்தம் கேட்டது.

# 123



வந்தவர்கள் பலபேர் பெண்கள் இரண்டு ஆண்களும் வந்திருந்தார்கள் அவர்கள் உள்ளே நுழைய அத்தனை பேரும் தளிச்சேரி பெண்டுகள். இசையோடும், நடனத்தோடும் சம்மந்தப்பட்டவர்கள் என்று அவர்களின் முகவிலாசங்கள் சொல்லின.

பஞ்சவன்மாதேவி எழுந் திருந்து கைகூப்பினாள். 'வருக.. வருக..'' என்றாள்.

அரண்மனையை ஆவ லோடு நோட்டமிட்டார்கள். பஞ்சவன்மாதேவியைப் பார்த்து விழுந்து வணங்கினார் கள்.

பஞ்சவன்மாதேவியை விட வயதில் பெரியவரான வீணை ஆதிச்சன் முன்பற்கள் தெரிய சிரித்து கைகூப்பி னார். தன் பெயரை உரக்கச் சொன்னார்.

"இன்று இரவு எங்கள் குடியிருப்புக்கு சக்ரவர்த்தி பெருமானார் வருகை தர இருக்கிறார். அப்படி வரும்பொழுது நீங்கள் வந்தால்தான் எங்களுக்குப் பெருமை. எங்களில் ஒருவரான நீங்கள் அரண்மனையில் மிக உயர்ந்த இடத்திலே இருக்கிறீர்கள். அரசருக்கு அருகிலே இருக்கிறீர்கள். அப்படிப் பட்ட நீங்கள் வராது வேறு வேலையாக எங்கேயும் போய் விடுவீர்களோ என்ற கவலை எங்களுக்கு வந்தது. அதனால் உங்களையும் வரச்சொல்லி அழைப்பதற்காக திடீரென்று நினைத்துக்கொண்டு ஓடோடி வந்தோம். முறையாக ஓலை அனுப்பியோ, ஆள் அனுப்பியோ உங்களிடம் வந்திருக்க

வேண்டும். அதிகாரிச்சிகள் மறுத்தபோது கூட நாங்கள் முன்னேறி வந்துவிட்டோம். எங்களை மன்னிக்க வேண்டும். இன்று இரவு எங்களோடு வந்து விருந்தில் கலந்துகொள்ள வேண்டும்."

"அப்படியா. விருந்து நடத்தப்போகிறீர்களா. நல்லது. உங்களில் பலர் மாமிச உணவுகள் சமைப்பதில் மிக வல்லவர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். குறிப்பாய் தொண்டை நாட்டுப் பக்கத்திலிருந்து வந்தவர்கள் மீன் சமைப்பதில் வல்லவர்கள் என்றும் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேன். விருந்து என்று சொன்னதுமே கலந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் பிறக்கிறது. ஆனால், இங்கே கோட்டைக்குள் பாண்டியவீரர்களின் ஹனுமந்த விவாசம் நாடகம் நடக்கப்போகிறது. பட்டமகிஷிகள் அருகேயிருந்து நான் பார்த்துக்கொள்ள வேண்டியது தான் முறை. எனவே நான் அங்கு வர இயலாது."

"நீங்கள் எங்களவர்களம்மா. நீங்கள் இல்லாது எப்படி சோபிக்கும்."

"நன்றாக இருக்கிறதே. அதற்காக சக்ரவர்த்தி இல்லாத போது அரண்மனையை விட்டுவிட்டு வரமுடியுமா. அதுவும் இங்கே ஒரு விழா நடக்கும்போது நானும் இல்லை. சக்ரவர்த் தியும் இல்லையென்றால் பட்ட மகிஷியார் வருத்தப்பட மாட்டாரா. அது தவறு. நல்லவர்கள், வல்லவர்கள், புதிய வர்கள் அதிகம் பேர் கலந்து கொள்வார்கள்."

"அப்படியா. யாரையம்மா சொல்கிறீர்கள்."

"சாவூர் பரஞ்சோதி இன்று மாலைக்குள் வந்து விடுவார் என்று சொல்லப்படுகிறதே."

"நாங்கள் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஒரு யவனருக்கும், தேவரடியாருக்கும் மகனாகப் பிறந்தவர் என்றும், தனிப்போரில் வல்லவர் என்றும், பெண்கள் மீது மிகுந்த பாசமும், மரியாதையும் உடையவர் என்றும் அவரைப்பற்றிச் சொன்னார்கள்."

"ஆமாம். சக்ரவர்த்தியார் இங்குள்ள தேவரடியார் களுக்கு நாயகமாகத்தான் சாவூர் பரஞ்சோதியை வரவழைத் திருக்கிறார்."

"யவனர் என்று சொல்கிறீர்களே. ஆனால் முரடராக இருப்பாரோ என்று ஒரு அச்சமும் எங்களிடையே இருக்கிறது."

"அவரை நான் நன்கு அறிவேன். உங்களுடைய ஆட்ட பாட்டங்களை ஒருகாலும், தடுத்து நிறுத்தமாட்டார். மற்ற வர்கள் உங்களுக்கு இடையூறு செய்வாராயின் மெல்ல வந்து விலக்கிவிடுவார். வேசாக கடிந்து கொள்வார். அத்து மீறினால்தான் அவர் ஆபத்தானவர்.

எங்களைப் போன்றவர்கள் இவர்களுக்குத் துணையாக இருக்கும்போது இன்னொருவர் தேவைதானா."

ஆதிச்சன் மறுபடியும் காவிப்பல் தெரிய சிரித்தார்.

"அப்படியில்லை ஆதிச்சர் அலர்களே. நீங்களெல்லாம் முழு மனதாக நாடகத்தில், நாட்டியத்தில், கோவில் பணி செய்லதில் ஈடுபட்டிருக்க வேண்டுமென்பதுதான் எங்கள் விருப்பம். மாலைநேரம் இறைவருக்கு நீங்கள் வீணை வாசிக்க ஆரம்பிக்கும் போது உங்களையும் மறந்து வீணை வாசிக்க வேண்டுமென்பது தான் எங்களுடைய எண்ணம். அதற்குத் துணையாக இருப்பவர்களைத்தான் உங்களுக்கு அருகே அனுப்புவோம். உங்கள் வேலை இறைபணி. மேற்பார்வையும் அல்ல. பாதுகாலலும் அல்வ. அது எங்கள் பணி."

"வேறொருவரும் வருகிறார்கள் என்று கேள்விப் பட்டோம்."

"அப்படியா யார் அது."

பஞ்சவன்மாதேவி துணுக்குற்றாள்.

தனக்குத் தெரியாமல் யார் வரப்போகிறார்கள். இராஜேந் திரரா, சொல்லாமல் வருகிறாரா என்று சிந்தித்தாள்.

"அம்மா இராஜேந்திரருடைய அனுக்கியார் பரவையார் வருகிறார் என்று கேள்விப்பட்டோம்."

மெல்லியதாய் பஞ்சவன்மாதேவிக்கு முகம் மாறியது. ஆனால், சட்டென்று முகத்தை மலர்வாக்கிக் கொண்டாள்.

"அப்படியா.. தெரியாதே. எங்கிருந்து வருகிறார்."

"திருவல்வத்திலிருந்து வருகிறார். சக்ரவர்த்தி அலர்கள் எங்களோடு தங்கப் போகிறார் என்ற செய்தி திருவல்லத்

திற்குப் போக, அங்கிருந்து வண்டி கட்டிப் புறப்பட்டு விட்டார்கள் என்று சொல்கிறார்கள்."

அப்படியானால் இராஜேந்திரர். என்று உள்ளுக்குள் ஒரு கேள்வி எழுந்தது.

ஏன் இந்தப் பெண் இப்படி நாவாபுறமும் பறக்கிறது. என்ன காரணம். இராஜேந்திரர் சொல்லி வருகிறாளா. இல்லை வெறுமே வருகிறாளா ஒருவேளை நான் ராஜராஜியை சக்ரவர்த்திக்கு அருகே அனுப்பியது போல, அவனும் ஒரு பெண்ணை அனுப்ப வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறாரா. உளவு வேலையா நல்ல சோழதேசம். நல்ல கோயில் கட்டுதல்.

பஞ்சவன்மாதேவி சற்று அலுப்பாக தன் நிலையை உணர்ந்தாள்.

"முத்தான பொன்நங்கை இவர்கள் முதன்முதலாக இங்கே வந்திருக்கிறார்கள். வந்தவர்களுக்கு அதிரசம் கொடு. பால் கொடு. வீணை ஆதிச்சர் அவர்களே இப்போதைக்கு நீங்கள்தான் தலைவரைப்போல இருக்கிறீர்கள். இந்தாருங்கள்" என்று ஐம்பது காசுகள் கொண்ட ஒரு பையை எடுத்து, ஆதிச்சர் கைநீட்ட, அந்தக் கைகளில் பஞ்சவன்மாதேவி வைத்தாள்.

"பொன்நங்கை இவர்களுக்குப் பசும்பாலுக்கு எங்கே ஏற்பாடு செய்திருக்கிறாய்" என்று மறுபடியும் கேட்க, முத்தான பொன்நங்கைக்குப் புரிந்து போயிற்று.

"கீழே ஏற்பாடு செய்திருக்கிறேனம்மா. வாருங்கள். எல்லோரும் கீழே வாருங்கள். பஞ்சவன்மாதேவியாருக்கு வேறு சில வேலைகள் இருக்கின்றன." என்று சொல்ல, பெண்கள் மறுபடியும் அந்த அரண்மனையைச் சுற்றி நோட்டமிட்டபடியே கீழே இறங்கினார்கள்.

கூட்டம் போனதும் ஒரு அதிகாரிச்சி அருகே வந்தாள்.

"என்ன விமலை. என்ன வேண்டும்."

"அம்மா சேணியர்களும் ரத்தினத்தையர்களும் வந்திருக் கிறார்கள். உங்களைப் பார்க்க வேண்டும் என்று பிரியப்படு கிறார்கள்."

"எதற்கு..?"

"கோயில் வேலையில் அவர்களுக்கும் ஏதாவது பங்கு வேண்டுமாம்."

நன்றாக உடுத்திக் கொள்வதில் பஞ்சவன்மாதேவிக்கு விருப்பம் அதிகம். நல்ல உடை உடுத்துவதில் அவளுக்கு ஆசை உண்டு. உடைதான் ஒரு மனிதருடைய உள்ளக் கிடக்கையை வெளியே சொல்கிறது. உடையின் மூலம் தான் பேசமுடியும் என்ற நம்பிக்கை அவளுக்கு அதிகமிருந்தது. எனவே, எப்போதும் சேணியர்களின் தையற்காரர்களையும் சந்திப்பது என்பது வழக்கமாக இருந்தது. இப்போது எப்படி மறுப்பது என்று தெரியவில்லை. ஆனால், உள்ளே ஏதோ வொரு குடைச்சல், ஒரு பிடித்தமின்மை துருத்திக் கொண்டேயிருந்தது.

ஆனாலும் இப்பொழுது வேண்டாமென்றால் நாளை காலை வேறு வேலையில் சிக்கிக்கொண்டு இவர்களைப் பார்க்க முடியாமலேயே போய்விடும்.

"இப்பொழுது என்ன வேலை."

"எதுவுமில்லை."

"வரட்டும்"

அவள் சரியென்று தலையசைத்தாள்.

படியேறி பதினான்கு பேர் கொண்ட ஒரு சிறிய கூட்டம் ஒன்று வந்தது.

ஒரு மூட்டையை முன்னே வைத்து அவிழ்த்து விரித்தது. பல்வேறு வகையான துணிகள், புடவைகள், இடுப்புப் பாவடைகள், மேல்துணிகள், மார்புக் கச்சைகள் என்று பலதும் விரிக்கப்பட்டன.

"என்ன எப்படியிருக்கிறீர்கள் ஏதோ கேட்க வேண்டுமென்று சொன்னீர்களாமே."

"ஆமாம் அம்மா, மிகப்பெரிய கோயில் கட்டுகின்ற விஷயம் ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. அதில் எங்களுக்கு ஏதேனும் பங்கு உண்டா. நாங்கள் கோயில்பணி செய்ய லாமா. எவ்விதமாக கோயில்பணி செய்யலாம் என்று கேட்க விரும்பினோம். எங்களையும் கோயில் பணியில் கலந்து கொள்ள அனுமதியுங்கள் என்று சிரம் தாழ்ந்து கேட்டுக் கொள்கிறோம்."

அவர்கள் அத்தனை பேரும் எழுந்து நின்று வணங்கினார்கள்.

பஞ்சவன்மாதேவி மெல்லியதாய்ப் பதறினாள்.

“வேண்டாம். எழுந்திருங்கள் இந்த சோழ தேசத்திலுள்ள ஒவ்வொரு உயிருக்கும் இந்தக் கோயில் பணியில் கலந்து கொள்கின்ற முழு உரிமை உண்டு. இதற்கு அனுமதி கேட்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் உங்களுக்கும் பங்கு உண்டு என்பதை ஊரறியச் சொல்லதில் உங்களுக்குப் பெருமையிருக்கும் என்றும் எனக்குத் தெரியும். இன்னும் சில நாட்களுக்குள் சக்ரவர்த்தி கையெழுத்திடும் ஒரு ஓலை ஒன்று உங்களுக்குத் தரப்படும், கோயில் பணியில் நல்லவிதமாக நீங்கள் கலந்து கொள்ள வேண்டுமென்று அதில் அழைப்பு இருக்கும்.”

அவர்கள் சிவோஹம் என்று கைதூக்கி கைகூப்பினார்கள்.

“இந்தத் துணிகள் அனைத்தும் எங்கள் சார்பாக உங்களுக்குத் தரவிழைகிறோம்.” என்று அந்தத் துணிமூட்டையை அவள் காலடிக்கு நகர்த்தினார்கள்.

பஞ்சவன்மாதேவி சிரித்தாள்.

அங்குள்ள தையற்காரர்களை உற்றுப்பார்த்ததாள்.

ஐம்பது வயதான ஒரு கிழவன் அவள் பார்ப்பதைப் பார்த்து கைகூப்பினார்.

“அட... மாயன்தானே எப்படியிருக்கிறீர்.” என்று கேட்க, “மாயன் முன் வந்து காலைத் தொட்டு வணங்க முற்பட்டான்.”

பஞ்சவன்மாதேவி தடுத்து நிறுத்தினாள்.

“கண்கள் இடுங்கியிருக்கின்றனவே உடல் நலமில்லையா.”

“உடல் நலமாகத்தான் இருக்கிறது. கண்களில் பார்வை சற்றுக் குறைவாகி விட்டது. இடைவிடாது துணி தைப்பதால் இப்படி ஏற்பட்டிருக்கிறதென்று வைத்தியர் சொல்கிறார்.”

“எந்த வைத்தியரிடம் விசாரித்தீர்.”

“தஞ்சைப்புறம்படியில் பள்ளி அக்ரஹாரத்தில் ஒரு வைத்தியர் இருக்கிறார் அங்குதான் கண்களைக் காட்டினேன்.”

"உள்ளாலையில் உள்ள குந்தவையார் ஆதுரச்சாலையில் ஒரு பெண் வைத்தியர் உண்டு. கண்ணுக்கு சில சொட்டு மருந்துகள் விட்டவுடன் கண் நன்றாகத் தெரிகிறது. உள்ளுக் குள் ஒரு மருந்து தருவாள், அவளிடம் போய் கவனித்துவிட்டு வாரும். என்னுடைய இலச்சினையை அவளிடம் காட்டும்."

ஒரு ஓலை நறுக்கை எடுத்து தன்னுடைய இலச்சினையை அதில் அழுத்த புள்ளிபுள்ளியாய் சூலமும், புலியுமாய் ஒரு இலச்சினை விழுந்தது.

சூலம் தேவரடியாருடைய இலச்சினை. புலி சோழ அரசு இலச்சினை. அது பஞ்சவன்மாதேவியின் இலச்சினை என்று சகலருக்கும் தெரியும்.

ஓலையை வாங்கி மாயன் கண்ணில் ஒற்றிக் கொண் டான்.

"மிக நல்லது. மிக்க நன்றி" என்று வாய் குழறினான்.

மூத்தான பொன்நங்கை. மாயனோடு பஞ்சவன்மாதேவி தனியாகச் பேச விரும்புகிறார் என்று தெரிந்து மற்றவர்களை மெல்ல அப்புறப்படுத்தினாள்.

அவர்கள் அரண்மனைக்கு வெளியே வந்து தோட்டத்தில் உள்ள கற்பலகையில் அமர்ந்து கொண்டார்கள்.

விமலை என்ற அதிகாரிச்சி அருகே வந்து நின்று கொள்ள மாயனைக் கனிவோடு பஞ்சவன்மாதேவி பார்த்தாள்.

"எனக்கு சில உதவிகள் செய்ய வேண்டும் மாயன்."

"சொல்லுங்கள் அம்மா. பாவாடைக்கு அளவு எடுத்துக் கொள்ளச் சொன்னாலும் சரி, அல்லது பாவாடை அளவு நீங்களாக கொடுத்தாலும் சரி. உடனடியாக தைத்து விடு கிறேன். நானே வாங்கிக்கொள்ளட்டுமா. நீங்களே தருகிறீர் களா." என்று தன்னுடைய பணியிலேயே குறியாக இருந்தார்.

"இது தையல் வேலை சம்மந்தப்பட்டதல்ல. நீங்கள் தளிச் சேரி குடியிருப்புக்கு மாறவேண்டும். அங்கு அதிகம் பெண்கள் இருப்பதால் தையல் வேலைகள் அதிகம் இருக்கும். உங்களுக்கு மணிகள் வைத்துத் தைப்பதும், கற்கள் வைத்துத் தைப்பதும் நன்கு தெரியும். அவர்கள் உங்களோடு பேசவும், பழகவும் ஆர்வமாக இருப்பார்கள். நீங்கள் அங்கிருந்தபடி

அங்குள்ள சூழ்நிலைகளை உற்றுக் கவனித்து எனக்கு வந்து செய்தி சொல்ல வேண்டும்."

"புரிகிறதம்மா. நிச்சயம் செய்கிறேன்."

"இதுகுறித்து நீங்கள் வேறு யாரிடமும் பேசவேண்டாம்."

"மாட்டேனம்மா. என்னைக் கொன்றாலும் என் தொண்டைக் குழியிலிருந்து எந்த சப்தமும் வராது. சக்ரவர்த்தி அவர்கள் விசாரித்தாலும்கூட நான் சொல்லமாட்டேன்."

"மிக்க நன்றி மாயன். உங்களுக்கு சன்மானமாய் மாதம் ஒரு பொற்கழஞ்சு தரப்படும். செய்திகள் முக்கியமாக இருந்தால் அதற்காகவும் தனி சன்மானம் தரப்படும்."

"அம்மா நீங்கள் கொடுக்கின்ற வேலையில் எங்கள் கூட்டம் மிக அமைதியாகவும், சந்தோஷமாகவும் இருக்கிறது. சோழதேசம் வளமாக இருப்பதால் சோழதேசப் பெண்கள் நன்றாக உடுத்துகிறார்கள். அவர்கள் நன்றாக உடுத்துவதால் எங்களுக்குத் தொழில் மிக நன்றாக இருக்கிறது. தறியிலிருந்து புடவை அறுத்ததுமே காசாகிவிடுகிறது. ஏன் தறிக்குப் போவதற்கு முன்பே கூட காசு கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். நாங்கள்தான் வாங்க மறுக்கிறோம். தறியிலுள்ள புடவையைக் காசாக மாற்ற வேண்டுமென்று ஆவல் இருந்தால்தான் சீக்கிரம் வேலை செய்ய முடியும். பாவு போடுவதற்கு முன்பே காசு வந்துவிட்டால் மெல்ல பார்த்துக் கொள்ளலாம் என்றுதான் உள்ளுக்குள் தோன்றும். எனவே வேலைக்கு முன்னாலேயே காசு கேட்பதில்லை. தளிச்சேரி குடியிருப்பில் ஏதேனும் ஒரு மூலையில் நான் ஓலைக் குடிசை போட்டுக்கொண்டு இருந்துவிடுகிறேன்.'

"நல்லது. வீடு ஒதுக்கச் சொல்வீர்களோ என்று பயந்தேன்."

"இல்லையம்மா. அது தேவையற்றது. உண்ணவும். உறங்கவும் தான் குடிசை. மற்றபடிக்கு செய்யும் தொழிலெல்லாம் வெட்ட வெளியில்தான் செய்வோம். அங்கு ஒரு நல்ல மரமாகப் பார்த்து குடிசைப் போட்டுக் கொண்டால் போயிற்று அல்லது மேலே தட்டோலை போட்டுக் கொண்டால் போயிற்று. நான் பாவு போடுதலோ, தறி அடித்தலோ அங்கே செய்யப் போவதில்லை. அது அவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கும். வெறும் தையல் வேலை மட்டும் அமர்ந்து செய்யப் போகிறேன். சரிதானே அம்மா."

"ஆமாம் அதுதான் சரி. தறிகள் வடக்குப்பக்கம் இருக்கும் புறம் படியிலேயே இருக்கட்டும். பள்ளி அக்ரஹாரத்திலேயே உங்கள் கூட்டம் பெருகி வாழட்டும். வேறு ஏதேனும் என் உதவி தேவையா."

"உதவியா என்று தெரியவில்லை. ஒரு ஆலோசனையாக உங்களைக் கேட்கிறேன். ஒன்றாக இருந்த எங்கள் கூட்டம், பிளவுபட்டு விடுமோ என்று பயமாக இருக்கிறது."

"என்ன சொல்கிறீர்கள். எதற்கு உங்களுக்குள் பிளவு."

"அம்மா எங்கள் பிளவு இல்லை. ஒற்றுமையாக இருக் கிறோம். ஆனால், நாங்கள், கருமார், மரத்தச்சர், கல்தச்சர் எல்லோரும் ஒரே ஜாதி. நகை வேலை செய்பவர் கூட எங்களுடைய விராட் புருஷனுடைய பரம்பரைதான் எங்களுக்குள் பிணக்கு ஏற்பட்டு விடும் மாதிரி கருமார்கள் நடந்து கொள்கிறார்கள். எங்களில் ஐந்து பேர் இங்கிருந்து கிளம்பி கருமார்புரத்துச் சேரிக்குப் போய் எதற்காக இப்படி சலுகைகள் கேட்கிறீர்கள் என்று கேட்டோம். பெரிய சண்டையே வந்துவிட்டது. நாங்கள் செருப்பணிந்து கொண்டு பாவு போடமுடியுமா. ஈரப்பதத்தோடு நூல் சுருட்டி வைக்க முடியுமா. தலைப்பாகை அணிந்து கொண்டு எங்கே போவது. அப்பொழுது யார் மூட்டை தூக்குவது. யார் பல்லக்கு தூக்குவது என்றெல்லாம் கேட்டோம்."

"அடடா.. இது என்ன. இந்தச் சண்டை பல்கிப் பெருகிக் கொண்டே வருகிறதே."

"ஆமாம். அம்மா. அந்த நேரத்தில் இன்னொன்றும் நடந்தது."

"என்ன"

"அந்தணர்கள் எங்களை அழைத்து வீட்டில் உட்கார வைத்து பத்து முழம் துணி வேண்டும் என்று வாங்கிப் போயிருக்கிறார்கள். நாங்கள் கருமார்களைக் கேட்டது பற்றி சந்தோஷப்படுத்தி சந்தோஷமாகி உற்சாகப்படுத்துகிறார்கள். அதுவும் வேதனையாகத் தான் இருந்தது."

"நீங்கள் என்ன சொன்னீர்கள்"

"இது எங்கள் பிரச்சினை. துணிவாங்குவதோடு நிறுத்திக் கொள்ளுங்கள். இதில் தலையிடாதீர்கள் என்று சொல்லி விட்டோம்."

பஞ்சவன்மாதேவி நெடுமூச்செறிந்தாள்.

எங்கு போய் இந்தப் பிரச்சினை முடியுமென்று அவளுக்குப் புரியாமல் இருந்தது.

"சரி. நான் சொன்னவை ஞாபகமிருக்கட்டும். ரகசியமாக எனக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும். தகவல் அவசர மென்றால் அரண்மனைக்குத் துணி கொடுப்பது போல வந்து அதிகாரிச்சி மூத்தான பொன் நங்கை அல்லது விமலை இவர்களிடம் வெள்ளைப் பட்டில் முத்துக்கச்சு என்று சொல்லுங்கள் அவர்கள் உடனே உங்களை உள்ளே அனுப்பிவிடுவார்கள்."

"வெள்ளைப்பட்டில் முத்துக்கச்சு. வெள்ளைப் பட்டில் முத்து வைத்து தைத்தால் வெளியே ஒன்றும் தெரியாது. ஒரு ரகசியம் போல் இருக்கும். அப்படித் தானே அம்மா."

மாயன், பஞ்சவன்மாதேவியைத் தொடர்ந்து போய் சக்ரவர்த்தியின் மற்ற மனைவியருக்கு அளவெடுத்து குறிப் பெடுத்துக் கொண்டு வந்தான். அவர்கள் கூட்டத்தோடு கலந்து கொண்டான்.

பரவை இராஜேந்திரசோழனின் அணுக்கி ஏன், தஞ்சை யிலுள்ள தேவரடியார் வீடுகள் நோக்கி வருகிறாள் என்று பஞ்சவன்மாதேவி கவலைப்பட்டாள்.

சதாசிவாச்சாரியின் சிற்பி ஒருவனோடு இரண்டு குதிரை வீரர்கள் திருவல்லம் தாண்டி தஞ்சைக்குப் போக திருவல்லக் கோட்டை வீரர்களால் தடுத்து நிறுத்தப் பட்டார்கள். நீங்கள் யார் என்று விசாரிக்க, அவர்கள் தங்கள் கேயூரங்களைக் காட்ட திருவல்லத்துக் கோட்டை வீரர்கள் சமாதான மானார்கள். ஆனாலும் அந்த வீரர்களை நகரவிடவில்லை.

"எங்கே போகிறீர்கள். எங்கிருந்து வருகிறீர்கள். என்ன செய்தி" என்று கேட்க. அந்த வீரர்கள் பதில் சொல்ல முடியா மல் திண்டாடினார்கள்

"ஓ.. திருவல்லத்துக் கோட்டை வீரர்களான எங்களிடம் சொல்ல மறுத்தால் திருவல்லம் கோட்டையில் குடியிருக் கின்ற இளவரசர் இராஜேந்திரரிடம் பதில் சொல்லிவிட்டுப் போங்கள். அவரைச் சந்தித்துவிட்டு நீங்கள் மேற்கொண்டு பயணத்தைத் தொடரலாம்." என்று மடக்கித் திருப்பினார்கள். வீரர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடி

னார்கள். ஆனால், அந்தச்சிற்பி எங்கும் போகத் தயாராக இருந்தான்.

"நாங்கள் வரமறுத்தால்.. என்று அந்த வீரர்கள் முரண்டு செய்ய, "கைது செய்யப்படுவீர்கள் அப்படியொரு நிலைமையை நீங்கள் உருவாக்க வேண்டாம். இளவரசர் சந்திக்க விரும்புகிறார் என்று சொன்னபிறகும் மேற்கொண்டு தொடர்ந்து போவேன் என்பது அதிகப்பிரசிங்கத்தனம்."

"நாங்கள் அப்படி சொல்லவில்லை. எங்களுக்கு அவசர வேலை இருக்கிறது. ஏன் அங்கு நின்றாய் என்று சம்மந்தப் பட்டவர் கடிந்து கொண்டால் என்ன பதில் சொல்வது."

"இளவரசருக்குச் செய்தி தெரிவிக்கும்படியாகவோ கொடுப்பதற்கு ஓலையோ எங்களிடம் எதுவும் இல்லை."

"அதெல்லாம் இல்லை. செய்தி என்ன என்று எங்களிடம் தெரிவிக்காமல் நீங்கள் போவது முதல் தவறு. இளவரசரிடம் சொல்லுகிறோம் என்று கேட்டால் அதையும் மீறிப்போவது இரண்டாம் தவறு. இரண்டு தவறை"யும் ஒரு சேரச் செய்தால் அதற்குண்டான தண்டனையும் ஒருசேரக் கிடைக்கும். எனவே இளவரசர் அனுமதி பெற்றுப்போவதே நல்லது. தயவுசெய்து வந்துவிடுங்கள். கைது செய்யும்படி வைத்துவிடாதீர்கள்."

"என்ன கூத்தய்யா இது. மறவர்களே மறவர்களிடம் மாட்டிக்கொண்டு முழிக்க வேண்டியிருக்கிறது."

"ஐயா கோட்டைத் தலைவரே நான் வடக்கே வெகு தூரம் வரை போரிட்டுத் திரும்பியவன். என்னை உங்களால் சமாளிக்க முடியாது. என் அடியை உங்களால் தாங்க முடியாது. ஆனாலும், நீங்கள் சோழப்படையின் ஒரு அங்கம்.

திருவல்லக்கோட்டையின் மிக முக்கிய அதிகாரி என்பதால், உங்கள் பேச்சுக்குக் கட்டுப்படுகிறேன். கைது செய்வது என்ற வார்த்தையை இன்னொரு தடவை நீங்கள் உச்சரித்தால் உங்கள் உடைவாள் பறிக்கப்படும்."

"நான் வேண்டுமென்றே சொல்லவில்லை. நீங்கள் விலகிப் போவேன் என்று பிடிவாதம் பிடித்ததால் அந்த வார்த்தை சொல்லும்படியாயிற்று. இளவரசை நீங்கள் மீறு கிறீர்கள் என்கிற போது அந்தக் கோபத்தில் தான் பேசினேன். மறுபடி சொல்கிறேன். உங்களைக் கைது செய்கின்ற எண்ண

மில்லை. நீங்கள் உடைவாள் எடுத்தால் என்னுடைய உடைவாள் அறுபடும் என்று பேசுவது பேதமை. முடிந்தவரையில் என்னை நான் தற்காத்துக்கொண்டு உங்களைத் தாக்குவேன். தவிர அவ்வளவு எளிதாக என்னைத் தாண்டிப் போக முடியாது. கோட்டைக்காவல் என்று இழிவாகப் பேசுவதை நிறுத்திக்கொள்ளுங்கள்." என்று சீற, சிற்பி கையமர்த்தினார்.

"என்ன இது. சோழ வீரர்களை, சோழ வீரர்களே தாக்கிக் கொள்வதா, சற்று அமைதியாக இருங்கள். இளவரசருக்குத் தெரியாத எந்த ரகசியமும் என்னிடம் இல்லை. இவர்கள் ஏன் சொல்ல மறுக்கிறார்கள் என்றும் எனக்குப் புரியவில்லை. சொல்லிவிடுங்கள் ஐயா."

"இல்லை. சொல்வதற்கு உங்களுக்கும், எனக்கும் உரிமையில்லை. நாங்கள் இளவரசரைச் சந்திக்கத் தயார். ஆனால், இளவரசரை வல்லடியாக நீங்கள் சந்திக்க வைத்தீர்கள் என்று சம்மந்தப்பட்டவர்களிடம் சொல்வேன். அப்பொழுது உண்டான பலனை நீங்கள் அனுபவிக்கத்தான் போகிறீர்கள்."

"குதிரை வீரரே, நீங்கள் யாருடைய கட்டளையின் பேரில் இப்படிப் பேசுகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை."

"நான் பாறை பிளக்கின்ற சதாசிவாச்சாரியாரின் கட்டளையின் பேரில் இந்தப் பேச்சைப் பேசுகிறேன். குஞ்சரமல்லன் பெருந்தச்சனுக்கு இணையாக அதிகாரமும், மிக முக்கியமான பொறுப்பும் கொண்ட சதாசிவாச்சாரியாரையும் மீறி அவருக்கு இடைஞ்சலாக எவரும் எந்தக் காரியமும் செய்துவிட முடியாது."

"சதாசிவாச்சாரிதானே, அவரைப்பற்றி எங்களுக்கு எந்த அக்கறையும் இல்லை. அவர் எங்களுக்கு தலைவரும் அல்ல. நீங்கள் தாண்டிப்போக முடியாது. எங்கு வேண்டுமானாலும் என்னைப் பற்றி குற்றம் சொல்லிக்கொள்ளுங்கள். முறையீடு செய்யுங்கள். அதுபற்றி அக்கறை இல்லை. தயவுசெய்து கோட்டைக்குள் நீங்கள் வரவேண்டும்."

திருவல்லத்தின் வெளிப்பக்கத்திலிருந்து அந்த குதிரை வீரர்கள் மடக்கிய திருவல்லக்கோட்டைக் காவல் அதிகாரிகளோடு பயணப்பட்டு கோட்டைக்குள் நுழைந்தார்கள்.

கோட்டைக்குள் மிகப்பெரிய கும்பல் இருந்தது. கோட்டை பெரிதுமல்லாமல், சிறிதுமல்லாமல் இருந்தது.

ஆனால், இராஜேந்திரர் வந்திருக்கிறார் என்பதாலோ அல்லது அரச குடும்பத்தினர் அதிகம் இருப்பதாலேயோ கோட்டையும், கோட்டையைச் சுற்றியுள்ள இடங்களும் மிகப் பெரிய சந்தடியை உருவாக்கியிருந்தன. மாலை மெல்ல மங்கி வருகின்ற நேரம். மழைபெய்து அங்கங்கு ஈரமான தரை. ஊதற்காற்று என்பதால் மக்கள் வெளியிலிருந்து சிரித்தபடி ஆடியும், பாடியும் பேசியும் இருந்தார்கள்.

வியாபாரம் உரத்த குரலில் நடைபெற்றிருந்தது. கோட்டைக்கு வெளியேயிருந்த காளிகோயிலில் மிகப் பெரிய கூட்டம் இருந்தது. மக்கள் பெருந்திரளாக அங்கு குடியிருந்து உள்ளே போனவர் வெளியே வந்தவுடன், உள்ளே சிலர் நுழைந்து வழிபாடு முடித்துவிட்டு திரும்பிக் கொண்டிருந் தார்கள். கோட்டையின் வாசலில் வீரர்கள் சிலர் விசாரிக்க கதவு சிறிதளவு திறக்கப்பட்டது. கோட்டைக்குள் வீரர்கள் நுழைந்தார்கள்.

ஐந்து நிமிடப் பயணத்தில் அரண்மனை வளாகத்தில் நுழைந்து வாசலில் இறங்கினார்கள். அரண்மனை வாசற் படியில் ஏறியதும் பெருமுற்றத்தில் இரண்டு வீரர்கள் விசிறி யால் விசிற உயரமாய், கனமாய், அகலமாய் இராஜேந்திர சோழர் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தார். அவர் பெரிய ஆசனத்தின் வலப்பக்கம் இன்னொரு ஆசனம் போட்டு அதில் பரவை அமர்ந்திருந்தாள். மிகப்பேரழகியாக ஒவ் வொரு அசைவும் மிக ஒயிலாக, மலர்ந்த முகமாக, பெரும் கண்களாக இருந்த அவளை, பெண்களே வியந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

“யாரோ வருகிறார்கள். நான் கிளம்பட்டுமா. உத்தரவு கொடுங்கள்.”

பரவை எழுந்திருந்தாள்.

“சரி போய் வா.”

இராஜந்திரர் விடை கொடுத்தார்.

பரவை அவரை விழுந்து வணங்கினாள்.

மெல்ல அருகே நகர்ந்து நெற்றியில் முத்தமிட்டார். பரவையின் புஜங்களைப் பிடித்து சிறிதுநேரம் அவள் முகத் தைப் பார்த்து விட்டு, “போய் வா நாளை நண்பகலுக்குள்

வந்து விடு. ஒருவேளை நாம் பயணப்பட வேண்டியிருக்க லாம்.'' என்று ராஜேந்திரர் சொன்னார்.

பரவை சரியென்று தலையசைத்தாள். விடை பெற்றாள். வெளியே வேகமாக வந்தாள்.

சிறுதேர் கூரையிட்டது தயாராக இருந்தது. ஏறி அமர்ந்து கொண்டாள்.

தேர் சடசடத்து நகர்ந்தது. சேடிகளும், வீரர்களும் வேறு தேர்களிலும், குதிரைகளிலும் ஏறிக்கொள்ள தேர் நகரவும் கோட்டைக்கதவுகள் பெருஞ்சத்தத்துடன் திறந்து கொள்வதும் அங்கிருந்தே கவனிக்க முடிந்தது. வந்திருந்த வீரர்கள் வாசலில் காத்திருக்க.... உள்ளே போய் யாரோ விஷயம் சொல்ல இராஜேந்திர சோழர் வெளியே வந்தார்.

“என்ன செய்தி. பதட்டமாகப் போனீர்களாமே சிற்பி யாரே. நாரத்தை மலையில் ஏதேனும் பிரச்சினையா. அடிமை வீரர்கள் முரண்டு செய்கிறார்களா. என்ன செய்தியைத் தஞ்சைக்கு எடுத்துப் போகிறீர்கள்.''

சிற்பி குனிந்து வணங்கினார்.

“ஐயா நாரத்தை மலையில் நேற்று முன்தினம் வெகு நேரம் ஆணியடித்து பாறை புரட்டிய போது புரட்டப் பட்ட அந்த முதற்பாறை உருண்டு கீழே அப்பாவியாய் நின்றிருந்த ஒரு இராஷ்டிரகூட வீரனைத்தாக்கி அவனை நசுக்கிக் கொன்றது. பாறையைப் புரட்டி எடுக்க ஒரு நாழிகை ஆகிவிட்டது. வீரன் இறந்து போனான். என்ன செய்வது என்று தெரியாமல் வேலையை நிறுத்திவிட்டு அந்த வீரன் இருந்த இடத்தைச் சுத்தம் செய்து அவனை எரியூட்டி ஒரு நெய் விளக்கு மட்டும் எரிய வைத்திருக்கிறோம். பெருந்தச் சரிடம் இதைச் சொல்வதற்காக சதாசிவாச்சாரியார் என்னை அனுப்பினார்.''

செய்தியைக் கேட்டதும் இளவரசர் இராஜேந்திரர் கண்மூடிக் கொண்டார்.

“என்ன கொடுமை இது. எத்தனை முறை சொன்னாலும் யாருக்கும் எதுவும் புரியவில்லை. கோயில் வேலை என்று ஆரம்பிக்கிறபோது எவ்வளவு இடைஞ்சல் வருகிறது. இத்தனையும் மீறி செய்துதான் ஆவேன் என்று என் தந்தை பிடிவாதம் பிடிக்கிறார். நீ தடுத்தால்தான் அசம்பாவிதங்கள்

ஏற்படுகின்றன என்று என்மீது பாய்வார். இந்தச் செய்தி அரசருக்குக்கூட அல்ல. பெருந்தச்சருக்குப் போகிறது. பெருந் தச்சருக்குப் போனால், இந்தச் செய்தியை அரசருக்குப் போகாமல் தடுத்துவிடவும் கூடும்.

என்ன முட்டாள்தனம் இராஷ்டிரகூட வீரன் என்றால் இளப்பமா? அவன் போர்வீரன் இல்லையா? அவன் மறவன் இல்லையா? வாள் எடுத்து தன் தேசத்திற்காகப் போராடி யவன் இல்லையா? அவன் தோற்றுவிட்டான். நாம் வெற்றி பெற்றுவிட்டோம். அதனால் கைது செய்து இங்கு கூட்டி வந்திருக்கிறோம். வெறும் விளக்கம் போதுமா. அவன் குடும்பத் திற்கு என்ன பதில்? அங்குள்ள இராஷ்டிரகூட வீரர்கள் நொந்து போயிருப்பார்களே, அவர்களுக்கு என்ன செய்தி. இந்தச் செய்தி போகும் நேரத்தில் பரவையும் போயிருக் கிறாள் தேவைதானா இது. பரவை போகவேண்டிய அவசியம் என்ன?

'சக்ரவர்த்தியைப் பார்த்து ஒரு வணக்கத்தைச் சொல்லி விட்டு வருகிறேன் என்றாள். சரி என்று அனுப்பியாகி விட்டது.

"இந்த வீரர்களை இப்பொழுது அனுப்ப வேண்டுமா? அவன் இறந்துவிட்டான். இறந்துபோன செய்தியை இப்போது போய் சொல்லி அவஸ்தைப் படுத்துவானேன். நாளை காலை செய்து கொள்ளலாம் அல்லது நாமும் இப்பொழுது இவர்களோடே திருலவ்வத்திலிருந்து கிளம்பி தளிப்பெண்டிர் குடியிருப்புக்குப் போகலாம்."

"இப்பொழுது தளிப்பெண்டிர் குடியிருப்புக்குப் போனால் என்ன ஆகும். பரவையை அனுப்பிவிட்டு பின்னா லேயே இராஜேந்திரனும் வந்துவிட்டான் என்று ஏகடியம் பேசுவார்கள். பஞ்சவன்மாதேவி வரைக்கும் செய்தி போகும். பஞ்சவன்மாதேவி வாய்விட்டுச் சிரிப்பாள். கைகொட்டி நகைப்பாள்."

"நகைத்துவிட்டுப் போகட்டும்."

"இரண்டு மனைவிகள் இருக்க... பரவையின் பின்னாலே அலைகிறாயேடா என்று பேச்சு வரும்."

"வரட்டும்."

''ஆனால் நேற்று முன்தினம் நடந்த செய்திக்கு இப்பொழுதுதான் தகவல் போகிறது என்றால், நம்பும்படியாக இல்லையே. சதாசிவாச்சாரியார் ஏன் இப்படி தாமதமாகச் செய்கிறார். காரணமாகச் செய்கிறாரா. காரணமில்லாமல் செய்கிறாரா. அவரும் என்னைப் போல இந்தச் செய்தியைச் சொல்ல வேண்டாம் என்று தயங்கியிருப்பாரோ! பிறகு மனம்மாறி ஆள் அனுப்பியிருப்பாரோ.''

இளவரசர் ஆழ்ந்து சிந்தித்தார்.

"நீங்கள் கொண்டு போவது ஒரு மோசமான செய்தி. இதைப் பெருந்தச்சரிடம் மட்டும் சொல்லிவருவது உங்களுக்குக் கொடுத்த பணியாக இருக்கலாம். ஆனால், இப்போது என்னிடம் சொல்லி விட்டீர்கள். என்னிடம் இதை நீங்கள் சொல்லிவிட்டாதாலேயே உங்கள் பணி முடிந்துவிட்டது என்றே புரிந்துகொள்ளலாம். பெருந்தச்சரிடம் இதுபற்றி நான் பேசிக்கொள்கிறேன். பெருந்தச்சரிடம் பேசுவதற்கு முன்பு இதுகுறித்து சக்ரவர்த்திக்குச் சொல்ல வேண்டிய அவசியமும் உண்டு. ஒருவேளை சக்ரவர்த்திக்கு இந்தச் செய்தி தெரிந்தும் இருக்கலாம். இவர்கள் இரண்டு பேரும் யார்.''

"சதாசிவ ஆச்சாரியரிடம் வேலை செய்கின்ற மறவர்கள்."

"நீங்கள் எந்தப் படைவீரர்கள்.''

"நாங்கள் ஈராயிரம் பல்லலரையரின் படையைச் சேர்ந்தவர்கள். கங்கதேசத்திற்கு படையெடுத்தபோது அங்கேபோய் போர் புரிந்து விட்டுத் திரும்பியவர்கள். அதற்காக சன்மானம் பெற்றவர்கள்.''

"நல்வது. முதன்மைப்படையா. இரண்டாம் படையா.''

"மூன்றாவது படை. நாங்கள் கோட்டையைத் தாக்கும் வில்வீரர்கள்.''

"அடடே... அப்படியா. சற்று இளைப்பாறுங்கள். நான் வந்து விடுகிறேன். இந்தச் செய்தியைத் திருவல்லத்தில் எலருக்கும் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை.''

இளவரசர் அரண்மனை உள்பகுதிக்கு திரும்பினார்.

அவர்கள் குதிரைகளின் சேணையைக் கழற்றினார்கள். குதிரைகளுக்கு உணவும், நீரும் காட்டினார்கள். முதுகு துடைத்தார்கள். திருநீறு இட்டுக் கொண்டார்கள். மெல்வ

கோயில் பக்கம் நகர்ந்து ஜனங்களை விலக்கி காளியை நமஸ் கரித்து நெற்றியில் குங்குமம் தரித்து வெளியே வந்தார்கள். அப்பமும், அரிசிமாவும் பணியாரமும் வாங்கிக் கொண் டார்கள்.

அப்பம் சாப்பிட்ட பிறகு, அரிசிப் பணியாரத்தைக் குழம்பில் தோய்த்து உண்டார்கள். நீர் குடித்துவிட்டு சிறிய ஏப்பத்தோடு காத்திருந்தார்கள். கிளம்புங்கள் என்று அவர் களுக்குச் செய்கை செய்யப்பட்டது. அவர்கள் கோட்டை வாசலுக்குப்போக, பின்னே ஒரு சிறுபடையோடு இராஜேந் திரர் வேகமாக அரண்மனை விட்டு வெளியே வந்து குதிரையில் தாவி ஏறி கோட்டை வாசலை நோக்கி வந்தார். அவர்கள் கோட்டை வாசலைக் கடக்க சட்டென்று ஒரு சிறுபடை அவர்களைச் சூழ்ந்துகொண்டது. தஞ்சையை நோக்கிப் போகவாம் என்று அவர்களுக்கு உத்தரவு வந்தது. அவர்கள் அந்தச் குதிரைவீரர்களுக்கு நடுவே வேகமாக குதிரையைச் செலுத்திக் கொண்டு தஞ்சையை நோக்கிப் போனார்கள். சற்று இடைவெளி விட்டு இராஜேந்திரர் வருவது தெரிந்தது. ஒரு திருப்பத்தில் இராஜேந்திரருக்குப் பின்னால் இன்னொரு படை வருவதையும் உணர்ந்தார்கள்.

முன்னே செல்லுகின்ற குதிரை வீரர்கள் வேகத்தைப் பார்த்தால் இன்னும் ஒரு நாழிகையில் தஞ்சையின் எல்லைப் புறத்தை அடைந்து விடுவார்கள் என்று தோன்றியது.

தஞ்சையின் எல்லை வந்ததும் இராஜேந்திரசோழர் அருகேயிருந்து ஓ.. என்று ஒரு கூச்சல் வந்தது. முன்னே போன வீரர்கள் அந்தக் குரலுக்கு எதிரொலித்தார்கள். மெல்ல குதிரையை நிறுத்தினார்கள். தஞ்சையின் தெற்குப் புறம்படியில் அவர்கள் நின்று கொண்டார்கள்.

இராஜேந்திரசோழர் அவர்களைக் கடந்து போனார். அவர்களுக்குப்பின்னே இந்த வீரர்கள் சட்டென்று கலைந்து புறம்படியில் வெவ்வேறு திசையில் தஞ்சைக்குள் போவதற்கு நகர்வது தெரிந்தது. எல்லையில் ஒரு படையாகப் புகாமல் தனித்தனியாக தன் ஆட்களை இராஜேந்திரர் அனுப்புகிறார் என்று புரிந்துவிட்டது.

இராஜேந்திர சோழருக்குப் பின்னால் வந்த ஒரு படை தெற்குப் புறம்படியிலேயே வட்டமாகத் தங்கிவிட்டது.

இராஜேந்திரசோழர் கோயில் கட்டப்படவிருக்கின்ற புல்மேடு தாண்டி புது ஆறு தாண்டி தஞ்சையின் தெற்குப் பக்கம் நுழைய, அங்குள்ள வீரர்கள் கட்டியம்கூறி அவரை வரவேற்றார்கள்.

"சக்ரவர்த்தி எங்கிருக்கிறார்" என்று இராஜேந்திரர் கேட்க, "இப்பொழுதுதான் தளிச்சேரி பெண்டுகளின் மணி மண்டபத்திற்குப் போனார்" என்று செய்தி சொல்லப் பட்டது.

இராஜேந்திரர் மெல்ல குதிரையைத் திருப்ப மணிமண்ட பத்தில் தீப்பந்தங்கள் ஏற்றப்பட்டன. இராஜேந்திரர் குதிரை விட்டு இறங்கி துண்டைத் தோளில் சார்த்திக்கொள்ள இரண்டு வீரர்கள் அதேபோல தோளில் போர்வை போர்த் திக் கொண்டு அவரைப் பின் தொடர்ந்தார்கள். இன்னும் இரண்டு வீரர்கள் அவர்கள் குதிரைகளைப் பிடித்துக் கொண்டார்கள். இராஜேந்திர சோழர் வேகமான நடையாய் தளிச்சேரி பெண்டுகளின் இல்லங்களுக்கு நடுவே நடந்து அந்த மணிமண்டபம் பார்க்க, மணிமண்டபத்தில் தீப்பந்தங்கள் பொருத்தப்பட்டன. மணிமண்டபத்திற்கெதிரே பெண்கள் கூட்டம் தரையில் பாய்விரித்து அமர்ந்திருந்தது. மணி மண்ட பத்தின் வலப்பக்கமாக எவருக்கும் மறைக்கா வண்ணம் மர ஆசனங்கள் போடப்பட்டு சக்ரவர்த்தி அமர்ந்திருப்பது தெரிந்தது.

அருகே சில ஆண்கள் நின்றிருந்தார்கள்.

யாரது என்று இராஜேந்திரர் அவரை உற்று நோக்கினார்.

அந்த ஆள் கருப்புதாடியும், வெள்ளைத் தலைப்பாகை யும், வெள்ளை மேலாடையும் நீண்ட உடைவாளோடும் இருந்தவரைப் பார்த்து, இராஜேந்திரர் திரும்பி தன் மெய்க் காவலனைப் பார்க்க, "அது சாவூர் பரஞ்சோதி, சக்ரவர்த்தி நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். தேவரடியாருக்கு நாயக மாக நிற்பதற்காக இங்கு வந்திருக்கிறார்."

"யார். கொல்லாபுரத்தைச் சேர்ந்த வீரனா. யவனருக்கும், கங்கதேசப் பெண்ணுக்கும் பிறந்தவனா"

"ஆமாம். ஈராயிரப்பல்லவரின் ஆளல்லவா."

"ஆமாம்"

“ஓ.. அவனை அங்கிருந்து பிடுங்கி இங்கே வைத்து விட்டாரா அவனுடைய தாயார் ஒரு தேவரடியல்லவா.”

“ஆமாம்.”

“இது சரியான தேர்வுதான். ஆனாலும் இவன் அதிகப் பிரசங்கியல்லவோ ”

“முன்புபோல அல்ல.”

“ஏன்.”

“அவன் தாயார் இறந்து விட்டாரென்று செய்தி வந்து அவன் போய் திரும்பி வந்திருக்கிறான். திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று சத்தியம் செய்திருக்கிறான். முன் பிருந்ததைவிட இப்பொழுது மிகவும் மிருதுவாக மாறிப் போனான் என்று அவனைப்பற்றிச் சொல்கிறார்கள்.”

“நல்லது. ஆனால் தேவரடியார்களுக்கு நாயகமாக வரும் போது பிரச்சினைகள் எழத்தான் செய்யும். அதைச் சமாளிக்கும் திறன் உண்டோ அவனிடம்.”

“இருக்குமென்று நினைக்கிறேன். சாவூர் பரஞ்சோதியைப் பற்றி உயர்வாகத்தான் சொல்வார்கள்.”

“ஆமாம். நானும் அப்படித்தான் கேள்விப் பட்டிருக் கிறேன். தேவரடியார்களுக்கு நடுவே நாயகம் செய்வது நல்ல வேலை. நீ அந்த வேலைக்குப் போய் விடேன்.” அந்த மெய்க் காவல் வீரனைப் பார்த்து இராஜேந்திரசோழர் சொல்ல அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

அந்தச்சிரிப்பு அங்குள்ள சிலரை திரும்பிப் பார்க்க வைத்தது. யார் அந்த வீரர்கள் என்று அவர்கள் உற்றுப் பார்த்தார்கள். இராஜேந்திரசோழனை அடையாளம் கண்டுகொண்டார்கள். விரைந்து ஓடிப்போய் பின் வரிசையில் அமர்ந்திருந்த ஒரு தலைக்கோலியிடம் போனார்கள். அந்தத் தலைக்கோலி துள்ளி எழுந்து வந்தாள் வணங்கி வரவேற்றாள்.

வாருங்கள் என்று இராஜேந்திரரின் வலக்கையைப் பிடித்து மெல்லப்பற்றி முன்னே அழைத்துப் போனாள்.

அந்த மெய்க்காவல் வீரன் இராஜேந்திரர் வருகிறார் என்று உரக்கக்கட்டியம் கூறினான் அப்போது பரவை மேடையில் வந்து நின்றாள். மேடைக்கு வணக்கம் சொன்

ணாள். தொலைவே யாருக்கோ கட்டியம் கூறுகிறார்களே என்று அமைதியாக இருந்தாள்.

இராஜேந்திரசோழர் என்று சொன்னதும் முகம் மலர்ந் தாள். தடதடவென்று கால்களை அசைத்து ஜதி சொன்னாள். வலதுகையும், இடதுகையும் நீட்டினாள். முகம் அசைத்தாள். சட்டென்று மண்டியிட்டு இராஜேந்திரசோழருக்கும், சக்ரவர்த்திக்கும் ஒருசேர வணக்கம் சொல்வதுபோல தட்டி தொட்டாள்.

பூமி இருந்தால்தானல்லவா நடனம். பூமி இருந்தால் தானே வாழ்க்கை. மேடை என்று ஒன்று இருந்தால்தானே ஆட்டம். எனவே, இந்த மேடைக்கும், மேடையைத் தாங்கு கின்ற பூமிக்கும் வணக்கம் சொல்வதுதான் தட்டி தொடுதல். அதுமட்டுமல்ல சபையின் வணக்கமும், அரசரை வணங்குவ தும் இப்படித்தான் பொதுவாக வணங்கிவிட்டு பிறகு ஒவ்வொருவராக பெயர் சொல்லி வணங்குவதும் என்று ஒரு முறையிருக்கிறது. இதோ இந்த வணக்கம் என் நாயகரான இராஜேந்திரசோழனைப் போய் சேரட்டும் என்று அவள் தன் பின்னிய கூந்தலை முன்னே போட்டு நீண்ட விதமாய் கைகளை நீட்டி உடம்பை மடக்கிக் குறுக்கி அசையாது இராஜேந்திரசோழர் திக்கு நோக்கியே விழுந்து வணங்கியபடி இருந்தாள். இராஜேந்திரசோழர் அமரும் வரை காத்திருந் தாள். அவர் அமர்ந்துவிட்டார் என்று சொல்லப்பட்டதும் மெல்லத் தலைநிமிர்ந்தாள். கைகூப்பி இராஜேந்திர சோழர் வருக வருக என்று பார்த்து முணுமுணுத்தாள்.

இராஜேந்திரர் மெல்ல தலையசைத்து அந்த வரவேற்பை ஏற்றுக்கொண்டார். அப்பாவுக்கருகே அமர்ந்தார்.

சக்ரவர்த்தி மிகச்சந்தோஷமாக ராஜேந்திரரின் தோளில் கைபோட இராஜேந்திரர் இன்னும் நெருங்கி அமர்ந்து சக்ரவர்த்தியின் முழங்கால் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டார்.

“என்ன இந்தப்பக்கம்.”

“சிறிய செய்தி கிடைத்தது. உங்களுக்குத் தெரியுமா என்று தெரியவில்லை இருந்தாலும் தெரிவிக்க வேண்டியே வந்தேன்.”

“பரவை இப்பொழுதான் வந்தாளா ”

"ஆமாம். நான்தான் அனுப்பினேன். பரவை வந்த பிறகு தான் அந்தச்செய்தி கிடைத்தது."

"எங்கிருந்து செய்தி."

'நாரத்தை மலையிலிருந்து."

"தெரியுமே"

"என்ன தெரியுமே"

"செய்தி வந்துவிட்டதே."

"என்ன செய்தி என்று தெரியுமா."

"இராஷ்டிரகூடன் ஒருவன் நேற்று முன்தினம் பாறை புரண்டு அடியில் சிக்கிக்கொண்டான் என்று சொன்னார்கள்."

"எனக்கு மிகவும் வருத்தமாகப் போயிற்று தந்தையே."

"இராஜேந்திரா இது மிகப்பெரிய வேலை. மிகக் கடினமான பணி. இது முதல் ஆரம்பம். இந்த வேலை முடிவதற்குள் என்னுடைய கணக்குப்பிரகாரம் ஒரு முன்னூறு பேராவது களப்பலி ஆவார்கள் என்று நினைக்கிறேன். யாரோ இறந்துவிட்டார்கள் என்பதற்காக இந்த கோவில் பணியோ, இங்கு நடக்கின்ற ஆட்டமோ நிற்கப்போவதில்லை. நிற்கவும் நிற்காது. இராஜேந்திரா அந்த இராஷ்டிரகூட இளைஞன் மட்டுமல்ல. இந்த இராஜராஜன் இறந்தாலும் இந்தப்பணி தொடரும். தொடரவேண்டும். தொடரவேண்டியது உன் பொறுப்பு. இராஜேந்திரா, எனவே நான் இதைப்பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாமல் இருக்கிறேன். பரவையை ஆடச்சொல்."

இராஜேந்திர சோழர் கையை உயர்த்த பரவை தன் ஆட்டத்தைத் துவங்கினாள்.

ஜதிகள் சொல்லப்பட்டன. உடம்பு துள்ளித்துவண்டு எல்லா பக்கமும் அசைந்து பின்னலும் நகைகளும் நாலா பக்கமும் அலைய அவள் ஆடியது அற்புதமாக இருந்தது.

வீணை ஆதிச்சர் ஒரு ஓரமாக அமர்ந்து வீணையில் ஜதி சொல்ல தாளம் கூட்ட, மத்தளம் முழங்க, குழல் இசைக் கப்பட மிக அற்புதமாக தன் திறமை அத்தனையும் காட்டி

பரவை ஆடினாள். தொலைவில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்த ராஜராஜி திகைத்தாள்.

அடியே.. எல்லாம் கற்றுக்கொண்டு என்ன பயன். தளிச்சேரி பெண் இந்த ஆட்டமல்லவா ஆடவேண்டும். இப்படி நான் தொடர்ந்து ஆடாமல் போனேனே. சொல்லிக் கொடுத்தார்கள் ஆனால், பேசிப்பேசி உட்கார்ந்து விட்டேன் என்று சற்று தடிமனான தன் உடம்பு பார்த்து வெட்கப் பட்டாள்.

பரவை நிறுத்தி வியர்வை அடங்க திரை ஓலைக்கு ஓரத்திற்குப்போனாலும் இன்னும் ஆறு தேவரடியார்கள் வந்து நின்று தங்களுடைய ஜதி சொல்லி ஆடத் துவங்கினார்கள்.

அவர்கள் சட்டென்று ஒதுங்கிக்கொள்ள, வேடனும் வேடுவச்சியுமாக இரண்டுபேர் உள்ளே நுழைந்து பெரிய குதியாட்டம் போட்டார்கள். அந்தக் குதியாட்டத்திற்கு மறவர்களிடையே வரவேற்பு இருந்தது.

இரண்டு பக்க ஓரமும் நின்று கொண்டிருந்த மறவர்கள் கைதட்டி ஆர்ப்பரித்தார்கள். அப்படிப்போடு என்று உற்சாகமாய்க் கூவினார்கள்.

பரவை உடை மாற்றிக்கொண்டு அர்ஜுனனாய் அங்கு வந்து சேர்ந்தாள்.

அர்ஜுனன் தபஸ் அங்கு ஆடப்பட்டது.

சிவனாகவும், பார்வதியாகவும் வேடமிட்டு இரண்டு தளிச்சேரி பெண்டுகள் உள்ளே வர சபை கைகூப்பி வணங்கிற்று. வேடுவனும், வேடுவச்சியும் சிவனை வணங்கி தங்கள் கானகத்திற்கு வந்ததற்கு சந்தோஷப் பட்டார்கள்.

இங்கு அர்ஜுனன் வந்திருக்கிறானா என்று விசாரித்து சிவபெருமான் முன்னே போக, அங்கே அர்ஜுனன் அதாவது பரவை நாச்சியார் வேட்டையாடுவதற்கு ஒன்றுமே கிடைக்கவில்லையே என்று தேட, சிவபெருமானும், பார்வதியும், வேடுவனும், வேடுவச்சியும் சற்று உயரத்தில் இருக்க, அங்கு பெரும் பன்றி உறுமல் கேட்டது. நீண்ட தந்தங்களுடைய காட்டுப்பன்றி ஒன்று உள்ளே கயிறு கட்டி இழுக்கப்பட, சோழவீரர்கள் உரத்துக் கத்தினார்கள். வெட்டு குத்து என்று சப்தமிட்டார்கள் பன்றி மேலைச்சாளுக்கியரின் சின்னம்.

மேலைச் சாளுக்கிய வீரர்கள் இதை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பன்றி அர்ஜுனனுக்கு ஆட்டம் காட்ட லேசாய் குடி போதையில் இருந்த ஒரு சோழவீரன் விடு நான் பன்றியைக் கொல்கிறேன் என்று ஈட்டியை உயர்த்தினான்.

சக்ரவர்த்தி மெல்ல திரும்பிப்பார்த்து முறைக்க மெய்க்காவல் வீரர்கள் அவனை அடக்கி அழுத்தினார்கள்.

இது நாடகம் என்பதை மறந்துவிடாதே என்று அச்சுறுத்தினார்கள். அந்த வீரன் கைகட்டி வாய்பொத்தி அமர்ந்து கொண்டான்.

நாடகம் தொடர்ந்து நடந்தது.

மேலைச்சாளுக்கியவிரர்கள் ஒவ்வொருவராக மெல்ல வெளியேறினார்கள்.. அவர்கள் வெளியேறுவதை மற்ற மெய்க் காவல் வீரர்கள் குறித்துக் கொண்டார்கள். அம்பு பன்றியைத் துளைத்தது. இன்னொரு அம்பும் வந்து சொருகியது.

அர்ஜுனனும் ஓடிப்போய் பன்றியை எடுத்தான்.

சிவபெருமான் அங்கு வந்து இதுநான் கொன்ற பன்றி என்றார். சிவபெருமானை இன்னொரு வேடுவன் என்று நினைத்த அர்ஜுனன் அவரோடு சண்டையிடத் தயாரானான். வாக்குவாதம் முற்றியது. இரண்டுபேரும் வாள் சண்டை இட்டுக் கொண்டார்கள். பிறகு அம்பு தொடுத்தார்கள். நாவாபக்கமும் தீப்பற்றி எரிந்தது. வேடுவர்கள் அந்தச் சண்டையை ஆர்வமாகப் பார்த்தார்கள். சபையும் அசையாது கவனித்தது.

அந்த நரசிம்மரின் கோவிலுக்கருகே அவர்கள் ஒன்று கூடியிருந்தார்கள். கீழைச் சாளுக்கியமும், மேலைச் சாளுக்கியமும் பிரியும் இடத்தில் அடர்ந்த காடுகள் உள்ள அந்த மலை இருந்தது. அந்த மலை முழுவதுமே நரசிம்மவனம் என்று அழைக்கப்பட்டது. அந்த மலைக்குக்கீழ் ஒரு குகையில் நரசிம்மர் லட்சுமியோடு எழுந்தருளியிருந்தார். மிக அற்புதமாய் ஒரு சிற்பி புன்னகை செய்கின்ற ஒன்றரை ஆள் உயரம் உள்ள நரசிம்மரை மிக நுணுக்கமாக செதுக்கி அங்கு பிரதிஷ்டை செய்திருந்தான் மன்னரோ குறுநில அரசரோ அல்லது மடாதிபதிகளோ அதை ஸ்தாபனம் செய்திருக் கிறார்கள்

இது ஹிரண்ய கசிபுவின் பூமி. அவன் ஆண்ட இடம். பிரகலாதன் பிறந்த மண். இந்த இடத்தில்தான் நரசிம்மர் தூணிலிருந்து பிளந்து கொண்டு வெளியே வந்து ஹிரண்யனை வதம் செய்தார் என்றும், ஒரு செவிவழிச்செய்தி உலவி வருகிறது. இந்த இடத்தில் மிதித்தார். இந்த இடத்தில் கிழித்தார். இந்த இடம்வரை துரத்தி ஓடினார் என்றெல்லாம் பல்வேறு இடங்களைச் சொல்லி அங்கங்கே விதம்விதமான நரசிம்மர் கோயில்களை உருவாக்கியிருந்தார்கள்.

செங்குத்தான மலையின் உச்சியில்கூட ஒரு த்வஜஸ்தம்பத்தை நிறுவி அந்த மலையை வழிபட்டார்கள். மந்திரசக்தி மிகுந்த மலை. ஞானம் அருளும் மலை என்றெல்லாம் சொல்கிறார்கள்.

இதுவெல்லாம் எவ்வளவு தூரம் சரியோ தெரியவில்லை. ஆனால், இது நரசிம்மவனம் என்பது சரி. இது உக்கிரமான இடம். கடும் பாறைகளும் கழற்காற்றும், அடர்ந்த வனமும் நிறைந்த இடம். மழைக்காலங்களில் வெளியே தலைகாட்ட முடியாது. வெய்யில் காலங்களில் வெப்பம். உள்ளூறுப்புகளையெல்லாம் பாதித்து நோகச் செய்யும். மிருகங்கள் கூட இந்த மலைப்பகுதிகளில் வசிப்பதில்லை. நாகங்களும், கீரிகளும், கருடப் பறவைகளும், குரங்குகளுமே அதிகம் இருக்கும். அங்குள்ள குரங்குகள் அதிக முடியில்லாமல் பானற நிறமாய், பரந்த முகமாய் சிங்க வாலாய் இருக்கும். இவற்றையெல்லாம் விட காட்டுப்பன்றிகள் அதிகம் இருக்கும்.

மனிதர்கள் ஊடுருவ முடியாத காடு என்பதால் பன்றிகள் பல்கிப்பெருகி நாலாபக்கமும் அலையும். மனிதர் எதிர்ப்பட்டால் நின்று துரத்தும், மரம் ஏறினால் பல பன்றிகள் முட்டி பெரும் மரத்தையும் சாய்க்கும் அல்லது மனிதர் கீழே இறங்கும்வரை அங்கேயே சுற்றி காத்துக் கொண்டிருக்கும். தவறி கீழே விழுந்தால் குடல்கிழித்து சதைகளைக் கிழித்து கூட்டமாக உண்ணும். அந்த காட்டுப்பன்றிகளுக்கு வளைந்த கொம்புகள் உண்டு. அவை எருமைகளையும், யானைகளையும் எதிர்க்க வல்லவை. சிங்கங்களெல்லாம் அந்தக் காட்டுப்பன்றிகளுக்கு பயந்து ஓடும். இறந்து போன மிருகங்களின் உடல்களைத் தோண்டி எடுத்து உண்ணுகின்ற திறமை அதற்கு உண்டு. கரும்பாறைகளிலிருந்து வழிகின்ற ஒரு திரவத்தை நக்கியும், பற்களால் சுரண்டியும் அந்தப் பன்றிகள் தின்னும். பாறை திரவத்தைத் தின்ற பன்றிகள்

மிகுந்த வீர்யத்தோடு தன் பேடுகளோடு கூடும். அந்தக் குடும்பம் பல்கிப் பெருகும். பன்றிகள் தின்னும் அந்தப் பிசினைத் தோண்டி எடுத்துப் போவதற்காக வேடுவர்கள் பகல் நேரத்தில் வருவார்கள்.

அரசர்களுக்கும் அரச குமாரர்களுக்கும் கொடுப்பதற்காக அந்த லேகியத்தை கரண்டிப் போவார்கள். மலைத்தேன் எடுக்கவும் மனிதர்கள் அந்தப் பக்கம் வருவதுண்டு. வேடுவர்களின் துணையில்லாமல் அந்த நரசிம்மவனத்தின் உள்ளே நுழைய முடியாது. எந்தக் கோயில்களுக்கும் புகமுடியாது.

மேலைச்சாளுக்கிய மன்னர்கள் பலர் தாங்கள் உடற்பயிற்சிகளின் களத்தை அந்த மலைமீதுதான் வைத்துக் கொண்டார்கள் நரசிம்மரை வணங்கி விட்டுத்தான் உடற்பயிற்சிகளைச் செய்வார்கள். உடற்பயிற்சியென்று ஏதும் தனியாகச் செய்யவேண்டாம். செங்குத்தான மலையில் ஏறி உயரேபோய் கண்மூடி அமர்ந்துவிட்டு பிறகு மடமட வென்று இறங்கி கீழே வந்து அருவியில் குளித்துவிட்டு சாப்பிட்டு விட்டு பிறகு மறுபடியும் மலையேறி உயரேபோய் அமைதியாய் இரவு முழுவதும் அமர்ந்துவிட்டு பிறகு மறுபடியும் விடியலில் கீழே இறங்கினால் போதும்.

நாற்பத்தைந்து நாட்கள் ஒரு வேளை சாப்பாடு. இரண்டு வேளை மலை ஏறல். மற்ற நேரமெல்லாம் தியானம் என்று தனிமையில் இருந்தால் எப்பேர்ப்பட்ட நோஞ்சானுக்கும் மிகப் பெரிய வலு வந்துவிடும். மனஉறுதி ஏற்படும். அந்த வனத்தில் ஏற்படுகின்ற தனிமைக்கு ஒரு தனிமகத்துவம் இருக்கிறது.

நல்லவேளை அந்த இடம் நகரமாக இல்லை. மிகச்சிறிய கிராமமாக இருக்கிறது. வேடுவர் குடியிருப்பாக இருக்கிறது. நகரமாக இருப்பின் கீழைச் சாளுக்கியர்கள் சோழர்களின் துணையோடு அந்த இடத்தைச் சுவீகரித்துக் கொண்டிருப் பார்கள். இப்போது அது மேலைச் சாளுக்கியத்தின் எல்லையில்தான் இருக்கிறது. ஆனாலும் கீழைச்சாளுக்கியத்தின் கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது. ஆனால், கீழைச்சாளுக்கிய அரசர்கள் அவ்வப்போது வந்து இதேபோல் பயிற்சிகள் செய்துவிட்டுப் போவார்கள் மேலைச்சாளுக்கியத்தின் வேதனை, கீழைச் சாளுக்கியத்திற்கு இல்லை. கீழைச்சாளுக்கியர்கள் சோழர்களோடும் வடக்கே இருக்கின்ற ஒட்டர்களோடும் சமரசம் செய்து கொண்டு சுமுகமாக வாழ்

கிறார்கள். மேலைச்சாளுக்கியத்தில் உள்ளவர்களுக்கு அப்படி சமரசம் செய்து கொள்ளத் தெரியவில்லை. அருகே இருக்கின்ற இராஷ்டிரகூடத்தோடும். கங்கநாட்டோடும் கூட சண்டை இருந்து வருகிறது. ஒரு முரட்டுத்தனம், ஒரு அகம்பாவம் மேலைச் சாளுக்கியர்களிடம் உண்டு. நிலவியல் ரீதியாக சாளுக்கியம் என்று ஒன்றாகச் சொல்லப்பட்டாலும் மேலைச்சாளுக்கியமும், கீழைச்சாளுக்கியமும் பல்வேறு வித்தியாசங்களைக் கொண்டிருக்கின்றன.

கீழைச்சாளுக்கியம் வைணவ பூமியாக இருக்க மேலைச்சாளுக்கியர்கள் வீரசைவர்களாகத் திகழ்கிறார்கள்.

பெரிய பெரிய மலைகளும், பெரிய வயல்வெளிகளும், ஆற்றுப் பாசனமும் கொண்ட மேலைச் சாளுக்கியம் அழகிய பெண்களையும், சிறந்த வீரர்களையும் கொண்ட மேலைச் சாளுக்கியமும் இன்று சோழர்களிடம் அடிபட்டு நிற்கிறது. கிருஷ்ணா நதியைத்தாண்டி உள்ளே புகுந்து அந்த சோழ தேசத்து மன்னன் சூறையாடிவிட்டுப் போயிருக்கிறான். அப்பனும், பிள்ளையுமாய் உள்ளே நுழைந்து நகரங்களை அடித்து உடைத்து எரியூட்டி பெண்களை இழுத்துப் போய் விட்டார்கள். எல்லா செல்வங்களையும் கொள்ளையடித்துப் போய் விட்டார்கள். வயல்களில் யானைகளையும், குதிரை களையும் விட்டு அழித்து அடுத்தவேளை உணவுக்கு வழியில்லாமல் செய்துவிட்டார்கள்.

கிருஷ்ணன் ராமன் என்ற பிரம்மராயன் முன் நின்று போர் நடத்தியிருக்கிறான். கங்கதேசத்திலிருந்து உள்ளே புகுந்து மெல்ல மெல்ல முன்னேறி கிராமங்களை வளைத்துப் பிடித்து கிராமத்திலுள்ள இளைஞர்களையும், கிராம அதிகாரி களையும் வரிசையாக நிற்க வைத்து சவுக்கால் விளாறியிருக் கிறான். கிட்டி போட்டுருக்கிறான். நெற்றியிலும், மணிக்கட்டி லும், முழங்காலிலும், நெஞ்சுக் குழியிலும் மரக்கட்டைகள் பொருத்தி கீழே கயிறால் முறுக்கி முறுக்கி இருக அந்த மரக் கட்டைகள் நரம்பு ஓட்டத்தை அழுத்த தலைவெடித்துவிடும் போன்ற வலியில், மார்பு பிளந்துவிடும் போன்ற வலியில், முழங்கால் விட்டு விடும் போன்ற வலியில், அலறி சாளுக்கிய தேசத்தின் எல்லாவித படைபலத்தையும் சொல்லியிருக் கிறார்கள். எத்தனை குதிரைகள், எத்தனை யானைகள் என் றெல்லாம் தெரிந்து வைத்துக்கொண்டு அவர்களது படையை மிகச்சரியாக பிரித்து வைத்து கிருஷ்ணாநதி வடியும் வரை

காத்திருந்து இடையில் கலக்கும் மிகப்பெரிய நதிகளைத் திசை திருப்பி தாண்ட முடியாத இடத்தில் யானைகளை நிறுத்தி அதன் மீது பலகைகள் போட்டு அந்தப் பலகைகளின் மீது குதிரைகளை நடத்தி இக்கரை லந்து விட்டார்கள்.

ஒரு லட்சம் வீரர்கள்தானே வெட்டி வீழ்த்தி விடலாம் என்று மேலைச்சாளுக்கியம் நினைத்தபோது நாவாய்களில் ஏறி இரண்டு லட்சம் வீரர்கள் கடற்கரை வழியாக நகர்ந்து மேற்கு திசையில் இறங்கி எந்தக் காவலும் இல்லாத மேலைச் சாளுக்கியத்தில் ஊடுருவி விட்டார்கள். மேற்கே எதிரிகள் தாக்குகிறார்கள் என்று தெரிந்தும் தெற்கு திசைப்படை மேற்கு நோக்கிப்போக சோழப்படை எளிதில் முன்னேறிவிட்டது. அதேசமயம் கீழைச்சாளுக்கியத்தோடு சேர்ந்துகொண்டு இன்னொரு சோழப்படை மேலைச்சாளுக்கியத்தின் கிழக்குப் பக்கத்தைத் தாக்கியது. கடக்க முடியாத நரசிம்மவனத்தைக் கீழைச்சாளுக்கியர்களும் இந்த நரசிம்ம வனத்து வேடு லர்களும் காட்டிக்கொடுக்க சோழ வீரர்களும் நிதானமாக மலையேறினார்கள் மலையேறினார்கள், மலையேறிய படையிடம் குத்தீட்டிகளும், வில்களும், அம்புகளும் தவிர பெரும் சுமை எதுவும் இல்லை. தெற்கிலிருந்து தாண்டிய படையில் யானைகளும், எருது வண்டிகளும் வர நாவாய்கள் வந்த படையில் நல்ல குதிரைகள் வந்தன.

மூன்று நாள் போரில் மேலைச்சாளுக்கியம் நகங்கியது. சின்னாபின்னப்பட்டது. ஒரு குதிரைகூட இல்லாமல். ஒரு கோவேறு கழுதைகூட இல்லாமல் ஆடுகளோடு அத்தனை உயிரினங்களையும் ஓட்டிக் கொண்டு போய்விட்டார்கள். வரமறுத்த குதிரைகளையும், எருதுகளையும் வெட்டிப் போட்டு விட்டுப் போனார்கள். பெண்களை நெஞ்சில் கத்தியிறக்கிக் குத்தினார்கள். கதறிய குழந்தைகளை உள்ளங் கையால் வாயையும், மூக்கையும் பொத்தி மூச்சுத்திணற வைத்துக் கொன்றார்கள்.

அந்த பிரம்மராயன் கோயில் தூண்களைப் பிடுங்கிக் கொண்டு போனான். சிவலிங்கங்களையும் பெயர்த்து எடுத்துக் கொண்டு போனதாகச் சொன்னார்கள்.

ஏன் கோயிலை பாழ்பண்ணுகிறீர்கள். எதற்கு தெய்வங் களைப் பெயர்த்து எடுத்துக்கொண்டு போகிறீர்கள் என்று ஊர் பெரியவர்கள் கேட்டதற்கு நாங்கள் கும்பிடத்தான் என்று சொன்னார்களாம். வேண்டுமென்றால் அங்கே வந்து

வழிப்பட்டுக்கொள்ளுங்கள் என்று திமிராகப் பேசினார்களாம். வயதான பெரியவர்களை விட்டுவிட்டு இளைஞர்களைக் கயிறு கட்டி, கழுத்தில் வளையம்போட்டு சங்கிலி கட்டி சோழ தேசம்வரை நடத்தி அழைத்துப் போயிருக்கிறார்கள். அங்கு கூலி வேலை செய்வதற்காக என்று கூட்டிப் போயிருக்கிறார்கள்.

போருக்குப்போன கணவன் திரும்பி வரவில்லை. இருக்கிறானா, இறந்தானா என்று தெரியவில்லை. ஊர்ப்பெண்கள் அலை மோதுவதும் ஒரு பண்டிகையும் கொண்டாடாமல் மொத்த சாளுக்கிய தேசமும் இழவு விழுந்த வீடுபோல கருண்டு கிடப்பதும் இயல்பாயின.

அந்தச் சோழன் அடித்து குதறிவிட்டுப் போய் ஐந்து வருடங்களாயிற்று.

சோழனால் அடிபட்டு செத்தவனை விட பட்டினி கிடந்து உண்ண உணவில்லாமல் செத்தவர்கள் அதிகம். காடு வழியே தப்பித்து வந்த சில வீரர்களும், இராஜேந்திர சோழரால் வேண்டுமானால் வெளியே போ என்று விரட்டிய வீரர்களுமாய் நரசிம்மவனத்தில் உட்கார்ந்து தாங்கள் சுகமாக வாழ்ந்த நாட்களையும் இப்போது செத்து மடிகின்ற கலைதயும் பேசிப் பேசி மறுகினார்கள். நாம் படையெடுத்து புண்ணியமில்லை. இனி படையெடுப்பு நடத்தும் அளவுக்கு நமக்கு வலிமையும் இல்லை. நாமும் சேரர்களைப்போல ரகசியமாக கடிகைகளைத் துவக்கி நமது இளைஞர்களுக்கு போர்ப்பயிற்சி அளித்து இரவோடு இரவாக சோழதேசத்து எல்லை கிராமங்களைச் சூறையாடிவிட்டு வரவேண்டும். புத்தபிட்சுக்கள் போலவோ அல்லது வடதேசத்து சிவனடியார்கள் போலவோ பைராகிகள் போலவோ வேடமிட்டு சோழ தேசத்தின் நடுமையத்தை ஊடுருவி அங்கு தற்கொலைப் படையாக மாறி கையில் கிடைத்தவர்களையெல்லாம் வெட்டிச் சாய்த்து விட்டு நம் நெஞ்சில் கத்தியைச் சொருகிக் கொல்ல வேண்டும். பத்துப்பதினைந்து பேர் உரக்கக் கத்தினார்கள்

அங்கே வலுவாகவும், பெரியவராகவும் இருந்த சில அரசாங்க அதிகாரிகள் மறுத்தார்கள்.

அதனால், எந்த மாற்றமும் நிகழ்ந்துவிடப் போவதில்லை.

கங்கதேசத்து இளைஞர்களையும் இராஷ்டிர கூடர் களையும் அரவணைத்துக் கொண்டுபோய் மெல்ல நம் முடைய தேசத்திற்கு கொண்டு வந்து கடும்பயிற்சி அளித்து மறுபடியும் ஒரு நல்ல சேனை திரட்டி கங்க சேதத்தில் ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற சோழ அதிகாரிகளை அடித்து விரட்டிவிட்டு அங்கிருந்து கொல்லாபுரம் வழியாக சோழ தேசத்திற்குள் புகவேண்டும். சேரர்களுக்கும் தூது அனுப்பி அவர்களையும் மேற்குப்புறம் தாக்கச் செய்ய வேண் டும். ரகசியமாய் பாண்டியர்களுக்கும் செய்திகள் அனுப்பி அவர்களையும் கலவரத்தில் ஈடுபடச் செய்ய வேண்டும்.

இந்தச் சோழ மன்னன் அவன் பெயரென்ன. இராஜ ராஜனா. அவன் மிகப்பெரிய சிவன்கோயில் கட்டிக் கொண் டிருக்கிறானாம். தினமும் ஆட்டமும், பாட்டமும், கூத்தும் நடக்கிறதாம். எப்பொழுதும் திருவிழாதானாம். குடந்தை யிலும், தஞ்சையிலும், குதூகலம் வழிகிறதாம். மரக்காலில் பொன் அளக்கிறானாம். தானியம் தருவது போல் மூட்டைக் கட்டித் தருகிறானாம். கூடைகூடையாய் வாரிப் போகிறார் களாம். நம்மிடமிருந்து ஓட்டிப் போன எருதுகளும், பசுக் களும், கன்றுகளும், வேளாளர்களுக்கும் கருமார்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டதாம்.

மேலைச்சாளுக்கியத்தின் வாரிசு எங்கே என்று தேடி அவனை அரசனாக நியமித்து படைதிரட்டி போர்ப் பயிற்சி கொடுத்து இன்னும் மூன்று வருடத்திற்குள், சோழதேசத்தைத் தாக்க வேண்டும். அவனைக் கோவிலை முடிக்கவொட்டாது. கோவில் முடிப்பதற்குள் சிரச்சேதம் செய்ய வேண்டும். வெறும் கலவரங்களால் எந்தப் புண்ணியமும் இல்லை. உயிரிழப்புதான் ஏற்படுமே தவிர, நாம் இளக்காரமாகத் தான் போவோமே தவிர, அதனால் ஏற்படும் தோல்விகள் நம்மைத் துவளவைக்குமே தவிர, ஒரு படையெடுப்பு என்பதுதான் இதற்குத் தீர்வாக அமைய முடியும். ஆட்கள் திரட்டுங்கள். ஆட்கள் திரட்டுங்கள். கங்க தேசத்திலிருந்தும் பாண்டிய தேசத்திலிருந்தும் இராஷ்டிரகூடங்களிலிருந்தும் ஏன் சேரர் களையும்கூட கெஞ்சிக் கூத்தாடி வரவழையுங்கள் சேர தேசத்து ஆச்சார்யர்களைக் கொண்டு வந்து வில் பயிற்சியும், வேல் பயிற்சியும் கொடுக்கச் சொல்லுங்கள். கையால் அடித் துத் தாக்குவதற்குக் கற்றுக்கொடுங்கள். பன்றியின் வேகத்தை, மூர்க்கத்தை உங்களுக்குள் தேக்கி வைத்துக் கொள்ளுங்கள்.

நமக்கு நேரம் வரும் அப்போது சோழனை நிச்சயம் அழிப் போம்.

நரசிம்மவனம் நமது பயிற்சிகளமாகத் திகழட்டும். நம்மில் இரண்டாகப் பிரிந்து பயிற்சி தரக்கூடிய அளவுக்கு முன்னேறுபவராக நம்மில் சிலரும், ஆட்களைத் திரட்டுபவ ராக நம்மில் சிலரும் மாறவேண்டும். யார் யார் எந்த வேலை என்பதை அவரவரே தீர்மானிக்கலாம். இங்குள்ள ஒவ்வொரு வரும் குறைந்த பட்சம் முன்னூறு ஆண்களையாவது கொண்டு வந்து கொடுக்க வேண்டும். மிகப்பெரிய படை ஒன்று உருவாக வேண்டும். இளைஞர்கள் பலர் இருக்கிறார் கள். அவர்கள்ளத் தம்பக்கம் வளைத்து இழுக்க வேண்டிய சாமர்த்தியம் உள்ளவர்கள் அந்தப் பக்கம் போவது நல்லது. சேரர்களிடம் போய் பிரியமாகப்பேசி நம்முடைய தேசத்து சந்தன மரங்கள் கொடுத்து அவர்களை போர்ப்பயிற்சிக்கென அழைத்து வருவது இன்னும் சிறப்பு. இவை இரண்டும் நிறை வேறினாலே நம் வேலை ஆரம்பித்துவிட்டது என்று பொருள்.

சேரதேசத்து ஆச்சார்யார்கள் புகழுக்கு மயங்குகிறவர்கள். நாம் புகழ்வோம். கொல்லாபுரத்து இளைஞர்கள் உணர்ச்சி வசப்பட்டு திசை திரும்புவார்கள். நாம் உணர்ச்சி ஊட்டு வோம். சோழம் வாழக்கூடாது. வாழ விடக்கூடாது. மிகப் பெரிய ஏழுபனை உயரம் சிவன் கோவிலாம். கருவறை மீது மிகப்பெரிய விமானமாம். எழுந்து நில் இதுதான் விமானத் தின் உயரம். கீழே இருக்கிறதே கருவண்டு. இதுதான் ஒரு யானையின் உயரம். அப்பொழுது கோயில் எவ்வளவு உயரம் என்று உனக்குப் புரியுமல்லவா. அங்குள்ள வீரர்கள் ஒருவன் பேச வியந்தார்கள். நீ எப்படித் தெரிந்து கொண்டாய் என்று கேட்டார்கள்.

"என்னைக் காஞ்சிபுரத்திற்கு சுமை தூக்க அனுப்பி னார்கள். காஞ்சிபுரத்தில்தான் இதற்கான வரை படங்கள் தயாராயின. மிகச்சிறந்த சிற்பிகள் அங்கு உண்டு. ஒரு இடத்தில் கைலாசநாதர் கோயில் என்கிற ஒரு அற்புதமான கற்றளி இருக்கிறது. அந்தக் கற்கோவிலை ஆதாரமாக வைத்து அதுபோல் பன்மடங்கு உயரமாக ஒரு கோயில் எழுப்ப வேண்டுமென்று தீர்மானித்து முதலில் அதை வரைந்து கொண்டு அதைப் பன்மடங்காகப் பெருக்கி பல நிலை களாகத் தூக்கி இன்னொரு விமானம் வரைந்தார்கள். அந்த விமானம்தான் அற்புதமாக இருக்கிறதென்று எல்லோரும்

சொல்ல, இப்பொழுது இந்தக் கோயில் கட்டுகிற குஞ்சர மல்லப் பெருந்தச்சரும் அதை ஆமோதிக்க அவைகள் எடுத்துப்போகப்பட்டிருக்கின்றன."

"எங்கே."

"சோழதேசத்தின் தலைநகரான தஞ்சை மாநகரத்திற்கு"

"சோழதேசத்தின் தலைநகரம் பழையாறையல்லவா."

"இல்லை. மாறிவிட்டது. பழையாறை இடம் போத வில்லை. வெற்றி பல பெற்றாகிவிட்டதல்லவா. அதனால் பழைய அரண்மனைப் பெண்டிர்களை அந்தக் கோட்டை யில் இருக்க வைத்துவிட்டு இன்னும் தெற்கே நகர்ந்து விட்டார்கள்."

"தஞ்சை வயல்கள் நிறைந்த நகரமா?"

"குடந்தைக்கும், தஞ்சைக்கும் நடுவே கண்ணுக்கெட்டிய தூரம் வயல்கள்தான் இருக்கும். காவிரியில் இருந்து பல வாய்க்கால்கள் பிரிந்து கிராமங்களை ஊடறுத்துப் போகின்றன. திருவையாறு என்ற இடத்தில் காவிரி ஐந்து கிளைநதிகளாகப் பிரிந்து பூமியைச் செழிப்பாக்கிக் கொண் டிருக்கிறது. காவிரி தீரத்து பசுமையே தனி தென்னைகளும், வாழைகளும், நெற்கதிர்களும் காய்கறித் தோட்டங்களும், நந்தவனங்களும் புல்வெளிகளுமாக இருக்கின்றன. மூன்று முறை இரண்டு உள்ளங்கைகள் குவிந்து ஒரு செப்புக் காசுக்கு சோறு போடுகிறார்கள். பிறகு உள்ளங்கை நீள கறித்துண்டு கொடுக்கிறார்கள். மொச்சையும், காய்கறியும் கலந்த குழம்பு ஊற்றுகிறார்கள். இன்னொரு செப்புக்காசு கொடுத்தால் கோழிக்கறியும், மீன் வதக்கலும் தருகிறார்கள். குடிக்க வெண் ணெய் கலந்த மோர் தருகிறார்கள். விடிந்ததும் வேளாளர்கள் கள் குடித்து விட்டோ அல்லது பழைய நீராகாரம் சாப்பிட்டுவிட்டோ வேலைக்குப் போகிறார்கள். மடியில் இனிப்பு கட்டிக்கொண்டு போய் நடுவே உண்கிறார்கள். பிறகு வெற்றிலை மெல்கிறார்கள். உச்சிவரை வேலை செய்து விட்டு பிறகு கரையேறி ஆற்றினில், ஊறுணியில், கால்வாயில் நன்றாகக் குளித்துவிட்டு சோற்றுக்கடை நோக்கி நடக்கிறார்கள். நான் சொன்னபடி சோறு சாப்பிடுகிறார்கள். பிறகு வெற்றிலைபோட்டு மரநிழலிலோ, சத்திரத்துத் திண்ணையிலோ, கோயில் மண்டபங்களிலோ கால்நீட்டி இளைப்பாறுகிறார்கள். வெய்யில் தாழ்ந்ததும் மறுபடியும்

தலைப்பாகை கட்டிக்கொண்டு மேற்பார்வை பார்க்கிறார்கள். சிறுசிறு வேலைகள் செய்கிறார்கள். இருட்டுவதற்கு முன்பு வீட்டிற்குப் போய்விடுவார்கள் தினமும் கூத்துகள், பாடல்கள், கவிதைகள் என்று ஏதேனும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

எல்லா வேளாளப் பெண்களும் நகைகள் போட்டுக் கொண்டு நல்ல புடவைகள் உடுத்திக் கொண்டும் இருக்கிறார்கள். உடுத்துகிற நாகரிகம் சோழதேசத்தில் அதிகமாகி விட்டது."

"இப்படித்தானடா நாமும் வாழ்ந்து வந்தோம். ஒரு செப்புக்காசுக்கு மூன்று உள்ளங்கைகள் அளவுக்கு சோறு போடுவான் என்று சொல்கிறாய். இலவசமாக அல்லவா இந்த தேசத்தில் சோறு தின்று கொண்டிருந்தார்கள். ஒரு செப்புக்காசுக்கு விருந்தேயல்லவா நடக்கும்."

"ஆனால், அது பழங்கதை, அதைப்பேசி புண்ணியமில்லை. மறுபடியும் அந்த சுபிட்சம் வரவேண்டுமென்றால் நாம் வாளெடுத்துதான் ஆகவேண்டும். படையெடுத்துதான் ஆகவேண்டும். ஆத்திரப்பட்டோ, அவசரப்பட்டோ, தற்கொலைப் படைகளை அனுப்பியோ கலவரம் செய்வதில் எந்தப் புண்ணியமில்லை. அமைதியாய், கம்பீரமாய், கனமாய் எந்த இடத்திற்குச் சோழ தேசத்துபபடைகள் வராதோ அந்த இடத்தில் நாம் பயிற்சியை ஆரம்பிக்க வேண்டும்.

நாம் இரண்டாகப் பிரிவோம். யார் யார் பயிற்சிக்கு நிற்கிறீர்கள். யார் யார் நடந்து பல பிரதேசங்களுக்குத் தூது போய் ஆட்கள் கொண்டு வருகிறீர்கள். தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

அவர்கள் நெடுநேரம் பேசி விவாதம் செய்து இரண்டாகப் பிரிந்தார்கள்.

அந்தப்பேச்சு முடிந்த பதினைந்து நாட்கள் கழித்து சேரதேசத்து எல்லையில் கடிகை அமைத்து பரதவர்களோடு பரதவர்களாக வாழ்ந்து வந்த அந்தணர்களை ஒரு சாளுக்கிய அதிகாரி சந்தித்தான். வணங்கினான். விஷயம் சொன்னான்.

"அப்படியா எந்த இடத்தில் பயிற்சியை நடத்த வேண்டும்."

"நரசிம்மவனம்"

"நரசிம்மவனமா. எங்கிருக்கிறது."

"அதை நான் இப்பொழுது சொல்லமுடியாது. ஆனால் உங்களுக்குக் காட்டமுடியும்."

"நான் ஒருவன் மட்டும் ஆச்சார்யனாக வந்தால் போதாதே. எத்தனை பேருக்கு பயிற்சி தரவேண்டும்."

"குறைந்தபட்சம் ஒரு லட்சம் பேருக்கு."

"முட்டாள் என்னை மட்டும் அழைத்து என்ன பயன். ஒரு லட்சம் வீரருக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமெனில் ஆயிரம் குருமார்கள் தேவை."

"ஆயிரம் குருமார்கள் சேரதேசத்தில் கிடைக்க மாட்டார்களா."

"சரி. ஐம்பது பேரையாவது எடுத்துக் கொண்டு போவோம். ஐம்பது பேர் ஆயிரம் சாளுக்கிய ஆச்சார்யர்களைத் தயார் செய்வோம். அந்த ஆயிரம் சாளுக்கியர்கள் தங்களுக்குண்டான சீடர்களைத் தேடிக் கொள்ளட்டும் சரியா. நான் போர் வீரர்களைப் பயிற்சிக்க வில்லை. ஆச்சார்யர்களை பயிற்றுவிக்க வருகிறேன். சோழனை அழிப்பதற்கு இது மாதிரியான சந்தர்ப்பத்தை நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்."

உற்சாகத்துடன் அந்த சேரதேசத்து அந்தணன் கிளம்பினான்.

அங்கங்கே ரகசியமாய் மறைந்திருந்த மற்ற அந்தணர்களுக்குச் செய்தி தெரிவித்தான்.

அவர்கள் கடற்கரையில் கூட்டம் போட்டார்கள். அவர்கள் பத்துப் பத்துப்பேராய் வடக்கே போகின்ற அந்தணர்கள் போல தர்ப்பைகளுக்கும், வரட்டிகளுக்கும் நடுவே ஆயுதங்களை ஒளித்து வைத்துக்கொண்டு மாட்டு வண்டிகளில் அவர்களை ஏற்றிக்கொண்டு வடக்கு நோக்கி சாளுக்கிய தேசம் நோக்கி நகர்ந்தார்கள்.

வெற்றி என்பதை தக்கவைத்துக் கொள்வதுதான் மிகப் பெரிய சோதனை. நிரந்தரமான வெற்றி என்றோ, நிரந்தரமான தோல்வி என்றோ உலகத்தில் எந்தப் பகுதியிலும் நிகழ்வதேயில்லை. இவை மாறிமாறி வருபவை. தோல்வியுற்றவர்கள் வெற்றி நோக்கி நகர வேண்டுமென்று ஆசைப்பட,

வெற்றியடைந்தவர்கள் மேற்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் வெற்றியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமே என்ற கவலையோடு கிடந்தார்கள். அந்தக் கவலையை மறைக்க ஆட்டபாட்டங்களில் அதிகமாக ஈடுபடத் துவங்கினார்கள். போரற்ற காலங்களில் பொழுது போக்குக் கலைகள் அதிகமாகும். பொழுதுபோக்குகள் அதிகமாக மனம் அதில் லயிக்க லயிக்க போர்பற்றிய சிந்தனை மறந்து போகும். சோம்பல் படரும். சோழதேசத்தில் ஒரு மெல்லிய சல்லாத்துணியாய் ஒரு சோம்பல், நோய் படரத்துவங்கியது.

# 124



கும்பக்கலசமும், வெற்றிலைத் தட்டும் பழக்கூடைகளும், நெற்கதிர்களும், தேனில் தோய்த்த பலாச்சுளைகளும், தின்பண்டங்களும் வைத்துக் கொண்டு தேவரடியார்கள் வரிசையாக நிற்க சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் அவைகளைத் தொட்டு ஆசிர்வதித்தார்.

உண்ணுங்கள் என்று விருப்பமாக தளிச்சேரி பெண்டுகள் சொல்ல, நான் உண்டதுபோதும் என்று கை உயர்த்திச் சொன்னார்.

பெண்கள் அந்தப் பொருட்களைத் தங்கள் வீடுகளுக்கு எடுத்துப் போனார்கள்.

மன்னர் மணிமண்டபத்திற்குப் போய் அமர்ந்ததும் உள்ளே போய் வீணை ஆதிச்சர் சயனம் எங்கே என்று காதோரம் கேட்டான்.

“இங்குதான்”

"தெரியும். எந்தக் கிரகத்தில் யாருடைய வீட்டில்" என்றும் பவ்யமாகக் கேட்டான்.

''இல்லை இதே மணிமண்டபத்தில் இருக்கப் போகிறேன்.'' என்று சொல்ல, வீணை ஆதிச்சர் சற்றுக் கவலையோடு பார்த்தான்.

"இந்த இடம் போதுமானது. இந்த ஆசனத்திற்குப் பிறகு பின்பக்கம் கட்டில் போட்டு திரைகட்டி விடுங்கள்" என்று சொல்ல விரைவாக திரை நகர்த்தி கட்டிலைக் கொண்டு வந்து போட்டார்கள்.

மாலை மங்கிவரும் வேளையில் பல்வேறு தீபங்கள் ஏற்றப்பட்டன. தீப்பந்தங்கள் சரியான இடத்தில் நடப் பட்டன. ஆண்களும், பெண்களும் சக்ரவர்த்தியைச் சுற்றி தேவரடியார்கள் சற்று நெருக்கமாக மன்னர் காலடியில் அமர்ந்து கொண்டார்கள். வீணை வாசிப்பவர்களும், மத்தளம் கொட்டுபவர்களும் தள்ளி நின்றார்கள். தங்களில் நல்ல தலைக்கோலி எனக்கருகே அமர்ந்து கொள்ளலாம் என்று மன்னர் சொல்ல பலபேர் வெட்கப்பட்டார்கள்.

மத்திமவயது கடந்த தலைக்கோலி எழுந்து வந்து மன்னரை வணங்கினாள் அவருக்கருகே ஆசனத்தின் விளிம்பில் அமர்ந்து கொண்டாள்.

நன்றாக உட்கார் என்று அவள் தோளைப்பிடித்து மன்னர் பின்னே சாய்க்க, அவள் சிரித்தபடி நகர்ந்து சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

"என் வலதுபக்கக் கணுக்கால் சிறிதுநாளாய் வலிக்கிறது. இங்கு யாருக்கு நரம்புகளை நீவத்தெரியும்" என்று சொல்ல, வேறொரு சிறிய பெண் எழுந்திருந்து அவருக்கருகே போனாள். விழுந்து வணங்கினாள்.

அவருடைய வலது காலை எடுத்து தன் தொடையில் வைத்துக் கொண்டாள்.

"இடது பக்கம் காலியாக இருக்கிறதே. இங்கு யார் அமர்ந்து கொள்வார்கள்'' என்று மன்னர் கேட்க, பல பெண்கள் ஆவலோடு மன்னரைப் பார்த்தார்கள்.

''கூப்பிடுங்களேன் '' என்று கெஞ்சலாக அவரைக் கவனித்தார்கள்.

"இதுவும் தலைக்கோலிக்கான இடம்தான். ஆனால் உன் வயது இருக்கக்கூடாது." இளமையான தலைக்கோலிகள் உயர்ந்து முதுகு நிமிர்த்திப்பார்த்தார்கள்.

"உன்னையும்விட வயதான தலைக்கோலிக்குத் தான் என் இடதுபக்க இடம்" என்று சொல்ல முகம் பொத்திக் கொண்டு சிரித்தார்கள்.

தலையெல்லாம் குப்பென்று நரைத்த.... சிறுவயதில் மிக அழகாக இருந்திருப்பாள் என்று பலரும் சொல்லக் கூடிய ஒரு தலைக்கோலி எழுந்து வந்து மன்னரின் முகத்தை வழித்து நெற்றியில் சொடக்கு போட்டாள். தீர்க்காயுசாக இருக்க வேண்டுமென்று சொல்லி அவருக்கருகே உட்கார்ந்து அவர் கைகளைப்பற்றி கண்ணில் ஒற்றிக் கொண்டாள். விரல்களைச் சொடுக்கெடுக்கத் துவங்கினாள்.

புஜத்தைப் பிடித்துவிட்டாள்.

ஆஹா... என்ன சுகமடா இது. கால்களை ஒருவர் பிடித்துவிட, புஜத்தை ஒருவர் பிடித்துவிட, எல்லாம் கடந்த ஒரு இன்பப் பெருவெளியில் நீந்துவது போலல்லவா இருக்கிறது.. பெண்களுக்கு நடுவே அமர்ந்திருப்பது போன்ற ஒரு சுகம் உலகத்தில் வேறு எதுவும் இல்லை.

"நல்லது. உங்களுக்கு யாருக்கெல்லாம் என் மீது கோபம். கை உயர்த்துங்கள்."

"யாருக்கும் கோபமில்லை"

ஒரு தலைக்கோலி அருகே அமர்ந்திருந்தவள் உரத்த குரலில் சொன்னாள்.

"ஆனால், எங்களில் சிலர் உங்களோடு சண்டை போட விரும்புகின்றோம்."

"கோபமிருந்தால்தானே சண்டை. கோபமில்லாத சண்டையும் உண்டா."

"உண்டு. புடவை வாங்கித்தரவில்லை என்று புருஷனைக் கோபித்துக் கொள்கிற பெண் கோபமா. அதுவொரு சண்டையல்லவா. அன்பினாலும் சண்டை ஏற்படலாம் அல்லவா. அதிகாரத்தாலும் சண்டை ஏற்படலாம் அல்லவா. உரிமையாலும் சண்டை ஏற்படலாம் அல்லவா."

"அடடே.... ஏற்படலாம். உங்களுக்கு உரிமையிருக்கிறது. சண்டை போட என்று சொல்கிறீர்கள். அப்படித்தானே."

"ஆமாம். அப்படித்தான்."

"எதற்காக சண்டை போடப்போகிறீர்கள். வீடு சரியாக இல்லையென்றுதானே."

தளிச்சேரி பெண்கள் மௌனமாக அமர்ந்திருந்தார்கள்.

"சொடுக்கு நேரத்தில் எதுவும் நடந்துவிடாது. கங்கதேச வீரர்கள்போல நீங்களும் நடந்து கொள்ளாதீர்கள்."

"அதென்ன கங்கதேச வீரர்கள்."

"ஆமாம். கங்கதேச வீரர்களை ஒன்றாகத் திரட்டி நடக்கச் சொல்லி பிறகு உச்சியில் ஏதேனும் ஒரு இடத்தில் நிற்க வைத்தால் சோழதேசம் வந்துவிட்டதா என்று கேட்பார்கள். இல்லை, சோறு தின்பதற்குத்தான் உட்கார வைத்தேன் என்று சொன்னால், அப்படியா சரி என்று சொல் வார்கள். மறுபடியும் கூட்டிக்கொண்டு போய் இன்னொரு இடத்தில் உட்கார வைத்தால் சோழதேசம் வந்துவிட்டதா என்று கேட்பார்கள். இப்படி நாற்பத்து மூன்று முறை சோழதேசம் வந்துவிட்டதா என்று கேட்டு நாற்பத்துநாலாவது முறை கேட்கும் போதுதான் சோழதேசம். அவர்கள் கேட்பதற்கு அலுக்கவே இல்லை."

அவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

"நடப்பதற்கு அவ்வளவு பெரிய சோம்பல்."

ஒரு பெண் சொல்ல, "இல்லை எல்லாம் விரைவில் நடந்து விட வேண்டுமென்ற ஆசை. ஒன்றரை நாழிகையில் தஞ்சைக்குப் போகவேண்டும் என்று அவர்கள் எல்லோருக் கும் ஆசை. மிக விரைவான குதிரை கிடைத்தால்கூட அது கடினம். குடந்தைக்கு மாட்டுவண்டியில் போனால் அரை நாள் ஆகும். திரிசிரபுரத்திற்கு இரண்டுநாள் பயணம். சாளுக் கிய தேசத்திற்கு ஒருமாதம் நடக்க வேண்டும். நமது போர் வீரர்கள் காடும், மலையும், ஆறும் கடந்து போராடி வெற்றி பெற்று அங்கிருந்து கொண்டு வந்த பல சௌகரியங்களை நீங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள். இது ஒரு நாளில் கிடைத்த சௌகரியம் அல்ல. மாதக்கணக்காய் போராடிப் போராடிக் கிடைத்தது. கிடைத்த இடத்தில் தூங்கி கிடைத்த இடத்தில் உண்டு எந்த நேரமும் எதிரியோடு போரிடுவதற்குத்

தயாராக இருந்து அடிபட்டு ரத்தம் சிந்தி கண்முன்னே பலர் விழுந்து மடிவதைப் பார்த்து இன்னும் உக்கிரமாகப் போராடித் திரும்புவோமா, மாட்டோமோ என்ற நினைப்போடே உறங்கி பிறகு வெற்றி பெற்று கொண்டுவந்த சௌகரியத்தைத் தான் நீங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள். அந்த நகைகள்தான் உங்கள் கழுத்தில் இருக்கின்றன அந்த உடைகள்தான் உங்கள் இடுப்பில் இருக்கின்றன. எருதுகளும், குதிரைகளும்தான் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த வீரர்களை வைத்துக் கொண்டு தான் உங்களுக்கு மேற்கொண்டு சௌகரியங்கள் செய்து தரப்படும். வெற்றி ஒருநாளில் கிடைக்கவில்லை. அதேபோல சௌகரியங்களும் ஒருநாளில் கிடைக்காது.

மறவர்கள் போராடி பெற்ற வெற்றியை, அவர்கள் பட்ட கஷ்டத்தை, வேதனையை நீங்கள் மறந்து விடலாகாது. சோழ தேசத்து மறவர்களின் செழிப்பை, வீரத்தை, தியாகத்தை திரும்பத் திரும்ப மக்களுக்கும் மற்ற கலைஞர்களுக்கும் ஞாபகப் படுத்த வேண்டியது உங்கள் கடமை. நீங்கள் மறந்துவிட்டு கூக்குரலிட்டால் என்ன அர்த்தம்.

சலைலைக்கல் மாளிகையை விட்டுவிட்டு இந்த குடிசைக்கு வந்துவிட்டேனே என்று யாரோ அழுதார்களாம் எல்லோரும் சேர்ந்து பூமியை உதைக்காதீர்களடி. கூரை விழுந்துவிடப் போகிறது என்று கேலி செய்தார்களாம்."

சட்டென்று அருகே உட்கார்ந்திருந்த தலைக்கோலி மத்திம வயதுடையவள் சக்ரவர்த்தியின் பக்கம் திரும்பி, "எந்த மறவரையும் நாங்கள் கேலி செய்ததாக எனக்கு நினைவில்லையே. மறவர்களை எங்கள் மனிதர்கள் யாரும் ஒருபொழுதும் இழிவுபடுத்த மாட்டார்கள். நீங்கள் இப்படிப் பேச என்ன காரணம்" என்று தைரியமாகக் கேட்டார்.

"பிரம்மராயர் கிருஷ்ணன் ராமனான சேனாதிபதியின் மகன் உபசேனாதிபதியாக இருப்பவன். பல போர்களுக்கு இராஜேந்திரரோடு போனவன். காந்தளூர்ச்சாலையில் மேற்படிப்பு படித்துவிட்டு அந்த சேரதேசத்து நிர்வாகங்களைப் பற்றித் தெரிந்து கொண்டு அதில் ஈடுபட்டு அங்கே செம்மைப் படுத்தித் திரும்பியவன். இங்கு வந்து உங்கள் கேலிக்கு ஆளாக வேண்டுமா"

"அப்படியா எனக்குத் தெரியாதே."

ஒரு தலைக்கோலி திடுக்கிட்டாள்.

"அருண்மொழி வருங்கால பிரம்மராயர் ஆயிற்றே."

"ஆம். அதைச்சொல். அருண்மொழி சாதாரணமானவன் இல்லையென்பதை உன் தோழிகளுக்குச் சொல். உங்களைப் போன்ற நடனமாதர்களைப் பார்த்தால் வெட்கப்படுகிற வயது. ஆனால், மௌனமாக இருந்தானே தவிர, அருண்மொழிக்கு சீறத் தெரியாது என்று நினைத்திருக்கிறீர்களா. நீங்கள் உரத்த குரலில் குறை சொல்லும்விதம் எனக்கு சற்றும் பிடிக்கவில்லை. விளையாட்டாகச் சொல்லிவிட்டோம் என்று இப்பொழுது நீங்கள் சொல்லலாம். கோயில் கட்டுவது விளையாட்டான விஷயம் என்று உங்களில் யார் யார் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இதில் என்ன ஆபத்துகள் இருக்கின்றன என்று உனக்குத் தெரியுமா?

இத்தனை உயரம் கற்கள் போவதற்கும், சாரம்கட்டுவதற்கும் உயிரைப் பணயம் வைத்துத்தான் வேலை செய்ய வேண்டும் என்பது தெரியுமா. ஒரு நூல் இழை பிசகினாலும் கருங்கல்லில் ஒரேயொரு நூல் அளவு பிசகினாலும் உச்சியில் இந்த விமானம் கோணலாக முடியும் என்பது உங்களுக்குத் தெரியுமா. நடுப்பக்க அகலம் நான்கு புறமும் சமஅளவாய் குறைந்துகொண்டே போக வேண்டும். இது செங்கல் வேலையல்ல. கருங்கல் வேலை. கருங்கல் பலகைகள் அறுக்கப்படும் போது மிக மிகத்துல்லியமாகச் செய்யப்படவேண்டும். இரண்டாவது தளத்தில் சிறிது கோணலானாலும் உச்சியில் கலசம் வைக்க இயலாது போகும். இங்கே உங்களுக்கும் ஒரு சந்தேகம் வரும்.

"சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் கண்மூடி சிறிதுநேரம் அமர்ந்திருந்தார்."

"எதற்காக நாம் இங்கு வரவழைக்கப்பட்டிருக்கிறோம் என்ற கேள்வி வரலாம்."

சிற்பிகள் கோயில் கட்டப் போகிறார்கள். அடிமைகள் உதவி செய்யப் போகிறார்கள் மறவர்கள் பாதுகாப்பு அளிக்கப் போகிறார்கள். இங்கே நமக்கென்ன வேலை என்று நீங்கள் கேட்கலாம். விதம்விதமான ஆண், பெண் சிற்பங்களைக் கூறும் தூணில் செதுக்குவதற்கு நம்மை மாதிரியாக நிறுத்துவதற்கு கொண்டு வந்திருக்கிறார்களோ என்று சொல்லலாம். மாதிரியாக நிற்பதற்கு பத்துப் பெண்கள் இருந்தால்

போதும். இத்தனை நூறு பெண்கள் தேவையில்லேயே. நீங்கள் ஏன் வரவழைக்கப்பட்டிருக் கிறீர்கள். குமரியிலிருந்து திரு வேங்கடம் வரை ஒவ்வொரு கோட்டத்திலிருந்தும், ஒவ்வொரு கோவிலிருந்தும் தேவரடியார்கள் வரவேண்டும் என்று கட்டளை அனுப்பியிருக்கிறேனே. அதன்படி இங்கு வந்து சேர்ந்திருக்கிறீர்களே எதற்காக. உங்களை நான் ஏன் தொந்தரவு செய்ய வேண்டும்.

உங்களுக்கு மிகப்பெரிய பொறுப்பு ஒன்று இருக்கிறது. வெற்றி பெற்ற மறவர்கள் ஒருபுறம். இந்த மகத்தான பணியில் வெற்றி பெறப்போகும் சிற்பிகள் மறுபுறம். தோற்றுத் துவண்டு தன் விதியை நொந்து கொண்டு அதிர்ந்து அமர்ந்திருக்கும் அடிமைகள் இன்னொருபுறம். வணிகர்கள் ஒருபுறம் சிற்பிக ளுக்கும் ஊர்மக்களுக்கும் உதவியாக இடையறாது உழைத்துக் கொண்டிருக்கின்ற கருமார்கள், மரத்தச்சர்கள், நெசவாளர்கள் என்று இன்னொரு புறம். சோழதேச சாம்ராஜ்ஜியத்தின் நலனுக்காக இடையறாது பிரார்த்தித்துக் கொண்டு நமக்கு ஆலோசனைகள் வழங்கும் அந்தணர்கள் ஒருபுறம் என்று தனித்தனி குழுவாக இருக்கின்ற நாம் எதன் பொருட்டும் எந்த விதமாகவும் முரண்பட்டுப் போய்விடக்கூடாது.

நமது முரண்களினால் இந்தக் கோயில் வேலையோ, சோழதேசத்தின் ஒற்றுமையோ குலைந்துவிடக்கூடாது என்று நான் நினைக்கிறேன். அப்படி ஒரு குலைவு நிகழாமல் இருக்க, அப்படி முரண்கள் ஏற்பட்டு மோதல்கள் ஏற்படாமல் இருக்க, அப்படி ஒரு கோபமான நிலை வந்தால், அந்த இடத்தைக் குளிர்வு செய்ய உங்களை இங்குக் கொண்டு வந்திருக்கிறேன்.

மனிதர்கள் தனியே உட்கார்ந்து வெறுத்துக் கொண் டிருந்தால் அவர்களுக்குள் இருக்கின்ற பயமும், கோபமும் பெரிதாகும். வெறுத்துப்போய் தனியே இருக்க விடாது அவர் களை உற்சாகப்படுத்தி வாழ்க்கை என்பது அப்படித்தான் மேற்கொண்டு நகருங்கள் என்று அவர்களைத் தைரியப்படுத்த உங்கள் உதவி தேவை.

இவ்வளவு பெரிய பணி எனக்கு எதற்கு. என்னால் எப்படிச் செய்ய முடியும். எனக்கே என் வாழ்க்கை பற்றிப் புரியவில்லையே என்று இங்குள்ள சில தலைக்கோலிகள், நடனப் பெண்மணிகள் கேள்வி கேட்கலாம். வாழ்க்கையின் சூட்சுமம் எல்லோருக்கும் புரிந்துவிடாது. புரிந்துவிட்டால்

இந்த உலகத்தில் இயல்பு வேறுவிதமாக இருக்கும். போர் என்ற விஷயமே இருக்காது. ஆனால் வாழ்க்கையின் போக்கு அவ்விதமாக இல்லை. எல்லோருக்கும் வாழ்க்கை புரியவில்லை. வெகு சிலருக்கு வாழ்க்கை என்ன என்று புரிந்திருக்கிறது. அப்படிப் புரிந்தவர்கள் இந்த வாழ்க்கை என்ன சொல்கிறது என்பதை வெகு சூட்சுமமாகச் சொல்லி வைத்துப் போயிருக்கிறார்கள்.

நான்கு வேதங்கள் அப்படிப்பட்ட விஷயங்கள்தான். எளிதில் புரிந்துகொள்ள முடியாத கடவுள்பற்றி எல்லா வேதங்களும் வியப்பாகப் பேசுகின்றன. எப்படி வாழ வேண்டும் என்றும் சொல்கின்றன. எப்படி தொழ வேண்டும் என்றும் சொல்கின்றன. எது சரி, எது தவறு என்று பிரித்துக் காட்டுகின்றன. அதன் தொடர்பாக அதற்கு விளக்கமாக உபநிஷத்துகள் எழுந்தன. பிற்பாடு வேதத்திற்கு விளக்கவுரை எழுதியவர்கள் இன்னும் விளக்கமான வாழ்வியல்பற்றிக் கவலைப் பட்டிருக்கிறார்கள். அதை இன்னும் எளிமையாக்கி புராணங்கள் சொல்லப்பட்டன.

உலகம் மாயை என்று சொன்னால், அதை எப்படி விளக்குவது. நாரதருடைய கதை ஒன்று விளக்குகிறது.

நாரதரும், நாராயணரும் நடந்து போய்க் கொண்டிருக்கும் போது மாயை மாயை என்கிறார்களே அது என்ன என்று எனக்குச் சொல்லக்கூடாதா என்று நாரதர் நாராயணரைக் கேட்க, சொல்கிறேன். எனக்கு தாகமாக இருக்கிறது. தண்ணீர் எடுத்து வாரும் என்று சொல்ல, நாரதர் வேகமாக ஓடி ஆற்றில் ஓடுகின்ற நீரை ஒரு சொம்பு மொண்டு நிமிர்ந்து பார்த்தபோது அங்கு அழகிய பெண் ஒருத்தி நிற்கக்கண்டு, அவளைக்கண்டு மோகித்து அவளோடு பேசி, பழகி, ஆடி, பாடி அவர்களின் வீட்டார் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டு பிறகு குழந்தைகள் பலபெற்று, அந்த குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகி அவர்களுக்குத் திருமணம் முடித்து, திருமணம் முடித்தபிறகு அந்தக் குழந்தைகளுக்குக் குழந்தைகள் பிறந்து ஒருநாள் ஆற்றில் வெள்ளம் வர எல்லோரும் அடித்துக்கொண்டு நாலாதிசைக்கும் போக ஏன் இப்படி, ஏன் இப்படி என்று அலறிக்கொண்டே நாரதர் நாலாபக்கமும் அலைய, நாராயணர் அவரைத் தடுத்து நிறுத்தி, ஏன் தண்ணீர் கொண்டு வரவில்லை என்று

கேட்டாராம். இப்பொழுது என்ன நடந்தது என்று கேட்க, அதுதான் மாயை என்று நாராயணர் சொன்னாராம்.''

வேதம் சொல்லுகிற ஒரு கடினமான ஒரு விஷயத்தை, இந்தப் புராணம் விளக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

கூட்டம் மௌனமாகக் கேட்டது. இராஜேந்திரர் தன் தகப்பனாரான சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவரை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆயிரக்கணக்கான வீரர்களுக்கு நடுவே நின்று, போர் வேண்டியதினுடைய அவசியத்தை, வேகத்தை சாளுக்கியரை அழித்து ஒழிக்க வேண்டிய தன் அவசியத்தை அவர் உரத்து முழங்கக் கேட்டிருக்கிறார். சேரமன்னன் தூதுவர்களை இழிவு படுத்தினான் என்று தெரிந்ததும் சபையில் எழுந்து நின்று கொள்ளிப் பாகையை தரைமட்டமாக்குவேன் என்று உரத்த குரலில் சபதம் செய்ததைக் கேட்டிருக்கிறார். ஆனால் இங்கே தத்துவச் செறிவாக உள்ளம் உருகும்விதத்தில் இங்குள்ள ஒவ்வொரு மனிதரும் தன்னிலை மறந்து கேட்கும் விதத்தில் குரலுயர்த்தி பிசிறில்லாமல் கம்பீரமாகப் பேசுவது பார்த்து வியந்து போனார்.

இதுதான்... இதுதான் இவருடைய சக்ரவர்த்திக்கான முதல் தகுதி. இப்படி பேசவேண்டுமென்றால் இவர் எவ்வளவு யோசித்திருக்க வேண்டும். அந்தக் கம்பீரத்தை நாம் அடைந்து விட்டோமோ. இந்தப் பாடத்தைப் புரிந்துகொண்டு விட்டோமா, எனக்கு உள்ளுக்குள் சில ஆதங்கங்கள் இருக்கின்றன. என் வழி சரியென்று நான் பிடிவாதமாக யோசிக்கிறேன். ஆனால் என்னை வளர்த்துக் கொண்டிருக் கிறேனா என்பது பற்றி நான் கேள்வி கேட்டுக் கொள்வதே யில்லை. வளர்ந்து விட்டேன் என்றே நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். இப்படி இவருக்கருகே உட்கார்ந்து இவர் செய்கின்ற வேலைகளைப் பார்க்கும்போது எனக்கு இன்னும் போதாது என்றுதான் தோன்றுகிறது. வெறும் யுத்தம் புரிந்து புரிந்து ஜெயிப்பது மட்டுமல்ல. மக்களைக் கவருவது என்பது தான் முக்கியம். இதோ இந்த நடனப்பெண்களெல்லாம் இவர் காலடியில் அமர்ந்து சிலைபோலே இவரையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் இதுபோல என்னைப் பார்த்தார் களோ, மறவர்கள் வந்து நேசிக்கிறார்கள் என்பது மட்டுமே ஒரு அரசனுக்குப் போதாது. யுத்தகாலங்களில் மறவருடைய நேசம் அவசியம். ஆனால், சமாதான காலங்களில் மக்கள்

அத்தனை பேருடைய கவனமும் அரசன்மீது இருக்க வேண்டும். அரசாங்கத்திற்காக ஜனங்கள் உழைக்க வேண்டும். அந்தப் பலத்தில்தான் மறவர்கள் சிறக்க முடியும்.

மந்திரத்திற்குக் கட்டுப்படுவதுபோல இந்த ஜனங்கள் இவரிடம் இவ்வளவு பிரியமாக இருப்பதற்குக் காரணம் இவருடைய அக்கறை, கனிவான பேச்சு, கருணையான பார்வை, இதமான நடவடிக்கைகள் அருண்மொழிப் பட்டனிடம் குதித்தவர்கள், பிரம்மராயரிடம் குறை சொன்னார்கள். இப்பொழுது வாய்மூடி மௌனமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். வீடு பற்றி எந்தப் பேச்சும் எழாமல் இருக்கிறது. யாருக்கும் அதுபற்றிப் பேசுகிற எண்ணம் இருப்பதாகவே தெரியவில்லை. மிகுந்த கவனத்துடன் சுற்றி முற்றி இராஜேந்திரர் பார்க்க அவர் மெய்க்காவல்படை அவரையும்விட கூர்மையாக நாலாபுற மும் பார்த்தார்கள்.

சாவூர்பரஞ்சோதி மணிமண்டபத்தூணுக்கருகே கைகட்டி நின்றிருந்தான். நல்ல உயரம். கட்டுமஸ்தான தேகம். முதுகோடு தொங்கும் நீண்ட உடைவாள். மேலே சட்டை அணிந்து அதன்மீது மணிக்கயிறு போட்டு இடுப்பில் இறுக்கி யிருந்தான். கணுக்கால்வரை வேட்டி உடுத்தியிருந்தான். கணுக்காலில் இருக்கும் வேட்டியை பறக்காத வண்ணம் துணிபோட்டு கற்றியிருந்தான். பாதரட்சை போட்டுப் போட்டு சற்று குறுகலாய் இருக்கின்ற கால்கள். ஆனாலும், முகத்தில் ஒரு துக்கம் இருந்தது.

இந்த தளிச்சேரி பெண்களை எதற்குத் தயார் படுத்துகிறார் சக்ரவர்த்தி என்பது தெரிந்துவிட்டது. ஆடலும், பாடலும் அதிகம் செய்து ஒவ்வொரு இரவும் சிற்பிகளையும், மறவர்களையும் மகிழ்வித்துக் கொண்டிருங்கள். எந்தவொரு கூட்டம் பொழுது போக்கில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறதோ, அதற்குப் பெரிய சீற்றங்களோ, ஆத்திரங்களோ இருக்காது. இந்த சீற்றங்களும் எரிச்சல்களும் இரவு நேர ஆட்டபாட்டங்களில், அங்கு போடும் கோமாளிக்கூத்தில் விதூஷகச்சிரிப்பில் அடிப்பட்டுப் போகும். விடிந்ததும் இரவு பார்த்த கூத்தும். அதன் ரம்மியமும் குதூகலமும் கெக்கலித்த சிரிப்பும்தான் நினைவுக்கு வருமே தவிர வேறு எந்த வேதனை யும் முன்னே நிற்காது. இதுவொரு மயக்கம். இதுவொரு போதை மருந்து. மனம் லேசாகி விடுவதால் எதுபற்றிய

வெஞ்சினமும் இருக்காது. குறிப்பாய் இது அடிமை வீரர்களுக்கு மிக அவசியம்.

அவர்கள் சோழ தேசத்தோடு இணைந்து இந்த மொழியை நன்கு கற்று நாகரிகத்தோடு ஒன்றிப் போவார்கள். பெண்களின் ஆட்டத்திலும் பாட்டத்திலும் ஈடுபட்டவர்கள் பரத்தையர்களை நாடிப்போலார்கள் அல்லது நன்றாக மது அருந்திவிட்டு பாட்டுப் பாடி தூங்கிப் போவார்கள். விடியலில் எழுந்து மாடுபோல வேலை செய்வார்கள். மாலைப் பொழுதானதும் குளித்துவிட்டு எங்கே கூத்து எந்த இடத்தில் என்ன விதமான ஆட்டம் என்று பேசிக்கொண்டு திரிவார்கள். போய் முன்னால் உட்கார்ந்து கூத்து பார்ப்பார்கள். அந்த மயக்கத்திலிருந்து தப்பிக்க வெகு சிலராலேயே முடியும். அப்படி முடிந்தவர்கள் இதோ இந்த சாவூர் பரஞ்சோதி போல தூணுக்கருகே தூணாய் சற்றும் அசையாது சக்ரவர்த்தியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கின்ற திடத்தைப் பெற்றலர்கள்.

அவர்களால் எதுவும் சாதிக்க முடியம்.

இப்போது சக்ரவர்த்தியின் பேச்சைக் கேட்பதை விட்டுவிட்டு சாவூர் பரஞ்சோதியை மெல்ல விசாரிக்கலாமா.

இராஜேந்திரர் அரியணையிலிருந்து மெல்ல நகர்ந்து சட்டென்று எழுந்து திரைக்கு அப்பால் போனார். சில நிமிடங்கள் பெண்கள் இளவரசரின் அசைவைப் பார்த்தார்கள். இரண்டு பேர் எழுந்திருக்க முயற்சித்தார்கள். மற்றவர்கள் அடக்க மன்னர் பேச்சைக் கூர்ந்து கேட்டார்கள். சாவூர் பரஞ்சோதி அசையவில்லை. ஆனால், அவன் கண்கள் மட்டும், இளவரசர் இராஜேந்திரரைப் பின் தொடர்ந்தன.

இராஜேந்திரர் திரைமறைவுக்குப் போய் திரும்பி சாவூர் பரஞ்சோதியைப் பார்த்ததும் சாவூர் பரஞ்சோதி மெல்ல கட்டியிருந்த கைகளைப் பிரித்தான்..

வா என்று இளவரசர் அழைத்ததும் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு மெல்ல மன்னருக்கு முன் மிக லேசாய் தலைவணங்கி ஓரடி நகர்ந்து நின்று கொண்டான். கூட்டம் அவன் நகர்வைப் பார்த்து. மறுபடியும் அரசரைக் கவனித்தது. இன்னொரு அடி நகர்ந்தான். மெல்ல திரைச்சீலைக்குப்பின் நகர்ந்து வந்தான்.

அவன் ஒரு சாரைப்பாம்பைப்போல அதிகம் சலன மில்லாது நகர்ந்தது கண்டு இராஜேந்திரர் ஆச்சரியப்பட்டார். எது செய்தாலும் செவ்வனே செய்ய இவனுக்குத் தெரிந்திருக்கிறது என்று புரிந்து கொண்டார்.

பின் பக்கமுள்ள புல்வெளிக்குப்போய் அங்கு நின்று கொள்ள மெய்க்காவல்படை மெல்ல அவரைப் பின் தொடர்ந்தது. குடிக்கத் தண்ணீர் வேண்டும் என்று கேட்க, ஒரு வீரன் நடனப்பெண் வீட்டிற்குள் ஓடினான். ஒரு சொம்போடு வந்தான்.

இளவரசர் தண்ணீர் வாங்கிக் குடித்து பாதி தண்ணீரை சாவூர் பரஞ்சோதியிடம் கொடுக்க. சாவூர் பரஞ்சோதிக்கும் தாகம் இருந்தது போலும் மீதி தண்ணீரை அவன் குடித்தான்.

இளவரசர் இன்னும் தண்ணீர் கொண்டு வா என்று ஏவினார். சொம்பை வாங்கிக்கொண்டு அந்த வீரன் மறுபடி யும் தேவரடியாரின் இல்லம் நோக்கி நகர்ந்தான். வெற்றி லைப் பெட்டியை யாரோ பிரித்து நீட்டினார்கள். இராஜேந் திரர் பாக்கு போட்டுக்கொண்டு வெற்றிலையைக் கிழித்து சரசரவென்று மடிக்கத் துவங்கினார். சாவூர் பரஞ்சோதியைப் பார்த்து எடுத்துக்கொள் என்று சொன்னார்.

"பழக்கமில்லை." என்று சாவூர் பரஞ்சோதி சொன்னான்.

இளவரசர் ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தார். சாவூர் பரஞ்சோதியின் பற்கள் வெள்ளை வெளேரென்று இருந்தன.

"தாம்பூலம் போடுவதில்லையா."

"இல்லை. அது என் பற்களைப் பாழாக்கிவிடுகின்றன. ஆனால், அந்த வாசனை எனக்கு மிகவும் பிடிக்கும். யாரா வது போட்டால் அருகே நின்று அந்த வெற்றிலை காம்பு களைத் தின்பேனே தவிர தாம்பூலம் போடுவதில்லை. நீங்கள் கிழித்த வெற்றிலைக் காம்புகளைக் கொடுங்கள். நான் போட்டுக் கொள்கிறேன்."

அவன் கைநீட்டினான்.

வெற்றிலைக் காம்புகள் அவனுக்குக் கொடுக்கப்பட்டன. மெல்ல கடித்து சாறு உறிஞ்சினான்.

"நீதான் சாவூர் பரஞ்சோதியா."

"ஆமாம் இளவரசே. நாம் சந்திப்பது இதுவே முதல் முறை. மேற்கு பார்த்து நில்லுங்கள்."

அவரை புஜம்பிடித்து திருப்பி வைத்து சாவூர் பரஞ்சோதி மண்டியிட்டு அவர் புறங்கால்களில் தனது வலது கையை வைத்து பிறகு சிரஸை வைத்துக் கொண்டான். அவர் முழங்காலை முத்தமிட்டான். அந்த அன்பில் இராஜேந்திரர் நெகிழ்ந்தார். அவன் தோளில் கைவைத்து எழுப்பினார்.

இளவரசர் இராஜேந்திரரைவிட ஒருபடி உயரமாய் சாவூர் பரஞ்சோதி இருந்தான். அவன் நிறம் வினோதமாக இருந்தது. கண்கள் நீலநிறமாக இருந்தன. தாடி செம்பட்டை யாக இருந்தது. தலைமுடி கற்றையாய், அழுத்தமாய், குட்டை யாய் இருந்தது. அவனுடைய நகைகளும் வினோதமாய் இருந்தன.

"உன்னுடைய தாயார் இறந்து போனார் என்று கேள்விப்பட்டேன். என்ன காரணம்."

"விதி முடிந்துவிட்டது. வயதாகிவிட்டது. இவ்வளவு வயது வாழ்ந்ததே பெரும் அதிசயம்."

"கடைசி காலத்தில் நோயுற்று இருந்தார்களா."

"இல்லை. அது நோயல்ல. மரணம் வந்துவிட்டது என்று தெரிந்து ஒருமெல்லிய கவலையும், பயமும் இருந்திருக்கலாம். உடல்நோய் என்று எதுவும் சொல்வதற்கில்லை. இறப்பதற்கு ஒரு கால்நாழிகை முன்புகூட அவர்கள் பேசிக்கொண்டிருந் தார்கள்."

"யாரோடு."

"என்னோடுதான்."

"என்ன கேட்டார்கள்."

"மரணம் என்றால் என்ன என்று கேட்டார்கள்."

"அப்படியா. ஏன் உன்னைக் கேட்டார்கள்."

"எத்தனையோ போர்க்களங்களுக்கு போயிருக்கிறாயே. எத்தனையோ பேரை வெட்டிக் கொன்றிருக்கிறாயே, எத்தனையோ பேர் படுகொலை செய்யப்பட்டுத் துடித்துத் துடித்து சாவதைப் பார்த்திருக்கிறாயே சொல். மரணம் என்றால் என்ன? எனக்குச் சொல்லிக் கொடு என்றார்கள்."

"கேள்வி நன்றாக இருக்கிறதே. நீ என்ன பதில் சொன்னாய்"

"யோசித்துப் பார்த்தேன் எனக்குத் தெரிய வில்லையம்மா என்று சொன்னேன்."

"ஆக, இத்தனை நாள் தெரியாத விஷயத்தையா இத்தனை வேகமாகச் செய்து கொண்டிருந்தாய் என்று கேள்வி கேட்டார்கள். எனக்கு வெட்கமாக இருந்தது. மரணம் பற்றி எனக்கு எதுவும் தெரியவில்லை. ஆனால் என் கையால் ஆயிரக்கணக்கானோர் மரணமடைந்திருக்கிறார்கள் என்னுடைய வாளால் குத்தப்பட்டு பலபேர் துடித்து விழிகள் வழியே உயிரைவிட்டிருக்கிறார்கள் தலைசீலப்பட்டு முண்டமாய் நடந்திருக்கிறார்கள். ஒரு முண்டம் ஓடிப்போய் தனது தலையை கையில் எடுத்துக் கொண்டு குப்பென்று பயந்துபோய் கீழே போட்டதையும் நான் பார்த்திருக்கிறேன். உடம்பெல்லாம் அம்பு தைத்து ரத்தம் வழியக் கிடந்தவன் ஒருவன் என்னைக் கொன்றுவிடு, என்னைக் கொன்று விடு என்று கதறவும் நான் கேட்டிருக்கிறேன். குத்தினால் செத்துப் போவாய். அம்புகளை நீக்கிவிடுகிறேன் என்று கேட்க, இல்லை. நான் ரத்தப்பெருக்கினால் செத்துப்போலேன். இவ்வ ளவு வேதனை எனக்குத் தேலையில்லை. குத்திக்கொன்று விடு என்று இறைஞ்சினான். நான் தயங்கியபோது தயவு செய்து சிவபெருமான் மீது ஆணையாகச் சொல்கிறேன். குத்தி என்னைக் கொல் என்று உரத்தகுரலில் கத்தினான். அவன் நெஞ்சில் என்வாள் பாய்ச்சி அவனைச் சாகடித் தேன். அவன் புன்சிரிப்போடு இறந்ததையும் பார்த்தேன்.

அம்பு தைத்த போது அலறி அலறிக் கிடந்தவன் நான் குத்தியதும் பெரும் நிம்மதியோடு இறந்து போனான். இதுமட்டுமல்லாது கை துண்டாகி துண்டுபட்ட கையை ஈரத்துணி போட்டு கட்டி மருந்திட்டு மயக்கமருந்து கொடுத்து படுக்க வைத்து பிறகு நினைவு வர, கையிலுள்ள காயம் சரியாகக் கவனிக்கப்படாமல் சீழ்பிடிக்க, அந்தச்சீழ் முற்றிப்போய் கடும் ஜுரம் லந்து அனத்தி அனத்தி இறந்து போனவனையும் நான் பார்த்திருக்கிறேன் ஆனாலும் மரணம் என்றால் என்ன என்று என் தாய் கேட்டபோது எனக்குச் சொல்லத் தெரியவில்லை."

"உன் தாய் வேறு என்ன சொன்னார்கள்."

“மரணம் என்றால் என்ன என்று நான் உனக்குச் சொல்கிறேன் என்று சொன்னார்கள்.”

“அட... அப்படியா. என்ன சொன்னார்கள்.”

வெற்றிலைப் போடுவதை நிறுத்திவிட்டு இராஜேந்திரர் ஆவலானார். மரத்தால் செய்யப்பட்ட நீண்ட ஆசனம் ஒன்றைக் கூடத்திலிருந்து மெய்க்காவல் வீரர்கள் சுமந்து வந்தார்கள். அந்தப் புல்வெளியில் போட்டார்கள். அந்த நீண்ட மர ஆசனத்தின் இருபக்கமும் இராஜேந்திர சோழரும், சாவூர் பரஞ்சோதியும் அமர்ந்து கொண்டார்கள். மற்ற வீரர்கள் விலகி நின்றார்கள்.

“தாயார் என்ன சொன்னார்.”

“மரணம் என்பது ஒரு விடுதலை. கனவிலிருந்து நனவுக்குத் திரும்புதல் என்று சொன்னாள்.”

“என்ன. மறுபடியும் சொல்.”

“மரணம் என்பது ஒரு விடுதலை. கனவிலிருந்து நனவுக் குத் திரும்புதல் என்று சொன்னார்.

“அதாவது..”

“அதாவது இந்த வாழ்க்கை கனவு போன்றது. உண்மை யானது அல்ல. நனவு போன்றதுதான் மரணத்திற்குப்பிறகு வரும் நிலை. அந்த நனவு போன்ற நிலைமைக்கு, அதாவது யதார்த்த நிலைக்கு ஆத்மா அல்லது உயிர் அல்லது பிராணன் போகிறது என்றும் மறுபடியும் கனவு காணும் என்றும் சொன்னார்.”

“அதாவது அடுத்த பிறவி பற்றியும் பேசினாரா.”

“ஆமாம்.”

‘என்ன சொன்னார்.”

“வெகுநாள் கழித்து இந்தப் பூமியில் பிறப்பேனடா. இதே கங்கதேசத்தில் காவிரி ஆற்றுக்கரையில் பிறப்பேன். இந்தக் காவிரிக் கரையோடே நடந்து நீ இருக்கின்ற சோழதேசத்தை வந்து அடைவேன். வந்து மறுபடியும் உன் தகப்பனைப் பார்ப்பேன். மறுபடியும் கலந்து அவரோடு சூல் கொள்வேன். மீண்டும் உன்னைப் பிள்ளையாகப் பெறுவேன் என்று

சொன்னார்கள். நான் அம்மாவை மெல்ல அணைத்துக் கொண்டு கேட்டேன். இது ஆசையா அல்லது சத்தியமா.

நமது ஆசையின் பலம்தானடா வாழ்க்கை. என்னவாக இருக்க வேண்டுமென்று இறக்கும்போது எண்ணுகிறோமோ அதுவாகவே பிறக்கப்போகிறோம் என்று சொன்னார்.

"அடேயப்பா என்ன வார்த்தைகள்."

இளவரசர் கண்களை மூடிக்கொண்டார்.

"என்னவாக இருக்க வேண்டுமென்று இறக்கும் போது நினைக்கிறோமோ அதுவாகவே பிறப்போம்."

"நெருப்புக் கங்குகள்போல் இருக்கிறதல்லவா வார்த்தை."

இளவரசர் கைகூப்பி பாராட்டினார். அந்தத்தாயை நினைத்துக் கொண்டு வணங்கினார்.

சாவூர் பரஞ்சோதி அவருடைய அந்தச் செய்கைக்கு மனம் கரைந்தான்.

"அதற்குப்பிறகு என் தாய் அதிகம் பேசவில்லை. தன் கைகளை எடுத்து கன்னத்தில் வைத்துக் கொண்டாள். நெஞ்சில் வைத்துக் கொண்டாள். அவன் வலதுகையை எடுத்து என் நெஞ்சில் வைத்தாள். நீ எனக்குச் செய்து கொடுத்த சத்தியத்தின்படி வாழ்நாள் முழுவதும் நடந்து கொள்வாயல்லவா என்று கேட்டாள். அப்படியே என்று சொன்னேன். சரி என்று சிரித்தபடியே கண் மூடினாள். நான் உன்னோடு இருப்பேன் கவலை வேண்டாம் என்று சொன்னாள். பிறகு கண் திறக்கவே இல்லை."

"என்ன சத்தியம் செய்து கொடுத்தாய் சாவூர் பரஞ்சோதி."

"திருமணம் செய்து கொள்ளமாட்டேன் என்றும், அபலையான பெண்களை எந்த இடத்திலும், எந்த நேரத்திலும், எவரிடத்திலும் இருந்தும் காப்பாற்றுவேன் என்றும், தேவரடியாருக்கு ஊழியம் செய்வேன் என்றும் மூன்று சத்தியம் செய்திருக்கிறேன்."

"எனக்குப் புரியவில்லை பரஞ்சோதி. ஏன்.. ஏன் இது."

"அம்மா தன்னால் செய்ய முடியாததை என்னை வைத்துச் செய்யச் சொல்கிறார். என் தாய் ஒரு தேவரடியார்.

யவனருக்கு வாழ்க்கைப்பட்டு மிகச் சந்தோஷமாக வாழ்ந்தவள். ஆனாலும் அவளைச் சுற்றியுள்ள பெண்டுகள் பலபேர் இழிவுப்படுத்தப் படுதலையும், அசிங்கப்படுதலையும் கண்டு மனம் வெம்பியிருக்கிறாள். அவர் தாயும், அவர் தமக்கையும்கூட பல்வேறு இழி சொற்களுக்கு ஆளாகியிருக் கிறார்கள். பல ஆண்களோடு வாழ்ந்து அவஸ்தைப் பட்டிருக் கிறார்கள் ஊர் நகைக்க அவமானப்படுத்தப்பட்டிருக் கிறார்கள். எனவே, தேவரடியார்களுக்கு ஊழியம் செய்தல் என்பது என்னுடைய முக்கியமான வேலை என்று சொன் னார்கள். அதே மாதிரி தேவரடியாரோ குலப்பெண்ணோ எந்த அபலைப்பெண் குரலெடுத்து என்னைக் காப்பாற்று என்று சொன்னாலும் சாலூர் பரஞ்சோதி அவள் பக்கம் நின்று அவளுக்குத் தீங்கு நேராவண்ணம் காப்பாற்ற வேண்டும் என்று சொன்னார்கள்.

தேசத்தின் பெண்களைச் சரியாகக் கவனிக்காவிட்டால் அந்த தேசம் ஹீணமடையும் என்பது என் தாயினுடைய அபிப்ராயம். இந்த விஷயத்திற்கு இடைஞ்சலாய் திருமணம் இருக்கும் என்பதால் என்னைத் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்றும் சொன்னார்கள் என்னைத் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்றுதான் சொன்னார் களே தவிர, பெண்களோடு போகம் வைத்துக் கொள்ளக் கூடாது என்று சொல்லவில்லை. தேவைப்பட்டால் எப் பொழுதேனும் அதை நிறைவேற்றிக் கொள்ளலாம். ஆனால் எனக்கு அந்த விஷயத்தின் மீதும் நாட்டம் குறைந்துவிட்டது."

"கங்கதேசம் எப்படியிருக்கிறது."

"மிக அமைதியாக இருக்கிறது."

"போருக்கான ஆயத்தங்கள் எங்கேனும் செய்யப் படுகிறதா."

"அறவே இல்ல. ஆனால் கங்கதேசத்தில் நம்முடைய ஆளுமை பிடிக்காத இளைஞர்கள் வடக்கே நகர்ந்து மேலைச் சாளுக்கியத்தின் எல்லைப்புற கிராமங்களில் போய் தங்கி விடுகிறார்கள் துங்கபத்ரா நதிக்கரைக்கும் போயிருக் கிறார்கள் "

"எத்தனை இளைஞர்கள் போயிருப்பார்கள்."

"ஆயிரம் பேர் இருக்கும் அவ்வளவே. மற்ற இளைஞர்கள் உழுது பயிரிடும் வேலைக்குத் திரும்பி விட்டார்கள். அப்படிப்

போனவர்கள் பரம்பரை மறவர்கள். சண்டையிடுதலைத் தவிர வேறு எதுவும் தெரியாதவர்கள்."

"ஆனால், கங்க தேசத்தின் செழிப்பு நம் சோழ தேசத்தைவிட மிக அற்புதமானதல்லவா."

இராஜேந்திரர் வெகுதொலைவே பார்த்து யோசித்த வண்ணம் பேசினார்.

"இளவரசரே மன்னித்துக் கொள்ளுங்கள்."

சட்டென்று நாலாபுறமும் சுற்றிப்பார்த்த வண்ணம் சாவூர் பரஞ்சேதி முகர்ந்து பார்த்தான்.

அவனது வலதுகை வாளின் பிடியில் இருந்தது. யாரோ தாக்க வருவதுபோல அவன் பரபரத்தான். சற்று நேரம் பூமியிலிருந்து ஏதேனும் ஒலிகள் வருகின்றனவா என்பது போல் குனிந்து பார்த்தான்.

"என்ன பரஞ்சோதி"

இளவரசர் ஆவலோடு கேட்டார்.

"யானை வருகிறதய்யா யானையின் வாசனை வருகிறது."

"இந்த இடத்திற்கு ஏன் யானைகள் வரவேண்டும். குடியிருப்பல்லவா."

இளவரசருக்கு அருகேயிருந்த வீரர்கள் பரபரப்பானார்கள்.

அது தஞ்சையின் தெற்குப்பக்கம் காவிரியின் கால்வாய் ஒன்று அந்தப்பக்கம் ஓடுவதால் வண்டல் மண் அந்தப் பக்கமாய் வந்து செம்மண் மீது படிந்து ஆங்காங்கே புற்கள் தோன்றி பிறகு பெரும் பரப்பாய் புற்கள் வந்துவிட்டது. தானாகத் தோன்றிய மழைநீர்க் கால்வாயை பிறகு செம்மைப் படுத்தி கற்கள் போட்டு ஆற்றின் உபரிநீரைத் திறந்துவிட்டு புது ஆறாகச் செய்துவிட்டார்கள். அதனாலேயே அந்தப் பூமியின் நிறம் மாறிவிட்டது. அந்த ஆற்றுக்கு அடுத்தப் பக்கம் செம்மண் கரளைகள்தான் இருந்தன கோயிலுக்கு அஸ்திவாரம் தோண்டிய இடத்திலும் கூட கைப்பிடி உயர புற்கள்தான் அடர்த்தியாய் இருந்தன. சில இடங்களில் கொத்துச் செடிகள் வளர்ந்திருந்தன. மரங்கள் என்று எதுவும் இல்லாமல் பெரும் வெளியாய் கிடந்த அந்தப்பகுதியில் சிறு

சிறு புல்மேடுகள் இருந்தன. இந்த ஆற்றை ஆழப்படுத்தும் முயற்சிகளில் மண்வாரி அதன் கரைப்பக்கங்களில் கொட்ட அந்த இடம் மேடிட்டிருந்தது. அஸ்திலாரம் தோண்டுமிடம் தனி மேடாக இருந்தது. ஆனால் அந்த மேட்டை விட இந்த மேடு பெரிதாக இருந்தபடியால் இடையே ஒரு பள்ளம் இயல்பாக ஏற்பட்டிருந்தது.

அந்தப்புல் சரிவில் தென்னை மட்டைகளைப் போட்டு சிறுவர்கள் சறுக்குலதும் உண்டு. இருட்டில் ஒரு தொலைவுக் கப்பால் எதுவும் தெரியவில்லை.

ஆனால், யானையின் சிறுநீர் லாசனைபோன்று ஒரு கடும்நெடி சட்டென்று லீசியது. காற்று அதிகமாய் வீசும் போதெல்லாம் அந்த நெடி தூக்கலாக இருந்தது. இதைக் கொண்டுதான் சாவூர் பரஞ்சோதி மிக நெருக்கமாக யானை இருக்கிறதென்று சந்தேகப்படுகிறான் என்பது புரிந்துவிட்டது.

ஆனால், இங்கு யானை இருப்பது லழக்கம்தானே. பிடியும், களிறும் அருகேதானே இருக்கின்றன. கோயிலைச் சுற்றிச்சுற்றி எல்லைகள் லகுக்க. ஆண் யானையும், பெண் யானையும்தானே பயன் படுத்தினார்கள். அலைகள் இந்தப் பக்கம் வந்திருக்கக் கூடாதா.

கூடாது. ஒரு குடியிருப்பின் பின்பக்கம் யானைகள் வருவது என்பது தேவையில்லாத விஷயம் அதுவும் இந்த நேரம் ஒரு யானையின் நகர்வு நிச்சயம் தலறு. நூறு தப்படி தூரத்தில் அரசர் கும்பலாக பெண்களுக்கு நடுலே உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறார் என்கிறபோது இங்கு யானை வந்தால் நிச்சயம் கலலரம் வரத்தானே செய்யும். யார் இங்கு யானையை ஓட்டிலருவது.

இராஜேந்திரர் எழுந்து நின்றார்.

வீரர்களுக்கு விலகிப்போகும்படி சைகை செய்தார்.

ஒரு வீரன் மட்டும் அவருக்கு அருகே நின்றான். மற்றவர்கள் வேகமாக விலகினார்கள். ஒருயானை லரும் போது கும்பலாய் அதை எதிர்கொள்ளக்கூடாது. சட்டென்று யானையைச் சூழ்ந்து கொள்ள விலகி இருந்தால்தான் வசதி. வீரர்கள் குத்தீட்டியை இறுக்கப் பிடித்தபடி விலகினார்கள். சாவூர் பரஞ்சோதி குனிந்து மடமடவென்று புல்மேட்டில் ஏறினான். ஏறி மறுபுறம் பார்த்தான். அதே லேகத்தில் திரும்பி லந்தான்.

அவன் திரும்பி ஓடிவருவதைப் பார்த்து இராஜேந்திரர் தன் உடைவாளை வேகமாக உருவினார்.

மிகப்பெரிய யானை ஒன்று அந்தச் சரிவிலிருந்து மேலேறி தேவரடியார் குடியிருப்பினுள் நுழைந்தது. அருகே ஒருவன் யானையின் துதிக்கை பிடித்து அதன் காதில் ஏதோ சொல்லிக் கொண்டு வந்தான். அவன் குண்டாக, உயரமாக சடைகள் அதிகம் நிரம்பியவனாக இடுப்பில் கோவணமும் அதன்மீது ஒற்றைத்துண்டும் தரித்தவனாக இருந்தான்.

ஏய்... கர்ஜனையாய் ஒரு மெய்க்காவல் வீரன் தன்னையும் மீறி உரக்கக் கத்தினான். இராஜேந்திரர் அவனைப் பார்த்து பல் கடித்தார்.

யானை நின்றது. திமிறியது. ஆனால் அந்தக் குண்டன் யானையின் காதில் இடைவிடாது ஏதோ பேசிக்கொண்டிருந்தான். காது இழுத்து நடநட என்று கட்டளையிட்டுக் கொண்டிருந்தான். யானை அவன் கட்டளைக்குக் கீழ்ப்படிவதா அல்லது திரும்பிப்போவதா என்று அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தது.


யானையை அவன் நிர்ப்பந்தித்துக் கொண்டிருக்கிறான் என்பது அவன் நடவடிக்கையில் புரிந்தது. கன்னத்தைத்தடவி பளிச்சென்று அறைந்து, முதுகில் தட்டி நட.. நட.. என்று பின்னங்கால்களின் பின்பக்கம் வேகமாக வேல் கம்பால் அடித்தான். வேகமாய், துரிதமாய் ஏதோ சொன்னான். யானை பிளிற துதிக்கை ஓங்கிய போது அந்தத் துதிக்கையைப் பிடித்து பலம் கொண்ட மட்டும் இழுத்தான்.

மறுபடியும் வேகமாக மந்திரங்கள் போல கட்டளைகள் சொன்னான்.

யானை அசைந்து புல்மேடு நோக்கி, அங்கிருந்து இன்னொரு சரிவில் இறங்கத் துவங்கியது. நேர் எதிரே இராஜேந்திரர் நின்று கொண்டிருந்தார்.

## 125

**கா**ரிய நிற அந்த யானையின் அசைவுகள் அங்குள்ள வீரர்களை விரைவடைய வைத்தன. ஒருவேளை அந்த யானை முன்னேறினால் எவ்விதம் அதை எதிர்கொள்வது என்பதை அவர்கள் அனைவரும் வேகமாக யோசித்தார்கள்.



ஏய். என்று யானையைப் பார்த்ததும் ஒரு பயத்தில் உரக்கக் கத்திய அந்த மெய்க்காவல் படையின் ஆள் தான் செய்த தவறை உணர்ந்துவிட்டான். அது யானையை மிரட்டும் என்பது அவனுக்குத் தெரியும். அருகே நின்ற இளவரசர் பல் கடிப்பது பார்த்து மன்னித்துக் கொள்ளுங்கள் என்பதுபோல நிலம் தொட்டு தலையில் கை வைத்துக் கொண்டான்.

சட்டென்று திரும்பி யானையைப் பார்த்தான். நேர் எதிரே இளவரசர் இருக்கிறார் இரண்டு பக்கமும் வீரர்கள்

இருக்கிறார்கள். ஒருவேளை யானை முன்னேறித் தாக்கியதெனில் அதன் இரண்டு பக்க மத்தகத்தையும் நோக்கி கூர்மையாய் வேல் எறிய அவர்கள் தயாரானார்கள். ஆனால் யானை முன்னேறாது முரண்டு செய்தது.

சாவூர் பரஞ்சோதிக்கும் அந்தக் குண்டனுக்கும் மிடையே நாற்பது காலடி தூரமிருந்தது.

அந்த நடுநிசியில் யானைக்கு அவன் திரும்பத் திரும்ப சொல்லும் கட்டளைகள் சாவூர் பரஞ்சோதியின் காதில் எட்டின.

அவன் சேரதேசத்தவன். கேரளத்துத் தமிழில் அவன் யானையை போ.. போ.. போய்த்தாக்கு, நாசம் செய் என்று சொல்லிக் கொண்டிருக்கிறான். படுகு.. படுகு.. போ என்று யானையின் பின்னால் படேர் படேரென்று அடித்துக் கொண்டிருந்தான். அதேசமயம் யானையின் கண்களுக்கு கீழே வேகமாக வருடி விட்டான். இதனால் யானை சந்தோஷமடையும். காதிற்குப் பின்னால் அடித்தால் வேகமாக முன்னேறும். படுகு படுகு... என்ற கட்டளைக்கு போய் கலவரம் செய். எல்லா இடங்களையும் அழித்தொழி என்று அர்த்தம்.

கங்க தேசத்து பாஷையும், கேரள தேசத்து பாஷையும் கலந்த ஒரு தனி மொழி யானைக்கான மொழி என்று ஏற்பட்டிருக்கிறது.

சாவூர் பரஞ்சோதிக்கு அந்த மொழி தெரியாது யானைகளை அவன் செலுத்தியதில்லை. ஆனால் யானையைச் செலுத்துபவர்களை அவன் அறிவான். அவர்கள் பேசுவது அவனுக்கு ஞாபகம் இருந்தது.

இங்கே இந்தக் குண்டன் சொல்லச் சொல்ல அந்த மொழி அவனுக்கு ஞாபகம் வந்தது.

யானை தலையை ஆட்டி இளவரசர் இராஜேந்திரரை நோக்கி முன்னேறத் துலங்கியது.

குண்டன் சற்று நகர்ந்தான்.

யானைக்கும் அவனுக்கும் இடைவெளி ஏற்பட்டது. சாவூர் பரஞ்சோதி இதுதான் சமயம் என்று மின்னல் வேகத்தில் குண்டனை நோக்கிப் பாய்ந்தான். அடித்துத் தரையில் வீழ்த்த வேண்டும் என்ற எண்ணத்தோடு மிக வேகமாக ஓடினான். அந்த இருட்டில் மனிதரைவிட கூர்மையான கண்களையுடைய யானை தன்னைநோக்கி ஒருவன் ஓடிவருவதைப் பார்த்து

இளவரசை விட்டுவிட்டு சட்டென்று சாவூர் பரஞ்சோதியின் பக்கம் திரும்பியது.

துதிக்கை நீட்டி அவனைத் தாக்க முயற்சித்தது. மிகமிகக் கடுமையான பயிற்சி கொண்டிருந்தாலொழிய யானையி னுடைய அந்த திசை திருப்பத்திலிருந்து எலரும் தப்பிக்க முடியாது. சாவூர் பரஞ்சோதி மிகக்கடுமையான யுத்தப்பயிற்சிகள் கொண்டவன். வேகமாக குண்டனை நோக்கி ஓடியவன் தனக்கிடையே யானை வருவது தெரிந்து சட்டென்று பாதை மாற்றி எகிறி குதித்து யானையிடமிருந்து விலகி நின்றான். அந்த யானை அவனுக்கு ஞாபகம் இருக்கிறது. அது சோழதேசத்து யானை. அரண்மனையைச் சேர்ந்த யானை. பெண் யானை. ஆண் யானையாக இருப்பின் இந்நேரம் இந்தக் கட்டளைக்கு வெகு வேகமாகத் தாக்கியிருக்கும்.

பெண் யானை என்பதால் மிகவும் சிந்தித்து பின்னோக் கியும் முன்னோக்கியும் அலைமோதுகிறது. ஆனால், யானை தொடர்ந்து சாவூர் பரஞ்சோதியை நோக்கித்தான் வந்து கொண்டிருந்தது. சாவூர் பரஞ்சோதி யானையிடமிருந்து தப்பிக்க இடதும் வலதுமாக ஓடினான். யானை கோபமாகியது.

படுகே... படுகே என்று மறுபடியும் குண்டன் கத்தி, கையிலிருந்த குத்தீட்டியால் யானையின் பின்பக்கம் போய் ஆழமாய் குத்த யானை சீறி நாலாபக்கமும் அலைந்தது.

இந்தநேரம் குண்டனைத் தாக்கி தரையில் வீழ்த்தினால் தானும் விழவேண்டியிருக்கும். தானும் குண்டனும் கீழே விழுந்தால் தங்களில் இருவரையோ அல்லது இருவரில் ஒரு வரையோ யானை நிச்சயம் மிதித்துக் கொல்லும். குண்டனைக் கொல்வது என்பது கூடாது. அவன் உயிரோடு பிடிபட வேண்டும். எனவே இப்போது குண்டன் முக்கியமல்ல. யானை முக்கியம். யானையைத் திசை திருப்புவது முக்கியம். யானை தேவரடியார் இல்லம் நோக்கிப் போய்விடக்கூடாது. இளவரசை நோக்கியும் நகர்ந்து விடக்கூடாது. எனவே அவன் ஓடிப்போய் யானையின் பின்பக்கம் நின்று கால்களைத் தரையில் உதைத்து கைகளை வேகமாய் ஆட்டினான். யானைக்கு அது எரிச்சல் கொடுத்தது.

அவனை நோக்கி வேகமாகச் சீறியது. அவன் யானைக்கு புறம் காட்டியபடி தேவரடியார்கள் குடியிருப்புக்கு நேர் எதிர்ப்பக்கம் ஓடினான். அவன் ஓடிய திசையில் கோயில் அஸ்தி வாரம் இருந்தது. யானை அவனை மிக வேகமாகத் துரத்தியது.

யானையின் ஓட்டமென்று நீண்ட பாத அடிகளைக் கொண்டது. ஒரு மனிதர் ஓட்டமாய் பதினைந்து அடி எடுத்து வைப்பதும் சரி, யானை ஒருமுறை நகர்வதும் சரி. யானை உருவம் பெரியதாக இருக்கலாம். ஆனால் யானைக்கென்று தனித்த விரைவு உண்டு. துதிக்கை அதனுடைய நீளத்தைப் போல் ஒன்றரை பங்கு நீளம். கோபமுற்ற யானை நிதானமின்றி ஓடும்.

சாவூர் பரஞ்சோதியின் ஓட்டம் மிக துரிதமாக இருந்தது. இடுப்பிலிருந்த வாள் இடைஞ்சலாக இருந்ததால் சட்டென்று அதன் சுருக்கை அவிழ்த்து கையில் வைத்து மறுபடியும் யானையைப் பார்த்து அவன் குதித்தான். யானை தொடர்ந்து அவனை நோக்கி ஓடியது.

சாவூர் பரஞ்சோதி வேகமாக ஓடிப்போய் ஆளுயரம் போட்டிருந்த சவுக்குக் கட்டைகளில் கை ஊன்றி தாண்டினான். யானை சவுக்குக் கட்டை வேலிகளை உடைத்தது.

குண்டன் திகைத்துப்போய் இருட்டின் வேறொரு பக்கம் நழுவ முற்படும்போது இளவரசர் தன் மெய்யக் காவல் வீரனை உசுப்பி குண்டனை நோக்கிக் கை காட்டினார். வீரர்கள் துள்ளி குதித்து ஓடினார்கள். ஆனால், குண்டன் வேலை தெரிந்தவன்.

இடுப்பிலிருந்து பட்டையான ஒரு இரும்புத்துண்டம் எடுத்து கையில் தயாராக வைத்துக்கொண்டான். இரண்டு பக்கமும் கூர்மையாக உள்ள அந்த இரும்புத்தகடை அங்கிருந்து வீசினால் நிச்சயம் மார்பைக் கிழித்துக் கொண்டு உள்ளே போய்விடும். ஆனால் அந்த மெய்க்காவல் அதற்கு பயப்படவில்லை. அந்த இரும்புத்துண்டு தாக்குமென்று தெரிந்தாலும் கவலைப்பட வில்லை. பிசாசுபோல் அந்தக் குண்டனை நோக்கி ஓட குண்டன் தன் கையிலிருந்த இரும்புத் துண்டை மிக வேகமாக அவன் மீது செலுத்தினான். அந்த இரும்புத்தகடு குறி தவறாது அந்த வீரனின் குடற்பகுதியில் சரக்கென்று போய் ஃதைத்தது. அந்த வீரன் அலறியபடி விழுந்தான்.

அவன் அலறல் சத்தம் தொலைதூரத்தில் தேவரடியார் களுக்கு நடுவே பேசிக் கொண்டிருந்த சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் காதில் தெளிவாய் விழுந்தது. அவர் துணுக்குற்று திரும்பி சாவூர் பரஞ்சோதியைத் தேடினார். இராஜேந்திரனைத் தேடினார். யாரும் இல்லாதது கண்டு தன் மெய்க்காவல் வீரர்களை முறைத்துப் பார்த்தார்.

அவர் கேட்ட... அதே அவறல் சத்தத்னதக் கேட்ட மெய்க் காவல் படை வீரன் இறங்கி சாலூர் பரஞ்சோதியும் இளவரசரும் போன தினசநோக்கி ஓடினான்.

சக்ரவர்த்தி யானரயோ ஏவுகிறார். எதற்கோ அவசரப்படுத்து கிறார் என்று தெரிந்து கூட்டம் வேசாக பரபரப்பாக அவர்கள் கவனத்னதக் கவரும் வண்ணம் சக்ரவர்த்தி தன் பேச்சைத் திருப்பினார்.

கூட்டம் மறுபடியும் அமைதியாயிற்று.

என்ன விஷயம் என்று பக்கத்திலிருந்த தலைக்கோலி விவரம் புரியாமல் கேட்க, குடிக்கத் தண்ணீர் கேட்டேன் என்று சொவ்ல நான் எடுத்து வருகிறேன் என்று சொல்லிப் போனாள்.

கூட்டம் சக்ரவர்த்திக்குத் தண்ணீர் கொடுப்பதற்காக மறுபடியும் பரபரத்தது.

சக்ரவர்த்தி கவலையானார்.

என்னவோ, எங்கேயோ தவறு நடக்கிறது என்று தெரிந்து காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டார். ஆழ்ந்து சிந்திப்பது போவ் தரையை வெறித்துப் பார்த்துக் கொண்டார்.

கூட்டம் அமைதியாக இருந்தது. அடுத்த இரும்புச் சக்கரத்தை எடுத்து வைத்துக் கொண்டு குண்டன் தயாராக இருந்தான்.

ஒரு வீரன் விழுந்து விட்டனத இராஜேந்திரர் உணர்ந்து வேகமாகப் போகவிருந்த தன்னுடைய மெய்க்காவல் வீரனைத் தடுத்தார். குத்தீட்டியை வீசச்சொன்னார்.

அவன் குத்தீட்டியை வேகமாக குண்டன் மீது வீசினான். குண்டன் குத்தீட்டி வரும் திசையைப் பார்த்து சரக்கென்று நகர்ந்து கொண்டான். விநாடிக்கும் குறைவான நேரத்தில் குத் தீட்டி அவன் தோளை உரசிக்கொண்டு சென்றது. காற்று அவன் முகத்தில் அடித்தது.

குண்டன் கோபமானான். வேகமாக முன்னேறி தன் மீது குத்தீட்டி வீசியவன் மீது இரும்புச் சக்கரத்தை விரைவாக அடித்தான். இந்த முறை அந்த இரும்புச் சக்கர அடிக்கு அந்த வீரன் தயாராக இருந்ததால், தன்னுடைய கத்தியை வேகமாகச் சுழற்ற அந்த இரும்புச்சக்கரம் கத்தியில் பட்டு தெறிந்து விழுந்தது.

கத்தியில் பட்டதும் அந்த வேகம் அவன் கைகளில் வலியாகப் பரவியது.

அந்த வீரன் கோபமடைந்தான்.

அந்த மாதிரி ஆட்கள் சேரதேசத்தில் பழகியவர்கள் அவர்களிடம் இடுப்பு நிறைய சக்கரங்கள் இருக்கும் என்று தெரியும். ஆனால் இருக்கிற ஒரு குத்தீட்டியும் விழுந்துவிட்டது. இப்போது என்ன செய்ய.

அவன் இடுப்பிலிருந்த கட்டாரியை உருவிக் கொண்டான். கையில் வாகாய் வைத்துக் கொண்டான்.

இந்தமுறை இந்தக் கட்டாரியிலிருந்து நீ தப்ப முடியாது என்பது போல அலன் அலனையே குறிபார்த்துக் கொண்டிருக்க... வலது பக்கத்திலிருந்து ஒரு வீரன் ஒரு குத்திட்டியை எறிய அதற்கு பதில் சொல்லத் திரும்பியபோது இவன் தன் கட்டாரியை வேகமாக அடித்தான். அந்தக் கட்டாரி கூர்மை யான பக்கம் போகாமல், பிடிப்பக்கம் வந்து குண்டனின் முதுகைத் தாக்கியது.

குண்டன் கோபமடைந்தான். வேறு பக்கத்திலிருந்து குத்திட்டி வீசியவனை நோக்கி விரைவாகப் போனான் அவர்கள் இருவருக்கும் உக்கிரமாக வாட்போர் நடந்தது.

இராஜேந்திரர் தன் வாளை உருவி அங்கே ஓடுவதற்கு முயற்சி செய்ய அவருக்கு அருகே இருந்த வீரன் அவரைத் தடுத்து நிறுத்தினான்.

"உங்களை விடமாட்டேன். நாங்கள் இறந்தபிறகு தான் நீங்கள் போக வேண்டும்."

அந்த வாட்போர் கடுமையாக இருந்தது. கட்டாரி வீசியவன் இப்பொழுது கத்தியை எடுத்துக்கொண்டு மிகக் கோரமான சப்தத்தோடு குண்டன் நோக்கி ஓடினான். இப்பொழுது அந்த சப்தம் தேவரடியார்கள் கூட்டத்திலுள்ள பல பேருக்குக் கேட்டது. ஆறு ஏழு பேர் எழுந்து நின்றார்கள். அவர்கள் எழுந்து நின்றது பார்த்து மற்றவர்களும் எழுந்தார்கள்.

தெள்ளத்தெளிவாய் அந்த சப்தத்தை உணர்ந்த சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் என்ன நடக்கிறது. அங்கே என்று அந்த திசையை நோக்கி கைகாட்டினார்.

வீரர்கள் அந்தப்பக்கம் போனார்கள்.

வீணை ஆதிச்சன் போக முற்படுகையில் நில்லுங்கள். உங்களுக்கு அங்கு வேலை இல்லை என்று சக்ரவர்த்தி அதட்டினார். பெண்கள் எல்லோரையும் சப்தம் வந்த திசைக்கு எதிர்திசைக்குப் போகச் சொன்னார். வீரர்கள் அவர்களைப் பின்னடையச் சொன்னார்கள். சில பெண்கள் என்னநடக்கிறது என்று முன்னேறி வர அவர்களும் பின்னுக்குத் தள்ளப் பட்டார்கள். தீப்பந்தங்கள் அதிகம் ஏற்றப்பட்டன.

சாவூர்பரஞ்சோதியைத் தேடிய யானை சாவூர் பரஞ் சோதியைக் காணாமல் மறுபடியும் திரும்பியது. வேகமாக மேடேறியது. அங்குதானே தன்னைத் தொந்தரவு செய்தவர்கள் இருக்கிறார்கள். அங்குதானே தன்னை முதுகில் அடித்தலன் இருக்கிறான் என்று கோபமாகி அந்தப் புல்மேட்டை நோக்கி வேகமாக ஓடி வந்தது. வீரர்கள் இரண்டு பேர் அந்தக் குண்டனைத் தாக்கிக் கொண்டிருக்க, மூன்றாவது ஆள் இராஜேந்திரரை மறித்துக் கொண்டிருக்க, இராஜேந்திரர் மிகக் கோபமாக வாள் உருவி என்னை விடு என்று திமிறிக் கொண்டிருக்க... அங்கு யானை வந்தது.

இளவரசே யானை வருகிறது என்று சொல்ல, சண்டை போடும் வீரர்களை எச்சரிக்க ஓ. வென்று பெரிய கூச்சலிட்டான்.

அவன் கூச்சல் இப்பொழுது கூட்டத்திலிருந்த அத்தனை பேருக்கும் கேட்டது. அவர்களும் பதிலுக்குக் கூச்சலிட்டார்கள்.

இருநூறு இருநூற்றைம்பது பேர் ஒட்டு மொத்தமாகக் கூச்சல் எழுப்ப, அந்தக் கூச்சலுக்கு யானை மிரண்டு போயிற்று. முன்னோக்கி நகர்ந்தது. பின்னோக்கி நகர்ந்தது. நாவாபுறமும் அலைந்தது.

இராஜேந்திரர் யானையை நோக்கிப் போனார். அந்த வீரன் தடுக்க அவனைப் பிடித்துத் தள்ளினார்.

என்னதே... ஏதே... என்று யானையை நோக்கி அதட்டினார்.

ஹடகு... ஹடகு... ஹாயே... என்று கொஞ்சும் பாவனையில் அதோடு பேசினார்.

யானை சமாதானமாகி நிலைகொள்ளாமல் தவித்தது.

ஹடகே... ஏனாயித்தே... ஹடகே... என்று சற்று தூரத்தில் நின்று யானையிடம் பேசினார்.

யானை மெல்ல அமைதியாயிற்று. பின்னோக்கி நகர்ந்தது.

இளவரசர் இராஜேந்திரர் குரல் பரிச்சயமான குரல் போலும், கட்டளைகளும் அன்பான கட்டளைகள். இது யானைக்குத் தெரிந்ததால் யானை மிருதுலாய் அவருக்கு செவியாட்டி தன் சந்தோஷத்தைத் தெரிவித்தது.

பின்னங்கால்களை மாற்றி மாற்றி வைத்துக் கொண்டு அசையாமல் நின்றது. ஆனால் குண்டனால் முதுகில் குத்தப் பட்ட ஈட்டியிலிருந்த விஷம் மெல்ல மெல்ல இடுப்பிலிருந்து நெஞ்சக்குப் பரவ யானை தவித்தது. இனம் புரியாத வேதனையில் மிரண்டது. தலையைப் பலமாக ஆட்டியது. தலையை யானை ஆட்டினால் தாக்குதலுக்குத்தான் தயாராகிறது என்று அர்த்தம். முன்னங்காலைத் தூக்கினால் யானை கோபமாகிறது என்று அர்த்தம்.

இப்பொழுது இடது முன்னங்காலைத் தூக்கி யானை பூமி யில் அழுத்தியது. பிறகு வலது முன்னங்காலைத் தூக்கி தொப் பென்று வைத்தது. யானை கோபமாக இருக்கிறதைத் தொடர்ந்து இளவரசர் அருகே போய்விடாமல் மறுபடி மறுபடி யானை யோடு வேகமாகப் பேசினார்.

சாவூர் பரஞ்சோதி வேலியைத் தாண்டி மறுபடியும் ஓடி வந்தான். உடம்பெல்லாம் வியர்வையும், புழுதியுமாய் இருந்தது.

இளவரசர் யானைக்கு அருகே போக முயற்சிப்பதைப் பார்த்து, வேண்டாம்... வேண்டாம் என்று கத்தினான்.

யானை திரும்பியது. சாவூர் பரஞ்சோதியை இனம் கண்டு கொண்டது.

இப்பொழுது சாவூர் பரஞ்சோதிக்கும் யானைக்கு மிடையே முப்பது காலடி தூரம்தான் இருந்தது. யானையினுடைய பின் பக்கத்திலிருந்த விஷம் சரக்கென்று வயிற்றைத்தாக்க யானை பெரும் வேதனையில் பிளிறியது.

முதன் முதலாய் யானையின் பிளிறலைக் கேட்ட அந்தப் பெண்கள் பொதுப்பாதையைக் காலி செய்து சந்துகளின் வழியாக வீடுகளின் பின்பக்கம் நின்று கொண்டார்கள்.

இடது பக்கச் சிறகின் வீடுகளூடேபோய் அங்கு யானையும் வீரர்களும் இருப்பதைப் பார்த்து வீணை ஆதிச்சன் வேகமாக வந்தான்.

யானைக்கு மதம் பிடித்துவிட்டது என்று வேகமாகக் கத்தினான். பெண்கள் இன்னும் விரைவாய் பின்னடைந்தார்கள்.

வயதான பெண்மணிகள் வீட்டின் பின்பக்கம் இருக்கும் புல்வெளியைத் தாண்டி தஞ்சை நகரின் தெற்கு அலங்கம் நோக்கி நடந்தார்கள். தெற்கு அலங்கத்திலுள்ள பெரிய வீடுகளின் உள்ளே போய் நின்று கொண்டார்கள்.

பெண்கள் கூச்சல் அதிகமாக இருந்ததைக் கேட்டு சிற்பிகள் பக்கமிருந்து பந்தங்கள் எடுத்தபடி ஆண்களும், பெண்களும் வந்தார்கள். யானை அசைவதைப் பார்த்து பெண்களையும், குழந்தைகளையும் சிற்பிகள் தடுத்து நிறுத்தினார்கள். விரைந்து பின்னடையச் சொன்னார்கள். மிகுந்த கவனத்தோடு உரத்த குரலில் சப்தமிட்டபடி, பந்தம் எடுத்தபடி யானை இருக்கின்ற புல்வெளி நோக்கி நடந்தார்கள்.

நாலாபக்கமும் தீப்பந்தங்களோடு மக்கள் வருவதைப் பார்த்து விட்டு யானை மிகவும் பயந்தது. பின்னால் இருக்கும் சாவூர் பரஞ்சோதியை நோக்கி அடித்துத் துவைத்து கொன்று விடுவது என்ற வேகத்தோடு நெருங்கியது. மறுபடியும் சாவூர் பரஞ்சோதி கோயில் அஸ்திவாரம் தோண்டப்பட்ட புல்மேடு நோக்கி ஓடினான் இந்த முறை உடைப்பட்ட வேலியைத் தாண்டி யானை பின் தொடர்ந்தது.

தீப்பந்தங்கள் பின் தொடர்ந்தன.

இளவரசர் இராஜேந்திரர் அது மதம் பிடித்த யானை. விஷ அம்பினால் தாக்கப்பட்ட யானை என்று சொன்னார். வீரர்கள் மூன்று பேரும் வாளைத் தட்டி விட்டு ஓடிய குண்டன் பின்னால் துரத்தி ஓடினார்கள். அந்த வீரர்கள் பின்னே குதிரை வீரர்கள் விரைந்து ஓடினார்கள்.

கிழக்கு நோக்கி ஓடிய குண்டன் மரங்கள் அடர்ந்த சோலையைக் கண்டதும் அதற்குள் புகுந்து வடக்கு நோக்கி ஓடினான். வடக்கே தான் தெற்கு அலங்கம் இருந்தது. அங்கு குடியிருப்புகள் இருந்தன. வைசியர்கள் அங்கு அதிகமாய் வசித் தார்கள். மாயிட்டிகள் எனப்படும் எண்ணெய் வியாபாரிகள். துணி வியாபாரிகள் அங்கு அதிகம் இருந்தார்கள் தானிய வியாபாரிகள் வீடும் சிலவை அங்கு இருந்தன. கிழக்கு நோக்கி ஓடியவன் வடக்கு நோக்கித் திரும்பி பூனைபோல் உட்கார்ந்து பிறகு விரைவாகக் குனிந்தபடியே நடந்தான். அப்படி நடக்க அவன் பயிற்சி பெற்றிருந்தான்.

புதர்களுக்குக் கீழே வேகமாக அவன் நகரும்போது அவன் எங்கு போகிறான் என்பதை எவராலும் கண்டு பிடிக்க

முடியாமல் போயிற்று. அவன் இல்லாத கிழக்குதிக்கை நோக்கி வீரர்கள் பின் தொடர்ந்தார்கள். குதிரை வீரர்கள் இன்னும் அவர்களைத் தாண்டிப் போனார்கள்.

லாளை முதுகில் செருகிக் கொண்டு தலைப்பாகையை அவிழ்த்து அதைப் போர்வையாகப் போர்த்திக் கொண்டு குண்டன் வீடு நோக்கிப் போனான்.

ஒரு வீட்டிலிருந்த ஆண்களும், பெண்களும் ஏதோ கலவரம் நடப்பதைக் கேள்விப்பட்டு வேகமாக வெளியேற அந்த வீடு ஒட்டிய வலப்புறச்சுவர் பக்கம் நகர்ந்து, சுவரில் ஏறி உள்ளே குதித்து வீட்டின் நடு மண்டபத்திலுள்ள வேலைக்காரர்கள் புழங்குகின்ற கதவு வழியே உள்ளே போய் சமையலறைக்கு நகர்ந்து சமையலறையிலிருந்து பின்பக்கம் கொல்லைப் புறத்திற்கு நகர்ந்து கொல்லைப்புறத்து சுவர் ஏறி குதித்து அடுத்த வீட்டிற்குள் குதித்து இப்படி நான்கு வீடுகள் தாண்டி ஒரு இடத்தில் ஒரு கொல்லை புறத்தின் மரத்தடியில் குத்தீட்டியைக் குத்தி மரத்தில் சாய்ந்து வியர்வை அடங்கட்டுமென்று இளைப் பாறினான்.

யானை சட்டென்று மறைந்து போன பரஞ்சோதியைக் காணாமல் திகைத்தது. எங்கே என்று தேடியது. பின்பக்கத்தி லிருந்து தீப்பந்தங்கள் நெருங்கி வர எங்கே போவது என்று தெரியாமல் முன்னேறியது. திரும்பித் தீப்பந்தங்களைத் தாக்க லாமா என்று திரும்பி தீப்பந்தங்கள் நோக்கி நடக்க, தீப்பந்தங்கள் விரைவாக விலகின. யானை திரும்பி பயமுறுத்தியதுபோதும் என்று மறுபடியும் சாவூர் பரஞ்சோதி நோக்கிப் போயிற்று. யானை தொடர்ந்து நடக்க கீழே அஸ்திவாரத்திற்கென்று வெட்டப்பட்ட பள்ளத்தின் நுனியில் கால் வைக்க யானைக்குச் சறுக்கியது. யானை துதிக்கையை ஊன்றிக் கொண்டு நிற்பதற்கு முயற்சி செய்தது. ஆனால் முன்கால் சறுக்கி இழுக்க துதிக்கை யால் பாரத்தைத் தாங்க முடியவில்லை. யானை மூன்று கால் களால் நின்று உரக்கப் பிளிறியது. முன்பக்கம் நின்று பின்பக்கம் முயற்சி செய்ய அதன் வலது கால் பக்கமிருக்கின்ற மண்ணும் மெல்ல விட்டுவிட இரண்டு முன் கால்களும் சறுக்கி ஒரு கோல் உயரம் உள்ள (பதினாறு அடி) குழிக்குள் தலைகுப்புற விழுந்து புரண்டு எழுந்து நின்று மிக தீனமாய் பிளிறியது.

அந்தக் குரலிலுள்ள வேதனை சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரை அசைத்தது. விழுந்ததினுடைய அதிர்ச்சி யில் பயத்தில் யானையின் ஹிருதயம் வேகமாக அடித்துக்

கொள்ள பள்ளத்திலிருந்து வெளியே வர முயற்சி செய்தது. தந்தத்தால் மண்ணைக் குத்திக் கிளறியது. மேலே பற்றிக்கொள்ள ஏதேனும் இருக்குமா என்று நம்பிக்கையை விட்டுத் தேடியது. புற்களைப் பிடுங்கி வீசியது. முதுகில் குத்திய விஷம் மெல்ல மெல்ல ஹிருதயத்தை அடைய யானையின் ஹிருதயம் நிதானமிழக்கத் துவங்கியது. விஷம் புத்திக்கு ஏற யானைக்கு மூச்சு திணறியது. திரும்பத்திரும்ப யானை உரக்கக் கத்தியது. யானையின் மூளையில் விஷம் பரவி செயலிழக்க வைக்க மண் சுவரில் முட்டிக்கொண்டு கதறியது. மறுபடியும் பிளிறியது. அதன் கண்களில் நீர் அருவியாய் வழிந்தது. கால் மாற்றித் தவித்தது. சாணமும், சிறுநீரும் அதன் உடம்பிலிருந்து பிரிந்தன. யானை அந்தப் பள்ளத்தின் ஒரு பக்கம் மெல்ல சரிந்தது. அதன் மூளையின் நடுமையத்தில் விஷம் தாக்க ஓவ்.. என்று ஒரு குரல் கொடுத்து விட்டு நினைவற்று விழுந்தது.

சில வினாடிகளில் அதன் பிராணன் பிரிந்தது.

பரஞ்சோதி ஆஸ்திவாரத்தின் மறுமுனையில் இருந்தபடி யானையைக் கவனித்தவன் அருகே போய் அதன் தும்பிக்கையை எட்டி உதைத்து பார்த்தான். தந்தத்தைப் பிடித்து உலுக்கினான். யானை இன்னும் சரிந்து அந்தப் பள்ளத்தில் முடங்கிக் கிடந்தது.

பரஞ்சோதி அதன் கன்னத்தில் கால் வைத்து முதுகில் கால் வைத்து பள்ளத்திலிருந்து வெளியே வந்தான். கூட்டமாய் வேலி தாண்டி ஜனங்கள் வருவதைப் பார்த்து அங்கேயே இருங்கள் என்று கத்தினான்.

இளவரசர் இராஜேந்திரர் மெய்க்காவல் படையோடு முன்னேறினார். தீப்பந்தத்தைத் தாழப்பிடித்து வெளிச்சம் காட்டியபடி ஒருவீரன் முன்னே வர மற்ற இரண்டு பக்கமும் தீப்பந்தங்கள் தூக்கிப் பிடித்தவாறு இரண்டு வீரர்கள் வர வளையமான தீப்பந்தங்கள் அங்கங்கே பொருத்தப்பட்டு பெரும் கொழுந்துவிட்டு எரிய அந்த இடம் பிரகாசமாயிற்று.

யானை கருண்டு கிடப்பதை இராஜேந்திரர் பார்த்தார். வருத்தப்பட்டார்.

"இறந்துவிட்டதா பரஞ்சோதி" என்று கேட்டார்.

"ஆமாம் ஐயா. முதுகில் விஷ ஈட்டியை வைத்து சொருகியிருக்கிறார்கள். யானையின் வாயிலிருந்து நீர் வருகிறது. கண்கள் நிலைகுத்திவிட்டன. விஷம்பட்டு இறந்தால்தான் யானை இப்படி கிடக்கும். பின்பக்க ஈட்டியில் விஷம் இருந்திருக்கிறது."

"ஒரு சோழவீரன் தாக்கப்பட்டானே என்ன ஆனான்."

"இறந்து போனான். வட்டமான இரும்புச்சக்கரத்திலும் விஷம் தடவியிருப்பார்கள் என்று நினைக்கிறேன்."

"அப்படியானால் இது சேர அந்தணர்களின் செயல். காந்தளூர்ச்சாலை கடிகையில் கற்றவர்தான் இப்படி சக்கரம் வீசவும், ஈட்டி எறியவும் முடியும். அந்தக் குண்டன் என்ன ஆனான்."

"வீரர்கள் பின்தொடர்ந்து போயிருக்கிறார்கள்."

"இல்லை. அலனைப் பிடிப்பது எளிதல்ல. அவன் இந்நேரம் கூட்டத்தோடு கூட்டமாகக் கலந்திருப்பான்.

"மெய்க்காலவ் வீரர்களே இளவரசரை மிகக் கவனமாகப் பாதுகாத்து அரண்மனைக்கு அழைத்துப் போய்விடுங்கள். கோட்டைக் கதவுகளையெல்லாம் மூடிவிடுங்கள். எவரும் உள்ளே வரவாகாது. உள்ளே இருப்பவர் எவரும் வெளியே போகலாகாது. பலத்த சோதனைக்கும், விசாரணைக்கும் பிறகே எவரும் நகரப்பட வேண்டும். ஆயிரம் குதிரை வீரர்களை நாலாபுறமும் அனுப்பி குண்டாக இருப்பவர் எவராக இருப்பினும் அவரைத் தனியாக நிற்க வைத்து விசாரிப்போம். சடையும், குத்தீட்டியும், கோமணமும், குண்டான உடம்பும், கால்களில் கயிறு கட்டிய செருப்புமாய் அவன் நடமாடுகிறான். இடுப்புத் துணியும், கோமணமுமாய் ஒன்றாக்கி இறுக்கக் கட்டியிருக்கிறான். ஆனால் அது அடையாளமல்ல. வேட்டி பிரித்து உதறி சோழ அந்தணர்கள் போல் தன்னை மாற்றிக்கொள்வான். தன் அடையாளங்களை வேறுவிதமாகச் செய்து கொள்வான். கோவில்களில் அம்மாதிரி ஒற்றர்கள் நடமாட மாட்டார்கள். மக்கள் நடமாடுகின்ற வீடுகள் இருக்கும் பகுதியில்தான் அவர்கள் போவார்கள். ஊருக்கு ஒருவிதமாக உருமாறுவார்கள். ஒரு தெருவில் நாமம் தரிப்பார்கள். ஒரு தெருவில் விபூதி அணிவார்கள். சட்டென்று பைராகிகளாக மாறுவார்கள். எனவே தஞ்சையின் நான்கு புறம் படிகளுக்கும் வீரர்களை அனுப்பி ஒருவரையும் வெளியே போக ஒட்டாமல் செய்ய வேண்டும்."

சாவூர் பரஞ்சோதி உரக்கக் கத்தினான்.

இராஜேந்திரர் உத்தரவுகள் போடுவதற்காக கை உயர்த்த அவர் முன்பு மண்டியிட்டுப் பணிந்தான்.

"தயவு செய்து என் பேச்சைக் கேளுங்கள். நீங்கள் அரண் மனைக்குப் போகவேண்டும். எங்கிருந்தாவது ஒரு விஷச் சக்கரம் உங்கள் மீது பாய்ந்தால் இந்த சோழ தேசம் தாங்காது. இப்போது நீங்கள் தலைமையேற்று நடத்த வேண்டும். இது போர் அல்ல. ஒற்றர்களின் வெறியாட்டம். நயவஞ்சகத்தாக்குதல், சோழ தேசத்துப் பொக்கிஷமான உங்களைப் பாதுகாக்க வேண்டியது எங்கள் கடமை. நாளை காலை விடியலுக்குள் அந்தக் குண்டனை உங்களிடத்தில் கொண்டு வந்து சேர்ப்பேன். எனக்கு விடை கொடுங்கள்.

அவன் மண்டியிட்டபடி பேசினான்.

இராஜேந்திரர் நிமிர்ந்து அவன் தோளில் கைவைத்தார்.

"ஆனால், பரஞ்சோதி நீ இப்பொழுதுதான் வந்திருக்கிறாய். உன்னை அடையாளம் தெரியாதவர் அதிகம் உண்டு. எனவே இந்த விஷயத்தில் நீ பங்கு பெறலாமே தவிர, தலைமையேற்று நடத்த முடியாது. சோழ வீரர்களுக்கு அதிகம் பரிச்சயமான அருண்மொழியையே அழைத்துக்கொண்டு போ. அருண் மொழியின் தலைமையில் செயல்படு."

பரஞ்சோதி சில வினாடிகள் தயங்கினான்.

அருண்மொழியின் பெயர் கேட்டதும் மனம் சற்று உள்ளே சுருங்கி விரிந்தது.

சோழதேசத்தில் அவன் இதுவரை ஜெயிக்க முடியாத வீரர்கள் மூன்று பேர். ஒன்று ஈராயிரம் பல்லவரையர், இரண்டாவது பழுவேட்டரையர், மூன்றாவது அருண்மொழி.

அந்தணன் என்று அவட்சியமாகப் போரிட்ட அந்த யவனனை அருண்மொழி பல்வேறு விதமான சோதனைக்கு ஆளாக்கினான். விதம்விதமாக கருவிகளை எடுத்துப் போரிட்டும், எந்தக் கருவிகளை வைத்துக் கொண்டும் அருண்மொழியை ஜெயிக்க முடியவில்லை. அருண்மொழியின் கையே மேலோங்கி யிருந்தது என்பதைப் பரஞ்சோதி புரிந்துகொண்டான். அவனுக்கு வியப்பாக இருந்தது. அருண்மொழி அவனைத்தட்டிக் கொடுத்து விட்டு விலக அவன் அருண்மொழியின் பின்னே ஓடிப்போய் அவன் கைபிடித்து கொண்டு என் போர் முறையில் என்ன தவறு என்று வியப்போடு கேட்டான்.

அளவுக்கதிகமான நம்பிக்கை உமது இடதுபக்கம் தடுக்கத் தான் உபயோகப்படுகிறதே தவிர அங்கிருந்து வரும் தாக்குதல்கள்

பலமாக இல்லை. ஒரு மனிதன் இடது பக்கமோ, வலது, பக்கமோ எந்தப் பக்கமிருந்து தாக்கினாலும் ஒரே சீரான வேகத்தில், கனத்தில் தாக்க வேண்டும். சிறிது நொய்மையாக இருப்பதை புரிந்துகொண்ட எந்த வீரனும் உம்மை இடது பக்கமாகவே போரிட வைப்பான். நீர் எளிதில் அயர்ந்து போகிறீர். நீர் கற்ற வித்தையில் ஏதோ தவறு இருக்கிறது. யவனர்கள் அத்தனை பேருமே ஒரு பக்கம்தான் வலுவோடு அடிக்கிறார்கள். சேர தேசத்திலுள்ள கடிகையில் இந்தத் தவறு ஏற்படக்கூடாது என்று ஆரம்பம் முதற் கொண்டே பயிற்சியைச் செவ்வனே ஆரம்பித்து விடுவார்கள். அதற்குப்பிறகு இன்னொரு தவறும் இருக்கிறது.

உமக்கு உம்முடைய குதிரையோடு ஸ்நேகிதம் இல்லை. உம்மைக்கண்டு உம்முடைய குதிரை பயப்படுகிறது. அதனால் தான் குதிரையில் ஓடிவந்து தாக்கும்போது உம்முடைய கூச்சல் கண்டு குதிரை என்னை விட்டு விலகிவிடுகிறது. உம்முடைய தாக்குதல் தவறாக இருக்கிறது. உம்முடைய குதிரை விலகு மென்று தெரிந்ததினால் நான் அந்த விலகலை எதிர்பார்த்தே உம்மைத் தாக்குகிறேன். உம்மைத் தொடுகின்ற கடைசி வினாடி யில்தான் நான் எங்கே தாக்குவதென்று தீர்மானிக்கிறேன்.

அருண்மொழி வியக்க வைத்தான். பரஞ்சோதியின் சிரம் தாழ்ந்த வணக்கத்தை ஏற்றுக் கொண்டான்.

ஆனால், பரஞ்சோதிக்கு அந்தக் கம்பீரம் லலித்தது.

தன்னைவிட உயரத்திலும், ஆகிருதியிலும் குறைந்த இந்த அந்தணன் தன்னை எளிதாகக் கையாளுவதுகண்டு அடிமனம் வெதும்பியது. ஆனாலும் மரியாதை குறையவில்லை.

இப்பொழுது இளவரசர் இராஜேந்திரரே தலைமை ஏற்க அருண்மொழிதான் சரி. நீ இல்லை என்று சொன்னபோது அந்த வலி அதிகமாகியது. இதுதான் சம்மந்தப்பட்ட விஷயம். தான் அந்த யானையை ஏமாற்றி சரிய வைத்துவிட்டோம். பேராபத்தி லிருந்து இளவரசரைக் காப்பாற்றி விட்டோம். இதே வேகத்தில் செயல்பட்டால் அந்தக் குண்டனை வெகு சீக்கிரத்தில் பிடித்து விடலாம். ஆனால், இவ்வளவு திறமையான பணியைச் செய்த பிறகும் தனக்கு அந்த மரியாதை கிடைக்கப் போவதில்லை. குண்டனைப் பிடித்தது அருண்மொழி என்று மாறப் போகிறது. இப்பொழுது மனஸ்தாபத்திற்கான நேரமல்ல. எதிரிகள் ஊடுருவியிருக்கிறார்கள் என்பதை தெள்ளத் தெளிவாகப் புரிந்து கொண்டோம். எப்படியேனும் அந்தக் குண்டனைப் பிடிக்க வேண்டும். அருண்மொழிப்பட்டன். பிரம்ம ராயரான

கிருஷ்ணன் ராமன், பழுவேட்டரையர், பல்லவரையர், வந்தியத் தேவர் என்று பல போட்டிகளை இங்கு சமாளித்தாக வேண்டும். இப்போது இளவரசர் இராஜேந்திரர் உத்தரவுக்குக் கட்டுப் பட்டாக வேண்டும். மறுபடியும் நிலம் தொட்டு தலைவணங்கி இளவரசரிடமிருந்து பின்னடைந்தான்.

குதிரைகளுக்காக நீண்ட சீழ்க்கை ஒலி அனுப்பினான். தொலைதூரத்தில் ஓரம் நின்றிருந்த குதிரை வேகமாக அவனுக் கருகே வந்தது. தாவி ஏறிக்கொண்டான். தீப்பந்தங்கள் யானை விழுந்த இடத்தை நோக்கி மெல்ல நகர்ந்தன.

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் தன்னுடைய மெய்க் காவல் வீரரோடு குதிரை ஏறினார். வட்டத் தீப்பந்தங்கள் அவரைச்சுற்றி எரிந்து கொண்டிருந்தன. அவரைத்தாண்டி இராஜேந்திரருடைய குதிரைகள் ஒரு வீரனால் ஓட்டிச் செல்லப்பட்டது. தன் குதிரையில் ஏறப்போன இராஜேந்திரருக்கு சக்ரவர்த்தியின் வருகை சொல்லப்பட்டது. குதிரையில் ஏறாமல் சக்ரவர்த்தியை நோக்கித் திரும்பி அவர் சேணத்தின் மீது கை வைத்து, சக்ரவர்த்திக்கு நடந்ததைச் சுருக்கமாக இராஜேந்திரர் விவரித்தார்.

யானை எங்கே என்று கவலையாக சக்ரவர்த்தி கேட்டார். அந்த இடம் நோக்கி தீப்பந்தங்கள் நகருவதைச் சுட்டிக்காட் டினார்.

வா போய் பார்க்கலாம் என்று சொல்ல மெய்க்காவல் வீரர்கள் இல்லை. போக வேண்டாம் என்று பேசத் துவங்க, சும்மாயிருங்கள் என்று சக்ரவர்த்தி சீறினார்.

அங்கிருந்த குதிரையில் தாவி ஏறிக்கொள்ள உடைந்த வேலியை எகிறித்தாண்டி அவர்கள் இரண்டு பேருடைய குதிரைகளும் போயின. பின்னால் வந்த வீரர்களும் அவர் பின்னே போனார்கள். அந்தப் புல்மேடு ஏறியதும் தீப்பந்தங்கள் ஒரு இடத்தில் வட்டமாக இருப்பதைப் பார்த்து இளவரசர் கீழிறங்கினார்.

சக்ரவர்த்தி குதிரையிலிருந்தபடியே அந்த இடம்நோக்கி மெல்ல நடந்தார். ஒரு தீப்பந்தம் அவருக்கு வழிகாட்டியது. அன்று காலை கம்பீரமாக நடந்து வந்த அந்தப் பெண் யானை ஆழமான ஒரு அஸ்திவாரக் குழியில் சரிந்து துவண்டு கிடந்தது. அதைப்பார்த்து சக்ரவர்த்தி மனம் குமுறினார்.

*எல்லையை வகுத்துக் கொடுத்த பிடி இறந்து போவது தடைதான். துர்சகுணம்தான் ஆனாலும் விடமாட்டேன். இறைவன் திருப்பெயர்ச் சொல்லி எல்லா தீயசகுனங்களும் ஒழிய கோயில் எழுப்புவேன்.*

வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து
என் உளமே புகுந்ததனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனி பாம்பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

*உள்ளம் குமுறி இந்தச் செய்யுளை சக்ரவர்த்தி முணுமுணுத்தார்.*

*நீ என் நெஞ்சில் இருக்கிறாய். என் இதயத்தில் சிம்மாசன் போட்டு வீற்றிருக்கிறாய். எங்கும் நிரம்பிய உன்னை நான் என்னுள்ளும் சுமந்து கொண்டிருக்கிறேன். என்னுள் சுமக்கிற உனக்கு இந்தப் பூமியும் சுமக்கட்டுமென்று, உன்னை இந்த ஊர் நினைவுகொள்ள வேண்டி கோயில் எழுப்புகிறேன். பிடி இறந்தால் என்ன களிறு இறந்தால் என்ன, காவல்கள் இறந்தால் என்ன, ஏன் நான் இறந்தாலும் என்ன. இது தொடரும், இந்தக் கோயில் வளரும். என் போராட்டம் நடக்கும். தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.*

*அவர் மெல்ல களிறு விழுந்த இடத்தை நோக்கி குதிரையைச் செலுத்தினார். கண்மூடி நமசிவாய மந்திரம் சொன்னார்.*

*“இராஜேந்திரா. ஒரு பிடிமண் கொடு” என்று கேட்டார்.*

*இராஜேந்திரன் குனிந்து ஒரு பிடி மண் எடுத்துக் கொடுக்க அதை அந்தக்களிறு நோக்கிப் போட்டார்.*

*எல்லா ஜனங்களும் அரசர் செய்ததுபோல களிறின்மீது மண் போட்டார்கள்.*

*“இங்கேயே புதைத்துவிடலா”*

*இராஜேந்திரர் ஆச்சரியத்தோடு கேட்டார்.*

*“ஆமாம். இங்கேயே புதைந்துவிடலாம்.”*

*"தந்தையே இது கோயில் கட்டுவதற்கு இடைஞ்சல் ஆகிவிடாதா."*

*"இராஜேந்திரா இது இரண்டாம் நிலை கோபுரம். மண்டபமும், கருவறையும் அதோ அந்தப் புல்மேட்டில் வெட்டப் பட்டிருக்கிறது. இந்தக் கோபுரவாசலில் விநாயகர் சிலை வைக்கும் வழக்கம் இருக்கிறது. விநாயகர் சிலைக்குக் கீழே இந்தப் பெண் களிறு உறங்கட்டும். இது பின்புறம் ஒரு பத்தடி தள்ளி வரும் அவ்வளவே."*

*பெருந்தச்சர் அருகே வர சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜ ராஜத்தேவர் குதிரையைவிட்டுக் கீழிறங்கினார். பெருந்தச்சர் தோள் மீது கை வைத்துக் கொண்டார். பெருந்தச்சர் அருகே வந்து அரசரின் புஜம் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று சொன்னார்.*

*"ஆமாம், நான் எதற்கு கவலைப்படவேண்டும். எல்லாம் வல்ல ஈசன் என்ன விரும்புகிறானோ அது நடக்கும்."*

*"ஐயா... நீங்கள் அரண்மனைக்குப் போங்கள். நீங்கள் சொன்னதுபோலவே களிறு இங்கு புதைக்கப் பட்டு பதினைந்தடி தொலைவில் கோபுரம் உள்ளே நகர்த்தப்படும். இது இரண்டாம் நிலை கோபுரம். முதல் நிலைக்கும், இரண்டாம் நிலைக்கும் திறந்த வெளி பெரிதாக இருக்கும். நானே இதைப் பெரிதாக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தேன். வினாயக பெருமான் வேறு திருவுருவம் கொண்டு அவன் விருப்பத்தை இங்கே நிறைவேற்றியிருக்கிறார். ஆனால், மிக உன்னதமான யானை இது. வேறு களிறு முரண்டு செய்யும்போதுகூட இப்பிடி மெல்ல அழைத்து சமாதானப்படுத்துவதை நான் கவனித் திருக்கிறேன். தெய்வாம்சமாக இருக்கிறது என்று நினைக்கிறேன். எவனோ திருடன் அப்பாவியான இந்த மிருகத்தை வைத்து விளையாடி விட்டான். அவனைப் பிடித்து விட்டீர்களா."*

*"இல்லை. ஆள் அனுப்பியிருக்கிறேன்."*

*இராஜேந்திரர் பதில் சொல்ல, இராஜேந்திரர் தோளிலும் தனது பெரிய கையைக் குஞ்சரமல்லனான பெருந்தச்சர் பதிய வைத்தார்.*

*இராஜேந்திரர் மெல்ல அவரை அணைத்துக் கொண்டார். அமைதியாய் ஒரு துக்கம் அங்கு நடந்தது.*

பெண்யானை இறந்ததற்கு அவர்கள் சில வினாடிகள் மௌனம் காத்தார்கள். பெண் யானை நினைப்பிலேயே தோய்ந்து கிடந்தார்கள். எந்த வேலையும் நடைபெற வில்லை. அதற்குள் எத்தனை துன்பங்கள் என்று பெருந்தச்சர் நீண்ட பெருமூச்சு விட்டார்.

அவர்கள் பிரிந்தார்கள்.

“எனப்பா செய்யப்போகிறீர்கள்.”

“இராஜேந்திரா. நான் இங்கு தேவரடியார்களோடு தான் இருக்கப்போகிறேன். பாண்டிய வீரர்கள் அரண்மனைக்குப் போயிருக்கிறார்கள். எனவே, நீ அங்கு போ, பளிச்சென்று அறுத்துக் கொண்டு போனால் இவர்கள் லேதனைப் படுவார்கள். ஒன்றுமே நடவாததுபோல இவர்களோடு மறுபடியும் சல்லாபித்துப் பேச வேண்டியதுதான் என்னுடைய வேலை. நான் துவண்டது போல இப்பொழுது காட்சியளித்தால் இவர்கள் அதிகம் துவளுவார்கள். மிகப்பெரிய அபச்சாரம் ஏற்பட்டது. போல பேசத் துவங்குவார்கள். அது நல்லதல்ல. பிடி இறந்தது நல்லதற்கே கிடாக்கள் வெட்டியது போல குதிரைகளையும், யானைகளையும் பலி கொடுத்துத்தான் ஆக வேண்டும். அந்த வழக்கம் 'வேண்டாமே என்று நினைத்துக் கொண்டிருக்க, இறைவனாகவே விரும்பி ஒரு பலியை ஏற்றுக் கொண்டார் என்று சொல்லிவிட வேண்டும். இது நல்ல சகுணம் என்று சொல்லப்பட வேண்டும்.”

அரசர் மறுபடியும் வந்து மணிமண்டபத்திற்குள் அமர்ந்தார். தேவரடியார்கள் ஒவ்வொருவராக வந்து சூழ்ந்து கொண்டார்கள்.

தங்களுக்குள்ளாகலே லேகமாகப் பேச ஆரம்பித்தார்கள்.

இப்படித்தான் ஒருமுறை எங்கள் ஊர் கிணற்றில் ஒரு யானை விழுந்துவிட்டது என்று ஒரு பெண் விழி விரித்து விவரிக்க மற்றவர்கள் அவளை ஆவலோடு கேட்டுக் கொண் டிருந்தார்கள்.

சட்டென்று யாரோ நமஸ்கரிக்கவே அரசர் திரும்பிப் பார்த்தார். பரவை குனிந்து வணங்கிக் கொண்டிருந்தாள்.

“என்ன பரவை.”

“ஐயா.. நான் நடனமாடட்டுமா.”

"ஆம். இவர்கள் கவனத்தை இழுக்கும் வண்ணமாக ஏதேனும் ஆடு."

அரசருக்கு முன்னால் உள்ள சிறிய இடத்தில் பரவை வந்து கைகூப்பியதும் சகலருடைய கவனமும் அந்தப் பக்கம் திரும்பியது.

'தோம் தித்தோம் திகிடத்தோம்... என்று நட்டுவம் முழங்க, தாளம் ஒலிக்க, மிருதங்கம் முழங்க, அலள் கால் உதைத்து நடன மாட ஆரம்பித்தாள். சுழன்று ஆடினாள். அவள் கூந்தலிலிருந்து பூக்கள் பறந்து அரசருடைய மடியில் விழுந்தன.

மகேஸ்வர சூத்ரம் என்ற சப்தத்தை டமருகம் என்ற வாத்தியத்தில் அந்தக் கலைஞன் இசைக்க அதற்கு உண்டான அபிநயங்களைத் தனித்தனியாகப் பாடம் நடத்துவதுபோல பரவை ஆடிக்காட்டினாள். சூத்ரம் முடிந்து இடையறாது டமருகம் ஒலிக்க, ஒரு யானையின் தோலை அழுத்திப் பிய்த்து யானையை முதுகுப்பக்கமாக வைத்து அந்தத் தோலை மொத்தமும் இரண்டு கைகளாலும் பிய்த்து இழுக்கின்ற ஒரு பாவத்தைக் காட்டினாள்.

அவள் உதடு துடித்தது. மூக்கு துடித்தது. மூக்கிலுள்ள புல்லாக்கு துடித்தன. கம்மல்கள் துடித்தன. காது வளையங்கள் துடித்தன. புஜம் துடித்தது. கழுத்து துடித்தது. மார்பகங்கள் துடித்தன. இடை துடித்தது. தொடை துடித்தது. முழங்கால் துடித்தது. இரண்டு கைகளும் வலுவுகொண்டு துடித்தன.

சட்டென்று யானையைத் தன்மீது போர்த்திக் கொண்டு, சிவன் ஆனந்தக் கூத்தாடினான். சக்ரவர்த்தி சகல துக்கமும் மறந்தார்.

இராஜேந்திரர் குதிரைகள் விரைவாக மெய்க்காவல் படை சூழ அரண்மனையை நோக்கிப் போயிற்று. அரண்மனை எக்காளம் முழங்க கோட்டைக்கதவுகள் திறக்கப்பட இராஜேந்திரசோழன் உள்ளே நுழைந்தார்.

கருங்கல் தளங்களைத் தாண்டி அரண்மனை வாசலை அடைந்து தரையிறங்கினார். எக்காளம் கேட்டு பட்டமகிஷியும் மற்றவர்களும் பரபரப்பானார்கள். இளவரசருடைய வருகை சொல்கிற விதமாய் இது அமைந்ததைப் பார்த்து பட்டமகிஷி தளர்வானாள்.

இராஜேந்திரன்தானே மேலே வரச்சொல் என்று மேல்மாடி முற்றத்திலிருந்தபடி அதிகாரிச்சிகளுக்கு கட்டளையிட்டாள்.

அதிகாரிச்சிகள் இராஜேந்திரரை வரவேற்பதற்காக வாசலுக்கு விரைந்தார்கள்.

அங்கு மேலே நாடகம் நடந்து கொண்டிருந்தது. நாடகத்தின் உச்சகட்டமாக இராவணனோடு போர் நடந்து கொண்டிருந்தது. நிறைய வீரர்கள் மடிந்து கொண்டிருந்தார்கள். ராமரும், லட்சுமணரும் கவலைப்பட்டு என்ன செய்வது என்று யோசித்த போது ராமர் கவலையைப்பார்த்து லட்சுமணர் சீறி யுத்தத்தில் வேகமாக ஈடுபட லட்சுமணரும் அடிக்கப்பட்டார். லட்சுமண ரும் துவண்டு விழுந்ததைக் கண்டு ராமர் புலம்ப, ஜாம்பவானின் யோசனைப்படி ஹனுமான் சஞ்சீவிமலையைப் பெயர்த்துக் கொண்டு வந்து, அங்கே இறக்க, ராமருடைய படைவீரர்கள் அந்த வாசனைப் பட்டு கண் விழித்தார்கள். துள்ளி எழுந்தார்கள்.

சஞ்சீவி மலைபோன்று ஒரு கூடையில் செய்து ஒரு பாண் டிய வீரன் ஹனுமனாக வேடம் போட்டு வந்து இறங்க சுற்றிலும் புகை போடப்பட்ட மூலிகை நெடியில் பெண் குழந்தைகளும் பட்ட மகிஷியும் இருமினார்கள்.

போதும் பின்னாலிருந்து இராஜேந்திரர் குரல் கொடுக்க பாண்டிய வீரன் நெருப்புச்சட்டியை விலக்கி எடுத்துக் கொண்டு போனான். புகை விரைவில் அடங்கிற்று.

இராவண வதம் நிகழ்ந்து சீதையின் அக்னிப் பிரவேசம் முடிந்து விமானம் ஏறி வளம் மிகுந்த பரத கண்டத்தின் ஒவ்வொரு பகுதியாக ராமேஸ்வரத்திலிருந்து பாடிப்பாடி அயோத்திக்குப் போய் அமர்ந்தார்கள். பட்டாபிஷேகம் நடந் தேறியது. பட்டாபிஷேகம் நடந்த அன்று பிற்பகலில் விமானத்தில் ஏறி அயோத்திக்கு வந்த அத்தனை வானரங்களுக்கும் ராமர் விருந்து படைக்கச் சொன்னார்.

எல்லா வானரங்களையும் வரிசையாக உட்கார வைத்து வாழையிலை போட்டு அரிசி சாதம் போட்டு அதற்கு மேல் பலவித காய்கறிகள் கலந்த குழம்புகள் ஊற்றி பரிமாறினார்கள். காய்களுக்கு நடுவே மொச்சை இருந்தது. கடைசியாக உட்கார்ந்திருந்த ஒரு குரங்குக் குட்டி ஒரு மொச்சையை அழுத்த, அந்த மொச்சை தோலிலிருந்து பிதுங்கிக்கொண்டு வெளியே வர பயந்து போய் குரங்குக்குட்டி துள்ளிக்குதிக்க, அந்தக் குரங்குக் குட்டி துள்ளிக் குதிப்பதைப் பார்த்து அடுத்த குரங்கு

குதிக்க, அதற்கு அடுத்தக் குரங்கு குதிக்க, அதற்கு அடுத்தக் குரங்க குதிக்ச பல்வேறு குரங்குகள் உயரம் உயரமாக குதித்து குதித்து ஹனுமாரும் பெரிய யுத்தம் வந்துவிட்டது என்ற நினைப்பால் உயரக் குதித்து எல்லாரையும் விட உயரமாகப் பரவ, பிறகு தரையிறங்குவதை நடித்துக் காண்பிக்க பட்ட மகிஷியும், மற்றவர்களும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

இராஜேந்திரர் சிரிக்க வில்லை. அவர் கண்ணில் பள்ளத்தில் விழுந்து இறந்து போன யானையின் ஞாபகம் வந்தது. மெல்ல அவர் கண்கள் கலங்கின.

நாடகம் முடிந்ததாக அறிவிக்கப்பட பட்டமகிஷி துணிகளும், தின்பண்டங்களும், பழங்களும், பொற் காசுகளும் அந்தப் பாண்டிய வீரர்களிடம் கொடுத்தார்.

சந்தோஷமாகவும், சுமூகமாகவும் இங்கு இருங்கள். இருப்ப தற்கு சிரமம் எனில் உங்களுடைய தேசம் நோக்கி நீங்கள் போக லாம். எங்கு போனாலும் எங்களைச் சந்தோஷப்படுத்தியதற்காக நல்ல முறையில் வாழ்வீர்கள் என்று ஆசீர்வாதம் செய்தாள்.

எத்தனை பாண்டியவீரர்கள் என்று கேட்டாள்.

பதினோரு பாண்டிய வீரர்கள் என்று பதில் வந்தது.

அத்தனை பேரையும் கட்டுக்கோப்பாக வெளியேற்றுவதற்கு ஆட்கள் தயாரானார்கள். கோட்டை லாசல்வரை வந்து நின்றார்கள். நீங்கள் போகலாம் என்று சொன்னதும் கோட்டை லாசலில் தயங்கி அந்த வீரர்கள் நின்றார்கள்.

“உங்களைப் போகலாம் என்று சொல்லி விட்டோமே” என்று சொல்ல, “உங்கள் கோட்டை வெளிவாசலில் சற்று இளைப்பாறு கிறோமய்யா. எங்களால் நடித்துவிட்டு உடனே நடக்க முடிய வில்லை. சிரமமாக இருக்கிறது. கோட்டைக் கதவை அடைத்து விடுங்கள். இங்கேயே இருக்கிறோம்.” என்று சொன்னார்கள்.

கோட்டைக்கதவு அடைக்கப்பட்டது.

அந்தக்கோட்டை வெளிவாசலில் வீரர்கள் இருந்தார்கள்.

ஒருவன் பெருங்குரலெடுத்து நெஞ்சில் அடித்துக் கொண்டான். உயரே தெரிந்த கோட்டைவாசலைப் பார்த்தான்.

என் ஐயா. என் ஐயா நீர் இங்கேயா இருந்தீர். உமது சிரம் இங்கேயா தொங்கிற்று. இங்கேயா நீர் நடப்பட்டீர். எனது ஐயா, எனது ஐயா என்று நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதான்.

மற்ற வீரர்களும் வாய்விட்டுப் புலம்பினார்கள். பெரும் கதறலாய் கதறினார்கள்.

கால் நாழிகை அந்தக் கோட்டை வாசலிலேயே புலம்பிக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் கோட்டை வாசலில்தான் வீரபாண்டியன் எனப்படும் பாண்டிய மன்னனின் தலை ஆதித்த கரிகாலன் என்னும் சோழ இளவரசனால் வெட்டிக் கொண்டுவரப்பட்டு நடப்பட்டு வெகுநாட்கள் கிடந்தது. சதையெல்லாம் பிய்ந்து வெறும் கபாலமாக அவன் நிற்கும் அந்தக் கோட்டை வாசலிலேயே ஈட்டியில் சொருகப்பட்டு நின்றிருந்தான். கபாலத்திற்குள் வண்டுகள் வந்து தங்குகிறது என்று பிறகு அதைத்தூக்கி வெளிப் பக்கமாகவே எறிந்து விட்டார்கள்.

அந்த ஆதித்தகரிகாலனைத் தான் பாண்டியனின் ஆபத்துத விகளான ரவிதாஷனும், பரமேஸ்வரனும் திட்டமிட்டு தனியாக மடக்கி குத்திக் கொன்றார்கள். எவருக்கும் சந்தேகம் ஏற்படா வண்ணம் அந்த ரவிதாஸனுக்கும், பரமேஸ்வரனுக்கும் உத்தம சோழன் என்கிற கண்டராதித்தனுக்கும், செம்பியன் மாதேவிக் கும் பிறந்த மகன் உதவி செய்தான். அவன் பதினாறு ஆண்டுகள் ஆட்சி செய்தான்.

உத்தமசோழன் தன்னுடைய ஆட்சியில் ரவிதாஸனுக்கும், பரமேஸ்வரனுக்கும் பிரம்மராயர் பட்டம் கொடுத்து தனக்குச் சேனாதிபதியாக வைத்துக் கொண்டான். அந்த காலகட்டங் களில் ஊர் ஊராகச் சுற்றித் திரிந்த இராஜராஜர் மக்கள் பலத்தைத் தன்பக்கம் இழுத்துக் கொண்டார்.

ஆதித்தகரிகாலன் கொலைக்கான காரணம் என்ன என்று தேடுவதில் மும்முரமாக இருந்தார்.

ஆதித்தகரிகாலன் இறந்தது ரவிதாஸனால், பரமேஸ் வரனால்... அதற்கு தூண்டுதலாக இருந்தது உத்தமசோழன் என்று தெரிந்து அவனைப் பதவியிலிருந்து இறக்கி பரமேஸ்வரனையும், ரவிதாஸனையும், குடும்பத்தோடு நாடு கடத்தினார்.

ரவிதாஷனும், பரமேஸ்வரனும் தங்களுக்கு பெண் கொடுத்த வர்களோடு, பெண் கொடுத்தவர்களுடைய வேட்டகத்தார்களோ டும் சேரதேசம் போய் காந்தளூர்ச் சாலையில் குடியமர்ந்தார்கள். அடிப்படையில் அவர்களெல்லாம் சேரதேசத்து அந்தணர்கள், யுத்தப் பயிற்சியும், சாஸ்திர ஞானமும் உள்ள புதுமையான நம்பூதிரிகள். அங்கிருந்தபடியே மறுபடியும் படை திரட்டுவதற்கு

ரவிதாஸன் ஏற்பாடு செய்கிறான் என்பதைத் தெரிந்துகொண்டு இராஜராஜர் தான் அரியணை ஏறிய அடுத்த வருடமே பெரும் படையோடு காந்தளூர்ச்சாலை போய் அதை அடித்து நொறுக்கி எரியூட்டிவிட்டு வந்தார். அந்தப் போர்ப் பயிற்சி தரும் கல்லூரியின் போக்கை மாற்றி அதை சீரமைத்து விட்டு வந்தார்.

பரமேஸ்வரனும், ரவிதாஸனும் பரதகண்டத்தை விட்டுத் தப்பி ஈழம் போனார்கள். ஈழத்திலும் அவர்களைத் தேடும்பணி நீடித்ததால் ஈழத்தின் கிழக்குக் கடற்கரையோரம் வந்து அங்கிருந்து பெரிய நாவாய்களில் சீனத்துப்பட்டு விற்க வந்த வியாபாரிகளோடு பயணப்பட்டார்கள். இவையெல்லாம் பாட்டாகச் சொல்லப் பட்டிருக்கின்றன. ஒப்பாரியாக இன்னும் பாண்டிய தேசத்தில் பாடப்பெறுகின்றன.

இந்த இடத்தில்தான் தங்கள் தலைவனுடைய தலை குத்தி நடப்பட்டிருந்தது என்று பாண்டி வீரர்களுக்குச் சொல்லப்பட்டி ருந்தது. கோட்டைக்குள் நுழையும்போது அழமுடியவில்லை. வெளியே வரும்போது நெஞ்சு கமை கரைய அழுது தீர்த்தார்கள். திரும்பி பாண்டியதேசம் போய்விடலாமா என்றிருக்கிறது. சோழ தேசத்தில் இருக்கப் பிடிக்கவில்லை. இவர்களுடைய வளமும், செல்வச் செழிப்பும், வாரி வழங்குவதும் பார்த்து இவையெல்லாம் நம்முடைய காசுதானே. நம்மிடம் திரட்டிய செல்வந்தானே என்று தோன்றுகிறது. இதோ இவர்கள் கொடுத்த தங்கக்காசில் ராஷ்டிரகூடர்களுடைய காசும், சாளுக்கியர் காசும், கங்கதேசத் துக் காசும், கீழைச் சாளுக்கியர் காசும், சேரத்துக்காசும் இருக் கின்றன. கணக்கே இல்லாமல் கொண்டு வந்து எண்ணிக்கை இல்லாமல் வழங்குகிறார்கள். பொற்காசுகளுக்கு தஞ்சையிலே மதிப்பே இல்லையென தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

“சரி, அதனால் என்ன” இன்னொரு வீரர் இடைமறித்தார்.

“பாண்டிய தேசம்போய் என்ன செய்யப்போகிறோம். பாண்டிய தேசத்திலுள்ள சோழவீரர்களை என்றாவது நாம் நாடகமாடச் சொல்லியிருக்கிறோமா. நாட்டியமாடச் சொல்லி யிருக்கிறோமா. கூப்பிட்டு விருந்து வைத்திருக்கிறோமா. இவன் சோழ தேசத்தவன் என்று தெரிந்தால் அது வீரனாக இருந்தாலும், வியாபாரியாக இருந்தாலும் குத்திக் கொன்று கிழித்துப் போட்டல்லவா வேறு வேலை பார்ப்போம். நிர்வாணமாக நிற்கவைத்து கசையால் அடித்தல்லவா கொல்லுவோம். சோழர் மீது அவ்வளவு ஆத்திரமல்லவா நமக்கு இருந்தது. ஆனால் இந்த சோழவீரர்கள் மாறுதலாய் இருக்கிறார்களல்லவா. இதற்குக்

காரணம் இராஜராஜர். அந்தக் கோவில் வேலையை மறந்து விடாதீர்கள். நமது பெண்களுக்கு இப்படி பேசத்தெரியுமா. அரசியார்கூட இப்படி பேசுவதில்லையே. உள்ளே நுழைந்த அத்தனை பேருக்கும் பானகம் கொடுத்தார்களே. இங்கு பெண்களல்லவா அதிகாரிகள் என்ன ஆச்சரியமாக இருக்கிறது. அதிகாரிச்சிகள் இடுப்பிலெல்லாம் நீண்ட வாட்கள் தொங்கு கின்றன என்றால் என்ன அர்த்தம். அலங்காரத்திற்கா? அவர் களுக்கு வேலை தெரியுமென்றல்லவா உறுதியாகிறது."

"என்ன செய்யச் சொல்கிறாய்"

"எல்லாம் பார்த்தாகி விட்டது. கிளம்பலாம் என்று சொல் கிறேன்."

"இல்லை. இந்த சோழதேசத்தின் பல்வேறு விஷயத்தை நம் தேசத்திற்கு எடுத்துப்போக வேண்டுமெனில், இந்தக்கோயில் கட்டும் வரையாவது நாம் இங்கு இருக்க வேண்டும். கங்க தேசத்திலிருந்து விகர்ணன் என்று ஒருவன் நம்மோடு வந்தான். நினைவிருக்கிறதா அவனும், அவன் குழுவினரும் தெள்ளத் தெளிவாக இருக்கிறார்கள். சிற்பவேலை கற்றுக் கொண்டுதான் சோழதேசத்தை விட்டுப் போவேன் என்று உறுதி பூண்டிருக் கிறார்கள். விகர்ணன் நேற்று தலைமைச் சிற்பியான பெருந்தச்ச ரின் உதவியாளரிடம் சேர்ந்துவிட்டான். அந்தச் சிற்பிக்குக்கூட மிக அருமையான பெயர் குணவன் மதுராந்தகனான நித்த வினோதப் பெருந்தச்சனாம். தினமும் ஒவ்வொரு வினோதம் செய்து காண்பிப்பானாம். இன்றைக்கென்ன வினோதம் என்று அவனைச் சுற்றி இருப்பார்களாம். குழந்தைகள் விளையாடும் பொம்மையிலிருந்து சிற்பங்களுக்கு சாந்து அரைப்பது வரை மிக கெட்டிக்காரனாம். குணவன் என்று எல்லோரும் கூப்பிடு கிறார்கள். அதேநேரம் நித்த வினோதப் பெருந்தச்சன் என்று மரியாதையாய் கட்டியம் சொல்கிறார்கள். சிற்பிகளுக்கு கட்டியம் சொல்கின்ற முறை இங்கு ஒரு தேசத்தில்தான் இருக்கிறது.

தலைக்கோலி வருகிறார். பராக் என்று தேவரடியார்களுக்கும் மரியாதை செய்கிறார்கள். இதோ நேரே இந்தப்பாதை வழியாக நடந்தால் தளிச்சேரி நாட்டியம் நடக்குமிடத்திற்குப் போய்விட லாம். அங்கிருந்து வலதுபக்கம் திரும்பினால் நம்முடைய பெருங்கொட்டகை இருக்கும். வீடுகளைப் பார். எப்படி இழைத்து இழைத்து கட்டியிருக்கிறார்கள். என்ன அகலமான திண்ணைகள். இது ஆதுரச்சாலை, அதாவது வைத்தியச்சாலை என்று பெயர்.

இவையெல்லாம் பள்ளிகள். இப்பொழுது தேவார திருவாசகங் களை இங்கு சொல்லிக் கொடுக்கத் துவங்கியிருக்கிறார்கள். சிதம் பரத்திலே மறைவாக வைக்கப்பட்டிருந்த தேவார திருவாசகங் களை அந்தணர்களை மிரட்டி இராஜராஜர் கொண்டு வந்திருக் கிறார். அவைகள் பிரதியெடுக்கப்பட்டு தஞ்சை முழுவதும் பரப்பப்படுகின்றன. கண்டிப்பாக சகலரும் கற்றுக்கொள்ள வேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருக்கிறது. பெண்களும் படிக்கிறார்கள்.

இதுவரை சேனாதிபதிகளுக்கான வீடு, பிறகு உள்ளாலை, பெரிய அங்காடி பலவிதமான காய் கறிகளும், தானியங்களும், துணிவகைகளும் இங்கு விடியற் காலையில் வந்து இறங்கும். அன்று மாலைக்குள்ளாகவே விற்றுத் தீருகின்றன. பக்கத்துக் கிராமங்களிலெல்லாம் வந்திருந்து சிறு வியாபாரிகள் வாங்கிப் போகிறார்கள். அப்படியே போனால் தெற்கு அலங்கம் எனப்படு கின்ற இடம். இந்தத் தெற்கு அலங்கத்தின் வழியாகக் கடந்து போனால் புறம்படிகள் வருகின்றன. மும்முடிச்சோழ பெருந்தெரு, வீரசிகாமணி பெருந்தெரு, வீரசோழப் பெருந்தெரு, ஜெயங்கொண்ட பெருந்தெரு, ராசவித்யாதர பெருந்தெரு என்றெல்லாம் பல தெருக்கள் இவ்வூரில் இருக்கின்றன. இன்னும் தனியே பூந்தோட்டங்களோடு வீடுகள் இருக்கின்றன.

எவ்வளவு பெரிய பட்டணம். ஊருக்கு வருவதற்காக பல பெருவழிகள் இருக்கின்றன. தஞ்சைப் பெருவழி, இராசராசப் பெருவழி, வடுகப்பெருவழி, கொங்கு நாட்டுப் பெருவழி, பெண்ணாகடப்பை பெருவழி, தெற்கே கருந்திட்டை என்ற புறம்படியில் ஒரு பெரிய கருமார்புரம் இருக்கிறது. இரும்பு வேலை செய்வதற்கு நூற்றுக்கணக்கான ஆட்கள் இருக்கிறார்கள். ஊரின் நேர்எதிரே தெற்குப்பக்கம் தேவரடியார்களுக்கும் தனித் தனியே குடியிருப்புகள் இருக்கின்றன. மேற்கே காவிரியையும் இன்னும் பல நதிகளையும் ஒட்டி பல அந்தணக் குடியிருப்புகள் இருக்கின்ற. தஞ்சையை விட்டுப் போகின்ற எண்ணத்தை விட்டுவிடுங்கள். நாம் அதிகம் கற்றுக்கொண்டு பாண்டிய தேசத்திற்குப் போவோம்."

"அதற்கு முன்பு இறந்துவிட்டாய்."

ஒரு பாண்டிய வீரன் அலுப்பாகப் பேசினான்.'

"நேரே சொர்க்கம் போய் பார்வதி பரமேஸ்வரனைத் தரிசித்து விட்டு நமஸ்காரம் செய்து அங்கிருந்து மறுபடியும் மதுரைக்கு வந்து பிறப்போம். ஒரு மகத்தான பாண்டிய தேசத்தை

உருவாக்க பார்வதி பரமேஸ்வரர்களிடம் உறுதி வாங்கி வருவோம்."

அந்தப் பாண்டிய வீரர்கள் சோகமாய்ச் சிரித்தார்கள்.

"இன்னும் குரங்கு வேஷம் போட்டுக் கொண்டு போகிறாயே எதற்கு அவிழ்த்துவிடேன்."

ஹனுமனாக வேடமிட்டவனை மற்றொருவன் கேட்டான்.

"நீ அழித்தாலும் உன் முகம் குரங்காகத்தான் இருக்கிறது."

"என்னுடைய முகமூடிகளை அழிக்க நான் பிரியப்பட வில்லை. எங்கேனும் தொலைந்துவிடும். இவர்கள் சிரிப்பதைப் பார்த்தால் இன்னும் பலமுறை ஆடச்சொல்வார்கள் போலிருக் கிறது. எனவேதான் பகல் பொழுதில் எங்கேனும் பத்திரமாய் கழற்றி வைக்கலாம் என்று, கலைக்கலாம் என்று எடுத்து வருகிறேன்."

அவர்கள் தெற்கு அலங்கத்திலிருந்து திரும்பும் போது பார வண்டிகள் இரவு அங்காடியில் காய்கறி இறக்கிவிட்டு மறுபடியும் தெற்குநோக்கி போகத் துவங்கின. ஆறேழு வண்டிகள் போகும் போது அவர்கள் இரண்டாகப் பிரிந்தார்கள். அப்போது குண்டாய் குரங்கு வேடமணிந்த ஒருவன் அவர்களோடு கலந்து கொண்டான்.

தெற்கு அலங்கத்தில் அவர்கள் நிறுத்தப் பட்டார்கள். யார் என்று விசாரிக்கப்பட்டார்கள். எல்லோரும் அமைதியாக இருக்க, இவர்கள் பாண்டிய வீரர்கள் அரண்மனைக்குப் போய் வருகிறீர்களல்லவா என்று கேட்க, ஆமாம் என்று தலையசைத் தார்கள்.

"இப்பொழுது எங்கு போகிறீர்கள்."

"எங்களுடைய கொட்டாரத்திற்கு"

"சரி, சரி நடங்கள்" என்று சொல்ல, அந்தக் குண்டான குரங்கும் பின் தொடர்ந்தது.

அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். ஆனால், அமைதியாக நடந்தார்கள்.

அந்தக் கொட்டகைக்குள் அந்தக் குண்டான ஆள் நுழைந்ததும் யாரடா நீ என்று ஹனுமன் வேஷம் போட்டவன் அவன் கையைப் பிடித்து இழுத்தான். கையைப் பிடித்து

இழுத்தலனைச் சட்டென்று குண்டன் தரையில் தள்ளினான். அலன் தள்ளிய வேகம் அலன் யுத்தப்பயிற்சி பெற்றவன் என்பது தெரிந்தது. அவன் குரங்கு முகமூடியைக் கழற்றி வீசிவிட்டு, லாலைத் தூக்கி எறிந்துவிட்டு, கொட்டகையின் வேறுபக்கம் போய் எங்கோ பதுங்கிக் கொண்டான்.

"அலனை எங்கா பார்த்ததுபோல இருக்கிறதே"

"ஆமாம். அலன் சேரதேசத்து ஒற்றன். எங்கோ வம்பு செய்துவிட்டு நம்மோடு கலந்துவிட்டான்."

"இப்பொழுது என்ன செய்வது"

"உனக்கு எதற்கு வம்பு."

அந்தப் பெரிய கூடாரத்தின் சமையல் பக்கம் சென்று வெறும் சோறு எடுத்து அதில் நீர் பிசைந்து அந்தக் குண்டன் சாப்பிட்டான். கத்தரிக்காய் கறி இருக்கிறதென்று ஒரு சமையல் ஆள் சொல்ல அதை லாங்கி அந்த நீர்சோற்றில் அதையும் போட்டுப் பிசைந்து கொண்டான்.

எந்த நாகரிகமும் இல்லாமல் வேகமாக அடைத்துக் கொண்டு உண்பவனை அங்குள்ளவர்கள் ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

அலன் தண்ணீர் குடித்தான். கை கழுவினான். முகம் துடைத்துக் கொண்டான். தன்னுடைய வேட்டியை உதறி இடுப்பில் அணிந்துகொண்டான். பிறகு அங்கிருந்து மெவ்ல நகர்ந்து போய் அந்தப் பாண்டிய வீரர்கள் வைத்திருந்த மூட்டையைப் பறித்தான். பிரித்தான். அதிலிருந்த சாயம் தோய்த்த சிகப்புத் துணிகளை இடுப்பில் கட்டிக் கொண்டான். ஒன்றைக் கிழித்து மார்பின் குறுக்காக கச்சைபோல் கட்டிக் கொண்டான்.

அவர்கள் எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

ஆனால், அந்தக் குண்டன் சிரிக்கவில்லை. அலன் தலையில் கை லைத்து அழுத்தி மெல்ல சடாமுடியை உரித்து எடுத்தான். ஏதோ பிசின் போட்டு ஒட்டியிருந்த சடாமுடி பிய்ந்து லந்தது. சடாமுடிக்குக் கீழே மெல்லிய முடி இருந்தது. சடாமுடியும், அந்த மெல்லிய முடியும் பிரித்தான். இப்போது மெல்லிய முடியைத் தலையில் அணிந்துகொண்டான். அதைக் கொண்டையாக முடிந்து கொண்டான். மேலே ஒரு லண்ணத்துணியை எடுத்து போட்டுக் கொண்டான். காலிலுள்ள கழல்களைக் கழற்றி இடுப்பில் வைத்துக் கொண்டான். கூரையில் சொருகி

யிருந்த ஈட்டியைத் திருகி முதுகின் பின்பக்கம் வைத்துக் கொண்டான். இப்போது அது வெறும் குழலாக இருந்தது. உடைவாளைத் தூக்கி ஒரு பாண்டிய வீரன் கையில் போட்டான்.

"வைத்துக்கொள். திருவொற்றியூரிலிருந்து இதைத் திருடிக் கொண்டு வந்தேன். உங்களுக்கு எப்பொழுதாவது உதவும். மறைத்து வைத்துக்கொள்ளுங்கள்" என்று சொன்னான்.

இடுப்பிலிருந்து குறுங்கத்தியை எடுத்து சரசரவென்று முகத்திலிருந்த தாடிகளை மழித்து எடுத்தான். மீசையைக் களைந்தான். நெற்றியில் திலகமிட்டுக் கொண்டான்.

இப்பொழுது சட்டென்று ஒரு அசப்பில் ஒரு நாற்பது வயது தடிமனான பெண்மணியைப் போல இருந்தான். இடுப்பைச் சற்று அசைந்து நடந்தான்.

"வருகிறேன். மறுபடியும் வருவேன்." என்று சொல்லி விட்டு கொட்டாரத்திலிருந்து விலகி புதர் மறைவுகளுக்குப் போனான். அங்கிருந்து தோப்புகளுக்கு ஓடினான். தோப்பிலிருந்து கொட்டகை நோக்கி வேகமாக நடந்தான்.

அந்த விடியல்வேளையில் அவளை யாரும் தடுக்க வில்லை.

"இதை என்ன செய்ய"

"இந்த இடத்திலேயே எங்கேயாவது வைத்து விடு. சோழவீரர்கள் கேட்டால் இங்கு குண்டாக ஒருவன் இருந்தான். அவன் தலைமுடியைப் பிய்த்து வைத்து விட்டு பெண்ணாக உருவம் பூண்டு போய்விட்டான் என்று சொல். விசாரித்தால் பேசு. இல்லையெனில் மௌனமாக இரு."

"ஏன் அப்படி."

"நாம் சேரதேசத்து ஒற்றன் பக்கமுமில்லை. சோழர் பக்கமும் இல்லை. எனவே மௌனமாக இருப்பதுதான் நல்லது."

எல்லா இடங்களையும் சலித்த பிறகும் அந்தக் குண்டனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. விடிந்து மூன்று நாழிகைக்குப் பிறகு அந்த குண்டன் சடை. முடியைப் பிய்த்துவிட்டு பெண் வேடம். அணிந்து வெகு தூரம் போய்விட்டான் என்பது பரஞ்சோதிக்குச் சொல்லப்பட்டது.

பரஞ்சோதி தலையில் அடித்துக் கொண்டான்.

அந்தச் செய்தி விரைவாய் இளவரசர் இராஜேந்திரரையும், அருண்மொழியையும், பிரம்மராயரான கிருஷ்ணன்ராமனையும் அடைந்தது. பிறகு சக்ரவர்த்தியிடமும் இந்தச் செய்தியைச் சொன்னார்கள்.

"நல்லது. அவன் கெட்டிக்காரன். தவறு நம்மீது இருக்கிறது. ஆட்டபாட்டங்களில் மனதைப் பறிகொடுத்து நமது சோழ வீரர்கள் அவட்சியமாக இருக்கிறார்கள். நமது கொட்டாரத்தி லிருந்தே ஒரு யானையைக் கூட்டிவந்து, நமக்கே ஏவி விடுகிற ஒரு சாமர்த்தியத்தை அவன் செய்கிறான். கொட்டாரத்தில் காவல் உண்டா இல்லை. யானைப்பாகன் என்ன ஆனான்."

"யானைப்பாகனுக்கு மயக்க மருந்து கொடுத்து விட்டான். அவன் இன்னமும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறான்."

"சரி. அந்த யானைப்பாகனை இடம் மாற்று, எவனோ ஒருவன் ஏதோ கொடுத்தால் தின்று விடுவதா, யானைப்பாகன் அப்படித்தான் இருப்பதா. மற்றொரு யானையின் பாகன் என்ன செய்கிறான்."

"அவன் தேவரடியாரின் நடனம் பார்க்க வந்து விட்டான்."

"ஏன் வந்தான்"

"ஒரு யானைப்பாகன் இரண்டு யானையைப் பார்க்க போதும் என்பதால் அந்த யானைப் பாகன் நகர்ந்து வந்து விட்டான்."

"இல்லை. அந்த யானைப்பாகனையும் அந்தக் களிரோடு இடம்மாற்று. வேறொரு களிறையும், பிடியையும் இங்கு கொண்டு வரச்செய். மறுபடியும் எல்லையில் அந்த யானைகள் நடக்கட் டும். நடந்ததைப் பற்றி யாரும் அதிகம் கவலைப்படவேண்டாம். இது நல்லது என்றே பல்வேறு விதமாகச் சொல்லிக் கொண்டிருங்கள்."

"உண்மையில் இது நல்லதா. கெட்டதா."

"எதுவுமில்லை. தேவரடியார்களுக்கு சூசகமாய் பல விஷயங்களைச் சொல்லியிருக்கிறேன். அவர்கள் துரிதமாகச் செயல் படட்டும். பகல்பொழுதுகளில் வீட்டில் அடைந்து கொண்டில்லாமல் எல்லா இடங்களுக்கும் பயணப்படட்டும். குதிரையேற்றம் தெரிந்த பத்து தேவரடியார்கள் நார்த்தா மலைக்குப் பயணப்படவேண்டும். அங்குள்ள வீரர்களுக்கு நடுவே ஆட்டமோ பாட்டமோ ஆடி முடித்துவிட்டு பல நாட்கள்

தங்கியிருந்து அவர்களோடு பேசிவிட்டு இங்கு வரவேண்டும். மறுபடியும் இன்னொரு குழு போகவேண்டும். அதைச்சீராக அவர்களிடம் செய்யச் சொல்ல வேண்டும்.

புறம்படியிலுள்ள கருமார்களுடைய கிராமத்திற்கும், நெசவாளர்கள் நிரம்பிய சாலியத் தெருவிற்கும், உள்ளாவை அங்காடிகளுக்கும், யானை வீரர்களுக்கு நடுவேயும், குதிரை வீரர்களுக்கு நடுவேயும் அவர்களைப் போய் ஆடிப்பாடி மகிழ் வூட்டச் சொல்லுங்கள். இதுதான் கோவில் பணி என்று சொல்லுங்கள். கோவிலுக்கருகே வேலை செய்கின்ற ஊழியர் களுக்கு தாகத்திற்கு மோர் கொடுக்கச் சொல்லுங்கள். பிற்பகலில் வந்து அடங்கி அவர்கள் அவர்களுடைய வேலைகளைக் கவனிக்கட்டும். நாட்டியமோ, நாடகமோ பழகட்டும். காவல் தளர்ந்திருக்கிறது என்பதுதான் இன்றைய செய்தி சொல்லுகிறது. காவலைச் சரிவர செய்ய வேண்டியது சேனாதிபதி பிரம்மராயர் கிருஷ்ணன்ராமனின் பொறுப்பு. அருண்மொழியின் துணை யோடு இதைச் செய்யட்டும். பக்கத்திற்கு ஒன்றாகப் பிரித்து வைத்துக் கொண்டு தீவிரமாக ஈடுபடட்டும். யானைக்காவலை பழுவேட்டரையர் கவனித்துக் கொள்ளட்டும். குதிரைகளுக்கான காவலை ஈராயிரம் பல்லவராயர் கவனித்துக் கொள்ளட்டும். தேவரடியார் களுக்கான காவலை சாவூர் பரஞ்சோதியை ஏற்கனவே நியமித்து விட்டேன். இது தவிர சோழதேசத்தில் எங்கேயும் எளிதில், போய்வரும்படி சாலைகள் சீரமைக்கும் பணியும், மன்னருக்குத் துணையாகப் போகின்ற சிறுபடையும் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும்.

ஒரு கிராமத்திற்கு வந்த வணிகருடைய வண்டி மாடுகளை வரவேற்று அவசியமெனில் நீர்காட்டி உபசரித்து பிறகு அந்த வணிகரை அடுத்த கிராமத்திற்குப் போகும்வரை கொண்டுபோய் விட வேண்டியது அந்தக் கிராமத்து தலையாரிகளின் பொறுப்பு. அந்தக்கிராமத்து இளைஞர்களின் பொறுப்பு. இதற்காக அவர்களுக்கு மானியம் வழங்கப்படட்டும். இன்னும் விரிவாக இதுபற்றி எனக்குப் பேச ஆசை. இன்று உச்சிப் பொழுதில் நாம் அரண்மனையில் சந்தித்துப் பேசலாம். சபை குறைவர கூடியிருக்கட்டும். எல்லா முக்கியஸ்தர்களுக்கும் செய்திபோய் சொல்லப்படட்டும். இது அவசரமான முக்கியமான கூட்டம் என்று சொல்லிவிடு. கோயில் கட்டுவது பற்றி நமக்குள் மறுபடி யும் சஞ்சலம் ஏற்பட்டால் அதைத் தீர்த்து வைக்க வேண்டியது என் கடமையாக இருக்கிறது.

யானை விழுந்துவிட்டது என்று இராஜேந்திரரோ, பழுவேட்டரையரோ, வந்தியத்தேவரோ நொந்து கொள்ள வேண்டாம். என்னுடைய எண்ணம் என்ன என்பதை மறுபடியும் தெள்ளத் தெளிவாகச் சொல்ல ஆசைப்படுகிறேன்."

சக்ரவர்த்தி எழுந்தார். தலைக்கோலியின் அருகேபோய் மெல்ல அணைத்துக் கொண்டார்.

"மிக அற்புதமான உபசரிப்பு. உங்களோடு இருந்தது பெரும் புத்துணர்ச்சி. பரஞ்சோதி வந்து விட்டான். கவலையே வேண் டாம். வீடு கட்டிக் கொள்வதிலிருந்து எல்லா உதவிகளையும் சாவூர் பரஞ்சோதி பார்த்துப் பார்த்துச் செய்வான். பரஞ்சோதி எங்கே.

மன்னர் கண்களால் கூட்டத்தைத் துழாவினார். தொலை தூரம் நின்றிருந்த பரஞ்சோதி மெல்ல அருகே வந்து வணங் கினான்.

"சொன்னபடி செய்ய முடியவில்லை அல்லவா."

கட்டையான குரலில் பரஞ்சோதியைப் பார்த்து மன்னர் கேட்டார்.

பரஞ்சோதி தலைகுனிந்து கொண்டான்.

"அவனைச் சாதாரணமான ஆள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா. அவன் சேரதேசத்தில் பயிற்றுவிக் கப்பட்டவன். சோழதேசம் முழுவதும் சுற்றியவன். உத்தமசோழன் காலத்தில் ரவிதாசன் மகனாக இருந்து பல்வேறு போகங்களை அனுபவித்தவன். அந்தப் போகங்களை மறுபடியும் பெறுவதற்கே, தன் பிள்ளைகளுக்கு வாங்கித் தருவதற்கே என் வாழ்க்கை என்று சத்தியம் செய்திருக்கிறான். அது வளை எலி. எளிதில் பிடிக்க முடியாது. பசித்தால் மறுபடியும் இந்தப் பக்கம் வரும். அது வரும் என்று காத்திரு. என் கையில் தான் அது அகப்படும். அது மதுரைநோக்கிப் போயிருக்குமென்று நான் தெளிவாகச் சொல்கிறேன். அந்தக் குண்டனைக் கண்டுபிடிப்பது இனி என் பொறுப்பு. நீ இந்தப் பெண்களை கண்ணும் கருத்துமாகக் கவனித்து வா. அதற்கு வேண்டிய எல்லா உதவிகளும் நம் கருவூலத்திலிருந்து வாங்கிக் கொள்ளலாம். பழுவேட்டரையரே நான் இப்பொழுது பேசிய அத்தனை விஷயங்களும் உடனடியாக நிறைவேறுகின்றனவா என்று பாருங்கள். உச்சிப்பொழுதிற்கு அரண்மனைக்கு வந்து சேருங்கள். அரச சபையில் பேசுவோம்."

சக்ரவர்த்தி விருட்டென்று எழுந்தார். தலைக்கோலிகளின் தலையில் கை வைத்து ஆசிர்வதித்தார். சில பெண்களைக் கன்னம் வருடினார். எழுந்து வெளியே வந்தார். குதிரை ஏறினார். மெய்க்காவல் படைசூழ, சிறு முரசு முழங்க, எக்காளம் ஊதப்பட அவர் ஊர்வலமாய் அரண்மனை நோக்கிப் போனார். தெற்கு அவங்கம் தாண்டி மேல்மாடவீதி தாண்டி அரண் மனைக்காகத் திரும்புகையில் சட்டென்று அவருக்கு நலகண்டம் கொடுத்த வீரனின் நடுகல் ஞாபகம் வந்தது. தயங்கி நின்றார்.

அந்த இடத்திலிருந்த கூட்டத்தைப் பிளந்து கொண்டு மூன்று இளைஞர்கள் வந்தார்கள். அவர்களுக்குப்பின்னே ஒரு அதிகாரி யும் வந்தார். அந்த இளைஞனின் கழுத்திலுள்ள அரளிப்பூ வாடியிருந்தது. அவன் கண்கள் கலக்கமாகவும், தூக்கமாகவும் இருந்தன. மற்ற இளைஞர்கள் பயந்து நடுங்கி கைகூப்பியபடி அரசரைப் பார்த்தார்கள். குதிரையில் இருந்தபடி அந்தச் சிறுவனை அருகே அழைத்தார்.

"இது தவறு. இதைச் செய்யவேண்டாம். சோழதேசத்திற்கு உன்னைப் போன்றவர்களின் உழைப்பு தேவைப்படுகிறது. நீயும் உனது இரண்டு நண்பர்களும் சேனாதிபதியின் மகனான அருண் மொழியைச் சந்தித்து காந்தளூர்ச்சாலைக்கு எப்படிப் போவது என்று.கேட்டுக்கொண்டு அவரின் வழிகாட்டலோடு அரசாங்கக் கருவூலத்திலிருந்து ஆளுக்கு பத்துப் பொற்காசுகள் பெற்று குதிரையை வாங்கி போர்க்கருவிகள் பெற்று இங்கிருந்து காந்த ளூர்ச்சாலை பயணப்படுங்கள். அங்கு சேர்ந்து மூன்று வருடம் படித்தபிறகு மறுபடியும் இங்கு லந்து இராஜேந்திரசோழன் மெய்க்காவல் படையில் சேர்ந்து கொள்ளுங்கள். காந்தளூர்ச் சாலை போர்க்கடிகையில் சேர இதுதான் நல்ல வயது. வீணாக உன் உயிரை இழந்து சோழதேசத்திற்கு இழுக்கு கற்பிக்காதே. போ. காந்தளூர்ச்சாலை கடிகைக்கு எத்தனை விரைவில் போகமுடியுமோ அத்தனை விரைவில் போ."

மெல்ல குனிந்து அந்த இளைஞனின் தலையில் கை வைத்தார்.

பதினான்கு வயது நிரம்பிய அவன் உதடு நடுங்க கை கூப்பினான். அவர் கால்களை முத்தமிட்டான். முழங்கால்களைத் தடவி தலையில் வைத்துக் கொண்டான். மற்ற இளைஞர்களும் அவ்விதமே செய்தார்கள்.

சக்ரவர்த்தி நிதானமாக குதிரை ஓட்டிக்கொண்டு அரண்மனை நோக்கிப் போனார்.

அந்த இளைஞன் எல்லோரும்போய் தனித்துவிடப் பட்டபோது. இந்த இளைஞர்களோடு கை கோர்த்துக் கொண் டான். "இப்படிப்பட்ட அரசருக்காக நான் உயிர் கொடுத்திருக்க லாமடா. ஏன் தடுத்து விட்டார்கள்." என்று தெரியவில்லை என்று ஆவேசத்தோடு சொன்ன அந்த மூவரில் ஒரு சிறுவனுக்கு புத்தி நிதானத்திலிருந்தது.

"இப்போது என்ன கெட்டுவிட்டது. இந்த உயிர் சக்ரவர்த் திக்குத் தானே. வெறுமே உயிர் கொடுப்பதை விட இந்த உயிரை வளர்த்து. உடம்பை வளர்த்து சகல திறமைகளையும் வந்து அவருக்கருகே இருந்து காலம் முழுவதும் அவருக்குப் பணி செய்து உயிரைக் கொடுப்பதும் மேலல்லவா. சக்ரவர்த்தி அவர்கள் உயிரோடு இருக்கும்வரை நாமும் இருக்க வேண்டும்" உரக்கச் சொல்ல, மற்ற இருவரும் அவனைத் தழுவிக் கொண்டார்கள்.

ஒரு அரசனுக்கு, ஒரு தலைவனுக்கு இப்படிப்பட்ட தொண் டர்கள் இருக்கும்வரை அவனை எந்த எதிரியும் எதுவும் செய்ய இயலாது.

அந்த இளைஞர்கள் சேரதேசத்தின் காந்தளூர்ச் சாலை கடிகையில் பயிற்சி பெறப் போகிறார்கள் என்ற செய்தி மெல்ல மெல்ல தஞ்சை முழுவதும் பரவியது.

# 126

**அது** மிக முக்கியமான ஒரு அரசவைக்கூட்டம் என்று முத்தான பொன்நங்கைக்குப் புரிந்துவிட்டது. பெண்யானை ஒன்று இறந்து போயிற்று என்று தெரிந்து பஞ்சவன்மாதேவி இடிந்துபோனாள். கண்மூடி வெகுநேரம் உட்கார்ந்திருந்தாள். யாரிடமாவதுபோய் இது என்ன, ஏன் இப்படி நடக்கிறது என்று கேட்கலாமா என்று ஆசைப்பட்டாள். சட்டென்று உடுத்திக் கொண்டு பிரம்மராயரிடம் போகத் தயாரானாள். ஆனால், உடுத்தி முடித்ததும் வேண்டாம், பிரம்மராயர் சொல்லுகிற சமாதானம் எனக்குப் போதாது. கருவூர்த்தேவர் மட்டுமே இதற்குச் சரியான விளக்கம் சொல்ல முடியும். ஆனால், கருவூர்த் தேவர் விளக்கம் என்னிடம் சொல்ல மாட்டார். இது எப்படி யாவது என்னிடம் வரும். யாராவது சொல்வார்கள். அதேசமயம் அரசர் சொல்வதுபோல இம்மாதிரியான விஷயங்களுக்கெல்

லாம் மனதைப் போட்டு குழப்பிக்கொண்டால் விடிமோட்சமே இல்லை.

பெரும் விஷயங்களுக்கு இடைஞ்சல் லருலது நல்லது. இன்னும் வீர்யம் அதிகமாகும். செய்கின்ற உறுதி பலப்படும் என்பது உண்மை. கவலை தரும் விஷயம் யானை இறந்தது அல்ல. ஒரு யானையைக் கூட்டத்திற்கு நடுவே ஏவி விடமுடியு மென்று ஒருவன் திட்டமிட்ட செய்கைதான்.

அதற்குள் அருண்மொழி நாலாபக்கமும் பறந்து விசாரித்து, அந்தக் குண்டன் சேரதேசத்து அந்தணன் ரவிதாஸனுடைய மகன். ஒவ்வொரு இடத்தில், ஒவ்வொரு பெயர் சொல்லி ஏமாற்றியவன். அவனே திருவக்கரைக்குப் போய் செம்பியன் மாதேவியைச் சந்தித்திருக்கவும் கூடும். அங்கிருந்துதான் சோழதேசம் நோக்கி திரும்பியிருக்க முடியும் என்று விசாரித்து சொல்லியிருக்கிறான். அவனுடைய சடைமுடி, திருடியவாள் எல்லாவற்றையும் எடுத்து சக்ரவர்த்தியிடம் காட்டினான்.

"தஞ்சையிலிருந்து உறையூர் போகும் பாதையில் அவன் நடந்து போனான் என்று சொல்கிறார்கள்."

"நடந்துபோனால் பிடித்துவிடலாமே" என்று பழுவேட்ட ரையர் சொல்ல, அருண்மொழி மெல்ல அவரைப்பார்த்துச் சிரித்தான்.



"சிறிதுதூரம்தான் நடந்து போயிருப்பான். பிறகு வெகு நிச்சயமாக ஒரு குதிரை சம்பாதித்திருப்பான்."

"அதை விசாரிக்க முடியாதா."

"விசாரித்துவிட்டேன். திருவல்லத்தில் ஒரு குதிரை திருடு போயிருக்கிறது. நல்ல ஜாதி குதிரை. வீட்டின் கொல்லைப்புறம் புகுந்து மண்சுவரை உடைத்து ஒரு குதிரைபோகும் அளவுக்கு வழி பண்ணிக்கொண்டு குதிரையை நடத்தி அழைத்துக் கொண்டு போய் வேறு ஒரு வீட்டின் வாசல்வழியாக வெளியேறி வேறு இடத்தில் குதிரையின் சேணத்தைத் திருடி அந்தச் சேணத்தை இந்தக் குதிரைக்குப்பூட்டி எடுத்துப் போயிருக்கிறான்."

"அடேயப்பா.. என்ன சாமர்த்தியம்."

"சேரதேசத்து சாமர்த்தியம். அந்தணத் தந்திரம்."

பழுவேட்டரையரும், கிருஷ்ணன்ராமனான பிரம்மராயரும், சாவூர் பரஞ்சோதியும், இளவரசன் இராஜேந்திரரும், இராஜேந்திரரின் மனைவி வீரமாதேவியின் உடன் பிறந்தவனான மதுராந்தகன் பரகேசரி வேளானும், சக்ரவர்த்தியின் உத்தரவிற்கிணங்க, சோழதேசத்தின் விளைநிலங்களை அறிந்த இன்னொரு சேனாதிபதி குறவன் ராசராசமாராயனும், அறிவிலும், அனுபவத்திலும் மூத்தவரான கம்பன் மணியனான விக்ரமசிங்க மூவேந்த வேளாளனும், பெருந்தச்சரான குஞ்சமல்லனும், அதற்கு அடுத்தவனான நித்த விநோதப் பெருந்தச்சனும், அதற்கு அடுத்தவனான இலத்திசடையனான கண்டராதித்தப் பெருந்தச்சனும் அங்கே குழுமியிருந்தார்கள்.

மேல்மாடத்தின் நடு கூடத்தில் பெரிய பலகையும், அதற்கு முன்பு இலை போடுவதற்கான, சற்று உயரமான பலகையும், இடப்பட்டு அதன்மீது தலைவாழையிலை விரிக்கப்பட்டிருந்தது. பஞ்சவன்மாதேவியும், பட்ட மகிஷியும் இன்னும் ஒரு முறை உள்ளும், வெளியும் போய் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்தார்கள். நீர் பரிமாறு என்று பட்டமகிஷி உத்தரவிட்டவுடன் சக்கரவர்த்தி இராஜராஜரின் இரண்டு மனைவியர் வேகமாக உணவுபரிமாறினார்கள். குவளைகளில் நீர் சேமித்து ஒவ்வொரு பெரிய பலகையின் மீதும் வைத்தார்கள். ஒருமுறை அகில் புகையைக் காட்டி விட்டுப்போ என்று ஒரு அதிகாரிச்சியிடம் சொல்ல, இரும்புச்சட்டியில் தணல் கொண்டு வந்து அகில் புகையை ஒருமுறை காட்டி வேகமாகப் பின்பக்கம் அதிகாரிச்சி எடுத்துப்போனாள். மெல்லிய வாசனை கூடம் முழுவதும்

பரவியது. கூடத்திலிருந்து புகை வெளியே வந்து தூண்கள் நிரம்பிய கூடத்தை ஒட்டிய மாடத்தில் நுழைந்தது. அங்குதான் உட்கார்ந்தும், நின்றபடியும் சக்ரவர்த்தியும், மற்றவர்களும் பேசிக் கொண்டிருந்தார்கள். மெய்க்காவல்படை விலகி நின்றிருந்தது.

சமையல் அறையிலும், அரசிகள் குடியிருக்கும் அந்தப்புர பகுதிகளிலும் காவல் இருந்தது. சாப்பிடுகின்ற அந்தக் கூடத்தில் இரண்டு காலலர்கள் சுவரோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந் தார்கள். அரசருக்குப் பின்புறம் ஒரு மெய்க்காவல் இருந்தான். இன்னும் மூன்று பேர் சற்று விலகியிருந்து வேடிக்கை பார்த்தார்கள். அதேவிதமாக இராஜேந்திரனுடைய மெய்க்காவல் படையும் இராஜேந்திரனுக்குப் பின்னால் நின்று கொண்டிருந் தார்கள். அந்த மெய்க்காவல்படை அரசருடைய மெய்க்காவல் படைக்கு எதிராக இருந்தது. அரசருடைய மெய்க்காலல் கறுப்பு நிறத்தில் இருக்க, இராஜேந்திர சோழனின் மெய்க்காவல் கத்திரிப் பூ நிறத்தில் சட்டை அணிந்திருந்தது. ஆனால், எல்லா மெய்க் காவல் வீரர்களும் கறுப்புத் தலைப்பாகைதான் அணிவார்கள்.

"குடிப்பதற்கு ரசம் கொண்டு போய் கொடு." என்று கூற இஞ்சி சற்று அதிகமாக விட்ட ரசத்தை எடுத்துக் கொண்டு ஒரு பணிப்பெண் அரசர் இருக்கும் இடத்திற்கு வந்தாள்.

காவி குவளையில் ரசம் ஊற்றி அரசரிடம் கொடுத்தாள். மற்றவர்கள் குவளைகளை எடுத்துக்கொள்ள மெல்ல ரசம் வார்த்தாள்.

இராஜேந்திரரின் மெய்க்காவல் வீரன் குவளையை நீட்ட அதில் ரசம் ஊற்றினாள். அதை முகர்ந்து பார்த்து விட்டு அந்த மெய்க்காலல்வீரன் இராஜேந்திரருக்குக் கொடுத்தான்.

"மறுபடியும் துளிர்க்கிறார்களா, மீண்டும் ஒருமுறை காந்தளூர்ச்சாலை படையெடுத்துப் போர் வேண்டுமா"

வயதான விக்ரமசிங்க மூவேந்த வேளாளன் உரக்கக் கத்தினார்.

"இல்லை பெரியவரே"

சக்கரவர்த்தி மிக ஆதுரத்துடன் அவர் தோளில் கை வைத்தார்.

"அதெவ்வாம் தேவையில்லை. அடிபட்டவர்கள் ஏதேனும் மறுபடியும் செய்ய வேண்டுமே என்பதற்காக ஆடுகிறார்கள்.

இது வெறும் வால். சிறிது துள்ளிப் பார்க்கிறது தானாக அடங்கும்.

"அவன் அடங்குவது. அடங்காதது இருக்ககட்டும். நமது காவல் பவவீனமாக இருக்கிறது என்பதுதானே முக்கியம்."

பழுவேட்டரையர் சொல்ல, ஆமாம் என்று சக்கரவர்த்தி தலையசைத்தார்.

"குடந்தையின் காவல் பிரம்மராயர் தானே."

பழுவேட்டரையர் தொடர்ந்து பேசினார்.

"ஹா.. எங்கே பத்து நாட்களாக என்னைப் பார்த்து சீறக் காணோமே என்று பார்த்தேன். வந்து விட்டதல்லவா கேள்வி."

பிரம்மராயர் கோபமாக பழுவேட்டரையரை நோக்கித் திரும்பினார்.

இராஜேந்திரசோழன் அவர் கோபம் பார்த்துச் சிரித்தார்.

"கேள்விதானே கேட்கிறார். அதற்கே கோபமா. குற்றம் சுமத்தவில்லையே. குற்றம் சுமத்தினால் என்ன செய்வீர்கள்" என்று தொடர்ந்து பேச பிரம்மராயர் இராஜேந்திர சோழனை இப்போது முறைத்தார்.

இராஜேந்திர சோழன் அந்த முறைப்பை இப்போது அலட்சியம் செய்தார். பிரம்மராயருக்கருகே போய் அவர் தொப்பையில் முஷ்டியை மடக்கி மெல்லக் குத்தினார்.

"கோபம் மட்டும் வந்தால் போதாது. செயலில் காட்ட வேண்டும். வடக்கு தெற்குப் புறம்படிகளெல்லாம் பலவீனமாக இருக்கின்றன."

"அதற்குக் காரணம் இளவரசே நீங்கள், நானல்ல."

"மறுபடியும் சண்டை துவங்காதீர்கள். என்ன இது. விவாதம் என்று ஆரம்பித்து ஒருவரையொருவர் குற்றம் சொல்வதுதான் இங்கு நடக்கிறது."

சக்ரவர்த்தி அலுப்பாகப் பேசினார்.

"இவர் குற்றம் சுமத்தும்போது மௌனமாகத்தானே இருந்தீர்கள் சக்ரவர்த்தி"

பிரம்மராயர் சக்ரவர்த்தியை இப்போது குற்றம் சொல்வது போல் பார்த்தார்.

மூவேந்த வேளாளருக்கு இது பிடிக்கவில்லை.

"பிரம்மராயர் அடிக்கடி அத்துமீறுகிறார். நீங்கள் சக்ர வர்த்தியை அதிகாரம் செய்யும் அளவுக்கு உங்களுக்கு எந்தப் பதவியும் கொடுத்து விடவில்லை."

"என்னைக் குறை சொல்லும்போது அதற்குப் பதில் சொல்லுகிறேன்."

பிரம்மராயர் உரக்கப் பேசினார்.

பட்டமகிஷியும், பஞ்சவன்மாதேவியும் உள்ளுக்குள் இருந்தபடி இந்தக் கூச்சலைப் பார்த்து விட்டு ஒருவரையொருவர் கவனித்துக் கொண்டார்கள். சக்ரவர்த்தி மெல்ல நகர்ந்து அந்த இடத்தைத் தாண்டிப் போனார். அங்கு காற்று சிலுசிலுவென வீசிக் கொண்டிருந்தது.

சக்ரவர்த்தி துணி இழுத்துப் போர்த்திக் கொண்டார்.

இதையும் அவர்கள் கவனித்தார்கள்.

"இப்பொழுதெல்லாம் குளிர்தாங்க முடிய வில்லை."

முணுமுணுப்பாய் பஞ்சவன்மாதேவி பட்ட மகிஷியைப் பார்த்துச் சொல்ல பட்டமகிஷி கவலையுடன் ஆமாம் என்று தலையசைத்தாள்.

"இப்பொழுதே பலவீனமாக இருக்கிறார். இன்னும் இந்தக் கோவில் கட்டி முடிப்பதற்குள் என்னவெல்லாம் ஆகப் போகிறதோ."

பட்டமகிஷியும் கவலை தோய்ந்த முகத்துடன் பேசினாள்.

"என்ன காரணம் என்பதை தயவுசெய்து சபைக்கு முன்பு விளக்கிப் பேசிவிடுங்கள். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசவேண்டாம்."

"அப்படி பேசுகின்ற வழக்கம் என்னிடம் இல்லை. எந்த முன் அறிவிப்பும் இல்லாமல் இங்குக் கொண்டு வந்து பதினாறா யிரம் வீரர்களை இறக்கிவிட்டு உங்களுக்குப் பாதுகாப்பு வேறு தரவேண்டுமென்று சொன்னால் நான் எங்கே போவேன். பதினாறாயிரம் வீரர்கள் என்னிடம் இருக்கிறார்களா இல்லையே நீங்கள் மேல் பாடியிலும், திருவொற்றியூரிலும் காஞ்சிபுரத்திலும், வடக்கு எல்லையைப் பலப்படுத்துவதற்காக ஏகப்பட்ட சோழவீரர்களை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

அங்கு குடித்துவிட்டு அவர்கள் கும்மாளமடித்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கே இந்த பதினாறாயிரம் வீரர்கள் காவல் காக்க, எனக்கு வீரர்கள் இருக்கிறார்களா. பதினாறாயிரம் வீரர்களைக் கொண்டு வரும்போது சோழ தேசத்தினுடைய தலைநகரான தஞ்சை தாங்குமா என்று ஒரு இளவரசர் சிந்தித்திருக்க வேண்டும்."

"ஹா.. என்னுடைய தவறு எனக்குப் புரிந்துவிட்டது. பதினாறாயிரம் வீரர்கள் நாளை காலையே கிளம்பி தஞ்சை எல்லையைத் தாண்டி குடந்தை வழியாக மறுபடியும் திருவொற்றியூர் வந்து விடுவார்கள். சரிதானே."

"இது வெறும் முரட்டுப்பேச்சு"

"என்ன உங்களுக்கு ஆட்களும் வேண்டும். அவர்களும் அசையவும் கூடாது என்றால் என்ன அர்த்தம். இங்கு ஆட்கள் வருகிறார்கள் என்று தெரிந்ததுமே இந்த இடத்தைத் தயார் நிலையில் வைக்க மாட்டீர்களா."

"எப்பொழுது எனக்குச் சொன்னார்கள். யார் சொன்னார்கள். யாருடைய உத்தரவின்பேரில் நீங்கள் ஆட்களை இங்கே அனுப்பினீர்கள். சக்ரவர்த்தி கேட்டாரா. சக்ரவர்த்தி கேட்டார் என்றால் என்னை, கலந்தாலோசிக்காமல் கேட்டிருக்க மாட்டார். நீங்களாக உதவி செய்வது போல இவ்வளவு பெரிய விஷயத்தைத் செய்திருக்கிறீர்கள்."

"ஆக, நான் செய்தது உபத்திரவம் என்கிறீர்கள்"

இராஜேந்திரசோழர் உண்மையிலேயே கோபப்பட்டார்.

"அதைச் சக்ரவர்த்தியே முடிவு செய்து கொள்ளட்டும். எனக்குச் சொல்லிக்கொள்ள விருப்பமில்லை. பதினாறாயிரம் பேர்கள் நாம் வென்று கொண்டு வந்த வீரர்கள், அடிமைகள். எப்படிப் பதறினேன் என்பது எனக்குத்தான் தெரியும். இதில் ஆயிரம் பேர் எங்கேனும் ஆயுதம் எடுத்து தஞ்சை நகரத்திற்குள் புகுந்து பெண்களையும், குழந்தைகளையும் தாக்கத் துவங்கியிருந்தால் என்ன கதி.

பிரம்மராயரே இந்த உலகத்தில் நீங்கள் மட்டுமே புத்திசாலி என்பது போல் பேசுகிறீர்கள். நான் அனுப்பிய பதினாறாயிரம் வீரர்கள் பக்குவப் பட்டவர்கள். பல்வேறு விதமாக சோதனை செய்து விட்டு சிவனுக்கு ஒரு கோவில் எழுப்புகிறார்கள். வேலை செய்ய விருப்பமுள்ளவர்கள் வாருங்கள் என்று கங்கதேசத்து

ஆட்களையும் ராஷ்டிரகூடர்களையும் சில சாளுக்கிய வீரர்களையும் அனுப்பியிருக்கிறேன். இதில் பாண்டிய வீரர்கள் மிகக் குறைவு. சேர வீரர்கள் ஒருவரும் இல்லை. உங்களுக்கு விருப்பமில்லையெனில் தஞ்சை போக வேண்டாம் என்று சொல்லி மற்றவர்களை விடுதலை செய்திருக்கிறேன். இவர்கள் அத்தனை பேரும் விரும்பி தஞ்சைக்குள் வந்தவர்கள். சிவனுக்குக் கோவில் கட்டப் போகிறோம் என்றதும் வேலைக்காக வந்தவர்கள்.

பாண்டியர்களை நான் மிகக் கவனமாகத் தேர்ந்தெடுத்தேன். சில சாளுக்கிய வீரர்களை நீ போகக் கூடாது என்று சொல்லி அவனை வேறுபக்கம் திசை திருப்பினேன். எந்த முன்னறிவிப்பு நான் செய்திருந்தாலும் தஞ்சை இப்படித்தான் வெறுமே கால் விரித்துக் கிடக்கும். நாங்கள் வருவதற்கு நான்கு நாட்கள் முன்பே சொல்லப்பட்டது. ஒரு தட்டோலைக் கூரை கூட போடவில்லை. ஒரு சமையல் பாத்திரம் கூட ஏற்பாடு செய்யப்படவில்லை. வருவோர்களை வரவேற்பதற்கு எந்தவிதமான முயற்சியும் இல்லை. தாக சாந்திக்கு நீர்கூட கொடுக்க வில்லை. அவர்கள் ஆடுமாடுகள் போல் புது ஆற்றில் குப்புறப்படுத்துக்கொண்டு நீர் குடித்தார்கள். நல்ல வேளை மழை வந்தது. இந்தக் குற்றமெல்லாம் நான் சொல்லவில்லை. சொல்லாததால் என் மீது குற்றம் சுமத்துகிறீர்கள்."

"நான்கு நாட்களுக்கு முன்பு தகவல் தெரிவித்து பதினாறாயிரம் வீரர்களுக்கு சோறு சமைப்பதற்கு உண்டான பாத்திரங்களை எங்கிருந்து கொண்டுவருவது என்று தயவுசெய்து எனக்குச் சொல். இப்பொழுது தயாராகிக் கொண்டிருக்கின்ற இந்த உணவுப் பாத்திரங்களெல்லாம் தஞ்சையில் அரண்மனையில் கொண்டு வரப்பட்டவை. அரண்மனையில் எப்போது விருந்து நடந்தாலும் அதற்குண்டான பாத்திரங்களை அடிமை வீரர்கள் வைத்து அனுப்பியிருக்கிறோம்."

"நாளை காலை மிகப்பெரிய விருந்து ஒன்றை ஏற்பாடு செய். கொடும்பாளூரிலிருந்து சிற்றரசர் வருகிறார் என்று சொன்னால், கீழைச்சாளுக்கியத்திலிருந்து விருந்தினர்கள் வருகிறார்கள் என்று சொன்னால், இந்த அரண்மனை திண்டாடிப் போகும். அந்தப் பாத்திரங்கள் தான் மறுபடியும் அரண்மனைக்கு வரும். நான்கு நாட்கள் அவகாசம் கூரை செய்யவும், சமையல் பாத்திரங்களைத் தயார் செய்யவும் போதுமென்று நினைக்கிறீர்களா. ஒரு மாதமாக நீங்கள் தேர்ந்தெடுத்தீர்களே. அப்பொழுதே நான் வீரர்களை அனுப்பப்போகிறேன் என்று

எனக்கு ஒரு ஓலை அனுப்பக்கூடாதா. இன்றுவரை நீங்கள் வீரர்களை அனுப்பும் செய்தி எனக்குச் சொல்லப்படவில்லை. நான் தயாரானேன். எனக்கு உங்களிடமிருந்து ஓலை இல்லை. உங்களுக்கு ஓலை அனுப்ப மனமில்லை. பிரம்மராயருக்கு என்ன சொல்வது என்றுதான் என்னை அலட்சியப் படுத்துகிறீர்கள். உங்கள் தந்தைக்குதான் நான் சேனாதிபதியாக இருப்பதால் உங்களுக்கு நான் பிடிக்காதவனாகப் போய் விட்டேன். உங்களை நான் அதிகாரம் செய்து விடுவேனோ என்று அஞ்சுகிறீர்கள். நான் உங்கள் தந்தையைச் சந்திக்க அனுமதி மறுத்துவிடுவேனோ என்று பயப்படுகிறீர்கள். அவசியமெனில் இந்த பிரம்மராயன் எந்த விஷயமும் செய்வான். ஆனால், அநியாயமாகக் குற்றம் சுமத்தாதீர்கள்."

சக்ரவர்த்தி சட்டென்று எழுந்தார். எழுந்துபோய் பிரம்ம ராயரை அணைத்துக் கொண்டார். அவர் தோளில் கை போட்டு கொண்டு போய் மெல்ல நகர்த்தி இராஜேந்திரரிடம் நிற்க வைத்தார்.

"என்ன இராஜேந்திரா என்ன விளையாட்டு இது. அனுபவத்திலும், அறிவிலும் மிக உயர்ந்த என் நண்பரை ஏன் கோபித்துக் கொள்கிறாய் என்று புரியவில்லை. நான்கு நாட்கள் அவகாசத்தில் செய்திருக்கின்ற விஷயங்கள் மகத்தானவை. நீ ஏன் அவருக்கு ஓலை அனுப்பவில்லை என்று எனக்குத் தெரிய வில்லை. எனக்கு அனுப்பப்பட்டால் போதும் என்று நீ நினைத் திருக்கலாம். ஆனால், எனக்கு அனுப்பிய ஓலையிலும் திட்ட வட்டமாக எப்பொழுது வந்து சேருவார்கள் என்று தெரிய வில்லை. வந்தவர்களை ஓரளவு வரவேற்று அவர் உணவுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். இதமாகப் பேசி அமைதியாயிருக் கிறார். அவரை இத்தனை கடுமையாக நீ பேசுவது முறையற்றது என்பது என் எண்ணம்.

நமது பிரச்சினை அந்தப் பதினாறாயிரம் வீரர்களல்ல. அந்தப் பதினாறாயிரம் வீரர்கள் கூடவே சில ஒற்றர்கள் ஊடுரு வியிருப்பார்கள். இதை பிரம்மராயரோ, மூவேந்த வேளாளரோ, பழுவேட்டரையரோ, நீயோ தடுத்திருக்கவே முடியாது. என்ன தான் தேர்ந்தெடுத்து அனுப்பினாலும் தஞ்சாவூருக்குப் போய் இரண்டு சோழ வீரர்களையாவது குத்திக் கொன்றுவிட்டு செத்துப் போகலாம் என்று நான்கு பேராவது நினைத்திருக்கலாம். அங்கு சக்ரவர்த்தியைச் சந்தித்து விஷ அம்பை எய்து கொன்று விட்டபிறகு ஊருக்குப் போகலாம் என்று எவரேனும்

நினைத்திருக்கலாம். நினைப்பவர் இன்னும் இருக்கலாம். நாம் என்ன செய்ய இந்த ஆபத்து எப்பொழுதும் தஞ்சைக்கு உண்டு. கோயில் கட்ட வேண்டும் என்கிற போது இந்த வீரர்கள் அவசியம் தேவைப்படுகிறார்கள். அந்த வீரர்களை வைத்துக் கொண்டுதான் கற்பாறைகளைத் தூக்க முடியும். அந்த வீரர்கள் இல்லாமல் நமது வீரர்களை வைத்துக் கொண்டுதான் கற்பாறை களைத் தூக்க முடியும். அந்த வீரர்கள் இல்லாமல் நமது வீரர்களை வைத்துத் தூக்குவது என்பது இயலாத காரியம். படை யெடுத்துப் போனதே இப்படிப்பட்ட ஆட்கள் வேண்டுமென்று தான். இதற்காகவே கங்க தேசமும், சாளுக்கிய தேசமும் பாண்டிய தேசமும் நம்மால் ஜெயிக்கப்பட்டன. ஜெயித்த இந்த இடத்திலிருந்து வீரர்களைக் கொண்டு வந்தால் இரண்டு லாபம் இருக்கிறது என்று அங்குள்ள வீரர்களை இங்கு கொண்டு வந்ததால் அந்த இடம் பலவீனப்பட்டது. மறுபடியும் பலமடைய பல வருடங்கள் ஆகும். கங்க தேசத்திலிருந்தோ, மேலைச் சாளுக் கியத்திலிருந்தோ ராஷ்டிரகூடத்திலிருந்தோ நமக்கு உடனடியாக எதிர்ப்பு வராது.

பாண்டிய தேசத்திலுள்ள பல வீரர்கள் தப்பியோடி ஈழத்தில் புகுந்து கொண்டிருக்கிறார்கள். அங்கு அனாதையாகத் திரிந்து கொண்டிருக்கிறார்கள். சிலர் சேரதேசத்து மலைகளில் புகுந்து கொண்டிருக்கிறார்கள். நம்மால் முழுவதும் அடக்க முடியாத விஷயம் சேரதேசம். அங்கிருந்து கிளம்பிய ஆட்கள் மற்றவர் களைத் தந்திரமாகத் தூண்டிவிடுவதும் ஆயுதப்பயிற்சி கொடுப்ப தும் செய்தால் நமக்கு ஆபத்தாக முடியும். எதையும் உடனடியாக செய்ய இயலாது. குறைந்த பட்சம் இரண்டு மூன்று வருடங் களாவது ஆகும். அதையும் தவிர இங்கு இப்படிப்பட்ட கோயில்கள் கட்ட, பாறைகள் நகர்த்த, எருதுகளைப் பராமரிக்க, கொண்டு வந்த யானைகளையும், குதிரைகளையும் வழி நடத்த, நமக்கு ஆட்கள் தேவை. சாரம் கட்ட சவுக்குகளையும், மரங்களையும் அறுப்பதற்கு எடுத்து வருவதற்கும் ஆட்கள் தேவை. இங்கு ஆட்கள் அதிகமாவார்கள். நம்முடைய எதிரி தேசத்தில் ஆட்கள் குறைவார்கள். இதுதான் என்னுடைய படையெடுப்பின் முதல் லட்சியம். இந்த ஒரு வழிமுறையில் நாம் எதிரிகளை நமது கோட்டைக்குள்ளேயே விடுகிறோம் என்ற அச்சத்தை நான் உணராது இல்லை. நம்முடைய காவல் கெட்டிப்படுமாயின் இந்த ஒரு விஷயமும் சரியாகும்.

அவர்களுடைய கோபத்தைக் குறைக்க ஆட்டபாட்டம் நடப்பதோடு நமது வீரர்களையும் எச்சரிக்கையாக இருக்க

வைக்க வேண்டும். இந்த எச்சரிக்கையில் சற்று கவனப்பிசகு வந்து விட்டது. எச்சரிக்கையாக இருப்பது எப்படி, நமது வீரர் களுக்குப் புரியவில்லை. இதோ இந்த யானையை ஏவி விட்டதன் மூலம் ஒரு அளவு படைவீரனின் கடைசி ஆளுக்கும் இந்த எச்சரிக்கையின் அவசியம் புரிந்திருக்கும்.

இரவுக்காவலும் பகல் காவலும் நகர்ப்புறத்து ரோந்தும் இடையறாது செய்யப்படவேண்டும். எவர் மீது சந்தேகம் வந்தாலும் தடுத்து நிறுத்தி விசாரிக்கப்பட வேண்டும் என்பது நமது படை வீரர்களுக்குச் சொல்லப்படவேண்டும். அதற்குண் டான பயிற்சியைத் தரவேண்டும். ஏன் பிரம்மராயர் முன்னரே செய்யவில்லையென்று யாரும் கேட்டுவிட வேணாம். இப்படி செய்ய வேண்டுமென்று இராஜேந்திரா உனக்குத் தெரியுமோ. நீ இங்கு இருந்திருந்தால் செய்திருப்பாயா. கொட்டடியில் வீரர்களை அடைத்து வைப்பதுபோல் அல்ல இது. கொட்டடியில் வீரர்களை வைத்துவிட்டு திசைக்கு எட்டு வீரர்களை வைத்தால் போது மானது. இங்கே அப்படிச் செய்ய முடியாது. அவர்கள் மனம் ஒருமைப்பட்டு இங்கே வேலை செய்தால்தான் இந்தக்கோயில் கட்டமுடியும்.

ஏழு பனை உயரம். நாலு பனை உயரத்திற்கு கல் மேலே போய் அந்தக்கல் தவறி விழுந்தால் என்ன ஆகும். தவறி விழட்டும் என்று ஒருவன் கல்தூக்கிப் போனால் நம் கதி என்ன. அவன் மேலிருக்க, நாம் கீழிருக்க எந்த நிமிடமும் அவன் கொலைவெறி மிகுந்து கல்லைப்புரட்டிவிடலாம். ஒரு முழம் சதுரமுள்ள ஒரு கல்நாலு பனை உயரத்திலிருந்து கீழே விழுந் தால் அது யானையாக இருந்தாலும் விழுந்த க்ஷணத்தில் மரண மடையும். அப்போது மனிதனின் கதி என்ன. எனவே, சவுக்கால் அடித்தோ, கெட்ட வார்த்தைகளைச் சொல்லியோ அவர்களை வேலை வாங்க முடியாது. அன்பால் அணைத்து இது உன் வேலை. உன்னுடைய பணி. சிவனுடைய காரியம் என்று சொல்லித்தான் கல் தூக்க வைக்க முடியும். அவன் கல் தூக்குகிற பொழுது நானும் தோள் கொடுத்தால்தான் அவன் சந்தோஷ மடைவான். பிரம்மராயரும், மூவேந்த வேளாளரும், அருண் மொழியும் இந்த வாக்கியத்திற்கு சூள் கொட்டினார்கள்.

எனவே, சட்டென்று பிரம்மராயரைக் குறை சொல்லா தீர்கள். என்ன செய்ய வேண்டுமென்ற விஷயமே நமக்கு மெல்ல மெல்ல பிடிபட்டுக் கொண்டிருக்கிறது. இந்த ஒரு விஷயத்தை நான் ஆரம்பித்துவிட்டேனே தவிர, இதற்கு என்னவெல்லாம்

இடைஞ்சல் வருமென்று என்னாலும் அனுமானிக்க முடியாது. இடைஞ்சல்கள் வரவர நாம் அதை வேரறுத்து நகர்ந்து போக வேண்டியது தான். யானை விழுந்துவிட்டது என்ன செய்ய அதைத் தோள் கொடுத்துத் தூக்கி வெளியே கொண்டு வந்து போட்டு அதைக்கட்டி இழுத்துக் கொண்டு போய் அந்தக் கொடும் காட்சியை ஊர்மக்கள் பார்க்க வேண்டுமா. அதனால் தான் மண் எடுத்து யானையை அங்கேயே அடக்கம் செய்யட்டும் என்று செய்துவிட்டேன். ஆக, தேவரடியார்கள் சிலரைத்தவிர சிற்பிகள் சிலரைத்தவிர வேறு யாரும் யானை இறந்ததைப் பார்க்கவில்லை. ஒரு யானை இறந்துபோய் தரதரவென்று இழுத்துப் போகப் பட்டதை எவரும் பார்க்கவில்லை. அதுதானே அச்சான்யம். விழுந்து செத்ததல்லவே."

மறுபடியும் பிரம்மராயர் சூள் கொட்டினார்.

சக்கரவர்த்தியினுடைய சிந்தனையும், செயலும் எவ்வளவு தெளிவாக இருக்கின்றன என்று நின்று வியந்தார். இராஜேந்திர சோழனுக்கும் அது புரிந்தது.

தந்தையை நோக்கிக் கைகூப்பினார்.

"நானும் ஒரு க்ஷணம் என்ன என்று தெரியாமல் பயந்தேன். ஆனால், சிறிதுநேரம் பொறுத்துதான் நீங்கள் செய்ததுதான். சரி என்று எனக்குப் புரிந்துபோயிற்று. எது செய்திருந்தாலும் அது ரசக்குறைவாகத்தான் போயிருக்கும். அந்த இடத்தில், விழுந்த நேரத்தில் அன்று இரவே புதைக்கப்பட்டு விட்டது. இப்பொழுது என்ன பத்தடி தள்ளி கோபுரம் வரும். அவ்வளவுதானே."

இராஜேந்திரர் தந்தையைப் பாராட்டினார்.

சக்ரவர்த்தி அவருக்கருகே வந்து அவரைக் கட்டித்தழுவிக் கொண்டார்.

"இதுதானடா புரிந்து கொள்ளுதல். இந்தப் புரிந்து கொள்ளுதல் நம்மிடையே வந்துவிட்டால் போதும். இந்த வேலை நிச்சயம் முடியும். இந்தப் புரிந்து கொள்ளுதல் இல்லாததால் நாம் முரண்டுபட்டுக் கொண்டிருக்கிறோம். நமது முரண்தான் நம் வேலைக்கு முதல் எதிரி. இந்த வேலையில் ஏதேனும் குறை வந்தால் அதற்கு வேறு எவரும் காரணமில்லை. இதோ நமது சபையிலே இருக்கின்ற நாம்தான் காரணம். நீங்கள் எனக்கு அன்னியமாகப் போனாலொழிய, நீங்கள் என் முதுகில் குத்தினாலொழிய, நீங்கள் என்னை வஞ்சித்தாலொழிய, நான் இந்த வேலையிலிருந்து ஒருகாலும் பின்வாங்க மாட்டேன்."

சபை பதறி எழுந்தது.

"சக்ரவர்த்தி அவர்களே என்ன பேசுகிறீர்கள்."

மூவேந்தர் வேளாளர் பதறி எழுந்தார். அவர் குரல் உடைந்து அழுகை பிறந்தது. வயதான காரணத்தால் உடம்பு தள்ளாடியது.

அவர் தள்ளாட்டத்தை நிறுத்த சக்ரவர்த்தி அவர் உடம்பைப் பிடித்துக் கொண்டார். மற்றவர்களும் நெருங்கி வந்தார்கள்.

"உங்கள் பேச்சுக்கு ஒரு வரைமுறை வேண்டாமா. உங்கள் முதுகில் குத்துவதும். உங்களை வஞ்சிப்பதும் நாங்கள் செய்வோமா. என்னய்யா என்ன இது."

பழுவேட்டரையர் கோபமாகக் கத்தினார்.

"நீங்கள் யாரை நினைத்துப் பேசுகிறீர்கள்"

இளவரசர் சீறினார்.

"நான் உங்களுக்கெதிராகப் பேசிவிட்டேன் என்பதால், நீங்கள் செய்த ஒரு காரியத்தை நான் மறுத்தேன் என்பதால், இப்படிப்பட்ட வார்த்தைகளையெல்லாம் இறைக்கிறீர்களா. என்னை நினைத்துத் தானே உங்களுக்கு இந்த வார்த்தைகள் வந்திருக்கின்றன."

இராஜேந்திரசோழர் கைவீசிப் பேச அவரை மெல்ல அருண்மொழி அடக்கினான்.

"அதிகம் பேசாதே" என்று சைகையில் கேட்டுக் கொண்டான்.

கூட்டத்திலிருந்து பிரம்மராயர் தனித்திருந்து வெளியே போனார். தூணைப் பிடித்துக் கொண்டு கீழேயிருந்த முற்றத்தை வெறும் வேடிக்கைப் பார்த்தார். அங்கிருந்து திரும்பினார்.

"சக்ரவர்த்தி அவர்களே எனக்கு ஓய்வு கொடுத்து விடுங்கள். இந்த வார்த்தைகள் கேட்பதற்காக நான் உங்களிடம் பிரம்ம ராயராக இல்லை. இந்த வார்த்தைகள் கேட்பதற்காக நான் உங்களிடம் சேனாதிபதியாக இல்லை. இந்த வார்த்தையைக் கேட்பதற்காக நான் மும்முடிச்சோழ பிரம்மராயன் என்று பட்டம் பெறவில்லை. உங்களுக்கு உங்கள் அதிகாரிகளின் மீது நம்பிக்கை வரவில்லையென்றால் அது நாங்கள் செய்த பாவம். எங்கள் வேலையிலுள்ள பிசகு. இந்த வார்த்தைகளை நீங்கள் இறைத்ததின் நோக்கம் எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால்

இது கொடுத்த வலி மகத்தானதாக இருக்கிறது. உங்கள் முதுகில் குத்துவது என்ற ஒரு விஷயத்தைச் சர்வசாதாரணமாக வார்த்தையாக்கிச் சொல்கிறீர்களே என்ன பாபம் செய்திருக்கிறோம் என்று தெரியவில்லை."

ஆனால், குஞ்சரமல்லப் பெருந்தச்சன் மட்டும் இந்த வார்த்தைக்கு அதிரவில்லை.

"சபை ஏன் தலறாக நினைத்துக்கொள்கிறது என்று புரியவில்லை. இந்த வேலை நிற்குமாயின் அதற்குக் காரணம் என்ற ஒரு வார்த்தை சொன்னாரே தவிர, அதன் பொருட்டும் இதன் வேலை நிற்காது என்றுதான் நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் ஒருபோதும் எந்தத் தவறும் செய்யப் போவதில்லை. ஒரு எதிர்ப்பும் காட்டப்போவதில்லை. நீங்கள் துணையாக இருக்க, இந்த லேலை நிச்சயம் நடைபெறும் என்பதை வேறுவிதமாக சக்ரவர்த்தி அவர்கள் சொல்கிறாரே தவிர, உங்களை யாரும் துரோகி என்று சொல்லிவிடவில்லை. எனவே கோபமாகப் பேசுவதை தயவுசெய்து கொஞ்சம் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். இளவரசர் பதற வேண்டிய அவசியமேயில்லை. அவர் சொல்லுகின்ற ஒரு உண்மையைத் தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள். நிற்காதய்யா. இந்த வேலை நிற்காது. இந்த வேலை நிற்குமாயின் இந்த சபை காரணம் அவ்வளவுதானே. இதில் ஏன் இத்தனை கோபப்படுகிறீர்கள். லார்த்தைகளை வேறுவிதமாகப் புரிந்து கொண்டு ஏன் ஆத்திரப் படுகிறீர்கள்."

"குஞ்சரமல்லர் சொன்னது சரி."

சக்ரவர்த்தி அவர் பேசியதை உடனடியாக ஆமோதித்தார்.

ஆனால், பழுவேட்டரையர் அதை ஏற்கவில்லை.

"நீங்கள் என் முதுகில் குத்தினாலொழிய என்று சக்ரவர்த்தியார் பேசியது எங்களை நோகச் செய்தது. பரம்பரை பரம்பரையாக சோழதேசத்திற்கு லேலை செய்த என் குலத்தையே இழிவுபடுத்தியது போல் இருக்கிறது."

"இது லெகு அதிகம் பழுவேட்டரையரே"

அருண்மொழி மிருதுவான குரலில் அவரைச் சமாதானப் படுத்தினான்.

சக்ரலர்த்தி கைகூப்பினார்.

"மன்னித்துக் கொள்ளுங்கள். இந்தச் சபை என் உயிரானது. இந்தச் சபை இல்லையெனில் சக்ரவர்த்தியாக நான் நிற்கவே முடியாது. இராஜராஜரின் ஒவ்வொரு வளர்ச்சிக்கும் நீங்களல்லா மல் வேறு எவரும் காரணமல்ல. நீங்கள் மட்டுமா இன்னும் வல்லவரையர் வந்தியத்தேவர் என் தமக்கை குந்தவையார், என் மருமகன் விமலாதித்தன் என்று பலபேர் காரணமாக இருக் கிறார்கள். குஞ்சரமல்லன் சொன்னதுபோல இந்த இறைபணி ஒரு நாளும் நிற்காது என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லவே விரும்புகிறேன்."

சபை அமைதியாகிறது.

மெல்ல பஞ்சவன்மாதேவி உள்ளே நகர்ந்தாள்.

"சாப்பிட வரலாமே. சாப்பிட்டுக் கொண்டே பேசலாமே."

அந்த மௌனத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டாள்.

"ஆமாம். அதுதான் நவ்வது."

சக்ரவர்த்தி எழுந்திருக்க எல்லோரும் எழுந்தார்கள். பட்டமகிஷி உள்ளே வேகமாக நடந்தாள். கைதட்டினாள். அதிகாரிச்சிகள் விரைவானார்கள்.

பெரிய பாத்திரம் கொண்டு வந்து அந்த இடத்திற்கே சொம்புநீர் கொண்டு வந்து வெளியே கை நீட்டச் சொல்லி கை கழுவச் சொன்னார்கள். முதல் மாடியிலிருந்து ஒவ்வொருவரும் கை நீட்ட பெண்கள் நீருற்றினார்கள்.

களையான வெல்லப்பிட்டு, விதம்விதமான பருப்புகள் போட்டு வறுத்தது. பாத்திரத்தில் வைக்கப்பட்டது. பிரம்மராயர் மட்டும் சொம்பு ஜலம் எடுத்துக்கொண்டு அந்த முற்றத்தின் முனைக்குப்போய் கை, கால் கழுவிக் கொண்டார். துணியை ஈரமாக்கி முகம் துடைத்துக் கொண்டார். சிறிதுநேரம் கிழக்குப் பார்த்து மாத்யானம் சொன்னார். சூரியனை விரல்களுக்கு நடுவே வைத்துப் பார்த்தார். மூன்று உளுந்து அளவிற்கு நீர் குடித்தார். பிறகு மெல்ல காயத்ரீ ஜபம் சொல்லியபடியே உள்ளே நுழைந்தார். மற்றவர்கள் அமர்ந்திருக்க பிரம்மராயர் கடைசியாக வந்து அமர்ந்ததும் அனைவரும் பிட்டு தொன்னையை எடுத்துக் கொண்டார்கள். உணவு பரிமாறப்பட்டது.

சக்ரவர்த்திக்கருகே சமமாய் இராஜேந்திரருக்கு ஆசனம் போடப்பட்டது. அதற்கருகே பழுவேட்டரையரும், சக்ரவர்த்தி யின் இன்னொரு பக்கம் பிரம்மராயரும், பிரம்மராயருக்குப்

பக்கத்தில் மூவேந்த வேளாளரும் இருக்க, அருண்மொழி கடைசி எல்லையில் அமர்ந்து கொண்டான். அருண்மொழிக்கு நேர் எதிரே நித்த விநோதப் பெருந்தச்சனும் இருந்தான். குஞ்சரமல்லர் அருண்மொழியின் எதிர்பக்கம் நாலு ஆசனங்கள் தள்ளி அரசருக்கெதிரே அமர்ந்திருந்தார்.

வெல்லப்பிட்டை முகர்ந்து பார்த்து, "ஆஹா.. பசுநெய் மணம் பிரமாதமாக இருக்கிறது." என்று பாதி வெல்லப்பிட்டை வாயில் கவிழ்த்துக் கொண்டார்.

"குஞ்சரமல்லருக்குப் பசி போலும்" பஞ்சவன்மாதேவி அருகே வந்து இன்னும் வெல்லப்பிட்டை தொன்னையில் இட்டாள்."

"ஆமாம் அம்மா. எப்போது பேசி முடிப்பார்கள் என்று காத்துக்கிடந்தேன்."

"அதனால்தானா நல்ல பிள்ளையாகி சக்ரவர்த்தியை ஆதரித்தீர்."

பிரம்மராயர் உரக்கச் சொல்ல, அங்குள்ளவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

உணவு சாப்பிடும் வரை மௌனமாக இருந்தார்கள். சாதமும், குழம்பும், அவரைக்காய் பொரியலும், முருங்கைக் காய் கூட்டும், எலுமிச்சைபழ ரசமும் பரிமாறப்பட்டன.

மோர் வேண்டாமென்று குஞ்சரமல்லன் சொல்ல, தயிர் வேண்டுமென்று பிரம்மராயர் கேட்க பணிப்பெண்கள் நாலாபக்கமும் ஓடி ஆடினார்கள்.

மெல்ல அனைவரும் படிகளின் வழியே இறங்கி கீழே அரச சபைக்குப் போனார்கள். பொதுமக்கள் வரக்கூடாத அதேசமயம் அரசாங்க அதிகாரிகள் வந்து உட்கார்ந்து பேசுகின்ற இடமாக அது இருந்தது.

"நான் ஏன் கோயில் கட்டுகிறேன் என்று உங்களில் யாரும் கேட்கவேயில்லை. அங்கங்கே வேறு எலரோடோ குறைபட்டிருக் கிறீர்களே தவிர, என்னிடம் நேரடியாய் அதிகாரிகள் யாரும் முறைப்பு காட்டியதில்லை. இராஜேந்திரன் இதைப்புரிந்து கொள்ளாமல் பேசியிருக்கிறான். எனவே, அடிப்படையாய் நான் கோயில் கட்ட ஆசைப்படுகின்ற விஷயம்பற்றி உங்களோடு மனம் திறந்து பேசவிரும்புகின்றேன். உத்தமசோழனே ஆண்டு கொள்ளட்டும் என்று விலகியிருந்து மக்களோடு மக்களாகப்

பழகி வந்த காலகட்டம். செம்பியன் மாதேவியும், உத்தம சோழனும் சோழதேசத்தின் எல்வா பக்கங்களுக்கும் நகர்ந்து தங்களைப் பெருமிதமாகக் காட்டிக்கொண்ட நேரம்.

பிரம்மராயர்களாக ரவிதாஸனும், பரமேஸ்வரனும் ஆளுமையில் இருந்த காவம், திருவிடைமருதூரில் கோயிலைப் புதுப்பிக்கிறேன் என்று சொவ்லி உத்தம சோழன் அங்கு மகாலிங்கம் நிறுவியிருக்கிறேன் என்றும் எனக்கு தகவவ் சொன்னான். ஒருமுறை நேரே சந்தித்த போது நீங்கள் வந்து பார்க்க வேண்டும். என் தாயார் ஆசிர்லாதத்தால் நான் அற்புத மான கலைக்கோயில்கள் எழுப்பிக் கொண்டிருக்கிறேன் என்று பெருமை பொங்கச் சொன்னான். எனக்கு அவன் பேச்சு அலுப்பாக இருந்தது.

மகாலிங்கம் என்றால் என்ன என்று கேட்டேன். மிகப் பெரிய லிங்கம் என்று சொன்னான். எவ்வளவு பெரியது என்று கேட்டபோது நேரே லந்து பார்த்துக் கொள்ளுங்களேன் என்று இறுமாப்பாகச் சொல்லி விட்டுப் போனான். நானும் மிகப்பெரிய உயரமாக ஒரு லிங்கம் காட்டப்போகிறான் போலிருக் கிறது என்று எண்ணினேன். ஆனால், திருவிடைமருதூருக்கு லந்து அவன் செப்பனிட்ட கோயிலைப்பார்த்து, உள்ளே போய் மகாலிங்கத்தைப் பார்த்து, அதுநான் நினைத்த அளவுக்கு பெரிதாக இல்லை. அது எனக்கு ஏமாற்றமாக இருந்தது.

அடேய்.. இதையா மகாலிங்கம் என்று சொல்கிறாய். இது மகாலிங்கமாக இருப்பதற்குக் காரணம் உயரம் அகலம் அல்ல. இது ஒரு அற்புதமான ஷேத்திரம் ஈசனுடைய குடியிருப்பு இருக்கின்ற இடம். இது புரியாமல் மிகப்பெரிய கோயில். மிகப் பெரிய கோயில் என்று சொவ்லிக் கொண்டிருக்கிறாயே என்று மனத்திற்குள் மருகினேன்.

அந்த நேரம் கோயிலை விட்டு லெளியே வருகின்ற நேரம் எனக்குள் ஒரு கேள்வி எழுந்தது. நீ கோவிலைக் கட்டுவதென்றால் எவ்லளவு பெரிய கோயில் கட்டுலாய் என்று வினவினேன். மிகப் பெரிய லிங்கம். மிகப்பெரிய விமானம் என்று அப்பொழுது தான் தோன்றியது. மிகப்பெரிய என்றால் என்ன. ஒருமலையின் உயரத்திற்கு என்று தோன்றியது. அப்பொழுது லிங்கம் எவ்வளவு பெரியதாக இருக்கும் என்று இன்னொரு கேள்வி எழுந்தது எனக்குள்ளே. நான் ஒரு அளவு வைத்துக் கொண்டேன். நான்கு ஆள் உயரத்திற்கு அதாவது ஒன்றரை கோல் உயரத்திற்கு ஒரு லிங்கம் எழுப்ப வேண்டும் என்று தோன்றியது. அதற்கு

அபிஷேகம் செய்தால் எப்படியிருக்கும். அதை மாலைச் சாற்றி வணங்கினால் எப்படியிருக்கும். அதன் மீது உயரமிருந்து பல பெண்கள் பூச்சொரிய கீழிருந்து பார்த்தால் எப்படியிருக்கும் என்று கற்பனைகள் ஓட ஆரம்பித்தன.

எப்பொழுதோ காஞ்சியில் நான் பார்த்த கைலாசநாதர் கோயிலின் உருவமும் மனதில் தோன்றியது. கோவிலை நான் ஆற்றங்கரை மணல் மேட்டின்மீது வரைந்தேன். அப்பொழுது என் தமக்கை குந்தவையும் இருந்தாள்.

இது என்ன கோவில் என்று கேட்டாள். நான் கட்டப் போகும் கோவில் என்று சொன்னேன். அப்படியா அதன் உயரம் என்ன என்று வினவினாள். நான் என்னுடைய சுண்டுவிரல் களால் இரண்டு புள்ளிகள் குத்தி இதுதான் வந்தியத்தேவர். இதுதான் குந்தவை என்று பதில் சொன்னேன். அடேயப்பா இது ஏழுபனை உயரமுள்ள கோயிலாக இருக்கும் போலிருக் கிறதே என்று என் தமக்கையார்தான் வாய்விட்டுச் சொன் னார்கள். அன்றிலிருந்து மனதுக்குள் ஏழுபனை உயரமுள்ள கோயில் என்று ஒரு எண்ணம் வந்துவிட்டது.

ஏன் கோவில் கட்டிக்கொள்ள வேண்டும். என்னைக் கொண்டாடிக் கொள்வதற்கா. என் வலிமையைக் காட்டவா. இரவாப்புகழ் பெறுவதற்கா. சந்திரசூரியர் உள்ளவரையிலும் இருப்பதற்கா. இதெல்லாம் என் கையில் இல்லை. இறைவன் மிகப் பெரியவன் என்ற எண்ணம் எல்லார் மனதிலும் இருக்க வேண்டுமென்பதற்காக. திறந்த வெளியில் மிக உயரமான விமானம் எழுப்பப்படுகிற பொழுது இது பிரமாண்டம் என்று சொல்வதற்காக பாமரமக்கள் மனதில் பதிவதற்காக. தனக்கு ஒரு கட்டடம் எழுப்ப வேண்டும் என்று தோன்றிற்று.

காலம்காலமாக இந்த எண்ணம் நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காக அந்தக் கட்டடத்தை செங்கல் தளியாக செய்யாமல் கற்றளியாக செய்ய வேண்டும் என்று தோன்றியது. கருங்கல்லுக்கு என்ன செய்வது என்று தமக்கை கேட்டாள். அன்றே அப்பொ ழுதே நான் குஞ்சரமல்லப் பெருந்தச்சரையும் சந்திக்க நேர்ந்தது. இறைவன் வகுத்த விதி. குஞ்சரமல்லருக்கு அப்போது பெருந் தச்சர் என்றெல்லாம் பெயரில்லை. உத்தமசோழர் காலத்தில் அவருக்கு திருவிடைமருதூர் கோயிலைச் செப்பனிடும் வேலை யெல்லாம் கிடைக்கவில்லை. மாறாய் அங்கு போய் இவராக சில வேலைகள் செய்து வந்தார்.

குஞ்சரமல்லவருடைய சீடன் நித்தவினோதப் பெருந்தச்சன் அப்பொழுது பதினாறு வயதுப் பையன். எலிகளைப் பிடிக்கும் பொறிகளைச் செய்து வைத்திருந்தான். வெய்யில் பட்டதும் இந்த பொம்மை நடமாடும் என்று மூங்கில் பொம்மை செய்து வந்து கொண்டிருந்தான். எப்படி என்று பரிசோதித்ததில் மெல்லிய தேன்மெழுகு அங்கு இருந்தது. தேன்மெழுகு வெய்யிலில் கரைந்ததும் உள்ளுக்குள் இருக்கின்ற சில விஷயங்கள் நகர்ந்தன. நகர்ந்து பொம்மை ஆடத்துவங்கியது. அதை வைத்துக் கொண்டு கிராம மக்களிடம் கதைகள் பேசி வேடிக்கை காட்டிக் கொண் டிருந்தான். குஞ்சரமல்லன் அவனை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். கூரிய அறிவும், நல்ல ஞாபகசக்தியும் உடையவனான அந்த நித்த வினோதப் பெருந்தச்சன் நாரத்தை மலையிலிருந்து கல் கொண்டுவரலாமென்று சொன்னதும் அவன்தான்.

குஞ்சரமல்லப் பெருந்தச்சர் மறுத்து திருவக்கரை கற்கள் என்று சொன்னதுபோது திருவக்கரை கற்கள் நமக்குத் தேவை யில்லை. தேவையெனில் சிற்பங்கள் செய்வதற்கு அங்கிருந்து கற்கள் எடுத்துக்கொண்டு வரலாம். ஆனால் அடித்தளக் கற்களுக்கு அவ்வளவு தொலைவு போக வேண்டியதில்லை. நடுவே ஆறுகள் இருக்கின்றன. நடுவே ஆறுகள் எதுவும் குறுக் கிடாத நல்ல பாதையுள்ள நாரத்தை மலையிலிருந்து கற்களை திருவலஞ்சுழி வழியாக தஞ்சைக்குக் கொண்டு வந்து விடலாம் என்று அவன் சொல்ல குஞ்சரமல்லன் ஒப்புக் கொண்டார். என்னுடன் வந்தியத்தேவர் சேர்ந்துகொள்ள நாங்கள் நால்வரும் நாரத்தை மலைநோக்கிப் பயணப்பட்டோம். நாரத்தை மலை யிலுள்ள கருங்குன்றுகளைப் பார்த்தவுடன் எனக்கு மிகுந்த சந்தோஷம் ஏற்பட்டது. கனவு அதிகம் வளர்ந்தது. அதேசமயம், என் தமையன் ஆதித்த கரிகாலன் இறந்தது என் மனதில் அரித்துக்கொண்டே இருந்தது.

பஞ்சவன்மாதேவியைச் சந்தித்தபோது ஆதித்த கரிகாலனை யார் கொன்றிருப்பார்கள் என்கிற ஒரு விஷயம் மெல்ல வெளிப்பட்டது. என் வேண்டுகோளுக்கிணங்க பஞ்சவன்மாதேவி இன்னும் அதிகமாக விவரங்கள் சேகரித்துக் கொடுத்தாள்.

ஆதித்த கரிகாலனைக் கொன்றது உத்தமசோழரிடம் பிரம்ம ராயர்களாய் பதவியேற்ற, சேனாதிபதிகளாக பணிபுரிகின்ற ரவிதாஸனும், பரமேஸ்வரனும்தான் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்ட பிறகு, நான் உத்தமசோழனிடமும், செம்பியன் மாதேவியிடமும் இந்த விவரத்தைச் சொல்ல உத்தமசோழன்

நடுங்கிப் போனான். தானாகப் பதவி விலகினான். ஆனாலும் என் ஆத்திரம் அடங்கவில்லை. ஆயுதமின்றி இருந்த என் தமையனை வெட்டிக்கொன்ற அந்தச் சண்டாளர்களை வெட்டிக் கொல்லாமல் இருக்கு விருப்பப்படவில்லை. ஆனால், தஞ்சை மண்ணில் அப்படிச் செய்தால் அது பெரும் பிரச்சினையை உண்டாக்கும். ஜாதிக்கலவரம் ஏற்படும் என்பதால், நான் அவர்களை ஊர்விட்டு வெளியே துரத்தினேன். நாடு கடத்தினேன். ஆனால், இவர்கள் மௌனமாக இருக்கமாட்டார்கள் என்று எனக்குத் தெரியும்.

காந்தளூர்ச்சாலை போய் அங்கே மறுபடியும் படைதிரட்டி என்னைத் தாக்க வேண்டும் என்பதற்காக எல்லாவிதமான ஏற்பாடுகளும் செய்தார்கள். அங்கிருந்து தினம் தினம் எனக்குச் செய்தி வந்து கொண்டிருந்தது. பெரும்படை ஒன்று அங்கே தயாராகிவிட்டது என்று தெரிந்து மூன்று லட்சம் வீரர்களோடு சேரதேசத்திற்குள் பல காடுகளை அழித்து முன்னேறி காந்தளூர்ச்சாலையை வளைத்துப் பிடித்து, ஆயுதம் ஏந்தித் தாக்கிய அத்தனை பேரையும் கொன்றேன். அதில் அந்தணர்கள்தான் அதிகமிருந்தார்கள். விஷ அம்புகளை வைத்துப் போரிட்டார்கள். ஆனால், நாங்கள் பிரம்பில் முடைந்த கேடயங்களைத் தாங்கி, அந்த அம்புகளை தடுத்து நிறுத்திவிட்டு சுடர்விட்டெறியும் தீப்பந்தங்களைச் சரமாரியாக உள்ளே அடித்தோம். முற்றிலும் மரத்தாலான அந்தக் கேரளத்துக்கோட்டை ஆறு நாழிகையில் தகர்ந்து போயிற்று. பெண்களும் வாளெடுத்து வந்ததால் அவர்களையும் வெட்டிக் கொன்றேன். ரவிதாஸனும், பரமேஸ்வரனும் ஈழம் போய் அங்கிருந்து காந்தாரம் போய் விட்டார்கள் என்பது தெரிந்தது.

என்னுடைய முதல் போர் அது. மிக மிக மோசமான போர். அந்தப் போரின் தாக்கம் பல இரவுகள் என்னைத் தொந்தரவு செய்தது.

அந்தணர்களை வெட்டிக்கொல்வது தவறு என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அதற்கு நான் பரிகாரமும் செய்ய விரும்பினேன். அது, அந்தச் சாபம் என்னை அழிக்கும் என்பதற்காக அல்ல. என் மகன் இராஜேந்திரனை அந்தச் சாபம் தாக்கிவிடக்கூடாது என்பதற்காக, நான் அன்றைக்கு சிவனுக்கு மனதிற்குள் மிகப்பெரிய கோயில் ஒன்றைக் கட்டிவிட்டே மரணமடைவேன் என்று சபதமிட்டேன். நான் கோவில் கட்டுவதற்குக் காரணம் என்னுடைய பெருமையல்ல. நான் செய்த சில விஷ

யங்கள் என் மகனைத் தீண்டக்கூடாது. அவன் வாழ்க்கையைக் கலைத்து விடக்கூடாது என் பரம்பரை கருகிவிடக்கூடாது. என் மகனின் மகன், என் மகனின் பேரன் சகலரும் இங்கு சோழ தேசத்தை வளமாக்கிக் கொண்டு அற்புதமாக சிவநெறியில் தழைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

ஆயிரக்கணக்கான அந்தண வீரர்கள் இறந்தால் நானும் இதுவரை எவரும் கட்டாத ஒருகோயிலைக் கட்டவேண்டும் மென்று விரும்பினேன். எல்லோருடைய மனக்கேதங்களும் தீர்க்கும்படி மிகப்பெரிய விமானம் கொண்ட, மிகப்பெரிய ஆவுடையாரும் லிங்கமும் கொண்ட சிவன் உருவை நிறுவ விரும்பினேன். சரித்திரத்தில் இடம்பெறும் ஆசையெல்லாம் எனக்கு இல்லை. சரித்திரத்தில் நான் இடம்பெறுவேனா, இல்லையா என்பது இறைவன் விருப்பம். சரித்திரத்தில் நான் எவ்வளவு தூரம் இடம் பெற்றிருக்கிறேன் என்று என்னால் ஆராயவும் முடியாது. அறிந்து கொள்ளவும் முடியாது. காலம் எல்லாவற்றையும் விழுங்கிவிடக் கூடியது.

நான் கட்டுகிற இந்தக் கோவிலை காலம் விழுங்கி விடக் கூடாது என்பதற்காகத்தான் கற்றளியாகக் கட்டுகிறேன். அந்தணர்கள் சாபம் தீர கட்டுகிறேன். என்னுடைய அடுத்த வாரிசான இராஜேந்திரரின் வாழ்வு நன்கு இருக்க வேண்டு மென்ற எண்ணத்தில் கட்டுகிறேன். சோழதேசத்தின் செழிப்பு சந்திர சூரியர்கள் இருக்கும் வரையில் இருக்க வேண்டுமென்று கட்டுகின்றேன்.

இராஜேந்திரா... நான் சுயநலமி இல்லையடா. சோழ நாகரிகம் மிக உயர்ந்தது என்பதை இந்தப்பூமி கடைசிவரையில் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் பேசுகின்ற இந்த நாகரிகம் அற்புதமானது என்பதை இதற்குப்பின்னால் வேறு எந்த அன்னியர் ஆண்டாலும் அது சொல்லப்படவேண்டும். ஒரு வேளை பிறகு பாண்டியர்கள் உள்ளே நுழைந்தால், சாளுக் கியர்கள் உள்ளே நுழைந்தால், ராஷ்டிரகூடர்கள் கைப்பற்றினால், கீழைச்சாளுக்கியர்கள் நமது தோழமை மறந்து பகைமை பாராட்டி உள்ளே வந்தால், அப்போது கோட்டை அழியலாம். வீடுகள் அழியலாம். அரண்மனை அந்தப்புரங்கள் அழியலாம். ஆனாலும் அழிக்க முடியாத ஒரு விஷயமாக இந்தக்கோயில் இருக்க வேண்டுமென்ற ஆசையில், இந்த நாகரிகம் மட்டும் பேசப்படவேண்டும் என்ற விருப்பத்தில் செய்கிறேன். இதைச் செய்வதற்கு உங்களின் அனைவரின் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறேன்."

*சக்ரவர்த்தி நிதானமாகப் பேசி முடித்து கண்களை மூடிக் கொள்ள இராஜேந்திரர் முன்னே வந்தார். மண்டியிட்டார். தகப்பனின் மடியில் தலைசாய்த்துக் கொண்டார். அவர் இடுப்பைப் பற்றிக் கொண்டார். மெல்ல விசும்பத்துவங்கினார்.*

*சக்கவர்த்தி அவர் முதுகையும், தலையையும் தடவிக்கொடுத்தார்.*

*“என் சிங்கமே எழுந்திரு. எதற்குக் கண்ணீர். நான் உன்னைக் கொண்டாடுகின்ற தகப்பன். நீ என் உயிருக்குயிரான மகன். அதே விதமாக நீயும் என்னை உணருகிறாய் என்று எனக்குத் தெரியும். நமக்குள் எந்தப் பிரிவும் இல்லை என்பதை நான் அறிவேன். ஆனாலும் நமது எதிரிகள் நமக்குள் பிரிவு ஏற்படுவதை விரும்புகிறார்கள். தகப்பனும், மகனும் சண்டையிட்டுக் கொண்டால் உள்ளுக்குள்ளே படை எடுத்து ஊடுருவி விடலாமே என்று பார்க்கிறார்கள். அது இல்லை என்பதை நாம் நிரூபிக்க வேண்டும். என் கண்மணி என்னோடு இரு.”*

*அவர் கை விரித்தார். விரித்த அந்த கைகளுக்குள் இராஜேந்திரர் அடைக்கலம் புகுந்தார். தகப்பனை இறுக்கத் தழுவிக் கொண்டார். கன்னங்களில் முத்தமிட்டார்.*

*ஐயா, அவர் முகத்தை கையில் ஏந்தினார்.*

*“முழு மூச்சாக கோயில் கட்டும் பணியை நீங்கள் பாருங்கள். என் பணி இந்தச் சோழதேசத்தைப் பாதுகாப்பது. இதன் எல்லைகளைப் பலப்படுத்துவது. இதற்குள் வேறு எவருமே நுழைய முடியாதபடி இறுக்கமாய் வைத்துக்கொள்வது.*

*விஸ்வாமித்திரருடைய பர்ணசாலையை வாசல் பக்கம் நின்று விழி அசைக்காமல் இராமர் பார்த்துக் கொண்டிருக்க லக்ஷ்மணர் பர்ணசாலையைச் சுற்றிச் சுற்றி வருவாராம். அதேபோல தஞ்சை மண்ணில் கோயில் பணியைச் செய்யுங்கள். நான் நமது எல்லைகளைச் சுற்றிச் சுற்றி வந்து நம் சோழ தேசத்தைப் பாதுகாக்கிறேன். இனி இராஜேந்திரனிடமிருந்து ஒரு சிறு முனகல்கூட உங்களிடம் வராது. சேரதேசத்து அந்தணர்களைக் கொன்றது பாபம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். நான் நினைக்கவில்லை.*

*யானை என்பது விநாயகப் பெருமான் வடிவம். அது மிதிக்க வந்தால் விட்டு விடுவோமா, வெட்டி வீழ்த்துவோம். பாம்பு என்பது சிவனின் ஆபரணம். அது சீறினால் விடுவோமா.*

வெட்டி வீழ்த்துவோம். விஷம் கக்கினால் நகர்ந்து விடுவோமா. துண்டு துண்டாக்குவோம்.

நீங்கள் அதைத்தான் செய்திருக்கிறீர்கள். அந்தணர் என்று பசப்பிப் பேசிக்கொண்டு இடுப்பில் வாள் எடுத்துப் போர் புரியவந்தால் விட்டுவிடுவோமா. துண்டு துண்டாக்க வேண்டும். இதோ இந்தக் குண்டன் சேரதேசத்து ஒற்றன் காந்தளூர்ச்சாலை கடிமையிலிருந்துதான் வந்திருக்கிறான். இனி சோழதேசத்தை எதிர்த்து எவர் சிறிதளவு ஆடினாலும் இராஜேந்திரன் அடித்து நிறுத்துவான். உங்களைவிட மிகக் கடுமையாக எதிரிகளை நான் தண்டிப்பேன். நீங்கள் எந்தவித கவலையுமில்லாமல் கோயில் கட்டும் பணியை ஆரம்பியுங்கள்.

இங்கு யார் யாருக்கு என்ன வேலை என்பதை இங்கே இந்தச் சபையில் பேசி முடித்துக்கொள்வோம். சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் பாதம் வைக்கின்ற சிறிய மர பீடத்தின் மீது இராஜேந்திரர் அமர்ந்து இராஜராஜரின் தொடை யில் கை வைத்து சபையைப் பார்க்க, சபையிலுள்ளவர்கள் தங்கள் பீடங்களையும் இன்னும் அருகே போட்டுக் கொண்டார்கள்.

"இந்த விஷயத்தை நான் சொல்கிறேன். இராஜேந்திருக்கு சோழதேசத்தின் காவல் முக்கியமான வேலை என்றால், அவருக் குத் துணையாக அருண்மொழி போகட்டும்." பிரம்மராயர் கம்பீரமான குரலில் பேசினார்.

"விக்ரமசிங்க மூவேந்த வேளாளர் உறையூரிலோ அல்லது கொடும்பாளூரிலோ இருந்தபடி எல்லையைக் காவல் காக்கட் டும். கிழக்குப் பக்கம் அதிகப்படியான காவல் எதுவும் தேவை யில்லை. மேற்குப்பக்கம் உங்களுடைய மருமகனான விமலாதித் தர் போகட்டும். வடமேற்கே பல்லவரையர் வந்தியத்தேவர் தன்னுடைய ஊரிலிருந்தோ அல்லது மேல்பாடியிலிருந்தோ நமது எல்லைகளை நோக்கி எவரும் வராமல் காக்கட்டும், அனைவரும் இந்த இடத்தில் கூடியிருந்து கோயில் கட்டும் பணியை மேற்கொள்வோம். சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் எல்லாப் பணிகளிலும் தலையிட்டு நிர்வாகம் செய்ய அடிமை வீரர்களை மேற்பார்வையிடும் பொறுப்பு பழுவேட்டையரைச் சேர்ந்தது. சிற்பிகளையும், கருவூலத்தையும் நான் கவனித்துக் கொள்கிறேன்."

பிரம்மராயர் முடிக்க சக்ரவர்த்தி கை உயர்த்தி ஆமோதித் தார்.

இது எவ்வளவு பெரிய கொடுப்பினை. சக்ரவர்த்தியார் குணவனை ஞாபகம் வைத்திருக்கிறார். நித்த வினோதப் பெருந் தச்சன் என்று அழைக்கிறார். இந்தச் சபையில் எல்லோருக்கும் நடுவே பல வருடங்கள் முன்பு உரையாடியதைக் குறிப்பிட்டு சந்தோஷப்படுகிறார். உத்தமசோழர் எனக்கு எந்தப் பட்டம் பதவியையும் தரவில்லையெனினும் திருவிடைமருதூர் கோவி லில் நான் வேலை செய்ததைச் சுட்டிக் காட்டுகிறார். சோழதேசம் முழுமையும் ஆளுமை செய்யும் சக்ரவர்த்தி, சோழ தேசத்திற்கு அப்பாலும் தன்னுடைய ஆளுமையை விரிவு செய்த சக்ரவர்த்தி எதிரிகள் நடுங்க படை நடத்தும் மாமன்னன். அறிஞர்கள் மயங் கப் பேசுகின்ற பேரறிவாளன். பெண்களின் மனதைக் கவரும் கருணையாளன் கண்ணியன்."

"எவர் தூண்டுதலுமில்லாது தானே முன் வந்து எனக்கு இவரை நன்கு தெரியும். இவர் மிகவும் கெட்டிக்காரர் என்று சொன்னால் அதைவிட பாக்கியம் ஏதும் உண்டா. ஒன்றே யொன்று சொல்வேன். உங்கள் உயிர், உடல், உள்ளம், உடமைகள் அத்தனையும் சக்ரவர்த்திக்கு தத்தம் செய்யுங்கள். அவருடைய கனவை நனவாக்குங்கள். சக்ரவர்த்தி கோயில் வேலைகளைத் தலைமையேற்று நடத்துவார். நம்முடைய பிரிவிற்குத் தலைவர் பிரம்மராயர். சக்ரவர்த்திக்கு அடுத்த பதவியில் இருக்கின்ற சேனாபதி இளவரசர் இராஜேந்திரர் எல்லைக் காவலுக்கு நகருகிறார். அவரோடு அருண்மொழி போகிறார். நம்முடைய எல்லாத் தேவைகளையும் கவனிக்க பிரம்மராய் நேரடியாய் இருந்து செயல்படுவார் பிரம்மராயர் நியாயமானவர். தெளிவானவர். கொஞ்சம் துடுக்கானவர். ஆர்வ மிகுதியால் நம்முடைய வேலைகளுக்குள் புகவேண்டுமென்ற ஆசை அவருக்கு இருக்கும். அதை மெல்லத் தட்டிக் கொடுத்து அவரை இருக்க வேண்டிய இடத்தில் இருக்க வைத்து நாமும் எந்த வேலைகளுக்கும் சிரமம் வராமல் பார்த்துக்கொள்வோம்."

சிற்பிகளுக்கு நடுவே உற்சாகமாக குஞ்சரமல்ல பெருந்தச்சர் சொல்ல பெண்கள் மெல்லியதாய் குலவையிட்டார்கள். குணவ னுக்கு மரியாதை செய்தார்கள். குணவன் எழுந்து கைகூப்பி சிரம் தாழ்த்தினான்.

"இலத்தியைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையா."

இலத்திசடையரான இன்னொரு பெருந்தச்சன் பற்றி அவனது தாய் ஆவலாக வினவினாள்.

"ஆஹா... உன் மகனுக்கு அந்தச் சபையில் ஒரு இடம் கிடைத்ததே மிகப்பெரிய விஷயம். நாங்கள் சபையில் உட்கார்ந்து பேசிவிட்டு வரவில்லை. பேசுவதற்கப்பால் அரண்மனைக்குள் ஆசனமிட்டு தலைவாழை விரித்து மன்னருக்கு அருகே அமர்ந்து உணவு உண்டு வருகிறோம். எனக்கும், இலத்திக்கும், குணவனுக்கும் பரிமாறியது யார் தெரியுமா. பட்டமகிஷியும், பஞ்சவன் மாதேவியும். வெல்லப்புட்டு அருமையாக இருக்கிற தென்று ருசித்து சாப்பிட்டேன். பஞ்சவன்மாதேவி பாத்திரம் நிறைய வெல்லப்புட்டு எடுத்து வந்து மறுபடி மறுபடி என் தொன்னையை நிரப்பினார்கள்."

"இனிப்பு என்றால் விடமாட்டீரே. அங்கேயும் போய் போடு போடு என்று சாப்பிட வேண்டுமா."

குஞ்சரமல்லனின் இரண்டாவது மனைவி இடித்துரைக்க கூட்டம் வாய்விட்டுச் சிரித்தது.

பெருந்தச்சரும் தொடையைத் தட்டிக் கொண்டு சிரித்தார்.

"இலத்தி, குணவன் இரண்டு பேரும் அந்த சபையில் அமைதியாக உட்கார்ந்து சாப்பிட்டது எனக்கு மிகவும் பிடித்தது. தனக்கொரு இடம் கிடைத்துவிட்டது என்ற கர்வத்தில் அவர்கள் அத்துமீறவேயில்லை. அதிகம் பேசவேயில்லை. மன்னரால் பாராட்டப்பட்ட போதும் குணவன் அமைதியாக கைகட்டி நின்றிருந்தானே தவிர, அமைதியாய் கைகூப்பினானே தவிர தனக்கு எல்லாம் தெரியும் என்கிற மமதையில் அவன் பேசவே யில்லை. பரமரகசியமான விஷயங்கள் பேசும்போதும் வியப்பு காட்டவில்லை. இரண்டு பேரும் என் கண்மணிகள், என் மானத்தைக் காத்தவர்கள். அரசருக்கும், இளவரசருக்கும், மெய்க்காவல் படையினர் இருந்தார்கள். பிரம்மராயருக்கு அருண்மொழி துணை செய்தான். எனக்கு இந்த இரண்டு கண்மணிகளும் அனுசரணையாக இருந்தார்கள். இந்தக் கட்டுப்பாடுதான் நான் விரும்புவது. உங்களுக்கு நல்ல கௌரவம் கிடைக்க வேண்டு மெனில் கட்டுப்பாடாக இருங்கள். மிக நிச்சயம் கௌரவம் கிடைக்கும். கௌரவத்தை நீங்கள் தேடிப்போகக்கூடாது. கௌரவம் உங்களைத் தேடி வரவேண்டும்."

பெருந்தச்சர் சொல்ல மற்ற சிற்பிகள் தலையாட்டினார்கள்.

"சக்ரவர்த்தி அவர்கள் எல்லாவித மனச்சிக்கல்களையும் நீக்கி முழு வேகத்தில் கோவில் கட்டும் பணியில் இறங்கிவிட் டார்கள். இவரென்ன சொல்வார்; அவர் என்ன சொல்வார்.

இவர் குறுக்கீடு உண்டா. அவர் குறுக்கீடு உண்டா என்ற பேச்சுக் கெல்லாம் இனிமேல் இல்லை. பெருந்தலைகளே மிகத்தெளிவாக தங்களுடைய வேலைகளை வரையறுத்துக் கொண்டிருக்கிற பொழுது நாம் அதிகம் பேசுவது அபத்தமாகவும், ஆபத்தாகவும் முடியும். நீ போய் கருந்தட்டைக்குடி கருமார்களிடம் அமைதி யாக இருக்கும்படியாக மிக நாசூக்காகப் பேசவேண்டும். அவர்கள் அமைதியாக இருக்கிறார்கள் என்றுதான் நினைக் கிறேன். இருப்பினும் நமக்கு கொடுக்கப்பட்ட இந்த மரியாதையை மெல்லச் சொல்லி அதிகம் எதிர்பார்க்கிறார் என்பதையும் விவரிக்க வேண்டும். ஒருவேளை நமக்கு கொடுக்கப்பட்ட இந்த மரியாதையை அவர்களிடம் சொன்னால் அவர்களுக்கு கோபம் அதிகமாகுமோ என்னவோ என்று குணவன் சொன்னான்."

சட்டென்று குஞ்சரமல்லப் பெருந்தச்சர் குணவனை உற்றுப்பார்த்தார்.

"அதுவும் சரி. திருவலஞ்சுழியிலுள்ள உலோகச் சிற்பிகளிடம் போய் இதைச்சொல். அந்தச் செய்தி நிச்சயமாய் கருந்தட்டங் குடியில் பரவும்."

"ஆனால், உலோகச் சிற்பிகளுக்கு இப்பொழுது ஒன்றும் வேலை இருக்காதே."

"பிற்பாடு வேலை இருக்குமென்று இப்பொழுதே சொல். வெறுமே இருக்க வேண்டாம். விதம்விதமான பயிற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அவர்களுக்குச் சொல். பிரம்மராய ரிடம் சொல்லி பொற்காசுகள் கொண்டு வந்து கொடுத்து உலோகச் சிலைகள் செய்யச்சொல்."

"ஐயா. ஒரு யோசனை."

"சொல் இலத்தி. என்னை யோசனை."

"முதலில் ஒரு விநாயகர் சிற்பமும், பிறகு நடராஜர் சிற்பமும், மூன்றாவதாக நமது அரசர் சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரின் திருவுருவமும் திருவல்லத்திலுள்ள உலோகச் சிற்பிகளிடம் செய்யச் சொன்னால் என்ன."

கூட்டம் மறுபடியும் குலவையிட்டது.

பெருந்தச்சர் குஞ்சரமல்லன் எழுந்து இலத்தியைத் தழுவிக் கொண்டார்.

"அற்புதமான யோசனை. குணவன் இதையும் நீயே செய். விஷயத்தை அவர்களிடம்போய் அழகாகத் தெரிவி. இலத்தியை யும் கூடவே கூட்டிக்கொண்டு போ. அவனையும் இம்மாதிரி யான தலைமை விஷயங்களுக்குப் பழகச் செய்."

"அடேயப்பா என் பொறுப்பு பாதியாகக் குறைந்து விட்டதடா. இப்படி அருமையான சிற்பிகள் இருக்கும் வரை, தெளிவாக யோசிக்கின்ற உதவியாளர்கள் இருக்கும்வரை எனக்கென்ன கவலை. இனிமேல் விமானம் கட்டுவதைத் தவிர, நான் வேறு எதுபற்றியும் சிந்திக்கப்போவதில்லை. பெண்டுகளே வேளா வேளைக்கு எனக்கு நல்ல உணவுகளைக் கொடுத்துக் கொண்டிருங்கள். அதுபோதும்."

"சதாசிவாச்சாரியாரைப் போய் சமாதானம் செய்து விட்டு வரவேண்டாமா. அரசர் எதுவும் நினைத்துக்கொள்ளவில்லை யென்று அவருக்கு உறுதி சொல்ல வேண்டாமா. வேறு யார் சொன்னால் அவருக்குப் போதும், எனவே நீங்கள் ஒரு நடை நாரத்தை மலைக்குப் போய்விட்டு வருவது நல்லது என்று நினைக்கிறேன."

குணவன் நித்த விநோதப்பெருந்தச்சன் சொன்னான். இலத்தியும் அதை ஆமோதித்தான்.

"அப்படியானால் இப்பொழுதே கிளம்புகிறேன்."

"உடனடியாகக் கிளம்ப வேண்டிய அவசியமில்லை ஐயா."

குணவன் நித்தவிநோதகன் கை கட்டிச் சொன்னான்.

"நீங்கள் வருவதாக ஆள் அனுப்பினால் போதும், அதுவே பெரிய சந்துஷ்டியைக் கொடுக்கும். நீங்கள் மூன்று நாட்கள் கழித்து நிதானமாகப் புறப்படலாம். இன்றைய பேச்சு என்ன விதமான எதிர்விளைவுகளைக் கிளப்புகிறது என்பதைப் பார்த்துவிட்டுப் போகலாம். போய் நீங்கள் ஒரு பத்து நாட்கள். தங்க வேண்டியிருந்தால் இங்கு என்னவெல்லாம் செய்யப்பட வேண்டும் என்பதையும் எங்களுக்கு சொல்லிவிட்டுப் போகலாம்."

பெருந்தச்சர் சரியென்று தலையசைத்தார்.

"குணவன் இங்கு நாம் செய்ய வேண்டிய வேலை ஒன்று இருக்கிறது. ஏழு பனை உயரத்திற்கு கற்றளி, கல்லினால் கோவில் எழுப்பப்பட வேண்டுமென்றால், உச்சியில் ஒவ்வொரு நந்தியும் ஒவ்வொரு யானைகள். கனத்திற்கு எட்டு நந்திகள் ஏற்றப்பட வேண்டும்மென்றால், பெரும் ஒற்றை கற்பலகை ஒன்று மேலே

போட்டு அழுத்தப்பட வேண்டுமென்றால், அதன்மீது பாரமாக உருளைக்கல் ஒன்று வைக்க வேண்டுமென்றால், சாரம் கட்டியா இதை ஏற்றப் போகிறோம்.

ராட்டினம் போட்டு இழுப்பது , கம்பு கொடுத்து தூக்குவதும், சாரம் கட்டி அங்கங்கே வைத்து எடுத்துப் போவதுமாய் ஒரு திட்டம் நமக்குள் இருக்கிறது. ஆனால், இதுபற்றிய பலத்த சந்தேகம் எனக்கு உண்டு. தஞ்சையில் பந்தல் வேலை செய்பவர்கள் மரத்தச்சர்களுடைய தனிப்பிரிவினர் சாரம் கட்டி கயிறு போட்டு இறுக்கி மேலே கல்தூக்கி வைத்துக் காண்பித்தார்கள்.

இரண்டு கோல் உயரத்தில் வைக்கப்பட்டிருந்த கல் இருபது நாளைக்குப் பிறகும் அசையாமல் இருந்தது. சவுக்குக் கட்டைகள் பூமியில் இறங்காமல் இருந்தன. கயிறுகள் விடுபடாமல் இருந்தன. ஆனால், நாம் இன்னும் அதிக உயரமல்லவா ஏற்றப்போகிறோம். சவுக்குக் கட்டையில் அல்லவா சாரம் ஏற்றப்போகிறோம். ஒரு நேரம் சாரங்களில் மூன்று கற்பலகைகள் போகலாம் என்று பந்தல்காரன் சொல்கிறான். எவ்வளவு உயரமாக இருந்தாலும் பரவாயில்லை என்கிறான். மேலே போகப் போக காற்றின் வேகம் அதிகரிக்கும். ஒருவேளை மழை வந்தால் கயிறுகள் இற்றுப் போகலாம். எல்லாக் கயிறுகளையும் சோதித்துக் கொண்டிருக்க முடியாது. எனக்கு இது குறித்த கவலை மிக பலமாக இருக்கிறது. ராட்டினம் கட்டி, கல் தூக்கி சாரங்களில் ஆட்கள் வைத்து நகர்த்திக் கொண்டு போகிறோமா இதுதான் வழியா. வேறு எதுவும் இல்லையா என்று தோன்றுகிறது. இந்தக் கோயிலை இதன் உச்சியில் இருக்கும் உருளைக்கல்லை, நந்திகளை, கற்பலகைகளை எப்படி எடுத்துப் போகப் போகிறோம் என்று தயவு செய்து சகலரும் சிந்திக்க வேண்டும்."

சதாசிவாச்சாரிதான் ஒரு யோசனை சொன்னார். "மேற்கிலிருந்து ஒரு பாதைபோல ஒரு மண்மேடு அமைத்து மெல்ல மெல்ல மண் மேட்டின்மீது பாறைக் கற்களை ஏற்றி உச்சிக்குக் கொண்டு போகவேண்டும். ஆட்கள் இழுக்க, ஆட்கள் தள்ள பாறைக்கற்கள் மேலே போகவேண்டும் என்று சொன்னார். இது சரியாக வருமா என்று புரியவில்லை.

இரண்டு கோல் அகலத்திற்கு பாதை அகலமாக இருக்க வேண்டும் என்றும் சொல்கிறார். ஏழு பனை உயரம் மண் குவித்து அங்கிருந்து நீண்ட பாதை ஒன்றை அமைக்க வேண்டுமென்றால் இங்கிருந்து வெகுதொலைவிலுள்ள ஒரு கிராமத்திற்குப் போய் அந்தச் சரிவு நிற்கிறது. நீண்ட மண்பாதை சரிவருமா.

மழை தாங்குமா, நடுவே பிளக்காமல் இருக்குமா. எத்தனை பேர் ஏறலாம். எவ்வளவு பலகைகள் போகலாம் என்றெல்லாம் கேள்விகள் வருகின்றன. மண்போட்டு அதற்கு மேலே சவுக்குக் கட்டைகள் கொடுக்கலாம் என்கிறார். பாதைக்கு மேலும் சீவப்பட்ட சவுக்குக் கட்டைகள் அடுக்கி வைத்து விடவேண்டும் என்கிறார். அதாவது சவுக்குக் கட்டைகள் மீது பாறைகள் நகர்த்தப்படும். இதனால் பாறை எளிதாக நகரும். சவுக்குக் கட்டைகள் மீது எண்ணெயைப் பூசலாம். வழுக்கிக் கொண்டு போகும் என்கிறார். கயிறு அறுந்தால் வேகமாக வழுக்கிக் கொண்டு வரும். அப்பொழுது கீழே நிற்கின்ற ஆட்களின் கதி என்ன ஆகும். இப்போதைக்கு இது ஒரு நல்ல வழியாகத் தெரிந்தாலும் எங்கிருந்து எங்கு பாதை என்பது பிரமிப்பாக இருக்கிறது" என்று பெருந்தச்சர் கவலையோடு நிறுத்த, "ஐயா, எனக்குள் வேறு ஒரு திட்டம் இருக்கிறது. இதைக் காட்டிலும் இன்னும் ஆட்கள் வருவார்களா வேலை செய்ய என்பது எனக்குத் தெரிந்தால் நான் வேறு ஒரு முயற்சி செய்து பார்க்கிறேன்."

"நிச்சயம் வருவார்கள். ஆட்களுக்கென்ன இராஜேந்திரரிடம் ஒரு வார்த்தை சொன்னால் போதும். இன்னும் பத்தாயிரம் ஆட்கள் நிச்சயம் அனுப்புவார். நீ என்ன செய்யப் போகிறாய்."

"நீங்கள் நார்த்தாமலை போய்வாருங்கள். அதற்குள் ஒரு மாதிரி வடிவம் செய்து வைக்கிறேன். அந்த மாதிரி வடிவம் மரத்தில் இருக்கும் அல்லது சுண்ணாம்புக் கல்லிலும் செய்யலாம் என்றிருக்கிறேன்."

"சுண்ணாம்புக்கல்லை விட மாக்கல்லில் அதை வடித்துக் கொடு. அந்த மாவுக்கல் மாதிரிகளுக்கு மிக நன்றாக இருக்கும்."

"ஆமாம். எப்படியோ ஒருவிதமாக நான் மாதிரி வடிவம் தயாரித்து நாம் எந்த அளவுகளில் பலகைகள் அடுக்கப் போகிறோமோ, அதே அளவுகளில் பலகைகள் தயார் செய்து அதற்கு எண்கள் கொடுத்து வைக்கப் போகிறேன். அங்கே கோயில் கட்டப்பட கட்டப்பட இங்கு பலகைகள் ஏற்றப்படும். நாம் அடுத்தது என்ன செய்ய வேண்டும். எந்த அளவில் செய்ய வேண்டும் என்பதும் நமக்குத் தெரியவரும்."

"நன்றாக இருக்கிறது உன் யோசனை. மாதிரி வடிவத்தைச் சிறியதாகச் செய்யாமல் நன்றாக பெரியதாகவே செய். ஒருகோல் நீளக்கல் என்றால் அது ஒரு சாண் என்று காட்டு. உன் கையில் ஒரு சாண் என்பது ஒரு கோல்* (* ஒருகோல்= 16 அடி) என்ற

கணக்கில் மாதிரி வடிவம் செய். மாக்கல் வேலை தெரிந்தவர்கள் நம்மில் உண்டு. ஆனால், அவ்வளவு மாக்கல் கிடைக்குமா."

"நிச்சயம் கிடைக்குமய்யா. திருக்கடல்மல்லைக்குப் பக்கத்தில் மாக்கல் இருக்கிறது. மூன்று பாரவண்டிகளில் கொண்டு வரச் சொல்கிறேன்."

"நல்லது செய். நம்முடைய கொட்டாரத்தில் நெல் இருக்கிறதல்லவா. சிற்பிகளுக்கு எந்தக் குறையும் இல்லையே."

"இல்லை. எது கேட்டாலும் தருகிறார்கள். எந்தக் குறையும் இல்லை."

"நடுவே ஒருமுறை பிரம்மராயரை மரியாதை நிமித்தம் பார்த்துவிட்டு வா. அரண்மனையிலுள்ள மாடிப்படிகள் நடந்து நடந்து வழுவழுப்பாக இருக்கின்றது. யாரையேனும் அனுப்பி பொடிக்கச் சொல். அரசர் இல்லாத நேரமாகப் பார்த்து இரண்டு மூன்று நாழிகையில் பொடித்து விடு. அதிகம் சத்தம் எழுப்ப வேண்டாம். பத்து பேர் ஒரு சேரப் பொடித்து துடைத்து இறங்கி விடட்டும்."

"நானும் நினைத்தேன். நீங்களும் சொல்லி விட்டீர்கள். உடனடியாக அதைச் செய்கிறேன்."

அவர்கள் பிரிந்தார்கள். அவர்கள் மனம் முழுவதும் கோவில் கட்டுவதிலேயே லயித்துக்கிடந்தது.

"குணவன் மதுராந்தகனான நித்த விநோதப் பெருந்தச்சன் நாற்பது வயதான ஆள். மெல்ல அப்போது தான் காதோரம் நரைக்கத் துவங்கியிருந்தது. குணவன் மதுராந்தகனின் மைத்துனனான இலத்தி சடையனுக்கு இருபது வயது. இலத்தி மாதிரி வேலைகளில் மிகவும் கெட்டிக்காரன். இலத்திக்கு ஆறு உதவியாளர்கள் இருந்தார்கள். இலத்தி அவர்களை அழைத்து தனியாகப் பேசினான். அவர்கள் திரைச்சீலை இருக்கின்ற அறைக்குப் போய் ஒவ்வொரு திரைச்சீலையாகப் பார்த்து ஓலைச் சுவடியை எடுத்து எழுத்தாணியில் குறிப்புகள் எடுத்துக் கொண்டார்கள். அன்று மாலையில் இலத்தி சடையன், குணவன் மதுராந்தகனான நித்தவிநோதப் பெருந்தச்சனைப் பார்த்து எனக்கென்று தனியாக ஓடு வேய்ந்த ஒரு வீடு தேவை. நான் மிகப் பெரிய மாதிரி வீடு ஒன்று செய்யத் திட்டமிட்டிருக்கிறேன். பெருந்தச்சர் சொன்னதுபோல ஒரு சாண், ஒரு கோல் என்று அளவு வைத்துக் கொள்ளப் போகிறேன். அப்படி செய்கிறபோது உச்சியிலிருந்து சாரம் இறங்க வேண்டுமென்றால் எவ்வளவு தூரம் போக

வேண்டும். நெட்டுக்குத்தாக இறங்க முடியாதல்லவா. சரிவான சாரம் எவ்வளவு தூரம் போகும் என்பதையும் நாம் கண்டு பிடித்துவிட முடியும். எனவே அது வீடாக இல்லாது சுற்றி சுவர் எழுப்பி மேலே ஓடு வரைந்து மிகப்பெரிய கூடமாக இருப்பது நல்லது. கோயில் கட்டிய பிறகும் அந்த மாதிரி லடிலம் பாதுகாக்கப்பட்டு அங்கு வைக்கப் பட்டிருக்கும்."

"அற்புதமாகச் சொல்கிறாய். நீ சொல்லும் பொழுதே எப்படிப்பட்ட இடமாக அது இருக்கவேண்டும் மென்பது எனக்குள் விரிகிறது. நாம் இருவரும் இன்றுமாலை அல்லது இரவு பிரம்மராயரைப் பார்த்து பேசிவிட்டு வருவோம். வரு கிறோம் என்று பிரம்மராயருக்கு தகலல் அனுப்பிவிடலாமா."

"அனுப்பி விடு." ஆனாலும் தகவல் சொன்னவன் போன வேகத்திலேயே திரும்பி வந்தான்.

"பிரம்மராயர் தன்னுடைய சொந்த ஊரான அமண்குடிக் குப் போயிருக்கிறார். அமண்குடியில் அவர் கட்டிய ராஜரா ஜேஸ்வரத்தில் வேத விற்பன்னர்கள் ஒன்று கூடி ஜடபாராயணம் செய்யப்போகிறார்கள்.

ஒரு ஸ்லோகத்தின் கடைசி வார்த்தையை எடுத்து, அந்த கடைசி வார்த்தையை முதல் வார்த்தையாக முதல் ஸ்லோகத்தில் வைத்து ஜடைபோல பின்னிக் கொண்டு போகப் போகிறார்கள். அவர் கட்டிய கோயிலுக்குள் இருக்கின்ற அஷ்ட தச புஜ துர்கை யின் முன்னால் சண்டிஹோமம் நடக்கப் போகிறது. சக்ரவர்த்தி யினுடைய மேன்மைக்காகவும், சோழ தேசத்தினுடைய சுபிட்சத் திற்காகவும் அந்த ஹோமம் நடக்கப் போவதாய் பிரம்மராயர் வீட்டில் சொன்னார்களாம்."

"நல்லதாய்ப் போயிற்று."

குணவன் தொடை தட்டிக்கொண்டு எழுந்தான்.

"நீ வீட்டில் சொல்லிவிட்டு, குளித்துவிட்டு, சாப்பிட்டு விட்டு வந்துவிடு, நாம் குடந்தை பாதையில் பயணித்து உப்பிலி யப்பன் கோயில் வழியாக அமண்குடிக்குப் போகலாம்."

"பெரியவரிடம் சொல்ல வேண்டாமா."

"பெருந்தச்சர் விசாரித்தால் இங்கே இருக்கிறவர்களிடம் சொல்லிவிட்டுப் போகலாம். போய் உடனே திரும்பி விடுவோம்."

"யாரை வைத்து அந்தப் பெரியகூடம் கட்டச் செய்வது."

"அதிக ஆலல் காட்டவேண்டாம். அவர் காசு கொடுக்கிறாரா அல்லது ஆட்கள் அனுப்புகிறாரா என்பதை அவரே தீர்மானம் பண்ணட்டும். செய்யட்டும். அவர் காசு கொடுத்தால் நாம் ஆட்கள் ஏற்பாடு செய்வோம். பெருந்தச்சருக்கு என்று சொன்னால் வீடு கட்ட பலபேர் விரைந்து ஓடி வருவார்கள்."

"இருபது நாளில் முடிந்துவிடாதா."

"சுற்றுச்சுவர் எழுப்பி மேலே கூரைபோட இருபது நாள் எதற்கு பத்து நாளில் முடித்துவிடலாம். ஆனால், ஒருசாண், ஒரு கோல் என்ற கணக்குகூட சரியாக வராதோ என்று பயமாக இருக்கிறது. ஒருவிரல் அகலம். ஒரு கோல் என்று கொண்டால் சரியாக வரும். நான் கிளம்புகிறேன்."

இலத்தி தன் குடிசை நோக்கிப் போனான். மெல்ல மாலை மங்கிக் கொண்டு வந்தது. தளிச்சேரி பெண்டிர் வீட்டிலிருந்து நடனமாடவ் சப்தமும், லேய்ங்குழல் சத்தமும், மத்தள சப்தமும், உடுக்கை சப்தமும், இடக்கை என்கிற முழவு சப்தமும் கேட்டன. அப்போது நட்டுவனாரின் குரல் உயர எழும்பி தாளம் சொல்லியது. இலத்தி அமண்குடி போகும்போது தேவரடியார் குடியிருப்பு வழியாகப் போனால் என்ன என்று யோசித்தான். உடுத்திக் கொண்டு வெளியே வந்தான். ஆனால், அவன் நினைத்தற்கு மாறாய் தேவரடியார் குடியிருப்பைச் சுற்றிக்கொண்டு குணவன் நித்த வினோதப் பெருந்தச்சன் குதிரையில் விரைய இலத்தியும் பின்தொடர வேண்டியிருந்தது.

கருத்தட்டார்குடி வழியே சுண்ணாம்பு காளவாய்கள் தாண்டி, திருவையாறு பாதைக்கு முன் திரும்பி, குடந்தை பாதையில் பயணித்து, உப்பிலியாபுரம் போய் சாமி தரிசனம் செய்துவிட்டு அமண்குடி நோக்கிய போது மெல்ல இருட்டத் துவங்கிவிட்டது. அமண்குடி அடைந்த போது கும்மிருட்டாக இருந்தது. சில பந்தங்கள் அங்கங்கே எரியவிடப்பட்டிருந்தன. கோயிலுக்கு கிழக்கும், தெற்கும் வாயிற்படிகள் இருந்தன. கோயிலுக்கு அடுத்தாற்போல உள்ள அரசமரத்து மேடையிலும் கோயிலைச் சுற்றியுள்ள திண்ணையிலும், படிகளிலும் இன்னும் சற்றுத் தள்ளி அமர்ந்திருந்த குளக்கரைபடியிலும் அந்தணர்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் இருக்குமிடங்களிலெல்லாம் தீப்பந்தங்கள் இருந்தன. அது இடைவேளை போலும். அந்தணர்கள் ஈரத் துணியால் முகம் துடைத்து மறுபடியும் திருநீறு இட்டு ஊர்க் கதைகள் பேசிக் கொண்டிருக்க, சற்றுத் தொலைவிலேயே குதிரை

விட்டு இறங்கி ஒரு வைசியர் வீட்டு வாசலில் குதிரைகளைப் பூட்டி சேணம் தளரவிட்டு யார் என்று கேட்ட கிராமத்து அதிகாரியிடம் தங்கள் பெயரைச் சொல்ல, அவன் தெரியும் தெரியுமென்று சந்தோஷப்பட்டு வரவேற்றான். குதிரைக்கு ஒரு வீட்டு பின் பக்கமிருந்து புல்கட்டு கொண்டு வந்து போட்டான். செப்புக்காசுகள் வாங்கிக் கொண்டு வணக்கம் தெரிவித்தார்கள். மெல்ல வீடுகளோரமாய் சிற்பிகள் இருவரும் நடந்து குளக்கரையில் இறங்கி கைகால் கழுவி, மேல்துணியை ஈரம் செய்து முகத்தைத் துடைத்துக் கொண்டு, வாயைக் கொப்பளித்து, சுவாமி தரிசனம் செய்ய மெல்லப் படியேறிய போது அந்தணர்கள் உரத்தகுரலில் பேசுவது தெரிந்தது.

குணவனும், இலத்தியும் சட்டென்று அமர்ந்து கொண்டார்கள்.

“உள்ளே பெருந்தச்சர் பெயர் அடிபடுகிறதே.”

இலத்தி அடிக்குரலில் கேட்டான்.

“ஆமாம். ஏதோ கேலி செய்கிறார்கள்.”

“பேச்சு தெளிவாக காதில் விழவில்லையே. படியில் ஆறேழு பேர் ஏதோ ஜபம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மேலேறி வந்து இங்கு அமர்ந்து கொள்வார்கள். அப்பொழுது நெருங்கி விடலாம்.”

குணவன் காத்திருந்தான்.

அவன் சொன்னதுபோலவே சிலர் படியேறி வந்து உரக்கப் பேசியவர்களிடம் அருகே உட்கார்ந்து கொண்டதும், இவர்களும் அருகே போய் உட்கார்ந்து கொண்டார்கள். தீப்பந்த வெளிச்சம் மரத்தின் நடுப்பகுதிக்குத்தான் போதுமானதாக இருந்தது. தரையில் உள்ளவர்களின் முகம் தெரியவில்லை எழுந்து நின்றால் ஆளினுடைய வடிவம் மட்டும் தெரியும். ஆனாலும் அவர்கள் தைரியமாக எதுபற்றியும் கவலையில்லாமல் பேசிக் கொண்டிருந்தார்கள். முகம் தெரியாத இருட்டினில் பேசினால் அடையாளம் தெரியாது என்பதால் பேசிக் கொண்டிருக் கிறார்களே என்னவோ என்றும் தோன்றியது.

நானா, குளக்கரையில் அமர்ந்து பேசினேனா, இல்லவே இல்லை என்று சொல்லிவிடலாம்.

"குஞ்சரமல்வர்தான் கோவில் கட்டுவதற்கு பெருந்தச்சனாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறான் என்று தெரிந்ததுமே எனக்குத் தெரிந்துவிட்டது."

"என்ன தெரிந்துவிட்டது."

"யானைதான் களப்பலி என்று."

அந்தணர்கள் பலர் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

"ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு யோக்கியதை. குஞ்சரமல்லர் யோக்கியதைக்கு ஆடு வெட்டினால் சரியாக இருக்குமா. மாடு வெட்டினால் சரியாக இருக்குமா? யானை தான் குஞ்சரமல்லருக்கு சரியான தகுதி. எனவே குழிதோண்டி யானையைக் குப்புற கவிழ்த்து உயிரோடு புதைத்துவிட்டார்கள். ஜெயவிஜயீபவ, விநாயகர் பூஜை நன்றாக முடிந்தது." என்று இசையோடு சொல்வ மறுபடியும் பேயாய் சிரித்தார்கள்.

"பிராமணோத்தமர்களே பகலில் பக்கம் பார்த்துப் பேசு இரவில் அதுவும் பேசாதே என்கிறார்கள்."

"இது அமண்குடி அந்தணர் கோட்டை. பாண்டியர்களும், பல்லவர்களும் ஆட்சி செய்தபோது சமணர்கள் வாழ்ந்த இடம். விஜயாலயச் சோழன் வந்தபோது சைவம் தழைத்தது. சமணர்கள் வடக்கே போய்விட, இது அந்தணக் குடியிருப்பாயிற்று. இந்த அமண்குடி மெல்ல மெல்ல மறைந்து அம்மன் குடியிருக்கும் இடமாக மாறிவிட்டது. அம்மங்குடி என்றும் மருவிவிட்டது.

இந்த இருட்டில் யார் வந்து நம்மை வேவு பார்க்கப் போகிறார்கள். வந்து பார்த்தால் பார்க்கட்டுமே, பயந்து வாழ்வது என்பது இனி இல்லை. அந்தணரில்லாது சோழதேசம் இல்லை. அடுத்த சேனாதிபதியும் பிரம்மராயர்தான். அருண்மொழிப் பட்டன். அடுத்த படியான பிரம்மராயன்."

"முட்டாளே."

யாரோ ஒருவர் பேச, இன்னொருவர் குரல் கொடுத்தார்.

"அரசரைப் பற்றியோ, இளவரசரைப் பற்றியோ பேசினால் கூட பொறுத்துக் கொள்வார்கள். இன்றையதேதிக்கு குஞ்சர மல்வர்தான் சோழதேசத்தின் கதாநாயகன். பத்து முழ வேட்டியும், மேலே சால்வையும், இடுப்பில் பட்டுத்துணியும், காலில் கற்கள் பதித்த பாதரட்சையுமாய் பவனி வருகிறார்."

"அது சரி. ஒவ்வொரு மிருகத்திற்கும் ஒவ்வொரு மாதம். இப்பொழுது சிற்பிகளின் காலம்."

"என்ன அது ஒவ்வொரு மிருகத்திற்கும் ஒவ்வொரு மாதம்."

"கார்த்திகை மாதம் நாய்களுக்கு உவப்பானது. மார்கழி மாதம் குதிரைகளுக்கு உவப்பானது. தை மாதம் எருதுகளுக்கும், பசுக்களுக்கும் உவப்பானது."

கூட்டம் பெரிதாகச் சிரித்தது.

"மனிதர்களுக்கு.."

"எல்லா மாதங்களும் நல்ல நாதம்தான். எல்லா நேரமும் நல்ல நேரம்தான்."

"மனிதன் அபூர்வமான பிராணி ஐயா. அதனால்தான் இந்த நியதியை வைத்திருக்கிறது. வேறு எந்த இனம் அருகினாலும், மனித இனம் அருகக்கூடாது என்றுதான் இறைவன் இப்படி எல்லாக் காலமும் மனிதருக்குக் கூடும் காலமாகவே வைத்திருக் கிறான்."

யாரோ ஒருவர் கொஞ்சம் நெகிழ்ந்த குரலில் பேசினார்.

"அதென்ன மனிதன் உசத்தி"

"மனிதன்தானே பேசவும், பாடவும் கற்றவன். வேறு எந்த மிருகமும் அதைச் செய்வதில்லையே. ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு விதமான முன்னேற்றம். மனிதருக்குத்தானே இருக்கின்றன. மற்ற மிருகங்கள் அப்படியே தேங்கிவிட்டனவே. ஓலையில் வீடு அமைவது இருந்தது. பிறகு செங்கல் அடுக்கி கூரை அமைவது இருந்தது. பிறகு அழியாமல் இருக்க வேண்டு மென்று கல்லைக் குடைந்து கோவில் செய்வது இருந்தது. இப்போது பார் ஏழு பனை உயரம் கல் பலகைகளைச் செதுக்கி செதுக்கி அற்புதமான ஒரு கட்டடம். சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் கட்டப் போகிறார்."

"அட முட்டாளே. உலகத்தின் அற்புதம் கட்டடக் கலை என்றா சொல்கிறாய். இந்தக் கட்டடக் கலைக்கு ஆதாரம். வேதம். மனிதனின் மொழி அறிவு. ஒருவரை ஒருவர் தொடர்பு கொண்டு சரியாய்ப் புரிந்து கொள்ளும் படியான மொழி அறிவு வேண்டும். இந்த மொழி அறிவால்தான் பற்பலகலைகள் வளர்ந்தன. ஆடலும், பாடலும் மலர்ந்தன. அதற்குப் பிறகு ஓவியம். ஓவியத் தின் இன்னொரு வெளிப்பாடு சிற்பம். சிற்பத்தின் இன்னொரு

கிளை உலோக வார்ப்புகள். இன்னொரு கிளை கட்டடங்கள். இன்னொரு கிளை தேர்ச்சக்கரங்கள். வேதம் என்கிற சப்தத்தை அறிகின்ற விஷயத்திலிருந்து பலநூறு கிளைகள் கிளம்பின. சப்தத்தை அறிவது, சப்தத்தை வெளியிடுவது. சப்தத்தை உணர்வது. இவைதான் மனித நாகரிகத்தின் ஆதாரம்.

பிரபஞ்சம் முழுவதும் பரவியிருக்கிற ஒலியே உனக்கு நமஸ்காரம் ஒலியே நீ என்னைத்தொட...... என்னிலிருந்து ஆயிரம் கரங்கள் வெளியே வந்தன. ஆயிரம் கரங்கள் என்பது வெறும் கைகளைச் சொல்லவில்லை. ஆயிரம் விஷயங்களைச் சொல்லு கிறான். இசை, பாட்டு, நடனம், சிற்பம், போர்த்திறன், வீடு கட்டுதல், உடை உடுத்துதல், நகை அணிதல், நீர்ப்பாசனம், நெல் வயல்கள் என்று பலதும் சொல்கிறான்.

வேதமல்லாது இவை எதுவும் இல்லை. வேதமே முதல், வேதமே ஆதி. வேதமே மனித நாகரிகத்தின் முதல் சலனம். இதை இடையறாது சொல்வதுதான் என் வாழ்க்கை என்கிற போது எனக்குள் புதிய பூரிப்பு ஏற்படுகிறது. நான் இங்கு பிரம்ம ராயருடைய ஊருக்கு வந்திருக்கிறேன். இந்த ஊரில் எனக்கு பூரண கும்பமரியாதை கொடுத்து வரவேற்று. எனக்கு உணவும் கொடுத்து, உடையும் கொடுத்து, நடக்க செருப்பும், பிடிக்க குடையும் கொடுத்து, சன்மானமும் கொடுத்து வேதம் சொல் என்பார்கள். நான் வேதம் சொல்ல வந்திருக்கிறேன்.

உழுகின்றவரைப் பார்க்கும்போதும் கோட்டைக் காவலைப் பார்க்கும்போதும் யானையோடும், குதிரையோடும் போராடு பவர்களைப் பார்க்கும்போதும் எனக்குப் பாவமாக இருக்கும். கல்லை அடித்து எடுத்து விரலெல்லாம் வீங்கிய சிற்பியல்ல. நான் எவருடைய ஏவலுக்கும் காத்திருப்பதில்லை. என் வேலை மனனம் செய்வது. எவ்வளவு மனனம் செய்ய முடியுமோ அத்தனை மனனம் செய்வது. எத்தனை விஷயங்களை ஞாபகம் வைத்துக்கொள்ள முடியுமோ அத்தனை விஷயங்களை என் நினைவில் பதித்துக் கொள்வது. இதற்கு எவ்விதம் என் வாழ்க்கை அமைய வேண்டுமோ அவ்விதமாக என் வாழ்க்கையை அமைத்துக்கொள்வது. நினைவாற்றலை வளர்த்துக்கொள்கின்ற வாழ்க்கை தான் என்னுடையது. புத்திதான் என் கொள்முதல். ஞாபகசக்தி தான் என்னுடைய பலம். இதுதான் நம்குலம்.”

“என்ன பலம். என்ன குலம்.”

வேறொரு அந்தணர் கூட்டத்தின் ஓரத்திலிருந்து அலுப்பாக குரல் கொடுத்தான்.

"தளிச்சேரி பெண்டுகளுக்கும் பூர்ணகும்ப மரியாதை கிடைக்கிறது. தனித்த வீடுகள், மாட்டு வண்டிகள், பொற்காசுகள், விதம்விதமான புடவைகள். நகைகள் வாரி வழங்கப்படுகின்றன. சிற்பிகள் என்ன கேட்டாலும் கொடு என்பதாக உத்தரவு இருக்கிறதாம். சக்ரவர்த்தியே வாய்மொழியாகச் சொல்லி பிரம்மராயர் கேட்டு பிரம்மராயர் எல்லா அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டு விட்டார். சிற்பிகளே முதன்மையானவர் என்று சொல்லாமல் சொல்லப்படுகிறது. அக்ரஹாரத்திற்குச் சக்ரவர்த்தி வரவில்லை. ஆனால் கருமார் சேரிப்புரத்திற்கு அரசர் போய் அவர்களோடு உட்கார்ந்து பேசி வருகிறார். இளவரசர் அங்கு விருந்துண்கிறார். முன்னும் பின்னும் வாசல் வைத்துக் கொள்ளவும். வெள்ளை அடித்துக்கொள்ளவும், திண்ணை வைத்துக் கொள்ளவும் சலுகைகள் வழங்குகிறார்கள். மீதி சலுகைகள் கேட்டேனே என்று கருமார்கள் கேள்விகேட்டால் மெல்ல மெல்லத் தரப்படும் என்று வாக்குறுதி அளிக்கிறார். உங்களுக்கு எதுவும் கேட்கக்கூட துணிவில்லை."

"இது வீண் பேச்சு."

வேறொரு பக்கத்திலிருந்து குரல் வந்தது.

"அவர்கள் கேட்டுப் பெறவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அதனால் கேட்கிறார்கள். உங்களுக்கெல்லாம் கேட்காமலேயே கிடைக்கிறதே. அப்பொழுது என்ன குறை. காலம் காலமாக பெரிய நிலப்பிரபுக்கள் போல சகலமும் அனுபவித்து வருகிறீர்களே.

கருமாருக்கு ஓட்டு வீடுகள் இல்லை. ஓட்டு வீடுகள் கேட்கிறார்கள். நீங்கள் கேட்காமலேயே பல தலை முறைகளாக மாளிகையிலல்லவா வசித்து வருகிறீர்கள். கோட்டை போலல்லவா உங்கள் வீடுகள் இருக்கின்றன."

"இப்படித்தான் நம்மை நாமே சமாதானப்படுத்தி, நம்மை நாமே அழுத்திக்கொள்கிறோம்."

"நான் அவ்விதம் செய்யவில்லை. ஒருவிஷயத்தின் நல்லது கெட்டது இரண்டையும் பார்க்கிறேன். இந்தக் கணம் எனக்கு எந்த உதவியும் எவரிடமிருந்தும் தேவைப்படவில்லை. நான் நிறைவாக இருக்கிறேன்."

'உங்கள் பேச்சில் ஒருதவறு இருக்கிறது."

இன்னொரு குரல் உயர்ந்தது.

கூட்டம் மிகக் கூர்மையாய் பேச ஆரம்பித்தது. எல்லா அந்தணர்களும் நிமிர்ந்து உட்கார்ந்து பேச்சை முழுவதுமாய் கவனத்தோடு கேட்டார்கள்.

மறுத்தவர் பேசினார்.

"உன்னிடம் வாள் இருந்தால் போதாது. எதிரியிடம் என்ன இருக்கிறது என்பதுதான் மிக முக்கியம். எதிரியிடம் வெறும் கோல்தான் இருக்கிறது என்றால் நிம்மதி. எதிரியிடம் எதுவும் இல்லை என்றால் இன்னும் நிம்மதி. எதிரியிடம் ஒரு குறுவாள் இருக்கிறதென்றால் சற்று கவனமாக இருக்க வேண்டும். எதிரியிடம் உன்னை விட நீண்ட வாளும், வேலும் இருக்கிற தென்றால் உன் வாளை வைத்துக் கொண்டு என்ன செய்வாய்."

சொல்லிவிட்டு அந்த அந்தணர் நிறுத்தினார்.

"க்ஷவரம்தான் செய்ய முடியும்."

இன்னொரு அந்தணர் கோபமாகப் பதில் உரைத்தார்.

"பூடகமாகப் பேசுகிறீர்கள். நேரடியாகப் பேசலாமே."

"உனக்குக் கொடுக்கப்பட்ட சலுகைகள் பற்றி இப்பொழுது கேள்வி அல்ல. நமக்கு இன்னும் சலுகைகள் வேண்டும் என்பதும் கேள்வியல்ல. நம்மைப்போலவே மற்றவர்களுக்கும் சலுகைகள் கிடைக்கத் துவங்கினால் நம்முடைய நிலை என்ன ஆவது என்பதுதான் கேள்வி. இதைத்தானே சொல்ல வருகிறீர்கள்."

"ஆமாம்."

"இதற்கு என்ன செய்வது."

இன்னொரு அந்தணர் கேட்டார்.

"வேறு ஒருவருக்கு சலுகைகள் கிடைக்காத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டுமா. நல்ல உயர்ந்த குணம்தான்."

முதலில் பேசிய அந்தணர். உரக்கப் பேசினார்.

"நீங்கள் உத்தமராய் வேடம் போடுவதை சற்றுத் தள்ளி வையுங்கள். உண்மையில் இங்கு என்ன நடக்கிறது என்பதை உற்றுப் பாருங்கள். அவருக்கு சலுகைகள் அதிகம் கிடைப்பதால் என்ன ஏற்படும். இதுதானே கேள்வி. ராமர் வாத்தியாருக்குப் பருத்தி வேட்டி சம்பாவனை. கிருஷ்ண வார்த்தியார்குப் பட்டுப் வேட்டி சம்பாவனை. ராம வாத்தியாருக்கு மல்லிகைப்பூ மாலை. கிருஷ்ண வாத்தியாருக்கு முத்துமாலை. ராமவாத்தியாருக்குத்

தாமிரச் சொம்புதானமாம். கிருஷ்ணவாத்தியாருக்கு தங்கச் சொம்பு தானம். இப்பொழுது கிருஷ்ணவாத்தியார் எப்படி நடந்து கொள்வார். ராம வாத்தியார் எப்படி நடந்து கொள்வார்."

"ஆஹா.. அற்புதமான உபமானம். நான் கிருஷ்ணவாத்தியாராக இருந்தால் தலைகீழாக நடப்பேன்."

"அடுத்து"

"ராமரையும் தலைகீழாக நட என்று கட்டளையிடுவேன்."

"அபாரம். அதுதான் உண்மை."

"கிருஷ்ண வாத்தியாருக்குத் தங்கச் சொம்பு கிடைப்பது. ராம வாத்தியாருக்குக் குறையில்லை. தங்கச் சொம்பு வாங்கியதும் கிருஷ்ணவாத்தியாரின் நடவடிக்கைகள் ராமவாத்தியாரைப் பாதிக்கும். அதாவது சிற்பிகளுக்கும், தளிச்சேரி பெண்டிருக்கும், கருமாருக்கும் இன்ன பிற ஜாதியினருக்கும் நாம் கை கட்டி நிற்க வேண்டும் என்று சொல்கிறீரா."

"இப்பொழுது அப்படித்தான் நிற்கிறோம். ஏவல் தொழில் செய்ய வேண்டும் என்ற நிலை வந்துவிடும். உங்களால் கருமாரை அதட்ட முடியுமா. தச்சரை விரட்ட முடியுமா. வீட்டைச் செப்பனிட வருகிறாரே கட்டடக் கலைஞர், அவரை அதட்டி மிரட்ட முடியுமா. தேவதாசிகளை அடிகுட்டி என்று விளிக்க முடியுமா. எதுவும் முடியாது."

"நீங்கள் அதிகமாகப் பேசுகிறீர்கள். அந்தணர்கள் எந்த கிராமத்திற்கு வந்தாலும் எழுந்து நிற்கிறார்கள். வரவேற்கிறார்கள். பரபரக்கிறார்கள். நல்வது கெட்டது பற்றி விசாரிக்கிறார்கள். எழும்போது நெல்லோ வாழையோ, முளைப்பயிரோ சிறு மூட்டையில் கொடுத்தனுப்புகிறார்கள். வெறுங்கையோடு எந்தக் கிராமமும் அந்தணரை அனுப்புவதில்லை. இன்னும் சில கிராமங்களில் உட்கார்ந்து சில நேரம் இறைவன் புகழைப் பாடச் சொல்கிறார்கள். வேதம் சொல்லச் சொல்கிறார்கள். பிரதி அமாவாசையின் போதும் நம் ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குப் போய் இறந்த வீரர்கள் பலருக்கு மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு நீர் வார்க்கச் சொல்கிறார்கள். உங்களை யாரோ அலட்சியப் படுத்துவதுபோல் ஏன் பேசுகிறீர்கள்."

"நீங்கள் இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிறீர்கள். விழித்துக் கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். வயதாகி தளர்ந்துவிட்ட காரணத்தினால் கிராமத்துக்குள்ளேயே அலைகிறீர்கள்.

தஞ்சையின் தென்பகுதியான தளிச்சேரி பெண்டிர் வீட்டிற்கும், கோயில் அஸ்திவாரம் போடுகின்ற இடத்திற்கும் போய் பாரும். விலகிப்போ என்றுதான் உங்களுக்கு உத்தரவு வரும்."

"இது அதிகமான பேச்சு. நான் நம்பவில்லை."

"குளக்கரையில் என்னால் இதற்கு பதில் சொல்ல முடியாது."

"காலம் மாறிவிட்டது என்று அனுபலத்தால் சொல்கிறேன். இந்தச் சலுகைகள் மற்றவர்களுக்கு அதிகமாக, நமக்கு இணை யான சலுகைகள். மற்றவருக்குக் கிடைக்க, நாம் பங்கப்படுவோம் என்பது நிச்சயம்."

"நான் கேட்கும் கேள்வி இதுதான். என்ன செய்ய வேண்டு மென்று எதிர்பார்க்கிறீர்கள். அவருக்கு சலுகைகள் தரக்கூடாதா அல்லது உங்களுக்கு அதிக சலுகை வேண்டுமா? இதற்கு எவரும் பதில் சொல்ல வில்லையே."

"சொன்னால் வருத்தமாக இருக்கும். ஆனால், சொல்லித் தான் தீரவேண்டியிருக்கிறது. மற்றவருக்கு அதிக சலுகைகள் கிடைக்காத வண்ணம் கவனித்துக்கொள்ள வேண்டியது நமது வாழ்க்கையின் நியதியாகி விட்டது."

"இப்படிப் பேசுவதற்கு உங்களுக்கு வெட்கமாக இல்லையா. யாரோ யாருக்கோ வாரி வழங்குவதை கைநீட்டித் தடுப்பதற்கு நமக்கு என்ன உரிமை இருக்கிறது. உங்களுக்குத் தெரியாததல்ல. நியாயம், தர்க்கம் என்று இரண்டு விஷயங்கள் உண்டு. நீங்கள் சொல்வது நியாயம். ஆனால் தர்க்க சாஸ்திரப்படி சரியாக வராது"

"இரண்டு எடைத்தட்டுகளிலும் சமமாக அரிசி போட்டால், இரண்டு பக்க அரிசியும் சமம் என்று ஆகிவிடும். உயர்வு, தாழ்வு இல்லையென்று போய்விடும். நாம் உயர்வு என்ற ஒரு விஷயத்தை உலகம் தோன்றிய காலம் முதல் நடைபெற்று வரும் ஒரு செயலை நம்முடைய காலகட்டத்தில் நாம் மௌனமாக இருந்து இழக்க வேண்டுமா."

கூட்டம் அமைதியாக இருந்தது.

இலத்தி சடையன் திடுக்கிட்டான். மெல்ல குணலன் கைகளைத் தொட்டான். அமைதியாக இரு இலத்தி. முழுவதும் கேள். முணுமுணுப்பாய் குணலன் பதில் சொன்னான்.

"மற்றவருக்குச் சலுகைகள் கொடுக்கக்கூடாது என்ற விஷயத்தை வாதத்திற்காக எடுத்துக் கொண்டாலும், இதைச் செயலாற்றுவது மிக மிகக் கடினம். சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் போன்ற மனிதர்களிடம் மற்றவருக்கு சலுகை கொடுக்காதே என்று சொன்னால், அதுவே கொடுக்கத் தூண்டுகின்ற விஷயமாகப் போய்விடும். யார் வாங்குகிறார் களோ அவர்களைப் பகைத்துக் கொள்ளும்படியாக ஆகும். கரு மார்கள் நம்மீது மிகுந்த கோபமாக இருக்கிறார்கள். கைகலப் புக்குத் தயாராகி விட்டார்கள்."

"நானும் கேள்விப்பட்டேன். ஆனால், அங்கே நம்முடைய இளைஞன் செய்தது தவறு. கருமார்களிடம் முஷ்டி மடக்கி யிருக்கக் கூடாது. இளைஞர்களுக்கு ஒரு விஷயம் தெளிவாகச் சொல்லித்தர வேண்டும். ஒன்று உடைவாள் அணிந்து யுத்தப்பயிற்சி பெற்று கிருஷ்ணன் ராமன்போல சேனாபதி யாகவோ, அருண்மொழிப் பட்டனைப் போல உபசேனாபதி யாகவோ இருந்துவிடு. அல்லது எங்களைப் போல் அமைதியாக இரு. உடம்பிலே வலுவிருக்கிறது என்று கருமார்களிடம்போய் கை நீட்டலாமா. முட்டாள்தனமல்லவா அது. அத்தனை கோபம் ஒரு அந்தணனுக்கு ஆகாது. கோபப்படுகிற அந்தணனும், கோழை யான மறவனும் ஒன்று. இரண்டுமே அனர்த்தம் விளைவிக்கும். தானமளிக்காத வைசியனும் சோம்பித் தூங்குகின்ற வேளாளனும் ஒன்று. அவர்களாலும் அனர்த்தம் விளையும்."

"வைசியன் ஏன் தானம் தரவேண்டும். புரியவில்லை."

"தானம் கொடுக்கிறபோதுதான் வைசியனுடைய புகழும் அவன் தொழிலும் மற்றவருக்குப் போய்ச் சேரும். ஒவ்வொரு திங்கட்கிழமையும் குழந்தைகளுக்குப் பொரி உருண்டை கொடுப் பாரே அவர் ரத்தினங்களும், வெங்கலப் பானையும், துணிமணி களும் விற்பவர் என்று ஊருக்குத் தெரியவரும். வெங்கலப்பானை வேண்டுமென்கிறபோது பொரி உருண்டை ஞாபகமும், பொரி உருண்டையால் அவர் பெயரும் நினைவுக்கு வந்து அங்குபோய் வாங்கத்தோன்றும்.

ஒரு உழவன் தினந்தோறும் காட்டுக்குப் போக வேண்டும். தன் கழனிகளைக் கவனிக்க வேண்டும். தாவரத்தின் அசைவு களைக் கவனித்துக் கொண்டே இருந்தால்தான் விவசாயம் சிறக்கும். ஒருநாள் ஒரு உழவன் தன் வயல்பக்கம் வரவில்லை யென்றாலும் பயிர்கள் வாடும்."

"சரி. என்ன சொல்ல வருகிறீர்கள்."

"ஒரு பொழுதும் நாம் சண்டையில் இறங்கக்கூடாது. கைகலப்புக்குத் தயார் என்றால் கிருஷ்ணன்ராமனைப் போல இடுப்பில் வாள் தரித்து போர்முனைக்குப் போகின்ற யோக்கியதையை வரவழைத்துக்கொள்ள வேண்டும். அதுவும் ஒரு நல்ல வாழ்க்கை. ஏனென்றால் போர் என்பது வெறுமே முரட்டுத்தனமல்ல. கத்தி வீச்சல்ல. அது யுக்தி, தந்திரம். அந்தணரான பிரம்மராயர்தானே சக்ரவர்த்தி ஸ்ரீ இராஜராஜத் தேவரோடு சேர தேசத்துப் படையெடுப்பில் பங்கு கொண்டு பெரும் அழிவை ஏற்படுத்தியது.

காந்தளூர்ச்சாலை வரை வழிநெடுக அடர்த்தியான காடுகள். பாதையே இல்லாத காடுகள். அதை நூறுபேர் கொண்ட மறவர்கள் மரங்களை வெட்டித் தறிப்பார்கள். பிறகு பின்னடைவார்கள். அடுத்த நூறு பேர் முன்னேறி மறுபடியும் மரங்கள் வெட்டுவார்கள். பின்னடைவார்கள். அடுத்தது நூறு பேரும் முன்னேறி மரங்கள் வெட்டுவார்கள். பின்னடைவார்கள். மறுபடியும் மூன்று நாட்கள் கழித்துத்தான் உங்களுக்கு மரம் வெட்டுவதற்கு வாய்ப்பு கிடைக்கும். அதுமட்டும் மறவர்கள் துடிப்பார்கள். எங்கே எங்கே எங்கே என்று பரபரப்பார்கள். நான் முன்கூட்டியே போய் மரம் வெட்டட்டுமா என்று ஆவலாக இருப்பார்கள். உங்கள் குழுவைவிட எங்கள் குழு அதிகம். எங்கள் குழுவைவிட அந்தக்குழு அதிகம் என்று போட்டி போட்டுக் கொண்டு மூன்றே நாட்களில் காந்தளூர்ச்சாலையை கபளீகரம் செய்துவிட்டு வந்துவிட்டார்கள். யானைகளுக்குப் பின்னால் கற்பலகைகளை இழுத்துவரச் செய்து பூமியைச் சமனாக்கி திமிசுக்கட்டை போட்டு இடித்து கோவேறு கழுதைகளில் கூடைகூடையாய் மண் கொண்டு வந்து கவிழ்த்து, மேடான இடங்களில் கட்ட செங்கல் பரப்பி பாறைகளை அழுத்தி வைத்து ஒரு செடிகூட உள்ளே தலைநீட்டாமல் கத்தரித்து வழியிலே இளைப்பாறும் பந்தல் ஏற்படுத்தி, சக்ரவர்த்தியார் காந்தளூர்ச் சாலை வரை இப்படி பாதைகள் இருக்கின்றனவே. யார் போட்டு வைத்தது என்று வியக்கும் அளவுக்கு பிரம்மராயரல்லவா வேலை செய்தார். அதனாலல்லவா பிரம்மராயருக்குச் சேனாபதி பதவி கிடைத்தது. சோழதேசத்தை ஆளுவது யார். பிரம்மராயர்தானே."

"நீங்கள் அதிகம் பேசி ஆபத்தைக் கொண்டு வந்து விடுவீர்கள் என்று நினைக்கிறேன்."

"இது என்னுடைய வார்த்தையல்ல. சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் சொன்ன வார்த்தை நான் எந்தக்

கவலையுமின்றி ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருக்கிறேன். ஏனென்றால் சோழதேசத்தை திறம்பட ஆளுவதற்கு என் சேனாபதியான பிரம்மராயர் இருக்கிறார் என்று நடுச்சபையில் உரக்கச் சொல்லியிருக்கிறார்.

வேறு ஒரு அந்தணர் இடைமறித்தார்.

"அது மட்டுமல்ல. இன்னொன்றும் என் காதில் வந்தது. அடுத்தது உபசேனாதிபதியாக இருக்கின்ற அருண்மொழி பட்டரை இராஜேந்திரருக்குத் துணையாக வைத்துக் கொள்ளவும், அவரை அடுத்து பிரம்மராயராக்கவும் உதவி செய்யுமாறு இப்பொழுதுள்ள பிரம்மராயரான கிருஷ்ணராமனைச் சக்ரவர்த்தி கை பிடித்துக் கேட்டுக் கொண்டாராம். பிரம்மராயர் தன் மனைவிக்குச் சொல்ல, அவர் மனைவி வைஷ்ணவ தாஸனிடம் சொல்ல, வைஷ்ணவ தாஸன் தன் மனைவியிடம் சொல்ல, அவன் மனைவி சொல்லி பலபேருக்குத் தெரிந்துவிட்டது. இவ்வளவு பெரிய ஹோமம் நடக்கிறது. வைஷ்ணவ தாஸனைக் காணோமே."

"உன்னைப்போல வேதம் சொல்லுகிற வேலையா. வைஷ்ணவதாஸன் இருப்பது அரசியல். அதுவும் ஒற்று அறியும் வேலை. இந்நேரம் எந்த கவரில் எகிறி குதித்துக் கொண்டிருக்கிறாரோ. யார் வீட்டுக்கதவை திறக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறாரோ. சோழப் படை வீரர்களுக்கு நடுவே படுத்துக் கொண்டிருக்கிறாரோ தெரியவில்லை."

"எதிலும் நாம்தான் சிறந்தவர்களா. சோழதேசத்தில் மிகச் சிறந்த ஒற்றன் யார் என்றால் அது வைஷ்ணவ தாஸன்தான் என்று சொல்கிறார்களே."

"ஆமாம். ஒற்றறிவதில் புத்திசாலித்தனமும் ஞாபகசக்தியும் தான் அடிப்படை வித்தை. ஒற்றறிதல் அரசாங்கத்தின் ஒரு விஷயமாகவே சொல்லப்படுகிறது."

"நாம் பேசிக்கொண்டிருந்த விஷயம் இப்போது எங்கேயோ போய்விட்டது."

"இல்லை. அது இன்று பேசி மாளாது. நம்மால் செய்யும் முடிவும் அல்ல. சலுகைகள் கொடுக்காதே என்று யாரிடமும் சொல்ல முடியாது. நமக்கு அதனால் அவப்பெயர்களால் உண்டாகும். இதை வேறுவிதமாகச் சமாளிக்க வேண்டும்."

"எப்படி"

"எல்லோருக்கும் வீடுகள் எல்லோருக்கும் எக்காளம். எல்லோருக்கும் பறையறிவிப்பு. எல்லோருக்கும் கொடிபதாகை. எல்லோருக்கும் மெய்கீர்த்தி. எல்லோருக்கும் பூணூல் என்று கேட்க வைத்துவிட்டால். "சொல்லிவிட்டு, சொன்னவர் வாய் விட்டுச் சிரித்தார். மற்றவர்களும் சிரித்தார்கள்.

"காட்டிலுள்ள வேடர்கள் வரும்பொழுது பூரண கும்ப மரியாதையும், கட்டியம் கூறுதலும், எக்காளம் ஊதுதலும் நடத்த வேண்டும் என்று சொல்லிவிட்டால் என்ன ஆகும் என்று நினைக்கிறீர்கள்."

கண் சிமிட்டி ஒரு அந்தணர் கேட்டார்.

"யாருக்குமே எந்த சலுகைகளும் இல்லை என்று நின்று போகும். கட்டியங்கூறுதல் அரசருக்கு மட்டுமல்லவா. வேடுவர் களுக்குச் சொன்னால் விடுவார்களா. வலிக்குமே. துடிக்குமே. அதனால்தான் அப்படிச் செய்வது எப்படி செயலாக்க முடியும். எந்த வேடுவர் எனக்கு கட்டியம் கூறு என்று சொல்வான்."

"கருமார்களுக்கு வீடு கொடுத்திருக்கிறார்களய்யா. முன்னும் பின்னும் வாசல் வைத்து வெள்ளை அடித்து பெரும் மாளிகை கட்டிக்கொள்ளச் சொல்லி, பெரும் திண்ணைகள் வைக்கச் சொல்லி, அந்தத் திண்ணைகளில் பெண்டு பிள்ளைகளைக் கொலுவிருக்கச் செய்தால், நாளைக்கு அவர்களுக்குப் பல்லக்கும், பரிவாரமும், எக்காளமும், இன்னபிறவும் வரும். அவர்களுக்கு இவை இருப்பதில் என்று தவறு. எதையும் கேட்கலாமே. தஞ்சையிலிருந்து மதுரை வழியாக சேரதேசத்திற்குள் போய் காந்தளூர் சாலைக்குப் பல காடுகள் அறுத்து போனபோது உதவி செய்தவர்கள் யார். லேடுவர்கள் தானே. வேடுவர்கள் இல்லாமல் காந்தளூர்சாலைப் போயிருக்க முடியுமா. ஏழு காடுகள் அறுத்திருக்கமுடியுமா."

"இதனால் என்ன ஆகும்."

"எல்லோரும் கேட்டால் இல்லை என்று மறுக்கத்தான் வேண்டியிருக்கும். எவருக்குமே இல்லையென்ற வார்த்தைதான் வரும். எப்போதும் வாங்கிக் கொண்டிருக்கிற நமக்கு இது சாதகமாகும்."

"இது சோழதேசத்தைப் பிளவுபடுத்துவதாகாதா. வேடுவரும் கம்மாளரும் தச்சரும் வேளாளரும், மறவரும் பிரிந்துபோய் அடித்துக் கொண்டால் ஒரு தேசம் நொய்மைப்படாதா. அப்படி நொய்மைப்பட்ட தேசத்தில் வேறுவீரர்கள் வரமாட்டார்களா.

அன்னியர்கள் படையெடுக்க மாட்டார்களா. அப்படி எடுத்தால் அது நமக்கும்தானே பாதிக்கும்."

"யார் வந்தாலும் நமக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. ஏனெனில் நாம் வாளெடுத்து சண்டை போடுவதில்லை." என்று ஒருவர் பேச இன்னொருவர் வேகமாக மறித்தார்.

"நன்றாக இருக்கிறதே கதை. மேலைச்சாளுக்கியர் உள்ளே நுழைந்தால் மேலைச்சாளுக்கியருக்குக் கீழேயிருக்கிற அந்தணர்கள்தான் வருவார்கள். அந்த அந்தணர்கள் உங்கள் தலையில்தான் உட்காருவார்கள். பாண்டியன் வந்து கொடி பறக்க விட்டால் பாண்டிய தேசத்திலிருந்து வந்த அந்தணர்களுக்கும் சிவாச்சாரியார்களுக்கும் நாம் கைகட்டி பதில் சொல்ல வேண்டும். மதத்தால் ஜாதியால் ஒன்றுபட்டிருந்தாலும் தேசத்தால் பிளவுபட்டிருக்கிறோம். அந்தப் பிளவு நம்முகத்திற்கு முன்பே கோரமாக ஆடும். எனவே, சோழதேசத்தைப் பிளவு படுத்தாது சோழ மன்னருக்கும் உறுதியாக, உறுதுணையாக இருப்பதுதான் நல்லது. யாருக்கு என்ன கொடுத்தால் என்ன. உங்கள் சலுகைகள் பறிக்கப்படப் போவதில்லை."

"அப்படிச் சொல்ல முடியாது நண்பரே."

ஒரு அந்தணர் எழுந்து நின்று பேசினார்.

"உங்கள் நிலங்களை, உங்களுக்கு வரியில்லாமல் கொடுக்கப் பட்ட கிராமங்களை, வேளாண் வகை நிலங்களாக மாற்றி வரிவிதிப்புக்கு ஏற்பாடு செய்யப் பட்டாலும் படும்."

"எப்படி சொல்கிறீர்கள்."

"வீரர்கள் உள்ளே வருகிறார்கள். தஞ்சை நகரம் பெருத்துப் போகிறது. மிகப்பெரிய கோயில் கட்டும் பணி ஒன்று நடக்கிறது. அரசாங்கத்தின் கருவூலம் வேகமாக கரைந்து கொண்டிருக்கிறது. மேற்கொண்டு காசு தேவை. எவ்வளவு நாளைக்கு சிற்றரசர்கள் கப்பம் கட்டிக் கொண்டிருப்பார்கள். எனவே, மக்கள் மடியில் கைவைத்தால்தான் கருவூலம் நிறையும், மக்கள் மடியில் கை வைப்பது என்பது எல்லா நிலங்களுக்கும் வரி விதிப்பது. ஆக நிலங்களுக்கு வரி விதிக்கப்படுகிற போது இதுவரை வரி இலியாக வரி வேண்டாமென்று சொல்லப்பட்ட நிலங்களுக்கு வரி விதிக்கப்படும். நீங்கள் அதற்கு ஒத்துக்கொள்ள மாட்டீர்கள். உங்கள் நிலங்களை வேளாண் வகை நிலங்களை வேளாளர்கள் ஆட்சி செய்யும் இடங்களாக மாற்றி விடுவார்கள்."

"இது அநியாயம். அக்கிரமம்.."

நாலைந்து குரல்கள் எழுந்தன.

"எந்தச் சொத்தும் வேண்டாது வேதம் மட்டுமே சொத்தாக இருக்கிற அந்தணருக்கு நிலம் எதற்கு. அவர்கள் வயிறு வாடாமல் வருடத்திற்கு நூற்றைம்பது கலம் நெல் நாங்கள் கொடுத்துவிடு கிறோம் என்று சொல்லலாம். கொடுக்கும்படி கிராமத்தாருக்குக் கட்டளையிட்டு விடலாம். அப்போது நிலம் கையகப்படுத்தப் படும்."

அத்தனை அந்தணர்களும் மௌனமாக இருந்தார்கள்.

"இதற்கும் வாய்ப்புகள் உண்டு என்றுதான் எனக்கும் தோன்றுகிறது. இம்மாதிரி முன்பே சில இடங்களில் நிகழ்ந்திருக் கிறது. இளவரசர் ராஜேந்திரர் நம்மீது கொண்டிருக்கிற கோபத்தைப் பார்த்தால் அவருடைய ஆட்சியின்போது இந்த மாற்றங்கள் அதிகம் நிகழும் என்று நான் நினைக்கிறேன். இதற்குத்தான் நம்மில் பலர் ஈசானசிவ பண்டிதரைப் போய்ப் பார்த்து வந்திருக்கிறார்கள். ஈசான சிவபண்டிதர் விரைவில் தஞ்சை வருவதாகச் சொல்லியிருக்கிறார். இங்கு பழையாறை வந்து சில நாட்கள் தங்கிவிட்டு தஞ்சைக்கு வந்து ஓரிரு மாதங்கள் இருப்பதாக நினைக்கிறேன். அப்படி வருகிறபொழுது சக்ரவர்த்தி யாரோடு அவர் இது குறித்துப் பேசக்கூடும்."

"என்ன பேசுவார்."

"முதலில் பிரம்மதேசத்தில் அவர் நடத்திக் கொண்டிருக்கும் வேதபாடசாலைகளுக்கு மானியம் கேட்பார். நிவந்தங்கள் விடச் சொல்வார். பிறகு மெல்ல மெல்ல மற்றவைகளும் கேட்கக்கூடும்."

"எதற்கு, நேரடியாய் நமக்கு தெரிந்த சக்ரவர்த்தியை விட்டுவிட்டு எங்கோ பிரம்ம தேசத்திலும் எண்ணாயிரத்திலும் இருக்கின்ற ஈசான சிவபண்டிதரை ஏன் நாம் அணுக வேண்டும்."

"அவர்தானய்யா சக்ரவர்த்திக்கு ஆஸ்தான குரு."

"இருக்கலாம். குருவாக இருப்பினும் அரசியலிலிருந்து மற்ற வேலைகளிலிருந்தும் விலகி வேதபாடசாலையை விரிவுபடுத்து தலிலேயே குறியாக இருக்கிறார்."

"ஆமாம். இங்கே பிரம்மராயரும், கருவூர்த்தேவரும் இருக்கும் பொழுது அவருடைய பேச்சு எடுபடாதோ என்ற பயம்.

இராஜேந்திரரைக் கண்டாலும் அவருக்குப் பிடிப்பதில்லை. எனவே, ஒதுங்கியிருக்கிறார் என்று நினைக்கிறேன்."

"ஒதுங்கியிருக்கிறவரைத் துணையாக அழைத்து நாம் என்ன சாதித்துக்கொள்ள முடியும்."

"ஆக என்னதான் சொல்லுகிறீர்கள்."

"நாமே நம்மை வலுப்படுத்திக் கொண்டு இந்த விஷயங் களைக் கலனமாக கண்காணிக்க வேண்டும்."

"விவரமாகச் சொல்லுங்கள்."

"அரசருடைய எண்ணம் முழுலதும் கோயில் கட்டுவதில் இருக்கிறது. எனவே ராஜன் என்னவிதமாக நினைக்கிறானோ அவன் நினைப்புக்கு ஏற்றவாறு இந்தக் கோயில் கட்டுவதில் நம்முடைய பங்கு என்ன என்பதை தெரிவிப்பது."

"கோவில் கட்டுலதில் நம்முடைய பங்கு என்ன. பள்ளம் நோண்டுதலா. பாறை தூக்குதலா."

"இரண்டும் செய்ய நீங்கள் லாயக்கற்றவர்கள் என்று எல்லோருக்கும் தெரியும். அதுவும் வேலை செய்யுமிடத்தில் ரிக் வேதமும், யஜுர்வேதமும், சாமலேதமும் ஓதினால் என்ன. கோட்டை வாசல்களில் அதர்வண வேதம் சொன்னால் என்ன என்று நாம் யோசிக்க வேண்டும். யானை ஒன்று இறந்திருக்கிறது. அந்த யானையின் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு விநாயக பெருமானுக்கு ஹோமம் வளர்த்தால் என்ன. நான்கு திசைகளி லும் நான்கு முக்கிய தேவதைகளுக்கும் ஹோமம் செய்தால் என்ன. கிழக்கே அக்னி, தெற்கே யமன், மேற்கே வாயு, வடக்கே குபேரன், நடுமத்திமத்தில் லருணன் என்று பூஜை செய்தால் என்ன செய்கிறோம் என்று நாமே சொன்னால் என்ன."

"இதென்ன பெரிய உதவி. இதனால் செலவுதான் உண்டாகுமே தவிர, கோவிலில் கல் எழுப்புவதற்கு, கட்டடம் நிற்பதற்கு நாம் என்ன செய்யமுடியும்."

"செய்வதாகச் சொல்லோம். அரசனுடைய கவனம் நம்மில் பிளவின்றி, கோபமின்றி வரட்டும் பிறகு பார்ப்போம்."

"என்னவென்று இப்போது அரசரிடம் பேசுவீர்கள்"

"கோவில் கட்டுகிறீர்களாமே. வாழ்க சக்ரவர்த்தி. நாங்கள் என்னவிதமாக உதவி செய்ய வேண்டும் என்று கேட்கப்பட வேண்டும்."

"எங்கேயோ நெருடுகிறது."

ஒரு அந்தணர் சொல்ல, மற்றவர்களும் தீவிரமாய் யோசித்தார்கள்.

அத்தனை பேரும் புத்திசாலிகள். புத்திக் கொள் முதல் என்று புத்தியை மூலதனமாகக் கொண்டவர்கள். மிகக் கூர்மையாக யோசித்தார்கள்.

இலத்தி அவர்களுடைய பேச்சின் திறன் கண்டு வியந்தான். உடம்புமுழுவதும் செவியாக்கி அவர்கள் பக்கமே தன் கலனத்தை வைத்திருந்தான்.

"என்ன நெருடுகிறது"

"உதவிதானே கல் தூக்குங்கள். மாடுகளை ஓட்டி வாருங்கள் என்று சொல்லிவிட்டால் என்ன செய்வோம்."

"ஒருநாளும் சொல்வமாட்டார்கள்"

"அப்படியல்ல. சொல்லுவதற்குண்டான காரணங்கள் அவர்களிடம் இருக்கின்றன. பாறைத்தூக்கி விட்டு சுருண்டு படுத்துக் கொண்டுவிட்டால் போதுமே. ஒரேயொருமுறை பாறை தூக்கினால் கூட அது பல காலத்திற்குப் பேசப்படும்."

"வேண்டாம். கேட்கவும் வேண்டாம். மாட்டவும் வேண்டாம்."

"ஐயா, பேசியது போதும். கைகால்கள் கழுவிக் கொள்ளுங்கள். குடிப்பதற்குச் சூடான பசும்பால் தருகிறார்கள். ஒருகுவளை குடித்துவிட்டு சண்டி ஹோமத்திற்கு உட்காருவோம். ப்ரத்யங்கரா செய்பவர்கள் முதலில் போய் உட்காருங்கள். பிறகு வாராஹி. பிறகு ராஜ ஸ்யாமளா. உச்சிஷ்ட கணபதி பூஜையை பிரம்மச்சாரிகள் இடைவிடாது செய்யட்டும். எட்டு திரவியங் களையும் அக்னியில் சேருங்கள். அக்னியை நன்றாகக் கிளறி தகதகத்து எரிய விடுங்கள். நெய்யூட்டுங்கள்.

பிரம்மராயர் எந்தக் குறையும் வைக்கவில்லை. வேண்டும் மட்டும் பொருள் தருகிறார். ஊர் எல்லையில் கால் வைத்ததுமே மூலிகை வாசனை நெடி மூக்கை நிமிண்டுகிறது. பச்சைக் கற்பூர மும், ஹோமப் பொருட்களும் தீயில் எரிந்து பெரும் வாசனை யாய் அடுத்த கிராமத்திற்குக்கூட தெரிகின்றது. வாருங்களய்யா எல்லோரும் எழுந்திருங்கள்."

எல்வோரும் சட்டென்று எழுந்திருந்து நடக்க, இலத்தியும் குணவனும் சில வினாடிகள் தாமதித்தார்கள். குணவன் சட்டென்று உலுக்கி அவனை எழுப்பி அவனும் அந்த கும்பலோடு கலந்து கொண்டான். ஆனால் அந்த இரண்டு பேரும் தாமதித்து வந்ததை இரண்டு மூன்று பேர் கவனித்துவிட்டார்கள். சுற்று முற்று பார்த்துக்கொண்டு வந்தார்கள். ஏதோ மறந்து வைத்து விட்டு வந்ததுபோல குணவன் திருப்பி குளக்கரைக்கு வந்து அரச மரத்தைச் சுற்றி வேறுபக்கம் நகர்ந்து போனான். இலத்தி அங்கேயே நின்று கொண்டிருந்தான். மெல்ல நகர்ந்தான்.

அங்கிருப்பவர்களில் ஒருவர் சற்று சந்தேகத்தோடு பார்க்க.... அவர்கள் பின்னால் நடந்து போய் அவர்கள் படியேறும்போது சட்டென்று சுவரோரம் நகர்ந்து வேறு கும்பலோடு கலந்து அந்தக் கும்பலிலிருந்து அக்ரஹாரம் போய் ஒரு வீட்டின் இருளில் நின்று கொண்டான். குணவனும் வந்து சேர இரண்டு பேரும் திகைத்து பேசாமல் இருந்தார்கள். மெல்ல வீடுகளின் பக்கத்து சந்துகளில் புகுந்து குதிரைகளை அடைந்தார்கள்.

“என்ன செய்வது... என்ன செய்வது.”

இலத்தி கேட்டான்.

“மெல்ல குதிரையை அழைத்துக் கொண்டு போய் மறுபடியும் உள்ளே புதியதாக வருவதுபோல வரவேண்டும்” அவர்கள் குதிரையை அவிழ்த்து நடந்தார்கள். அந்தக் கிராமக் காவலாளி வந்தான்.

“மறுபடி பயணம் துவங்கிவிட்டதா” என்று கேட்டான்.

“இல்லை. கோயில் வரை குதிரையில் போகலாம் என்றிருக்கிறோம்.”

அவர்கள் இருவரும் ஏறி கிராம எல்லையிலிருந்து கோயிலுக்குள் விரைவாக குதிரையைச் செலுத்தினார்கள். அருகேயுள்ள மரத்தடியில் இறங்கினார்கள்.

இப்பொழுது அவர்கள் குடுமியும், இடுப்பு வேட்டியும், தலைப்பாகையும் வேறுவிதமாக இருந்தன. வாளை இடுப்பில் கட்டியிருந்தார்கள். கீழே இறங்கினார்கள் மெல்ல நகர்ந்து கோவில் பார்த்து கை கூப்பினார்கள். சிவோஹம் என்றார்கள். இங்கே என்ன நடக்கிறது என்று உரக்கக் கேட்டார்கள். அந்தணர்கள் திரும்பிப் பார்க்க, அவர்களை நோக்கியும் கை

கூப்பினார்கள். நாங்கள் சோழதேசத்துச் சிற்பிகள். இங்கே என்ன நடக்கிறது என்று குணலன் உரக்கக் கேட்டான்.

"நாங்கள் தஞ்சையிலிருந்து வருகிறோம். பிரம்மராயரைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறோம்."

"அப்படியா பெருந்தொலைவு பயணமாயிற்றே. எங்கேனும் தங்கி வந்தீர்களா."

"இல்லை. நல்ல குதிரைகள். விரைவாக வந்து விட்டோம்."

"ஆனால். உங்களைப் பார்த்தால் எங்கேயோ தங்கி வந்ததுபோல் தெரிகிறதே."

ஒரு அந்தணர் கேட்டார்.

இன்னொரு அந்தணர் எட்டிப் பார்த்து, "குளக்கரையில் உட்கார்ந்து வந்தவர் போலல்லவா இருக்கிறது உங்கள் முகம்."

"ஒருவர் முகத்தைப் பார்த்து எங்கிருந்து உட்கார்ந்து வந்தார்கள் என்று சொல்ல முடியுமா."

குணலன் கோபமாகக் கேட்டான்.

"இல்லை ஐயா முகம் குளுமையாக இருக்கிறதே என்று சொல்ல வந்தான்."

"எங்கள் சிந்தனையில் குழப்பமில்லை. அதனால் முகம் தெளிவாக இருக்கிறது. அகமே முகம் என்று நீங்கள் அறியாததா. உள்ளத்தில் அன்பு இருந்தால் முகம் பிரகாசமாக இருக்குமய்யா."

"ஆனால் உங்கள் முகம் இருட்டாக இருப்பதற்கு என்ன காரணம்?" குணலன் கேட்டான்.

"ஏன். என் அகம் இருண்டிருக்கிறதோ."

"இல்லை. நீங்கள் அக்னிக்கு முன்பாக உட்கார்ந்திருக்கிறீர்கள். உங்கள் முதுக்குப் பின்னால் அக்னி இருப்பதால் உங்கள் முகம் இருட்டாக இருக்கிறது அதைச் சொல்ல வந்தேன். மற்றபடி உங்கள் அகத்தைப் பற்றி எனக்கு என்ன அர்த்தம் சொல்ல முடியும். பிரம்மராயர் அவர்களைப் பார்க்க வேண்டும்." கைகட்டி பணிவு விலகாமல் சொல்ல, "சுவாமி தரிசனம் செய்து விட்டு வாருங்கள். பிரம்மராயரிடம் அழைத்துப் போகிறோம்" என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது.

எட்டு கைகளை உடைய இரண்டு முழ உயரத்து காளி சிலையை இரண்டு சிற்பிகளும் உற்றுப் பார்த்தார்கள்.

கல், வேறுவிதமான கல், சிற்பத்தின் அமைதி வேறுவிதமான அமைதி. மிக நுணுக்கமான சிற்பம் என்று சொல்ல இயலாது. புடைப்புச் சிற்பம்தான். காளியின் வாகனமான சிங்கத்தின் உடல் அளவு அதிகம் நீண்டிருந்தது. சிங்கத்தின் முகம் மனித முகமாக இருந்தது. ஆனால் அம்மன் சிலையில் ஒரு ஓயில் இருந்தது. மிக மிக முக்கியமான விஷயம். சிலையினுடைய முகம் மிக வசீகரம். உதடுகளின் விரிவும், கன்னங்களின் செழுமையும், முகவாயின் அழுத்தமும், புருவங்களின் வளைவும், மூக்கின் நீண்மையும், நெற்றியின் வளைவும் மிக அற்புதமாக செதுக்கப் பட்டிருந்தன. முகத்தின் வசீகரத்தால் ஒரு உயிர் துடிப்பு இருந்தது. கருவறைக்குள் ஒரு வெப்பம் இருந்தது. ப்ராண பிரிதிஷ்டை யாரோ மிகக் கவனமாக செய்திருக்கிறார்கள். பலமுறை சண்டி ஹோமம் நடந்தாலும் கோவிலுக்குள் ஒரு தனித்துடிப்பு தெரிந்தது. விழுந்து வணங்கி தீபதரிசனம் முடித்து நெற்றிக்கு குங்குமம் தரித்து வெற்றிலை பாக்கும் பழமும் வாங்கி தட்சணையாக சில செப்புக்காசுகள் வைத்துவிட்டு வெளியே வந்தார்கள்.

ஒரு இருபது வயது அந்தண இளைஞன் அவர்களைத் தன்னோடு வரச்சொன்னான்.

"சிற்பக்கலை பற்றி எனக்குத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று ஆர்வம் இருக்கிறது. சொல்லித் தருவீர்களா."

"உனக்கா, சிற்பக்கலையா. எதற்கு தம்பி. அந்தணருக்கு எதற்கு கல் உடைக்கும் வேலை."

"இதை வெறும் கல் உடைக்கும் வேலையாக நான் நினைக்க வில்லை."

"கல்லுக்குள் இருந்து வேண்டாதவற்றை விலக்கி வேண்டிய வற்றைப் பார்த்தால் அங்கு ஒரு சிற்பம் இருப்பது தெரியும்."

"பார்க்கும் பொழுதே வேண்டாததை விலக்கி வேண்டி யதைப் பார்க்கும் பார்வை வருவது சாதாரண விஷயமா. எனவே தான் அதைக் கற்றுக்கொள்ள ஆசைப் படுகிறேன்."

"கற்றுக்கொண்டு என்ன செய்வாய். கோவில் கட்டுவாயா அல்லது கோவில் பணிக்கு கூலிக்கு வேலைக்குப் போவாயா."

"இல்லை. இரண்டுமேயில்லை. சிற்பக்கலை பற்றி நான் ஒரு புதிய புத்தகம் எழுதலாம் என்றிருக்கிறேன்."

"எதற்கு"

"பிற்பாடு தலைமுறையினருக்கு இது உதவி செய்யுமல்லவா. அதற்காகத்தான் அப்பொழுது என் பெயரும் பேசப்படுமல்லவா அதற்காகத்தான். உங்களில் யாராவது புத்தகம் எழுதியிருக்கிறீர்களா. உங்களுக்கு நேரம் இருக்காது. சிற்பம் செய்யத்தான் முனைப்பு இருக்கும். அதுதவிர அதை எழுதி வைக்க வேண்டும் என்றும் தோன்றாது. உங்களிடம் நான் பேசிப்பேசி அதை நான் எழுதி வைக்கலாம் அல்லவா. சட்டநாதன் சிற்ப சாஸ்திரம் என்று அந்த நூல் சந்திரசூரியர் வரையிலும் விளங்குமல்லவா."

"யாரது சட்டநாதன்."

"நான்தான்"

"அடேயப்பா எழுதி முடித்துவிட்டது போல பேசுகிறாயே."

"ஓரளவு தெரியும். எப்படி ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணமும் இருக்கிறது. ஆனால் முழுமையாகக் கற்றுக் கொள்ளாமல் எழுத்தாணியை ஓலையில் வைக்கக்கூடாது என்பதால் இருக்கிறேன். இது குறித்து அம்பாளிடம் வேண்டிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் இருவரும் வந்து நிற்கிறீர்கள். எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா."

"சட்டநாதா உன் ஆர்வத்திற்கு என் பாராட்டுக்கள். நான் ஒரு சிற்பியே தவிர சொல்லித்தரும் அளவுக்கு வன்மையுடையவன் அல்ல. நீ இதுபற்றி எங்கள் தலைவர் குஞ்சரமல்லன் பெருந்தச்சரிடம் பேசு."

"பேசினேன். இப்பொழுது நேரமில்லை. கோவில் எழுப்பிய பிறகு வா. ஆற அமரப் பேசுவோம் என்று சொல்லிவிட்டார்."

"குஞ்சரமல்வர் ஒதுக்கியபிறகு நாங்கள் உங்களை ஏற்பதா. இது எப்படி நடக்கும்."

"ஐயா. குஞ்சரமல்லர் வயசாளி. நீங்கள் மத்திம வயதுக்காரர். இதோ இவர் இளைஞராக இருக்கிறார். குஞ்சரமல்லருக்கு என் தாபம் தெரியாது போகலாம். உங்கள் இருவருக்கும் என் தாபம் புரியும் என்பதால், உங்களிடமும் என் எண்ணத்தை வெளியிட்டேன். நீங்கள் மறுத்தீர்கள் என்றால் மறுபடியும் வேறு யாரையாவது நிச்சயம் அணுகுவேன். நிச்சயம் அந்தப் புத்தகம் எழுதுவேன்."

"சட்டநாதா... நெஞ்சு தொட்டுவிட்டாய். அந்தணர்கள் சுயநலமிகள் என்று எங்களுள் பலருக்கு அபிப்ராயம். ஆனால் சிற்பசாஸ்திரம் எழுத வேண்டும் என்று ஆவல்படுகிறாயே உன்னை எப்படிக் கொண்டாடுவது."

"நானும் சுயநலமிதான். என் பெயர் சந்திரசூரியர் இருக்கும் வரை விளங்க வேண்டுமென்ற எண்ணத்தில் தான் சிற்ப சாஸ்திரம் நூல் எழுதவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். சுயநலமில்லாதவர் யார். சுயநலம், பொதுநலமும் கலந்தது. அது அவ்விதம் இருப்பதுதான் நல்லது."

"அடேயப்பா மிகத் தெளிவாகப் பேசுகிறாய். சரியென்று சொல்ல எனக்கு உள்ளம் பரபரக்கிறது. ஆனாலும் சொல்லுவதற்கு உண்டான அதிகாரம் என்னிடம் இல்லை. ஆனாலும் உன்னைப்பற்றி குஞ்சரமல்லரிடம் மறுபடியும் பேசுவேன். ஒன்று செய்யேன் சட்டநாதா."

"என்ன."

"தஞ்சை வந்துவிடேன்."

"அதற்காகத்தான் அமண்குடிக்கு வந்திருக்கிறேன்."

"புரியவில்லையே."

"என்னை தஞ்சைக்கு அழைத்துப்போய் ஒரு வேலை கொடுங்கள் என்று பிரம்மராயரிடம் கேட்பதற்காக வந்திருக்கிறேன்."

"கேட்டுவிட்டாயா."

"இல்லை."

"அங்கு வந்து என்ன வேலை செய்வாய்"

"எந்த வேலையானாலும்"

"அந்தணன் கல்தூக்க முடியுமா."

"யாரும் அந்தணரைக் கல்தூக்க விடமாட்டார்கள்."

"பிறகு. என்ன வேலை செய்வாய்."

"பிரம்மராயரிடம் ஒற்றறிபவராக இருக்கலாம்."

"என்ன"

இரண்டு சிற்பிகளும் திகைத்தார்கள்.

"ஒற்று வேலை செய்வேனே." என்று அந்த இளைஞன் சொல்ல. இரண்டு பேரும் உரக்கச் சிரித்தார்கள். ஒருவரை யொருவர் தாங்கிப் பிடித்தவாறு சிரித்தார்கள்.

"வைஷ்ணவ தாஸனுக்கு இவ்வளவு பெரிய அவமானத்தை நீ உண்டாக்கியிருக்க வேண்டாம். ஒற்றறிவது எளிதான வேலையா சட்டநாதா, மாட்டிக் கொண்டால் பின்னி எடுத்து விடுவார்கள்.

தயவு செய்து இப்படியெல்லாம் பிரம்மராயரிடம் போய் கேட்டு விடாதே. பிரம்மராயர் ஓங்கி அறைந்து விடுவார்."

"அதைத்தான் அங்குள்ளவர்களும் சொன்னார்கள்."

"எங்குள்ளவர்கள்"

"அங்கே சண்டி ஹோமம் செய்கிறவர்கள்."

"அவர்களிடம் கேட்டாயா."

"ஆமாம்."

"என்ன ஆயிற்று."

"ஒருவன் முதுகில் அறைந்தான். ஒருவன் தலையில் குட்டினான். பிரம்மராயர் வெட்டிப்போட்டு விடுவார் என்று பயமுறுத்தினார்கள்."

"ஐயோ பாவம். சட்டநாதா.. நீ வளர்ந்திருந்தாலும் அறியாப் பிள்ளையா[illegible]கிறாய்."

"ஆனால். என் அடிப்படை எண்ணம் எழுதுவது. சிற்ப சாஸ்திர நூல் எழுதுவது."

"இல்லை. அதுகூட அடிப்படையான எண்ணம் இல்லை."

இலத்தி வேகமாக திருத்தினான்.

"என்ன அது."

சட்டநாதன் வெகுளியாகக் கேட்டான்.

"சந்திரசூரியர்கள் இருக்கும்வரை உன் பெயரும் புகழும் நிலைத்திருப்பது அதுதானே முக்கியம்."

"ஆமாம். அதுதான் முக்கியம்."

விழிகள் விரிய அந்த சட்டநாதன் பேச சிற்பிகள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பிரம்மராயர் மாளிகை வாசலில் நின்றார்கள்.

அக்ரஹாரத்தின் மூன்றாவது வீடாக மிகப்பெரிய திண்ணைகளோடு, தூண்களோடும் வெளிப்புற, உட்புற மாடிகளோடும், நீண்ட நடையோடும், கூடத்தோடும், கூடம் எங்கும் ஒளிர்ந்திருக்கிருக்கின்ற அகல் விளக்கோடும், பிரம்ம ராயருடைய வீடு பிரகாசமாய் விளங்கியது.

'உள்ளே போய் எங்கள் வருகையைச் சொல்லி விட்டுவா."

இலத்தி கட்டளையிட சட்டநாதன் வேகமாய் உள்ளே போனான்."

"இவனை நாம் உபயோகப்படுத்திக் கொண்டால் என்ன." என்று குணவனைக் கேட்டான்.

"நானும் அதைத்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். இந்த அந்தணர்களெல்லாம் தஞ்சைக்கு வரத்தான் போகிறார்கள். இவனை முன்னதாகவே நாம் கூட்டிவந்து இவனுக்கு சிற்ப சாஸ் திரம் பற்றிச் சொல்வதாகச் சொல்லி, அதேசமயம் அந்தணர் களோடு பழகவிட்டு, எந்த அந்தணர்கள் என்ன பேசுகிறார்கள் என்றுநாம் தெரிந்து கொண்டால் என்ன. இன்று வந்து எவ்வளவு தெரிந்து கொண்டோம். இது நமது பெருந்தச்சருக்கு எவ்வளவு உதவியாக இருக்கும். அவனை நாம் வேலைக்கு அமர்த்திக் கொள்ளலாம். அதுதான் சரியாகத் தோன்றுகிறது."

குணவன் சொல்ல இலத்தியும் தலையாட்டினான்.

"என்ன சட்டநாதா." பிரம்மராயர் நாலு பேருக்கு நடுவே அமர்ந்தவர் கேள்வி கேட்டார்.

சட்டநாதன் அலருக்கருகேபோய் மண்டியிட்டுக் கொண் டான். அவர் காதோரம் பேசினான்.

"நீங்கள் சொன்னது சரி. அவர்கள் இருவரும் சிற்பிகள். ஆனால் பதுங்கி வந்து குளக்கரையில் உட்கார்ந்து அந்தணர்கள் பேசுவது அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். பிறகு பிரிந்து வேறுபக்கம் போய் மறுபடியும் குதிரை ஏறி அப்பொழுது தான் வந்ததுபோல் நடித்தார்கள்."

"ஏதாவது அத்து மீறிப் பேசினார்களா."

"இல்லை. ஆனாலும் சிற்சில இடங்களில் அத்துமீறல் இருந்தது. ஆனாலும் சோழதேசத்தின் மீது அக்கறையாகத்தான்

*பேசினார்கள். சோழதேசத்திற்கு எதிராக யாரும் எதுவும் சொல்லிவிட வேயில்லை.”*

*“நல்லது. உன்னுடைய விஷயத்தைச் சொன்னாயா.”*

*“ஆமாம். சிற்பசாஸ்திரம் எழுதவேண்டும் சந்திரசூரியர் உள்ளவரை என் புகழ் இருக்க வேண்டும் என்று சொன்னேன். அவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள். ஒருவேளை என்னை வேலைக்குக் கூப்பிட்டாலும் கூப்பிடலாம்.”*

*“அவர்கள் கூப்பிடாவிட்டாலும் நீ வேலைக்குப்போ. சிற்பிகள் என்ன செய்கிறார்கள் என்று எனக்குச் சொல்.”*

*“உங்களைப் பார்க்க வேண்டுமென்கிறார்களய்யா.”*

*“இதோ வருகிறேன். உனக்கு செலவுக்கு காசு வேண்டு மல்லவா.”*

*“ஆமாம் ஐயா.”*

*ஒரு மரப்பெட்டியிலிருந்து செப்புக்காசுகளும், தங்கக் காசுகளும் எண்ணி அவன் கைகளில் கொட்ட, அவன் அதைக் கண்ணில் ஒற்றிக் கொண்டான். அதை ஓரமாக வைத்துவிட்டு விழுந்து வணங்கினான். காசு எடுத்து இடுப்பு முழுவதும் சொருகிக் கொண்டான். அவனுக்குள் தெம்பு வந்தது. அவன் முகம் மாறியது.*

*“கெட்டிக்காரனாக மாறாதே. அப்பாவியாய் இரு.”*

*சட்டென்று அவன் முகமாற்றத்தைக் கவனித்துச் சொன் னார். மறுபடியும் அவன் தன் முகத்தை மாற்றிக் கொண்டான்.*

*பிரம்மராயர் முன்னே நடக்க பின்தொடர்ந்தான்.*

*“அப்படியா.. பெரும்கூடம் தேவைப்படுகிறதா. மாதிரிக் காகவா. ஒரு சாண். ஒரு கோல் என்றாலும் கோவில் எத்தனை முழம் வரும்.”*

*“நல்ல உயரம் வரும்.”*

*“எனக்குப் புரிகிறது. ஆனால், நண்பர் குணவன் சொல்வது போல ஒரு விரல் அகலம், ஒருகோல் என்பதுதான் சரியான விகிதமாக இருக்கும். ஒருமாதிரி அப்படித்தான் செய்யப்பட வேண்டும்.”*

*“மாதிரியே தனிக்கோவிலாகி விடக்கூடாது. எதற்காக மாதிரி. மாதிரி செய்யப்பட வேண்டியதின் அவசியமென்ன.”*

*"ஐயா சாரம் எப்படி எடுத்துப் போகிறோம் என்பது பெரும் பிரச்சினையாகவும், கேள்விக்குறியாகவும் இருக்கிறது. அந்த இடம் இன்னும் திடப்படவில்லை. அந்த யோசனைகள் எவ்வளவு தூரம் செயலாற்ற முடியும் என்று தெரியவில்லை."*

*"கடவுளே என்ன பேசுகிறீர்கள். இப்பொழுதே தடுமாறி னீர்கள் என்றால் வேலை செய்யும்போது எவ்வளவு தடுமாறு வீர்கள்."*

*"பிரம்மராயரே, தயவுசெய்து ஒன்று புரிந்து கொள்ளுங்கள். இப்படியொரு கோயில் இதற்கு முன்பு கட்டியதில்லை. என்ன விதமான உபகரணங்கள் தேவையென்பது இன்னமும் எங்களுக் குத் தெளிவாக இல்லை. இதில் எல்லாவிதத் தவறுகளும் நிகழக் கூடும் என்று அச்சத்தோடும், கலனத்தோடும் செய்து கொண் டிருக்கிறோம். மிகத் தெளிவாக, மிகத் தெளிவாக என்று நீங்கள் எச்சரித்தாலும் எங்களுடைய தலைமை பற்றி நீங்கள் யோசிக்க வேண்டும். முன்பின் அனுபவமில்லாமல்தான் சகலரும் இதில் இறங்கியிருக்கிறோம்."*

*"உங்களுக்கே தடம் தெரியவில்லை என்றால் என் தலைமை எப்படித்தம்பி."*

*"எல்லோரும் ஒருநிலையில்தானய்யா இருக்கிறோம். பிரச் சினைகள் வரும்போது எதிர்கொள்ள வேண்டிய அலசியத்தில் இருக்கிறோம்."*

*"உங்களுக்கு வேண்டிய அத்தனை உதவிகளும் செய்யப்படும். எப்படி உதவிகள் வேண்டும். நான் மரத்தச்சர்களையும், கட்டடக் கலைஞர்களையும் அனுப்பி எழுப்பித்தரவா. காசு கொடுக்கவா."*

*"அதை நீங்கள் தீர்மானம் செய்ய வேண்டிய விஷயம். இப்படி செய்யுங்கள் என்று சொல்ல எனக்கு எந்தவிதத் தகுதியும் இல்லை."*

*"அப்படி சொல்லாதே குணவன். சக்ரவர்த்தி உன்னை எப்படி பாராட்டுகிறார். நீ விஷயம் தெரிந்தவன் என்பதை அவர் எவ்வளவு தெளிவாகச் சொல்கிறார். சக்ரவர்த்தி எளிதில் எவரை யும் பாராட்டமாட்டார். அத்தனை பாராட்டையும் அமைதியாக ஏற்றுக் கொண்டிருந்த உன்னை எனக்கு மிகவும் பிடித்தது. பெருந் தச்சர் சற்று சூடானவர். வேகமாக பேசக்கூடியவர். உன்னிடம் அந்தக் குணம் இல்லை. அந்த இளைஞனும் அந்த சபையில் மிக மரியாதையாக நடந்து கொண்டார். உங்களை மறுபடியும் இங்கு சந்தித்தது இறைவனுடைய ஆசிர்வாதம்."*

"உங்களுக்குத் தெரியாத மரத்தச்சரா. யார் யார் எதிவ் நேர்த்தி என்பதை நீங்கள் அறிவீர்கள். எனக்கு வேலைகள் அதிகம் இருக்கின்றன என்பதால் உங்களுக்கு வேண்டிய பொற்காசுகள் கொடுத்து விடுகிறேன். அப்படிப்பட்ட ஒருகூடத்தை நீங்களே கட்டிக் கொள்ளுங்கள். நிலமும் தேர்ந்தெடுங்கள். கூடியவரையில் விவசாய நிலங்களையோ, நந்தவனங்களையோ தொடாது கட்டாந்தரைகளாகப் பார்த்து எடுத்துக் கொள்ளுங்கள். எவ்வளவு காக வேண்டும்."

"முன்னூறு பொற்காசுகள் கட்டடம் கட்டத் தேவைப்படும்."

"நான் ஆயிரம் தருகிறேன். வேறு சில கட்டடங்களும் கட்டிக் கொள்ளுங்கள். வேண்டுமாயின் உங்களுக்கு வீடும்."

"இல்லை. குஞ்சரமல்வப் பெருந்தச்சர் மறுத்து விட்டார். பெரிய கொட்டாரங்கள் போதும் என்கிறார். மாதிரி அமைப்புக் காக செய்யப்பட வேண்டிய இடம். அதனால்தான் கல் கட்டடம் தேவைப்படுகிறது. மழையில் பாதிப்பு வரக்கூடாது."

"எனக்குப் புரிகிறது. ஆயிரம் பொற்காசுகளை இப்பொழுதே வாங்கிக் கொள்கிறீர்களா."

அவர் தன் உதவியாளர்களை அழைத்தார். ஓலை நறுக்கு எழுதிக்கொடுத்தார்.

"இன்னொரு விண்ணப்பமய்யா."

"சொல்"

"இந்த இளைஞன் சட்டநாதன் சிற்பசாஸ்திரம் பற்றி புத்தகம் எழுதவேண்டும் என்று சொல்கிறான். மிக ஆவலாக இருக்கிறான். இவனை நாங்கள் அழைத்துப் போகலாமா."

"இவன் நல்லபையன். கடும் உழைப்பாளி. ஆனால், சிற்பசாஸ்திரம் எழுதும் அளவுக்கு திறன் உள்ளவனாக எனக்குத் தெரியவில்லையே. அம்பி, என்னடா இது. ஏன் அவர்களிடம் இப்படியெல்லாம் கேட்கிறாய்."

"எனக்கு வெகுநாளாக ஆசை ஐயா."

"என்ன வேதபாடம் படித்திருக்கிறாய்"

"ரிக், யஜுர் இரண்டும் பல சாகைகள் செய்திருக்கிறேன். ஸ்ரீ ஸூக்தம் சொல்வேன். இந்தச் சண்டி ஹோமம் கூட சியாமளை யாக பூஜை செய்வதற்காக இங்கு வந்திருக்கிறேன்.

அம்பாளை ராஜ மாதங்கியாக வரித்து பூஜிப்பது என் வழக்கம். பத்து வயதில் மந்திரஜபம் ஆகியது. பதினோரு வருடமாக செய்து வருகிறேன்."

"அடேயப்பா... கொஞ்சம் விவரமானவன்தான். இவர்களோடு போகிறாயா. சிற்ப சாஸ்திரம் எழுதுகிறாயா."

"நீங்கள் அனுமதித்தால் போகிறேன்."

"என்னடா இது. எனக்கு முன்பாக அவர்களிடம் வருகிறேன் என்று சொல்லிவிட்டு இப்பொழுது என் அனுமதியைக் கேட்கிறாயே. நல்லது. உன் ஆசையில் தவறு இல்லை. அப்படியொரு சிற்பசாஸ்திரப் புத்தகம் எழுதப்பட வேண்டியதுதான். எழுதுவது நீயாக இருந்தாலும் சொல்வது அவர்களல்லவா. எனவே, அது சட்டநாதர் சிற்ப சாஸ்திரமாக வராது. ஆகம சிற்ப சாஸ்திரமாக அது இருக்கும். குஞ்சரமல்லப் பெருந்தச்சருக்கும், குணவன் நித்த விநோதப் பெருந்தச்சருக்கும் அதை சமர்ப்பணமாக்கு. அவர்கள் சொல்படி எழுதியது என்று சொல்லிவிடு."

"சரி ஐயா."

"அவர்களோடு போ. காசு இருக்கிறதா."

"இல்லை ஐயா."

"இவர்கள் கொடுப்பார்கள். வாங்கிக் கொள்."

"நல்லது நமஸ்கரிக்கிறேன்."

அவன் அவரை வலம் வந்து நமஸ்கரித்தான். எழுந்து நின்றான்.

"இந்த சண்டி ஹோமம் முடித்துவிட்டு பிறகு நீ போகலாம். இவர்கள் முன்னால் போகட்டும்."

அடுத்த அரைநாழிகையில் சிறு சிறு மூட்டைகளாக ஆயிரம் பொற்காசுகள் தரப்பட்டன. அவற்றை குதிரையின் சேணத்தின் மீது வைத்துக்கொண்டு குணவனும், இவத்தியும் வந்த வேகத்திலேயே தஞ்சைக்குப் பயணப் பட்டார்கள். போகும் முன் சட்டநாதனிடம் விடைபெற்றுக் கொண்டார்கள்.

விடியற்காலை குஞ்சரமல்லரிடம் நடந்தது அனைத்தையும் விவரித்துவிட்டு பொற்காசுகளைக் கொடுத்துவிட்டு உறங்குவதற்குப் போனார்கள்.

சோழ தேசம் சுபிட்சமடைய வேண்டும். சோழ தேசத்திற்கு உள்ளும் புறமும் இருக்கின்ற எதிரிகள் அனைவரும் அழிய வேண்டும் என்று அமண்குடியில் அஷ்ட தசபூஜ துர்க்கையின் முன்னால் சண்டிஹோமம். விரிவாய் விமரிசையாய் நடந்தது. அதேநேரத்தில் வாராஹியும், விடிந்த பிறகு ராஜசியாமளா யாகமும் நடந்தது. நன்றாக வெளிச்சம் வந்தபோது பூரணாகுதி செய்து முடித்து அந்தணர்கள் தட்சணையோடு நகர்ந்தார்கள்.

போர் என்பது மாற்றரசரோடு ஏற்படுகின்ற கைகலப்பு மட்டுமல்ல. ஒவ்வொரு மகத்தான விஷயமும் ஒரு போர் போலத்தான்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவருடைய இந்தப் பெரிய கற்றளியும் ஒரு போர் முனைப்போடுதான் துவங்கியது.

சிற்பிகளுக்கு ஆயிரம் பொற்காசுகள் வழங்கி பெரும் கட்டடம் ஒன்று கட்டிக் கொள்ள பிரம்மராயர் அனுமதி கொடுத்திருக்கிறார் என்பது இரண்டாம் நாளே தெரிந்து போயிற்று.

தானியத்தைக் கொள்முதல் செய்து நெல்லை அவித்து அரிசியாக்கி வியாபாரம் செய்கிற வணிகர்கள் அன்று இரவு ஒன்று கூடிப் பேசினார்கள்.

"எல்லாப் பக்கமும் நல்ல மழை. விளைச்சல் அமோகமாக இருக்கிறது. ஆடு, மாடுகளும் நன்கு பால் கறக்கின்றன. செழுமை யாக இருக்கின்றன. பொற்காசு கொண்டு வந்து குவித்துக் கொண்டிருக்கிறார்கள். சிற்பிகளிடம் காசு தாராளமாகப் புழங்கு கிறது. நாம் லாபம் பார்க்க நல்ல நேரம். ஒரு பொற்காசுக்கு மூன்று கூடை அரிசி என்று இருந்தது. இப்பொழுது இரண்டரை கூடை தான் என்று சொல்லிவிடு. பருப்புகளையும் விலையேற்று. மூன்று காசுக்கு ஒரு எருமை. இரண்டு காசுக்கு பசு. ஒரு காசுக்கு மூன்று ஆடுகள் என்று சொல்லிவிடு. ஆடைகள் வாங்குவதில் எல்லாரும் முனைப்பாக இருக்கிறார்கள். காசு புழங்குவதால் உடைகளுக்குத் தாவுகிறார்கள். எனவே உடைகள் விலையை இன்னும்கூட உயர்த்தலாம். நெசவாளர்களைப் புதிய தறிகளைக் கட்டச்சொல். மரத் தச்சர்களைக் கொண்டு போய் அவர்களுக்கு உதவி செய்யச்சொல். மதுரையிலிருந்து துணிகள் கொண்டு வா. மயிலையிலிருந்து வெங்கலப்பாத்திரங்களும், பித்தளைப் பாத்திரங்களும் கொண்டுவா. மயிலை திருவல்லிக்கேணி பொற் கொல்லர்கள் மிக நேர்த்தியாய் வேலை செய்வார்கள். பொன் எடுத்துக் கொண்டு போ. நகையாகக் கொண்டு வா.

திருமயிலை போவதற்கு கடற்கரைப்பாதைதான் நல்லது. சிதம்பரம் வழியாகப் போய் சிதம்பரத்திலிருந்து கடற்கரை வழியாக கடல் மல்லை. திருவான்மியூர். பிறகு திருமயிலை என்று போய் வா. எல்லா இளைஞர்களும் எல்லா பக்கமும் பயணப் படட்டும். வாங்குவதற்கு பொற்காசுகள் இருக்கும் போது கொண்டு வந்து பண்டங்களைக் குவிப்போம். நடு நாட்டிலிருந்து இரும்புக்கம்பிகள், கற்பாறைகள், உருகலன்கள் என்று பலதும் கொண்டு வா. ஆச்சாரிகளை இடைவிடாது மரப்பொம்மை களைக் கொண்டு வரச்செய். வேளாளப் பெண்டிர்களுக்குக் காசு கொடுத்து நல்ல தின்பண்டங்கள் தயார் செய்யச் சொல்லி எல்லாவற்றையும் நாமே மொத்தமும் வாங்கி சில்லரையாக விற்கலாம்.

உள்ளாலை கடைத்தெரு ஏற்கனவே பெருத்து விட்டு, புறம்படியிலும் கடைத்தெருக்கள் வந்துவிட்டன. உள்ளாலை கடைத்தெரு விஸ்தாரமாகிக் கொண்டே போகிறது. நல்ல வியாபாரம் நடக்கும். விலையை அவ்வப்போது ஒன்றுகூடி தீர்மானம் செய்து கொள்வோம்.”

அவர்கள் சந்தோஷமாகப் பிரிந்தார்கள்.

போர்த்தொழில் போல் நாசம் விளைவிக்காமல் இம்மாதிரி யான பெரும் கோவில் கட்டுவது சமுதாய வளர்ச்சியை. பொருளாதார நிமிர்வை, குதூகலத்தை ஜனங்களுக்கு ஏற்படுத்தி யது.

மரத்தச்சு இளைஞர்களான சிலர் ஒன்று சேர்ந்து வினோத மான பொம்மைகளைச் செய்தார்கள்.

ஒரு விதூஷகன் இரண்டுதட்டைகளுக்கு நடுவே சுற்றுவதான ஒரு பொம்மையை ஒருவன் செய்து கொண்டு வந்தான். அதையே கிளியாக ஒருவன் மாற்ற அதையும் பலர் ரசித்தார்கள். எகிறுகிற சேவல், ஊதல், பனை ஓலையில் செய்த கிலுகிலுப்பை, பல்வேறு முறையில் துள்ளித்துள்ளி ஆடும் நாட்டிய பொம்மைகள். உருண்டு ஆடும் மாயிலட்டி பொம்மைகள், பந்துகள் என்றெல் லாம் கண்டு பிடித்தார்கள். அங்கு எது வைத்தாலும் விற்றது. எல்லோரிடமும் பொற்காசுகள் இருந்தன.

தேவரடியார்கள் உட்கார்ந்து பாடல்கள் எழுதி நட்டுவம் அமைத்து புதிய நாடகக் கூத்துகள் செய்தார்கள். அவைகளைத் தொடராக நடித்தார்கள். கூத்துப்பார்க்க வந்தவர்களை விதூஷ

கள் வரவேற்று காசு கொடுத்து விட்டு நாடகங்கள் பாருங்கய்யா என்று கைகூப்பினான்.

அவன் நீட்டிய கப்பரையில் நிறைய காசுகள் வந்தன. காசு கொடுத்தவருக்கு முன்பகுதியில் இடம் கிடைத்தது. அல்லாதவருக்கு பின்பகுதியில் நின்று பார்க்க தனியிடம் ஒதுக்கினார்கள். எல்லோரும் முன் பக்கம் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டு நாடகம் பார்க்கவே விரும்பினார்கள்.

அர்ஜுனன் தபஸ் போல, தட்சனுடைய யாகத்தை சிவன் அழித்ததும் நாடகமாகச் செய்யப்பட்டது. பல்வேறு இரவுகள் அந்த நாடகங்கள் நடந்தன. பிறகு வேறு நாடகத்திற்கு மாறினார்கள். அது மன்மதனை எரித்த நாடகமாக இருந்தது. அந்த நாடகத்தை எகிறிக் குதித்து ரசித்தார்கள். ரதியும், மன்மதனும் ஆடிய ஆட்டங்களில் கிறங்கிப் போனார்கள்.

தஞ்சைக்கு நாட்டியமாடுவதற்குப் புதிதாக இரண்டு மூன்று ஆண்கள் வந்தார்கள். அவர்கள் மன்மதனாக வேடம் கட்ட ரதியாக அழகியமங்கை ஆட, சிவபெருமானாக ஒரு ஆண் வேடம் தரிக்க, பார்வதியாக இன்னொரு தேவரடியார் வேடமிட நாடகம் நிஜமானதாக இருந்தது. நாடகம் முடிந்து வேஷத்தோடு அவர்கள் வீட்டிற்குத் திரும்பினார்கள். வழியில் பல ஜனங்கள் விழுந்து கும்பிட்டார்கள். கலைஞர்களுக்கு மிகப் பெரிய மரியாதை தஞ்சையில் ஏற்பட்டது. பகல்நேரம் உள்ளாலைகளுக்கு உடைகள் வாங்கப் போகும்போது ஜனங்கள் அவர்களைச் சுற்றிக் கொண்டு வேடிக்கைப் பார்த்தார்கள். வணிகர்களுக்குக் கோபம் வந்தது.

என்னய்யா இது கூத்தாடிகளை நகருக்குள் நுழையவிட்டு வேடிக்கை பார்க்கிறீர்கள் என்று அதிகாரிகளைக் கடிந்து கொண்டார்கள்.

இந்தச் சண்டைகள் தளிச்சேரி பெண்டிர் காதிலும் விழுந்தன.

## 127

**ச**ண்டிஹோமம் முடிந்து இரண்டு நாள் கழித்து அமண்குடி அதே துர்க்கைக் கோவிலில் இருபத்தோரு வேத வித்துக்களை வைத்து பிரம்மராயர் தானே முன் நின்று காயத்ரி ஹோமம் செய்தார். சோழதேசம் முழுவதும் சாந்தி செய்ய வேண்டு


மென்று, உள்ளங்கை அளவு எள் ஒருவர் போட்டு ஒரு கரண்டி நெய்விட்டும், இன்னொருவர் அன்னம் போட்டும் ஹோமம் ஆரம்பித்தார்கள்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் ஆயுள் விருத்திக்காக அருகம்புல்லை வேறொருவர் நெய்யில் தோய்த்து அமர்ந்து அக்னியில் இட்டார்.

பலத்திற்காக க்ருதமாவா புஷ்பமும், போகத்திற்காக கருநெய்தல் புஷ்பமும், அரசாட்சி வளர வில்வதனங்களும், சாம் ராஜயம் பெற தாமரை மலர்களும், செல்வம் வேண்டுமென்று மகிழம்பூ, மல்லிகைப்பூ, ஜாதிப்பூ என்று, தானியம் நன்கு விளைய வேண்டுமென்று நெல்லாலும், செளபாக்கியம் நன்கு வேண்டுமென்று குங்குமப்பூவாலும், மன்னன் தேஜஸ்வியாக இருக்க வேண்டுமென்று பசு நெய்யாலும், எதிரிகள் அழிய வேண்டுமென்று ஹோமக்குச்சிகளாலும், எண்ணெயில் போட்ட உப்பினாலும் ஹோமம் செய்தார்கள்.

சூரிய உதயத்திலிருந்து சூரிய அஸ்தமனம் வரையில் மூன்று நாள் காயத்ரீ ஹோமம் நடந்தது.

சோழதேசத்தின் சேனாதிபதியான அமண்குடி ஊரைச் சேர்ந்த கிருஷ்ணன்ராமனான பிரம்மராயர் தகதகவென்று



மின்னும் முகத்தோடு, ஒளிரும் முகத்தோடும் புகையினால் செம்பட்டை அடைந்த தலையோடும், அக்னியால் சிவந்த நெஞ்சோடும் மூலிகைகளினால் மணக்கின்ற உடம்போடும், மஞ்சளும், குங்குமமும், சிதறிக் கிடக்கும் உடைகளோடும் அமண்குடியிலிருந்து குதிரையில் ஏறி பழையாறை வந்தார்.

பழையாறையில் உள்ள அரச குடும்பத்தினருக்கு பிரசாதங்கள் வினியோகித்தார். மாளிகையில் தனி அறையில் அமைதியாகப் படுத்துறங்கினார். தஞ்சையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது பழையாறை பழைய கோட்டை நெருக்கமான வீடுகள் கொண்ட சிறிய தெருக்கள் அதிகம் நிறைந்த நகரம்.

குடந்தை கோயில்கள் நிறைந்த பெரிய ஊர். பழையாறையோ, சோழ அரச குடும்பங்கள் நெருக்கமாக வசித்த சிறிய நகரம். நகரத்தைச் சுற்றி வீடுகள். அந்த வீடுகளில் மறவர் படை, பிறகு அவர்களைச் சுற்றி கோட்டைக்குள் இருக்கின்ற பணியாளர்கள். பிறகு அதைச்சுற்றி அரசகுடும்பத்திற்கான குதிரைகளையும், யானைகளையும் பழக்குகின்றவர்களுடைய குடியிருப்புகள் லாயங்கள்.

கோட்டை நீள்வட்டமாக விரிந்திருந்தது. நீள்வட்டத்திற்கு நடுவே வயல்களும் இருந்தன. கோட்டையின் பின்பக்கம் பெரிய ஆலமரம் இருந்தது. அந்த ஆலமரத்திற்குக் கீழேயுள்ள இடங்களிலும் அதைச் சுற்றியுள்ள வயல்வெளிகளிலும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இறந்தால் புதைக்கின்ற வழக்கம் இருந்தது. அது கிழக்கு பார்த்து மேடை கட்டி வேல்களும், குத்தீட்டிகளும் நட்டு எங்கோ போரில் இறந்த வீரர்களுக்கு வணக்கம் செய்யும் முறை இருந்தது. இங்கிருந்து வெகுதூரம் போய் போரிலே இறந்து போனவருடைய வாளையோ, குத்தீட்டியையோ கொண்டு வந்து அங்கு நட்டுவிடுவார்கள். இறந்து போனவர்களுடைய மனக்கேதம் தீர்க்க அங்கு இரும்பு விளக்கில் எண்ணெய் ஊற்றி பெரும் விளக்கேற்றி வைப்பார்கள். அவன் இறந்த திதியன்றோ அல்லது அமாவாசை, பௌர்ணமியின் போதோ படையலிட்டுக் கும்பிடுவார்கள். மாஹாளய அமாவாசையின்போது நிச்சயம் ஆட்டுக்கடா பலி கொடுப்பார்கள். அதற்குப் பக்கத்தில் சிறிய மேடைகட்டி வழக்குகள் விசாரிப்பதும் நடந்து வந்தது.

பழையாறையை ஊடறுத்து ஒரு ஆறு போய்க் கொண்டிருந்தது. சுந்தரசோழர் காலத்திலேயே அந்த ஆற்றைச் செப்பனிட்டு ஊருக்குள் போக உறுதியான மரங்கள் நட்டு பாலம்

அமைத்து அந்த ஆற்றிலிருந்து கோட்டைக்குச் சிறிய கால்வாயை மதகு வைத்துத் திருப்பியிருந்தார்கள்.

பழையாறையில் வசித்த அரச குடும்பத்தினர் தஞ்சை எவ்வளவு சௌகரியமாக இருந்தாலும், இந்த ஊரின் சுகத்தை விடாமல் இங்கேயே தங்கி விட்டார்கள். தஞ்சை மிகப்பெரிய நகரம். ஆரவாரமுள்ள இடம்.

பழையாறை அப்படியல்ல. அந்தி சரிய ஊர் அடங்கிவிடும். எங்கோ உடுக்கைப்பாட்டோ, இராமாயணக் கூத்தோ நடைபெறுவது காதில் விழும். விடியல் நான்கு மணிக்கெல்லாம் சகலரும் எழுந்து விடுவார்கள். ஐந்தரை மணி வெளிச்சம் வரும் நேரம் அநேகமாக அரச குடும்பத்தினரின் பலபேர் ஆற்றில் நீந்திக் கொண்டிருப்பார்கள். வெய்யில் ஏறுகிற நேரம் வயல்களூடே நடந்து வந்து அரண்மனையில் பூஜை புனஸ்காரங்கள் செய்யத் துவங்குவார்கள். அதிகம் வயசாளிகள் இருப்பதால் அவர்களுக்குத் துணையாக மத்திம வயதுப் பெண்களும், ஆண்களும், கோட்டைக்கு உள்ளேயும், வெளியேயும் குடியிருந்தார்கள்.. வெளியே இருக்கின்ற குடந்தை நகருக்குள் அவ்வப்போது போய் வேண்டுவன வாங்கி சாமிதரிசனம் செய்து திரும்புவதும் அவர்களுக்கு ஒரு முக்கியமான விஷயமாக இருந்தது.

குறிப்பாய் பட்டீஸ்வரத்து தேனுபுரீஸ்வரரும், அம்பாளும் திருச்சத்தி முற்றத்தில் இருக்கும் தழுவக்குழைந்த நாதரும் பழையாறை மக்களுக்கு மிகவும் பிரியமானவர்கள், திருக்கருக்காவூர் ஈசனும், பழையாறை வடதளியில் வாழும் சிவன், ஆவூர் பசுபதீஸ்வரத்து ஐயன் என்று பல்வேறு திக்குகளுக்கு நடந்து போய் தரிசனம் செய்து திரும்ப வருவார்கள். குடந்தைக் காரணோத்துக் கோவிலும் போய் வருவார்கள்.

காவிரிப் பாசனத்தால் கிடைக்கும் இரண்டு போக நெல், கரும்பு, வாழை, எந்நேரமும் பூத்துக்குலுங்கும் மலர்கள் வெய்யிலே தெரியாதவாறு அடர்ந்து இருக்கும் தேவதாரு மரங்கள், இலைகள் நிறைந்த புன்னங்காடு. நிறைய புல்வெளிகள், தென்னந் தோப்புகள், மாந்தோப்புகள் என்று வலம் வருவார்கள்.

விஜயாலயச்சோழருடைய வீரமும், கண்டராதித்தர் மேற்கெழுந்ததும், சுந்தரசோழருடைய அற்புத அழகும், ஆதித்த கரிகாலன் இறந்ததும் பெரிய வசனங்களாய் பேசுவார்கள். நேரில் பார்த்ததுபோல் விவரிப்பார்கள். சக்ரவர்த்தி இராஜராஜ சோழரைத் தோளில் தூக்கி வைத்துக் கொண்டாடிய கிழவர்களெல்லாம் இன்னமும் உண்டு. அவர்களின் நடை தளராமல்,

பார்வை, மங்காமல், மீசையை முறுக்கிக் கொண்டு கம்பீரமாய் வாழ்கிறார்கள். குந்தவையைச் சீராட்டிய பெண்களும்,, குந்தவைக்கும் வந்தியத்தேவருக்கும் நடுவே தூது போன பெண்களும், வானதிக்கு முதல் பிரசவம் பார்த்த பெண்களும் உண்டு. இராஜேந்திரரைத் தோளில் சுமந்தவர்களும், பால் கொடுத்தவளும் என்று பலபேர் உண்டு.

"நீங்களெல்லாம் தான் சக்ரவர்த்தி.. சக்ரவர்த்தி என்று பரிதவிக்கிறீர்கள். குடந்தை திருவிழா காண இந்தத் தோளில் ஏறிதான் உங்கள் சக்ரவர்த்தி வருவார் தெரியுமா. போய் கேட்டுப்பார் என்று பெருமை பொங்கப் பேசுவார்கள். காதில் சிகப்புக் கடுக்கன். இடது கையில் கெட்டியான கங்கணம், தோளில் கேயூரம், இடுப்பில் வெள்ளி அரைஞாண், காலில் கழல், கழுத்தில் தங்கத்தில் கோர்த்த முத்து மாலை. தங்கச்சங்கிலி, விரல் நிறைய மோதிரங்கள் என்று முறுக்கிய மீசையும், உறுதியான முகவாயும், வெற்றிலைக்காவி ஏறிய பற்களுமாய் கிழவர்கள் வலம் வருவார்கள். குட்டி வாடி என்று இப்பவும் சின்னப் பெண்களை மடக்கிப் போட்டு கன்னங்கள் நிறைய முத்தங்கள் கொடுப்பார்கள். இரவு நேர விஷமக்காரர்களும் இங்கு உண்டு. அமைதியான, அதேசமயம் ஆனந்தமான இடம். முதன்முதலாய் இராஜராஜரை பிரம்மராயர் சந்தித்ததும் இந்தப் பழையாறை கோட்டையில்தான்.

அப்போது பிரம்மராயர் மெலிந்திருப்பார். இப்போது இருக்கிற அருண்மொழியைவிட இன்னும் தட்டையாக இருப்பார். பெரிய மண்டையும், அதில் பெரியதாகக் குடுமியும், குடுமியைச் சுற்றிக் கட்டிய தலைப்பாகையுமாய் வந்து நிற்பார். மூங்கில் குச்சியில் பானைக் கவிழ்த்தாற் போல யார் இவன் என்று ஒரு அரசகுலப் பெண்மணி வாய் திறந்து கேட்டும் இருக்கிறார். இவர் குலப் பெயர் சொன்னதால் அட... அந்தணரா என்று அந்தப் பெண் வியந்தாள்.

வாளெல்லாம் வைத்திருக்கிறீரே.. எங்கப் பக்கத்து ஆளோ என்று நினைத்தேன் என்று இன்னும் கேலி அதிகமாகப் பேசினாள். அந்த வாளை வெறுமனே வைத்திருப்பது என்பதைச் சூசகமாகச் சுட்டிக் காட்டினான். ஆனால், அப்போது அருண்மொழி என்றழைக்கப்பட்ட இராஜராஜர் பழுவேட்டரையரோடு மோதுமாறு பணித்ததும், பழுவேட்டரையர் ஆரவாரமாக உரக்கக் கத்திக் கொண்டு தாக்க வந்ததும், தாக்கியவரை கிருஷ்ணன்ராமன் பதிலுக்குத் தாக்கியதும், தடுமாற வைத்ததும்,

தடுமாறிய கோபத்தால் இன்னும் பழுவேட்டரையர் தாக்க வந்ததும், வினாடி நேரத்தில் புரட்டிக்கீழே போட்டதும். தொண்டைக் குழியில் வாள் நுனியை வைத்ததும் ஞாபகம் வந்தன.”

“நேற்று, இரவு அதிகம் குடித்துவிட்டேன். ஆனாலும் உமது வீச்சு அபாரம்தான்.” என்று பழுவேட்டரையர் ஒத்துக் கொண்டார்.

இராஜராஜருக்கு இந்தப் போர் விஷயம் ஆச்சரியமாக இருந்தது.

“என்ன செய்தீர்.. எப்படி கீழே விழுந்தார்.” என்று கேட்க, நிதானமாக வேறு ஒரு வீரனை அருகே அழைத்து கிருஷ்ணன் ராமன் புரட்டிக் காட்டினார்.

அங்கேயே சேனாதிபதி பதவி உயர்வு கிடைத்துவிட்டது. ஆனால், பதவிக்கு வந்த நேரம் சோழதேசத்தில் அரியணைப் போட்டி ஆரம்பமாகி விட்டது.

உத்தமசோழரா... இராஜராஜரா... யார் ஆட்சி செய்வது என்ற கேள்வி வந்துவிட்டது. மக்கள் இராஜராஜர் பக்கம் இருக்க, அரச குடும்பத்தினர் பலபேர் உத்தமசோழரை ஆதரித்தார்கள். ஆனால், சட்டென்று இராஜராஜர் உத்தமசோழர்தான் அரசர் என்று அறிவிக்க, போட்டியின்றி ஒருமனதாக உத்தமசோழர்தான் என்று சொல்லப்பட்டது.

சேனாதிபதியாக இருந்த கிருஷ்ணன்ராமன் நொந்து போனார்.

“நான் நீங்கள்தான் மன்னராகப் போகிறீர்கள் என்று நினைத்து, உங்களிடம் சேர்ந்தேன். இப்பொழுது நான் உத்தம சோழரிடமா பணிபுரிய வேண்டும்.” என்று வேதனையோடு கேட்டார்.

“அரசருக்கு அடங்கியவர்தான் சேனாதிபதி. நான் அரசருக்கு உறவினன் அவ்வளவே. எனக்கு நீங்கள் அடங்க வேண்டிய அவசியமில்லை.” என்று இராஜராஜர் சொல்ல, பிரம்மராயர் தலையசைத்து மறுத்துவிட்டார். “என்னால் உத்தம சோழனிடம் பணிபுரிய முடியாது. எனவே மேற்படிப்புக்காக என்னை சேரதேசத்திற்கு அனுப்பினால் நன்றாக இருக்கும். காந்தளூர்ச்சாலைக்கு அருகே போய் இரண்டு வருடங்கள் போர்முறை பயிற்சிகளைப்பற்றித் தெரிந்து கொண்டு வரலாம் என்று நினைக்கிறேன். நீங்கள் அனுமதி கொடுத்தால் எனக்கு

நிச்சயமாக அங்கு இடம் கிடைக்கும். கடிகையின் மிகச்சிறந்த வீரர்களெல்லாம் சோழதேசம் வந்து விட்டார்களய்யா."

"தெரியும். அதனால்தானா இங்கு இருக்கப் பிடிக்கவில்லை."

"இங்கு வேலை செய்ய விருப்பமில்லை."

"ரவிதாஸனோடு பிணக்கு உண்டா."

"பிணக்கு எதுவுமில்லை. பிடித்தால்தானே பேசுவதற்கு. பேசினால்தானே பிணக்கு வரும். நான் அருகே போய் வணக்கமே சொல்லவில்லை."

"ஏன். அப்படியென்ன வெறுப்பு."

"அவர் பாண்டியனின் ஆபத்துதவி என்று கேள்விப் பட்டேன். சேரதேசத்து நம்பூதிரிகள் யார் காசு கொடுத்தாலும் போய் அவர்களுக்காக காவல் இருப்பார்கள்."

"இது வழக்கம்தானே."

'பாண்டியனிடம் சிறிதுகாலம் வேலை செய்தார். இப்பொழுது உத்தமசோழர் அழைக்க இங்கு வந்து வேலை செய்கிறார்."

"இல்லை. இவர் வெறும் கூலிக்கு வேலை செய்கிற ஆளாகத் தெரியவில்லை. வேறு ஏதோ பெரும் திட்டத்தோடு வந்திருக் கிறார்கள். ஆதித்தகரிகாலர் கொலையில் இவர்களுக்குச் சம்மந் தம் இருக்கும் என்று அச்சம்."

"என்ன ஆதாரம்."

"கொலை நடந்த இரவு இவர்கள் பழையாறையிலோ, தஞ்சையிலோ இல்லை."

"எங்கிருந்தார்கள்."

"தெரியாது."

"இதை வைத்துக்கொண்டு எப்படி சந்தேகப்பட முடியும். அவர்கள் உறையூருக்குப் போயிருக்கலாமல்லவா."

"வேண்டாம். இதுபற்றி விசாரிக்கவும், விவாதிக்கவும் எனக்கு எந்த அருகதையுமில்லை. நான் சேரதேசம் கிளம்புகிறேன் அல்லது உங்களோடே காவல் வீரனாகச் சுற்றி வருகிறேன். உங்களுக்கு ஒரு மெய்க்காவல் படை உண்டல்லவா. அதற்கு தலைமையேற்று நடத்த விரும்புகின்றேன்."

"இல்லை சேனாதிபதி. நீங்கள் சேரதேசம் சென்று பெரும் யுத்தங்களை நடத்துவது பற்றி ஆலோசனை செய்யுங்கள். படிப்பு முடிந்தபிறகு ஒரு அந்தணர்போல ஆயுதங்கள் இல்லாமல் துங்க பத்ரா நதிக்கரைவரை தீர்த்த யாத்திரை போய் வாருங்கள். பிறகு கிழக்கே நகர்ந்துகீழைச்சாளுக்கியம் போய் அங்கிருந்து உங்கள் மூத்தோரான ஒட்டர் தேசம் போங்கள். பிறகு கடற்கரை வழியாக தொண்டை நாடு வந்து. நடுநாடு தாண்டி மறுபடியும் சோழதேசத் திற்குள் வாருங்கள். அதற்குண்டான காசுகள் நான் தருகிறேன். நான்கைந்து வருடங்களுக்குப்பிறகு நீங்கள் என்னிடம் வந்து மெய்க்காவல் படையின் தலைமையை ஏற்கலாம். அதற்குப்பிறகு நமக்கு அதிகம் வேலை இருக்குமென்று நினைக்கிறேன்."

"ஏதோ பூடகமாகப் பேசுகிறீர்களே அருண்மொழி."

கிருஷ்ணன்ராமன் பணிவாகக் கேட்டார்.

"ஆமாம். இப்போதைக்கு அவ்வளவுதான் பேச முடியும். என்னுடைய ஜாதக ரீதியாய் நான் அடங்கியிருக்க வேண்டிய காலகட்டம் இது. குடந்தை ஜோசியர் வெகு நிச்சயமாய் பின் வாங்கும்படி சொல்லியிருக்கிறார். இப்பொழுது நான் என்ன செய்தாலும் தவறுதான் வரும் என்கிறார். ஆறு வருடங்கள் கழித்து மறுபடியும் என்னை வாள் தூக்கச் சொல்கிறார். அது வரை நான் வாள்கூட அணிவதில்லை. நான் வாள் அணிந்தால் தானே பட்டத்துக்குப் போட்டியாக வருவேன் என்கிற பயம் இருக்கும். அந்தப் பயத்தை முற்றிலும் நீக்க வாளோ, வேலோ, அம்போ எதுவும் தூக்கப் போவதில்லை. என் இடுப்பில் திருநீறு பை மட்டுமே இருக்கும்."

"இது துறவா."

"இல்லை. துறவு இல்லை. இது பதுங்கியிருத்தல். என் குடும்பத்தை வலிவு பெறச் செய்தல். எனக்குண்டான மக்களைத் திரட்டுதல் உங்களுடையீ படிப்பும் எனக்கு நன்கு உதவும். பழுவேட்டரையரையே புரட்டிப் போடுகின்ற கெட்டிக்காரரான நீங்கள் இங்கு இருப்பின் உங்கள் கை துறுதுறுக்கும் தேவையில்லா மல் நீங்களும் சண்டையில் இறங்குவீர்கள். எனவே நீங்களும் இப்பொழுது சோழதேசத்தை விட்டு விலகியிருப்பது நல்லது. ஒன்று மட்டும் மறந்து விடாதீர்கள். மேலைச்சாளுக்கியம் வரை குதிரையில் போய் எப்படித்தாக்கினால் நன்றாக இருக்கும் என்பதை யோசித்துவிட்டு வாருங்கள். சேரதேசத்தின் எல்லா இடங்களையும் நன்கு அறிந்து கொள்ளுங்கள். கங்கநாடு, இராஷ்டிரகூடம் எல்லாவற்றையும் உற்றுப் பாருங்கள்

*தடிகைப்பாடி, துளம்பபாடி, குடகுமலை நாடு இவையும் நீங்கள் கண்டுவரவேண்டும். இரண்டு வருட கடிகைபடிப்பு முடித்தபிறகு நான்நினைவில் வைத்து உங்களுக்கு மறுபடியும் பொற்காசுகள் அனுப்புவேன் அல்லது அவசரத்தேவைக்கு நீங்கள் எனக்கு ஓலை அனுப்பினாலும் தருவேன். தங்களுடைய ஆளாக நம்பிக் கைக்குப் பாத்திரமாக ஒரு இளைஞனை எனக்கு அறிமுகப் படுத்திவிட்டுப் போங்கள். நம் இருவருக்குமிடையே அவன் தூதுபோய் வரட்டும்."*

*வைணவதாசன் இங்குதான் அறிமுகமானான். இங்கு தான் அரசரோடும், சேனாதிபதியான கிருஷ்ணன் ராமரோடும் ஒட்டிக் கொண்டான். அருண்மொழிக்கு அவரை அறிமுகப் படுத்தி, இளவரசர் அருண்மொழி கொடுத்த காசில், பெரும் பகுதியை வைணவதாசனிடம் கொடுத்து, "திருமணம் செய்து கொள் வைணவதாஸா. உன் மனைவியையும் போகவர கவனித்துக்கொள். தாய்க்கும், தந்தைக்கும் வேண்டுவன செய். குழந்தையை நல்ல ஆசானிடம் சேர்த்துவிட்டு வேத பாடம் கேட்கவை. உனக்கு ஏதேனும் உதவி தேவையிருந்தால் இளவரசர் அருண்மொழியைப் போய் சந்தித்துக் கேள். எவரிடமாவது கடன் வாங்கு. நான் திரும்ப வந்து அடைத்துவிடுகிறேன். எந்தக் காரணம் கொண்டும் உத்தமசோழனிடம் கையேந்த வேண்டாம்." என்று சொல்லி விட்டுக் கிளம்பினார்.*

*வாழ்வின் அந்த அற்புதமான திருப்புமுனை இந்தப் பழையாறையில்தான் நடந்தது. பழையாறையிலிருந்து குடந்தைக் குப் பிரவேசித்து பிறகு பெருமாளை வணங்கி.*

"நடந்த கால்கள் நொந்தவோ நடுங்க ஞாலம் ஏனமாய்
கிடந்த மெய் குலுங்கவோ இலங்கு மால் வரை அரம்
கடந்த கால் பரந்த காவிரிக் கரைக் குடந்தையுள்
கிடந்தவாறு எழுந்திருந்து பேச வாழி கேசனே.."

*என்று போற்றிப்பாடி வணங்கிவிட்டு வரகூரில் உள்ள தன் மாமனாரின் இல்லத்தில் வசிக்கும் மனைவிக்கு ஓலை எழுதி வைணவதாசனை அறிமுகப்படுத்தி விட்டு, மேற்படிப்புக்காக காடுகள்.. காடுகள்.. காடுகள்.. என்று தாண்டி காந்தளூர்ச்சாலை கடிகைகளை அடைந்தார்.*

*இரண்டு வருடப் போர் பயிற்சி கேடயமும், குத்தீட்டியும் தாங்கி யானைமீது நின்ற வண்ணமே பயணிக்கக் கற்றுக் கொண்டார்.*

இந்த யானைகள்தான் போரின் முடிவைத் தீர்மானிக்கும் என்பது அவருக்கு நன்கு தெரிந்தது. ஒரு யானையைப் பாகன் செலுத்த இடப்பக்கம், வலப்பக்கம், பின்பக்கம் என்று மூன்று வில் வீரர்கள் அமர்ந்து யானையை உபயோகிக்கின்ற முறையை அவர் அறிமுகப்படுத்தினார். குதிரையிலிருந்து சண்டையிட வேண்டுமென்றால் கத்தி நீண்டதாக இருக்க வேண்டும். நீண்ட கத்தியை இடுப்பில் வைத்துக்கொள்ளக் கூடாது. முதுகில் வைத்துக் கொள்ள வேண்டும். இடுப்புக்கு சற்று மேலேயிருக்கிற கத்தி தலைக்கு சற்று மேலே வரும். இரண்டு கைகளாலும் பிடியைப்பற்றி சரக்கென்று இழுத்து எதிரியை வெட்டி விடலாம். வலப்பக்கம் கழற்றி முன்னேறலாம்.

தேசத்தின் தட்பவெப்பநிலை தெரியாமல் போருக்குள் ஒருவன் இறங்கக்கூடாது என்பதும் அங்கு கற்றார்.

இளவரசர் அருள்மொழி தீர்த்த யாத்திரை போங்கள் என்று சொன்னதின் அர்த்தம், படிப்பு முடிந்து தீர்த்த யாத்திரை போனபோது தெரிந்தது. சோழ தேசத்தின் கடற்கரைச் செழுமை, குடகுமலை நாட்டின் அடர்ந்த காடுகள், கங்கநாட்டின் பெரு வெளிகள். மேற்குத் தொடர்ச்சி மலை ஏறி இராஷ்டிர கூடத்திற்குள் நுழையும் போது அந்த நாகரிகம் அவரை அசைத்தது.

துங்கபத்ரா வரை பயணித்துவிட்டு துளம்பபாடி போய் துந்துப்பி நாடு வழியாக வடக்கே நடந்து கீழைச்சாளுக்கியத்திலிருந்து ஒட்டப்பிடாரம் என்ற தன் மூதாதையர்கள் வாழ்ந்த இடத்திற்குப் போனார். எல்லாம் அற்புதமான இடம்தான். ஆனால் சோழ தேசத்தின் நாகரிகம் எங்கும் இல்லை என்பது தெளிவாயிற்று. குடந்தை வந்தபோது இளவரசர் அருண்மொழி பழையாறையில் இல்லை. உடையார்குடிக்குப் போய் விட்டதாகச் சொன்னார்கள். உடையார்குடிக்குச் சென்று பார்த்த போது இளவரசர் மாறியிருந்தார். மெலிந்திருந்தார். முகத்தில் ஒரு சோகம் இருந்தது. கண்களில் ஒரு வெறுமை இருந்தது. ஆனால், மக்கள் அவரை தெய்வமாகப் போற்றினார்கள்.

கிருஷ்ணன்ராமன் மறுபடி சேனாதிபதியாக சோழ சாம்ராஜ்யத்தில் பதவியேற்று. இளவரசர் மெய்க்காவல் படையின் தலைவராகப் பொறுப்பேற்றார். நாடு குழப்பமாக இருந்தது. நாடுபோல் இளவரசர் அருண்மொழியின் வீடும் குழப்பமாக இருந்தது.

கிருஷ்ணன்ராமனாக பிரம்மராயர் தூக்கம் வராமல் தவித்தார். எழுந்து பழையாறையிலுள்ள அரண்மனை உப்பரிகை

யில் நின்று அமைதியாக உறங்குகின்ற நகரத்தைப் பார்த்தார். எங்கோ கோவிலில் நாடகம் முடிந்து பொது மக்கள் திரும்பிக் கொண்டிருந்தார்கள். பொது மக்கள் கலைந்து போனபிறகு மறுபடியும் கூச்சல் சத்தம் கேட்டது.

இப்போது தளிச்சேரி பெண்டுகளும், கூத்தர்களும், நட்டுவனார்களும், வாத்தியக்காரர்களும் பேசிக்கொண்டே போனார்கள். பாதி நிலவின் ஒளி பிரகாசமாய் பழையாறை எங்கும் சிந்தக்கிடந்தது. இலைகளெல்லாம் பளபளத்தன. நிலவொளியில் இன்னும் யாரோ நான்கு பேர் வருகின்ற காலடி ஓசை தெள்ளத் தெளிவாகக் கேட்டது. நாய்கள் குரைத்தன.

ஏன் நாய்கள் குறைக்கின்றன. அன்னியர்களா. ஆனால், குரைத்த நாய்கள் சட்டென்று மௌனமாகி விட்டன. அந்த நான்கு பேரும் வருவதை உற்றுப் பார்த்தபோது; துறவிகள் போல் தெரிந்தது.

என்ன இந்நேரத்திவ் துறவிகள். சமணர்களா, பௌத்தர்களா, அந்த நால்வரும் அரண்மனை வாசலுக்கு வந்து நின்றார்கள். வாசற் கதவும் மதில் சுவரும் அவரை மறைத்தன. வாசற்கதவு திறந்து வெளியே காவலாட்கள் போனார்கள். தீப்பந்தங்கள் நகர்ந்தன. அரண்மனைக்கு வெளியே இருந்த ஓட்டு வீடுகளி லிருந்த மறவர்கள் வந்து சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் விசாரிப்பும் காதில் விழுந்தது.

சட்டென்று ஒரு பரபரப்பு அங்கு அதிகமாகியது. தெரியும்.. தெரியும்.. நீங்கள்தான் நீங்கள்தான் என்று யாரையோ வியப்பது புரிந்தது. யாரது அவருக்குள்ளும் ஒரு பரபரப்பு ஓடியது.

பிரம்மராயர் யாரங்கே என்று உரக்கக் குரல் குடுத்தார். கோட்டைக் காவலனைக் கூப்பிடு என்று அடுத்தபடி கட்டளை யிட்டார். கோட்டைக்காவலன் வந்து நின்றான்.

என்ன யார் வந்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் என்று உரக்க விசாரிக்க, ஐயா சந்திரமல்லி.. சந்திரமல்லி.. சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரின் கடைசி மகள் சந்திரமல்லி வந்திருக்கிறார். மூன்று துறவிகளும் உடன் வந்திருக்கிறார்கள். ஒரு கணநேரம் பிரம்மராயருக்கு உடம்பு ஆடியது. கண்களில் லேசாய் இருட்டு வந்து சரியாயிற்று. தூணைப் பிடித்துக் கொண்டார். சட்டென்று திரும்பினார். இடுப்பு வேட்டியை உதறி சரியாக பஞ்சகச்சம் வைத்து அணிந்து கொண்டார். மேலே இடுப்புத்துண்டு போட்டு இறுக்கினார் மேலே சால்வை

போர்த்திக் கொண்டார். தலைப்பாகை இல்லாமல் சிறிய கைக்கோலுடன் மடமடவென்று கீழே இறங்கி வந்து வாசற்கதவு திறந்தார். பணிப்பெண்கள் எழுந்து கொண்டார்கள். வேலையாட்கள் ஓடி வந்தார்கள். பிரம்மராயர் படிகள் இறங்கி தோட்டம் தாண்டி கோட்டைக்கதவுக்குப் போக கோட்டைக் கதவு விரிய திறக்கப்பட்டது. பிரம்மராயர் எதிரே நிற்க, பத்து தப்படி தாண்டி தனியாய் சந்திரமல்லி நின்றிருந்தாள். வளைய மான தீப்பந்தம் அவள் முகத்தைத் தெளிவாகக் காட்டியது. அது சந்திரமல்லிதான். பிரம்மராயருக்கு தலை ஆடியது.

இது ஏன்.. என்று இரண்டு கைகளையும் கூப்பினார். அருகே நெருங்கினார். ஆனால், சந்திரமல்லி, துறவி, தொடலாமோ. தொட்டு நெற்றியில் முத்தமிடலாமோ மறுபடியும் தயங்கி நின்றார். கைகூப்பினார். சந்திரமல்லியும் கைகூப்பினாள்.

பிரம்மராயரே என்று குரல் தழுதழுக்க அழைத்தாள். அருகே நெருங்கி வந்தாள். மண்டியிட்டு பிரம்மராயரின் கால்கள் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

பௌத்தத் துறவிகள் புத்தரைத்தவிர வேறு எவரையும் வணங்குவதில்லை.

பிரம்மராயர் திகைத்தார்.

"தாயே வரவேண்டும். உங்கள் வருகை நல்வரவாக வேண்டும். ஏன் இந்த நேரத்தில்.. யார் இவர்கள்.. உள்ளே வாருங் கள் தாயே. வரலாமல்லவா அல்லது வெளியே தங்குவதற்கு ஏற்பாடு செய்யட்டுமா."

"நான் புத்தபிட்சுனி அல்ல. அந்த வேஷத்தைக் களைந்து விட்டேன். ஆனாலும் வேறு புடவை இல்லாததால் அதையே உடுத்திக் கொண்டு வந்து விட்டேன். அதேபோல இவர்களும் என்னைப் பின் தொடர்ந்து வந்துவிட்டார்கள். இவர்களும் புத்த மதத்தை விட்டு நகர்ந்துவிட்டார்கள்."

"வாருங்கள். உள்ளே வந்து பேசலாம் வாருங்கள்."

"சந்திரமல்லிக்கு அதிகம் இப்போது பேசமுடியாது. மிகுந்த களைப்போடு இருக்கிறார்கள். குடந்தை வந்து சேருவதே பெரும்பாடாகி விட்டது. குடந்தைக்கு வந்ததும் களைத்து விட்டார்கள். பழையாறையைப் பார்த்துத் தான் தீருவேன் என்று இந்த இரவில் கல்லும், முள்ளும் பார்க்காமல் நடந்துவந்தார்கள்."

பின்னால் இருந்த புத்தபிட்சு மெல்லிய குரலில் பேசினார்.

அவனையும் உற்றுப் பார்த்தார். மூவரையும் உள்ளே வரச்சொன்னார் தீப்பந்தங்கள் அதிகம் ஏற்றப்பட்டன. விளக்குகள் கொண்டு வரப்பட்டன. பணியாட்கள் நின்றார்கள். அரசகுடும்பத்தின் வாரிசைத் தெரிந்து கொண்டார்கள்.

"நல்லது. இது என்னுடைய அறை. இங்கு நீங்கள் தூங்குங்கள். நான் கீழே இருக்கிறேன். ஆண்களுக்கு வேறு இடம் தருகிறேன்." அவர்களுக்கு வேறு இடம் காட்ட மூன்று பெண்கள் பிரம்ம ராயரின் அறைக்குள் நுழைந்து வேகமாக படுக்கைகளைத் தயார் செய்து, குடிப்பதற்குப் பசும்பால் கொடுத்து சந்திரமல்லியை வெகுகாவம் முன்பு, பௌத்த மதத்தில் சேர்ந்தவளைக் கட்டிலில் படுக்க வைத்தார்கள். கால் பிடித்தார்கள். கை கால் வலி போவ தற்கு தைலங்கள் தடவினார்கள். அகில் புகை போட்டார்கள். தூக்கம் வருகிறது என்று சொல்லப்பட்டது. உடன் வந்த துறவிகளுக்கு அவர்கள் அறியாமல் காவல் ஏற்பாடு செய்துவிட்டு பிரம்மராயர் வேறு அறையில் படுத்துக்கொண்டு தூங்கினார்.

என்னமோ விசேஷமாக நடைபெறப்போகிறது என்று உள்மனம் சொல்லியது. அரசர் கோவில் கட்டும் இந்த நேரத்தில் சந்திரமல்லி வந்தது சரியா. அரசரின் மனோநிலை இதனால் பாதிக்கப்படுமா. சிந்தித்தபடியே பிரம்மராயர் எழுந்தார். காலைக்கடன்கள் முடித்தார். பின்னே திருப்பிவிடப்பட்ட கால்வாயில் இறங்கி இரண்டு பணியாட்கள் உதவி செய்ய குளித்தார். திருமண் தரித்து காயத்ரீ ஜபம் செய்தார். அரிசிக் கஞ்சியைக் கொதிக்கும் பாலில் கலந்து தேன்விட்டு ஆற்றிக் குடித்தார்.

சந்திரமவ்லிக்காக காத்திருந்தார். சந்திரமல்லி நன்கு தூங்குவதாகத் தெரிந்தது. சந்திரமல்லியின் கால்கள் வீங்கியிருப்ப தாக ஒரு சேடி சொல்ல, பழையாறை வடதளியிலுள்ள வைத்தியருக்கு ஆள் அனுப்பினார். வைத்தியர்கள் வந்து காத்துக் கொண்டிருந்தார்கள்.

சந்திரமல்லி கண் விழித்தாள். கஞ்சி குடித்தாள்.

வைத்தியர் காலைப் பரிசோதித்துவிட்டு ஒன்றுமில்லை. விஷக்கற்கள் இரண்டு மூன்று காயப்படுத்தியிருக்கின்றன. அத னால்தான் வீக்கம். விஷ முறிவிற்கு மருந்து தருகிறேன். தேனில் குழைத்து மருந்து தர, விழுங்கிவிட்டு மெல்லப் படியிறங்கி பிரம்மராயரை நோக்கி வந்தாள். மறுபடியும் நமஸ்கரித்தாள். அவருக்கு எதிரேயுள்ள ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள்.

பிரம்மராயருக்கு வியப்பாக இருந்தது.

"அம்மா.. தங்குவதற்கு வந்திருக்கிறீர்களா. பார்த்துவிட்டுப் போவதற்கு வந்திருக்கிறீர்களா."

பரிவோடு கேட்டார்.

"நிரந்தரமாய் இங்கேயே தங்குவதற்கு வந்திருக்கிறேன்."

"இங்கே என்றால்... பழையாறையிலா.'

"இல்லை. என் தந்தை எங்கிருக்கிறாரோ அந்த இடத்தில் தங்க உத்தேசம்."

"உன் தந்தை ஆடிப்போய் விடுவாரம்மா."

"நானும் ஆடிப்போய்தான் கிடக்கிறேன். என் தந்தையை நான் நோகடித்துவிட்டேன். அவருக்கு நல்லது செய்ய வேண்டும் என்று வந்திருக்கிறேன்."

"என்னம்மா நடந்தது. ஏன் இத்தனை கசப்பு."

"ஏமாற்றி விட்டார்கள்."

"யார்."

"யாரைச் சொல்ல. ஏமாந்தது நான். மற்றோரைச் சொல்வதில் என்ன புண்ணியம்."

சந்திரமல்லி நீண்ட பெருமூச்சு விட்டாள்.

"உங்களுக்கு என்னுடைய காதல் ஞாபகமிருக்கிறதா."

சற்று கேலியான சிரிப்புடன் பிரம்மராயரை நோக்கிக் கேட்க, பிரம்மராயர் கண்கள் மூடிக் கொண்டார். ஆம் என்று தலையசைத்தார்.

"காந்தளூர்ச்சாலை படையெடுப்புக்குப்பிறகு நடந்த கதை இது. இளவரசர் அருண்மொழி சக்ரவர்த்தியாக பட்டமேற்று சக்ரவர்த்தியான முதலாம் ஆண்டுக்குள் காந்தளூர்ச்சாலையில் படையெடுப்பு நடத்தி ரவிதாஸனை, பரமேஸ்வரனை நாடு கடத்தி வீரமுழக்கம் செய்தபிறகு அடுத்தது கங்க தேசத்தின் மீதும் நுளம்பபாடியின் மீதும் படையெடுக்கத் திட்டமிட்டு கீழைச் சாளுக்கியம் போய் அங்குள்ள மன்னர்களோடு பேசி ஒப்பந்தம் செய்து கொண்டு மறுபடியும் சோழதேசம் வந்து பெரும்படையைத் திரட்ட ஆரம்பிக்கும் போது வீட்டில் நடந்த குழப்பம் அது.

கீழைச்சாளுக்கிய மன்னர் விமலாதித்தரை மூத்த பெண்ணுக்கு மணம் செய்து கொடுத்து விட்டு இராஜேந்திரனுக்கு இளவரசு பட்டம் கட்டியபிறகு மூன்றாவதாகப் பிறந்த சந்திரமல்லியைப் பற்றி எந்த யோசனையும் செய்யாமல் அவள் நன்கு வளரட்டும் என்று விட்டேத்தியாகச் சொல்லி கங்கபாடி நோக்கி படை எடுத்த போது சந்திரமல்லி இங்கே ஒரு இளைஞனோடு பேசிப் பழகி காதலிக்கத் துவங்கினாள்.

அந்த இளைஞன் அரச குலத்தலன். தொண்டை நாட்டைச் சேர்ந்தவன். சிற்பம், கவிதைகளில் ஆர்வமுள்ளவன். நன்கு பாடுபவன். சித்திரம் வரைபவன், திருவலிதாயத்திலிருந்து சோழ மன்னருக்குக் கட்ட வேண்டிய கப்பமாக நெல்லும், பொன்னும் கொண்டு பழையாறைக்கு வந்தபோது அதை வாங்குவதற்கு ஆளில்லை.

சக்ரவர்த்தி பத்து நாட்களில் வந்து விடுவார். எனவே தங்கிவிட்டுப் போகும்படி அரண்மனையில் இருந்த கிழவர்கள் கேட்டுக்கொள்ள அந்த இளவரசன் சரியென்று தலையசைத்தான்.

பட்டமகிஷி பழையாறையில் இருக்க, பஞ்சவன்மாதேவி அரசருடன் போயிருந்தாள். பட்ட மகிஷியோடு பேசிச் சிரித்த அந்த இளைஞன் தன்னுடைய கவிதையாலும், கதையாலும் அவரை பரவசப்படுத்த, அதேவிதமாக சந்திரமல்லியோடும் பேசி வாழ்க்கையைப் பற்றி பல்வேறு விஷயங்கள் சொல்லி, அவன் பயணப்பட்ட ஊர்களின் கதைகளைச் சொல்லி அவளைத் திகைக்க வைத்தான்.

அவனின் சகல செய்கைகளாலும் கலரப்பட்ட சந்திரமல்லி அவனைக் காதலித்தாள்.

வாழைமட்டைகளை இணைத்து சதுரவடிவமானதெப்பம் செய்து அதில் ஏறி அவன் பயணப்படுவதைப் பார்த்து அவளும் அதில் பயணப்பட வேண்டும் என்று ஆசைப்பட அவளை நிற்க வைத்து அவன் நீண்ட கோல் செலுத்தி அந்தப் படகில் அவளை அழைத்துப் போனான். இவையெல்லாம் ஊர் மக்களால் பார்க்கப்பட்டன. இராஜேந்திரசோழர் வந்தபோது அவருக்கு இவை தெரிவிக்கப்பட்டன.

இராஜேந்திரர் கோபமானார். இயல்பிலேயே முரட்டுத் தனமும், கோபமும் உடைய இராஜேந்திரர் தொண்டை நாட்டு இளவரசனை இடுப்பு வேட்டியைப் பிடித்து உலுக்க, அவனுக்கு பதிலுக்கு அடிக்கத் தெரியவில்லை.

நிற்காதே... ஓடிப்போ என்று அவனைத் துரத்திய போது சந்திரமல்லி குறுக்கே வந்து நின்றாள். இராஜேந்திரருடன் பெரிதாகச் சண்டையிட்டாள்.

காதலன் மீது கை வைத்தால் உன்னைக் கொலை செய்வேன் என்று வாள் உருவிப் பாய்ந்தாள்.

சோழ வம்சத்தின் இன்னொரு சோகமான கதை அங்கே துவங்கியது.


# 128

தீபங்களைத் தூண்டிவிட்டு, அகிற் புகை குண்டத்தைக் கிண்டிவிட்டு, பணிப்பெண்கள் சாளரக் கதவுகளைத் திறந் தார்கள்.

வெளியே அடிக்கின்ற குளிர்காற்று உள்ளுக்குள்ளே மெல் லிய வெப்பத்துடன் சுழன்ற அகிற்புகை இதமாக இருந்தது. பிரம்மராயர் சந்திரமல்லியையே திகைப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்.

உத்தமசோழர் பட்டத்துக்கு வந்த ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு சந்திரமல்லி பிறந்தாள். சந்திரமல்லி பிறந்தபிறகு அரசரின் சிவபக்தி அதிகம் கூடியது. நம்பியாண்டார் நம்பி யோடு அவர் தொடர்பு அதிகரித்தது.

குழந்தையை மடியிலிட்டுக் கொண்டு பல்வேறு தேவார திருவாசகங்களை நம்பியாண்டார் நம்பி பாட அரசர் காது குளிரக் கேட்டார்.



விமானம் பொன் வேய்ந்ததாகச் சொல்லும் கல்வெட்டு

குழந்தை பாட்டுக்குக் கைகொட்டி தாளம் போடும். சந்திரமல்லி மிக அமைதியான முகம். அதேசமயம் மெல்லிய தாய் ஒரு முதிர்ச்சி தெரியும். பிரம்மராயரை அழைத்து இளவரசர் அருண்மொழி "இங்கு பாருங்களேன். இவளுடைய முகத்தைக் கவனித்தால் எல்லாம் தெரிந்தவள் போலல்லவா உட்கார்ந்திருக்கிறாள். சந்திரமல்லி சாதாரணப் பெண்ணாக எனக்குத் தெரியவில்லை. ஏதோ சாபத்தினால் பூமிக்கு வந்த தேவதை போலவும் எனக்குத் தோன்றுகிறது. எல்லாம் அறிந்த ஒரு பெரிய விஷயம் மனித ஜென்மம் எடுக்க வேண்டும் என்று நேர்த்திக் கடனோடு பூமிக்கு வந்ததாகப் படுகிறது."

"அடடா... வாயை வைத்துக் கொண்டு சும்மாயிருங்கள். குழந்தையைப் பார்த்து சபிக்கப்பட்ட தேவதை என்று எவரேனும் சொல்வார்களா." என்று பிரம்மராயர் பதறிச் சொல்ல, நான் இதை இழிவாகச் சொல்லவில்லை பிரம்ம ராயரே... குழந்தையின் முகத்தைப் பார்த்தால் வாழ்வியல் தத்துவத்தை அறிந்த ஒரு அமைதி தெளிவு, ஞானத்தோடு, இருப்பதாய் எனக்குப்படுகிறது. அதைச் சொன்னேன்."

"குழந்தை குழந்தையாக இருக்கட்டுமே. எதற்கு இந்தத் தெளிவும். ஞானமும், வரவேண்டிய வயதில் வந்தால் போதுமே."

"இல்லை பிரம்மராயரே. இவளைப் பார்க்கும்போது, இவளை மடியில் வைத்துக் கொண்டிருக்கும்போது, இவளைத் தோளில் சுமக்கும்போது நான் வேறு ஏதோ உணர்ச்சிகளுக்கு ஆட்படுகிறேன். எல்லாக் குழந்தைகளும் வாய்விட்டுச் சிரிக்க, இவள் மௌனமாக இருப்பதைக் கண்டு வியந்திருக்கிறேன். நீங்கள் பார்த்ததில்லையா."

இளவரசர் அருண்மொழி சொன்ன பிறகு பிரம்மராயர் சந்திரமல்லியைக் கூர்ந்து கவனித்து அவள் வேறுவிதமானவள் என்பதைப் புரிந்து கொண்டார். சந்திரமல்லிக்குப் பிறகு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்குத் தமக்கையின் நினைவாக குந்தவை என்று இளவரசர் அருண்மொழி பெயர் வைத்தார். முதலில் இராஜேந்திரர் கடைசியில் குந்தவை. நடுவில் உள்ளவர் சந்திரமல்லி. இதனால் நடுவிற் பெண் பிள்ளை என்கிற ஒரு பட்டப்பெயரும் சந்திரமல்லியைத் தொற்றிக் கொண்டது.

அது என்ன சந்திரமல்லி.

மல்லிகையில் ஜாதிமல்லி என்று ஒன்று இருக்கிறது. அது மாலை நேரம் மெல்லிய சிலப்புக் கோடுகளோடு பெரிதாக மலரும். நல்ல நெடியான வாசனை வீசும். சந்திர கிரஹணம் இருக்கின்ற நாட்களில் அந்த மலர்கள் பெரிதாகவும் வாசனை தூக்கலாகவும் இருக்கும். குழந்தையிடமிருந்து ஒரு வாசனை வீசுகிறது. எனவே, இவளை சந்திரமல்லி என்று அழைக்கலாம் என்று அரசர் சொல்ல, அந்தப் பெயர் நிலைத்துவிட்டது. இதுவரை சோழதேசத்தில் எந்தப் பெண்ணுக்கும் இப்படியொரு விநோதமான பெயர் அமைந்ததில்லை.

இளவரசர் அருண்மொழி உத்தமச்சோழரை அகற்றி விட்டு தான் சக்ரவர்த்தியாகப் பதவியேற்றபோது சந்திர மல்லிக்கு வயது பத்து. நல்ல வளர்த்தி. ஊட்டமான சிறுமி. தலைமுடி அடர்த்தி. பெரிய கண்கள், இளவரசர் அருண் மொழிக்கு இருப்பதைப்போலவே வளைவான உறுதியான உதடுகள். சீரான மூக்கு. அழுத்தமான முகவாய்.

“ஊரே கோலாகலத்தில் இருக்கிறது. ஏனடி உர்ரென்று உட்கார்ந்திருக்கிறாய்.”

பட்டமகிஷி வினவ, சந்திரமல்லி முகம் திருப்பி வேறு பக்கம் போனாள்.

மார்கழி மாதம். திருவாதிரை நக்ஷத்திரம். விதம் வித மான காய்கள் போட்டு பெரிய கூட்டாஞ்சோறு சமைக்கப் பட்டிருந்தது. ஊரிலுள்ள அத்தனை பேரும் போகவர அந்த ருசியான குழம்பையும், சோற்றையும் சாப்பிட்டுக் கொண் டிருந்தார்கள். ஒரு பருக்கையைக் கூட சந்திரமல்லி உண்ண வில்லை.

“ஏன் சந்திரமல்லி.”

பக்கத்தில் அமரவைத்து பிரம்மராயர் கேள்வி கேட்டார்.

“இன்று திருநாளைப்போவார் பற்றிய எண்ணம் வந்தது. அதனால்தான் நான் எதுவும் சாப்பிடவில்லை. இறைவனைத் தரிசிப்பதற்கு திருநாளைப்போவார் எத்தனை பாடுபட்டிருக் கிறார். அவரை எப்படியெல்லாம் கொடுமைப்படுத்தியிருக் கிறார்கள். திருநாளைப்போவார் என்றால் அந்தணர்களுக்கு அத்தனை இளக்காரமா. இந்த அந்தணர்களே மோசம். ஆயிரம் அந்தணர்கள் ஒன்று சேர்ந்தாலும் ஒரு திருநாளைப் போவாரைப்போல ஆகமுடியுமா. இது ஏன் புரியவில்லை.

ஒருவரைப் புரிந்து கொள்ள எது தடுக்கிறது. அதைத்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். உணவு பிடிக்கவில்லை."

"நமது அகந்தைதான் ஒருவரைப் புரிந்து கொள்ளத் தடையாக இருக்கிறது."

பிரம்மராயர் பதில் சொன்னார்.

"அகந்தைக்கு என்ன காரணம்."

சந்திரமல்லி இடைவிடாது கேட்டாள்.

"தான் உடம்பு என்ற நினைப்புதான் காரணம். உடம்பினுடைய வலிவு. புத்தியினுடைய அலங்காரம். உடன் இருக்கின்றவர்களுடைய துணை. செல்வச் செருக்கு... இவைகள் தான் அகந்தையின் அடிவேர்கள்."

"இவையெல்லாம் எனக்கு இருக்கின்றனவே. நான் என்ன செய்வது."

பத்து வயது சந்திரமல்லி அந்தச் சேனாதிபதியை ஆச்சரியத்தோடு வினவினாள்.

"எவன் இதையெல்வாம் கொடுத்தானோ, அவனையே கேள். என் அகந்தையை என்னிடமிருந்து எடு என்று கேள்" கிருஷ்ணன்ராமன் அவளுக்கு அறிவுரை சொன்னார்.

ஆனால், அந்த சந்திரமல்லி இறைவனிடம் என்ன கேட்டாள் என்று தெரியவில்லை.

உத்தம சோழரை அரச பதவியிலிருந்து இறக்கி விட்டு, இளவரசர் அருண்மொழி சக்ரவர்த்தியான போது, அவரைச் சுற்றி எதிரிகள் அதிகமிருந்தார்கள். சேரதேசம் நோக்கியும், கங்கதேசம் நோக்கியும், நுளம்பபாடி, தடிகைப்பாடி நோக்கியும், மேலைச் சாளுக்கியருடைய வலிமையைக் குறைக்க, கீழைச் சாளுக்கியம் போய் அங்கு நட்பு பாராட்டியும் கீழைச் சாளுக்கியருக்கும், மேலைச் சாளுக்கியருக்குமிடையே மித்ர பேதம் உண்டாக்கி சோழதேசத்தின் வலிமையை அதிகரித்தும், எதிரியின் லரலைக் குறைத்தும் மிகப்பெரிய ராஜதந்திரங்களில் அவர் ஈடுபட்டுக் கிடந்தபோது, இங்கு வேறு ஒரு நிகழ்ச்சி நடந்து விட்டது. தொண்டை நாட்டு திருவலிதாயத்தைச் சேர்ந்த சாதாரண அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளைஞன் சுகவனை சந்திரமல்லி காதலித்தாள். சுகவனன் தொண்டை நாட்டிலிருந்து பொற்காசுகளும், நவ

தானியங்களும், தொண்டை நாட்டிற்கே உண்டான உழு கவன்களும், பித்தளைப் பாத்திரங்களும் கொண்டு வந்திருந் தான். எல்லாவற்றையும்விட அவன் கொண்டு வந்திருந்த இசைக்கருவிதான் அரண்மனையில் உள்ளோரை வியக்க வைத்தன. விதம்விதமான உலோகங்களை வரிசையாக அடுக்கி வைத்து உருளைப் பிரம்பால் அதைத்தட்ட ஸ்வரக் கோர்வை அழகாக வந்தது. முழவு கொஞ்சிற்று உடுக்கை கிறங்கடித்தது. பம்பையின் இழுப்பும், வேதனையும் எல்லோ ரையும் எழுந்திருந்து ஆட வைத்தது. எல்லாக் கருவிகளையும் அவனுக்கு இசைக்கத் தெரிந்திருந்தது. வீணை என்றொரு கருவி கொண்டு வந்திருந்தான். அதில்தான் சந்திரமல்லி சொக்கிப் போனாள்.

சங்கநிதி, பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் சொல் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லராகில்
அங்கமெல்லாம் குறைந்து அழுகுதொழு நோயராய்
ஆஉரித்துத் தின்று உழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே...

என்று பாடினான். பாட்டை வீணையில் வாசித்துக் காட்டினான்.

பாட்டுக்கு விரிவாய் அர்த்தம் சொன்னான்.

இன்னும் இன்னும் என்று அவர் அந்தத் தொண்டை நாட்டு இளைஞரிடம் பவ கவிதைகளும், பாடல்களும் கேட்டாள். அவனே இயற்றிய பாடலையும் பாடினான்.

அதிலும் சொக்கிப் போனாள்.

தந்தையும், தனயனும் பரதகண்டத்தில் பல்வேறு பகுதி களில் முன்னேறி தினம் தினம் மரணத்தைச் சந்தித்து எதிரி களை முறியடித்து வெற்றிவாகை சூடிபெரும் எக்காளமும், முரசும் அதிர ஊர்வலம் போய்க் கொண்டிருந்த போது, இங்கே யாழின் ஓசை, வீணையின் நாதம், முழவின் அதிரல், பம்பையின் உறுமல் என்று பரவிக்கிடந்தார்கள்.

இவை சேரதேசத்திலிருந்து கிடைத்த பொன் ஆபர ணங்கள். தேன் குடுவைகள். மூலிகை மருந்துகள். பல்வேறு பட்ட முகப்புச்சிலைகள், சேர தேசத்து மக்கள் உபயோகப்

படுத்தும் தாழம்குடை. அது தவிர பெரிய பிரம்பு பறவைக் கூண்டு அந்தக் கூண்டிலுள்ள பதினோரு பஞ்சவர்ணக் கிளிகளும் இராஜேந்திரரின் அன்பளிப்பு.

சந்திரமல்லி. தனக்கு வந்த பரிசைக் கூண்டோடு ககவனனுக்குக் கொடுத்தாள்.

"எனக்கா... எதற்கு."

அலன் வியப்போடு கேட்டான்.

"நீங்கள் வாசித்த தேவாரப் பண்ணுக்கு என்னுடைய காணிக்கை." என்று சொல்லிக் கொடுத்தாள்.

"அப்படியா... இதை நான் என்ன செய்வது."

"என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்."

"அப்படியா... ஆமெனில் இந்தக் கிளிகள் வானம் நோக்கிப் பறக்கட்டும்."

அவன் மெல்லக்கூண்டைத் திறந்து ஒவ்வொரு கிளியாய்ப் பற்றி முத்தம் கொடுத்து, அவளையும் முத்தம் கொடுக்கச் சொல்லி வானத்தில் பறக்க விட்டான். எல்லாக் கிளிகளும் சிறகடித்துப் பறந்தன. பிரம்புக்கூண்டை கோழிகள் வளர்க்கக் கொடுத்து விட்டார்கள்.

பழையாறை முழுலதும் சுற்றினார்கள் குடந்தை முழுவதும் குதிரையில் கடந்தார்கள்.

"போதும்... அதிகம் அலையாதே."

உலகமாதேவியார் கண்டித்தார்.

ஆனால், அவள் கேட்கவில்லை. அவளை அதிகம் கண் டிக்கவும் முடியவில்லை. சக்ரவர்த்தியின் செல்லப் பிள்ளை. அவளைப் போய் எப்படிக் கண்டிப்பது என்று அரண்மனை யில் எல்லோருக்கும் ஒரு தயக்கம் இருந்தது. எது சொன் னாலும் பதிலுக்கு வேகமாகச் சொல்கின்ற ஒரு பழக்கமும் அவளுக்கு இருந்தது.

"சிதம்பரம் போய் வருவோமா."

அவன் கேட்டான்.

"எப்பொழுதோ சிறுவயதில் போயிருக்கிறேன். என் தாத்தா பொன் வேய்ந்திருக்கிறார் என்று கேள்விப் பட்டிருக்

கிறேன். அரண்மனையில் அனுமதி கொடுப்பார்களா என்று தெரியவில்லை."

அழுது புரண்டு கத்தி சண்டையிட்டு அனுமதி வாங்கினாள்.

ஒரு சிறு படையோடு சிதம்பரம் போக அவர்கள் அனுமதித்தார்கள். வீரர்களை கவனமாக காவல் இருக்கச் சொன்னார்கள்.

சிதம்பரம் போனபிறகு இரண்டு நாள் தங்கி சுவாமி தரிசனம் செய்தபிறகு கடற்கரை போக வேண்டுமென்று ஆசை வந்தது.

இத்தனை வீரர்களோடு கடற்கரை போவதா.

அவன் யோசித்தான்.

பல்வேறு விஷயங்களில் அவள் நெருங்கி வந்திருக்கிறாள். கடற்கரைக்குப் போனாள். இன்னும் நெருக்கமாக வருவாள் என்று யோசித்தான்.

சோழதேசத்தின் சக்ரவர்த்தியாக முடிசூடி தேசத்தின் பல பாகங்களுக்குப் போகும் வலிமை மிக்க ஒரு பரம்பரை யில் தான் சம்மந்தம் வைத்துக் கொண்டால், தன்னுடைய தேசம் கப்பல் கட்ட வேண்டியிருக்காதே தனக்கு மதிப்பு அதிகம் கூடுமே. சோழ தேசத்திற்குத் தான் மாப்பிள்ளை யானால் தன்னுடைய நாட்டில் உள்ளவர்களுக்கு மதிப்பு கூடுமே. தன் அப்பாவுக்கும், அம்மாவுக்கும் எக்காளம் ஊதி கொண்டாடுவார்களே. கட்டியம் சொல்வார்களே. ஆனால் இந்த இராஜேந்திர சோழனை நினைத்தால் தான் கவலை யாக இருக்கிறது.

அவனைப் பார்த்தால் நரமாமிசம் உண்ணும் கபாலிகன் போல காட்சியளிக்கிறான். திருவொற்றியூர் வரும்போது திருவலிதாயத்தைச் சுற்றி வந்துவிட்டு எங்கள் வீட்டுக் கொல்லைப்புறம் போல இருக்கிறதென்று சொல்லிவிட்டுப் போய்விட்டான். இராஜேந்திரன் உபதளபதி ஒருவன் உடனே கீழிறங்கி சிறுநீர் கழித்தான். என்னாயிற்று உனக்கு என்று இராஜேந்திரன் வினவ, நீங்கள் சொல்லியபிறகு என்னால் மீறமுடியுமா. இது கொல்லைப்புறம் என்றால் இங்கு இதுதானே செய்ய முடியும் என்று பதில் சொன்னான்.

சோழ வீரர்கள் கூட்டம் முழுவதும் வாய்விட்டுச் சிரித்தது.

எங்கே ஒட்டுமொத்தமாய் உட்கார்ந்து விடுவார்களோ என்று பயம் ஏற்பட்டது. ஆனால், நல்லவேளையாக அந்த ஒரு வீரனைத் தவிர வேறு எவரும் எந்த அநாகரிகமும் செய்யவில்லை. ஆனாலும், எங்கள் வீட்டுக் கொல்லைப்புறம் போல இருக்கிறதென்று ஒரு ஊரைச் சொல்லிவிட்டுப் போனது வருத்தமாக இருந்தது.

இவர்கள் வீட்டுப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால் அப்போது இராஜேந்திரர் மரியாதையாகத் தானே நடத்த வேண்டும். அங்கே மறுபடியும் வந்து விருந் துண்டுதானே போகவேண்டும். எங்கள் வீட்டு பூஜை மாடம் போல இருக்கிறது என்று திருவலிதாயத்தைச் சொல்லி விட்டுத்தானே போக வேண்டும் என்று உள்ளுக்குள்ளே சுகவனனுக்கு எண்ணம் ஓடிற்று.

"இந்த வீரர்கள் தூங்கும்போது இரவோடு இரவாக நாம் நகர்ந்து விடவாமா." அவளைக் கேட்டான்.

"ஏன்."

திகைப்போடு அவள் சுகவனனை விசாரித்தான்.

"வெளியே பறக்கின்ற அந்தப் பறவைகளுக்கு யார் பாது காவல். அதைச்சுற்றி கைக்கோளர் படையோ, தற்கொலைப் படையோ, மெய்க்காவல் படையோ உண்டா. பசுக்கூட்டத் தில் தலைவன் உண்டோ. தொண்டன் உண்டோ. மனிதர் களில் மட்டும் பேதம் ஏன்."

அவள் ஆமோதித்தாள். எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்கிற ஆவல் அரண்மனையில் எலரும் அமர்ந்து பேசாத குறை அவனுக்குப் பின்னே விடியலில் குதிரை ஏறி கடற்கரைப் பக்கம் போனாள்.

சுகவனன் பின் தொடர்ந்தான். ஆட்டமும், பாட்டமு மாய் அவர்கள் கடற்கரையில் ஆடி குதித்து திரிந்த போது பரதவர்கள் இனம் கண்டு கொண்டார்கள். சந்திரமல்லியை விழுந்து வணங்கினார்கள். இருட்டிவிட்டதால் பெண்களி னுடைய குடிசைக்கு சந்திரமல்லியை அனுப்பினார்கள். சந்திரமல்லி அயர்ந்து தூங்கினாள்.

அன்று விடியற்காலை சிங்களவர் கப்பல் ஒன்று கரை ஒதுங்கியது. அதிலிருந்து குதித்தவர்கள் முரட்டுத்தனமாகப் பேச பூம்புகார் பரதவர்கள் கோபமாகப் பதில் சொல்ல, அங்கே கைகலப்பு உருவாயிற்று. அங்கே சந்திரமல்லி போய் தன் அதிகாரத்தை நிலைநாட்ட முயல, சிங்களவர்கள் அள்ளித் தூக்கிக்கொண்டு ஓடினார்கள் பூம்புகார் பரதவர்கள் பதற கிட்டத்தட்ட படகில் ஏற்றப்படும் நேரத்தில் பெரும் சண்டை நடந்தது. இரண்டு பேர் கடுமையாக வெட்டப்பட்டு ஒருவர் கொல்லப்பட சிங்களவர் படகு பின்னடைந்தது. அதுவரை எங்கோ போயிருந்த சுகவனன் மறுபடியும் வந்தான்.

"பூம்புகார் நகரத்தில் ஒருவர் தேவாரப் பாடல்கள் வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டு அவரிடம்போய் சிலவற்றைப் படியெடுத்துக் கொண்டிருந்தேன். இப்படி நடக்கும் என்று தெரிந்திருந்தால் இங்கேயே இருந்திருப்பேன்." என்று ஏதோ சமாதானம் சொன்னான்.

பரதவர்கள் ஜாக்கிரதையாக சிதம்பரம் அனுப்ப, சிதம்பரத்திலுள்ள வீரர்கள் சுகவனனைக் கடிந்து கொண்டார்கள். அவனைச் சவுக்கால் அடிக்க, ஒரு வீரன் முற்பட, உரக்கக் கத்தி சந்திரமல்லி அதைத் தடுத்தாள். அவளுக்குப் பின்னே பாதுகாப்பாய் சுகவனன் நின்று கொண்டான். அப்படி அவன் நிற்பது அவளுக்குப் பிடித்திருந்தது.

அவர்கள் குடந்தைக்கு வந்த அடுத்த இரண்டாம் நாள் இராஜேந்திரர் தன் படைகளோடு வந்தார். சேர தேசத்தின் மாடுகளும், ஆடுகளும், அரச குடும்பத்து நகைகளும் என்று அள்ளிஎடுத்து வந்திருந்தார். வந்திறங்கிய மாலையே சுகவனன் சந்திரமல்லி ஊர் விட்டு ஊர்போனது சொல்லப்பட்டது. இராஜேந்திரர் கடுங்கோபமடைந்தார். சுகவனனை அழைத்தார். சுகவனன் உள்ளே நுழைந்ததும் அவன் கன்னத்தில் மாறி மாறி அறைந்தார். சுகவனன் அலற அந்தப்புரத்துக்குள்ளிருந்து புயலெனப் புறப்பட்டு சந்திர மல்லி ஓடிவந்தாள். நிறுத்து என்று இராஜேந்திரரை அதட்டினாள். இராஜேந்திரர் சிறிய அவமதிப்பைக்கூட தாங்க முடியாத ஒரு போர் வெறியில் இருந்தார்.

மனிதர்களை வெட்டி வீழ்த்தி ரணகளம் பலவும் பார்த்து கோபத்தின் திசை மாறாமல் எவரைக் கண்டாலும் உறுமுகிறவராய் இருந்தார்.

தன்னைக்கண்டு பரதவர்களெல்லாம் காலில் விழுந்த செருக்கில் சந்திரமல்லி இருக்க, எதிர்த்தவரையெல்லாம் வெட்டிப்போட்ட ரெளத்திரத்தில் இராஜேந்திரர் இருக்க, வாக்குவாதங்கள் தடித்து, வார்த்தைப் பிரயோகங்கள் அனைத்தும் குழப்பமாகி ஒருவரையொருவர் கடுமையாக ஏசிக்கொள்ள பழையாறை அரண்மனை தவித்தது.

“இவன் இருப்பதால்தானே நீ இத்தனை ஆடுகிறாய். இவனை வெட்டிப்போடுகிறேன் பார்.” என்று வாள் உருவி சுகவனன் மீது இராஜேந்திரர் பாய அவள் குறுக்கே கை விரித்து நின்று கொண்டாள்.

“என்னை வெட்டிப்போட்டு விட்டு இவரைத் தொடு.”

“எதற்கடி வழிமறிக்கிறாய்.” என்று உவகமாதேவி பட்ட மகிஷி உரத்துக்கத்த, “இவர் என் காதலர்” என்று அவளையும் மீறி அலன் உரக்கச் சொன்னாள்.

அரண்மனை திகைத்தது.

பழுவேட்டரையர் மெல்வ இராஜேந்திரரை அணுகி அவர் கையிலிருந்த வாளை அகற்றி, அவன் உறையிலிட்டு, “இது நீ தீர்மானிக்கக்கூடிய விஷயம் அல்ல. உன் தந்தை வரும்வரை பொறுமையாய் இரு.” என்று சொல்லி கிட்டத் தட்ட சுகவனனை வீட்டுக் காவலில் வைத்திருந்தார்கள். அவன் வீட்டுக்கு ஆள் அனுப்பினார்கள். அவன் ஊர் மொத்தமும் திரண்டு வந்து பழையாறை வாசலில் ஒப்பாரி வைத்தது. இளவரசர் இராஜேந்திரர் காலைப்பிடித்து அவனை விட்டு விடுங்கள் அவன் அறியாத பிள்ளை என்று கெஞ்சியது.

இராஜேந்திரர் சோழப்படை வீரர்களைச் சவுக்கால் அடித்தார். உரக்கக் கத்தினார்.

“சிதம்பரத்தில் இருந்து அலர்கள் தப்பித்து பூம்புகார் போகும்வரை என்ன குடித்துவிட்டு உருண்டு தூங்கியிருந்தீர் களா. பரத்தையர் வீட்டில் ஆடிக்கொண்டிருந்தீர்களா. நீங்களெல்லாம் மெய்க் காவலர்களா. சோழ தேசத்தின் மானத்தைச் சந்தியில் நிறுத்தி விட்டீர்களடா பாவிகளா.” என்று இரைய, அந்த மெய்க்காவல் படைத்தலைவன் இராஜேந்திரரை விழுந்து வணங்கி குறுவாளை எடுத்து தன் நெஞ்சில் வைத்து கலற்றில் போய்முட்ட அந்தவாள் முதுகின் பக்கம் வெளிவந்தது.

பழையாறை கோட்டைச்சுவர் வாசலிலேயே அவன் இறந்து போனான்.

சக்ரவர்த்தி இருபத்தைந்து நாட்களுக்குப் பிறகுதான் பழையாறை வந்தடைந்தார்கள்.வழியிலேயே அவருக்கு விவரம் சொல்லப்பட்டது. பயணத்தைத் துரிதமாக்கி சீக்கிர மாகவே அரண்மனை வந்தடைந்தார்.

"இனி என்ன செய்வது. நடுவிற் பெண் பிள்ளையான சந்திரமல்லி ஒரு இளவரசனோடு வேறு ஊருக்குப் போய் ஒரு இரவு தங்கி விட்டு வந்திருக்கிறாள். இவளை யாருக்குத் திருமணம் முடிப்பது. வேறு வழியில்லை அவனுக்கே திரு மணம் செய்து கொடுத்துவிடலாம்." என்று சக்ரவர்த்தியும், பட்டமகரிஷியும் பஞ்சவன்மாதேவியும் பேசினார்கள்.

"அவனுக்கு எதுவும் தெரியவில்லை. குதிரை ஏறி ஓட்ட முடியவில்லை. ஏறிய குதிரையிலிருந்து ஈட்டி எறிய முடிய வில்லை. வெறும் பேடிக்கூத்தனாக இருக்கிறான். அடைத்து வைத்த அரண்மனை அறையில் நடனமாடுகிறான். கேட்டால் தில்லை நடராஜர் என்கிறான். இந்த இலந்தம் பழத்தையா இளவரசன் என்று ஏற்பது."

இராஜேந்திரர் கூவினார்.

அரசரின் எல்லா மனைவிகளும், அவரை சமாதானப் படுத்தினார்கள்.

சேனாதிபதி பட்டமேற்ற பிரம்மராயர் கிருஷ்ணன் ராமன் அவருக்கு நிலைமையை மிகத் தெளிவாகச் சொன்னார்.

"அவன் இளைத்தவனாக இருக்கிறான். என்ன செய்ய வலிவுள்ளவனாக்கு. அது உன் கையில் இருக்கிறது. அவன் தொண்டை நாட்டின் பெரும். வேளாளரின் மகன். அங்கே பெரும் வேளாளர்கள்தான் சிற்றரசர்களாகத் திகழ்கிறார்கள். அவர்களுக்கு வேளாண்மைதான் பழக்கமே தவிர, வேலெடுத் துப் பழக்கமில்லை. அவனை வீரனாக்கு. உன்னோடு போருக்கு அழைத்துப்போ. அவளை நான் சமாதானப்படுத்து கிறேன்." என்று சொல்ல இராஜேந்திரர் மனம் கசந்தார்.

"இவனை வீரனாக்குவதா, புலி புலிக்குட்டியை நக்கித்தான் புலியாக்கும். புலி நாய்க்குட்டியை நக்கி புலியாக்குமா." என்று எகத்தாளமாகச் சொல்லிவிட்டுப் போனார்.

சக்ரவர்த்தி உட்பட சபையிலுள்ள அத்தனை பேருக்கும் அந்தச் சொல் லலித்தது. ஆனால், சந்திரமல்லி அவனை விட வேகமாகப் பேசினாள்.

“ஆமாம், உலகத்தில் இராஜேந்திரனைத் தவிர வேறு யாருமே வீரனில்லை. அவர் மட்டுமே வீரம் நிறைந்தவர். நீங்கள் எதையெல்லாம் வெற்றி வெற்றி என்று சொல்கிறீர்களோ. அதையே அந்த ஊரில் ஒப்பாரிப்பாட்டாய் பாடுகிறார்கள். கொலைகாரா என்று உங்களைக் கூப்பிடுகிறார்கள். நெல் வயலைக் காட்டெருமை மிதித்ததுபோல என்று உவமானம் சொல்கிறார்கள். இராஜேந்திரர் வீரனா, காட்டெருமையா, இரண்டும்தான்.” என்று சொல்ல, பலபேர் அதற்கு கோபப்பட்டார்கள்.

“போதும் நிறுத்து... என்று சந்திரமல்லியைப் பார்த்து பேசினார்கள்.

“உங்களுக்கு இராஜேந்திரர் என்றால் பயம். ஏன் சக்ரவர்த்திக்கே பயம். ஏதேனும் ஒருநாள் இராஜேந்திரன கத்தி சக்ரவர்த்தியின் தொண்டைக்கு வந்துவிடும் என்ற பய உணர்ச்சியில்தான் அவரை ஆதரித்துப் பேசுகிறீர்கள்.”

‘சந்திரமல்லி எகத்தாளத்தின் உச்சிக்கே போய் கூச்சலாய்ப் பேச சக்ரவர்த்திக்கு மெல்லியதாய்க் கோபம் வந்தது.

“நீ இராஜேந்திரனுக்கும் குந்தவைக்கும் நடுவே பிறந்த பெண். பிள்ளைதானே தவிர எனக்கும் இராஜேந்திரனுக்கும் இடையே வந்த பெண் பிள்ளை அல்ல. இராஜேந்திரனைக் கண்டு நான் பயப்படுவேன் என்றோ அல்லது பயமுறுத்த இராஜேந்திரன் முயற்சி செய்வான் என்றோ எவர் நினைத்தாலும் அது பேதமை. பழையாறைப் படுகையில் நீந்திக் குளிப்பது தவிர, உனக்கு வேறு வீரம் தெரியாது. ஒரு கோட்டை வாசலிலிருந்து இரண்டாயிரம் அம்புகள் முதல் வரிசையில் இருப்பவர்களை நோக்கி வருகின்ற வேதனை உங்களுக்குத் தெரியாது. ஒரு யானையை இருநூறுபேர் அடித்துத் துன்புறுத்தி இடைவிடாது உங்கள் மீது ஈட்டி பிரிந்து விடும் என்கிற அபாயத்தை நீங்கள் ஒரு நாளும் உணர்ந்ததில்லை. சாவின் எல்லைகளைப் பார்த்தவன் வாழ்க்கை வேறு. உங்கள் வாழ்க்கை வேறு. இராஜேந்திரனைப் பற்றி அபிப்ராயம் சொல்லும் அளவிற்கு உனக்கு எந்தத் தகுதியும் வந்துவிடவில்லை.

*நீ காதலித்தது தவறு என்பதுதான் என் கட்சியும். காதலித்து விட்டாய் என்பதாலேயே நான் சற்று கீழிறங்கி வந்திருக்கிறேன். உனக்குப் புருஷனாக வரப்போகிறவனுக்கு ஒரு உபசேனாதிபதி பட்டமாவது தரவேண்டாமா கைக்கோளர் படையின் தலைவனாக நியமிக்க வேண்டாமா. தொண்டைநாட்டின் ஒரு பகுதிக்கு அரசன் என்ற தகுதியாவது அவனுக்குத் தரவேண்டாமா. அதனால்தான் இராஜேந்திரனை ஒரு போருக்கு அழைத்துப் போ என்று சொன்னேன். காதலித்தவன் போர்த் தொழிலைக் கற்க ஆவலில்லாமல் இருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டு இராஜேந்திரன் பேசுகிறான். வலித்தால் என்ன செய்வது. உண்மையில் இந்தக் கோபம் உன் காதலனுக்கல்லவா வரவேண்டும். எந்த எதிர்ப்பும் இன்றி மௌனமாக இராஜேந்திரரை அனுசரித்துப் போகவேண்டுமென்று அவனுக்கு எடுத்துச் சொல். அவன் கட்டளைப்படி நடந்தால் வெகு எளிதில் போர்த்தொழில் கற்கலாம். போர் தெரியாதவன் அரசராக முடியாது. அரசனாக இல்லாதவன் உனக்குக் கணவனாக முடியாது.*

*சோழ தேசத்து சக்ரவர்த்தியின் மகள் கூத்துக்குப் பாட்டுக் கட்டும் ஒரு ஆளோடு சுற்றி திருமணம் செய்து கொண்டார் என்ற சொல்லை இந்தக் குடும்பம் ஏற்கத் தயாராக இல்லை."*

*சக்ரவர்த்தி அழுத்தமாய் மிருதுவாய் பேச சந்திரமல்லி அடங்கினாள். பின்வாங்கினாள். சுகவனன் இராஜேந்திர சோழர் கட்டளையிட்ட பார்வையில் போய் நின்று கொண்டான். அது முரட்டு வீரர்கள் கூட்டம். அந்தப்படை வெறுங்கை வீரர்கள். ஆயுதம் இல்லாமல் இடுப்பில் கோவணம் கட்டி. மேலே துண்டு இறுக்கி உடம்பெல்லாம் எண்ணெய் தடவிக் கொண்டு கள் குடித்த வெறியோடு படையின் முன்னே போவார்கள். ஆயுதம் வீசினாலும் கையால் தடுத்து உள்ளுக்குள் பாய்ந்து ஒரே அடியில் ஆளை செவிட்டு சாய்ப்பார்கள். நரம்புகளைத் தட்டி பலவீனப்படுத்துவார்கள். இரவு நேரம் உடும்பு பிடித்து கோட்டையின் மீது எறிந்து, வாலில் தொங்கும் கயிறைப்பிடித்து ஏறி கோட்டையின் விளிம்பிலிருந்து உள்பக்கம் குதித்து கோட்டைக்கதவு திறந்தவுடன் உள்ளுக்குள். அங்கங்கே பதுங்கிக் கொண்டு கோட்டைக் கதவை உடைத்துக் கொண்டு சோழப்படை வந்ததும் அவர்களோடு கலந்து கோட்டைக்குள் இருக்கின்ற வீரர்களைத் தாக்கச் செய்வார்கள். ஒரு முறை இம்மாதிரி*

ஒரு கோட்டைக்குள் நுழைந்து அரசருடைய அரண் மனையை இரவோடு இரவாக வெளிப்பக்கம் பூட்டிவிட் டார்கள். சாவியை இடுப்பில் சொருகி நந்தவனங்களில் போய் பதுங்கிக் கொண்டார்கள். அரசர் உள்ளிருந்து கத்த படைகள் வெளியிலிருந்து கத்த சோழப்படை கதவை எளிதாய் உடைத்து கோட்டைக்குள் நுழைந்தது.

வெறுங்கை வீரர்களுக்கு இராஜேந்திரர் மிகப்பெரிய பரிசு கொடுத்தார். இராஜேந்திரர் கொடுத்த பரிசால் அவர்கள் உற்சாகமடைந்தார்கள். அவர்களுடைய ஆரவாரம் அதிகமாகியது. சோழதேசத்தின் மற்ற படையினரை இந்த வெறுங்கை வீரர்களோடு அதிகம் கலக்காமல் இருப்பார்கள். அப்படிப்பட்ட வீரர்களுக்கிடையே சுகவனை வைத்ததும் சுகவனன் திணறிப்போனான். மணலை கையால் அறைந்து கையை உறுதியாக்குகின்ற பயிற்சியில் அவன் தவித்துப் போனான். எத்தனை அடித்தாலும் வலி பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னதும் மிரண்டு போனான். மூக்கு உடைபட வேண்டும். அப்பொழுதுதான் நல்லது என்று அவனை அருகே அழைத்து ஒருவன் தலையை பிடித்துக் கொள்ள இன்னொருவன் நச்சென்று மூக்கில் குத்தினான். உள்மூக்கு உடைந்து ரத்தம் கொட்டியது. நாள் முழுவதும் சுகவனன் அலறினான். ஆனால், யாரிடமும் எந்தத் தகவலும் அவனால் சொல்ல முடியவில்லை. சொல்ல அனுமதியில்லை.

எனக்குச் சோழதேசமும் வேண்டாம். சோழ இளவரசி யும் வேண்டாம். என்னை விட்டுவிடுங்கள் என்று இராஜேந் திரரைப் போய் கெஞ்சினான். இராஜேந்திரர் அவனை வெறித்துப் பார்த்தார்.

“நீ விட்டு விடவாம். என் தங்கை விடமாட்டாளே. உன்னை மறந்து விடுவேன் என்று சொல்ல தங்கை வந்து நின்றால் நான் என்ன செய்வேன் மறபடியும் உன் கூத்தும் பாட்டும்தானே பெரிய விஷயமாகப் போகும். தெரிந்தோ, தெரியாமலோ நீ சோழதேசத்து இளவரசியோடு குதிரை ஏறி பூம்புகாருக்கு வந்து விட்டாய். இனி என் தங்கைக்கு எங்கு திருமணமாகும். யார் பெண் எடுக்க வருவார்கள். நீங்கள் ஊர் முழுவதும் சுற்றியது சோழதேசம் முற்றிலும் தெரிந்து விட்டது. எனவே, உனக்கு வேறு வழியில்லை. நீ வீரனாய் மாறித்தான் ஆகவேண்டும். இது ஆரம்பகால வேதனை. ஒரு மண்டலம் இங்கு அவஸ்தைப்படு. பிறகு உனக்கே மணலில் அறைய வேண்டும் என்ற ஆசை வந்துவிடும்.”

மன உறுதி இல்லாத சுகவனன் எத்தனை சொன்னாலும் இதை ஏற்க மறுத்தான். விட்டு விடுங்கள் நான் திருவலிதாயம் போய் விடுகிறேன் என்று கெஞ்சினான். நான் அந்த முடிவை எடுக்க முடியாது. சக்ரவர்த்திக்கு ஓலை போயிருக் கிறது. உன்னால் தாங்க முடியவில்லை என்று சொல்லியிருக் கிறேன். அவர் என்ன ஆலோசனை சொல்கிறாரோ அதன்படி நடப்பேன். அதுவரை நீ இங்குதான் இருந்தாக வேண்டும். விட மறுத்தார். ஆனால், விடுவித்து விடு என்று சக்ரவர்த்தியிடமிருந்து ஓலை வந்தது. இராஜேந்திரர் கவலையானார்.

விடுவித்துவிட்டால் சந்திரமல்லியைப் புறக்கணிப்பானே. சந்திரமல்லிக்கு எங்குபோய் புருஷன் தேடுவது.

ஓலை கொண்டு வந்த வீரன் ஒரு மூட்டையைப் பிரித்துக் காட்டினான். சந்திரமல்லி சுகவனனுக்குப் புதிய ஆடைகளும், பால்களியும், புலிநகம் பதித்த தங்கச் சங்கிலியும் அனுப்பி யிருந்தாள். பால்களி பாத்திரம் கவிழ்த்துப் பார்க்க அதன் அடியில் ஓலை நறுக்கு சுருட்டி வைக்கப்பட்டிருந்தது.

என் புருஷன் வீரனாக இருக்க வேண்டிய அவசிய மில்லை. வெறுங்கை வீரனாகவோ, கைக்கோளப் படைத் தலைவனாகவோ ஒரு புருஷன் இருந்துதான் ஆக வேண்டும் என்று எந்தக் கட்டாயமும் இல்லை. நீங்கள் உங்கள் இயல்புப்படி இருந்தால் போதும். என் தந்தையிடம் பேசி உங்களை விடுவிக்க வேண்டுமென்ற வாக்கை நான் வாங்கி விட்டேன். இந்நேரம் உங்களை விடுவித்திருப்பார்கள். நீங்க ஊருக்குப் போனதும் எனக்கு ஓலை அனுப்புங்கள். நான் அங்கு வருகிறேன் என்று எழுதியிருந்தாள்.

இராஜேந்திரர் மனம் கசந்தார். பால்களியை மண்ணில் எறிந்தார். ஓலையைத் தன் இடுப்பில் சொருகிக் கொண்டார். துணிகளையும், தங்கச் சங்கிலியையும் கொண்டு போய் கொடு அதுபோதும் என்று வீரனுக்கு உத்தரவிட்டார். அன்றுமாலை அவனை விடுவித்து விட்டதாகச் சொன்னார். ஊருக்குப் போக குதிரையும் ஐந்து பொற்காசுகளும் கொடுத்தார்.

மேல்பாடியிலிருந்து அவன் கிளம்பும்போது வெறுங்கை வீரர்கள் அவனிடம் குடிப்பதற்காக காசு கேட்டார்கள். அவன் இல்லையென்று சொன்ன போது மறித்தார்கள்.

"குருதட்சணை வைக்காமல் போகிறாயே... நீ ஏதேனும் கற்றுக் கொண்டாய் என்றால் அது நாங்கள் கற்றுக் கொடுத்ததல்லவா." என்று சீறினார்கள்.

"நீங்கள் எதுவும் கற்றுக் கொடுக்கவில்லை. நான் எதுவும் கற்கவில்லை." என்று அவன் பதிலுக்குச் சீறினான்.

"உனக்கு வித்தை கற்றுக் கொடுக்கிறேன் என்று சொல்லி அடித்துப் போட்டிருக்க வேண்டுமடா." என்று அவர்கள் பெருங்கூச்சலாய் பேசினார்கள்.

"இரண்டு கழுத்து நரம்புகளை பிடித்து விட்டிருந்தால் மெல்ல மெல்ல உயிர் போயிருக்கும். இடுப்பு எலும்பின் கடைசி முனையை அடித்து உடைத்திருந்தால் எழுந்திருக்க முடியாமல் படுக்கையிலேயே கிடந்து மெல்வ மெல்ல உயிர் நீத்திருப்பாய். அப்படி செய்யாமல் விட்டது தப்பு." என்று கோபப்பட்டார்கள்.

அவன் அவர்களை அலட்சியம் செய்தான். குதிரை ஏறினான். திருவலிதாயம் நோக்கி வேகமாகப் போனான். அவன் இடுப்பில் நீண்ட கத்தி இருந்தது. முதுகில் செவ்வக மான கேடயம் இருந்தது.

மேல்பாடியிலிருந்து பத்து கல் தொலைவு அவன் வந்ததும் அவனுக்கு சோழதேசம் பற்றிய பயம் இராஜேந்திரரைப் பற்றிய உதறல் விடுபட்டது.

சந்திரமல்லி அப்படியொன்றும் அழகல்ல. பெரிய மூக்கும், தடித்த உதடும் அவளைக் காமம் மிகுந்தவளாகவே காட்டியிருந்தன.

தொண்டைநாட்டுப் பகுதியிலுள்ள வேளாளப் பெண்கள் சோழ இளவரசியைவிட அழகாக இருப்பார்கள். பானையும், புல்லுக்கட்டும் தூக்கித் தூக்கித் இடுப்பு குழைந்து நடக்க வரிசையும், நீண்ட கூந்தலும், பருத்த மார்பும், சிறுத்த இடையுமாய் இருப்பார்கள் சோழப் பெண்களை விட நிறம் சற்று மட்டமாக இருக்கும். சிலர் கருப்பாக இருப்பார்கள். ஆனால், களையாக இருப்பார்கள். சோழப் பெண்களில் கங்க தேசத்துச் சாயலும், கல்யாணி சாளுக்கிய சாயலும் கலந்து ஒரு அசட்டு சிகப்பு நிறைந்திருக்கும். அந்த சிகப்புத்தான் சோழதேசத்து மக்களும், தொண்டை நாட்டு இளைஞர்களும், பாண்டியதேசத்து வாலிபர்களும் மயங்குகிறார்கள்.

உலகமாதேவி அத்தனை சிறப்பு என்று பேசுவார்கள். உலகமாதேவியின் அழகு பார்த்து விட்டு குந்தவைக்கு மனசுக்குள் ஒரு தாழ்வு மனப்பான்மை. உலகமகா தேவியைக் காட்டிலும் தான் உயர்ந்தவள் என்று சொல்லிக்கொள்ள கொண்டையை கோபுரமாய்ப் போட்டு அதில் சந்திரப் பிரபை, சூரியப்பிரபை என்றெல்லாம் சொருகி நடந்து வரு கிறாள். அந்தக் குந்தவை புருஷன் உட்பட எந்த ஆணையும் மதிப்பதில்லை.

குந்தவையினுடைய இந்தப் போக்கினால் சோழ தேசத் துப் பெண்கள் எல்லோருமே ஆண்களை அவமதிப்பதில் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது அருகே வந்து இழைகின்ற இந்தச் சந்திரமல்லியும் பிற்பாடு என்ன செய்வாள் என்று தெரிய வில்லை. வெகு நிச்சயமாய் அவட்சியம்தான் செய்வாள் என்ற ஒரு எண்ணம் பலமாக எழுந்து கொண்டிருக்கிறது.

தொண்டை நாட்டு பெண்கள் அப்படியல்ல. கடைசி வரை புருஷனுக்கு பயந்து அவன் சொல் கேட்டுத்தான் நடப்பார்கள். தஞ்சைப்பற்றிய இந்த அனுபவம், சோழதேசம் பற்றிய இந்த அனுபவம், சற்று கூடுதலாக எடுத்துக் கொண்ட வெறுங்கை வீரர்களுக்கான பயிற்சி என்னை திருவலிதாயத் தில் பிரபலமாக்கிவிடும். அந்த இளைஞர்கள் வியப்பார்கள். பெண்கள் திகைப்பார்கள். வயதான பெண்மணிகள் ஆனந்த மிகுதியால் அழுவார்கள். நரைத்த ஆண்களோ இவன் நம்ம பிள்ளை என்று பெருமிதமாய் பேசுவார்கள். பெண் கொடுக்க போட்டி கொண்டு வருவார்கள்.

போதும், இந்த அனுபவம் போதும். அவன் உற்சாகமாக வாளை உருவினான். வானம் நோக்கி உயர்த்திப் பிடித்தான். குதிரையை விரட்டினான். எதிரே மிகப் பெரிய படை இருப்பதாக நினைத்துக் கொண்டு காற்றிலே வாளைச் சுழற்றியபடி வேகமாக ஓடி சாலை ஓரத்திலிருந்த செடிகளை வெட்டித்தள்ளினான். அந்த மரக்கிளையை வெட்டியபோது மூன்று ஆட்கள் குதிரையிலிருந்து அவனையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அவன் யாரென்று கம்பீரமாய் வினவ அவர்கள் மரத்தின் மறைவிலிருந்து வெளியே வந்தார்கள்.

''சுகவனன்தானே திருவலிதாயத்தின் வேளாள இளவரசன்தானே.''

"ஆமாம். அதிலென்ன சந்தேகம்." என்று இவன் கம்பீரமாய் கேட்க, அவர்கள் மூவரும் வாள் உருவினார்கள். அவன் பயந்துபோனான். தன் வாளை சட்டென்று உறையில் போட்டான்.

"இல்லையே நான் உங்களைச் சண்டைக்கு அழைக்கவில்லையே. வெறுமே பயிற்சி செய்து கொண்டிருந்தேன்." என்று உரக்கச் சொன்னான்.

அவர்கள் உரக்கச் சிரித்தார்கள்.

"வாள் எடுத்தாலும், எடுக்காது போனாலும் உன் மரணம் நிச்சயமிக்கப்பட்டு விட்டது." என்றார்கள்.

"ஏன்... ஏன்... ஏன்... அலன் திணறினான்.

அவர்கள் பதில் சொல்லவில்லை.

அவனை நெருங்கினார்கள். பின் மண்டையில் வாளால் ஓங்கி அடித்தார்கள். அவன் சுருண்டு தரையில் விழுந்தான். விழுந்தவன் நெஞ்சில் கத்தியைச் சொருகினார்கள். குதிரையில் சுற்றி வந்தார்கள். அவன் கைகால்கள் உதைத்து துடித்தான். ரத்தம் பீறிட்டது. எழுந்து ஓட முயன்றான். அவனைக் குதிரையால் இடித்து மறுபடியும் தள்ளினார்கள். "யார் நீங்கள். யார் நீங்கள்..." என்று கத்தினான்.

அவர்கள் மௌனமாக இருந்தார்கள். யார் அவர்கள் என்று தெரிவது புண்ணியமில்லை என்பதால் அவன் சட்டென்று கடவுளை எண்ணினான். ஓம் நமசிவாய... ஓம் நமசிவாய... ஓம்... ஓம்... ஓம்... என்று கத்தினான்.

உயிர் துறந்தான். அவன் கண்கள், கைகள் நிலைகுத்தி நின்றன. வாயிலிருந்தும், மூக்கிலிருந்தும் ரத்தம் வழிந்தது. நாலாபக்கமும் கருவேலஞ் செடிகளும், திட்டுத்திட்டாய் புற்களும், நடுநடுவே உயரமாக ஓதிய மரங்களும் நிறைந்த அந்தக் காட்டிலிருந்து அவர்கள் குதிரையை விரைவாகச் செலுத்திக்கொண்டு கடற்கரைப் பக்கமாய் போனார்கள்.

லெகு தொலைவில் ஆடுகளுக்கு நடுவே அமர்ந்து நிதானமாய் ஆட்டுப்பால் இழுத்துக் குடித்துக் கொண்டிருந்த சிறுவர்கள் திகைத்துப் போய் பார்த்தார்கள். சரியாக பேசவும் தெரியாத, பழகவும் தெரியாத கிட்டதட்ட காட்டுவாசிகளைப் போல் இருந்த அந்தச் சிறுவர்கள் குத்துப்பட்டவனுடைய இடம் நோக்கி ஓடினார்கள். அவன் இடுப்பு தொட்டு, அவன்

இடுப்பிலிருந்த பணமுடிப்பை உருவிக் கொண்டார்கள். பணப்பையில் கற்களைப்போட்டு, மறுபடியும் அவன் இடுப்பில் சொருகி அந்தக் காசுகளை அவர்கள் இடுப்பில் கட்டிக் கொண்டார்கள். தொலைதூரத்திலுள்ள ஒரு கிராமத்திற்கு ஓடிப்போய் செய்தி சொன்னார்கள். செய்தி கேட்டதும் சந்திரமல்லி வீறிட்டு அலறினாள். செய்தி சொன்னவனை அடித்தாள். எங்கே இராஜேந்திரன் என்று குத்தீட்டியை எடுத்துக்கொண்டு நாலாபக்கமும் அலைந்தாள். தடுத்தவரைத் தள்ளிவிட்டாள். அதிகாரிச்சிகள் அவள் எதிர்பார்க்காத போது அவள் மேலே பாய்ந்து அவள் கையிலிருந்த குத்தீட்டியை பிடுங்கி அவளை இறுக்கக் கட்டிப்பிடித்து அறைக்குள் வைத்து மல்லாத்தினார்கள். இளவரசி அதிகம் திமிறினால் அடிப்பேன் என்று மிரட்டினார்கள்.

பஞ்சவன்மாதேவிக்குச் செய்தி போயிற்று. அவள் தலையில் அடித்துக் கொண்டாள். உலகமாதேவி வாய்விட்டு அரற்றினாள். அந்த இடத்தை ஏதோ கேடு சூழ்ந்திருக்கிறது என்று பலரும் கத்தினார்கள். தொலைதூரத்தில் இருக்கின்ற சக்ரவர்த்திக்குச் செய்தி போயிற்று.

இராஜேந்திரருடைய ஆட்கள் அந்த இடைச் சிறுவர்களை அடித்தும், கெஞ்சியும், மிரட்டியும் விசாரித்து, குதிரைத் தடங்களை கவனித்து அது போன திசைக்குப் பின்னே போய் குளத்தில் வாள் கழுவிய இரண்டு பேர், பயணப்பட்ட மூன்று பேர். பிறகு சேர்ந்து கொண்ட கடற்கரை. அவர்கள் ஏறிய படகு என்று பல விஷயங்கள் தெரிந்தன. பரதவர்களைக் கடுமையாக விசாரித்த போது சிங்களர்கள் வந்து போய் கொண்டுதான் இருக்கிறார்கள் என்ற செய்தி கிடைத்தது.

இராஜேந்திரர் கவலையானார்.

மேல்பாடியிலிருந்து பழையாறைக்கு வந்து சந்திரமல்லியைப் பார்த்தார்.

சந்திரமல்லி அவர் எதிரே 'தூ... என்று துப்பினாள்.

"என் புருஷனைக் கொன்று விட்டாயடா... சண்டாளா." என்று உரக்கக் கத்தினாள்.

இராஜேந்திரர் இல்லையென்று மறுத்தார் தனக்கு ஒன்றும் தெரியாது என்று சொன்னார்.

ஆனால், சந்திரமல்லி நம்பவில்லை, பித்துப் பிடித்தது போல பத்துப்பதினைந்து நாட்கள் கத்திக் கதறிக் கொண்டிருந்தாள். அதிகாரிச்சிகள் பாலும், பழமும் வாயில் திணித்தார்கள். நொந்து போனாள். தலைமுடியில் சடை விழுந்தது. கண்கள் இருண்டிருந்தது. உடைகள் மாற்றாமல் கிழிந்து தொங்கின.

சக்ரவர்த்தி பார்த்துவிட்டு பெருங்குரலெடுத்து அழுதார்.

“என்ன இது சந்திரமல்லி. ஏன் இப்படி உன்னை சித்ர லதை செய்து கொள்கிறாய்.” என்று அரற்றினார். பழையாறை அரண்மனை முழுக்க விம்மி அழுதது. சக்ரலர்த்தியின் அழுகையைக் கண்டு சந்திரமல்லி திகைத்தாள்.

மெல்ல அருகில் வந்தாள்.

“என் வாழ்க்கை முடிந்துவிட்டது. மறைந்து போயும் எனக்கு இன்னொரு புருஷன் தேடிவிட வேண்டாம். நான் காதலித்தேன். மணந்தேன். அறுத்தேன். என்னை நீங்கள் இனி விதவையாகவே கருத வேண்டும்.” என்று சொல்ல சக்ரவர்த்தி வாய்பொத்திக் கொண்டு வெளியே வந்தார்.

குதிரை ஏறி வெகுதூரம் போய் நட்ட நடு புல்வெளியில் பஞ்சவன்மாதேவி துணையிருக்க, எல்லைகாவல் படை சூழ்ந்திருக்க, தரையில் அறைந்து புரண்டு புலம்பினார்.

“எத்தனை மரணம் பார்த்தவர் நீங்கள். ஏன் இப்படி அழுகிறீர்கள். அமைதியாய் இருங்கள். பழையாறையில் விதவைகள் இல்லையா. மறவரின் குடும்பப் பெண் ஒவ்வொருத்தியும் எப்பொழுது வேண்டுமானாலும் விதவை யாவதற்கு தயாராக இருக்க வேண்டும். இவள் துரதிர்ஷ்டம் வாழும் முன்பே வாழ்லை இழந்துவிட்டாள். இது சோகம் தான். அமைதியாக இருங்கள்.” என்று பலவாறு பஞ்சவன் மாதேவி சக்ரவர்த்தியைத் தேற்றினாள். சக்ரவர்த்தி சமாதான மானார்.

இராஜேந்திரரோடு தனியாகப் பேசினார்.

“யாரது. என்ன இது. இன்னொரு ஆதித்த கரிகாலன் கொலை போல அல்லவா இருக்கிறது. இவனை எவர் கொலை செய்திருப்பார். சேரதேசத்து ஆட்களா? பாண்டிய ஆட்களா?” என்று பலவாறு பேச. சிங்களர்களாக இருக்குமோ என்று யோசிக்க, இராஜேந்திரர் எந்த விதமான

தகவலும் கிடைக்கவில்லை என்று சொன்னார். கடைசியாய் சக்ரவர்த்தி நிதானமாய் இராஜேந்திரர் கைபிடித்துக் கேட்டார்.

"நீ கொலை செய்துவிட்டாயா இராஜேந்திரா."

இராஜேந்திரர் பதறினார்.

"என் வாளின் மீது சத்தியம். சோழ தேசத்தின் மீது சத்தியம். உங்கள் பாதத்தின் மீது சத்தியம். என் தாய் திரு வயிற்றின் மீது சத்தியம். நான் இப்படியொரு எண்ணத்தை மனதாலும் நினைக்கவில்லை. தங்கை கேட்பது எனக்கு வலிக்கவில்லை. நீங்கள் கேட்பது எனக்கு வலிக்கிறது. நான் கோழையல்ல. வாள் தூக்கி சண்டையிடத் தெரியாத ஒரு வாலிபனைக் கொலை செய்கின்ற அளவுக்கு கேவலமானவனல்ல. அவனை நான் ஏற்றுக்கொண்டு விட்டேன். அவனை விலக்குவது என்றும் எனக்குக் கடினமல்ல. உன்னுடைய ஊரான திருவலிதாயம் முழுவதும் தீக்கிரையாக்கப்படும் என்று ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் அவன் பயந்து சகலமும் துறந்து ஓடியிருப்பான். அவன் உறுதியானவன் இல்லை. தந்தையே எனக்கு அவனிடம் வருத்தம்தானே தவிர, அவனைக் கொலை செய்ய வேண்டுமென்ற எண்ணம் என்னுள் நெல்முனையளவும் வரவில்லை."

சக்ரவர்த்தி அவனைத் தழுவிக்கொண்டு, "சரி மறந்துவிடு." என்றார். ஈழத்திலிருந்து பதினைந்து நாள் கழித்து யாரும் புதிதாக கடல் பயணம் செய்து சோழதேசத்திலிருந்து வந்ததாகத் தெரியவில்லை என்ற செய்தி வந்தது.

இது கண்டு பிடிக்க முடியாத குறை என்று புரிந்து போயிற்று. பிரம்மராயரையே திருவலிதாயம் அனுப்பி இறந்தவன் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு பல்வேறு விதமான நிவந்தங்கள் விட்டு, குடும்பத்தினருக்கு ஆறுதல் சொல்லி, பலவிதமான வரிகளிலிருந்து அவர்களுக்குச் சலுகை கொடுத்து, அது விதி என்று அவர்கள் அவனுடைய இறப்பை ஏற்றுக் கொண்டபிறகு திரும்பி வந்தார்.

சந்திரமல்லியை என்ன செய்வது என்று எல்லோரும் யோசித்தார்கள்.

அவள் சுருண்டு எந்த நேரமும் படுத்துக் கிடந்தாள்.

அவள் உடம்பிலுள்ள ரத்தம் கெட்டுவிட்டதாக வைத்தியர்கள் சொல்லிவிட்டதால் சீர் செய்வது எப்படி என்று யோசித்தார்கள். பழையாறைக்குச் சக்ரவர்த்தியைப் பார்த்து முகமன் சொல்ல வந்த பௌத்த பிட்சுகளுக்கு இந்தத் தகவல் போயிற்று.

என்னாயிற்று ஏன் இளவரசிக்கு இத்தனை வேதனை. இதைத் தீர்க்க வைத்தியர்கள் இல்லையா. நாங்கள் முயற்சிக் கலாமா. கூட்டமாய் வந்த பௌத்த பிட்சுக்கள் இளவரசியை அழைத்துப் போய் சோதித்துப் பார்த்தார்கள் நாடி பிடித்தார்கள். உள்ளங்கைகளை அழுத்திப் பார்த்தார்கள். பாதங்களைத் தட்டிப் பார்த்தார்கள். முழங்கால்களைச் சுண்டிப் பார்த்தார்கள். நெற்றிப் பொட்டை அழுத்திப் பார்த்தார்கள். முதுகில், நெஞ்சில் கை வைத்துப் பார்த்தார்கள். நோய் கடுமையாக இருக்கிறது. ரத்தம் கெட்டு விட்டது. மெல்ல மெல்ல மரணம் நோக்கி சந்திரமல்லி நகர்ந்து கொண்டிருக்கிறாள். நாங்கள் வைத்தியம் செய்தால் பிழைத்து விடலாம். இறைவனுடைய துணையும் வேண்டும். நாங்கள் முயற்சிக்கலாமா.

அனுமதி கேட்டார்கள்.

சக்ரவர்த்தி உடனடியாக வைத்தியம் செய்ய அனுமதி கொடுத்தார்.

சந்திரமல்லி பௌத்த பிட்சுக்கள் மருத்துவம் செய்தார்கள்.

ஒரு பெண் துறவியை நாகையிலிருந்து வரவழைக்க வேண்டுமென்று கேட்டார்கள்.

ஒரு சிறுதேர் புறப்பட்டு அந்தப் பெண் துறவியைக் கூட்டிக் கொண்டு வந்தது. அந்தப் பெண்துறவியோடு பெட்டி நிறைய மருந்துகள் வந்தன.

இந்த அரண்மனை வளாகம் வேண்டாம். ஒரு கொட்டகை வேறு இடம் தரமுடியுமா என்று கேட்க, அரண் மனையின் ஒரு பகுதியில் வேல்கம்பு நட்டு படையல் நடத்து கின்ற பகுதிக்கு அருகே பெரிய கொட்டகை போட்டு கற்கள் நட்டு, அதன் மீது மரப்பலகை போட்டு புத்த பிட்சுக்களுக்குப் படுக்குமிடம் கொடுக்கப்பட்டது. இளவரசிக்கென்று தனியிடம் கொடுக்கப்பட்டது. பௌத்த பிட்சுக்கள் அடிக்கடி போய் பார்த்து வந்தார்கள். பத்து நாளில் சந்திரமல்லி மெல்ல

நடக்கத் துவங்கினாள். அந்த பௌத்த பெண்துறவி கையைப் பிடித்துக் கொண்டு நடக்க மற்ற பௌத்தர்கள் மெல்ல பின்னால் வந்தார்கள். புத்தம் சரணம் கச்சாமி... தர்மம் சரணம் கச்சாமி... சங்கம் சரணம் கச்சாமி... என்று மெல்லிய குரலில் அவள் பின்னே சரணம் சொல்லியபடி நடந்தார்கள்.

சைவ சமயத்தினர் திகழுகின்ற இந்தக் கோட்டையில் பௌத்தக் கூக்குரலா. யாரோ எதிர்க்க சக்ரவர்த்தி கம்மா யிருங்கள் என்று சொல்லிவிட்டார்.

அடுத்தவாரம் சந்திரமல்லி தானாக நடந்தாள்.உடலில் லேசாக சதை பிடித்திருக்கிறது. அதற்கு அடுத்தவாரம் சந்திர மல்லியை ஓடச் சொன்னார்கள். அதே விதமாய் சந்திரமல்லி ஓடினாள். உடம்பில் சதை பிடிப்பு ஏற்பட்டது.

அரண்மனை அந்த பௌத்த பிட்கக்களை அதிகம் கொண்டாடியது.

"உங்களுக்கு எப்படி கைமாறு செய்லதென்றே தெரிய வில்லை. என்ன வேண்டுமானாலும் கேளுங்கள்." என்று சக்ரவர்த்தி கேட்டிருக்கிறார்.

"எங்களுக்காக எதுவும் வேண்டாம். சக்ரவர்த்தி நீடூழி வாழ வேண்டும் அதுதான் எங்கள் விருப்பம்."

"மிக்க நன்றி. பௌத்தர்களாகிய நீங்கள் சைவ சமயத் தைச் சார்ந்த சக்ரவர்த்தியோடு இணங்கி இதமாக இருப்ப தும் அவர் குடும்பத்திற்குப் பேருதவி செய்வது எங்களை நெகிழ்த்துகின்றன. பௌத்தர்களாகிய உங்களுக்குப் பொருள் வேண்டாதிருக்கலாம். ஆனால், உங்களுடைய விகாரங்களை நடத்தவும், உங்கள் மாணாக்கர்களைப் பயில வைக்கவும், உங்கள் அடிப்படை தேவைகளைப் "பூர்த்தி செய்து கொள்ளவும் உங்களுக்கு எது வேண்டுமானாலும் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார். உங்கள் உண்மையும், வைத்தியப் புலமையும் எங்களை வியக்க வைக்கின்றன. கிட்டதட்ட எங்கள் தேசத்து வைத்தியர்கள் கைவிட்ட நிலையில் உங்கள் அன்பை, உழைப்பை நாங்கள் ஏற்று பலன் அடைந்திருக்கிறோம். பதிலுக்கு மரியாதை செய்ய வேண்டாமா."

மன்றாடும் வண்ணம் பஞ்சவன்மாதேவி பௌத்த பிட்சுக்களைக் கேட்டாள்.

"இந்த அரண்மனை எங்களை நன்கு பராமரிக்கிறது. எங்களுக்குத் தேவையென்று எதுவுமில்லை. இளவரசி உடல் ரீதியாக குணமாகி விட்டாரே தவிர, மனரீதியாக நோய் வாய்ப்பட்டவராகவே இருக்கிறார். எனவே, அவருடைய மனோரீதியான மாற்றங்களும் ஏற்படட்டும். பிற்பாடு அவசியமானால் கேட்கிறோம்."

ஆறு பௌத்தத் துறவிகளில் ஒருவர் பெண். ஒரு வேலை உணவு மட்டுமே உண்டு, மற்ற வேளை நீர் குடித்து வெறும் இலைகள் தின்று ஜீவித்தார்கள்.

இளவரசி சந்திரமல்லிக்கல்லாது அரண்மனையிலுள்ள வர்களுக்கும் பௌத்தர்கள் வைத்தியம் பார்த்தார்கள்.

வயிறு வலிக்கிறது. நெஞ்சு எரிச்சல், தலைவலி, கண் கோளாறுகள், பல்வலி, சதைப்பிடிப்பு என்று பல்வேறு வித மான நோய்கள் சொல்லி மருந்து வாங்கிக் கொண்டார்கள்.

பழையாறை அரண்மனையைவிட்டு மெல்ல சந்திரமல்லி குடந்தைக்கு மாட்டு வண்டியில் போய் வந்தாள். தோழி களோடு சிரித்துப் பேசினாள். பாடினாள்.

சக்ரவர்த்தி மேல்பாடி போயிருந்த ஒருநாள் அவள் பஞ்சவன்மாதேவியிடம், "மனச்சாந்திக்காக நாகைப்பட்டினம் வரை போய் வருகிறேன். அந்த புத்த விவகாரத்தில் வேறு சில புத்தத் துறவிகளோடு பேசிவிட்டு வருகிறேன். தலைமைப் புத்தபிட்சுவைப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று சொன்னாள்.

பஞ்சவன்மாதேவி அனுமதி கொடுக்க மறுத்தாள். ஆனால் உலகமாதேவி பட்டமகிஷி, சரி போய் வரட்டும் விடு. இதுவரை தேறியிருக்கிறாளே. இதுவே பெரிய விஷயம். மறுத்து மறுபடியும் ஏதாவது செய்து கொண்டால் என்ன செய்வது என்று பேச, சந்திரமல்லி யார் உத்தரவுக்கும் காத்திராமல் குதிரை ஏறி துறவிகளோடு நாகைப்பட்டினம் போனாள்.

பத்து நாட்களாயின. அவளிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை. என்ன ஆயிற்று என்று ஆள் அனுப்பியபோது அவள் தலைமைப் புத்த பிட்சுவோடு தினமும் பேசிக் கொண்டிருப்பதாகவும், அங்கு பாடிக் கொண்டிருப்பதாகவும், அவர்களோடு உட்கார்ந்து வாசக சாலையில் படித்துக்

கொண்டிருப்பதாகவும் நந்தலனங்கள் பராமரிப்பதாகவும் செய்தி வந்தது.

அங்கு நிரந்தரமாய் பத்துப் படைவீரர்கள் வைத்து கவனித்து வரும்படி பஞ்சவன்மாதேவி ஏற்பாடு செய்தாள். தினமும் அவளைப்பற்றி இங்கு வந்து சொல்லவேண்டும் என்று சொன்னபோது, பதிமூன்றாம் நாள் மிக வேகமாக விடியற்காலை அரண்மனைக் கதவை உலுக்கி ஒரு வீரன் உள்ளே நுழைந்து பஞ்சவன்மாதேவியோடு அவசரமாகப் பேச வேண்டும் என்றான். பஞ்சவன்மாதேவி அரைத் தூக்கத்தில் எழுந்து சால்வை போர்த்திய வண்ணம் வெளியே வர, நிதானமாய் அழுத்தம் திருத்தமாய் ஒரு செய்தி சொன்னான்.

பஞ்சவன்மாதேவி உறைந்து போனாள்.

"இளவரசி சந்திரமல்லி புத்த மதத்திற்கு மாறிவிட்டாள். தன்னுடைய நீண்ட சிகை களைந்து துறவாடையை அணிந்து, காது, மூக்கிலிருந்து நகைகளையெல்லாம் விலக்கிவிட்டு, பாதணிகளை விசிறி எறிந்துவிட்டு, முற்றிலும் துறவிக் கோலத்தில் மாதேவடிகள் என்ற பெயரோடு துறவு வாழ்க்கையை மேற்கொண்டு விட்டதாய்... சொன்னான்.

பஞ்சவன்மாதேவி இடிந்து போனாள். வயிறு கலக்க கருண்டு வாயிற்படியில் உட்கார்ந்தாள். இராஜேந்திரன் வந்து சீறுவானே என்ன பதில் சொல்வது என்று நடுநடுங்கினாள்.

உலகமாதேவியும், மற்ற அரசிகளும் அழத் துவங்கினார்கள்.

அரசரும், பிரம்மராயரும் சிறு படையோடு புறப்பட்டுப் போனார்கள். மேல்மாடியிலிருந்து சிதம்பரம் போய், சிதம்பரத்திலிருந்து பூம்புகார் போய் அங்கிருந்து குதிரை மாற்றி நாகப்பட்டினத்தில் ஒரு படையோடு உள்ளே நுழைந்து புத்த விகாரத்தைச் சுற்றி வந்தார்கள். சந்திரமல்லியை வெளியே வரச்சொல்லி கட்டளையிட்டார்.

சந்திரமல்லி மறுத்துவிட்டாள். புத்த விஹாரத்திற்குள் பிரம்மராயர் புகமுற்பட்டபோது புத்த பிட்சுக்கள் கைவிரித்துத் தடுத்தார்கள். பிரம்மராயர் வாள் உருவினார்.

புத்த பிட்சுக்களின் தலைவர் வெளியே வந்தார். பிரம்மராயருக்கு அருகே வந்து கை கூப்பினார்.

"அப்படி வெட்டுவது என்றால் முதலில் என் தலையை வெட்டிவிட்டு இங்குள்ள அத்தனை பிட்கக்களையும் கொன்றுவிட்டு சந்திரமல்லியை நீங்கள் அழைத்துப் போகலாம். சந்திரமல்லி இனி அரண்மனைக்கோ, சைவ சமயத்திற்கோ திரும்ப மாட்டாள். முழுக்க புத்தருடைய கொள்கையைப் பிடித்து பௌத்தத் துறவியாக மாறிவிட்டாள். எனலே அவரைத் தொந்தரவு செய்ய வேண்டாம். விட்டு விடுங்கள்.'' என்று பணிலோடு கேட்டுக் கொண்டார் அத்தனை புத்த பிட்கக்களும் மண்டியிட்டு அரசரையும், பிரம்மராயரையும் வணங்கினார்கள்.

ஒருமுறை சந்திரமல்லியைப் பார்த்து விட்டுப் போகிறேன் என்று அரசர் சொல்ல, அரசருடைய உடைவாளைக் கேட்டு வாங்கிக் கொண்டார்கள்.

கால் பாதரட்சைகளைக் கழற்றச் சொன்னார்கள் மேல்துணிகளை அகற்றச் சொன்னார்கள். மணி முடியையும், கிரீடத்தையும் கழற்றி வைக்கச் சொன்னார்கள். உள்ளே லெறும் காலோடு மேல்வேட்டியும், இடுப்பு வேட்டியுமாய் அழைத்துப் போனார்கள். கால் கழுவினார்கள். புத்தருடைய சிலைக்கருகே அழைத்துப்போய் வணங்கச் சொன்னார்கள். மெல்ல புத்தரின் சிலைக்குப் பின்னிருந்து சந்திரமல்லி வெளியே லந்தாள். மழித்த தலையும், ஒற்றை ஆடையுமாய் அவள் நின்ற கோலம் பார்த்து விட்டு சக்ரவர்த்தி வாய்விட்டு அலறினார்.

"சண்டாளி... இது தேசத்துரோகமல்லவா... குடும்பத் துரோகமல்லவா... உனக்கு நான் என்ன குறை வைத்தேன். ஏன் இப்படி அவமானப்படுத்துகிறாய்." என்று சீறியபோது, "இதில் எந்த அவமானமுமில்லை. எனக்கு உயிர்கொடுத்த புத்தருக்கு நன்றிக்கடனாய் அவருடைய பாதத்தைச் சேர்ந்து விட்டேன். இதில் கோபப்படுவதற்கோ, அழுவதற்கோ எதுவுமில்லை. உங்களால் என்னைக் காப்பாற்ற முடியவில்லை. உங்கள் வைத்தியர்களால் எனக்கு வலுவூட்ட முடியவில்லை. என் லாழ்க்கைக்கும், உடம்புக்கும் வலு கொடுத்தது புத்த பகலான். எனவே, நான் பௌத்த மதத்தில் சேர்ந்து புத்தருக்கே தொண்டு செய்யும் எண்ணத்தை அடைந்தேன். என்னை மறந்து விடுங்கள். என்னை விட்டு விலகி விடுங்கள். எந்தத் தீங்கும் நினைக்காதீர்கள். என்னை யாரும் கவர்ந்து போகவில்லை. என்னை யாரும் கட்டாயப்படுத்தவுமில்லை.

இவர்கள் பேசப்பேச சைவ சமயத்தைவிட புத்தமதம் எல்லா வகையிலும் சிறந்தது என்பதைத் தெரிந்து கொண்டு நான் புத்த மதத்தைத் தழுவினேன். நாடு பிடிக்கும் ஆசையோ, பெண்களைப் பிடிக்கும் ஆசையோ, செல்வம் கொழிக்கும் ஆசையோ புத்த மதத்தில் இல்லை. வெறும் வாழ்தல் இருக்கிறது. வெறும் வாழ்தல், இறத்தல் என்பது மட்டுமே இருக்கிறது. கர்மாக்கள் செய்வதில்தான் பாபங்கள் அதிக மாகின்றன. புண்ணியம் என்று சொல்லும் கர்மாக்கள் கூட ஏதேனும் ஒரு வகையில் பாபத்தில் ஈடுபடுகின்றன. செயல் களைத் துறத்தல்தான் உத்தமமான விஷயம். செயல்களைச் செய்யச் செய்ய ஒரு மாயச்சுழலில் சிக்கிக்கொள்கிறது. நாம் எதுவும் செய்யாமல் வெறுமே இருக்கப் பிரியப்படுகிறேன். எனவே என்னை விட்டுவிடுங்கள் என்று சொல்ல சக்ரவர்த்தி அவனை வெறித்துப் பார்த்தார். அவள் மெல்ல சக்ரவர்த்தி முன்பு மண்டியிட்டாள்.

"நீங்கள் என்னைத் தகப்பனாய் இருந்து பெற்று வளர்த் தீர்கள். அதற்கான கடைசி முறையாய் உங்களை நமஸ்கரிக் கிறேன். இனி உங்களை நமஸ்கரிக்கவும் மாட்டேன். புத்தரைத் தவிர வேறு எவருக்கும் என் பணிதல் இல்லை. நீங்கள் போய் வரலாம்."

சக்ரவர்த்தி வெறுத்துப் பார்த்துவிட்டு திரும்பவும் வெளியே வந்து வாள் உடுத்தி பாதரட்சை போட்டு மணி முடி தரித்து, வாள் உருவி புத்த விஹாரத்தில் நின்று தன்னு டைய வாளை உயர்த்திப் பிடித்து கேடயத்தில் வேகமாகத் தட்டி சோழம்... சோழம்... என்ற கத்த வீரர்கள் வெறித் தனமாய் எதிரொலித்தார்கள்.

புத்த விஹாரம் நடுங்கிற்று. குதிரை ஏறி கோபமும், துக்கமும் கலந்த ஒரு வேதனையோடு சக்ரவரத்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் பழையாறை வந்தார். வரும் வழியில் இராஜேந்திரரைச் சந்தித்தார்.

"புத்த விஹாரத்தை தீக்கிரையாக்கி விடுகிறேன். அவனைக் கொன்று விடுகிறேன்." என்று கூவிய இராஜேந் திரரைச் சமாதானப் படுத்தினார்.

"ஒரு வார்த்தை அவள் சொன்னது உண்மை. அவளை நாம் பிழைக்க வைக்கவில்லை. பௌத்தர்கள் பிழைக்க வைத்தார்கள். இனி அவள் பௌத்தத்திற்கே உரியவளாய் இருக்கட்டும். எனக்குச் சந்திரமல்லி பிறக்கவில்லை என்றே

நான் எடுத்துக்கொள்கிறேன். சந்திரமல்லி என்ற பெயர் தவறு என்று அப்பொழுதே சொன்னார்கள். சந்திரனுடைய பெயர் தேய்ந்து வளரும் பெயர். எனவே இது வேண்டாம் என்றார்கள். நான் கேட்கவில்லை. அழகு என்று நினைத்து வைத்தேன். அது அவலமாகிவிட்டது. விட்டுவிடு அவளை மறந்துவிடு. நாம் நம்முடைய தொழிலைக் கவனிப்போம். சோழ தேசத்தில் சைவ மதத்தைப் பரப்புவோம். பௌத்தர் களுடையது மதம் மாற்றும் புத்தி. நாம் யாரையும் போய் சைவனாக மாறு. சனாதன தர்மத்தில் சேரு என்று சொல்ல வில்லை. ஆனால், இந்த பௌத்தர்களும், சமணர்களும் மதம் மாற்றுகிறார்கள். இது ஒருவிதமான அரசியல். இவர்கள் மீது கவனமாக இரு. அது போதும். இவர்களை அதிகம் பரவ விடாமல் தடுக்க வேண்டும். அதற்கு முதல் முதலாக ஊரறிய உலகமறிய பௌத்தர்களோடு நாம் சமாதானம் செய்து கொண்டது போல, நாகைப்பட்டினத்து பௌத்த விஹாரங்களுக்கு நன்கொடைகள் கொடு. நிலந்தங்கள் அளி. பௌத்தர்கள் வெளியே நடமாட முடியாதபடி மக்களோடு கலக்க முடியாதபடி செய். எந்த பௌத்தன் மக்களோடு கலந்தாலும் அவனைத் தடுத்து நிறுத்தி நாகைப்பட்டினத்திற் குத் தலையில் அடித்து அனுப்பு.

நம்முடைய சைவ மத விழாக்கள் மிக விமரிசையாக கொண்டாடப்பட வேண்டும். நம்முடைய குழந்தையை இவர்கள் பௌத்த மதத்திற்கு இழுத்தது போல் வேறு எவரையும் இழுத்து விடக்கூடாது. எனவே, அவர்கள் இழுக்க முடியாதபடி இந்த மதத்தோடு பின்னிப் பிணைந்து இவர்கள் இருக்க வேண்டும். அதற்குத் திருவிழாக்களும், கோயில் பூஜைகளும்தான் உதவி செய்யும். நம்முடைய சனாதன தர்மத்திற்கு எதிராக இவர்கள் சொன்ன பழியென்ன. ஜாதி வேற்றுமை. அதைக் களைந்தெடுக்கின்ற வழியைப் பார்க்க வேண்டும். இங்கு ஜாதிப் பிரிவினைகள் இருக்கின்றன. ஆனால் ஒருவருக்கொருவர் எந்த உரசலும் இல்லை. அவனும் சைவன், நானும் சைவன். வைணவர்களைப் போற்றுவோம். காணாபத்தியர்களை போற்றுவோம். குமரக் கடவுளைப் போற்றுவோம். சாக்த உபாசகத்தைப் போற்று வோம். இவர்களை ஒதுக்குவோம். நேரடியாக இல்லாமல் மறைமுகமாக இதைச் செய்வோம். நாகை விஹாரத்துக்கு நிலந்தம் கொடுப்பதைப் பெரிதுபடுத்து. நம்முடைய விழாக் களைத் துரிதப்படுத்து. புத்த பிட்சுக்கள் வந்தால் வணக்கம்

சொல்லி வீட்டிற்குள் போய்விடுகின்ற ஒரு பழக்கத்தை ஏற்படுத்து. மருத்துவத்தை முன்னே கொண்டு வந்து தானே இவர்கள் இப்படி பேசுகிறார்கள். சமணர்களும் இந்தத் தந்திரத்தைக் கையாளுகிறார்களல்லவா. குந்தவை முன்னரே சொன்னாள். ஆதுரச்சாலைகள் அமைப்பது முக்கியம். பெண்கள் பல்வேறு நோய்களால் கஷ்டப்படுகிறார்கள் என்று, இனி அனேகமாய் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஆதுரச்சாலை வேண்டுமென்று கிராம அதிகாரிகளுக்குக் கட்டளையிடு. மருத்துவப்படிப்புக்கு முக்கியத்துவம் கொடு. இவை எதையும் நேரடியாகச் செய்யாதே. மறைமுகமாகச் செய். மருத்துவம் என்பது மருத்துவச் சாதியில் பிறந்தவர்களுக்கு மட்டுமல்ல. சகலரும் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். நாடி பிடித்துப் பார்க்கவும், விஷ முறிவு செய்யவும், வயிற்றுப் போக்குக்கு மருந்து கொடுக்கவும் எல்லா ஜாதியினருக்கும் தெரிந்திருக்க வேண்டும். நான் சந்திரமல்லியை இழந்தது பற்றிக் கவலைப் படவில்லை. அது ஒரு கதறலில் முடிந்து விட்டது. என் சோழதேசத்தை ஒரு நாளும் எவருக்காகவும் இழக்கமாட்டேன். என் சைவ சமயத்தை இழக்க மாட்டேன். சைவ சமயமே சமயம். சேரவாரீர் ஜகத்தீரே என்று சொல்லாமல் சொல்வேன். என்னென்ன விழாக்களைக் கொண்டாடலாம்." என்று அவர் கேட்க, சட்டென்று இளவரசர் இராஜேந்திரர் எழுந்து நின்றார்.

''அப்பா இப்பொழுதுதான் உங்களை நான் முழுமனதாக ஏற்கிறேன். இதைத்தான் நானும் விரும்பினேன். நான் இதை இன்னும் நேரடியாகவும், முரட்டுத்தனமாகவும் கையாண்டிருப்பேன். நீங்கள் மிகுந்த கெட்டிக்காரத்தனமாக மறைமுகமாகச் செய்ய வேண்டுமென்கிறீர்கள். உங்களை எப்படி பாராட்டுவது என்று தெரியவில்லை. நாம் செய்ய வேண்டிய திருவிழாவில் முதன்மையான திருவிழா ஐப்பசி சதய விழாவைக் கொண்டாடுவது."

"எதற்கய்யா..

பணிவோடு இராஜராஜர் கேட்டார்.

"உங்களுடைய பிறந்த நாள்தான் இனி இங்கு முக்கியப் பெருவிழாவாக இருக்க வேண்டும். எல்லாக் கோவில் களிலும், எல்லாக் கிராமங்களிலும், எல்லா ஊர்களிலும் ஐப்பசி சதயப் பெருவிழா கொண்டாடப் பட்டே ஆக வேண்டும். சித்திரைத் திருவிழா, ஆனித் திருமஞ்சனம் என்று

படிப்படியாக ஒவ்வொரு மாதமும் கோயில்களில் விழா எடுப்பது நடைபெற வேண்டும்.”

அவர்கள் திட்டமிட்டார்கள். விரைவாக எவ்வா ஊர்களிலும் திருவிழா நடக்க காசு செலவழித்தார்கள்.

சந்திரமல்லியை மறந்து போனார்கள்.

“என் தவறுதான்.”

பஞ்சவன்மாதேவி சக்ரவர்த்தியிடம் மன்னிப்பு கேட்டாள்.

“இல்லை. உன் தவறல்ல. அவள் திருடி. ஓடுகாலி. இந்த சோழதேசத்தின் சிறப்புகள் எல்லாவற்றையும் அனுபவித்து விட்டு இதைவிடவும் சிறப்பான விஷயங்கள் உலகத்தில் இருக்கத்தானே செய்யும் என்று குறுக்குக் கணக்கு போட்டு நகர்ந்து போயிருக்கிறாள். போகட்டும் போய் புரிந்து கொள்ளட்டும். இப்போது சொல்கிறேன் பஞ்சவன்மாதேவி ஒரு நாள் அவள் வருவாள். உதவியாக அல்ல என் மகளாக, பௌத்தத்தை வெறுத்து சைவத்தைப் புரிந்து கொண்டு சோழ தேசத்தின் மீது காதலுடனும் இந்த உடையார் குலத்தின் மீது நம்பிக்கையோடும், இது அறவழியில் செல்கின்ற வாழ்க்கை என்று புரிந்து கொண்டு வருவாள். அதுவரை காத்திருப்போம். அதுவரை அவளைப்பற்றி மறந்திருப்போம். இந்தச் சோழதேசம் சந்திரமல்லியைப் பற்றி எந்த விதத்திலும் நினைவு கூற வேண்டிய அவசியம் இல்லை. நமக்கு நிறைய வேலைகள் இருக்கிறது பஞ்சவன்மாதேவி.

கீழைச்சாளுக்கியத்தின் துணையோடு மேலைச் சாளுக்கியர்கள் நம்மை அழிக்க நினைக்கிறார்கள். இது தடுக்கப்பட வேண்டும். சந்திரமல்லி சோழதேசம் வருவாளோ, இல்லையோ கீழைச்சாளுக்கியத்திலிருந்து நல்ல உறவுகள் நம்மை நாடிவர வேண்டும். மேலைச்சாளுக்கியர்களுக்கு எதிராக அரசியல் செய்ய வேண்டும். எனவே, நீதான் அரண்மனையைக் கவனித்துக்கொள்ள வேண்டும். கீழைச் சாளுக்கியம் மேலைச்சாளுக்கியம் என்று அலையும்போது கீழைச் சாளுக்கியத்திலிருந்து குமரிமுனை வரை இராஜேந்திர சோழன் நமது கடல்பகுதியைப் பலப்படுத்துவான். பரதவர்களோடு நெருங்கிய ஸ்நேகம் கொள்வான். ஒன்று தெரியுமா பஞ்சவன் மாதேவி திருமயிலையிலுள்ள வணிகர்கள் இன்னும் சற்று வடக்கு பக்கமாக நகர்ந்து கீழைச்சாளுக்கிய பரதவர்களோடு

நல்ல ஸ்நேகம் வளர்த்துக்கொண்டு கங்கையின் முகத்துவாரம் வரைக்கும் போயிருக்கிறார்கள். அங்கிருந்து யாத்ரீகர்களாக இன்னும் வடக்குநோக்கி நகர்ந்து இமயமலையின் அடிவாரம் வரை போயிருக்கிறார்கள். வேறு நாகரிகம், வேறு மக்கள், வேறு விதமான பழக்க வழக்கங்கள், வேறுவிதமான தோற்றம், வேறுவிதமான நிறம், வேறுவிதமான மொழி.

அவர்கள் இராஜேந்திரனிடம் பேச இராஜேந்திரன் என்னிடம் விவரித்த போது வியப்பாக இருந்தது. சோழ தேசம் மட்டும் உலகமில்லை. ஆனால், சோழ தேசத்தின் நாகரிகத்தை அங்கு சொல்ல வேண்டும். கடல் கடந்தும் பரப்ப வேண்டும் என்ற ஆசை எனக்கு உண்டு. சந்திர மல்லியை மறந்துவிடு. பஞ்சவன் மாதேவி நான் மறந்து விட்டேன்.”

மல்லாக்க கட்டிலில் சாய்ந்து சக்ரவர்த்தி பேசிய போது அருகே உட்கார்ந்திருந்த பஞ்சவன்மாதேவி அவர் நெஞ்சைத் தடவிக் கொடுத்தாள். முகத்தை வருடி விட்டாள். தோள் பட்டையை, புஜங்களைப் பிடித்து விட்டாள்.

“பஞ்சவன்மாதேவி ஒவ்வொரு உயிரும் பிறக்கிற போது தாயின் கருப்பைக்குள் மிகச் சௌகரியமாக வாழ்கிறது. ஆனால், அந்தச் சுகம் அந்த நிம்மதி பூமிக்கு வந்த பிறகு கிடைப்பதில்லை. ஆனால், அதுவரை அனுபவித்த அந்த சுகமும் நிம்மதியும் மறுபடியும் வேண்டுமென்று எதிர்பார்க் கிறது. தாயினுடைய நெஞ்சில் அந்தச் சுகத்தை ஓரளவு பெறுகிறது. தாய் தள்ளிவிட்ட பிறகு உலகத்திற்குப் போ என்று அனுப்பியபிறகு அது மனைவியிடத்திலே தாயின் அன்பைப் பெறுகிறது. மனைவியிடமும் அந்தத் தாயின் அன்பும் முழுமையாகக் கிடைக்காததால் என்ன செய்வது என்ற திகைத்துப் போகையில் மகள். ஐந்து வயது மகள் அணைத்துக் கொண்டு கொஞ்சும்போது, பத்து வயது மகள் கைபிடித்து நடக்கும்போது தாயினுடைய அண்மையை அவள் நேசத்தை, அவள் கருப்பைக்குள் பாதுகாப்பாக இருந் ததை இந்தப் பெண் குழந்தையின் தொடலில் அருகாமையில் ஒரு ஆண் உணர்கிறான்.

ஆனால், பஞ்சவன்மாதேவி அதுவும் பொய். தாயின் கருப்பை சுகம் மனிதனுக்குக் கடைசி வரையில் கிடைப்ப தில்லை. இறைவன் என்கிற நினைப்பு, இறைவனுடைய ஆளுமை கிடைத்தாலொழிய அந்தச் சுகம் வருவதில்லை.

நாமெல்லாம் கடவுளைத் தேடுவதற்குக் காரணம் தாயின் கருப்பை தேடுவதுதான். தாயின் கருப்பை அனுபவம்தான். சந்திரமல்லியை என் தாய் என்று கொண்டாடியிருக்கிறேன். அது இல்லை என்றாகி விட்டது. நான் தனியன். எவரு மில்லாதவன்."

சக்ரவர்த்தியின் கண்களிலிருந்து நீர் வழிந்தது. பஞ்சவன் மாதேவி அமைதியாக அவரையே பார்த்துக் கொண்டிருந் தாள். தன்னுடைய மேல்துணியால் சக்ரவர்த்தியின் முகத் தைத் துடைத்தாள். அவருக்கருகே படுத்துக் கொண்டாள். தன் நெஞ்சை அவர் முகத்தில் வைத்து மெல்ல அழுத் தினாள். இறுக்க அணைத்துக் கொண்டாள். என்னப்பா என்று அவர் உடம்பு முழுவதும் தடவிவிட சக்ரவர்த்தி உறங்கிப் போனார்.

சோழநாடு இந்த விஷயத்திலிருந்து விடுபட்டு சாதாரண மாகியது. சக்ரவர்த்தி பேசி அழுததை பஞ்சவன்மாதேவி பிரம்மராயரிடம் சொன்னாள். பிரம்மராயர் பஞ்சவன் மாதேவி பேசியதைக் குறித்து சக்ரவர்த்தியிடம் பேசும்போது, சக்ரவர்த்தி சிரித்தபடியே பிரம்மராயரின் தோளை அணைத்துக் கொண்டார்.

அதுவொரு பலவீனமான நேரம். அதேசமயம் உண்மை யான நேரமும் கூட.

"பிரம்மராயரே நான் மறந்துவிட்டேன் என்றாலும் நீர் சந்திரமல்லியை மறந்துவிட வேண்டாம்." என்று மிருதுவான குரலில் பேசினார்.

பிரம்மராயருக்கு ஒன்றும் புரியவில்லை.

"நேரடியாக உங்களைச் சம்மந்தப்படுத்திக் கொள்ளாது, ஆட்கள் அனுப்பி நாகைப்பட்டினத்து புத்த விஹாரத்தைக் கவனித்துக் கொள்ளச் சொல்லுங்கள். சந்திரமல்லிக்கு எந்த ஆபத்தும் வராத வண்ணம் ஒரு பார்வை வைத்துக் கொள் ளுங்கள். பௌத்தத்திற்கு எதிராக இருக்கின்ற காபாலிகர் களும், காளாமுகர்களும் நமது சந்திரமல்லிக்கு ஆபத்து ஏற் படுத்தாது இருக்கட்டும். சந்திரமல்லிக்கு வசதிகள் வேண்டும். எனவே அந்த புத்த விஹாரத்திற்கு வேண்டுவன கொடுங்கள். நீங்கள் கொடுக்க வேண்டாம். பொது மக்களை கொடுக்கச் செய்யுங்கள். வேளாளர்களை அனுப்பி அரிசி மூட்டையும் மற்ற தானியங்களும் வழங்கச் சொல்லுங்கள். அவர்களுக்குச்

சந்தேகம் வராத வண்ணம் நடந்து கொள்ளுங்கள். சந்திர மல்லி எங்கிருக்கிறாள் என்பதைக் கவனித்துக் கொள்ளுங்கள்.

அவர்கள் நாகை விஹாரத்திலேயே சந்திர மல்லியை வைத்திருக்க மாட்டார்கள். இடம் மாற்றுவார்கள். அதுவும் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம்."

சந்திரமல்லி நாகை விஹாரத்திலிருந்து ஈழம் போனதாக வும், ஈழத்திலிருந்து திரும்பி வந்து நாகையில் சில காலம் தங்கியதாகவும், நாகையிலிருந்து திருவண்ணாமலைக்கு அருகேயுள்ள மலைப் பகுதிகளில் வாழ்ந்ததாகவும் அங்கிருந்து காஞ்சிபுரம் சென்று விட்டதாகவும் அவ்வப்போது தகவல்கள் வந்து கொண்டிருந்தன. தெளிவாகவும், பலமாகவும், கூர்மை யாகவும் இருக்கிறாள் என்றும், தன்னை எந்த இடத்திலும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை என்றும் சொல்லப்பட்டன. சோழ தேசத்து சைவக்கோவில்களிலும், வைணவக் கோவில் களிலும் திருவிழாக்கள் பலமாக நடக்கின்ற புண்ணியத்தைச் சந்திரமல்லி கட்டிக் கொண்டாள். அவளே காரணமானாள்.

ஒரு தேசத்தின் ஒற்றுமைக்கு இம்மாதிரியான திருவிழாக் கள் காரணம் என்பதை பிரம்மராயரும் இராஜேந்திர சோழரும், மற்ற அதிகாரிகளும் நன்றாகப் புரிந்து கொண்டு, இந்த மாதிரி விழாக்களில் தங்களுடைய முழு கவனத்தையும் செலுத்தினார்கள். நேரடியாய் கலந்து கொண்டார்கள். மக்களோடு கலந்து பேசினார்கள். திருவிழாக்களுக்காக வரி வசூலிக்கிற பொழுதுதான் வேளாண்மையிலுள்ள மாறுபாடும் ஏற்றக் குறைவும் தெரிந்தது. சில பகுதிகள் அற்புதமாக விவ சாயம் நடக்க, சில பகுதிகளில் விவசாயம் தட்டுத் தடுமாறி இருந்தது. அப்பொழுது வரிவிதிப்பு அதற்கேற்ற வண்ணம் இருக்க வேண்டுமென்று ஒரு சட்டதிட்டமும் ஏற்பட்டது. விளைநிலங்கள் வைத்திருப்பவர் வெறும் நிலங்கள் என்று சொல்ல அதுபற்றியும் கேள்வி எழுந்தது. அப்பொழுது விளைநிலங்கள் என்ன, எவ்வளவு வரி வசூலிக்கலாம், எப்படி வருமானம் வரும் என்ற ஒரு பெரிய கேள்வியும் எழுந்து நிலங்களை அளக்க வேண்டும் என்ற எண்ணமும் ஒரு திரு விழாவின் போதுதான் ஏற்பட்டது. விளைநிலங்கள் அளக்கும் பணியைச் செய்துவிட முடியுமா என்ற கேள்வியும் எழுந்தது.

அரசவை கூடி நாள் கணக்கில் விவாதித்ததில் இதைச் செய்துதான் ஆகவேண்டும் என்ற தெளிவும் ஏற்பட்டது. ஆனால் செய்வதற்குப் போர்கள் இடைஞ்சலாக இருக்குமே

என்று யோசித்தபோது போரில் ஈடுபடாத, இதையே செய்து கொண்டிருக்க வேண்டிய அவசியமுள்ள ஒரு அதிகாரி தேர்ந்தெடுக்கப்பட்டார். மிகப்பெரிய குழுவை கொங்கு தேசம் வரை அனுப்பி நிலம் அளந்தார்.

தெற்கே திரிசிரபுரம் வரை இந்த அளவு வேலை நடந்தது. இம்மாதிரி புதிய திட்டங்கள் வரும்போது சந்திரமல்லியி னுடைய பேச்சு வரும். விசாரணை வரும். இப்போது அந்த சந்திரமல்லியே நேரில் வந்திருப்பது பார்த்து பிரம்மராயர் வியந்தார்.

"பழையாறையில் இருப்பதற்கா வந்திருக்கிறாய் சந்திரமல்லி."

பிரம்மராயர் பரிவோடு கேட்டார்.

"இல்லை என் தந்தை எங்கிருக்கிறாரோ அங்கு இருப்பதற்காக வந்திருக்கிறேன்."

"மறுபடியும் தந்தையோடு சேரவேண்டும் என்று விரும்பு கிறாயா. உன் தந்தை உன்னை ஏற்றுக்கொள்ளார் என்று நினைக்கிறாயா."

"என் தந்தை ஏற்பது பற்றி எனக்கு எந்தக் கேள்வியும் இல்லை. அவர் ஏற்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் என் தந்தை எந்த இடத்தில் வசிக்கிறாரோ அந்த இடத்தி லிருந்து சற்று தூரத்தில் நான் இருக்க விரும்புகிறேன். மி கப்பெரிய கோயிலொன்றை என் தந்தை கட்டப்போவதாக அறிந்தேன். அதுபற்றி பல கனவுகள் எனக்கு ஏற்பட்டன. கனவுகள் என்ன சொல்கின்றன என்று கண்டுபிடிக்க சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கனவுகளை ஆராயும் வகை எனக்கு நன்கு தெரியும். பரத கண்டத்தின் புகழை உலகமெங்கும் பரப்புகின்ற ஒரு அற்புதமான காரியத்தை என் தந்தை தானொருவராகச் செய்ய ஆரம்பித்திருக்கிறார். இது தடங்கலின்றி நடக்க வேண்டும். இதற்காகவே வந்தேன்."

"ஒரு பெளத்தருடைய உதவி சைலக்கோயில் கட்ட தேவையென்று நினைக்கிறீர்களா அடிகளே." என்று நிதானமாக பிரம்மராயர் கேட்டார்.

அவர் குரலில் கோபமும் கேலியும் இருந்தன.

"என்ன."

"ஒரு பௌத்தருடைய உதவி தேவையில்லை என்பது என் கருத்து. பிறகு நீங்கள் சொல்வதின் அர்த்தம் என்ன."

"நான் இங்கு புத்தமதத் துறவியாக வரவில்லை."

"என்ன சொல்கிறீர்கள்."

"நான் புத்த மதத்தில் இல்லை."

"சைவத்திற்கு மாறிவிட்டீர்களா."

"சைவத்துக்கும் மாறவில்லை. நான் மதம் கடந்து நிற்கிறேன் பிரம்மராயரே. நான் வெறும் சந்திரமல்லி. அவ்வளவுதான். மாதேலடிகள் அல்ல."

"ஆனால், காவியுடையில் இருக்கிறீர்களே."

"வேறு உடை இல்லை, அதனால் காவியுடையில் இருக்கிறேன்."

"தலையையும் மழித்திருக்கிறீர்களே."

"மழித்தலும், நீட்டலும் முக்கியமல்ல. அதுபற்றி மறந்திருப்பதே உத்தமம்."

"சந்திரமல்லி... நீ என்ன சொல்கிறாய் என்று எனக்குப் புரியவில்லை."

"இது ஒரு கதை பிரம்மராயரே. சந்திரமல்லி பலியிடப் பட்ட கதை. சோழச் சக்ரவர்த்தி புகழோடும் பெருமை யோடும் வளருவது கண்டு பொறாமைப்பட்ட பல்வேறு தரப்பினர் ஒன்று சேர்ந்து புத்த மதத்தினரைத் தூண்டி விட்டு, அந்த புத்த மதத்தினர் சந்திரமல்லியிடம் வந்து, அந்த சந்திர மல்லியின் காதலனைக் குத்திக் கொன்று, இந்த காதலன் இறந்து போக உணர்ச்சி வசப்பட்ட இரண்டுங்கெட்டானான இந்தச் சந்திரமல்லி ஏதும் செய்வாள் என்று புரிந்துகொண்டு, அவள் தற்கொலை செய்ய முயற்சிக்க, அவளைக் காப்பாற்று கின்ற சாக்கில் உள்ளுக்குள் வந்து வைத்தியம் செய்து மெல்ல அவளைக் குணப்படுத்தி அவள் மூளையையும் சலவை செய்து மாற்றி, புத்த மதத்திற்கு இழுத்துப்போய் சக்ரவர்த்தியின் வலிமையைக் குறைத்து அவரை மன வேதனைக்குள்ளாக்கி, அவர் நொறுங்கிவிட மாட்டாரா என்று கனவு கண்டு, அப்ப னுக்கும், பிள்ளைக்கும் சண்டை வாராதா என்று காத்திருந்து இவை எதுவும் நடைபெறாமல் ஏமாந்த குள்ளநரிக் கூட்ட மாக உட்கார்ந்திருந்த கதை அது."

“என்ன சொல்கிறாய் சந்திரமல்லி. இது திட்டமிடப் பட்ட செயலா...

“ஆமாம். சிங்களரின் தூண்டுதலால், பாண்டியர்களின் தூண்டுதலால், சேரர்களின் வழி காட்டலால் சோழ தேசத்தைச் சேர்ந்த பௌத்த மதத்தினர் செய்த திட்ட மிடப்பட்ட சதி. அது சந்திரமல்லியைப் பழிவாங்கி விட்டது. என்னைப் பலி கொண்டு விட்டது.”

“என்ன அயோக்கியத்தனம். யார் இதற்கு மூல காரணம். ஒருவரா... இருவரா...

“சோழதேசம் உயர்ந்தால் ஒரு தனி மனிதன் உற்சாக மாக மேலே வந்தால் அவரைச்சுற்றி பல்வேறு எதிரிகள் முளைப்பார்கள். அவனால் பாதிக்கப்பட்டவர்கள் ஒன்றாகத் திரளுவார்கள். அவனை எப்படி வீழ்த்துவது என்று பல்லேறு விதமாக யோசிப்பார்கள். அதில் ஒருவிதம் இது.”

“இன்னொரு விதம் எது.”

“கீழைச்சாளுக்கியமும், மேலைச்சாளுக்கியமும் பிளவுபட் டிருக்கிறது. அது தாயாதி சண்டை. அவர்கள் இருவரும் ஒன்றாகிவிட்டால் சோழதேசத்தைப் பூண்டோடு நசுக்கி எடுத்துவிடவாம் என்று திட்டம்.”

“இதை யார் செய்கிறார்கள்.”

“சேரர்கள் செய்கிறார்கள். சேர தேசத்திலுள்ள காந்த ளூர்ச்சாலை கடிகையிலுள்ள அந்தணர்கள் செய்கிறார்கள். அவர்கள் ஓட்டு மொத்தமாய் மேலைச் சாளுக்கியம் போய் மேலைச்சாளுக்கியத்திலிருந்து கீழைச்சாளுக்கியத்திற்கும் ரத்த சம்மந்தமாக திருமணமும் மற்ற உறவுகளும் ஏற்படுத்த முயலுகிறார்கள்.”

“உனக்கு இது எப்படி தெரிந்தது.”

“நாகை புத்த விஹாரத்திற்கு எனக்கு வைத்தியம் செய்து அழைத்துப்போன துறவி சொன்னார்.”

“எப்போது.”

“மரணப்படுக்கையில் இருக்கும்போது அருகே அழைத்து இதுதான் உன் கதை. இதை நிறைவேற்றியவன் நான். உண்மை யில் உன் காதலன் சுகவனைக் கொன்றது இராஜேந்திரன் இல்லை. அவர்கள் சிங்களர்கள். சிங்கள புத்த குருமார்கள்.

யோசனைப்படி நடந்த சதித்திட்டம் இது. பாண்டியர்கள் இதற்கு நல்ல ஆதரவு தெரிவித்தார்கள். சிங்களர்களைத் தொண்டி வழியாக உள்ளே அழைத்து வந்தார்கள். நன்கு தமிழ் பேசப்பழக்கி பிறகு நாகை விஹாரத்தில் கூலி வேலைக்கு அமர்த்தினார்கள். அப்படிச் செய்யுங்கள் என்று சேரர்கள் தான் சிங்களர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். சோழ மன்னன் தன் மகள் மீது மிகப்பெரிய பாசம் வைத்திருக்கிறலன். அவனுடைய மனோரீதியான வலுவை உடைத்தால் அதனால் அவன் தேசத்தை உடைத்துவிட முடியும் என்று சொன்னலர்கள்."

"நாகை புத்த விஹாரம் இதில் ஈடுபட என்ன காரணம்."

"சோழ மன்னன் சைவ மதத்தை மிகப் பிரமாண்டமான முறையில் ஆதரித்து வளர்த்து வருகிறான். சோழதேசம் சைவ மதத்தின் பாற்பட்டு ஒன்றாகி இறுகி இருக்கிறது. வைணவத்தின் மீது துவேஷம் கொள்ளாமல் இருக்கிறது. அதுமட்டுமல்ல குந்தவை தேவியார் பாண்டியர்களையும் அரவணைத்து சிவாலயங்களுக்கு வேண்டுமென்று பொருளுதவி செய்து கொண்டிருக்கிறார். பௌத்தர்கள் மட்டும் தனித்துவிடப்பட்டிருக்கிறார்கள். அதிகம் ஆதரிக்கப்படாமல் இருக்கிறார்கள். பௌத்த மதம் பரவவேண்டும். மதத்தின் பாற்பட்டு இறுகிய சோழதேசம் உடைபட வேண்டும். சைல மதத்தின் குறைகளைப் பெரிதுபடுத்த பௌத்தர்களால்தான் முடியும். அந்தணர்களின் ஆளுமை அதிகம் இருப்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். அந்தணர்களுக்கும் அந்தணர்கள் அல்லாதவர்களுக்கும் உள்ள வேற்றுமைகளைப் பெரிதுபடுத்திக் காட்ட வேண்டும். அந்தணர்களை எதிர்த்தால் சைல வைணவ மதங்கள் சிதறிப்போகும். எனவே, அந்தணர்கள் மீது வெறுப்பை ஏற்படுத்துகின்ற செயலையும் செய்ய லேண்டும் என்று அதற்கும் சரியாக ஆளை அனுப்பினார்கள்."

"அடப்பாவிகளா."

பிரம்மராயர் பதறினார்.

"இதெல்லாம் எங்கே திட்டமிடப்பட்டன."

"திட்டமிடப்பட்டது தெற்கு ஈழத்தில். செயலாற்றக் கூடியலர்கள் குழுமியது நாகை புத்த விஹாரத்தில், சோழ தேசத்திற்கெதிராகப் பல்லேறு விதமான வேலைகள் அங்கு நடைபெற்றன."

"நிவந்தம் வாங்கினார்களே."

"ஆமாம். அதை உங்களுக்கெதிராகவே பயன்படுத்திக் கொண்டார்கள்."

"சமூகமாக வாழ அவர்களுக்கு விருப்பமில்லையா."

"அப்படி சொல்ல இயலாது. நாகை புத்த விஹாரத்திலுள்ள சில புத்தத் துறவிகளுக்கு இந்த அரசியல் அணுகுமுறை பிடிக்கவில்லை. இந்த சூழ்ச்சிகள் விருப்பமில்லை. ஆனாலும், சிங்கள புத்த விஹாரத்திலிருந்து வரும் பிட்கக்களுடைய கட்டளைகளை மீற முடியவில்லை."

"மீறினால் என்ன ஆகியிருக்கும்."

பிரம்மராயர் கேள்வி கேட்டார்.

"நாகை புத்த விஹாரம் அமைதியே கூட கெடுக்கப்பட்டிருக்கும்."

"உன்னை அழைத்துப்போன துறவி உன்னிடம் சொல்லக் காரணம் என்ன."

"அவர் ஒரு நல்ல துறவி. சரியான புத்த மதவாதி. இப்படியொரு அரசியல் பண்ண வேண்டியது அவசியம் தானா என்று அடிக்கடி எதிர்த்துக் குரல் எழுப்பியவர் அவர். அப்படி எழுதியதற்காக சில முறை அவர் தண்டிக்கப்பட்டும் இருக்கிறார். அவர் அடிப்படையில் தமிழர். வேளாளர். பிறப்பால் சைவர். புத்த மதத்தில் ஈடுபாடு கொண்டு பௌத்தராக மாறியவர். அவரை புத்தமதத் துரோகி என்கிற கல்லை மூன்று நாட்கள் சுமக்கச் சொன்னார்கள். அவர் சுமந்தும் இருந்தார். மரணப்படுக்கையில் காஞ்சிபுரத்தில் அவருக்கு நான் வைத்தியம் செய்தபோது என்னுடைய பணிவிடைகள் பார்த்து மனம் நெகிழ்ந்த போது நான் இறக்கப் போகிறேன். என்னால் இதை ஒளித்து வைத்துக்கொள்ள முடியவில்லை. இதோ இதுதான் உன் வாழ்க்கை என்று விரிவாகச் சொன்னார்."

"இது எப்போது நடந்தது."

"போன மாதம்."

"ஏன் உடனடியாகத் தெரிவிக்கவில்லை."

"எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. இது மொத்தமும் உள்வாங்கி நான் யோசனை செய்ய இத்தனை காலம் பிடித்தது. எந்தப் பாவமும் அறியாத சுகவனனை என் வாழ்க்கை பலிகொண்டுவிட்டது. அந்த அப்பாவி இறந்ததற்கு நானும் காரணமாகி விட்டேன். அது என்னை உறுத்தியது. மிகப்பெரிய பாவம் என்று தோன்றியது. எல்லா வற்றையும்விட மிகப்பெரிய பாவம் என்னுடைய தந்தையை நான் கதறடித்திருக்கிறேன். என் தமையனை... சந்தேகப்பட்டு நான் இழிவாகப் பேசியிருக்கிறேன். அவரைத் துடிக்க வைத் திருக்கிறேன். என் தாயின் வயிற்றெரிச்சலையும் கொட்டிக் கொண்டிருக்கிறேன். என் சிற்றன்னையின் வேதனைகளுக்குக் காரணமாக இருக்கிறேன். சோழதேச மக்கள் திகைத்துப் போய் நிற்கின்ற பெரும் பாவத்தைச் செய்திருக்கிறேன். இதற்கு நான் பரிகாரம் செய்ய வேண்டும். இந்த பாபத்திற் கான கழுவாயைத் தேட வேண்டும். எனவே புத்தமதம் என்ற விஷயத்தைத் தொடர்ந்து பொய்யர்கள் எங்கும் உண்டு என்பதைப் புரிந்து கொண்டு, நல்லவர்கள் எங்கும் உண்டு என்பதைப் புரிந்து கொண்டு மறுபடியும் பழையாறை வந்திருக்கிறேன்."

"இவர்களெல்லாம் யார்."

"என்னைப்போல பல்வேறு விதமாக இந்த விஹாரத்தில் பாதிக்கப்பட்டவர்கள். அவர்களும் புத்த மதத்தைத் துறந்து பாண்டிய தேசம் போகிறார்கள். எனக்கு வழித்துணையாக வந்தார்கள்."

"அவர்களை விடுவித்து விடலாமா."

"என்ன கைது செய்திருக்கிறீர்களா."

"ஒரு அறையில் உட்காரவைத்திருக்கிறேன். எனக்கொரு சந்தேகம். அதனால் காவலும் வைத்திருக்கிறேன்."

"வேண்டாம். அவர்கள் ஒரு பாவமும் அறியாதவர்கள். அதேசமயம் உங்கள் கவனமும் தவறில்லை. இந்த காவலோடு நீங்கள் பாண்டிய தேசத்திற்கு அனுப்பி விடலாம்."

"அவர்களை அனுப்பி விடலாம். நீ என்ன செய்வதாக உத்தேசம் சந்திரமல்லி."

"என் தந்தையைப் பார்க்க வேண்டும். அவர் காலில் விழுந்து வணங்கி மன்னிப்பு கேட்க வேண்டும். என்

தலைவனைப் பார்க்க வேண்டும் நான் செய்தது பிசகு. என் முடிவுகள் தவறு என்று அவரிடம் கைகூப்பி இறைஞ்ச வேண்டும். அவரை வேதனைப்படுத்தியதற்காக வருத்தப்பட வேண்டும். பட்டமகிஷியை என் தாயை, பஞ்சவன்மாதே வியை மற்ற அரசியர்களைச் சந்தித்து திரும்பி வந்துவிட்ட தைக் கூற வேண்டும். சோழ மக்களுக்கு என் வருகை அறிவிக்கப்பட வேண்டும். எந்த இடத்தில் சக்ரவர்த்தியார் கோயில் கட்டுகிறாரோ...

"கோயில் கட்டுவது உன் தந்தை சந்திரமல்லி."

"இல்லை அவர் என்னை மகளே என்று ஏற்காமல், அவரை நான் தந்தை என்று அழைப்பதில் எந்தப் புண்ணிய மும் இல்லை. அவர் என்னை மகளாக ஏற்றால்தான் நான் அவரைத் தந்தை என்ற அழைக்க முடியும். மற்றபடிக்கு நான் சோழதேசத்துப் பிரஜை அவர் எனக்கு சக்கரவர்த்தி. சக்ரவர்த்திக்கு ஆதரவாக நான் விலகி நின்று கோவில் கட்டுகிற இடத்திலிருந்து என்னுடைய மனோபலத்தின் மூலம் அவருக்குப் பாதுகாப்பு அளிப்பேன்."

"உன் பாதுகாப்பு தேவைதானா அவருக்கு."

"பாண்டியர்களிடமிருந்தும், சாளுக்கியர்களிடமிருந்தும், கங்கர்களிடமிருந்தும் காப்பாற்ற நீங்கள் இருக்கிறீர்கள். ஆனால், இவர்களில்லா சில விஷயங்கள் அவரைச் சுற்றி வருவதற்கு வாய்ப்பு இருக்கின்றன. அந்த விஷயங்களிலிருந்து காப்பாற்ற என்னால் இயலும். நான் பௌத்த விஹாரத்தில் இவ்விதமான விஷயத்தைப் படித்திருக்கிறேன்."

"அப்படி காப்பாற்றவும் தஞ்சையில் ஒரு ஆள் உண்டு. அவர் பெயர் கருவூர்த்தேவர்."

"ஆனால், அவரால் ஒரு இடத்தில் பொருந்தியிருக்க முடியாது. நான் பொருந்தியிருக்கப் போகிறேன்."

"எங்கே."

"எங்கே கோயில்கட்டுகிறாரோ அங்கே."

"அப்படி ஒருவர் பொருந்தியிருக்க வேண்டிய அவசியம் என்ன."

"சூட்சும சக்திகளில் மோசமானவை அங்கு அதிகமி ருக்கின்றன. கோவில் கட்டுவதற்கு இடைஞ்சலாக பல்வேறு

விஷயங்கள் நடை பெறுகின்றன; சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் புகழடைந்துவிடக் கூடாது என்று ஒரு வெறியிலேயே பலபேர் இருக்கிறார்கள். குறிப்பாக சேரர்கள். பல இழிவான செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

"இது உனக்கு எப்படித் தெரியும்."

"நான்தான் சொன்னேனே. எனக்கு கனவுகளில் சிலது வரும் என்று."

"எனக்கு என்ன கனவுகள் என்று சொன்னாய்."

"இல்லை உங்களிடம் விளக்கிக் கொண்டிருக்க முடியாது. நீங்கள் வேண்டுமானால் எனக்கு பலமான காவல் போட்டுக் கொள்ளலாம். எனக்குத் தேவை கோவில் கட்டும் இடத்திலிருந்து தென்மேற்கே ஒரு குடிசை. அது நீர்நிலைக்கு அருகே இருப்பின் நிம்மதி."

"இளவரசி சந்திரமல்லி அவர்களே, உங்கள் வருகை நல்வருகையாகட்டும். சோழ சாம்ராஜ்ஜியம் உங்கள் வருகையால் மலரட்டும். சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் உங்கள் வருகை கண்டு மகிழட்டும். உங்கள் வருகை பற்றி உங்கள் தமையனுக்கும் உடனடியாக செய்திகள் அனுப்புவேன் இன்று மாலைக்குள் அவர்கள் இருப்பிடத்திற்கு உங்கள் வருகை தெரிவிக்கப்பட்டு விடும். அவர்கள் என்ன சொல்கிறார்களோ அதன்படி நடந்து கொள்வேன். அது வரையில் இந்தப் பழையாறையில்... சந்திரமல்லி சட்டென்று எழுந்து நின்றாள்.

"சிறை வைக்கப்படுவேன் என்று தெரியும்."

"இல்லை சந்திரமல்லி அவர்களே...

"நீங்கள் உங்கள் கடமையைச் செய்யுங்கள். ஒரு காலும் பின்னடைய வேண்டாம். அதுதவிர எனக்கு ஒரு உதவியும் செய்ய வேண்டும்."

"என்ன உதவி சந்திரமல்லி."

"என்னை நேசித்த சுகவனன் இறந்த இடத்திற்கு அருகே ஒரு மாடம் கட்டி அங்கு நந்தாவிளக்கு எரிக்க வேண்டும். அது பசு நெய் தீபமாக இருக்க வேண்டும். இதோ அதற்குண்டான செலவு."

ஒரு சுருக்குப் பையைத் திறந்து தாயக்கட்டைகள் போன்று விரல் நீளமுள்ள கறுப்பு வர்ணமுள்ள கட்டைகளை எடுத்துப் போட்டாள்.

"கறுப்பாக இருக்கின்றனவே."

"வர்ணமடிக்கப்பட்டிருக்கின்றன."

"அப்படியானால் இந்தக்கட்டிகள்."

"தங்கக் கட்டிகள்."

பிரம்மராயர் மரத்தட்டில் வைக்கப்பட்டிருந்த அந்த உலோகக் கட்டைகளை எடுத்து கண்ணில் ஒற்றிக் கொண்டார். இடுப்பில் பத்திரப்படுத்திக் கொண்டார்.

"நீங்கள் சொன்ன வண்ணமே செய்வேன். இந்த வருடம் முழுவதும் நந்தா விளக்கு சுகவனனுக்காக எரியும்."

அரண்மனைப் பெண்கள் எழுந்து விவரம் கெள்விப் பட்டு சந்திரமல்லியைப் பார்க்க ஓடோடி வந்தார்கள்.

சந்திரமல்லி அவர்களை வணங்கினாள்.

பிரம்மராயர் அரண்மனையை விட்டு லெளியேறி அதிகாரிகளுடன் கலந்து பேசி நாலாபுறமும் ஆட்கள் அனுப்பினார். புத்த விஹாரத்தைச் சோதனையிட ஒரு அதிகாரியை நியமித்து அதற்குண்டான அதிகாரத்தை ஒரு ஓலையில் எழுதி முத்திரையிட்டு சிறுபடையோடு அனுப்பி வைத்தார்.

காஞ்சிபுரம் புத்த விஹாரத்தையும் அவ்விதமாகவே சோதனையிட ஆட்கள் அனுப்பினார். சக்ரவர்த்தியும் இளவரசரும் ஒரே இடத்தில்தான் இருப்பார்கள் அல்லது திருவல்வம், தஞ்சை என்று சற்று தூரத்திலே இருப்பார்கள் என்று அவருக்குத் தெரிந்திருந்தது.

அவர்களிடம் மிகப் பக்குவமாக விஷயத்தைச் சொல்லக்கூடிய லயசாளிகளை அனுப்பினார்.

பஞ்சவன்மாதேவியிடமும் தகவல் சொல்வ ஒரு ஆள் அனுப்பிவிட்டு, இந்த ஓலை நறுக்கைக் கொடுத்துவிடு என்று கூடையில் ஓலையிட்டு அரக்கு முத்திரையிட்டு கொடுத்தார். அந்த ஓலை நறுக்கில் ஒரேயொரு வாக்கியம்தான் எழுதப்பட்டிருந்தது.

"சந்திரமல்லியை நான் நம்பவில்லை." பிரம்மராயர்.


பிரம்மராயருக்கும் உறக்கம் முற்றிலும் கலைந்து போயிற்று.

# 129

அந்தப் பாண்டியதேசத்து வீரனை குணசீலனை அழைத்துவா. அவனுக்கு ஒரு குதிரை கொடுத்து விடு. அவனோடு நானும் இளவரசர் இரோஜந்திரனும், வந்தியத் தேவரும், பாறைகள் செதுக்கப்படுகின்ற நாரத்தைமலை நோக்கி போகப் போகிறோம்.

தளிச்சேரி பெண்டுகள் ஏற்கனவே அங்கு போய்விட்ட தாகவும் ஆட்டமும், பாட்டமும் இரவுநேரம் அமர்க்களப் படுகிறது என்றும், நல்ல பாறைகளைப் பிளந்து வண்டியில் ஏற்றப்பட்டு அவற்றை தஞ்சைநோக்கி அனுப்பிவிட்டதாகவும் செய்து வந்தது. கொண்டு போகும் தடத்தைப் பார்க்கவும் வண்டிகளின் வலிவு பார்க்கவும் இழுக்கின்றவர்களுடைய வலிவு பார்க்கவும், கிராம மக்களுக்கும் அடிமை வீரர் களுக்குமிடையே ஒற்றுமை இருக்கிறதா என்று பார்க்கவும் நான் அங்கு பயணப்பட விரும்புகிறேன்."

ஒரு முறை நார்த்தாமலை போய்விட்டு வந்துவிட்டால் அந்த வேலைகள் துரிதமாக ஆகும்.



Brhadisvara, perspective of main shri

பழுவேட்டரையரிடம் சக்ரவர்த்தி கட்டளையிட அந்த வேலைகள் துரிதமாக நடந்தன. அஸ்திவாரங்களோடு அரசர் பேச்சு நடத்தினார் இப்பொழுது அடிமை வீரர்கள் மிக அருகே சக்ரவர்த்தியைப் பார்த்தார்கள். சிரித்துப் பேசினார் கள். அவர்களுடைய பழக்க வழக்கங்களை விவாதித்தார்கள்.

ஒரு இரவுநேரம் நார்த்தாமலைக்குப் பயணப்படலாம் என்று அந்திசாயும் நேரத்தில் உணவு முடித்து குதிரையில் ஏறிய போது பஞ்சவன்மாதேவி ஓடிவந்தாள்.

“என்ன மறுபடியும் செய்திகள் இருக்கின்றனவா.”

சக்ரவர்த்தி சிரித்தபடி பஞ்சவன்மாதேவியைப் பார்த்துக் கேட்க பஞ்சவன்மாதேவி சக்ரவர்த்தி காதருகே விஷயம் சொன்னார்.

சக்ரவர்த்தியின் கண்கள் நிலைகுத்தி நின்றன. மூச்சுவிட மறந்தவர்போல அமைதியாக இருந்தார். பிறகு மெல்ல கண் களை மூடித்திறந்து பஞ்சவன்மாதேவியை உறுத்துப்பார்த்து, “இந்த செய்தியை இராஜேந்திரனிடம் தெரிவித்து விடு.” என்று சொன்னார்.

பஞ்சவன்மாதேவி மெல்ல நகர்ந்து முணுமுணுப்பான குரலில் சந்திரமல்லியின் வருகையை இராஜேந்திரருக்குத் தெரிவித்தார்.

இராஜேந்திரர் முகத்திலும் அதேவிதமான திகைப்பு இருந்தது. வந்தியத்தேவருக்கும் அது சொல்லப்பட்டது. அனை வரும் கோவில் அஸ்திவாரம் தோண்டப்படுகிற மேடான புல்வெளியில் தலை குனிந்து நின்றனர்.

சக்ரவர்த்தியின் அசைவுக்காக மற்ற மூவரும் காத்திருந் தார்கள். சக்ரவர்த்தி மெல்ல வானம் பார்த்தார். இடதும் வலதும் பார்த்தார்.

“சரி, அவளை பிரம்மராயர் பார்த்துக் கொள்ளட்டும். அவருக்கு என்ன தோன்றுகின்றதோ அதைச் செய்யட்டும் எனக்கு எந்த உணர்ச்சி வேகமும் இல்லை. எந்தப் பதட்டமும் இல்லை. சந்திரமல்லியைக் காட்டிலும் முக்கியமான பல விஷயங்கள் இருக்கின்றன. சந்திரமல்லி விருப்பப்பட்டால் தஞ்சைக்கு வரலாம். என் நார்த்தாமலை பயணம் தொடரும். சந்திரமல்லியை அவசியமானால் வந்து பார்த்து பேசிக் கொள்ளலாம்.”

இராஜேந்திர சோழர் தலையசைத்தார்.

தந்னத செய்லது சரியென்று சொன்னார். அலர்கள் குதிரைகள் தெற்கு நோக்கி திருலல்லம் லழியாக நார்த்தா மாலைப்பாதையில் வினரயத் துவங்கியது பஞ்சவன் மாதேவி திகைத்துக் கிடந்தாள்.

"எதற்கு இப்போது சந்திரமல்லி வந்தாள். இப்பொழுது என்ன செய்யப்போகிறாள்." என்று வியந்தாள்.

பிரம்மராயர் ஓலை அனுப்பினார்.

அரசர் அதிரவில்லை.

"சந்திரமல்லியை உடன் கொண்டுவரவும். பட்டமகிஷி யார் பார்க்க விரும்புகிறார்."

தஞ்சை அரண்மனையில் செய்தி கசிந்தது. அரசிகளிடமிருந்து அதிகாரிச்சிகளுக்கும், அதிகாரிச்சிகளிடமிருந்து சேடிகளுக்கும், சேடிகளிடமிருந்து அரண்மனைக்கு வெளியே இருக்கிறவர்களுக்கும், சேனாதிபதிகளுக்கும் மற்ற மக்களுக்கும் விஷயங்கள் லேகமாகப் பரவின அரசியல் பற்றியும் அரசாங்கம் பற்றியும் எதுவும் தெரியாதவர்கள்கூட அரசருடைய வாழ்க்கையைப் பற்றி வேகமாகப் பேசினார்கள். சரி என்று தங்களுக்குத் தெளிவுபடுத்திக் கொண்டார்கள். சந்திரமல்லியின் வருனக சரியா? போனது சரியா? பிறந்தது தவறா என்றெல்லாம் லாக்குலாதம் செய்து கொண்டார்கள். திருலல்லத்திலுள்ள வயசாளிகள் சற்று உரிமை எடுத்துக் கொண்டு அரசரைப் பார்த்ததும் கை கூப்பினார்கள். அருகே வந்து முழங்கால் பற்றித் தனலயில் வைத்துக் கொண்டார்கள்.

"ஐயா. சந்திரமல்லி வந்துவிட்டார்களாமே." என்று குதூகலமாகச் சொன்னார்கள். ஆனால், அதில் ஒரு நடிப்பும் இருந்தது.

அரசருக்கு எது பிடிக்கும். எது பிடிக்காது என்று தெரியாமல் அரசருக்குப் பிடித்தது பேச லேண்டும் என்பது போல ஒரு எண்ணம் இருந்தது. ஆமாம் என்று அலுப்போடு அரசர் சொன்னால், எதற்கு வந்தார்கள் என்று பேசவும், வந்துவிட்டார்கள் என்று சந்தோஷமாக சொன்னாவ் நவ்ல வேனை கடவுளுடைய அருள் உங்களுக்குப் பூரணமாக உண்டு என்று சொல்லவும் அந்த வயசாளிகள் தந்திரமாய்

தயாராக இருந்தார்கள். அவர்களது தந்திரத்தை இளைஞர்கள் கேலி செய்தார்கள்.

ஆனால், சக்ரவர்த்திக்கு மக்களைத் தெரியும் இடதும் இல்லாமல் வலதும் இல்லாமல் வெறுமே ஒரு தகவலாய் ஆமாம், வந்துவிட்டார்கள் என்று சொல்லி அடுத்த ஆளினு டைய பார்வைக்குத் தாவி அங்கே உள்ளவர்களை குசலம் விசாரித்து சந்திரமல்லி பற்றிக் கேட்டவர்களை முற்றிலுமாய் விலக்கினார்.

சில வயசாளிகள் அதே தந்திரத்தை இளவரசர் இராஜேந் திரரிடம் காண்பிக்க முயற்சித்தார்கள். ப்பா... சந்திரமல்லி வந்து விட்டார்களாமே என்று மிக வியப்போடு கேட்பது போல் இளவரசருக்கு நெருங்கி நின்று கைகூப்பினார்கள். இளவரசர் இராஜேந்திரர் அப்படி கேட்ட வயசாளிகளை உற்றுப் பார்த்தார்.

அவர் பார்க்கையில் சீற்றம் இருந்தது.

இராஜேந்திரரையே பார்த்துக் கொண்டிருந்த வயசாளி களை நோக்கி, “உனக்கு என்ன தொழில்” என்று கேட்டார்.

“வேளாண்மைதான் ஐயா.”

அவர் பதில் சொல்ல. “உன் நிலத்தில் எவ்வளவு கலம் கண்டது.” என்று பதிலுக்குக் கேட்டார்.

அவர் ஒரு கணக்கு சொல்வ, “இவ்வளவுதானா உழைப்புதான் முக்கியம். நன்றாக உழைத்தால்தான் நிறைய விளைவிக்க முடியும். விளைவிப்பவர்களை மையமாக வைத்துக் கொண்டுதான் சக்ரவர்த்தி பல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார் நீங்கள் வெறுமே சோம்பித் திரிந்து கொண்டிருக்காதீர்கள். ஊர் கதைகள் பேசிக் கொண் டிருக்காதீர்கள். இந்நேரம் நீ வயலில் இருக்க வேண்டியவனல் லவா. இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்.” என்று அதட்ட வயசாளிகள் பின்னுக்கு நகர்ந்தார்கள். இளைஞர்கள் வாய் பொத்திக்கொண்டு சிரித்தார்கள்.

எல்லோருக்கும் அது புரிந்துபோயிற்று.

இளவரசருக்கு மஞ்சளும், சுண்ணாம்பும் கலந்து சிவப் பாக்கிய ஆரத்தியை எடுத்தார்கள். நெற்றியில் திலகமிட்டார் கள். குலவையிட்டார்கள். அப்படி குலவையிட்டதற்கு காசு

கொடுக்க முன் வந்தபோது பணிவோடு லாங்கிக் கொண் டார்கள்.

“பஞ்சன்மாதேவிக்கும், பட்டமகிஷிக்கும் நாங்கள் ஆரத்திகரைப்பதும், குவவையிடுவதும் லழக்கம் வேறு யாரும். இந்தப்பக்கம் அரச மகளிர் வருவார்களா, வந்தால் குவவை யிட்டு ஆரத்தி எடுக்க வேண்டுமா என்று இன்னும் கெட்டிக் காரத்தனமாகக் கேட்டார்கள்.

இளலரசர் இராஜேந்திரர் வாய்விட்டுச் சிரித்தார்.

“சந்திரமல்லி ஒரு சாதாரணப் பிரஜை அவர்களுக்கு குலவையிட வேண்டாம். மேலும் திருவல்லத்திற்கு அவர்கள் வரமாட்டார்கள். அவர்கள் இருப்பிடம் தஞ்சை மட்டுமே. குலவையிடுவதும், ஆரத்தி எடுப்பதும் ஒரு சம்பிரதாயமான வரவேற்பு. இதுமட்டும் செய்தால் போதாது வந்து இளைப் பாறுகின்ற சிற்பிகளுக்கும் பாரவண்டி இழுப்பவர்களுக்கும், யானைப் பாகர்களுக்கும், எருதுகள் ஓட்டிவரும் இடையர் களுக்கும் நீங்கள் தங்க இடம் கொடுத்து குடிக்க நீர் கொடுத்து ஒருவேளை அவர்கள் ஏதேனும் நோயுற்றிருந்தால் உங்கள் கிராமத்து லைத்தியரைக் கூட்டி வந்து வைத்தியம் செய்து அவர்கள் நலனைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொள்ள வேண்டும். அவர்கள் வலிவோடு இருந்தால்தான் கோயிவ் பணி விரைவில் முடியும்.”

பெண்களுக்கு இளவரசரின் பேச்சு பெருமையாக இருந்தது.

“நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். கவவையே பட வேண்டாம்.” என்று குதூகவமாய் பதில் சொன்னார்கள்.

சந்திரமல்லியை ஒரு ஓரமாய் வைத்திருக்கிறார்கள் என்ற செய்தி திருலல்லத்திலிருந்து தஞ்சை வரை, பிறகு குடந்தை வரை பரவியது. பழையாறையிலிருந்து ஒரு மூடு பல்லக்கில் சந்திரமல்லி தஞ்சை வந்து சேர்ந்தபோது தள்ளி நின்று பார்த்தார்களே தவிர, யாரும் அருகே போய் பெரிதாய் குசலம் கேட்கவில்லை.

கோ்வில் கட்டுகின்ற புல் மேட்டிலிருந்து வட மேற்காய் கிணறும், பூச்செடிகளும், பழ மரங்களும் நிறைந்த ஒரு நந்த வனத்தில் அவளுக்கு ஓலைக் குடிசை போட்டுக் கொடுக்கப் பட்டது. இரண்டு சேவடிகள் உட்பட மூன்று ஆண்கள் அவளுக்குத் துணையாக விலகியிருந்தார்கள்.

சக்ரவர்த்தி வழியிலுள்ள சிறிய கிராமங்களில் தங்கி பாதை எப்படியிருக்கிறது என்று பார்த்து மாற்றுப்பாதை ஏற்பாடு செய்ய முடியுமா என்று யோசித்து சில இடங்களில் மாற்றுப்பாதைஏற்பாடு செய்து நான் திரும்ப வரும்போது பாதை போட்டிருக்க தானியங்களும் அந்தக் கிராமத்தில் கொண்டு வந்து கொடுக்கச் சொல்லி உத்தரவிட்டு நார்த்தா மலை போகின்ற பாதைகளில் உள்ள பாறைகளில் சேர்தனைகள் செய்து பாறைகள் தேர்ந்தெடுப்பது பற்றித் தெரிந்து கொண்டார்.

அவர் தெரிந்து கொண்ட போது அவருக்கு அருகே யிருந்த குணசீலனும் அந்த விஷயங்களைக் கிரகித்துக் கொண்டான்.

மூன்று நீண்ட பாறைகள் ஏற்றிவரும் அகலமான பதினாறு சக்கரங்கள் கொண்ட பாரவண்டியை யானை இழுத்து வருவதைப் போவ பார்த்ததும் சக்ரவர்த்தி குழந்தையைப் போல குதூகலித்தார்.

யானையின் முழங்கால் மீது ஏறி அதன் கன்னத்தைத் தடவிக் கொடுத்தார். அன்போடு முதுகில் அறைந்தார். லண்டியைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டார். சக்கரத்தில் கால்வைத்து ஏறி பாறைமீதும் ஏறி நின்று பாறையின் நீள அகலம் பார்த்தார்.

“இந்தப் பாறை சரிதானா.” என்று கேட்டார்.

குணசீலன் அவருக்குப் பின்னே தாவி ஏறி பாறையைப் பார்த்தான். குணசீலனின் சந்தோஷம் இராஜேந்திரருக்கு வியப்பாக இருந்தது. குதிரையை வண்டிக்கு அருகே எடுத்துப் போய் அவரும் வண்டியின் மீது ஏறி, வண்டியிலிருந்து பாறை மீது ஏறி நின்றார்.

யானையின் முதுகில் காயங்கள் இருப்பதைப் பார்த்தார். பாகனை விசாரித்தார். அடிமை வீரர்கள் ஆவலோடு வர மெய்க்காவல்படையினர் மெல்ல தடுத்தார்கள்.

முதல் பாரவண்டியோடு வரும் அடிக்கட்டை சிற்பி ஒருவனை அறிமுகப்படுத்தினார்கள். மன்னர் அவனை மேலே வரச்சொல்லி கட்டித் தழுவிக் கொண்டார். உள்ளங்கைகளை விரித்துப் பார்த்தார். தழும்பேறிய உள்ளங்களை விரித்துப் பார்த்தார். தழும்பேறிய அந்தக் கைகளைத் தடவினார்.

"இடையிலுள்ள சில கிராமங்களை எப்படித் தாண்டப் போகிறோம் தெரியவில்லை.'' என்று சிற்பி சொல்ல, அதற்குண்டான ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டன என்று சக்ரவர்த்தியின் மெய்க்காவல் படையால் சொல்லப்பட்டது. அடுத்த ஒரு கல் தூரத்தில் இன்னும் இரண்டு பாரவண்டிகள் வருகின்றன.'' என்று சிற்பி சொன்னவுடன் சக்ரவர்த்தி கீழிறங்கினார். குதிரையில் ஏறினார்.

அந்தப் படைகள் மொத்தமும் பெரிய கூக்குரலோடு அந்தப் பாதையில் ஏறின. போர்க்களம் நோக்கிப் போகின்ற குதிரைகள் போல விரைந்தன. மக்கள் மிரண்டு ஒதுங்கினர். அடுத்த பாரவண்டிக்கு அடுத்த பாரவண்டியில் ஒரு அச்சு விரிசல் விடத் துவங்கியிருந்தது. அச்சு மாற்ற வேண்டு மென்றால் பாறைகள் இறக்கியாக வேண்டும். பாறைகளை எப்படி இறக்கி ஏற்றுவது என்று யோசனையாக இருந்தது.

ஆனால், குணசீலன் யோசனை செய்தான். கீழே படுத்துக் கொண்டு அச்சை பரிசோதனை செய்தான். ஒரு மரப்பலகை கொண்டு விரிசல் இருக்கும் இடத்தில் அடித்து பிணைத்து விடலாம். அதற்கு முன்பு அந்த விரிசலில் கற்களை இறுக்க உபயோகப்படுத்தும் மருந்துப்பிசின் தடவி இறுக்கி விடலாம். இவைகளைப் பாறைகளை இறக்காம லேயே செய்துவிட முடியும். இந்தக் கிராமத்தில் மரப்பலகை இருக்கிறதா என்று கேட்கப் போய் எந்த மரப்பலகையும் தனியாகக் கிடைக்காமல் யாரோ உஞ்சல் பலகையைக் கழற்றிக் கொடுத்தார்கள் என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள். ஊஞ்சல் பலகையை இரண்டாக அறுத்து மருந்து பூசி குணசீலன் அதை ஆணி அடித்து இறக்கினான். உடம் பெல்லாம் புழுதியாக எழுந்து நின்றான்.

"இனி பத்து முறை முன்னும் பின்னும் ஓடினாலும் இந்தப் பலகை கட்டுவிடாது.'' என்று உறுதி சொன்னான்.

வந்தியத்தேவர் அவனுக்கருகே போய் தட்டிக் கொடுத்தார்.

நார்த்தாமலையில் பல பாறைகள் பிளக்கப்பட்டு மலைச் சரிவிலும், மண்ணிலும் உருட்டப்பட்டிருந்தன. சதாசிலாச் சாரி சக்ரவர்த்தியின் காலில் விழுந்து வணங்கினார் அந்தணர்கள் பூரண கும்ப மரியாதை கொடுத்தார்கள்.

கிராமத்துப் பெண்கள் நடைபாவாடை விரித்தார்கள். சிறு முரசுகளும், பறைகளும் முழங்க எக்காளம் ஊதப்பட ஜனங்கள் ஆடிக்கொண்டே அரசரை அழைத்துக்கொண்டு போனார்கள்.

ஒரு இரும்பு கூண்டுக்குள் நந்தா விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அரசர் அங்கு போய் மௌனமாக நின்று கொண்டார். எல்லா வீரர்களும் நிற்க, அடிமை வீரர்கள் கைகட்டி பாறைக்கு எதிர்ப்புறம் நின்றார்கள். அரசரிடம் ஒரு கூடை செவ்வரளிப்பூ கொடுக்கப்பட்டது. செவ்வரளியை அந்தப் பாறையின் மீது சொரிந்து அரசர் கைகூப்பினார். சிறிதுநேரம் பாறையையே பார்த்து நின்றார். சட்டென்று நகர்ந்தார். மெய்க்காலவ்களை விலக்கினார். பாறையைச் சுற்றி மலை ஏறி சற்று உயரே போனார். தள்ளி நின்றிருந்த அடிமை வீரர்களுக்கு அருகே போனார். அந்த வீரர்கள் பரவசமானார்கள். சதாசிவம் என்று குரல் கொடுக்க சதா சிலாச்சாரி பின்னாலேயே ஓடினார்.

“பாறைகளுக்காக மிகவும் பிரயத்தனப்பட வேண்டியிருக் கிறதா.”

“இல்லை. பல்வேறு பாறைகள் விரிசல் விட்டுத்தான் இருக்கின்றன. விரல் அங்குல ஆழம் அடித்தால் போதும். வரிசையாகப் பதினைந்து குழிகள் போதும். நடுக்குழியில் பெரிய ஆணியை வைத்து ஓங்கி அடித்தால் மற்ற எல்லா குழிகளுக்கும் விரிசல் வேகமாக ஓடி பாறை பிளந்து விடுகிறது. கிட்டத்தட்ட ஒரு மாவுக்கல் போல பிளக்கிறது. ஆனால் இது மாவுக்கல் அல்ல. நல்ல கருங்கல் அடிக் கட்டைக்கும், உத்திரத்திற்கும் மேலே தளம் போடவும் பெருந் தச்சர் வரைந்தது போல பவகை பலகையாக விமானம் எழுப்பவும் இந்தக் கற்கள் போதுமானவை.”

“தர்ப்பக்கிரஹச் சிலைகள் செய்ய வேண்டுமென்றால்..

“அதற்குத் திருவக்கரை கற்கள்தான் சரியாக இருக்கும். சில சமயம் இந்தப் பாறைகள் செதில் செதிலாகப் பிளந்து விடுகின்றன. சில இடங்களில் பலவீனமாக இருக்கின்றன. பத்துக் கை அகலம் கோடு போட்டு சமன் செய்ய முயற்சித் தால் ஏதேனும் ஒரு இடத்தில் பள்ளமாகி விடுகிறது. ஒரு கை அகலம் பாறை லழித்தெடுத்தது போல வந்துவிடுகிறது.”

சட்டென்று இராஜராஜர் திரும்பினார். தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்த அடிமைவீரர்கள் அருகே போனார்.

"எப்படி இருக்கிறீர்கள். நல்ல உணவு கிடைக்கிறதா. ஏதேனும் குறைகள் உண்டா இப்பொழுதும் யாருக்கேனும் ஊருக்குப் போக வேண்டும் என்ற ஏக்கம் உண்டா? அப்படி இருப்பின் நிச்சயமாகப் போகலாம்."

வீரர்கள் மெல்ல நாணினார்கள். மெல்லப் பின்னடைந் தார்கள்.

"நல்ல உணவு கிடைக்கிறது. மக்கள் எங்களை அன் போடு நடத்துகிறார்கள். எங்கள் ஊருக்குப் போகும்படியான எண்ணமில்லை. கோவில் கட்டுவது என்றால் சிற்பங்கள் செய்வது என்று நினைத்தேன். ஆனால் பாறை எடுத்துவர இவ்வளவு தொலைவு வரவேண்டுமென்று தெரியவில்லை. இரண்டு நாள் நடை இருக்கும்போல் இருக்கிறது. பாறை யோடு போக வேண்டுமென்றால் நான்கு நாள் நடையிருக் கும்." ஒரு இளைஞன் பேசினான்.

"எல்லோரும் சிற்பங்கள் செய்யும் இடத்தில் இருந்தால் பாறைகள் செதுக்குவது யார்? ஓர் அளவு பாறைகள் எடுத்த பிறகு எல்லோருக்கும் வேலை அங்குதான் இருக்கும். கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு பாறைகள் செதுக்குவதுதான் முக்கியப்பணியாக இருக்கும். அங்கே வேறொன்றும் சிற்பப் பணிகள் நடைபெறாது. வந்த பாறைகளைக் கிடத்தி வைக்கத்தான் முயற்சி செய்வார்கள். இழுத்து இழுத்து இடம் மாற்றிக் கொண்டிருப்பார்கள். அஸ்திவாரப் பள்ளத்திலிருந்து கற்கள் போட்டுப் போட்டு மேலே உறுதியாய் கவர் எழுப்பிய பிறகு விமானப் பணிகள், பலகை பலகையாக அடுக்கிக் கொண்டு போகின்ற வித்தை கோஷ்டங்கள் ஏற்படுத்தி சிற்பங் களைக் கொண்டு போய் அங்கு வைப்பது என்பது வெகு தொலைவில் இருக்கிறது. உடனடியாக நிறைவேறும் காரிய மல்ல. சிற்பம் செதுக்குவதைப் பார்க்க வேண்டுமென்றால் இன்னும் மூன்று அல்லது நான்கு வருடங்கள் காத்திருக்க வேண்டும். இப்பொழுது கட்டுமானப்பணி. கட்டுமானப் பணிக்கான ஆயத்த வேலை. இவைதான் நடைபெறுகின்றன."

சதாசிவாச்சாரி குறுக்கிட்டுச் சொல்ல சக்ரவர்த்தி புன்னகையுடன் அந்த இளைஞரைப் பார்த்துக் கொண்டிருந் தார்.

அவன் கை கூப்பினான்.

''காத்திருக்கிறேன்'' என்று ஒரு வார்த்தையிலே சொன்னான்.

சக்ரவர்த்தி அவன் தோளில் கை லைத்துவிட்டு நகர மற்ற வீரர்கள் பின் தொடர்ந்தார்கள்.

மெய்க்காவல் படை அவர்களை மறித்துக் கொண்டது. தொடரவேண்டாம் என்றது.

நார்த்தாமலையின் நான்கு புறமும் அவர் சுற்றி வந்தார். ஊருணிகளைப் பார்வையிட்டார். ஊர்த்தலைவரை அருகே அழைத்து என்ன வேண்டும் என்று கேட்டார்.

"எங்களுக்கும் வேலையில் பங்கு கொடுங்கள் ஐயா."

"ஹா... என்ன இது. உங்களை யாரோ புறக்கணித்து விட்டது போலல்லவா பேசுகிறீர்கள்."

வந்தியத் தேவர் இடைமறித்தார்.

"வெறுமே சமைத்துப் போடவும். வீரர்களுக்கு ஊழியம் செய்யவும். காய்கறி நறுக்கவும், மீன் பிடித்துக்கொண்டு வரவும், போதுமானவராக எங்களை நினைத்து விட்டீர்கள். எங்களுக்கு கோயில் பணி கொடுக்கக் கூடாதா."

"என்னவிதமான கோயில் பணியை எதிர்பார்க்கிறீர்கள்."

இப்பொழுது சக்ரவர்த்தி கேட்டார்.

அந்த ஊர்த்தலைவருக்குச் சொல்வத் தெரியவில்லை. ஊர்மக்கள் வாய் பொத்திக் கொண்டு அந்தப் பெரியவரையே சிரிப்போடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

"உங்களுடைய வேலை இதுவே. வீரர்களுக்குச் சோறு சமைப்பதே. எல்லோரும் தோளில் கல்லோடு உச்சியில் ஏற வேண்டிய அவசியம் ஏதும் இப்போது வரவில்லை. அந்த வீரர்களுக்கு நேரம் தவறாமல் சோறு சமைத்துப் போடுங்கள். அதற்குண்டான எல்லாவித வசதிகளையும் இங்கே இவர்களிடம் வாங்கிக் கொள்ளுங்கள்."

சதாசிவாச்சாரியைக் கைகாட்டினார்.

"சதாசிவம் என்ன காசு வைத்திருக்கிறீர்கள். செலவுக்கு வேண்டுமென்பது இருக்கிறதா? தானியங்கள் போதுமானவையா?"

"எல்லாம் போதுமானவையாக இருக்கிறது. ஆனால் வேறொரு பிரச்சினை உண்டு."

"என்ன."

"எல்லாக் கணக்குகளையும் இந்த மனிதர்தான் பார்த்துக் கொள்கிறார். இவர் கல்தச்சுக்கரணர். பகல் முழுவதும் சுற்றிச் சுற்றிக் கணக்கு எடுத்து, கிட்டத்தட்ட நடுநிசிவரை உட்கார்ந்து ஓலை நறுக்குகள் எழுதி கட்டுக்கட்டாய் வைத்திருக்கின்றார். அவருக்கு உதவிகள் தேவைப்படுகின்றன. உதவிக் கணக்கர்கள் தேவையென்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால், இவரோ தன் வேலையை வேறு எவரிடமும் நம்பிக் கொடுக்க முடியாதவராக இருக்கிறார். இவரிடம் படபடப்பும், கோபமும் நிரந்தரமாய் இருக்கின்றன. இதனால் மற்றவரிடம் எரிந்து விழுகிறார். இவரை அணுகவே பயப்படுகிறார்கள். பல கணக்கங்கள் இவரால் ஏற்படுகின்றன. இவர் மீது நான் குற்றம் சுமத்தவில்லை. இவருடைய வேலை பளு அதிகம் என்று நான் கருதுகிறேன். அது மட்டுமல்லாது என்ன பாறைகள் போயிருக்கின்றன என்ற கணக்கு வைத்துக் கொள்ள சிற்பிகளுக்கு அத்தனை பயிற்சி போதவில்லை. அடிக்கட்டை சரி செய்கிறவன் கணக்கில் சூரப்புலியாக இருக்க முடியாது. அவன் கற்கள் சமன் செய்ய திறமையுள்ளவனே தவிர, ஓலையில் கணக்கு எழுதி வைத்துக் கொள்ளும் புத்திசாலித்தனம் இல்லை. ஞாபகசக்தியும் குறைவு. அதற்குப் பழக்கமில்லாதவன். எனவே, இப்போது என்னுடைய உடனடியான தேவை நல்ல கணக்கர்கள்."

"திடீரென்று கணக்கர்களுக்கு எங்கே போவது."

வந்தியத்தேவர் வியப்போடு கேட்டார்.

"கணக்கர்கள் உற்பத்தி செய்ய முடியாதே, அடிமை வீரர்கள் கொண்டு வந்தது போல எல்லா பக்கங்களிலிருந்தும் கணக்கர்களைக் கொண்டு வர வேண்டுமென்று நினைக்கிறீர்களா. அந்தந்த இடத்தில் கணக்கர்களுக்கு நல்ல வேலை இருக்கிறது. இன்னும் தானியக் கொள்முதலில் கணக்கர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதுபற்றிய கணக்கும் அரசாங்கம் தானியம் வாங்குகிறது என்பதால், அதற்கு தனிக்கணக்கும் செய்து கொண்டிருக்கிறார்கள். பாறைகள் வேகமாக தஞ்சை நோக்கிப் போக வேண்டுமென்று அரசர் விரும்புகிறபோது, நீங்கள் கணக்கர்கள் கேட்டால் எப்படி இதை இன்னும் முன்னால் தெரிவித்திருக்கலாமே."

"கணக்கர்கள் வேண்டுமென்று நான் யாரிடம் தெரிவிப்பது. பெருந்தச்சரிடமா. அவர் காதிலேயே வாங்கிக் கொள்ள மாட்டார். அவர் கவனம் இப்பொழுது எந்தக் கட்டளையிடுவதிலும் இல்லை. கோவில் கட்டுவதிலேயே இருக்கிறது. நாம் பேசுவது அலர் காதிலேயே விழுவதில்லை. எனவே நான் அவரைத் தொந்தரவு செய்வதில்லை.

சதாசிவம் பளிச்சென்று பதில் சொல்ல சக்ரவர்த்தி ஆமாம் என்று தலையசைத்தார்

"இந்தப் பிரச்சினையை எப்படிச் சமாளிப்பது அதற்கு பதில் சொல்லுங்கள் வந்தியத்தேவரே."

"நான் வழி சொல்லட்டுமா."

இளவரசர் இராஜேந்திரர் குரல் கொடுத்தார்.

எல்லோரும் முகம் திருப்பி இராஜேந்திரரைப் பார்த்தார்கள்.

"கோயில் பணிக்கு எங்களை அமர்த்துங்கள். எங்களை அமர்த்துங்கள் என்று சகல பக்கங்களிலிருந்தும் குரல்வர, நாம் விதம்விதமாகப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இப்படிக் குரல் எழுப்பாதவர்கள் சோழ தேசத்தில் இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா."

"இராஜேந்திரா... பூடகமாகப் பேசும் நேரமல்ல இது. முடிவுகள் எடுத்து அடுத்தடுத்து வேலைகளைச் செய்ய வேண்டும். என்ன சொல்ல நினைக்கிறாய்."

"கோயில் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளாத அந்தணர்களை இந்தக் கணக்கெழுதும் பணியில் ஈடுபடுத்தினால் என்ன."

சரக்கென்று ஒரேயொரு வாக்கியத்தில் தன் எண்ணத்தை இராஜேந்திரர் சொல்ல அங்குள்ளவர்கள் திகைத்துப் போனார்கள்,

"அது வேண்டாம்."

சதாசிவம் பதறிப் பேசினார்.

"ஏன் வேண்டாம்."

இராஜேந்திரர் அவரை அருகே போய் கேட்டார்.

"எனக்கு அந்தணர்கள் வேண்டாம் இளவரசே."

"ஏன்."

"எனக்குக் கட்டுப்பட்டவர்கள்தான் என்னுடைய வேலையில் ஈடுபட வேண்டும். நான் என்ன உத்தரவிடு கிறேனோ, அதை நிறைவேற்ற முயற்சி செய்கிறவர்கள்தான் எனக்கு அருகே இருக்க வேண்டும். இங்கு வேலை நன்றாக நடக்கிறது என்று சக்ரவர்த்தியார் விரும்பினால் அதற்கு காரணம் இங்கு ஒரு ஒழுக்கம் இருக்கிறது. இங்கு உள்ளவர் களிடம் ஒரு பணிவு இருக்கிறது. ஒரு பாறை புரண்டு நகரும் போது பிளவிலிருந்து மூன்று நான்கு நாகப்பாம்புகள் வெளியே வந்தன. பாறைக்கு முட்டுக் கொடுத்திருந்த இரண்டு வீரர்களும் பயந்தார்கள். ஒன்றும் அசையாதே. பாம்பு உன்னை ஏதும் செய்யாது. அப்படியே செய்தாலும் வைத்தி யம் செய்ய நான் இருக்கிறேன்." என்று சொல்லி கைதட்டி பாம்பை விரட்டினேன்.

அந்த இரண்டு வீரர்களும் பாம்பு கால் ஏறிப்போன போது நகராது அப்படியே நின்றார்கள். அசைந்திருந்தால் கொத்தியிருக்கும் என்பது வேறு விஷயம். அங்கே ஒரு பணிவு இருந்தது. கட்டளைக்குக் கீழ்படியும் குணமிருந்தது. இதனால் அவனும் தப்பித்தான். பாறையும் தப்பித்தது. பாறையைப் புரட்டிய மூன்று நான்கு வீரர்களும் தப்பித்தார்கள். இல்லை யெனில் வெகுதூரம் பாறை உருண்டு போய் குறைந்த பட்சம் பன்னிரெண்டு. பதிமூன்று பேரையாவது பலி கொண்டிருக் கும்.

"யார் அவர்கள். அவர்களைப் பாராட்ட வேண்டும்."

சக்ரவர்த்தி சட்டென்று உரத்த குரலில் சொன்னார்.

"நான் பாராட்டி விட்டேன் சக்ரவர்த்தி. அவருக்குப் பொற்காசுகள் கொடுத்து மூன்று நாள் விடுமுறையும் கொடுத்து இங்குள்ள ஊர்களில் ஏதேனும் ஒரு ஊருக்குப் போய் பரத்தையரிடம் போய் வா. மதுவும் அருந்து என்று உற்சாகப்படுத்திவிட்டு வந்தேன். அவர்கள் அவ்விதமே செய்து மறுபடியும் வேலைக்குத் திரும்பிவிட்டார்கள். முன்னிலும் உற்சாகமாக வேலைகள் செய்கிறார்கள். விடிந்ததும் முதல் ஆளாக வந்து நிற்கிறார்கள். நாளைக்கு எந்தெந்த பாறை களைப் பிளக்கப் போகிறோம் என்று குதித்துக் கொண்டு அதுபற்றியே பேசுகிறார்கள். எனவே, அதற்குமேல் அவர் களைக் கொண்டாட வேண்டிய அவசியம் ஏதும் இல்லை."

"புரிகிறது."

மன்னர் தலையசைத்தார்.

"ஆனால். இம்மாதிரி அந்தணர்களிடம் பேசவும் முடியாது. அலர்களிடம் வேலை லாங்கவும் முடியாது."

"சோழ தேசத்தில் அத்தனை பேரும் சக்ரவர்த்திக்குப் பணிந்து நடக்க சக்ரலர்த்தியின் தூதுலனான சதாசிவாச் சாரிக்குப் பணிய மாட்டேன் என்று சொல்ல விடுலார்களா."

இளலரசர் உரத்த குரலிவ் கேட்டார்.

வந்தியத்தேலர் அவர் முதுகில் கை லைத்து போதும் என்பது போல சைகை செய்தார்.

சக்ரலர்த்தி கவலையானார்.

ஆனால், இராஜேந்திரர் சொவ்லது நல்வ யோசனை யாகத்தான் அங்குள்ளவர்களுக்குத் தோன்றியது. அதேசமயம் இந்த அந்தணர்கள் இந்த ஏற்பாட்டிற்குச் சம்மதிப்பார்களா, மறுப்பார்களா, என்ற சந்தேகமும் இருக்கிறது.

"அந்தணர்களின் வேலை லேதம் ஓதுவதுதானே."

வந்தியத்தேவர் பேசினார்.

"அந்தணர் வேறு வேலை எதுவும் செய்யலேயில்லையா. அவர்கள் கணக்கு வழக்குகளைப் பார்க்கவேயில்லையா. சிவாலயங்களிலுள்ள தானியக் கணக்கும், பாத்திரக் கணக்கும், நகைகள் கணக்கும் யாரிடம் இருக்கின்றன. அந்தணர்களிடம் தானே. எழுதவும், படிக்கவும் தெரிந்த அந்த அந்தணர்கள் இந்த வேலையில் எவ்வளவு உபயோகமாக இருப்பார்கள். இந்த ஊருக்குத் தலைவராக இருக்் முடிகிறது. லரிவசூல் செய்ய முடிகிறது. தங்களுக்கு உண்டான பங்கை எடுத்துக்கொண்டு அரசருக்குண்டானதை அனுப்புவதற்குத் தெரிகிறது. இந்தப் பாறைக்கணக்கு செய்ய முடியாதா."

"இந்த நார்த்தாமலையில் அந்த அந்தணர்களை எங்கே தங்க வைப்பீர்கள்."

"அந்த கோயிலுள்ள அந்தணர்கள் எங்கே தங்கியிருக் கிறார்கள். அதற்குப் பக்கத்தில் ஒரு குடில் போட முடியாதா. இதென்ன அந்தணர்கள் இல்லாத இடமா. சதாசிலாச்சாரி நீங்கள் ஏன் இதை மறுப்பாகப் பேசுகிறீர்கள் என்று எனக்குப்

புரியவேயில்லை." இளவரசர் பேச்சில் கோபமும், படபடப்பும் இருந்தன.

"இராஜேந்திரா... ஒரு விஷயத்தை ஆணையிட்டு நடத்துவது என்பது எல்லா நேரங்களிலும் சரிவராது. தானாக வலிய வந்து இப்பொழுது கேட்டார்களே அதுபோல கோயில் பணியில் என் பங்கு என்ன என்று கேட்கிறபோது அந்த வேலையின் சிறப்பு பன்மடங்கு கூடும். அப்படி இல்லாது என்னைக் கொண்டு போய் நார்த்தாமலையில் உட்கார வைத்து ஓலை நறுக்கும் எழுத்தாணியும் கொடுத்து என்னமோ செய்யச் சொல்கிறார்களே என்று புலம்புகிறவர்களிடம், இந்த கோவில் பணியைக் கொடுத்துவிட்டால் என்ன செய்வது."

"சவுக்கால் அடியுங்கள்."

வந்தியத்தேவர் குரலுக்கு பல்கடித்துக் கொண்டு இராஜேந்திரர் வேகமாகப் பேசினார்.

"அது எளிது இராஜேந்திரா. ஆனால், இதனால் உள்நாட்டுக் குழப்பம்தான் வரும். இந்தக் குழப்பத்தை நமது பகைவர்கள் பயன்படுத்திக்கொள்ள நேரும்."

"நீங்கள் யாருக்கு பயப்படுகிறீர்கள் தந்தையே. பகைவர்களுக்கா... பார்ப்பணர்களுக்கா அல்லது இரண்டுபேரையும் ஒரே தட்டில் இருக்க வைத்திருக்கிறீர்களா. அப்படியானால் பகைவர்களை நடத்துவதுபோல நம்மூர் அந்தணர்களை நாம் நடத்தலாமா."

"இவ்வளவு முரட்டுத்தனமாக நாம் இதை அணுக வேண்டிய அவசியமில்லை."

"பார்ப்பணர்கள் மறுத்துவிட்டார்களா. மாட்டேன் என்று சொல்லிவிட்டார்களா."

"என்ன எடுத்தவுடனேயே வாள் உருவியது போல் பேசுகிறாய். இப்படி பேசுவது நல்லதல்ல இராஜேந்திரா. ஒருவேளை அந்தணர்கள் மறுத்தாலும் நான் அவர்களை வற்புறுத்த மாட்டேன். இங்குள்ள அடிமை வீரர்களையே இந்த வேலையில் ஈடுபடுத்த எனக்கு மனமில்லை. நான் என் ஊருக்குப் போகிறேன் என்ற போது தலையசைத்து விட்டு அந்தணர்களைச் சவுக்கால் அடிப்பேன் என்று சொல்வது வெறும் கொடூர புத்தி. உனக்கு அந்தணர்களை வேறு

ஏதோ காரணத்தால் பிடிக்கவில்லை என்பதால் எப்பொழுது பார்த்தாலும் சவுக்கைச் சொடுக்கிக் கொண்டிருக்கிறாய். இதை முதலில் நிறுத்து. சோழ தேசத்தின் அந்தணர்கள் சோழ தேசத்தின் ஒரு அங்கம். அவர்கள் இல்லாது இந்த வாழ்க்கை ஒன்றும் சோபிக்காது. சோழ தேசத்தைப் பகைவர்களுக்குக் காட்டிக் கொடுக்கவும் இல்லை. முழுவதும் நம்மோடு நட்பு பூண்டு பல்வேறு விதங்களில் நமக்கு உதவி செய்து கொண்டிருக்கிறார்கள்.

சோழ சேனாதிபதி பிரம்மராயர் கிருஷ்ணன்ராமனை விட விசுவாசமும். உண்மையுள்ளவர்கள் இந்தத் தேசத்தில் உண்டா. பிரம்மராயரின் விசுவாசம் உன்னிலும் உயர்ந்தது இராஜேந்திரா. நீ அலட்சியமாக இருக்கின்ற இடங்களில் கூட, அவர் கூர்மையாக இருக்கிறார். இது நாம் மட்டுமே இருக்கின்ற ஒரு சபையாக இருப்பதால் உன் பேச்சு வேறு எங்கும் வெளியே போகாது. ஆனால், ஒரு பெரிய அரசவையில் இப்படி பேசிவிடாதே. அது உனக்கு இழுக்கு கொடுக்கும். அரசன் எல்லாம் அறிந்தவன் போன்றும், எல்லாம் செய்ய முடிந்தவன் போன்றும் பேசுவது அவ்வளவு புத்திசாலித்தனமல்ல. அவனால் எல்லாம் செய்ய முடிந்தாலும் என்ன செய்ய வேண்டுமென்று மற்றவரை ஆலோசிப்பது அறிவுடைமை. அந்த ஆலோசனையின் போது ஒவ்வொருவருடைய மனமுதிர்ச்சி எப்படி இருக்கிறது என்று நாம் தெரிந்துகொள்ளலாம். உள்ளுக்குள்ளே உனக்குள் நிகழும் கூச்சலை நிறுத்து. அப்பொழுது வெளியே நீ போடும் கூச்சல் மட்டுப்படும்.

எப்பொழுதும் போர்முனை வெறியுடன் இருக்காதே இராஜேந்திரா. ஒரு அரசன் அவ்விதம் இருப்பது தேசத்தைப் பாழ்செய்யும். போரில் போர்முனை வெறியுடனும் சமாதான காலத்தில் மிக மிருதுவாகவும் ஒரு அரசன் தன்னை மாற்றிக் கொள்ளப் பழக வேண்டும். இல்லையெனில் ஒரு மனிதன் எந்தப் பெண்ணைக் கண்டாலும் காமுறுவதுபோல ஒரு அபத்தம், அசிங்கம் ஏற்பட்டு விடும்."

சக்ரவர்த்தி உரத்த குரலில் பேசிக்கொண்டு போக, அந்தக் கண்டிப்பு தொனியைப் பார்த்துவிட்டு வந்தியத்தேவர் கவலையானார்.

சதாசிவத்திற்குச் குழப்பமாக இருந்தது.

தொலைவிலுள்ள அடிமை வீரர்கள் இராஜேந்திரர் பேச்சுக்கு சக்ரவர்த்தி வேகமாகப் பேசுவது பார்த்து சக்ரவர்த்தியின் ஆளுமைதான். சோழதேசத்தில் முழுமையாகவும் தெளிவாகவும் இருக்கிறதென்று தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

ஆனால், ஒரு மனிதனுக்கு இது இயல்பாக ஏற்படும், போர் முனையிலிருந்து திரும்புகிறபோது தன்னை ஆசுவாசப் படுத்திக்கொள்ள ஒரு அரசன் முயற்சிக்க வேண்டும். அதற்குத்தான் தானதருமங்கள்: ஆடல் பாடல்கள், இது போன்ற கோவில் பணிகள். காந்தளூர்ச் சாலையை அடித்து நொறுக்கியும் எனக்கு ஆதித்த கரிகாலன் இறந்த வருத்தம் இதுவரை தீரவில்லை. அந்த சேரதேசத்து அந்தணர்களைத் தண்டித்தது போதவில்லை. சேரதேசத்தில் படையெடுத்து காந்தளூர்ச்சாலையின் முதுகெலும்பை முறிக்காது போயிருப்பமாயின் சேரதேசத்து அரசன் பாண்டிய தேசத்தில் படையெடுத்து கபளீகரம் செய்து சோழ தேசத்திற்கு இடை யறாத ஒரு வேதனையைக் கொடுத்துக் கொண்டிருப்பான். ஒரு அந்தணக் கலாச்சாரம் இங்கு வேகமாகப் பரவியிருக்கும். வேளாளர்களும், மறவர்களும், சாதாரண குடிமக்களும், மிகுந்த பாதிப்புக்கு அப்போது உள்ளாவார்கள். அந்தணர்கள் மட்டுமே வாழத்தகுதியுள்ளவர்கள் மற்றவர்களெல்லாம் தொண்டு செய்யப் பிறந்தவர்கள் என்கிற ஒரு மனோ பாவனை சமூகத்தின் சட்டமாகப் போய்விடும்.

புத்தியில் கூர்மையான அந்தணன் வாள் எடுத்து போர் புரியவும் வந்து அதிலும் சிறந்தவனாகிவிட்டால் மற்றவர் எவருக்கும் இங்கு மதிப்பு இருக்காது. இதை உத்தேசித்துத்தான் காந்தளூர்ச்சாலையை நான் பொடிப்பொடியாக்கினேன். இப்படி ஆளுமை செய்வது தான் அவர்கள் திட்டமாகவும் இருந்தது. உத்தம சோழருக்கு பிரம்மராயாக இருந்த ரவி தாஸன் என் எதிரே இதை முழக்கமாகப் பேசியதை நான் கேட்டேன்.

ஏன் நீங்கள் அந்தணராகவே இருக்கக்கூடாது. எதற்காக வாள் எடுத்தீர்கள். எதற்காகப் போர் புரிகிறீர்கள் என்று கேட்ட போது அந்த ரவிதாஸன் பெரிதாய் கொக்கரித்தான். புத்திமானே பலவான் என்று ஒரு பழமொழி உண்டு அல்லவா. அந்த புத்திமான் பலசாலியும் ஆக விட்டால் என்ன ஆகும். அவனே கடைசிவரை முதல்வனாகவும் முன்

மேனாடியாகவும் இருப்பானல்லவா. எனவே தான் நாங்கள் பலம் பொருந்தியவர்களாகவும், ஆயுதங்களைத் தரிக்கிறவர்களாகவும், யுத்தம் பழக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறோம். அதேநேரம் எங்கள் கெட்டிக்காரத்தனங்களும் எங்களைச் சுற்றி நின்று பாதுகாக்கும். எனவே ஒப்பாரும், மிக்காரும் இல்லாமல் எங்களுடைய சமூகம் திகழும் என்றும் பேசினான். அப்போது மறவர் குலம் என்ன ஆகும் என்ற கேள்வி வந்தது.

என் கேள்வியை ரவிதாஸன் புரிந்து கொண்டான். அப்போது மறவர் குலம் அந்தணருக்குக் கைகட்டி பணிவிடை செய்யும் என்று சொன்னான். என்னால் தாங்க முடியவில்லை. ஆனால், அப்போது வாள் உருவி அந்த ரவிதாஸனை எதிர்த்திருந்தால் என்னை எளிதில் வெட்டிப் போட்டிருப்பான். அவனுடைய எண்ணம் நிறைவேறியிருக்கும். நான் அவனைப் பாராட்டிவிட்டு வந்தேன். புத்திசாலி பலசாலியாக மாறுகிறபோது பலசாலி புத்திசாலியாக மாற முடியாதா. அப்படியொரு வழி இருக்கிறது. ரவிதாஸா என்று மனதுக்குள் சொல்லிவிட்டு வந்தேன்.

இந்த மறவர் சமூகம், இந்த க்ஷத்திரிய சமூகம் புத்திசாலியாக மாறவேண்டும். எது புத்திசாலித்தனம் இராஜேந்திரா. கோபத்தில் வார்த்தைகளை இறைப்பதல்ல. எடுத்தவுடனேயே வாள் உருவித் தாக்குவதல்ல. வெட்டிச் சாய்ப்பதல்ல. என்னால் முடியும் என்று வீம்பாகக் கால் அகட்டி இடுப்பில் கைவைத்து உரத்த குரலில் முழக்குவதல்ல. எங்கு, எப்போது, என்ன, எப்படிப் பேச வேண்டுமென்ற தெளிவு ஒருவனுக்கு இருக்கிறதோ அவனே அறிவாளி. இதைவிடவும் அறிவான விஷயம். எதை எங்கே பேசக்கூடாதோ அதை அங்கே பேசாதிருப்பது. சுற்றி இத்தனை வீரர்களை வைத்துக்கொண்டு அந்தணர்களைச் சவுக்கால் அடிப்பேன் என்று நீ சொல்லியது எவர் காதிலாவது விழுந்திருந்து, அந்த வார்த்தை சோழதேசத்து அந்தணர் காதில்போனால் சவுக்கை எடுக்கும் முன்பு உன்னைச் சாய்ப்பது எப்படி என்று அவர்கள் வேகமாகத் திட்டமிடுவார்கள். நீ முட்டாளாக இருக்கிறாய் இராஜேந்திரா அதனால்தான் முரடனாக இருக்கிறாய். முரட்டுத்தனம் மிகப் பெரிய பலவீனம். மூர்க்கம் அதைவிட மிகப் பெரிய பலவீனம்."

இராஜேந்திரர் மெல்லத் தடுமாறினார்.

சற்றுப் பின்னடைந்தார். தலைகுனிந்தார். நிமிர்ந்தார்.

அவர் கண்கள் குழப்பமாக இருந்தன. அரசரை நோக்கி முன்னேறினார்.

"நான் பேசியது தவறுதான். மன்னித்துக் கொள்ளுங்கள்."

சட்டென்று தன் நெஞ்சில் கை வைத்து மன்னிப்பு கேட்டார்.

வந்தியதேவர் நகர்ந்து அவரை அணைத்துக் கொண்டார். மெல்ல அவரை வேறுபக்கம் இழுத்துப்போய் சக்ரவர்த்திக் குத் தலையசைத்து வாருங்கள் என்பது போல் சைகை செய்தார்.

இப்பொழுது சக்ரவர்த்தியும், இளவரசரும், வந்தியத் தேவரும் மட்டுமே மெல்ல மலையைச் சுற்றி நடந்து போனார்கள்.

சதாசிவாச்சாரி பின்தொடர யோசித்த போது வந்தியத் தேவன் தலைதிருப்பி வேண்டாம் என்று மிக மெல்லியதாய் சைகை செய்தார். அதை மெய்க்காவல் வீரர்கள் புரிந்து கொண்டார்கள். யாரும் பின் தொடராமல் பார்த்துக் கொண்டார்கள். அவர்களும் இருபதடி தொலைவில் விலகி மெல்ல நடந்து வந்தார்கள்.

"சரி, இப்பொழுது இருக்கிற பிரச்சினை யார் கணக்கு எழுதுவது என்பது தான். அந்தப் பிரச்சினையைச் சக்ரவர்த்தி நீங்கள் எப்படித் தீர்க்கப் போகிறீர்கள். அந்தணர்களை நீங்கள் எப்படி இங்குக் கொண்டு வந்து கணக்கு எழுத வைக்கப் போகிறீர்கள்."

"அந்தணர்கள் ஏதேனும் கோரிக்கைகளோடு என்னை நெருங்குவார்களாயின் அப்போது கோரிக்கை என்னவாக இருந்தாலும் சரி என்று ஏற்றுக் கொள்வது."

"சக்ரவர்த்தி எனக்குப் புரியவில்லை. கோரிக்கை என்ன வாக இருந்தாலும் சரியென்று தலையசைக்கும்படி ஒருவர் இருக்கலாமா என்பது எனக்குப் புரியவில்லை."

"நான் என்ன தைரியத்தில் பேசுகிறேன் தெரியுமா இராஜேந்திரா. அந்தணர்கள் ஒன்றும் அநியாயமாக கோரிக் கைகள் வைத்துவிட மாட்டார்கள். அவர்களுக்கு அதில் பயம் உண்டு. அந்தணர்களுடைய பலவீனமே அவர்களிவ்

யாதி பேர் தர்மசிந்தனை உடையவர்கள். நியாயத்திற்கு கட்டுப்பட்டவர்கள். இதனாலேயே அந்தக்குழு இரண்டுபட்டு பலவீனமாக இருக்கிறது. இன்னொரு குழு அதர்மத்திற்கு அஞ்சாமல் இருக்கிறது."

"எனக்குப் புரியவில்லை"

"சோழதேசத்து அந்தணர்கள் ஒன்றுகூடி சோழதேச அரசபதவியை எனக்குக் கொடு நாளை முதல் எங்களில் ஒருவர் சக்ரவர்த்தி என்று ஒரு போதும் கேட்க மாட்டார்கள். இரண்டாவது யாரோடு படையெடுப்பு நடத்த வேண்டும். யாரோடு படையெடுப்பு நடத்தக்கூடாது என்றும் கேட்க மாட்டார்கள். மூன்றாவது கோயில் கட்டும் பணியை நிறுத்து. திரண்ட செல்வத்தை எனக்குக் கொடு என்றும் கேட்க மாட்டார்கள். நான்காவது சோழதேசத்து இளவரசரைப் பற்றியோ. இளவரசியைப் பற்றியோ அரண்மனை விவகாரங்களைப் பற்றியோ அவர்கள் எந்தக் கோரிக்கையும் வைக்க மாட்டார்கள். அவர்கள் கோரிக்கை என்று வைத்தால் இப்போதைக்கு இவருக்கு என்னைவிட அதிகமாக எந்தச் சலுகையும் கொடுத்து விடாதே என்று தான் பேசுவார்கள். நான் சரியென்று ஏற்றுக்கொள்வேன்."

"எப்படித் தந்தையே, கருமார்களுக்கு எந்தச் சலுகையும் கொடுக்காதே என்று சொன்னால் நீங்கள் என்ன செய்வீர்கள்."

"சரியென்று ஏற்றுக் கொள்வேன்."

"தந்தையே இது என்ன நியாயம் போர் முனையில் வேலும், வாளும் சரிசெய்து கொடுத்து பலகாத தூரங்கள் நம்மோடு வந்த அந்த இளைஞர்களுக்கு நல்லது மறுப்பது என்ன நியாயம்."

"இராஜேந்திரா மறுபடி மறுபடி ஏன் நீ முரட்டுத் தனமாய் பேசுகிறாய் என்று எனக்குத் தெரியவில்லை. இராஜேந்திரா எனக்கு வயதாகிக் கொண்டிருக்கிறது. உனக்கும் வயதாகிக் கொண்டிருக்கிறது. அரச பதவியை ஏற்க வேண்டிய இந்த நேரத்தில் நீ இன்னும் இளவரசனாக இருக்கிறாய். இது செவ்வ மக்களாலும், ஏன் உன்னுடைய அரண்மனைப் பெண்டிராலும் பேசப்பட்டு விட்டது என்பதை நான் அறிவேன். எனவே நான் கொடுத்த வாக்குகள் நீ எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற அவசிய

மில்லை. மிதமிஞ்சிப் போனால் இந்தக் கோயில் கட்டும் வரைதான் நான் உயிரோடு இருப்பேன் இராஜேந்திரா. இந்தக் கோயிலைக் கட்டி முடித்தபிறகு என் பிராணன் என் உடம்பிலிருந்து வெளியே போய்விடும்."

"சக்ரவர்த்தி என்ன பேசுகிறீர்கள்."

இராஜேந்திரர் அலறினார்.

சுற்றியுள்ள அத்தனை ஜனங்களும் அலரைப் பார்த்தார்கள்.

"ஒரு இளவரசன் இப்படியெல்லாம் காட்டுக் கூச்சலாய்ப் பேசுவது அபத்தம். உணர்ச்சிவசப்படுவது முட்டாள்தனம். நான் எத்தனைமுறை சொன்னாலும் உனக்குத் தெரிய வில்லை. இந்த விஷயத்தை உள்வாங்கிக் கொண்டு பேசு."

சக்ரலர்த்தி அதட்டலாய்ச் சொல்ல.... இராஜேந்திரர் மறுபடியும் தலைகுனிந்து கொண்டார்.

வந்தியத்தேவர் திகைத்தபடி சக்ரவர்த்தியைப் பார்த்தபடி உட்காரந்திருந்தார்.

"என்ன மரணம் என்பது மனிதருக்கு சகஜம்தானே. எனக்கு வயதாகிக் கொண்டிருக்கிறது. வாழ்க்கையில் நான் என்னவெல்லாம் அனுபவித்து விட்டேன். அழகிய பெண்டிர் உன்னைப்போல் நல்ல குழந்தைகள். என்னைச் சுற்றி பல அறிவாளிகள். இதோ உயிர்க்குயிராக நண்பனைப்போல் இருக்கின்ற ஒரு மருமகன். சோழதேசத்தின் மாப்பிள்ளை. அற்புதமான அக்காள். எனக்கு என்ன குறை. யாருக்கு கிடைக்கும் இந்தச்சிறப்பு. எந்த ஜென்மத்தில் என்ன விதமான புண்ணியங்கள் செய்தேனோ. எனக்கு இப்படியொரு நல்ல பிறப்பு கிடைத்திருக்கிறது. ஒரு வளமான தேசம் கிடைத் திருக்கிறது. ஒரு தேசத்திற்கு சக்ரவர்த்தியாக இருக்கிறேன். இது போதாதா. நான் இறக்காமல் இருக்க வேண்டுமென்ற வரமும் வேறு வாங்கி வந்திருக்க வேண்டுமா. இல்லை வயதாக வயதாக மரணத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். எனவே நான் மரணம் பற்றிப் பேசுவதும் இயல்பான விஷயம்தானே. அடுத்தது நீதானே அரசன். ஆக நீ ஆட்சிக்கு வரும்போது நான் கொடுத்த சலுகைகளை நீ நடத்த வேண்டிய அவசியம் இல்லையே."

"இராஜேந்திரா... சரி என்று ஏற்றுக் கொள்வேனே தவிர, செயல்படுத்த சில வருடங்கள் ஆகலாம். அப்படி செயல்படுத்துகின்ற வேளை வரும்போது நீ அரசபதவியை ஏற்று செயல்படுத்த முடியாது என்று சொல்வலாம். இதெல்லாம் ஒரு முன்னெச்சரிக்கையான விஷயங்கள் தானே. மற்றபடிக்கு இந்த அந்தணர்கள். மிக நியாயமான ஒரு கோரிக்கை வைத்தால் அதை நானும் நீயும் ஏற்றுத்தானே ஆகவேண்டும்."

"அந்தணர்கள் எப்போது நியாயமான கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள்."

"இது தவறு. இது மிகப்பெரிய தவறு. ஒரு குறிப்பிட்ட சமூகத்தை நீ வெறுத்து ஒதுக்கிப் பேசுவது உனக்குத் தீங்கு விளைவிக்குமென்று எச்சரிக்கிறேன். தேவையில்லாமல் ஒரு எதிரியை ஒரு அரசன் சம்பாதித்துக் கொள்ளக்கூடாது. அதுவும் உன் நாட்டிலேயே குழப்பம் விளைவிக்கக்கூடிய ஒரு முறையை அவன் எடுத்துவிடக்கூடாது. இராஜேந்திரா மிகமிக கவனமாக இரு.

சந்திரமல்லி புத்த மதத்திற்கு மாறியபிறகு நான் புத்தர்களை வேரறுக்கவில்லை. அடித்து ஒதுக்கவில்லை. மாறாய் நிவந்தங்கள் கொடுத்து அடக்கி வைத்தேன். கொடுப்பதுபோல கொடுத்து அமுக்குவது போல் அமுக்கிவிட்டேன். அப்படித் தான். ஒரு அரசன் நடந்து கொள்ள வேண்டுமே தவிர, இந்தத் தந்திரம் தான் கையாள வேண்டுமே தவிர, வாள் உருவிப் பேசுவது என்பது போர் முனையில் மட்டுமே. எதிரிகளிடம் மட்டுமே. எதிரிகளை நண்பர்களாக மாற்றிக் கொள்ளலாம். அது நல்லது ஆனால், தயவு செய்து நண்பர்களை எதிரிகளாக மாற்றிக் கொள்ளாதே. வாழ்க்கை நிலைபெறாமல் போய்விடும். நிம்மதி அறுந்து தொங்கும். எனவே இத்தோடும் இந்தப் பேச்சை முடித்துக் கொள். அந்தணர்களைக் கணக்கு எழுத இங்கு வரவழைக்க வேண்டும். அந்தணர்கள் நம்மிடையே வருவார்கள். வரும்படியாகவும் செய்ய வேண்டும். அவர்கள் நலமாக இருக்கிறார்களா என்று ஒருமுறை உருக்க விசாரி. அந்தச் செய்தி தானாய் அந்தணர்களிடம் போய் சேரும். அந்தணர்கள் நலமாக இருக்கிறேன் என்று சொல்வதற்கு வருவார்கள். என்ன வேண்டுமென்று அப்பொழுது கேள். ஏதேனும் அப்பொழுது கேட்பார்கள். உடனடியாகச் செய்து கொடுப்பதாய் சத்தியம் செய். அந்தணர்கள், மகிழ்வார்கள். எனக்கொரு

பிரச்சினை இருக்கிறது என்று பேசு. கணக்கு எழுதக் கூப்பிடு. கூடுதல் சன்மானம் என்று சொல். வேளாளரோடு போராடி உழவுக் குத்தகையைப் பெருவதைவிட உட்கார்ந்து கணக்கு எழுதுவது உத்தமம் என்று நினைப்பர். அவர்கள் போதும் இதற்கு."

"சக்ரவர்த்தி"

இளவரசர் இராஜேந்திரர் கை கூப்பினார்.

"நான் பலதும் புரிந்து கொண்டேன். ஆயினும் ஒரு கேள்வி. இதை இப்படித்தான் நடத்த வேண்டுமா. சவுக்கு தவறா."

"ஆமாம் இதை இப்படித்தான் நடத்த வேண்டும், சவுக்கு நிச்சயம் தவறு"

வந்தியத்தேலர் இரண்டு கைகளையும் விரித்து வானம் பார்த்தார். தெய்லமே... தெய்லமே... அறிவுச்சுடரான ஒரு அரசரை எங்களுக்குத் தந்ததிற்காக நன்றி சொல்கிறேன் என்று வானம் பார்த்து கைகூப்பினார்.


ஜனங்கள் அதையும் பார்த்து என்னவென்று தெரியாமல் சந்தோஷப்பட்டார்கள்.

# 130

இத்தோடு நாற்பது முறையாக விதம்விதமாக தண்டித்து விட்டேன். அலனுக்கு எந்தப் பாடமும் முழுமையாக மனதுக்குள் தைக்கவில்லை. கோஷ்டியோடு சேர்ந்து உட்கார்ந்து லாயசைக்கிறானே தவிர, அல்வப்போது நெஞ்சு நிமிர்த்தி, எல்லாம் தெரிந்ததுபோவ கம்பீரமாய் நடக்கிறானே, தவிர உண்மையில் பாடத்தினுடைய சாரம் உள்ளுக்குள் போக வில்லை. இவனைப்பற்றி நினைத்தால் கவலையாக இருக் கிறது."

திருவையாறு குளக்கரையில் அமர்ந்து கொண்டு ஒரு வயதான அந்தணர். நடுத்தர வயதுள்ள அந்தணரிடம் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்.

"அவனை மட்டும் குற்றம் சொல்லிப் புண்ணியமில்லை. இந்த ஊரின் அமைப்பு அப்படி ஆகிவிட்டது. ஆட்டமும், பாட்டமும், தெருக்கூத்தும், நாடகமும், இசையும், கவிதையும்.



தமிழ்த்தேவார பாட்டுக்களும் விதம்விதமாக அவன் திசையைத் திருப்ப பல விஷயங்கள் நடந்து கொண்டிருக்கும் போது அவன் மனம், ஒருமித்து வேத பாடத்தை எப்படி கற்கும், தஞ்சை தொலைதூரத்திலிருந்தாலாலது பரவா யில்லை. எட்டிப் பிடித்து ஓடினால் கால்நாழிகையில் இவர்கள் போய் தஞ்சைக்குச் சேர்ந்துவிடுகிறார்கள். வேண்டு மென்றே வேட்டியை உருவி தலையில், சுற்றிக் கொண்டு வெறும் கோமணத்தோடு பாதையில் நாற்பது ஐம்பது பேராய் சேர்ந்து கொண்டு தஞ்சை நோக்கி ஓடுகிறார்கள்.

வேளாளர்களும் மறவர்களும் பதறி இலர்கள் ஓடுவது பார்த்து எழுந்திருப்பது இவர்களுக்குச் சந்தோஷமாக இருக்கிறது. இங்கிருந்து கரந்தைக்குப் போய் ஓய்வெடுத்துக் கொண்டு பிறகு வேட்டியை உடுத்தி மேல்துண்டு போர்த்தி நல்ல அமைதியான அந்தணர்கள் போல இந்தப் பிள்ளைகள் தஞ்சைக்கு நடக்கின்றார்கள். அரண்மனைக்கு எதிரே போய் ரிக்* வேதமோ, யஜுர் வேதமோ சொல்கிறார்கள். பிறகு எங்கேனும் மடத்தில் உணவு பிறகு அங்கிருந்து ஆடல் பாடல் என்று தளிச்சேரி பெண்டுகளை வேடிக்கை பார்க்க கிளம்பி விடுகிறார்கள். இரவு முழுவதும் ஊர் சுற்றிப் பார்த்துவிட்டு விடியற்காலையில் வருகிறார்கள். லந்து காலை ஜபம் செய்லது போல ஒரு ஏமாற்று வேலை செய்துவிட்டு கொல்லைப்புரத்துத் திண்ணையில் ஒரு வேட்டியை

போர்த்தித் தூங்குகிறார்கள். இரவு பார்த்த நாடகத்திலேயே மனம் மயங்கிக் கிடக்கிறது."

தளிச்சேரி பெண்களின் உடம்பு அமைப்பிலேயே புத்தி கட்டுண்டு கிடக்கிறது. எந்தப்பாடம் எப்படி ஞாபகம் வரும்.

"அதுதான்... அதுதான் நீங்கள் சொல்வது தான். இவனை உத்தேசித்து நான் இங்கேயிருந்து குடிபெயர்ந்து இன்னும் தள்ளிப் போய்விடலாமா என்றிருக்கிறேன்."

"எங்கே போவீர்கள். குடந்தைக்கா, குடந்தையிலும் இந்த விதமான கூத்துக்கள் தான் நடந்து கொண்டிருக்கின்றன. தொண்டை நாட்டில் மட்டும்தான். இவை சற்று மட்டமாக இருக்கிறது. தொண்டை நாட்டிலிருந்து சோழ தேசத்திற்கு வரும் அந்தணச் சிறுவர்களையும் பார்த்தீர்களா. பத்து அல்லது பதினோரு அகவை தான் இரண்டு வேதமும் முழு மனப்பாடத்தோடு சொல்கிறான். நிறைய அந்தணர்கள் உள்ள சபையில் அவனும் அமர்ந்து ஜடபாராயணம் செய்கிறான். ஜாதகம் எழுதுகிறான். மழை குறித்தும், தொலைந்த பொருட்கள் குறித்தும் பிரசன்னம் பார்க்கிறான். நோய்க்கு மருந்து சொல்கிறான். பதினோரு வயதிலேயே இந்தப்போடு போடுகிறானே முப்பது நாப்பது வயதில் எப்படி மின்னு வான் என்று நான் பிரமித்துப் போனேன். அவன் மட்டு மல்ல அப்படியொரு ஐநூறு பையன்கள் தஞ்சையின் எல்லைக்குள் நேற்று வந்திருக்கிறார்கள்."

"தஞ்சைக்கு வந்துவிட்டானல்லவா. இனி அவர்கள் பாழாகப் போவது உறுதி... எழுதி வைத்துக் கொள்ளுங்கள்."

"தொண்டை தேசத்துப் பையன்கள் பாழாகப் போக மாட்டார்களய்யா. அவர்கள் வேலையில் கெட்டிக்காரர்கள். நீங்கள் சொல்வது போல வேறு எந்தவித கருத்து திசைமாற லும் இல்லாமல் மிகக் கம்பீரமாக கவனமாகப் பாடம் படித்துவிட்டார்கள். இப்பொழுது பாடம் மனனமாகி விட்டது. எத்தனை தளிச்சேரி பெண்டுகள் வந்தாலும் என்ன விதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் அவன் கலைய மாட்டான். மாறாய் மாட்டிக் கொண்ட பிறகும் மீண்டும் வந்துவிடுவான். இங்கேயுள்ள குழந்தைகளுக்கு மனனம் செய்கின்ற பக்குவமே வரவில்லையே. மனனம் செய்யத் தெரி யாதவன் அந்தணனாக இருக்க முடியுமா. மறதியுள்ளவன் வேதம் படிக்க இயலுமா. எனக்கு கவலையாக இருக்கிறது"

மத்திம வயது அந்தணர் சொல்ல. வயதான அந்தணர் தலை யசைத்தார்.

"இன்றைக்கு சபை இருக்கிறது என்று நினைக்கிறேன்."

"ஆமாம் என்ன சபை கூடிக்கூடி பேசுகிறார்கள். வெற்றி லைத் தட்டு வைத்தவுடன் பாய்ந்து களிப்பாக்குக்கும். வெற்றி லைக்கும் முட்டி மோதி சண்டை போடுகிறார்கள். வெறும் வெற்றிலை பாக்கு வைத்தால் போதுமா. தட்சணை எங்கே என்று ஒரு பிராமணன் கேட்கிறான். இவனுடைய பிரச்சினை பேசுவதற்கும் இவனுடைய சமூகம் அழைத்தால் இவனுக்கு தட்சணை தரவேண்டுமாம். எவ்வளவு கொழுப்பு பார்த்தீரா."

"வாங்கிப் பழக்கமாகிவிட்டது. தட்சணை இல்லாத தாம்பூலம் மீசையில்லாத மறவன் போல...

"வேண்டாம் மறந்து போயும், மறவனை உபமானத் திற்காக கூட இழுக்காதீர்கள். ஏனோ அவர்கள் நம்மீது கோபமாக இருக்கிறார்கள்."

"மறவர்களா, நம்மீது கோபமாக இருக்கிறீர்கள்."

"எல்லோரும் தான்."

"எல்லோரும் என்றால்

"அந்தணரல்லாத எல்லோரும் அந்தணரைப்பற்றி கோப மாகத்தான் இருக்கிறார்கள். ஒரு சுமுகமின்மை வெகுவேக மாகப் பரவி வருகிறது. நமது நிலத்து வேளாளன் அளக் கிறான் அவ்வளவு."

"நெல்லெல்லாம் அளக்கிறான் ஆனால், அதைக் கொடுப் பதில் முன்பு ஒரு பணிவும், அன்பும் இருந்தது. இப்பொழுது இல்லை."

"யாரிடம் பணிவும், அன்பும் இல்லை.'

• இறுதியாக மத்திம வயது அந்தணர் கேட்க, வயசாளி அந்தணர் நிமிர்ந்து பார்த்தார். சிரித்தார்.

"உண்மை அந்தணர்களிடம் பணிவும், அன்பும் இல்லை."

"அதற்கு என்ன காரணமென்று நினைக்கிறீர்."

மத்திம வயது ஆள் வயதானவரிடம் கேட்டார் வயதானவர் ஆடாமல் அசையாமல் திருவையாறு கோவில்

குளத்தின் நீர்ப்பரப்பை பார்த்துக் கொண்டிருந்தார். ஒரு மீன் துள்ளி அவரைப் பார்த்துவிட்டு உள்ளே போயிற்று. வயதானவர் மெல்லத் திரும்பினார்.

"எனக்குப் புரிந்து விட்டது. அந்தணர்கள் ஒரு பாதுகாப்பின்மையை உணர்ந்திருக்கிறார்கள். அதனால் தான் அவர்களிடமிருந்து அன்பும், பாசமும் நகர்ந்து விட்டன. வேளாளர்களுக்கு பயிர்த்தொழில் பாதுகாப்பாக இருக்கின்றது. க்ஷத்திரியர்களுக்கு வாள் பாதுகாப்பாக இருக்கின்றது. வணிகர்களுக்கு வணிகமும், மற்ற தொழில் ஜாதியினருக்கு அவர்கள் தொழிலும் பாதுகாப்பாக இருக்கிறது. நாம் வேதத்தை நம்பியிருக்கிறோம். வேதம் சோறு போடுமா என்ற பயம் அந்தணர்களுக்கு வந்துவிட்டது.

"உங்கள் நம்பிக்கையின்மைக்கு யார் பொறுப்பு நீங்கள் தானே."

மத்திம வயதுடைய அந்தணர் கேட்டார்.

"இல்லை ஐயா, அப்படி சொல்லாதீர். வேதத்தை ஆதரிக்க மாட்டேன் என்று அரசர்களும், வணிகர்களும் மற்றவர்களும் முடிவு செய்துவிட்டால் அந்தணர்கள் வாழ்க்கை திசைமாறும். இனிமேல் பயிர்த்தொழில் நடத்த வேண்டியது. அவசியமில்லை. உலகமெங்கும் இருக்கின்ற மண்ணைத் தின்றால் போதும். பசி அடங்கிவிடும். கல்லைக் காய்ச்சி குடித்தால் போதும், வயது நிரம்பி விடும் என்று ஒரு நிலை வந்தால் இந்த வேளாளர்கள் என்ன செய்வார்கள். உடுத்த வேண்டிய அவசியமே இல்லை என்று சொல்லிவிட்டால் துணி நெய்பவர்களுடைய வேலை என்ன. அவர்கள் பாதுகாப்பின்மையை உணர மாட்டார்களா. என்ன செய்வது என்று திகைக்க மாட்டார்களா. அது போலத்தான் இதுவும். அந்தணனுடைய வேதம் மிக முக்கியமானது. முதன்மையானது. அதுதான் வாழ்க்கையை வழி நடத்தக்கூடிய ஒரே ஊன்றுகோல் என்று ஒரு காலமிருந்தது. இப்பொழுது அந்தக் காலம் இல்லையோ என்று தோன்றுகிறது."

"அதாவது மற்ற ஜாதியினர் நம்முடைய வேதத்தை முக்கியமாகக் கருதவில்லை என்று சொல்கிறீர்கள் அல்லவா."

"ஆமாம்."

"அதற்கு நீங்களும் காரணமாக இருக்கலாம் அல்லவா அவர்களை மட்டும் குறை சொல்லி என்ன பயன்."

"எந்த விதத்தில் நான் காரணமாக இருக்க முடியும்.

"நான் சொல்கிறேன். அந்தணர்கள் மீது நம்பிக்கை குறைந்து விட்டது."

"யாருக்கு."

"சகலருக்கும்."

"எதனால்."

"சமீபத்திய அரசியல் விஷயங்களால்...

"என்ன சமீபத்திய அரசியல் விஷயம்."

"ரவிதாஸன் பரமேஸ்வரன் அவர்கள் வாள் தரித்து முதுகில் கேடயம் தரித்து, கால்களில் செருப்பு தரித்து சுழல் தரித்து, கங்கனம் தரித்து, கேயூரம் மாட்டி அரசவை நடுவே சேனாபதி என கம்பீரமாக அமர்ந்து சோழதேசத்தைக் காப்பேன். என்று சத்தியம் செய்து பிரம்மராயர்களாகப் பதவியேற்றலர்கள். ஆனால், அந்த அந்தணன்தான் சோழ தேசத்தின் குலக்கொடியை வேரறுத்தவன் என்று ஜனங் களுக்கு எப்பொழுது தெரிந்ததோ அப்போது அந்தணர்கள் மீது அலநம்பிக்கை வந்துவிட்டது. கொலையும் செய்லார்களா அந்தணர்கள் என்று கேள்வி வந்துவிட்டது. அதுமட்டுமில்லை. இப்படி செய்தவர்கள் என்னவெல்லாம் அதிகாரங்கள் செய்வார்கள் என்கிற கோபம் வந்துவிட்டது."

"இரண்டு தனி நபர்களை வைத்துக் கொண்டா ஒரு பெரிய குலத்தை எடை போடுகிறாய். பரதகண்டம் முழுமையும் பரவிய ஒரு கலாச்சாரத்தை நீ கேள்வி கேட்கிறாய்."

"ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்."

"அந்தணர்கள் ஒன்றும் சோற்றுப்பானை அல்ல. பதம் சொல்லிப் பிரிப்பதற்கு."

"துரோகிகளான ரவிதாஸன், பரமேஸ்வரன் என்று கல்லில் பொறித்து விட்டீர்கள்."

"வேறு எந்த ஜாதியிலும் துரோகிகள் இல்லையோ, க்ஷத்திரியர்கள் காட்டிக் கொடுத்ததாய் சரித்திரம் இல்லையோ, நல்லலரும், கெட்டவரும் உலகத்தின் எல்லாக் குலத்திலும் உண்டு அப்பனே. கிருஷ்ணன் ராமனான பிரம்ம ராயர் அந்தணர்தான். அவர் இப்போது சேனாதிபதி.

அரசருக்கு அடுத்த பதவி, இளவரசருக்கும் மேம்பட்டவர். அலசியமெனில் பட்டமகிஷியையும் கைது செய்யலாம் என்று அவருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிருஷ்ணன் ராமருடைய யுக்தியால் போர்த் தந்திரத்தால் பல யுத்தங்களில் சோழப்பேரரசர் ஜெயித்திருக்கிறார். சக்ரவர்த்தி வெற்றிவாகை சூடவும். உயிர்த் தப்பிக்கவும் கிருஷ்ணன்ராமன் காரணமாக இருந்திருக்கிறார். இந்த சோழதேசத்து நிர்வாகம் மிகச்சிறப்பாக நடைபெறுவதற்கு அவரும் ஒரு காரணம்."

"அப்படியென்ன அவரைக் கொண்டாடி விட்டீர்கள். அவருக்காக அந்தணர்களை என்ன சிறப்பித்து விட்டீர்கள்."

"குறை சொல்ல வருகிற வாய் கொண்டாடவும் வர வேண்டுமல்லவா. பிரம்மராயருக்குக் கீழே இருக்கின்ற அலு வலர்கள் அந்தணர்கள். அவர்கள் பெயர்கூட சக்ரவர்த் திக்கோ, இளவரசருக்கோ தெரியாது. ஆனால் அவர்கள்தான் இந்த சோழ தேச நிர்வாகத்தின் ஆணி வேர்கள்.

"அவர்களுக்கு எந்தவிதமான கிரீடமும் நீங்கள் அணி வித்துவிடவில்லை. எந்தப்பட்டயமும் கொடுத்து விடவில்லை."

"அவர்கள் எதுவும் எதிர்பார்க்கவில்லை. நம்மை நாமே தரக்குறைவாக பேசுவது நல்லதல்ல. இது பலகீனம். வேறு எந்த இனத்தாரும் தங்களைத் தாங்களே குறை கூறிக் கொள்வ தில்லை. முன்னிலும் ஒற்றுமையாக இருக்கிறார்கள். நாம் மட்டும் ஏன் பிளந்து போய் கிடக்கிறோம் என்று எனக்குப் புரியவில்லை. இன்னும் கேட்கப் போனால் இந்த பிளவு அதிகமாகிவிடுமோ என்ற பயம் வந்திருக்கிறது."

"எதனால் அந்தப்பயம்."

"தெரியவில்லை காரணமில்லாது அந்தணர் கூட்டம் பிளவுபடுமோ என்கிற பயம். யோசித்துப் பார்க்கிறபோது இந்தப் பாதுகாப்பின்மையால் அவர்கள் வேறு வேலைக்குப் போய்விடக்கூடிய நிர்ப்பந்தங்கள் அதிகம் உருவாகுமோ என்ற பயம் இருக்கிறது."

"எதனால் அப்படிச் சொல்கிறீர்கள்."

"என் மகனை வைத்துச் சொல்கிறேன். என் ஐம்பத் தைந்து வயதில் பிறந்த மகன் இவன். ஆடல்பாடல் என்று இருக்கிறானே தவிர, அவனுக்கு வேதம் படிப்பதில் நாட்டம் வரவில்லை. நாற்பது முறை விதம்விதமாய் தண்டித்தபிறகும்

அவனுக்கு எந்தப் பாடமும் முழுமையாய் பிசிறின்றி சொல்ல வரவில்லை. மனனம் செய்வதில் மனம் வரவில்லை. மனம் எங்கேயோ கட்டுத்தறியாகச் சுற்றிக் கொண்டிருக்கிறது. என் மகனுக்கு மட்டுமல்ல, தஞ்சையைச் சுற்றியுள்ள பல கிராமத்து இளைஞர்களின் முகத்தில் அமைதியை விட பரவசமும், பரபரப்பையும்தான் பார்க்கிறேன். அவர்கள் கூடிக்கூடி உட்கார்ந்து பேசுகின்ற விஷயத்தைத் தொலைவில் உட்கார்ந்து செவிமடுக்கிறேன். நான் தூங்குவதாக அவர்கள் நினைத்துக் கொண்டு மெல்லிய குரலில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பேச்சு அவ்வளவு சுத்தமானதாக இல்லை.

என் இளம்வயதில் நானும் பெண்களால் ஈர்க்கப்பட்டிருக்கிறேன். ஆனால் அதை மீறி எப்படி பாடத்தில் கவனம் செலுத்துவது என்று எனக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டது. நான் பணிவாகக் கற்றுக் கொண்டேன்."

அவர்கள் பேசிக் கொண்டேயிருக்கும்போதே இன்னும் இரண்டு அந்தணர்கள் வந்தார்கள். அவர்கள் கையில் சொம்பும், பஞ்ச பாத்திரம் என்று சொல்லப்படும் சத்தியா வந்தனத்திற்கான பாத்திரமும் இருந்தது.

"இன்னும் சூரியனே அஸ்தமிக்க ஆரம்பிக்கவில்லை. அதற்குள் சத்தியாவந்தனம் செய்ய ஆரம்பித்து விட்டீர்களா." வந்தவர்கள் அமர்ந்தவர்களைக் கேட்டார்கள்.

"நான் மாத்யாயனம் செய்ய வந்தேனய்யா. இன்னும் வீட்டிற்கே போகவில்லை."

"என்னது இது. அப்பொழுது உணவே எடுக்கவில்லையா."

"பசியே இல்லை."

வயசானவர் நொந்த குரலில் பேசினார்.

"இப்படிக் கொலைப்பட்டினி கிடக்காதீர்களய்யா. உன் வீடு அருகில்தானே இருக்கிறது. போய் பால் விட்டு சுடு கஞ்சி எடுத்துவா பெரியவர் பசியோடு இருக்கிறார் இப்பொழுது கொடுத்தால் கோடி புண்ணியம்."

"எனக்கு மட்டும் எடுத்து வந்து நான் மட்டும் குடித்தால் வயிறு வலிக்கும் எல்லோருக்கும் எடுத்து வா. இல்லையெனில் வேண்டாம்."

லயதானவர் தீர்மானமாகச் சொன்னார்.

"என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள்."

வந்தவர்கள் கேட்டார்கள், அமர்ந்தவர்கள் விளக்கினார்கள்.

"இதுவொன்றும் பெரிய விஷயமில்லை. உங்களை உங்கள் தந்தை சொன்னது. நீங்கள் உங்கள் பிள்ளையைச் சொல்கிறீர்கள். உங்கள் பிள்ளை தன் பிள்ளையைச் சொல்லான். இது தலைமுறை தலைமுறையாக இளைஞர்களை முதியவர்கள் சொல்கின்ற குற்றச்சாட்டு உங்களுடைய எழுபத்து மூன்று வயது அனுபவத்தை உங்கள் பதினெட்டு வயதுப் பிள்ளை உள்ளங்கை நெல்லிக்கனியென பெற்றாக வேண்டும் என்ற பரபரப்பு. ஒரு கரிசனத்தால் ஏற்பட்ட கூச்சல். ஆனால், உங்கள் தந்தையை விட நீங்கள் இன்னும் கெட்டிக் காரர். வெகு நிச்சயமாய் உங்கள் பிள்ளை உங்களை விட கெட்டிக்காரனாவான். ஏனெனில் உங்களைவிட ஒரு பரந்து பட்ட உலகம் அவனுக்குக் கிடைத்திருக்கிறது. வெறும் உள்ளங்கை அதிரசத்திற்கு ஹோமமும், ஜபமும் செய்தார்கள். இப்பொழுது ஒரு பொற்காசு கிடைக்கிறது. அதாவது ஒரு கூடை அதிரசம் கிடைக்கிறது."

"பழமார்நேரியில் பாபநாசத்தில் ஸ்ரார்த்தம் என்றால் நீங்கள் நடந்து போய்த்தான் ஆகவேண்டும். ஆனால் இப்போது திருவையாறிலிருந்து நாலா பக்கத்திற்கும் பாரவண்டிகள் போய்க்கொண்டேயிருக்கின்றன. வெய்யில் அடித்தாலும், மழை பெய்தாலும் சாலைகள் உறுதியாக இருக்கின்றன. நான்கு நாள் வெள்ளத்திற்கே சாலைகள் ஊடறுத்து கால்வாய்கள் போய் காவிரியில் கலப்பதும், முன்னேயும், பின்னேயும் போக முடியாமல் இடுப்புக் கோமணத்தோடு நீந்திக் கடந்த நாட்களும் உங்களுக்கு மறந்து விட்டன. இப்பொழுது அப்படியில்லை. எந்தச் சாலையும் ஊடறுத்து எந்தக் கால்வாயும் போவதில்லை. எல்லாக் கால்வாய்களும் தூர் எடுத்து செப்பனிட்டு விட்டார்கள்.

காவிரியில் அதிகமாக தண்ணீர் வந்தால், கால்வாயில் தண்ணீர் திறந்துவிடப்பட்டு அந்தக் கால்வாயிலிருந்து பல கிளைக் கால்வாய்களுக்கு நீர் அனுப்பப்பட்டு சோழதேசத்தின் எல்லா பக்கமும் பசுமையாகிவிட்டது. கீழைச் சாளுக்கியத்தோடு சம்பந்தம் ஏற்பட்டபடியால் அங்கிருந்து அற்புதமான நெல் வண்டிகள் வருகின்றன. தரமான அரிசி

கிடைக்கிறது. கரும்பும், நிறைய தானியங்களும் இடையறாது அவர்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். உணவு அதிக மானால் பாத்திரங்களும் அதிகமாக வேண்டும். தொண்டை நாட்டிலிருந்து பாத்திரங்களும், உழவுக் கருவிகளும், இரும்புச் சாமான்களும் வந்து இறங்கிக் கொண்டேயிருக்கின்றன. தானியமும் பெருத்துவிட்டது. எனவே, காசு புழக்கம் அதிக மாகிவிட்டது. எனவே ஆட்டமும், பாட்டமும் இன்னபிற கலைகளும் காசு புழக்கத்தால் அதிகமாகிவிட்டன."

"கடந்த சில வருடங்களாக போர் இல்லை. எதிர்ப்பவர் எவரும் இல்லை. சக்ரவர்த்தி இராஜராஜர் ஒரு பக்கம், இளவரசர் இராஜேந்திரர் இன்னொரு பக்கம் மிகச்சரியாக அமர்ந்து சரியான சேனாதிபதிகளுடன், மிக அழகாக அரசாங்கம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எங்கே சுபிட்சம் இருக்கிறதோ, அங்கு ஆடல் பாடல் இருக்கத்தான் செய்யும். தன்னால் ஏற்பட்ட சுபிட்சத்தைத்தான் சக்ரவர்த்தி இராஜ ராஜத்தேவர் பெரிய கற்றளியாக மாற்றிக் கொண்டிருக்கிறார்.

அங்கு பொற்காசுகள் இருக்கின்றன. ஆட்கள் இருக் கிறார்கள். நல்ல விளைச்சல் இருக்கிறது. நாவா புறமிருந்து தானியங்கள் தஞ்சையை நோக்கி வருகின்றன. நாம் ஏதேனும் வேலை செய்யலாமல்லவா" அதைச் செய்யவில்லையெனில்...

பேசிய அந்தணர் நிறுத்தினார்.

மற்றவர்கள் அவரை வியப்போடு பார்த்தார்கள்.

"உள்நாட்டுக் கலவரம், குழப்பம் ஏற்படும். தின்றுவிட்டு உட்கார்ந்து கொண்டிருக்கிற புத்தி ஏதேனும் சிந்திக்கும் வாய் அலட்சியமாய்ப் பேசும். வீண் வம்பு வரும். இப்போது எல்லா வம்புகளையும் விட்டுவிட்டு செயற்கரிய ஒரு காரியத் தைச் செய்ய வேண்டுமென்று மக்கள் ஈடுபடத் துவங்கி விட்டால் சோழதேசத்தின் பெருமையை நிலைநாட்டியது போலவும் ஆயிற்று. மக்களைத் திசை திருப்பியது போலவும் ஆயிற்று."

"எத்தனை நாட்கள் திசை திருப்ப முடியும். ஒரு கட்டடம் கட்ட ஏழு, எட்டு பத்து வருடங்கள் ஆகும் அவ்வளவுதான்."

"அவ்வளவுதான்"

"அத்தோடு சக்ரவர்த்தி இராஜராஜர் காவம் முடிந்தது

அதற்குப் பதிலாய் ஒரு அந்தணர் அடிக்குரலில் ரகசியம் போலும் பேசினார். எல்லோரும் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

“அடுத்தது... இன்னொரு அந்தணர் ஆவலாகக் கேட்க, “இளவரசர் இராஜேந்திரர் பதவிக்கு வருவார். பதவிக்கு வந்ததும் எல்லா அரசரைப்போல அவரும் ஒரு மிகப்பெரிய படையெடுப்பு நடத்துவார். அந்தப் படையெடுப்பிலும் வெற்றி பெற்று பொற்காசுகளும், ஆடு மாடுகளும், தானியங்களும் கொண்டு வந்து தஞ்சையில் நிறைப்பார். ஆட்களைக் கொண்டு வந்து குவிப்பார்.”

“பிறகு.”

“மறுபடியும் எங்கேனும் ஏதேனும் கோவிலைக் கட்டுவார்கள்.”

“ஆஹா... ஆஹா... மறுக்க முடியாத உண்மைகளை இந்த அந்தணக்கூட்டம் பேசிவருகிறது. ஆனால், நமக்கு செயலாற்றத்தான் முடியவில்லை.”

ஒரு அந்தணர் தன் மார்பைத் தானே தட்டிக் கொண்டு பேசினார்.

“நாம் செயலாற்றக் கூடாதய்யா. அதுதான் முக்கிய மானது என்ன நடக்கும் என்று அனுமானிக்க வேண்டும். நடந்தது என்ன என்று கவனிக்க வேண்டும். மற்றபடிக்கு கேட்டால் இவ்விதமான காரியம் செய் என்று சொல்லி விட்டு மௌனமாக இருப்பதே நல்லது.”

“அதெப்படி.

“அதுதானே நம் தத்துவம்.”

“என்ன தத்துவம்.”

“வெறுமே இருந்துவிட்டுப்போ””

இருந்துவிட்டு என்பதை அழுத்தம் திருத்தமாக அந்தணர் உச்சரித்தார்.

“இருந்துவிட்டு என்றால்...

“சாட்சியாக இருந்துவிடு... நீ எதுவும் செய்ய முற்படாதே எதையும் தடுக்காதே. எதையும் மாற்றாதே. சாட்சி யாகவே இரு.”

"இது சரியா."

"வேறு எதுவும் சரியில்லை. அதனால் இது சரி."

அந்த அந்தணக்கூட்டம் கண்களை நெட்டுக்குத்தி கரையையும் நீரையும் வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தது.

எதிர்க் கரையிலுள்ள அந்தணர்கள் வந்து அருகே உட்கார்ந்து கொண்டார்கள்.

"என்ன இவ்வளவு பெரிய சபை. அதுவும் இந்தச் சாயங்கால வேளையில்."

யாரும் பதில் சொல்லவில்லை.

புதிதாய் வந்தவர் முன்பே இருந்தவரிடம் காதோரம் என்ன நடந்தது என்று கேட்டு முழுவதும் கிரகித்துக் கொண்டு மெல்லக் குரல் கொடுத்தார்.

"கருமார்கள் பூணூல் போட்டுக்கொள்ள வேண்டும் என்று கேட்கிறார்கள். இதைவிட வல்லடி ஏதும் உண்டா. அந்தணர்களைப்போல அவர்களும் கம்பீரமாய் வர வேண்டுமென்று நினைக்கிறார்கள். அரசனுக்கு நெருக்கமாய் அவருக்கு உதவியாய் போர்களுக்கு பின்பலமாய் நாம் இருக்கிறோம் என்ற தைரியத்தில் அரசர் பாராட்டியதால் அவர்கள் என்ன வேண்டுமானாலும் கேட்கலாம் என்ற நினைப்பில் இப்படிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாம் இதை அனுமதிப்பதா, கூடாதா."

"மிக மடத்தனமான கேள்வி. உங்கள் அனுமதியை யார் கேட்டார்கள். அவர் உங்களிடமா அனுமதி கேட்டார்கள். அரசனிடம் கேட்கிறான். இன்று இராஜராஜர் மறுத்தாலும், நாளை இராஜேந்திரர் கொடுத்து விட்டால், நீர் என்ன செய்வீர். பூணூலை அறுத்தெறிவீரா. பூணூல்தானே போட்டு விட்டுப் போகட்டுமே. என்ன அதனால் பூணூல் என்பது ஒரு அடையாளமாகத்தானே நாமே வைத்துக் கொண்டிருக்கிறோம். அதேமாதிரி ஒரு அடையாளம் தனக்கும் வேண்டுமென்று சொல்கிறான். ஒரு தனி அடையாளம் கேட்டிருக்கலாம். தலையில் ஒரு ஒற்றை கொம்பு கட்டிக்கொள்ள வேண்டும் என்று கேட்டிருக்கலாம். இடுப்பில் க்ஷத்திரியர் போல் வாள் வைத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டிருக்கலாம். ஒரு வணிகரைப் போல கங்கணங்கள் போட்டுக்

கொள்ள வேண்டும் என்று கேட்டிருக்கலாம். அவனுக் கென்னவோ நம்மீது கோபம் அல்லது வெறும் நூல்தானே அதற்கு பெரிய மரியாதை இருக்கிறதல்லவா. எனவே எளிதான நூலை அரசரிடமிருந்து வாங்கிக் கொள்ளலாம் என்று அவர்கள் நினைத்திருக்கிறார்கள்.

அதில் நமக்கென்ன நட்டம். இணையாக வேண்டு மென்று ஆசைப்படுகிறார்கள்."

"இவ்வை இணையாக முடியாது."

"அப்படியொன்றும் சட்டமில்லை. நான்கு தலை முறைக்கு ஒருமுறை மாற்றம் நிகழ்கிறது. மேல்நோக்கியோ, கீழ்நோக்கியோ ஒரு சமூகம் நகர்ந்து கொண்டுதான் இருக்கிறது. மாற்றங்கள். இயல்பு. மாறாதது எதுவுமில்லை. பூணூல் அணிந்தாலும், அணியா விட்டாலும் கருமார் சமூகம் மாறும். இது அவர்களுக்குத் தெரியாது அப்படிப் பட்ட யோசனையை அவர்கள் செய்வதேயில்லை."

"இப்பொழுது அது அல்ல கேள்வி. அவர்கள் கேட்டுக் அரசர் கொடுத்தால் நம்முடைய மனோநிலை என்ன."

"வெறுமே இருந்துவிட்டுப் போங்கள் சாட்சியாக."

"இல்லை நான் அதை ஏற்றுக்கொள்ளமுடியாது."

"ஏன் வேறு என்ன செய்ய வேண்டும்"

"ஒவ்வொரு அந்தணனும் ஒவ்வொரு கருமாருக்கும் சந்தியா வந்தனமும் இன்னபிற யோக வித்தைகளும் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று கட்டளையிட்டால் ஆணையிட் டால்."

ஒருவர் கேள்வி கேட்டார்.

"அப்படியெல்லாமா செய்வார்கள்."

"செய்தால்."

"நம்முடைய இனம் காணாமல் போகும். ஒருவன் தன்னு டைய இனத்தை, தன்னுடைய வாழ்நாளில் காணாமலடிப்பது என்பது அவர் இனத்திற்கு செய்த துரோகம். ஒருவன் தன்னுடைய மொழியை அவர் வாழ்நாளில் காணாமலடிப் பது என்பது அவன் மொழிக்குச் செய்த துரோகம். ஒருவன் தன் வாழ்நாளில் தன்னுடைய கலாசாரத்தை இழந்துவிட்டு

நிற்பது என்பது இன்னும் பெரிய துரோகம். நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதே கேள்வி.''

"எதிர்க்க வேண்டும்''

இளைஞனான ஒரு அந்தணன் உரக்கக் குரல் கொடுத்தான்.

"இல்லை, பணிவாக அரசரிடம் எடுத்துச் சொல்லி அவர்களுக்கு பூணூல் அணியும் உரிமை கொடுக்கக் கூடாது என்று சொல்ல வேண்டும்.''

"இல்லை, அதிலும் தவறு இருக்கிறது.''

"பிறகு''

"அவர்கள் பூணூல் அணிந்து கொள்ளட்டும் ஆனால், அது வெறும் அடையாளம் மட்டுமே. வேறு எந்த சம்பிர தாயங்களும் தொடர்ந்து அவர்களுக்கு இருக்கக்கூடாது என்று சொல்லிடுவோம்.''

"அதாவது பூணூல் அணிவதை ஏற்றுக்கொள்கிறீர்களா.''

"இதில் தவறே இல்லை.''

"என்ன அயோக்கியத்தனம் இது. முதுகில் குத்துவது போல் பேசுகிறீரே.''

"உங்களுக்கு ஏன் ஒன்றும் புரியவில்லை. பாண்டிய வீரர்கள் கருமார்களைக் கேலி செய்தார்கள். எப்படி தெரியுமா. சணல் நூலை மார்புக்கு குறுக்கே போட்டுக் கொண்டு எங்களுக்கு பூணூல்அணிய பாண்டிய தேசத்தில் உரிமை கொடுத்துவிட்டார்கள் என்று இந்தச் சோழ தேசத்துக் கருமார்களைக் கேலி செய்தார்கள். கேலிக்கு கை ஓங்க முடிந்ததே தவிர, அந்த கேலியை எதிர்க்க முடிய வில்லை. உன்னுடைய கோரிக்கை கேலிக்கூத்தாகப் போய் விட்ட தென்று நமக்கு முன்னே வேறொருவன் அவர்களுக்கு சொல்லிவிட்டான். அவர்கள் கெட்டிக்காரர்களாக இருந்தால் அதைப்பற்றி யோசித்திருப்பார்கள்.''

"மற்ற கோரிக்கைகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்.''

இன்னொரு அந்தணர் கேட்டார்.

"நீங்கள் தடுக்க முடியாது. தடுத்தால் அடிபடுவீர்கள்.''

"பல்லக்கில் ஏறவும், செருப்பணிந்து கொள்ளவும். வீட்டிற்கு முன்னும் பின்னும் வாசல் வைத்துக் கொள்ளவும், நல்லது கெட்டதற்கு சங்கு ஊதிக்கொள்ளவும் இந்த உரிமைகளை அவர்களுக்கு கொடுக்கலாம் என்கிறீர்களா."

"அந்தச் சடங்குகள் எதுவும் உங்களோடு போட்டிக்கு வரவில்லை. வேறு சிலரோடு போட்டிக்குப் போகின்றன."

"யாரோடு."

"க்ஷத்திரியர்களோடு அதாவது மறவர்களோடு அவர்களுக்குப் போட்டி வந்துவிட்டது."

"அடேயப்பா... கருமார்கள் எவ்வளவு கெட்டிக்காரர்கள். எல்லா இடத்திலும் கை வைத்து நம்மீது பாய்ந்திருக்கிறார்கள்."

"ஆமாம் அவர்களுக்குள் மிகுந்த புத்திசாலிகளும் திறமையுள்ளவர்களும் பிறந்துவிட்டார்கள். கடும் உழைப்பு மூன்று தலைமுறைகளாக ஏன் அதற்கும் மேலாக விஜயாலயச் சோழனின் காலத்திலிருந்து இடையறாது. இடையறாது கருமார்களுக்கு வேலை இருந்திருக்கிறது. கிட்டத்தட்ட நூறு வருடம் அவர்கள் மிக வேகமாக தங்களை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். விதம்விதமான கருவிகள் விதம்விதமாகச் செய்து அரசனுடைய நெருங்கிய அன்பை, பாராட்டைப் பெற்றுவிட்டார்கள். க்ஷத்திரியர்களைப் போல் உடைவாள் வைத்துக் கொள்கிறேன் என்று கேட்க வில்லையே தவிரே, சிவிகை ஏறவும் என்று கேட்டு விட்டார்கள். இப்போது யார் சிவிகையில் போகப் போவது நீரா... நானா... இல்லையே, வணிகரும், க்ஷத்திரியருமல்லவா சிவிகையில் போகிறார்கள். எனவே, இந்தக் கருமாருடைய பார்வை பல திக்கிலும் படர்ந்திருக்கிறது."

"ஐயா... அரசருக்கு நெருக்கமாய் கருமார்கள் மாறி ஒரு நல்வ இடத்திற்கு வந்துவிட்டார்கள். இப்பொழுதும் அடுத்தது அந்தக் கருமார்களிலேயே இன்னொரு பிரிவினரான சிற்பிகள். அரசருக்கு நெருக்கமாய் வந்திருக்கிறார்கள்."

"இவர்கள் என்ன செய்வார்கள்."

"எது வேண்டுமானாலும் செய்வார்கள். சமீபத்திய உலோகச் சிற்பங்களும், கற்சிற்பங்களும், கொடி வேலைகளும், கட்டடக் கலைகளும் அற்புதமாய் தெரிந்துவிட்டது. நம்முடைய வீடுபோல் செங்கல் திண்ணையும், சாணி மெழு

கூரும் மூங்கில் கூரையும், மண் சுவரும் இல்லை. தட்டோடும், வளைவோடும் வைத்து மன்னர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிறார்கள். மேல் கூரையைச் சமதளமாக்கி அல்லது வில்வளைவாக்கி ஓட்டுக்கூரையோ அல்லது நல்ல உயரத்தில் அந்த மர உத்திரங்களுக்கு தூண்கள் அடிப்படையாகக் கொடுத்து மிகப்பெரிய கூடங்கள் எழுப்புகிறார்கள்.

பளிங்குத் தரை, வேலைப்பாடுள்ள சாளரங்கள், காற்று முறை தெரிந்து மிக கனக்கச்சிதமாக கட்டப்பட்டிருக்கின்ற ஜல தாரைகள். அதிலே சொட்டு மழை ஜலம் வராது. ஒழுகாது. எந்நேரமும் யாரோ விசிறிக் கொண்டிருப்பதுபோலவே தென்றல் காற்று உள்ளே புகுந்து கூடத்தில் விளையாடிக் கொண்டிருக்கும். உண்ணவும், உறங்கவும் மிகச்சரியான மாளிகைகள் கட்டப்பட்டுவிட்டன. தொடர்ந்து கட்டப்படும். கோவில்கள் எழுப்ப எழுப்ப மற்ற அரண்மனைக் கட்டடங்களும் அதிகரிக்கும். கோயில் வேலைக்குப் போனது போக மிச்சமுள்ள கற்களை மாளிகை கட்ட புரட்டி எடுத்துக் கொண்டு விடுவார்கள் மரத்துண்டுகளை வேறுவித வேலைக்கு மாற்றி விடுவார்கள். வேண்டுமென்றால், நீங்களும் அரசரிடம் கேட்டு பெரிய மாளிகை கட்டிக் கொள்ளலாம். அந்தி சரிந்து விட்டதே. ஜபம் செய்ய ஆரம்பிக்கலாமா."

"ஆமாம், இப்போது பேசிய விஷயத்தைச் சுருக்கமாக நமது தலைவர்களிடம் சொல்லிவிடு. இதை அரட்டையாக ஆரம்பித்து ஆழமாக சிந்தித்தோம் என்று சொல்லிவிடு. இருட்டியபிறகு இந்தப்பேச்சு தேவையில்லை."

"ஏன் இருட்டிய பிறகு பேசக்கூடாது."

"பகலில் பக்கம் பார்த்துப் பேச வேண்டியது. இரவு நேரம் எதுவும் பேசாமல் ஜபத்தில் ஈடுபடுவது நல்லது. உங்களை அது வளர்க்கும்."

•அந்தணர்கள் மெல்ல ஒரு குளத்தில் இறங்கினார்கள். வரிசையாய் நின்று கொண்டு மாலைநேர வழிபாடான சந்தியாவந்தனம் செய்ய ஆரம்பித்தார்கள்.

"இரவில் என்னைத் துரத்தும் செந்நிற ஓநாய்களிடமிருந்து என்னைக் காப்பாற்று. பேச்சினாலோ, உடம்பினாலோ நான் எந்தப் பாபமும் செய்யாமல் எந்த வன்முறைக்கும் போகாமல் இருக்கும்படி இறைவா இந்த இருட்டில் எனக்கு அனுக்ரஹம் செய்வாய்."

மந்திரங்களை அவர்கள் உணர்ந்து சொன்னார்கள்.

குடந்தையிலுள்ள காவேரியில் இறங்கிய ஒரு ஐநூறு அந்தண இளைஞர்கள் அதே விதமாய் மந்திரங்களை ஜபித்தார்கள். அந்த அந்தண இளைஞர்கள் தொண்டை நாட்டிலிருந்தும், நடு நாட்டிலிருந்தும் ஒன்றாகக் கிளம்பி ஈசான சிவபண்டிதருடைய வேதபாட சாலையில் பிரம்ம தேசம் எனப்படும் ஊரில் ஏழு நாட்கள் தங்கிவிட்டு, பிறகு திருவக்கரை அடைந்து திருவக்கரை காளியைத் தரிசித்து விட்டு அங்கிருந்து வேகமாக நடந்து ஒரு இரவு, ஒரு பகலில் காவேரிக்கரையை வந்து அடைந்தார்கள்.

தஞ்சை அந்தண இளைஞர்கள் போலல்லாமல் கச்சலாக, கருப்பாக, உயரமாக, பெரிய விழிகளோடு, சற்று மெலிந்த தேகத்தோடு, அதிகம் போஷாக்கில்லாத தேகத் தோடு, பசித்த பார்வையோடு இருந்தார்கள். எதையும் ஆச்சரியமாகப் பார்த்தார்கள். அதே சமயம் இடையறாது உரத்த குரலில் பாடங்களையே சொல்லிக் கொண்டிருந் தார்கள். எதைப் பார்த்தாலும் அதற்கு பாடத்திலிருந்து ஒரு உபமானத்தை எடுத்துக் காட்டி அதைப்போல் இருக்கிறது என்று சொன்னார்கள். தங்கள் புத்திசாலித்தனத்தைப் பரஸ்பரம் சொல்லி வெளிப்படுத்தி தங்களைப் புதுப்பித்துக் கொண்டேயிருந்தார்கள். அந்தத் துடிப்பு இடையறாது அவர் களிடம் இருந்தது. அவர்கள் பவரிடம் இரண்டு கோமணங் களும் ஒரு துண்டும் மட்டுமே சொத்தாக இருந்தன. அந்தத் துண்டும் கிழிந்தும் பழுப்படைந்தும் இருந்தது.

குடந்தையிலுள்ள செழுமையான அந்தணர்கள் இந்த இளைஞர்களை வியப்போடு பார்த்தார்கள். அடேயப்பா என்று பாடத்திறனைக் கண்டு வியந்தார்கள். எல்லோருக்கும் இரண்டு புதுக்கோமணங்களும் மேல் துண்டும், இடுப்புத் துண்டும் வாங்கிக் கொடுத்தார்கள். இரண்டு நாள் வயிறார சோறு போட்டார்கள். மாலையில் குடிப்பதற்குப் பாலும், உச்சி வேளையில் நல்ல மோரும், வாழைப்பழங்களும், அதிரசங்களும், இரவு நேரம் பாலில் கொதிக்க வைத்த சாதமுமாய் பரிமாறினார்கள். உடம்புக்கு எண்ணெயும், சிகைக்காயும் கொடுத்தார்கள். பத்துப் பத்துப்பேராகப் பிரித்து அவர்களைப் பல கோயில்களில் போய் வேதம் சொல்லச் சொன்னார்கள்.

அந்த நடுநாட்டு அந்தண இளைஞர்கள் மிகுந்த சந்தோஷத்தோடும், துடிப்போடும் நன்றியோடும் வேத பாடங்களைச் சொல்ல, ஊர் அவர்கள் சொல்லும் அழகைத் திகைத்துப் போய் கேட்டது. அந்த வேதத்தின் ராகத்தை நன்றாக அனுபவித்தது. தாழங்குடைகளும், விசிறிகளும், பித்தளைச் சொம்புகளும் அவர்களுக்கு தானமாகக் கொடுக்கப்பட்டன.

ஐநூற்று அறுபத்தி ஏழு அந்தண இளைஞர்கள் அணி வகுத்து வேதம் சொல்லியபடியே பாபநாசம் வழியாக தஞ்சைக்குப் போகின்ற அழகைப் பார்த்து ஆண்களும், பெண்களும் வியந்தார்கள். அவர்கள் போகும் வழியில் முன்னே ஓடிப்போய் விழுந்து நமஸ்காரம் செய்தார்கள்.

அவர்கள் வரும் செய்தி திருவையாறு அந்தணர்களுக்கு எட்டியது.

அவர்களை வரவேற்கத் தயாரானார்கள். உயரமாய், அகலமாய், சிகப்புத் தோலாய், காதில் கடுக்கனோடு, எட்டு முழ வேட்டியும், தோளில் நாலு முழத்துண்டும், இடுப்பில் பட்டுத் துண்டும், தலைக்கு வர்ணத் தலைப்பாகையும், கழுத்தில் தங்கம் கோர்த்த ருத்திராட்சமும், கங்கணமும், மோதிரங்களும், வேட்டிமீது வெள்ளி அரைஞாணும் அணிந்து அலங்காரமாக அந்த அந்தணர்கள் தொண்டை நாட்டு அந்தணர்களை வரவேற்க தயாரானார்கள். தாழங்குடைகள் மிதந்து வருவதைத் தொலை தூரத்திலிருந்துப் பார்த்தார்கள்.

"அடேய்... இது என்ன தொண்டை நாட்டிலிருந்து அந்தணர்கள் வருகிறார்கள் என்றா சொன்னாய்."

"ஆமாம், அப்படித்தான் சொன்னேன்."

"இதென்னய்யா ஏதோ சேறுகுழம்பு போல மிதந்து வருகிறது." என்று ஒரு அந்தணர் சொல்ல, மற்றவர்கள் வாய் விட்டுச் சிரித்தார்கள். தாழங்குடையின் அசைவு அப்படித் தான் இருந்தது. தாழங்குடைகள் இப்போது நின்றன. ஆறு ஆறாக அணிவகுத்தன. இடது தோளில் தாழங்குடை, வலது கையில் விசிறி, இடுப்பில் ஒரு துண்டு, மேலே ஒரு துண்டு நிதானமாக ரிக்வேத சாகை அவர்கள் சொல்ல ஆரம்பித்து நடந்து வந்தார்கள்."

"பூரண கும்பம் ஏந்தி வந்த அந்தணர்களுக்குப் பத்தடி முன்னே நின்று தொடர்ந்து வேதம் சொன்னார்கள். அந்த வேதத்தின் ஓசை தஞ்சை அந்தணர்களை மெல்ல வியக்க

வைத்தது. ஆனால் வியப்பை வெளிக்காட்டிக்கொள்ள வேண்டாம் என்று அவர்களுக்கு சொல்லப்பட்டிருந்தது.

"அடேயப்பா... திராவிட சிசுக்கள்."

ஒரு அந்தணர் வியப்போடு சொன்னார்.

அவர்கள் கருப்பாக இருக்கிறார்கள் என்பதை அந்த வாக்கியம் உணர்த்தியது.

மறுபடியும் தஞ்சை அந்தணர்கள் மெல்லச் சிரித்தார்கள். மத்திம வயதும், நல்ல பாடமும் தெரிந்து தலைவன் போல் இருந்த ஒரு இளைஞன் முன்னே வந்தான். குடையையும், விசிறியையும் கீழே வைத்தான். நீண்ட நெடுஞ்சாண் கிடையாய் தஞ்சை அந்தணர்களை நோக்கி கிழக்குத் திசையாய் விழுந்து வணங்கினான். தஞ்சை அந்தணர்கள் ஆரவாரித்தார்கள். எல்லாக் குடைகளும் கீழிறங்கின. விசிறிகள் தரையில் படர்ந்தன.

அத்தனை இளைஞர்களும் நெடுஞ்சாண்கிடையாக தஞ்சை அந்தணர்களை வணங்கினார்கள்.

தஞ்சை அந்தணர்களுக்கு கர்லம் கொப்பளித்தது.

# 131

"**ச**க்ரவர்த்தி அவர்களே, மூன்று வண்டிகள் அடிக்கற் பாறைகளோடு தஞ்சை எல்லையில் நின்று கொண்டிருக் கின்றன. முதல் வண்டியில் நீங்களும், இரண்டாவது வண்டியில் இளவரசர் அவர்களும், மூன்றாவது வண்டியில் பெருந்தச்சரையும் ஏற்றி அதைத் தஞ்சைக்குள் ஓட்டிவர வேண்டும் என்று சிற்பிகள் விரும்புகிறார்கள். உங்கள் வருகையை மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள்."

"அப்படியா நல்லது. இங்கு வந்தும் ஐந்து நாட்கள் ஆகிவிட்டதல்லவா. போதும் என்று நினைக்கிறேன் என்ன சொல்கிறீர் சதாசிவாச்சாரி."

"இது அதிகம். மக்கள் விம்மிக் கிடக்கிறார்கள். உங் களைப் பார்க்க முடியுமா என்று நினைத்ததுபோக, உங்க ளோடும் பேசியும் பாடியும் ஆடியும் பார்த்து விட்டார் களல்லவா... அதிலேயே அவர்கள் மிகுந்த சந்தோஷத்தில் இருக்கிறார்கள்."

"வீரர்கள் எப்படி இருக்கிறார்கள்."

"அவர்கள் மிக ஆரோக்கியமாக இருக்கிறார்கள். ஒதுங்கி யிருந்த சாளுக்கிய வீரர்கள் ராஷ்டிரகூட வீரர்கள் எல்லோருமே முனைப்பாக வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். அலரவர்கள் வகைக்கு உணவு சமைத்துக் கொள்ளலாம் என்று நீங்கள் சொன்னது மிகப்பெரிய சந்தோஷம். பாத்திரம், பண்டங்கள் அடுப்பு வழங்கியது. மிகப்பெரிய ஆனந்தம். இது தனிக் குழுலாகப் போய்விடுமோ என்று கவலையும் எனக்கு இருந்தது. சாப்பாடு தனி, கூடாராம் தனி, குடில் தனி என்று தனியாகப் போய் விடுவார்களோ என்று கவலை கொடுக்கும்போது ஏற்பட்டது."

"இல்லை நீங்கள் கவலைப்பட வேண்டாம். அவ்வப் போது சோழ வீரர்களையும், பாண்டிய வீரர்களையும் போய் குசலம் விசாரிக்க வைத்து விடுவோம். பாண்டிய வீரர்கள் எப்படி இருக்கிறார்கள்."

"வருத்தமே இல்லை. சிறிதளவு கூட இல்லை. பாண்டிய வீரர்கள் வெள்ளையானவர்கள் என்பது அவர்களுடைய பேச்சிலும் நடவடிக்கையிலும் தெரிந்துகொள்ள முடியும். அவர்களை மதித்தால் போதும், பதிலுக்குப் பல மடங்கு மதிப்பார்கள். அன்பாக இருப்பார்கள். வீரபாண்டியன் விஷயம் ஒன்றுதான் அவர்கள் வருத்துகின்ற விஷயம். அந்த வீரபாண்டியனைக் கொன்றவரைப் பழிக்குப்பழி வாங்கி விட்டோம் என்ற எண்ணத்தினால், அந்தக் காயமும் மெல்ல ஆறத்துவங்கிவிட்டது தேவார திருவாசகங்கள் மெல்ல ஆறத்துவங்கிவிட்டது. தேவார திருவாசங்கள் சிலது கற்றுக் கொண்டு வந்து இங்கு நான்கு இளைஞர்கள் நன்றாகப் பாடுகிறார்கள். திருநீறு அணியாமல் வேலைக்குப் பாண்டிய வீரர்கள் வருவதேயில்லை."

"வைணவ சம்பிரதாயத்தினரும் இருக்கிறார்களே."

"துளசிச் செடி நட்டு, ஹனுமன் படம் வரையச் சொல்லி கேட்டு அதைப் பூஜிக்கிறார்கள். ஆனால் திருநீறு கிடைத்தாலும் இட்டுக் கொள்கிறார்கள். அப்படி பெரிய பிரச்கினை என்று ஏதுமில்லை."

"வேறு என்ன உதவிகள் வேண்டும்."

"நிறைய கயிறுகள் லேவண்டும். இப்பொழுது இருக்கிற கயிறுகள் போதாது. அங்கே கொடுக்கப்பட்ட கயிறுகள்

மறுபடியும் திரும்பி வரவேண்டும். கயிறுகளை அவர்களே வைத்துக் கொண்டு எங்களைச் சங்கடத்தில் ஆழ்த்திவிடப் போகிறார்கள். நார்த்தாமலைக் கயிறு என்று தனிப்பின்னல், தனி முடிச்சுகளாக இருக்க வேண்டும்."

"அடேயப்பா... நல்ல சிந்தனைகள்."

"கயிறு திரிப்பதை வேறெங்கும் செய்வதை விட இங்குள்ள ஒரு கிராமத்தினரை வைத்துச் செய்யவாம் என்றிருக்கிறேன். அவர்கள் சிறிய அளவில் கயிறுகள் முறுக்கு கிறார்கள். சக்கரம் சுற்றி தேங்காய் நாரும், கோரைப்புற் களுமாய் வைத்துச் சுற்றுகிறார்கள். அந்தக்கயிறுகள் ஒரு தனி நிறத்தில் இருக்கின்றன.

"நல்லது செய்து கொள்ளுங்கள்."

"தஞ்சையிலிருந்து இதற்கான ஆட்களைக் கொண்டுவர ஏற்பாடு செய்யப் போகிறேன்."

"செய்து கொள்ளுங்கள்."

"வண்டியின் மீது வெறுமே கற்களை வைக்காமல் பனந் துண்டங்களைப் போட்டால் குறுக்கே கம்பு போட்டு நெம்புவதற்கும், புரட்டிப் போடுவதற்கும் வாகாக இருக்கும். எனவே பவ பனை மரங்களை வெட்டிச் சாய்க்க வேண்டி யிருக்கும். அவைகளைத் துண்டு போடவும் ஆட்கள் அமர்த்தப் போகிறேன்."

"செய்து கொள்ளுங்கள்."

"இடையறாது சமையல் வேலை நடந்து கொண்டிருக் கிறது. கருவேலங்காடுகள் பெருமளவில் அழிக்கப்படும்."

"நல்லது நடக்கட்டும், கருவேலங்காடுகள் அழிந்தால் விளைநிலமாக மாறுவதற்கு லாய்ப்பு இருக்கிறதே."

சக்ரவர்த்தி சொல்ல பலரும் தலையசைத்தார்கள்.

"மேற்கேயிருந்தும், கிழக்கேயிருந்தும் ஆடுகள் ஓட்டிவரச் செய்திருக்கிறேன். அவைகள் உணவுக்காக வெட்டப்படு கின்றன. ஆனால், வெட்டப்படும் வேகத்தைப் பார்த்தால் அந்த ஆடுகள் போதாது என்று தோன்றுகிறது. எனவே தஞ்சையிலிருந்து ஆடுகள் வேண்டும்"

"தொண்ணூற்றாறு ஆடுகளாக, பத்து தொண்ணூற்றாறு ஆடுகளை அனுப்ப ஏற்பாடு செய்கிறேன்."

"மிக்க மகிழ்ச்சி. தேவரடியார்கள் இதற்குமேல் இங்கு தங்க விரும்பவில்லை. எனவே இவர்களை அனுப்பி வைத்து விட்டு, சில நாட்களுக்குப் பிறகு மறுபடியும் இன்னொரு குழுவினரை வரச்செய்து ஆடல்பாடல்கள் நடத்த அனுமதிக்க வேண்டும்."

"அப்படியே... நீ இதுபற்றி சாவூர் பரஞ்சோதிக்குக் கடிதம் எழுதலாம். என் பெயரை உபயோகப்படுத்தலாம். சாவூர் பரஞ்சோதியைச் சந்திக்கிற பொழுது நானும் இதுபற்றிச் சொல்லிவிடுகிறேன்."

"கடைசியாக கணக்கு எழுத எனக்கு ஆட்கள் வெகு நிச்சயம் தேவை. எதை மறந்தாலும் இதை மறந்து விடாதீர் கள். எவ்வளவு சீக்கிரம் அவர்கள் இங்கு வருகிறார்களோ, அவ்வளவு சீக்கிரம் எனக்கு சௌகரியம். இல்லையெனில் பிசகான கணக்கு இருக்கும். எனக்கும் தஞ்சைக்கும் அபிப்ராய பேதம் ஏற்படும். பெருந்தச்சரின் கோபத்திற்கு நான் ஆளாக விரும்பவில்லை."

"இதில் கோபப்படுவதற்கு என்ன இருக்கிறது சதாசிவம். உன் கற்கள் திசைமாறி வேறெங்கேனும் போய்விடுமா அல்லது ஆற்றில் கரைந்துவிடுமா. நீண்ட அடிக்கட்டைகள் தஞ்சை வந்துதானே ஆக வேண்டும்."

"இல்லை. ஒரு சிறிய கவலை ஏற்பட வாய்ப்பிருக்கிறது."

"என்ன"

"வழியிலுள்ள கிராமத்தினர்கள் இந்த அடிக்கட்டை களைப் பார்த்துவிட்டு தங்களுடைய கோயில்களுக்கு இவை உதவுமோ என்ற எண்ணத்தில் எனக்கொன்று இறக்கி வைத்து விட்டுப்போயேன் என்று கேட்டிருக்கிறார்கள். ஆறெழு கிராமங்களில் இதைப்போல் விண்ணப்பங்கள் வந்திருக் கின்றன. அவர்கள் ஆவல் குறித்து கவலையாக சிற்பிகள் என்னிடம் சொன்னார்கள்."

"ஒருவேளை மூன்று தூணில் ஒரு தூணை உருட்டி எடுத்துக் கொண்டால், இரவோடு இரவாக கயிறு போட்டு தோளில் தூக்கி எங்கேனும் புதரில் மறைத்துக் கொண்டால் சிரமமல்லவா. அலுப்பாக வரும் வீரர்களுக்கு உணவு கொடுத்து தூங்கச் செய்து எடுத்துப் போகவாமல்லவா. அப்படி ஒரு வாய்ப்பும் இருக்கிறது."

"நான் மிகக் கடுமையாக இருப்பேன். ஆனால், இதை முன்கூட்டியே சொல்ல வேண்டாம். இப்படி நடக்கிறதா என்று பார்ப்போம் அல்லது வேறுவிதமாகவும் செய்யலாம். ஒவ்வொரு கிராமமும் மூன்று துணுக்கான ஓலையை வாங்கி அவரவர்கள் கிராமத்தில் லந்து விட்டது என்று சொல்லி, அங்கிருந்து அந்த ஓலையை அடுத்த கிராமத்தில் கொடுத்து மூன்றும் வந்து சேர்ந்தன என்று அலர்களும் சொல்லி, ஒவ்வொரு கிராமமும் என்ன வாங்கிக் கொள்கிறது என்ன அனுப்புகிறது என்பதை தெளிவாகக் குறித்துக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லிவிடலாம்."

"மிக்க் நல்ல யோசனை."

சதாசிவம் சிரித்தார்.

'அதாவது' என்று சக்ரவர்த்தி ஆரம்பிக்கும் முன் சதாசிலம் உள்ளே புகுந்தார்.

"அதாவது ஒவ்லொரு கிராமமும் அனுப்பப்படுகின்ற கற்களுக்கு பொறுப்பு. தன்னுடைய எல்லையிலிருந்து மறு எல்லைக்கு அந்தக் கிராமம் தான் கற்களை அனுப்ப லேண்டும். கூடவே வீரர்கள் வருவார்கள். யானைகளும், மாடுகளும் வண்டியை இழுக்கும், முட்டுக் கொடுத்துத் தள்ளும், கிராம மக்களும் உதவ வேண்டும்."

"நன்றாக இருக்கிறது நீ சொல்லது. நானும் அதைத்தான் சொல்ல வந்தேன். போகும்போது பாதை செப்பனிட்டுக் கொள்வதும் அவர்கள் பொறுப்பு. இதை இவர்கள் செய்ய வேண்டும். அவர்கள் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது."

"ஆனால், வெறுமே செய்லார்களா."

வந்தியத்தேவர் கவலையோடு கேட்டார்.

"இல்லை அதற்குண்டான சன்மானம் கொடுத்து விட வேண்டும். தட்சணைகள் கொடுக்க வேண்டும். அந்தக் கிராமத்தைச் சுற்றியுள்ள சிறு பாறைகளை உடைத்து கற்களாக்கி பள்ளங்களில் போட்டு நிரப்பி மேலே மண்போட்டுத் தூவி பாதையைக் கெட்டிப்படுத்தி செம்மைப்படுத்த வேண்டும். செம்மைப்படுத்துலதற்கு கூலி கொடுத்துவிடலாம்."

"பொற்காசுகள் கொடுத்தால் போதாது சக்ரலர்த்தி தானியங்கள் எதிர்பார்க்கிறார்கள். சோளமும், கேழ்வரகுமே

தின்று வளர்ந்தவர்களுக்கு, அரிசிசோறு மீது காதல் வந்து விட்டது. அவ்வப்போது அரிசி சோறும் அவர்களுக்கு கிடைக்கிறது. எனவே கூலியாக அரிசி கேட்கலாம்.''

“கொடுத்துவிட்டால் போயிற்று.''

“அது அவ்வளவு எளிதல்ல. தஞ்சையினுடைய அரிசி இவ்வளவு தூரம் வரவேண்டுமென்றால் தஞ்சையில் விலை ஏறிவிடும்.''

“தஞ்சையில் விலை ஏறாதிருக்க வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும்''

“தொண்டை நாட்டிலிருந்தும், நடு நாட்டிலிருந்தும், திரிசிரபுரத்திலிருந்தும், மதுரையிலிருந்தும் தானியங்கள் வரவேண்டும்.''

“ஏற்பாடு செய்யலாம்.''

“இது மட்டுமல்ல, வேளாளர்களுக்குச் சொல்லுங்கள். உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்று கட்டளையிடுங்கள். விலை நிலங்கள் அதிகமாக்குவது வேளாளர்கள் கையில் மட்டுமில்லை.''

“வேறு யார் கையில் இருக்கிறது.''

“காவிரித்தாயின் கையிலும் இருக்கிறது. மழை நன்கு பொழிந்து பூமி குளிர காவிரியில் வெள்ளப்பெருக்கு எடுத்து வந்தால், பல கால்வாய்களில் தண்ணீர் நிரம்பி விளை நிலங்கள் அதிகமாகும். ஒரு வேளை இந்த முறை மழை பொய்த்துவிட்டால் நமக்கு சிரமங்கள் ஏற்படும்.''

“மழை பொய்க்காது லந்தியத்தேவரே, மழை நிச்சயம் நன்கு வரும். சதாசிவம் நான் விடைபெறுகிறேன். இன்னும் வேறு ஏதேனும் வேண்டுமா.''

“எனக்கு எதுவும் வேண்டாம் சக்ரவர்த்தி. உங்களுடைய அன்பும், அண்மையும் எனக்குக் கிடைத்திருக்கிறதே, இதைவிடப் பெரும்பேறு வேறு என்ன.''

“சதாசிவம் இங்கே நல்லதொரு வீடு கட்டிக் கொண்டு உங்கள் பெண்டு பிள்ளைகளோடு இருப்பதற்குண்டான அனுமதியும் உங்களுக்குத் தருகிறேன். குழந்தைகளை, உறவினர்களை இங்கே வரவழையுங்கள். உங்களுக்கு அது மன மகிழ்ச்சியைத் தரும்.''

"மன்னரே என் நன்றியை எப்படித் தெரிவிப்பதென்றே தெரியவில்லை. உங்களுக்கு நன்றி."

"உண்மையில் நான் நன்றி சொல்ல வேண்டும் என்னுடைய நெடுங்காலக் கனவை என்னால் நிறைவேற்றிக் கொள்ள முடியுமா. நீங்கள் இல்லாது செய்து கொள்ள முடியுமா. நீங்கள் செய்கிறீர்கள் என்பது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது. அடிக்கட்டைகள் வரலர அஸ்திவாரங்கள் மிகச்சரியாகப் போடப்பட்டு விடும். நான் விடைபெறுகிறேன்."

சக்ரவர்த்தி நிதானமாக குதிரையேறி வந்தியத்தேவரும், பழுவேட்டரையரும் இளவரசர் இராஜேந்திரரும் சூழ நடக்கிறபோது மக்கள் வரிசையாக நின்று தங்கள் நீர்த்துளிகளை தரையில் உதித்தார்கள். குதிரைகள் அதை மிதித்து நடந்து போயின. மக்களை உற்றுப் பார்த்த வண்ணம் நிதானமாக குதிரையை ஓட்டியவர் எல்லைக்கு வந்தவுடன் குதிரையை விரட்டினார். அடுத்த கிராமத்திற்குப் போய் பாதைகளைச் சரிபார்த்தார். இரவும் பகலும் குதிரை ஓட்டி தஞ்சை எல்லைக்குப் போனார்.

சுற்றியுள்ள கிராமங்களிலும் கற்கள் நகருவது பற்றிய உத்தரவுகள் அதிகாரிகளால் வேகமாக பிறப்பிக்கப்பட்டன. மக்கள் மிரட்சியோடு அதைக் கேட்டுக் கொண்டார்கள். மக்கள் மிரளுவது சக்ரவர்த்திக்குத் தெரிந்தது. அவர் அயர்ச்சியோடு முதல் வண்டிக்குப்போய் அதை குதிரையில் சுற்றி வந்தார். ஒரு கோரைப்பாய் வேண்டுமென்று கேட்டார். அந்தக் கோரைப்பாய் கற்கள் மீது போடப்பட்டதும், அதன் மீது ஏறி அமர்ந்து கொண்டார். கோரைப்பாயின் மீது மெல்லிய துணியும் விரித்து தலையணையும் கொடுத்தார்கள்.

இரண்டு தளிச்சேரிப் பெண்கள் மெல்ல விசிற வெட்ட வெளியில் வண்டியின் மீதுள்ள இரண்டு பாறைக் கற்களின் மீது சக்ரவர்த்தி அயர்ந்து படுத்துத் தூங்கினார்.

இளவசருக்கும் பழுவேட்டரையருக்கும், வந்தியத்தேவருக்கும் கயிற்றுக் கட்டில் போடப்பட்டன. கிராம மக்கள் விழித்திருந்தார்கள்.

சக்ரவர்த்தி கண்விழித்தபோது மக்கள் ஆரவாரம் செய்தார்கள். சோழம் சோழம் என்று கத்தினார்கள்.

சக்ரவர்த்தி கண்விழித்த போது வேளாளர் வீட்டிற்குப் போய் முகம் கை கால் கழுவி கடுகஞ்சியைக் குடித்து, கைகால் சுத்தம் செய்தபிறகு, அந்த ஊர் தளிச்சேரி பெண்டுகள் வரவேற்றார்கள். தலையில், கைகளில், கால்களில் எண்ணெய் துடைத்து, நல்லெண்ணையை மூக்கு வழியாக உறிஞ்சச் சொல்லி, பிறகு கைபிடித்து அழைத்துப்போய் முக்காலியில் உட்காரவைத்து பெரிய பாத்திரத்தில் வெந்நீர் விளாவி வாசனைப் பொடிகள் கலந்து தலையில் தேய்த்து எண்ணெயை நீக்கி மாற்றி மாற்றி நீர் ஊற்றினார்கள்.

சக்ரவர்த்தி குளித்துவிட்டு மாற்றுடை அணிந்து கொண்டார். நெற்றியில் திருநீறும், குங்குமமுமாய் வெளியே வந்தார். தலைப்பாகை இல்லாது கழுத்தில் முத்துமாலை மட்டும் மின்ன கையில் ஒற்றைக் கங்கணம் இருக்க, இடுப்பில் வாளில்லாது பட்டுத்துணி மட்டும் இறுக்கக்கட்டி வந்து வண்டியின்மீது ஏறிக் கொண்டார்.

கூந்தலின் நுனியில் மட்டும் ஒரு சிறு முடிச்சு மட்டும் போடப்பட்டிருந்தது.

'இந்த வயதிலும் என்ன அழகாக இருக்கிறார் பார்' என்று மக்கள் வியப்போடு அவரைப் பார்த்தார்கள்.

எலுமிச்சை பழங்களும், நாரத்தைப் பழங்களும் கீழே வைக்கப்பட்டன. வண்டிக்கு தீபம் காட்டப்பட்டது.

"ஹோரை நன்றாக இருக்கிறது கிளம்புங்கள்." என்று சொல்லி சக்ரவர்த்தி கயிறு சொடுக்கினார். முன்னேயிருந்த காளைகள் இழுத்தன. பின்னேயிருந்த யானை மெல்ல முட்டி பாறையைத் தள்ளியது. வண்டி பெரும் சப்தத்துடன் சற்று சரிவான அந்தப் பிரதேசத்தில் வேகமாக ஓடத்துவங்கியது. மக்கள் பின் தொடர்ந்தார்கள். மெய்க்காவல் வீரர்கள் அவர்களை மெல்ல அப்புறப்படுத்தினார்கள்.

சக்ரவர்த்தியின் பாரவண்டி சரிவு இறங்கி மேடு ஏறிய போது இராஜேந்திரர் வண்டி நகர்ந்தது. இராஜேந்திரர் வண்டி நகர்ந்த சிறிது நேரத்தில் பெருந்தச்சரின் வண்டியும் நகர்ந்தது. இராஜேந்திரை வழியனுப்பி வைத்த சிற்பிகள் பெருந்தச்சரின் வண்டியைச் சட்டென்று நிற்க வைக்கின்ற ஆப்புகளோடு வண்டியை உன்னிப்பாய் கவனித்தபடி சிற்பிகள் தொடர்ந்தார்கள்."

"அந்த மூன்று வண்டிகளுமே பக்கத்திற்கு எட்டுச் சக்கரங்களாய் பதினாறு சக்கரங்கள் கொண்டிருந்தன. ஒன்பது அச்சுக்கள் கொண்டிருக்கின்றன. ஏதேனும் ஒரு அச்சு உடைத்துவிட்டாலும் சக்கரத்தை மாற்றிவிடவாம் என்பது போல அமைப்பு இருந்தது. எல்லா அச்சுக்களிலும் குறுக்குச் சட்டமாய் தனி மரப்பலகை அடித்திருந்தார்கள். குணசீலன் வண்டிகளின் அமைப்பை அசைவைப் பார்த்துக் கொண்டே சுற்றிச் சுற்றிவந்தான்.

பெருந்தச்சர் அவன் ஆர்வத்தைக் கவனித்துக் கொண்டு அவனை எப்படி பயன்படுத்துவது என்ற யோசனையோடு வண்டி ஓட்டினார்.

குணசீலனுக்கு கணித ரீதியான கற்பனைத்திறன் இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டார்.

தொலைவில் புல்மேடு தெரிந்தது. சக்வர்த்தியின் வண்டி கோயிலின் எல்லையில் நிறுத்தப்பட்டது. அடுத்தது இளவரசர் வண்டி போய் நின்று கொண்டது.

"மரத்திற்கு மரம் சரியாக இல்லை" என்று ஒரு அயற்சியோடு குணசீலன் பேசினான்.

"என்ன குணசீலா"

மாடுகளை விரட்டியபடியே பெருந்தச்சர் கேட்டார்.

"ஐயா மர அச்சுகளின் மீது மரத்தை வைத்து ஆணி அடித்தால், அது ஒன்றும் உறுதி இல்லை. பளு முழுவதும் ஆணிகளின் மீது விழுகிறது. ஆணிகள் அனைத்தும் அசைந்து அடிக்கப்பட்ட மரத்தின் ஓட்டையைப் பெரிதாக்கி விடுகின்றன. இப்பொழுது மரத்தின் மீது பளு விழுகிறது அப்படியல்லாது நீண்ட இரும்புப்பட்டையை ஓட்டையிட்டு ஓட்டைக்குள் திருகு வைத்து மரத்தோடு இணைத்துவிட வேண்டும். தனியாக ஒரு இரும்புப்பட்டை தயார் செய்ய வேண்டும். தயார் செய்யப்படும் போதே அதில் சுண்டு விரல் அளவுக்கு ஓட்டைகள் இருக்க வேண்டும். அதாவது ஒரு மரத்தச்சரும் கருமாரும் சேர்ந்து செய்ய வேண்டிய வேலை. அதுமட்டுமில்லை. இன்னொரு எண்ணமும் வந்துவிட்டது."

"என்ன"

"சேர தேசத்தில் மன்னருடைய தேர்ச்சக்கரத்தை நான் பார்த்திருக்கிறேன். தேர்சக்கரத்தின் உள்புறத்தை ஒரு இரும்பு

வட்டமும், அச்சில் ஒரு இரும்பு வட்டமும் வைத்து இணைத்து விட்டார்கள். அதாவது மரத்தோடு மரம் உரசுவ தற்கு பதில் இரும்போடு இரும்பு உரசும். அந்த இரண்டுக்கும் நடுவே எண்ணெயிட்டு விடுவார்கள். வண்டி வழுக்கிக் கொண்டு ஓடும்'' சட்டென்று வியப்போடு பெருந்தச்சர் அவனைப் பார்த்தார்.

“பதினாறு சக்கரங்களுக்கும் இப்படிச் செய்து விடலாம் என்கிறாயா.” பெருந்தச்சர் வினவினார்.

“ஆமாம் ஐயா... ஒன்று செய்யுங்கள். தஞ்சைக்குப் போன பிறகு இந்த வண்டியை என்னிடம் கொடுத்து விடுங்கள். நான் சற்று கருமார் இடம் வரை இதை எடுத்துக் கொண்டு போய் வருகிறேன். ஆனால், என்னோடு அவர்கள் ஒத்துழைப்பார்களா? எதற்கும் ஒரு சிற்பியையும் என்னோடு அனுப்புங்களேன்.”

“எதற்கு நானே வருகிறேன். எங்கேயோ ஒரு மாற்ற மிருக்கிறது.”

“அப்படியா என்ன.”

“கோணலாக இருக்கிறது.”

“நான் வந்து பார்க்கட்டுமா.”

ஓடும் வண்டியில் தாவி ஏறி அவருக்குகே நின்று கொண் டான். வண்டி ஓடியது. அலர் தோளைப்பற்றிக் கொண்டான். சிற்பிகள் அவனைக் கொஞ்சம் பொறாமையோடும் ஆவலோடும் பார்த்தார்கள்.

“உட்கார்ந்து கொள்.”

பெருந்தச்சர் அவர் இடப்புறம் கைகாட்டினார். பெருந் தச்சரின் இடப்புறம் அமர்ந்து கொண்டான். அவன் கையில் கடிவாளம் கொடுத்தார்.

“பார் இடப்பக்கம் மாடுகள் சிரமப்படுகின்றன. வண்டி ஏதோ ஒரு பக்கமாகப் போவது போலில்லை.”

“இல்லை அது அச்சினுடைய கோளாறு. மாடுகளி னுடைய உயரமும் சரியாக இல்லை. மாடுகள் கட்டியதும் தவறு இடப்பக்கம் மாடுகள் உயரமாக இருக்கின்றன. அதனால் கஷ்டப்படுகின்றன முதல் மாட்டையும் மூன்றாவது மாட்டையும் மாற்றிவிட வேண்டும். அப்பொழுது

இழுப்பு சரியாக இருக்கும். உரசல்கள் மிக அதிகமாக இருக்கின்றன. ஐயா சப்தமே இல்லாமல் வண்டிகள் போக வேண்டும். கடக் கடக் என்று ஒரு பெருந்தேர் போவது போல வண்டி எத்தனை தடவை போக முடியும். ஒவ்வொரு முறையும் அச்சை மாற்ற வேண்டியும் வரலாம்"

கோயில் எல்லைக்குள் சக்கரவர்த்தியின் வண்டி நுழைந்தது. நூற்றுக்கணக்கான முரசுகள் முழங்கின. எக்காளங்கள் பிளிறின. மக்கள் தலைப்பாகைகளை விசிறிப் போட்டார்கள்.

சக்ரவர்த்தி வண்டியின் கயிற்றை நித்த விநோதப் பெருந் தச்சரின் கையில் கொடுத்தார். 'சிவோஹம்... சிவோஹம்...' என்று சொன்னார். கயிற்றை வாங்கிக் கொண்டு இளவரசரின் கால் தொட்டு நித்த விநோதப் பெருந்தச்சன் வணங்கினார்.

இரண்டு சாரம் கட்டிய இடத்திற்கு நடுவே வண்டி நுழைந்தது. பாறைக்கடியில் கயிறு கொடுக்கப்பட்டது. இரண்டு சாரங்களில் ஆட்கள் இருந்து கம்பு கொடுத்து கயிற்றை இழுத்தார்கள். கீழேயும் நெம்பினார்கள். கற்பாறை மேலே எழும்ப வண்டி நகர்த்தப்பட்டது. பிறகு கற்பலகை மெல்ல இறக்கப்பட்டது. மறுபடியும் வேறுவிதக் கயிறுகள் கற்பாறைக்கு அடியே கொடுக்கப்பட்டன.

கங்க வீரர்கள் அதைத் தூக்கி வரும்படி பணிக்கப் பட்டார்கள். கங்க வீரர்கள் மெல்ல நகர்ந்தார்கள்.

இவ்வளவு கனத்தை எப்படித் தூக்குவது என்று யோசித்தார்கள்.

குணசீலன் அருகே வந்தான். கற்றப்பட்ட கயிறுக்கு நடுவே ஒரு மூங்கில் கழியைக் கொடுத்து, அந்த மூங்கில் கழிக்கு இடையே சவுக்குக் கம்புகளைக் கொடுத்து, சவுக்குக் கம்புகளின் இரு நுனிகளையும் தோள்களில் வைத்துக் கொண்டு நடந்தால் போதும். ஒரு குலுக்கலோடு பாறை நகர்ந்துவிடும்.

அவன் சொன்ன வண்ணமே அவர்கள் செய்தார்கள்.

அவர்கள் நினைத்ததை விட பாறை வேகமாக இருந்தது. முன்பக்கம் நிற்பவர்களுக்கு கனம் அதிகமாகத் தெரிய குணசீலன் பாறையைக் கல்லில் முட்டுக்கொடுத்து இறக்கச் சொன்னான். பாறை இறங்கியவுடன் கயிறுகளைச் சரியான

அளவிற்கு நகர்த்தினான். இப்பொழுது தூக்கச் சொல்ல பாறையின் கனம் அறவே தெரியவில்லை. அவர்கள் கழி ஊன்றி வேகமாக நடந்தார்கள். எங்கு பாறை கொண்டு வரவேண்டுமோ அங்கு பாறை கொண்டு வந்து இறக்கப் பட்டது. மறுபடியும் முரசுகள் முழங்கின. எக்காளம் பிளிறிற்று. துணிகள் மேலே வீசப்பட்டு தரையை வந்து அடைந்தன. அடுத்த பாறையைத் தூக்கும்போது சக்ரவர்த்தி குதிரையின் மீது ஏறினார். குணசீலனை வரச் சொன்னார். குணசீலன் அவருக்குகே வந்து நின்றான்.

"உன் புத்திக் கூர்மையும் சுடுபாடும் என்னைச் சந்தோஷ மடையச் செய்கின்றன. குணசீலா நீ யாராக இருந்தாலும் சரி, உனக்குத் தக்க சன்மானம் அளிக்காமல் இந்தக் கோயில் பணி நிறைவுறாது. இது சத்தியம்" என்று கை உயர்த்திச் சொல்ல, அவன் இரண்டு கைகளையும் விரித்து அவரைப் பார்த்து, "எதற்காக இது... நீங்கள் ஏதேனும் எனக்குக் கொடுப்பீர்கள் என்றா இதைச் செய்கிறேன். இது சிவன் பணி. என் சிவனுக்கு நான் செய்ய வேண்டிய கடன். ஆனாலும், உங்கள் வார்த்தை என்னை மகிழ்விக்கிறது. தொடர்ந்து என் பணியை நான் செய்வேன்" என்று சொல்லி விலகினான்.

அவன் வார்த்தைகள் சக்ரவர்த்தியை ஏதோ ஒரு சிந்த னைக்குத் தள்ளிக் கொண்டே இருந்தது.

அரசரைச் சுற்றி என்ன நடந்தது என்பதை பஞ்சவன் மாதேவி பவரிடம் பவவிதமாக விசாரித்தார் சந்தோஷப் பட்டாள்.

"நார்த்தாமலை பற்றி எனக்கொரு கவலை இருந்தது. நல்லவேளை இப்போது எதுவுமில்லை என்பது எனக்கு மி கப் பெரிய சந்தோஷம். ஆனாலும் அரசர் கல்மீது படுத்து உறங்கினார் என்று கொஞ்சம் கூட வெட்கமில்லாமல் சொல்கிறீர்களே. கல் சூடு அல்லவா. என்ன கோரைப்பாய் போட்டாலும், அதன்மீது என்ன துணி விரித்தாலும் சூடு ஏறுமல்லவா. கல்மீது படுத்துவிட்டு உடனே எண்ணெய் தேய்த்து குளித்திருக்கிறார். இது என்ன இது இன்னும் அபத்தம். தளிச்சேரி பெண்டுகளைக் கட்டிவைத்து உதைக்க வேண்டும். கொஞ்சம்கூட அறிவில்லாத காரியங்கள் செய் கிறார்கள்." பல் கடித்து கூச்சலிட்டாள்.

"இளவரசர் இராஜேந்திரருக்கும், வந்தியத் தேவருக்கும் கயிற்றுக் கட்டில் கொடுத்ததுபோல, இவரை கயிற்றுக் கட்டிலில் படுக்க வைக்க உங்களுக்குத் தெரியாதா, மெய்க்காவல் என்றால் என்ன தடிபிடித்து தூங்கி வழிவதா. தள்ளிப்போ... தள்ளிப்போ... என்று ஜனங்களை விரட்டுவதா. மற்ற எத்தனையோ விஷயத்திற்கு அரசரை மடக்கி நிறுத்துகிறீர்களே. அவர் கற்பாறையில் படுத்ததைச் சொல்ல உங்களுக்கு வெட்கமாயில்லை."

அரண்மனை வாசலில் நின்ற மெய்க்காவல் படையைப் பஞ்சவன்மாதேவி குதறி எடுத்தாள்.

"நான் இல்லாத நேரம் அரசரின் நவன் காக்க வேறு எவரேனும் இனி அனுப்பப்படுவார்கள். உங்களை நம்பி புண்ணியமில்லை. காவல் கடமைகளைச் செய்வதற்கே நீங்கள் தடுமாறுகிறீர்கள். இது சமாதான காலம். அதனால், அரசரை நெருங்கிப் பேசுவதற்கு முயற்சி செய்வார்கள். அரசரும் முகம் மலர்ந்து அருகே நிற்பார். நீங்கள் வெறுமே தடியைப் பிடித்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பீர்கள். அப்படித்தானே. உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். முன்னையும்விட மிக மோசமான காலம் இது. யுத்த காலத்திலாவது யார் எதிரி என்று தெள்ளத் தெளிவாகத் தெரியும். நம்மால் விழிப்போடு இருக்க முடியும். எந்தத் திசையில் எதிரி இருக்கிறான் என்று தெரியும். அந்தத் திசையை நாம் பலப்படுத்த முடியும். இப்போது எதிரி யார் என்றும் தெரியவில்லை. எங்கிருக்கிறான் என்றும் தெரியவில்லை. அப்போது எவ்வளவு விழிப்பாக இருக்க வேண்டும். நீங்கள் இருக்கிறீர்களா என்பது தான் கேள்வி. இல்லை என்பது என் முடிவு.

இந்த தஞ்சையின் ஆட்டமும் பாட்டமும் உங்களையும் தொற்றிக் கொண்டு விட்டது. சிற்பிகள் ஆடலாம். கருமார்கள் பாடலாம். இங்குள்ள மற்ற எல்லா இனத்தினரும் பல் தெரிய இருக்கலாம். நீங்கள் இருக்கக் கூடாது. நீங்கள் மறவர்கள். படைவீரர்கள். அதுவும் அரசரின் மெய்க்காவல் வீரர்கள். கறுப்பு உடையென்பது என்பது உங்களுக்குத் தேவையற்ற அவங்காரம்.

நார்த்தாமலையின் அத்தனை கிராம வாசிகளும் தொட்டுக் கும்பிட்டிருக்கிறார்கள். அரசரைத் தொட்டுக் கும்பிட்டேன் என்று ஊர் முழுக்கச் சொல்லார்கள் ஆக,

எல்லா ஊரிலிருந்தும் படைபடையாய் ஆட்கள் அரசரைத் தொடுவதற்காக வருவார்கள். நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள். அரசரே தொடு என்று சொல்வார். கூடாது என்று சொல்வ அரசருக்கு மனம் வராது. நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள். பழுவேட்டரையரும், வந்தியத்தேவரும் மெய்க்காவல் படையில் சேர்ந்தவர் அல்வர். அவர்கள் தனி அதிகாரிகள். அரசருக்கு ஊறு நேருமாயின் நான் என்னை ஊறு செய்து கொள்வேன் என்றும், அரசரின் வாழ்வுக்குக் கேடு வருமாயின் நான் என்னைத் தற்கொலை செய்து கொள் வேன் என்றும், நீங்கள் நிகம்ப சூதனியின் முன்பு சத்தியம் செய்திருக்கிறீர்கள். வேறு எவரும் செய்யவில்லை. உங்கள் சத்தியத்தை நீங்கள் ஒரு போதும் மறந்துவிடலாகாது. அந்தச் சத்தியத்திற்கு அர்த்தம் எப்பொழுது வேண்டுமானாலும் நான் சாகத் தயார் என்று சூளுரைப்பது அல்ல. அரசரின் மீது துரும்பும் படாதிருத்தல். அரசர் கற்பாறையின் மீது படுத்தால் கூடாது என்று சொல்ல உங்களுக்கு உரிமை உண்டு."

சக்ரவர்த்தியைச் சந்திக்க பிரம்மராயர் ஒற்றர் வந்தால் அவரைச் சோதனை செய்ய உங்களுக்கு உரினம உண்டு. இங்குள்ள பதினாறு சேனாபதிகளைத் தவிர அரச குடும்பத் துப் பெண்டீர்களைத் தவிர எல்லோரையும் நீங்கள் சோதனை செய்யலாம். ஏன் பிரம்மராயரின் மகனான அருண்மொழிப் பட்டனைக் கூட நீங்கள் தடுத்து நிறுத்தி இடுப்பு தடவி பிறகு அனுப்பவாம்.

இவ்வளவு உரிமை உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பொழுது நீங்கள் தீப்பந்தத் தடியர்களாக இருக்கிறீர்களே என்று எனக்குக் கோபமாக வருகிறது. நார்த்தாமலையிலுள்ள கிராமவாசிகள் அத்தனை பேரும் உங்களைக் கட்டியணைத்துக் கொண்டார்களாமே. நான் அணைத்துக் கொள்ளக்கூடாதா என்று ஒரு கிழவி வந்தாவ், நீங்கள் என்ன செய்வீர்கள். சரியென்று அனுமதிப்பீர்களா.

ஒரு புலியின் முன்காலை வெட்டி அதை உவர்த்தி உள்ளிருக்கிற மாமிசங்களை வெளியே எடுத்துப் போட்டு அதைக் கையுறையாகச் செய்து ஒரு ஆயுதம் தயாரித்து சேர தேசத்து அந்தணர்கள் வருவார்கள். ஒரு பிடியில் குடலைக் கிழித்து வெளியே கொண்டு வந்து விடுவார்கள். சக்ரவர்த்தி உடம்பிவ் கை வைத்து அழுத்திரைல் முன்பக்கத்தில் பதிந்து விரல்நகம் பின்பக்கம் வந்துவிடும். தேர்ச்சி பெற்ற ஒரு

கிழவனால் இதைச் செய்ய முடியும். சேர தேசத்திலிருந்து வந்த அருண்மொழிப்பட்டன் இதைக் காண்பித்தபோது எனக்கு வயிறு கலங்கிவிட்டது. கட்டாரியும். சக்கர வடிவி வான கத்தியும் எதையும் குத்தி சாய்க்கக் கூடியவை. கோயில் வேனல அதிகம் என்பதால், அரசர் முன்னும் பின்னும் அதிகம் நடப்பார்.

எல்லோரிடமும் நின்று பேசுவார். ஆனால் உங்களுடைய இருப்பு அங்கு நிரூபிக்கப்பட்டே ஆகவேண்டும். அரசரை எளிதில் நெருங்க முடியாது என்று ஒரு வட்டத்திற்கு இரு வட்டமாய். இருக்க வேண்டும். உங்களைப்பற்றி அருண் மொழிப்பட்டன் கவலைப்பட்டிருக்கிறார். உங்களுக்குப் புதிதாக சில உத்திகள் சொல்லித்தர வேண்டுமென்று நினைத்திருக்கிறார். எனவே உங்களுக்கு அரசருக்கே வேலை இல்லாதபோது அருண்மொழி பட்டருடைய இல்லத்திற்குப் போய் இரண்டரை நாழிகை அவரோடு அமர்ந்து, எப்படி இந்த மெய்க்காவலை திறம்படச் செய்வது என்பதற்கு கூடுதலான பயிற்சி எடுத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய கூடுதலான கவனம் குறித்து அல்லது எச்சரிக்கை குறித்து அரசர் ஏதேனும் சொன்னால், அவரைச் சமாதானப்படுத்த நான் உத்திரவாதம் தருகிறேன். மெய்க்காவல் படைவீரர்கள் அப்படித்தான் நடந்து கொள்வார்கள் என்று உங்களுக்குப் பக்கபலமாகப் பேசுகிறேன். இது குறித்து பிரம்மராயரிடம் பேசியாகி விட்டது. பழுவேட்டரையருக்குச் சற்று நேரம் முன்பு ஓலையும், ஆளும் அனுப்பிவிட்டேன். எல்லா சேனாதிபதிகளுக்கும் இவை தெரிவிக்கப்பட்டுவிடும். பெருந் தச்சருக்கும். தனிச்சேரி பெண்டிரின் நாயகமாக விளங்குகின்ற சாவூர் பரஞ்சோதிக்கும் மற்ற இனத்துத் தலைவருக்கும். அந்தணத் தலைவர்களுக்கும் இவை தெளிவாகச் சொல்லப் பட்டு விட்டன. எனவே அச்சமின்றி நீங்கள் இறுக்கமாகவும், திறமையாகவும் செயலாற்றுங்கள். உங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்க மட்டும் நான் அழைக்கவில்லை. உங்களுக்குக் கூடுதலான சன்மானப் பங்கும் தரப்படும். இப்பொழுது வாங்குவதிலிருந்து அரிசிக்கலன் அரைப்பங்கு அதிகமாகவும் சகலருக்கும் பிரதி மாதம் ஒவ்வொரு பொற்காசு கூடுதவாகவும் வழங்கப்படும். தனக்குள்ளேயே பிரித்துக்கொண்டு ஓய்வெடுத்துக் கொள்ளுதலும், உடல் நலம் இல்லாதவருக்குப் பிரதியாக வேறொருவர் இருத்தலும் என்பதை நீங்களே செய்து கொள்ளலாம். ஆனால், அரசரைச்

சுற்றிலும் பதினோரு பேருக்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்பது கட்டளை. நீங்கள் போகலாம்.

கலவரமான அந்த மெய்க்காவல் வீரர்கள் சற்று மனம் தேறி முகமலர்ச்சியோடு சிறிது நேரம் நின்று பஞ்சவன் மாதேவியை மரியாதை நிமித்தம் சில வார்த்தைகள் சொல்லி வாழ்த்தி வணங்கிவிட்டுப் போனார்கள்."

"இரண்டு நாட்கள் கழிந்து நூற்றைம்பது பேர் கொண்ட கறுப்பு உடையணிந்த அந்த மெய்க்காவல் வீரர்கள். வெள்ளிக் கேயூரக்காரர்கள். அருண்மொழிப் பட்டனின் முன்பக்கத்துத் தோட்டத்தில் கூடினார்கள். தோட்டத்துப் பெருங்கதவைச் சார்த்திவிட்டு அருண்மொழிப்பட்டன் அவர்களோடு உரையாடினான். எப்படி பிரித்துக்கொள்வது என்றெல்லாம் அவர்களுக்கு வகை சொல்லிக்கொடுத்தான். மின்னலாகத் தாக்குகின்ற சில பயிற்சிகளையும் கற்றுக் கொடுத்தான்.

தயக்கம் தான் உங்களுடைய மிகப்பெரிய எதிரி. மிக வேகமாக அரசரைத் தழுவிக் கொள்ளவோ, தொடவோ எவரேனும் வேகமாக வந்தால் எந்த ஈவிரக்கமும் இல்லாமல் குறுக்கே வேல் கம்பு வைத்து நிறுத்துங்கள். யார் என்று பேசுங்கள். சற்று பொறுத்து வரலாம் என்று அவரைத் தனிமைப்படுத்துங்கள். அவர் ஆசுவாசமான பிறகே சக்ரவர்த்திக்கு அருகே அனுப்புங்கள். அரசருக்கருகே எவர் நெருங்கவும், இப்படித்தான் நீங்கள் நடந்துகொள்ள வேண்டும்.

ஆனால், இளவரசர் தனக்கென்று ஒரு மெய்க்காவல் படையை வைத்துக் கொண்டிருக்கிறார். அந்த மெய்க்காவல் படைக்கு வெளிச்சுற்றாக நீங்கள் செயல்படுங்கள். இவரை உள்ளே அனுப்பட்டுமா என்று அவர்களிடம் அனுமதி கேளுங்கள். ஆனால் சக்ரவர்த்தியைப் பொறுத்தவரை நீங்கள் வைத்தது தான் சட்டம், பஞ்சவன்மாதேவி சொன்னது போல நான் வந்து நின்றாலும் நீங்கள் என்னை இடுப்பு தடவி, என் வாளை அகற்றி அனுப்புவது என்றாலும், எனக்கு முழு சம்மதம். இப்படி செய்வது சரி என்பது என்னுடைய அபிப் ராயம். என்னையே நீங்கள் அப்படி தடுத்து நிறுத்தினால் தான் மற்றவர்கள் இந்த வழிமுறைக்கு பழக்கப்படுவார்கள்."

"புலி நகம் வைத்திருக்கிறீர்களாமே ஐயா."

உபசேனாதிபதி யோக்கியதையிலுள்ள ஒரு வீரன் கேட்க, இரண்டு வேலைக்காரர்களை அனுப்பி விதம் விதமான

ஆயுதங்கள் பலவற்றையும் கொண்டுவந்து அருண்மொழி அவர்களுக்குக் காட்டினான்.

சக்கர வடிவான கத்தி. வெகுதூரம் போகும் கட்டாரி. பிரம்பு வைத்து நெருக்கமாகப்பின்னி மேலே பாக்கு மட்டையால் செய்யப்பட்ட கேடயம். இடுப்பு அரைஞாணைத் திருகிப் பிரித்தால் சவுக்காக மாறும் கயிறு. உறுதியாய் பளபளக்கிற இரும்புச் சங்கிலியின் மீது முறுக்கி சுற்றி நெஞ்சுக்கு குறுக்கே போட்டுக் கொள்ள வேண்டிய விதம். இடது கையால் அந்தச் சங்கிலியை நகர்த்தி நகர்த்தி நெஞ்சு மீது கத்திபடாமல் எடுத்து வாள் சுழற்ற வேண்டிய விதம், கால் அகட்டி வெகுநேரம் நிற்பதற்குண்டான பயிற்சி. அப்போது இடுப்பு வலித்தால் எப்படித் திரும்புவது என்கிற செய்முறை. உடம்பு கறுகறுப்புடைய மூச்சை எப்படி அழுத்தி, எப்படி விடவேண்டும் என்கிற வழிமுறை என்று விதம்விதமாகச் சொல்லிக்கொடுத்தான்.

பிரம்மராயர் வீட்டின் கொல்லைப்புறத்திலிருந்து அவித்த வேர்க்கடலையும், வெல்லம் கலந்த நெற்பொரியும், இஞ்சியும், கருப்பட்டியும் கலந்த சுடுநீரும் தரப்பட்டன.

பிரம்மராயர் சிறிது நேரம் கண் அயர்ந்து விட்டு மேல் துண்டு போர்த்தியபடி வெளியேவர ஐயன்... ஐயன்... என்று வீரர்கள் எழுந்து கைகூப்பினார்கள். விழுந்து வணங்கினார்கள்.

"கூடுதல் பயிற்சி எடுத்துக்கொள்வதும், கண் கொத்திப் பாம்பாக இருப்பதும் நல்ல காரியம் தான். ஆனால், தராதரம் தெரியாமல் ஏதும் செய்து விடாதீர்கள். முரட்டுத்தனமாக மடக்காதீர்கள். பணிவாக நிறுத்திவிடுங்கள். நாங்கள். மெய்க் காவல் படை உங்களைத் தடுத்து நிறுத்தக்கூடாது. சோதனையிடக்கூடாது என்று எங்களுக்குத் தெரியும். ஆனாலும், சமீபத்தில் நடந்த சில விஷயங்கள் எங்களைக் கலவரமாக்கியிருக்கின்றன. தயவு செய்து எங்களோடு ஒத்துழைக்க வேண்டும் என்று பேசுவது நல்லது. உங்களுக்குப் பல்வேறு விதமாக சோதனை செய்ய அனுமதி கொடுத்திருப்பதாலேயே அத்துமீறல் வந்து விடக்கூடாது. உங்களை அகம்பாவம் பிடித்தவர்களாக நீங்கள் காட்டிவிடக்கூடாது."

"இன்னொன்றும் சொல்ல விரும்புகின்றேன். இன்றைக்கு தேதிக்கு மிக மிக சிக்கலான தர்மசங்கடமான வேலை என்று

சொன்னால், அது உங்களுடைய வேலை தான். ஒருவேலை உங்களுடைய பணியின் காரணமாக நீங்கள் அவமதிக் கப்பட்டால், அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாம். இது பணியின் ஒரு இடர் என்று எடுத்துக்கொள்ளுங்கள். பழுவேட்டரையர் வேகமாக வருகின்றார் என்றால், நீங்கள் சற்று நெருங்கி மடக்கி நிறுத்தி விடக்கூடும். அவர் வாள் உருவுலார். சட்டென்று கையைப் பிடித்துக் கொண்டு மன்னித்துக் கொள்ளுங்கள். யாரென்று தெரியவில்லை என்று சொல்லிவிடுங்கள். கோபம் தணிந்தபிறகு வாள் தேவைதானா என்று கேளுங்கள். சக்ரவர்த்திக்கு அருகே போகும் போது, நான் உட்பட எவரும் ஆயுதம் வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை."

அருண் மொழிப்பட்டன் உரக்கப்பேசினான்
பிரம்மராயர் சிரித்தபடி உரக்கப்பேசினார்.

"அருண்மொழிப்பட்டனை சோதனை செய்வீர்கள். என்னை நீங்கள் சோதனை செய்ய முடியாது. ஆனால் உங்களைத் தாண்டிப் போகும்போது, நானே என் இடுப்பு வாளைக் கழற்றி உங்களிடம் கொடுத்துவிட்டுப் போவேன். அநேகமாக சக்வர்த்தியைப் பார்க்கப்போகும் போது, நான் வாள் எடுத்து வருவதில்லை. என்னுடைய வாள் சற்று விசித் திரமானது. அகலமானது, நீளமானது எனவே, உங்களிடம் வரும் பொழுதெல்லாம் அந்த வாளைக் கொடுத்துவிட்டு வாங்கிவிட்டுப் போகிறேன். மிக மரியாதையாக அந்த வாளை நீங்கள் வைத்திருக்க வேண்டுமென்பதே என்னுடைய விருப்பமே தவிர, வாளை உங்களிடம் கழற்றிக் கொடுப்பதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. நான் அப்படி செய்யத் துவங்கினால் பழுவேட்டரையரும் அப்படி செய்யத் துவங்குவார். பழுவேட்டரையர் அப்படி செய்ய வேண்டு மென்று நான் சொல்லி விடுகிறேன். கட்டளையாக உபசேனாதிபதிகள், சேனாதிபதிகள் அனைவருக்கும் போகும், பஞ்சவன்மாதேவி இடுப்பில் கூர்வாள் வைத்திருப்பார். கூடாது என்று சொல்லி விடுங்கள்.

சக்ரவர்த்தியுடன் நெருக்கமாகப் பேச பலபேர் முன்வரு வார்கள் என்பதால், இந்த நடவடிக்கை என்று சொல்லி விடுங்கள். மற்றபடிக்கு பஞ்சவன்மாதேவி உங்களிடம் கூடுத லாக காக கொடுத்திருப்பதும் மரியாதை செய்திருப்பதும் எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. மிக மிக இடைஞ்சலான ஒரு

பணி உங்களுக்குச் கமத்தப்பட்டிருக்கிறது. மிகச்சரியாக நிறைவேற்றிக்கொள்ளுங்கள்."

"நீங்கள் சொல்வது அனைத்தும் சந்தோஷமாக இருக் கிறது. எங்களைப் புரிந்து கொண்டு பேசுகிறீர்கள் என்பது மிக ஆனந்தமாக இருக்கிறது. எங்களுக்கு இடைஞ்சலாக படைவீரர்கள் ஒருகாலமும் இருக்க மாட்டார்கள். பஞ்சவன் மாதேவியோ, அரசகுலப் பெண்டிரோ, நாங்கள் பணிவாக நிற்க வைத்தால் சரியென்று தலையசைத்து புன்சிரிப்போடு அமர்ந்து விடுகிறார்கள். எங்கள் கவலை மறவர்களைப் பற்றியல்ல."

"யாரைப்பற்றி" ஆவலாக பிரம்மராயர் கேட்டார்.

"சிற்பிகள் எங்களைக் கொஞ்சம் எளக்காரமாகவும், கோபமாகவும் பார்க்கிறார்கள். விலகடா என்று சற்று அதட்டல் போடுகிறார்கள். குறிப்பாய் நித்த விநோதப் பெருந்தச்சன். அவருக்குக் கூட வருகின்ற இலத்தி. இவர்கள் இருவரின் நடவடிக்கையும் சற்று முரட்டுத்தனமாக இருக்கிறது. வினாடி நேரத்தில் அவர்களை நான் தரையில் சாய்த்துவிட முடியும். ஆனால், சக்ரவர்த்திக்கு அது பிடிக்காது என்று தெரிந்துதான் நாங்கள் வெறும் முறைப்போடே நகர்ந்துகொள்ள வேண்டியிருக்கிறது."

"அப்படியா... அவர்களுக்கு உத்தரவு என்று போட வேண்டாம். அடுத்த முறை அவர்கள் நெருங்கி வரும்போது எங்களுக்கிட்ட பணி இது. இதில் நீங்கள் ஆதரவாக நடந்து கொண்டால் நன்றாக இருக்கும். வெகு நிச்சயமாக உங்களை ஆயுதத்தோடு அனுப்பமாட்டேன் என்று சொல்லிவிடுங்கள்."

"கருமார்கள் சக்ரவர்த்தியிடம் கருவிகள் காட்ட எடுத்து வருகிறார்கள். அப்போது என்ன செய்வது"

"கருவிகளை நீங்கள் வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் கடை பரப்புங்கள். அவர்களைக் காட்டச் சொல்லுங் கள்."

"ஐயா... இது சமாதான காலம். சக்ரவர்த்தியார் மிகுந்த ஆவலோடு மக்களை அணுகுகின்றார். நீங்கள் வேண்டா மென்று மறுத்தாலும் எங்களை மெல்ல புறத்தள்ளிவிட்டு அவராகவே குதிரைவிட்டு இறங்கி ஜனங்களோடு கலந்து பழகுகிறார். சக்ரவர்த்தியே முன்வந்து பேசுகிறபோது நீ ஏன்

தடுக்கிறாய் என்பது போல் பொது மக்கள் சீறுகிறார்கள். இது தர்ம சங்கடமாக இருக்கிறது."

மத்திம வயது கடந்த ஒரு மெய்க்காவல் வீரன் பிரம்ம ராயரை நோக்கி பரிதாபமாகக் கேட்டான்.

பிரம்மராயர் அவனையே உற்றுப் பார்த்தார்.

"உன்னுடைய பெயர் என்ன."

"வளையாபதி."

"வளையாபதி. நீர் மெய்க்காவல் படையை விட்டு விலகி விடும்."

"ஐயா நான் தவறேதும் செய்துவிடவில்லையே."

அவன் பதறினான்.

"உன்னுடைய சிந்தனை எப்போது இரக்கமாக, மற்றவருக்கு இணக்கமாகப் போயிற்றோ, அப்பொழுது மெய்க் காவல் படையில் நீர் இருக்க லாயக்கற்றவர். உம்முடைய வயது உம்மை இரக்கமாக்கிவிட்டது. இளமையான, முரட்டுத் தனமான இளைஞர்கள் தான் எனக்குத்தேவை, உம்மை வேலையை இருந்து விலக்கிவிடவில்லை. வேறு இடத்திற்கு வேலைக்கு அனுப்புகிறேன். கருவூர்த்தேவர் தஞ்சையில் தான் நடமாடிக் கொண்டிருக்கிறார். அவருக்கு மெய்க்காவலாக நீ போய் இரு."

"இது என்னைத் தண்டிப்பது போலல்லவா இருக்கிறது."

"கருவூர்த்தேவரிடம் வேலைக்கு அனுப்புவது ஒரு தண்டனையா. அட முட்டாளே... இப்போது கூட என் மகன் அருண்மொழிப்பட்டனைக் கருவூர்த்தேவருக்கு மெய்க் காவலாகப் போ என்றால், சகலமும் கீழே வைத்து விட்டு ஓடி விடுவார். உனக்கு நல்லதே செய்திருக்கிறேன் வளையா பதி. போ... கருவூர்த்தேவரிடம் போ. உன் மெய்க்காவல் படை காரணத்தாரிடமே உனது மாதாந்திரப் பங்கையும் வாங்கிக் கொள். ஏதாவது ஒரு நாள் என்னைச் சந்தித்து இதற்காக நன்றி சொல்வாய். உங்கள் கருப்புத் தலைப்பாகைக்கு பக்கவாட்டில் கழுகின் சிறகுகளை அணியச் சொல். அது சக்ரவர்த்தியின் மெய்க்காவல் படை என்று தனித்துப் 'பிரித்துக் காட்டட்டும். படைவிலகலாம்." என்று பிரம்மராயர்

உத்தரவிட, அவர்கள் குனிந்து வணங்கினார்கள். 'சோழம்... என்ற ஒரு முறை கத்தினார்கள்.

வெளியே வந்து மூன்று மூன்றாக நின்று கால் மாற்றி குதித்து அடிக்கட்டையைத் தரையில் தட்டிக் கொண்டு.

"நீள நெடுவுக்கு காவேரி
நெஞ்சு உசரமா நெல்லுப்பயிர்
நெல்லுப்பயிர்குள்ள வேங்கைப்புலி
வேங்கைப்புலி பக்கம் நாகமணி
நாகம் விலகுது நாயும் விலகுது
பன்னி விலகுது பேயும் விலகுது..."

என்று அவர்கள் பாடிக் கொண்டு போனார்கள்.

நீண்ட பாட்டு. ஓடும்போது பாடுகின்ற பாட்டு. அவர்கள் அப்படி ஊர்வலமாக ஓடுவதைக் கண்டு தெரு ஜனங்கள் அவசர அவசரமாக ஒதுங்கினார்கள். ஒதுங்காத வர்களை அந்தப் படைவீரர்கள் பிடித்துத் தள்ளினார்கள். மிரண்டு வந்த மாடுகளை அடித்தார்கள். கறுப்பு உடை அணிந்த அந்தப்படை நடந்து போகும்போது மக்கள் முகத்தில் கலவரமும், கிலியும் தெரிந்தன. மறவர் பிள்ளைகள் பலர் பின்னாலேயே குதித்து ஓடினார்கள். அவர்களுக்கு மெய்க்காவல் படையில் சேரவேண்டும் என்ற ஆவலை அந்தப் பாட்டும் ஓட்டமும் கொடுத்தன.

# 132

**அ**ந்தி சாய்ந்து விளக்கு வைத்ததும் அந்தச் சேரியில் உள்ளவர்கள் விளக்கு ஏற்றி வைத்து சேரிக்கு நடுவே மூங்கில் குச்சிகளையும் ஓலைகளையும் பனந்துண்டங்களையும் போட்டு நெருப்பு பற்ற வைத்தார்கள். தங்களுடைய தோற் கருவிகளைக் கொண்டு வந்து நெருப்பில் காட்டி கயிறு போட்டு இறுக்கினார்கள். மெல்லத்தட்டி ஸ்ருதி சேர்த் தார்கள். ஸ்ருதி குறைய மீண்டும் தோலை நெருப்பில் சூடு காட்டி மீண்டும் இறுக்கினார்கள். தோல்பறையை, முழவை கழுத்தில் அணிந்து சரியான அளவில் வைத்துக் கொண் டார்கள்.

ஒரு கிழவன் அவர்களுக்கு அருகே போய் கைகளைத் தட்டி என்ன தாளத்தில் வாசிப்பது என்று செய்து காட்டி

வான். வாத்தியக்காரர்கள் புரிந்து கொண்டார்கள். மெல்ல கருவிகளை நிமிண்டி நிமிண்டி ஒலிகள் எழுப்பினார்கள். அவர்கள் யுத்தம் நடக்கும் போது முன்னாலும் பின்னாலும் பக்கவாட்டிலும் நின்று வெகுவேகமாகப் பறையடித்தும் எக்காளம் ஊதியும் வீரர்களுக்கு வெறியேற்றுபவர்கள். வீரர்கள் சோர்வாக இருந்தாலும் இன்னும் வேகமாக முழக்கு பவர்கள். ஒருவேளை எதிரிப்படைகள் வலுவாகி தாக்க வந்தாலும் விடாது நின்று வாசிப்பவர்கள். வெட்டுப் பட்டு வீழ்பவர்கள். அவர்கள் வாள் எந்தமாட்டார்கள். ஆனால் அவர்களுடைய பறைகள் பேசும். வெற்றியைக் கொண்டு வந்து சேர்க்கும். அவர்களில் பலபேர் எதிரிகளால் பிடிக்கப் பட்டிருக்கிறார்கள். கடுமையாக அடிக்கப்பட்டிருக்கிறார்கள். கை விலங்குகளால் பூட்டப்பட்டு மாடுகள் போல் நடத்தப் பட்டிருக்கிறார்கள். பிறகு பறைவாசிப்பவர்கள் என்று தெரிந்து மெல்ல அவர்களை விடுவித்து கசையால் அடித்தும், சூடு போட்டும் திரும்ப அனுப்பப்பட்டிருக்கிறார்கள். போர் வீரர் களைச் சிரச்சேதம் செய்வது போல, பறைவாசிப்பவர்களைச் செய்வதில்லை. ஆனால், அவமானப்படுத்துவதுண்டு. சிலர் மிகக் கொடுமையான முறையில் அவமானப்பட்டதும் உண்டு. ஆனாலும் அந்தப் பறைவாசிப்பு என்பது பரம்பரை பரம் பரையாக அவர்கள் விடாது செய்து வருகிறார்கள்.இந்தமுறை மறவர்களுக்குப் பல பதவி உயர்வுகள் கிடைத்தன. சிற்பிகளுக் குப் புதிய யோக்கியதைகள் கிடைத்துவிட்டன. தளிச்சேரி பெண்டுகளுக்குத் தனிவீடுகள் கிடைத்தன. இவர்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை. கிடைக்கும் என்கிற நம்பிக்கை இருக்கிறது ஆனால், கேட்கப் போவதில்லை. கேட்டு கிடைக்காவிட்டால் அது அவமானம், கேட்காமலேயே இருந்து கிடைத்து விட்டால் அது மிகப்பெரிய கௌரவம். சக்ரவர்த்தி கடவுளைப்போல வந்தவர். நடமாடும் தெய்வம். கடவுளுக்குத் தெரியாதா எப்பொழுது கொடுக்க வேண்டும். எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று...

அவர்கள் வாசிக்க ஆரம்பித்தார்கள். மெல்ல மெல்ல பறையடித்து பறை ஒரு உக்கிரமான உச்சியைத் தொட்டது. தஞ்சைப் புறம்படியிலிருந்து மறவர்கள் விழி உயர்த்தி அந்தப் பக்கம் பார்த்தார்கள். தஞ்சையின் மேல்மாடத்தில் நின்றிருந்த சக்ரவர்த்தியின் காதிலும் இந்தப் பறை ஒலி விழுந்தது.

அவர் பஞ்சவன்மாதேவிக்கு அந்த ஒலியைச் சுட்டிக் காட்டினார் அவளும் செவிமடுத்து தலையசைத்தாள்

ஒவ்வொரு சேரிக்கும் ஒரு வண்டி தானியமும், இரண்டு மாடுகளும் அனுப்பு என்று கட்டளையிட்டார்.

"என்னவென்று சொல்வது."

"கோயில் கட்ட ஆரம்பித்திருக்கிறோம். அவர்கள் பறை வாசிப்பு தேவைப்படும். கற்கள் மேலே எழுப்பப்படும் போது யானைகளும், மாடுகளும் இழுக்கப்படும் போது உற்சாகத் திற்குப் பறைகளை முழக்குவது ஆரோக்கியமாக இருக்கும். இதற்குச் சன்மானம் என்று சொல்."

"எந்தக் கணக்கில் இருந்து அனுப்ப."

"அரண்மனைக்கு வரும் கணக்கிலிருந்து திருப்பி அனுப்பு. என் பெயர் சொல்லி ஒவ்வொரு சேரிக்கும், ஒவ்வொரு வண்டி நெல்லும், ஐந்து மாடுகளும் கிராமத்திலிருந்து அனுப்பப்பட வேண்டும் என்று சொல்."

"எதற்கென்று கேட்பார்களே."

"சக்ரவர்த்தியின் ஆணை இது போதும்."

நடுநிசியில் அவர்கள் பறை முழக்கத்தை முடித்துக் கொள்ளலாம் என்று நினைத்தபோது வண்டி வந்தது. செய்தி சொன்னார்கள். அவர்களுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. குதித்தார்கள் ஆடினார்கள். பாடினார்கள். மறுபடியும் தீ வளர்த்தார்கள். பறைகளை நெருப்பில் காட்டினார்கள். பெண்டுகளும், குழந்தைகளும் கூடைகூடையாய் நெல்லாரி நீட்டு அகலத்தில் கொட்டி, மாடுகளை அழைத்து வந்து கட்டி வந்தவர்களுக்கு வணக்கம் சொல்லி அனுப்ப உற்சாகம் பீறிட்டுக் கிளம்பியது. சக்ரவர்த்தியின் மாளிகை இருக்கும் திசைநோக்கி கைகூப்பினார்கள். விழுந்து வணங்கினார்கள். மெல்ல மெல்ல பறைகளை முழக்க ஆரம்பித்தார்கள். விடியவ் வேளையில் அந்தப் பறையின் ஆனந்தச் சப்தம் தஞ்சையின் எல்லா எல்லைகளிலும் கேட்டது.

சக்ரவர்த்தி தூக்கத்தில் புரண்டு கண்மூடிக் கிடந்து அந்தப் பறை ஒலியை வாங்கிக் கொண்டார். புன்முறுவல் செய்தார். அப்படியே தூங்கிப் போனார்.

"என்ன ஆயிற்று அவர்களுக்கு... விடியும்வரை எதற்கு இந்தப் சப்தம். தூங்கவே முடியவில்லை." அந்தணர் குடியிருப் பிலிருந்து கோபமாய் உறுமல்கள் வெளிவந்தன.

"விசாரித்துவிட்டேன். ஒரு வண்டி நெல்லும், ஐந்து மாடுகளும் உமக்குக் கொடுத்தால் ஆனந்தக் கூத்தாட மாட்டீரா. அதுதான் நடந்திருக்கிறது."

"யார் கொடுத்தார்கள்."

"சக்ரவர்த்தி மாமன்னர் உ..டை..யா..ர் ஸ்ரீ... இராஜ ரா...ஜத்தே...வர்." என்று சொன்னதில் மெல்லிய கேலி இருந்தது.

"என்னய்யா பேச்சு ஒரு மாதிரி போகிறது. ஏதேனும், எவரிடமிருந்து வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தில் இருக்கிறீர்களா. அடக்கமாக இருக்க வேண்டிய இந்தக் காலகட்டத்தில் ஏன் அலட்டிக் கொள்கிறீர்கள். யாரோ யாருக்கோ தானம் கொடுத்தால் உமக்கென்ன."

"எனக்கொன்றுமில்லை. ஒன்றுமேயில்லை. ஒன்றும் இல்லை என்பதுதான் என்னுடைய மிகப் பெரிய குறை."

அந்த அந்தணர் லேசாக வயிற்றில் அடித்துக் கொண்டார்.

"கேட்டால் தானே கொடுப்பார்கள்."

"அவர்கள் என்ன கேட்டார்கள்."

சேரிப்பக்கம் கைகாட்டினார்.

"பறை முழங்கினார்களய்யா... அதுவொரு வேண்டுகோள். அந்தப் பறைமுழக்கம் அரண்மனை வரைக்கும் நடுநிசியில் போய் செய்தி சொல்லி வந்தது. ஹை... சேரியில் பறை வாசிக்கிறார்களே என்று அரசர் விழி உயர்த்தி அங்கு கொஞ்சம் விவாதம் செய்து இப்படி ஒன்று அனுப்பு என்று சொல்லியிருப்பார். அதுமட்டுமல்ல, இந்த ஒரு சேரிக்கு அனுப்பினால் போதுமா. அங்கங்கே உள்ள எல்லா சேரிகளுக்கும் அனுப்பு என்ற கட்டளையும் இந்நேரம் வந்திருக்கும்."

"வந்துவிட்டதாம், இந்தச் சேரிக்கு நம்முடைய மங்கலத்திலிருந்துதான் ஒரு வண்டி நெல் கொடுக்கப்பட வேண்டும்."

"நெல் எங்கிருக்கிறதய்யா."

"உங்கள் வீட்டுக் குதிரில் இருக்கிறது."

"என் வீட்டு குதிர் நெல் எனக்கு."

"அதிலிருந்து மூன்று மரக்கால் நெல் அளந்தீர்கள் என்றால், இங்குள்ள அறுபது வீடுகளும் ஒன்று சேர்ந்து நூற்று எண்பது மரக்கால் நெல்லையும் சேரிக்கு கொடுத்து விட்டு வருவோம்."

"என்ன அயோக்கியத்தனம்."

ஒரு அந்தணர் சீறினார்.

"போதும். அதிகம் பேசவேண்டாம். இது சக்ரவர்த்தியின் ஆணை."

"இன்னும் வேறு யார் யாருக்கெல்லாம் கொட்டியழ வேண்டும்."

"தெரியாது."

"நமது சக்ரவர்த்தி நாம் கொடுக்க வேண்டிய வரியை ரத்து செய்துவிட்டாரா."

"ஹா.. ஹா... மறந்து போயிற்றா இந்தக் கிராமம். இறையிலியாகக் கொடுக்கப்பட்டது. நீர் கோவிலுக்கு கொடுத்தால் போதுமானது. கோவிலுக்குக் கொடுக்கிறேன் என்று சொல்கிறீரே தவிர, கோவிலுக்குக் கொடுக்கப்பட வில்லை என்பது தான் உண்மை. அரசருக்கு வரி என்று நீங்கள் எதுவும் கொடுப்பதில்லை எனவே அதிகம் பேசவேண்டாம். அலட்டிக்கொள்ள வேண்டாம். அமைதியாக இருங்கள்."

"குளக்கரையில் கூட்டம் போட்டுப் பேசினார்களே என்ன முடிவெடுத்தார்கள்."

"முடிவெடுப்பதற்காகப் பேசவில்லை. ஒரு தனி மனிதர் தன்னுடைய புலம்பலை உரக்கச் சொல்ல, ஒவ்வொருவராகச் சேர்ந்து அதை ஊர் புலம்பலாக மாற்றினார்கள். உண்மையில் நடவடிக்கை எதுவுமில்லை."

"அப்படியானது ஒரு கூட்டம் போட்டால் என்ன."

"அப்படியா... அந்தணர்கள் என்ன கூட்டம் என்று கேட்பார்களே."

"அரசருக்கெதிராக வரிவிதிப்பு வேண்டாம் என்று சொல்ல முற்படும் கூட்டம் என்று சொல்லுங்கள், கூட்டத்தில் முக்கியமான ஆறேழு பேருக்கு வேறு அவசரவேலை வந்துவிடும். மன்னருக்கு ஏதேனும் கோரிக்கை வந்து தூது

போக வேண்டும் என்று சொல்லுங்கள். அனேகமாய் ஒருவர் கூட அந்தக் கூட்டத்திற்கு வரமாட்டார்கள்.''

“அப்படி என்ன பயம்.''

“எல்லாவற்றுக்கும் பயம். அதுவும் சமீப காவமாய் ஒவ்வொரு இனத்தாரும், தங்கள் கொடியைப் பறக்கவிட்டுக் கொண்டிருக்கும் போது இந்த ஒரு இனம் மட்டும் இருக்கின்ற கொடியையும் சுருட்டி அக்குளுக்கு அடியில் வைத்துக்கொண்டு எனக்கு ஒன்றும் தெரியாது என்று உட்கார்ந்து கொண்டிருக்கிறது. ஒருவேளை இது அடக்கமாக இருக்க வேண்டிய நேரமோ என்னமோ.''

“இப்படி பேசுதல் தவறு.''

“அந்தணர்கள் ஒன்றுகூடி பேசி நம் இருப்பை சக்ர வர்த்திக்குத் தெரியப்படுத்த வேண்டும். தெரியப்படுத்துதவே அசத்தலாக வந்துவிடுமோ என்ற ஒரு கேள்வி இருக்கிறது.''

“ஐயா... என்னதான் அப்பொழுது செய்யப்போகிறீர்கள்.''

“மௌனமே உயர்த்த விஷயம்.''

“அழிந்து போவீர்கள்.''

“இல்லை.''

“அப்படி எதுவும் நடந்துவிடாது. நம்முடைய தேவை என்பது இந்தக் காலக்கட்டத்தில் அறவே இவ்வை. நம் முடைய தேவை என்று ஒன்று வரும்போது அப்போது பேசிக் கொள்ளவாம்.''

“உங்களுடைய தேவை எப்போது அவசியமாக இருந்திருக்கிறது. நீங்களாக துருத்திக் கொண்டு போய்த்தானே உங்களைப்பற்றி பேசிக் கொள்கிறீர்கள். அந்தணர்கள் இல்லை யெனிவ் வாழ்க்கை அஸ்தமித்து விடும் என்று யாராவது எப்பொழுதாவது சொவ்லியிருக்கிறார்களா.''

“வானம் பொய்க்கும் போது, நோய்கள் பரவுகின்ற போதும் அந்தணர்கள் பற்றிய எண்ணம் மக்களுக்கு வருவ துண்டு. அதே நேரம் எதனால் இது ஏற்பட்டது என்ற கேள்வி வர, அப்போது விரிவாக மக்களிடையே நம்மாவ் பேச முடியும். அப்படிப்பட்ட காலமல்ல இது. எனவே மௌன மாய் இருத்தவ் நன்று.''

"அரசரிடம் போய் நலன் விசாரிப்பது கூட தவறா."

"இல்லை அதில் தவறேதும் இல்லை."

"ஆக ஒரு பதினாறு பேர் கொண்ட அந்தணர் குழு ஒன்று அரசருக்கெதிரே போய் அவர் நலமாக இருக்க பிரார்த்தனை செய்தால் என்ன."

"செய்யலாம். ஆனால், இளவரசர் இராஜேந்திரர் பற்றி பயமாக இருக்கிறது. ஈசான பண்டிதர் வருவதாகச் சொன்னாரே. அவர் பின்னால் போய்க் கொள்ளலாம் என்று நினைத்தோமே."

"ஈசான பண்டிர் வரவில்லை. கருவூர்த்தேவர் தஞ்சையில் இருப்பதால் அவர் வரத்தயங்குகிறார் என்று பேச்சு இருக்கிறது. அது உண்மையாக இல்லாமலும் இருக்கலாம். ஈசான பண்டிதர் ஏதேனும் ஒரு காரணம் சொல்லி தஞ்சைக்கு வருவதைத் தவிர்த்துவிட்டார்."

"குடந்தையில் இருக்கிற பழையாறைக்கு சந்திரமல்லி வந்திருக்கிறாராமே."

"பழையாறைக்கல்ல. தஞ்சைக்கே வந்தாகிவிட்டது. பெரிய மூங்கில் வேலி கட்டி நடுவே குடில் அமைத்து உள்ளுக்குள்ளே மான் மயில்களெல்லாம் விட்டு, செடி கொடிகள் நட்டு நந்தவனம் உண்டாக்கி அங்கே குடில் அமைத்திருக்கிறார்கள்."

"அவரிடம் போய் பேசலாமா."

"ஏன் வம்புக்கு அலைகிறீர்கள்."

"இல்லை. அவர் பௌத்த மதத்தைத் துறந்துவிட்டு வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன்."

"அப்படியென்றால் சனாதன தர்மத்திற்குத் திரும்பி விட்டார் என்றல்லவா அர்த்தம். வந்தவருக்கு வாழ்த்து சொல்லலாமே."

"இல்லை. அவர் எந்த தர்மத்தையும் தான் சார்ந்தவரல்ல என்றும், சித்த புருஷர்களின் வழியே நிற்பவர் என்றும், யோகம் செய்பவர் என்றும் தெரிவித்திருக்கிறார். எனவே அங்குபோய் நிற்பது பல்வேறு சங்கடங்களை ஏற்படுத்தும்."

"நமக்கா"

"இல்லை சக்ரவர்த்திக்கு.. இளவரசருக்கு."

"அப்பொழுது யாரைப் பார்த்தால் நல்லது."

"பிரம்மராயரைப் போய்ப் பார்ப்போமா."

"ஹா... வேறு வினையே வேண்டாம். எல்லோர் கையிலும் வேலோ, வாளோ கொடுத்து என்னுடைய படையில் சேர்ந்து விடுங்கள் என்று சொல்வார். அந்தணன் வாள் தூக்கக்கூடாது என்று எங்கே சொல்லியிருக்கிறது. எந்த இடத்தில் சொல்லியிருக்கிறது என்று கேள்வி கேட்கிறார். நமது பரசுராமர் யார். க்ஷத்திரியரா. துரோணர் யார், அரச குலமா என்று குறுக்கு சால் பாய்ச்சுகிறார்.

"குறுக்கு சால் என்றால் என்ன."

"ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு ஒழுங்காக தண்ணீர் போய்க் கொண்டிருக்கும் போது அதை வெட்டித் தன் பக்கம் திரும்பிக்கொள்வது குறுக்கு சால். வேறெங்காவது போக வேண்டும் என்று ஆசைப்பட்டால் உம்மைத் திசை திருப்பி தன் பக்கம் இழுத்துக்கொள்வது தான் தன் பணி. அரசர் கோவிலுக்கு வரும் போது நாம் போய் நின்று கொண்டால் என்ன."

"இல்லை அது சிவாச்சாரியார்களுக்குப் பிடிக்கவில்லை. நம்முடைய குலமாக இருந்தாலும், இந்த இடத்தில் அவர்கள் தான் முன்னிலை வகிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். வேதம் சொல்கிறவர்கள் விலகியிருக்க வேண்டுமென்று பேசுகிறார்கள். அரசர் வரும்போதும், இருக்கும் போதும், போகும் போதும் அவரைச் சுற்றி சிவாச்சாரியார்கள் தான் இருப்பார்களே தவிர உம்மைப்போன்ற சதுர்வேதிகளுக்கு நெருங்கக் கூட வாய்ப்பிருக்காது. ஏனெனில் சிவாச்சாரியார்களை நீங்கள் உங்கள் அருகே சேர்ப்பதேயில்லை. அவர்கள் வேறு விதமான அந்தணர்கள் என்றே நீங்கள் ஒதுக்கி வைத்திருக்கிறீர்கள். வேதங்கள் சொல்வதே வாழ்க்கையென்று அழுத்தமாக அமர்ந்திருக்கிறீர்கள். அதனால் சிவாச்சாரியார்கள் உங்களை அண்ட விடப்போவதில்லை."

"ஏன் இவ்வளவு இழிவாய்ப் போய்விட்டது. நம்முடைய அந்தண குலம்." ஒருவர் கவலைப்பட்டார்.

"அப்படியெல்லாம் சொல்வதற்கில்லை. நல்ல கொழுத்த மீன் வருமளவும் கொக்கு மற்ற மீன்களின் அசைவைப் பார்த்துக் கொண்டேயிருக்கும். ஒற்றைக் காலில் நின்றபடி...

ஒருவர் சொல்ல எல்லோரும் அமைதியாக வெவ்வேறு திக்கில் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்த அந்தண கிராமம் நோக்கி ஒரு கருப்புகுதிரை உள்ளே வந்தது."

"வைணவதாசன் அந்தக் கருப்புக்குதிரையை ஓட்டி வந்தார். குதிரையின் மீது கம்பளி போடப்பட்டிருந்தது. குதிரையின் கடிவாளத்திற்குத் தோலுக்கு பதிலாக நாணவால் முறுக்கி செய்யப்பட்ட கயிறுகள் இருந்தன. மூன்று கால் பின்னலாய் இறுக்கப்பின்னப்பட்டிருந்த அந்த புவ்சேணம் உறுதியாகவும், பளபளப்பாகவும் கருப்பு நிற குதிரைக்கு மஞ்சள் கோடு இட்டது போன்ற கம்பீரத்தோடும் இருந்தது.

"வந்துவிட்டானய்யா வேவுக்காரன்."

"ஒரு அந்தணர் வேண்டுமென்றே உரக்கக் கத்தினார்.

ஆனால், வைணவதாசன் மிரளவில்லை.

"ஆமாம் வேவுக்காரன் தான். ஆனால், உன்னைப் பற்றியோ, உன் மனைவியைப் பற்றியோ வேவு பார்க்க வர வில்லை. சோழ தேசத்தின் நலனுக்காக, நீங்களெல்லாம் சௌக்கியமாக அமர்ந்து சாப்பிட வேண்டுமென்பதற்காக வெளிதேசத்தில் வேவு பார்க்கிறேன்."

"என்ன விஷயம் என்ன தகவல் சேகரிக்க இந்தப் பக்கம் வந்திருக்கிறீர்."

இன்னொரு அந்தணர் மடக்கினார்.

"உங்களிடமிருந்து எனக்கு எந்தத் தகவலும் வேண்டாம். உங்களுக்கொரு தகவல் சொல்லிவிட்டுப் போகலாம் என்று வந்திருக்கிறேன்."

"என்ன."

"தஞ்சையைச் சுற்றியுள்ள பிரம்மதேசத்தில் அந்தணர்களாக வாழும் உங்களைவிட குடந்தையிலுள்ள அந்தணர்கள் கூர்மையானவர்கள். குடந்தைக்கு அருகேயுள்ள கருமாரி சேரிப்புறத்தில் இளவரசர் உள்ளே நுழைந்து, அவர்களுக்கு வேண்டுவன செய்வதாக வாக்களித்து அவர்களோடு உட்கார்ந்து விருந்துண்டு மகிழ்ந்து பேசி அந்தணர்களைப்

புறக்கணித்துப் போனது பற்றி நொந்து போய் அதே சமயம் சூழலை முற்றிலும் புரிந்து கொண்டு சக்ரவர்த்திக்கு ஓலை அனுப்பியிருக்கிறார்கள் சோழ தேசத்தின் முக்கிய பிரச்சினைகள் சிலவற்றை சக்ரவர்த்திகளோடு உட்கார்ந்து பேச வேண்டுமென்று அனுமதி கேட்டிருக்கிறார்கள். சக்ர வர்த்திக்கு எப்போது இயலுமோ, அப்போது கூப்பிட்டால் போதும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு மாதம் சதய நட்சத்திரத்தில் சக்ரவர்த்திக்காக ஆயுஷ்ஹோமமும், ஆவஹந்தி ஹோமமும், ம்ருத்யுஞ்ச ஹோமமும் செய்வதாக சொல்லியிருக்கிறார்கள். அந்த நாளில் பிராமண போஜன மும், பொது மக்கள் அனைவருக்கும் அன்னதானமும் செய் கிறார்களாம் இதைத்தவிர."

வைணவதாசன் சொல்லிவிட்டு அமைதியாய் அந்தணர் களின் முகத்தைப் பார்த்தான்.

"என்ன...

''மிக முக்கியமான விஷயம் சொல்வது போல தயங்கினான்."

"சொல்லு... இதைத்தவிர...

ஒரு அந்தணர் வைணவதாசனைத் தூண்டினார்.

"இது தவிர வருடத்திற்குப் பதினாறு யாதவ இளைஞர் களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு எழுதவும், படிக்கவும் சொல்லித்தரும் பணியை மேற்கொண்டிருப்பதாகவும் செய்திருக்கிறார்கள். இந்தத் தகவலைத்தான் சொல்ல விரும்பினேன்."

"கெட்டிகாரத்தனம் தெரிகிறது. ஆனால் அரசருக்கு இந்தச் செய்தி போய் சேர்ந்து விட்டதா. அரசர் எப்போது குடந்தை அந்தணர்களைச் சந்திக்கிறார்."

"இல்லை உங்கள் பக்கம் அதிர்ஷ்டக் காற்று இல்லை. அரசர் அந்த ஓலையைப் படிக்கவில்லை. இப்படி பதினாறு பேருக்கு எழுதவும், படிக்கவும் சொல்லித் தருகிற செய்தி அரசருக்குப் போய்ச் சேரவில்லை. சந்திக்க வேண்டும் என்று விரும்பியது மட்டும் சொல்லப்பட்டது."

"இப்படி வடிகட்டி செய்தியைச் சொல்லி விட்டாயே."

"வடிகட்டி எல்லாம் சொல்லவில்லை. செய்தியைச் சொல்ல ஆரம்பித்தவுடன் அரசர் அதைப் புறக்கணித்து விட்டு வேறு வேலைக்குப் போய்விட்டார்."

"நேரங்கெட்ட நேரத்தில் பேசிவிட்டார்களா."

"அப்படியல்ல. நேரம் தெரிந்துதான் பேசினார்கள்."

"பேசக்கூடாதவர்கள்தான் பேசிவிட்டார்களா."

"இல்லை யார் பேசவேண்டுமோ அவர்கள் பேசியும் பலனில்லாது போய்விட்டது."

"யார் பேசினார்கள்."

"பஞ்சவன்மாதேவி...

"போயிற்று... போ."

ஒரு அந்தணர் அலுத்துக் கொண்டார்.

"பஞ்சவன்மாதேவி சொல்லியே ஒரு விஷயம் எடுபட வில்லையென்றால் வேறு யார் சொல்லி எடுபடும். நமக்கு போறாத காலம் என்று சொன்னது சரிதான்."

முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டார்.

"முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டால் உங்கள் குலத்திற்கு நல்லது விளைந்து விடுமா. நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள். யோசிக்க வேண்டாமா."

"அதற்குத்தான் நீ வந்து விட்டாயே. என்ன செய்ய வேண்டுமென்று நீ சொல்ல விரும்புகின்றாய்."

"அயிரை இட்டு வரால் வாங்குவது என்று ஒரு பழமொழி உண்டு."

"எங்களுக்கு மீன்களைப்பற்றித் தெரியாது. நேரடியாகப் பேசுங்கள்."

இன்னொரு அந்தணர் வேகமாக வைணவதாசனைக் கேட்டார். வைணவதாசனுக்கு முகம் மாறவேயில்லை.

"அரசருக்குக் கொடுக்க உங்களிடம் எதுவுமே இல்லையா."

"எனக்குத் தெரிந்துவிட்டது. எனக்குத் தெரிந்து விட்டது." ஒரு அந்தணர் கூவினார்.

எல்வோரும் அவரைப் பார்த்தார்கள்.

"இந்த வைணவன் வரி கட்டவேண்டுமென்று சொல்வதற் காகவே இவ்வளவு தொலைவு குதிரையில் வந்திருக்கிறான்."

"அப்படியா... வரியா கட்ட லேண்டுமென்று சொல் கிறாய்."

எவ்லா அந்தணர்களும் பரபரத்தார்கள்.

பல தலைமுறைகளாக ஒரு நெல்மணி கூட அவர்கள் வரியாய் சக்ரவர்த்திக்கு, சோழதேசத்து அரசர்களுக்குச் செலுத்தியதில்லை. கோயில் பராமரிப்பு என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதைப் பராமரிக்க அதிக செலவில்லை. அதற்கு விடப்பட்ட நிலங்களெல்லாம்... இறையிலியாக, நிலந்தங்களாகத் தரப்பட்டவை. உழுகின்ற வேளாளர்களுக்குக் கூலி கொடுத்துவிட்டால் போதும், அந்தக் கூலியும் எவ்வளவு என்று அவர்களே முடிவு செய்வார்கள். கூலிகள் இடத்திற்குத் தகுந்தாற் போல் மாறுபடும்.

கிராமத்தைச் சுற்றிலும் லேளாளர்களுக்கும் விளை நிலங்கள் இருந்தன. அவைகளுக்கு அரசர் வரி விதித்திருந்தார். அதிகாரிகள் காத்திருந்து வரியை வாங்கிப் போவார்கள்.

நல்ல விளைச்சல் இருந்தபடியால் வரிவிதிப்பு பெரிய சுமையாகத் தெரியாமல் இருந்தது. வேறெங்கோ லேலைக்குப் போவதைவிட ஊரிலிருக்கும் அந்தண நிலங்களில் வேலை செய்வது சௌகரியமாக இருந்தது. கலப்பை பிடித்து மாடு பிடித்து, சேற்றில் கால் ஊன்றி இந்த அந்தணர்கள் உழ வில்லையே தவிர, விவசாயம் பற்றி சகல விதமான விஷயங் களும் அலர்களுக்கும் தெரிந்திருந்தன. மாடு சிலிர்ப்பதை வைத்து அது கர்ப்பமாக இருக்கிறது என்று சொன்னார்கள். செந்நெல்லை கட்டாந்தரையில் பரப்பி முகர்ந்து பார்த்து இதை எடுத்துக் கொண்டு போய் விதை என்று சொல் வார்கள். இந்த நெல் வேண்டாம், இதில் கன மில்லை என்பார்கள். கைக்கோலைச் சேற்றில் ஊன்றி உழுததுபோதும் என்பார்கள். மடை திறக்காதே... இரவு நல்ல மழை பெய்யும். நாற்றங்காலுக்குப் புன்னை மரத்து தழைகளை வெட்டிப் போட்டு பிரட்டிப்பிரட்டி உழுது வை. வேப்பம்புண்ணாக்கு போடு. பயிரைப் பூச்சியே தாக்காது என்பார்கள். வாழை பற்றியும், கரும்பு பற்றியும் பழத்தோட்டங்கள் பற்றியும்,

தென்னைகள் பற்றியும் அவர்களுக்குத் தெளிவான அறிவு இருந்தது.

வெய்யில் அதிகமாக இருக்கிறது. புழுக்கம் இரவில் மி குதியாக இருக்கிறது. பூச்சிகள் எம்பி எம்பிப் பறக்கின்றன. இன்னும் பன்னிரெண்டு நாழிகையில் மழைபெய்யும் என்று அடித்துச் சொல்வார்கள். ஒரு மேகம்கூட இல்லையே என்று வானம் பார்த்து வேளாளர்கள் பேச...

"தும்பிகளை வைத்துச் சொல்கிறேன். மேலே பார்க்காதே. ஒரு நகக்கணு வெல்லத்தைத் திண்ணையின் ஓரம் வை. எறும்புகள் இழுத்துக் கொண்டு போகின்ற வேகத்தைப்பார். இதை வைத்தும் சொல்கிறேன். கடலுக்கு நடுவே புயல் மையங்கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன். இரண்டு நாழிகையில் காற்று பலப்படும். காற்று பலத்தால் மேகங்கள் ஊருக்குள் நுழைந்துவிடும். நான் சொன்னது போலவே நெல் முனையளவும் பிசகாமல் நடைபெறும்."

அன்று இரவு மடை திறந்திருந்தால் பயிர்கள் சேதாற மாகியிருக்கும். எல்லா மடைகளையும் அழுத்தி சரியாக இருக்கிறதா என்று பார்த்து கற்கள் வைத்து கெட்டித்து விட்டு நடந்து வீட்டிற்குப் போக தூறல் ஆரம்பிக்கும். இரவு முழுவதும் கடும் மழை பெய்யும்.

மறுநாள் வேளாளர் குடியிருப்புக்கு அருகே வந்து அந்தணர் உரக்கக் கத்துவார்.

"நான் சொன்னபடியே நடந்தது பார்த்தாயா. மடை திறந்திருந்தால் என்ன கதி ஆகியிருக்கும். காற்றைக் கவனிக்கக் கற்றுக்கொள்." என்று சொல்வார். கற்றுத்தரமாட்டார்.

கந்தரசோழர் காலத்திலும், உத்தமசோழர் காலத்திலும் கர்வம் கொப்பளிக்கப் பேசிய அந்தணர்கள் இப்பொழுது மாறிவிட்டார்கள். மென்மையாகப் பேசுகிறார்கள். அருகே வந்து நலன் விசாரிக்கிறார்கள். மறவர் படைகளைக் கண் டால் ஜெயவிஜயீபவ என்கிறார்கள். அதேசமயம் விலகி யிருப்பதையும் மிகக் கவனமாகச் செய்கிறார்கள். அடுத்தபடி என்ன செய்வது என்று தடுமாறுகிறார்கள்.

வைணவதாசன் எல்லா அந்தணர்களையும் முகம் பார்த்து, அந்த முகங்களை ஞாபகத்தில் தேக்கி வைத்துக் கொண்டான்.

"வரியெல்லாம் தரச் சொல்லவில்லை. தரவும் வேண்டாம். நீங்கள் தந்தாலும் ஏற்பார்களா என்பது கேள்விக்குறி. அரசர் மிக முக்கியமான ஒரு பணியில் இருக்கிறார். கோயில் கட்டுகிற பணி. அதற்கு உங்கள் பங்கு என்ன."

"அற்புதமான பணிதான் யார் இல்லை என்று சொன்னது. அதற்கு எங்கள் மனப்பூர்வமான ஆசிர்வாதங்கள். சக்ரவர்த்தி குடியும் குடித்தனமுமாய் நீண்ட நாள் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து எல்லோருக்கும் நல்லது செய்து கொண்டிருக்க வேண்டுமென்று பிரார்த்தனைகள் உண்டு. இது போதாதா. நூறு அந்தணர்கள் சேர்ந்து இப்படிச் சொன்னால் இதைக்கேட்ட எவருக்கும் மனம் குளிர்ந்து விடுமே."

"போதாது என்று சொல்லிவிட்டால் என்ன செய்வீர்கள். அதற்கும் நீங்கள் தயாராக இருக்க வேண்டுமல்லவா. உங்கள் ஆசீர்வாதத்திற்கு அரைச் செப்புக்காசு சன்மானம் இரண்டு டிரண்டு பேராய் வந்து ஆளுக்குகொரு செப்புக்காசு வாங்கிப் போங்கள் என்று அரண்மனை சொல்லிவிட்டால் அப்படியே செய்து விடுவீர்களா."

"என்னய்யா செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்.

"கோயில் கட்டுவதற்கு உங்களுடைய ஒத்துழைப்பு என்ன விதத்தில் இருக்கிறது என்று மறுபடி மறுபடி யோசனை செய்யுங்கள். உருப்படியாய் ஏதேனும் செய்ய முன் வாருங்கள்."

"இல்லையெனில்...?"

"இல்லையெனில் மற்றவருக்குக் கிடைக்கின்ற சில சலுகைகள் உங்களுக்குக் கிடைக்காமல் போகும். உங்கள் வார்த்தை எடுபடாமல் போகும். உங்களுக்கு முக்கியத்துவம் இல்லாமல் போகும்."

"இது கடவுளுக்கே பொறுக்காது."

"அது பிற்பாடு வரவேண்டிய கதை, பிழைக்கின்ற வழியைப் பாருங்கள்."

"வைணவதாசரே சூட்சுமமாகப் பேசுகிறீர். இன்னது செய்ய வேண்டுமென்று உங்களுக்குத் தெரிந்திருக்கிறது. ஆனால், என்ன என்பதைச் சொல்ல மறுக்கிறீர்கள். தயவு செய்து சொல்லுங்கள் என்ன செய்ய வேண்டும்."

"அரசருக்கு ஒத்துழைப்பு...

"அட... அதைத்தான் திரும்பத் திரும்ப சொல்கிறீர்கள். என்ன விதமான ஒத்துழைப்பு. நான் கல்தூக்க வேண்டுமென்று நினைக்கிறீர்களா. என்னால் ஆகாது."

"இல்லை. உங்களைக் கல்தூக்கவோ, மரம் தூக்கலோ, கயிறு முறுக்கவோ சொல்லவில்லை."

"வேறு என்ன செய்யச் சொல்கிறீர்கள்."

"கோயில் கட்டும் பணியில் சம்பளப் பணம் போடுவார்கள். செலவுக் கணக்கு எழுதி வைப்பார்கள். எத்தனை கருவிகள் இருக்கின்றன. எத்தனை கருவிகள் இல்லை என்று கணக்கு எடுப்பார்கள். எத்தனை கற்கள் வந்தன. எத்தனை கற்கள் உடைந்தன. எத்தனை கற்கள் கோவில் ஏறின என்று பார்ப்பார்கள். இதற்கு ஒரு கணக்கு இருக்க வேண்டுமல்லவா."

"சரி புரிகிறது."

"இந்தக் கணக்கு எழுதும் பணியை நீங்கள் எடுத்துக் கொண்டால் என்ன."

வைணவதாசன் சொன்னதும் அங்கு ஒரு நிசப்தம் பரவியது.

"செய்யலாமே."

ஒரு அந்தணர் ஆரம்பித்தார்.

"கூடாது"

இன்னொரு அந்தணர் தடுத்தார்.

"நம்முடைய வேலை வேதம் படிப்பது, அது எளிதல்ல. சாதாரண வேலையல்ல. அதற்கு மிகுந்த கவனமும், பொறுமையும், நேரமும், உழைப்பும், புத்திசாலித்தனமும் தேவை. நம்முடைய புத்திவலிமை, உடம்பு வலிமை வேறு விதத்தில் செலவழித்துக்கொண்டிருக்கக்கூடாது வேதம் படித்தலைத் தவிர வேறு வேலை எனக்கு இல்லை. அப்படித்தான் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கணக்கு எழுதும் வேலைகளைச் செய்து கொண்டிருந்தோமானால் நம்மால் வேதம் படிக்க முடியாது போகும்."

"அப்படியா... கலம் கலமாக வேளாளர்களிடமிருந்து நெல் வாங்குகிறீர்களே... கணக்கு வைத்துக்கொண்டு வாங்குகிறீர்களா. இல்லாமல் வாங்குகிறீர்களா என்று கேள்வி வரும்."

"என்ன மிரட்டுகிறீர்கள் வைணவதாஸரே."

"இல்லை மிரட்டவில்லை. உங்களிடமிருந்து எந்த விதத்திலும் ஒத்துழைப்பு இல்லை என்கிற போது ஒரு அலுப்பும், சலிப்பும், உங்களால் தீங்குதான் அதிகம் என்ற பெயரும் ஏற்பட்டுவிடும். எனவே எனக்குத் தோன்றியதைச் சொன்னேன்."

"கணக்கு எழுதுதல் என்பது மிகப்பெரிய பணியா."

"இல்லை. காலை ஒரு நாழிகை, மாலை ஒரு நாழிகை நீங்கள் ஓலைகளுடன் அலைந்து குறிப்பெடுத்துக் கொண்டால் போதும். மற்றபடிக்கு உங்களுடைய வேதம் படித்தலைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கலாம்."

"சிற்பிகளோடும் மறவர்களோடும் பழக வேண்டியிருக்குமே."

"ஏன் எந்த மனிதரோடும் பழகக்கூடாது என்ற சங்கல்பம் உண்டா. உங்கள் வீட்டுத் திண்ணையை நீங்களே கட்டிக் கொண்டீர்களா. நடு முற்றத்தை நீங்களே இழைத்துக் கொண்டீர்களா அல்லது மறவர்கள் இல்லாமல் சோழ சாம்ராஜ்ஜியம் உங்களால் மட்டுமே சிறந்து விளங்கிவிட்டது என்று நினைக்கிறீர்களா? அயிரை இட்டு வரால் வாங்குவது சொன்னேனே அதைத்தான் செய்து கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுது அதையும் செய்ய மறுத்தால் என்னவாகும் என்று யோசித்து விடுங்கள். இவ்வளவு உட்கார்ந்து பேசியதற்கு நீர் மோராவது தரலாம். அப்படியொரு எண்ணமே இங்கு ஒருவருக்கும் இல்லை."

வைணவதாசன் குதிரையில் ஏறி உட்கார எதிர் வீட்டிலிருந்து ஒரு சொம்பு நிறைய நீர்மோர் கொண்டு வந்து கொடுக்கப்பட்டது. ஓலை தொன்னையில் இனிப்புப்பட்சணங்கள் தரப்பட்டன. தேன்குழலை வெல்லக்குழம்பில் நனைத்து நொறுக்கி வைத்திருந்தார்கள்.

வைணவதாசன் வாங்கிக்கொண்டு வந்தனம் சொன்னான். குதிரையை மெல்லத் திருப்பி நடந்தான்.

முதுகுக்குக் கீழே இடுப்புப்பக்கம் ஒரு கட்டாரி சொருகி யிருந்ததை பவரும் கவனித்தார்கள்.

"கொலைக்காரப்பாவி என்னமாய் இருக்கிறான்."

"ஏன் அப்படிப் பேசுகிறீர்கள். என்ன கொலை செய்தார் அவர்."

"இடுப்பில் கட்டாரி லைத்துக் கொள்கிறவன் முகத்தைச் சொரிந்து கொள்ளலா லைத்திருப்பான். எங்கேனும் கொலை செய்யத்தானே இது. கொலைக் கருவியை வைத்திருப்ப வனைக் கொலைக்காரப்பாவி என்று சொன்னால் தவறா."

இன்னொரு அந்தணர் சண்டைக்கு வர, மறுபடியும் அங்கு நிசப்தம் நிலவியது.

"நம்முடைய வேலை கணக்கு எழுதுதவ் இல்லை."


வயதான சில அந்தணர்கள் சொன்னார்கள்.

ஆனால், பிரச்சனை எந்தத் திக்கிலிருந்து வரும் எல்வ ளவு வேகமாக வரும் என்று எந்த மனிதராலும் அனு மானிக்க முடியாது. புத்தியினுடைய வலிவு உடம்பின் வலிவைப் போல ஒரு அளவுக்குட்பட்ட விஷயம்தான். யோசனை செய்ய முடியாத சிவ கோணங்களிலிருந்து பிரச்சினைகள் வந்து தாக்குவதும் வழக்கம்.

குடந்தை, தஞ்சை அந்தணர்களையும் அப்படியொரு பிரச்சினை தாக்கிற்று.

# 133

திருமுனைப்பாடி நாட்டிலிருந்து வந்த ஐநூறு அந்தணப் பிள்ளைகளும் அந்த அக்ரஹாரத்தில் அமைதியாய் நின்று கொண்டிருந்தார்கள். ஐநூறுபேறுமே வெறும் கோமணத்தோடு இருந்தார்கள்.



மார்பில் முப்புரிநூல் மஞ்சள் நிறத்தில் அழுக்கடைந்து காணப்பட்டது. குடந்தையில் உணவு கொடுத்து உபசரித்தது போல தஞ்சையிலுள்ள அந்தணர்கள் செய்யவில்லை. முதல் நாள் வந்து பெரிது பெரிதாய், பெயருக்கு ஏதோ சோறு போட்டார்கள். ஐநூற்று சொச்சம் பேர் உட்கார்ந்தாலும் ஐம்பது பேருக்குத்தான் பிரண்டை துகையல் இருந்தது. மீதி உள்ளவர் களுக்கு வெறும் சோறும் மோரும் கலந்து எந்தவித லெஞ்சனங் களும் இல்லாமல் உணவெடுத்துக் கொண்டார்கள். பாராட்ட வேண்டாம் என்று பெரியவர் சொல்ல, மிக அமைதியாக அந்த உணவை ஏற்றுக் கொண்டார்கள். அன்னதாதா சுகிபவா என்று வாழ்த்து சொன்னார்கள்.

எதற்கு தஞ்சை வந்திருக்கிறீர்கள் என்று கேட்ட போது பிழைப்பு தேடி என்று சொன்னார்கள். ஏன் நாங்களெல்லாம் இங்கு பிழைக்க வேண்டாம் என்று முடிவு கட்டி விட்டீர்களா என்று தஞ்சை அந்தணர்கள் சீற, அவர்கள் வாயடைத்து நின்றார்கள்.

"தஞ்சையில் அந்தணர்களுக்கு நல்ல மரியாதை இருப்ப தாகச் சொல்லப்பட்டதே."

அந்த மத்திம வயதுக்காரர் கேட்க, "ஏன்... அதைக் கெடுத்து விட வேண்டும் என்று கங்கணத்தோடு இங்கு வந்திருக்கிறீர்களா."

"தஞ்சை வளமான பூமியல்லவா. நெற்களஞ்சியம் அல்லவா."

மறுபடியும் அந்த மத்திம வயது அந்தணர் சொல்ல, தொடை தட்டி தஞ்சை அந்தணர்கள் சிரித்தார்கள்.

"என்ன... நீங்களெல்லாம் கம்பங்காட்டிலிருந்து வருகிறீர் களா. திருமுனைப்பாடிக்கு என்ன கேடு. திருமயிலைக்கும், திருவஹிதாயத்திற்கும் என்ன கேடு. அங்கும் விளைச்சல் உண்டல்லவா. அங்கும் கிழக்கு பார்த்து நிற்க வைத்து கலம் அளக்கிறார்களல்லவா."

"செய்கிறார்கள். ஆனால் இங்குள்ளது போல் அங்கு விளைச்சல் இல்லை. மூன்று போகப் பயிரில்லை."

"மூன்று போகம் என்று எவன் சொன்னது. இரண்டு போகப் பயிர்தான். ஒருபோகம் பச்சைப்பயிறோ, துவரையோ, உளுந்தோ போடுகிறார்கள். இந்த விளைச்சல் எங்களுக்குப் போதும், ஆனால் நீங்கள் வந்திருக்கும் காலம் தவறானது. தஞ்சை எல்லைக்குள்

கவ்தூக்க பத்தாயிரம் அன்னிய தேசத்து வீரர்கள் லந்திருக் கிறார்கள். அவர்களை என்ன மண்ணா தின்னச் சொல்வ முடியும். சோறுதானே போட வேண்டும். இரண்டு உழக்கு அரிசி ஒரு வேளைக்கு ஒரு ஆள் சாப்பிடுகிறான். அதைத்தவிர மாமி சம் இன்னும் இத்யாதி.. இத்யாதி.. இந்நேரம் வந்து சோழநாடு சோறுடைத்து என்றால் வாயில்தான் போட வேண்டும்."

"இப்பொழுது எங்களை என்ன செய்யச் சொல்கிறீர்கள்."

தொண்டை நாட்டு அந்தணர் பரிதாபமாகக் கேட்டார்.

"உங்கள் தொண்டை நாட்டிற்கே போய் விடுங்கள்."

"இவர்களுக்கு வேட்டி வேண்டுமே, ஏதேனும் பழைய வேட்டி கொடுக்கக்கூடாதா."

"கூடாது தவறு. என்னிடம் புது வேட்டிகள் இல்லை. உத்தம சோழர் காலத்தில் வருடத்திற்கு ஆறேழு வேட்டிகள் வாங்கி விடுவோம். வேட்டியும், இடுப்புப் பட்டும் கொடுப்பார்கள். இப்பொழுது மேல்துணி கிடைப்பதே மிக்க கடினமாக இருக்கிறது. என் வீட்டில் என் பிள்ளைகளுக்கே கோமணம்தான் ஆடை. இப்படியிருக்க இவர்கள் வந்து நின்றால் என்ன செய்வது."

"இவர்கள் வேட்டியோடு வந்தவர்கள்தான். யாரோ உருவிக் கொண்டு ஓடிவிட்டார்கள்."

"இது சகஜமாக நடக்கிறதப்பா. இந்தத் தஞ்சையில் இப் போதைக்கு வேட்டிதான் மிக அரிதான விஷயமாக இருக்கிறது. ஒரு தார் வாழைப்பழம் திண்ணையில் வைத்துவிட்டுப் போனால் ஒருவரும் சீந்த மாட்டேன் என்கிறார்கள். கத்தரிக்காய் வாங்கிக் கொள்ளேன். வீட்டிற்குப் போய் கூட்டு வைத்துக்கொள் என்று ஒரு கூடைகாய் நீட்டினால் உன் தலையைச் சுற்றிப் போட்டு தெருவில் போடு, எனக்கு எதற்கு என்று சொல்கிறான். உணவு வகைகளுக்கு எந்தக் குறையும் இல்லை. உடைகளுக்குத் தான் பஞ்சம் வந்துவிட்டது. நிலம் அளந்து நீர்ப்பாய்ச்சி நெல் வயல்களை அதிகம் செய்து விட்டார்கள். தறிகளைப் பெருக்க வேண்டுமென்று யாருக்காவது தெரிந்ததா. தெரியவில்லை. இவ்விஷயம் வெகுநாட்கள் முன்பே எங்களுக்குச் சொல்லப்பட்டு விட்டது. எனவே, வேட்டிகளைப் பத்திரப்படுத்த ஆரம்பித்து விட்டோம். நன்கு கிழியும் வரை வேட்டியை உடுத்திவிட்டு பிறகுதான் புதுவேட்டிக்குப் போகிறோம். எனவே வேட்டிகள் கொடுக்க இயலாது. அதுவும் தவிர, நீங்கள் வந்து வெகுநாட் களாகி விட்டது. தஞ்சையிலேயே குடியிருந்தால் எங்களுக்குத்

தான் அலமானம். இப்பொழுதே உங்கள் மாணவர்கள் பவர் வைசியர் வீட்டில் அரிசி வாங்கி அங்கேயே பொங்கித் தின்ன ஆரம்பித்துவிட்டார்கள். அது இன்னும் மிகப் பெரிய அவமானம். எனவே, நல்ல நாள் பார்த்து, வடக்கே சூலமில்லாத நாளாய்த் தேர்ந்தெடுத்து. நல்ல ஹோரை பார்த்து உங்களுடைய ஊர்களுக்குப் போய்ச் சேருங்கள். அப்படிப் போகவில்லை என்றால், உங்கள் மீது திருட்டுக் குற்றம் சுமத்தும்படி நேரிடும்."

ஒரு அந்தணர் உரத்துச் சொல்ல, மற்ற அந்தணர்கள் மௌனமாக அவரைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தெருவில் நின்றிருந்த திருமுனைப்பாடி அந்தணச் சிறுவர்களும் அவர்களை அழைத்து லந்த தொண்டை நாட்டு அந்தணர்களும் மனம் வெதும்பிப் போய் மெல்ல அந்த அந்தணர் கிராமம் விட்டு நகர்ந்து ஊரின் எல்லையிலுள்ள ஆல மரத்தடியில் சோகமாய் உட்கார்ந்தார்கள்.

"சோழதேசம் மிக அற்புதமான இடம் என்று வந்தோமே, இப்படி உடையில்லாமல், உணவில்லாமல் துரத்துகிறார்களே என்ன செய்வது. இங்கேயே இருப்பதா அல்லது தொண்டநாடு போலதா."

"இல்லை. என்னால் போக முடியாது. ஒரு நம்பிக்கையோடு வந்தேன். அந்த நம்பிக்கைதான் என்னை இங்கு அழைத்து வந்தது. அந்த நம்பிக்கை சிதைந்து போய், தோல்வியுற்றவனாய் தொண்டைநாடு போக வேண்டுமென்றால் என் உயிர் பாதியி லேயே பறந்துவிடும். அந்தக் கருவேலங்காடுகளை என்னால் இனி தாண்ட முடியும் என்று தோன்றவில்லை. ஒருவேளை தஞ்சையில் இடமில்லையெனில் நான் இன்னும் தெற்கே பயண மாவேன்."

"தஞ்சை அந்தணர்கள் திரும்பத்திரும்ப சக்ரவர்த்தியைச் சந்திப்பது பற்றிச் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். உரத்துப் பேசுகிறார்கள். நாமெல்லோரும் ஒன்று சேர்ந்து சக்ரவர்த்தியைப் பார்த்தால் என்ன."

"இல்லை, அது ஏதேனும் பேராபத்தாக முடிந்தால்...

"இது என்ன கருவேலங்காட்டிற்குள் நடந்து போக முடியாது. செத்துப் போவேன் என்கிறாய். சக்ரவர்த்தியையும் சந்திக்க மறுக்கிறாய். ஏதாவது ஒரு பக்கம் நீ நகரவேண்டாமா."

அவர்கள் விவாதம் செய்தார்கள். தீவிரமாய் யோசித்தார்கள்.

நிச்சயம் சக்ரவர்த்தியைப் பார்க்கலாம் என்றார்கள்.

சக்ரவர்த்தியைப் பார்க்கும்போது கோமணத்தோடா போவது. இடுப்பில் துண்டாவது இருந்தால் நன்றாக இருக்குமே என்று கவலைப்பட்டார்கள்.

மத்திய வயதுள்ள அவர்கள் தலைவர் உரக்கச் சொன்னார்.

“இல்லை கோமணத்தோடேயே போவோம். ஏன் இப்படி இருக்கிறீர்கள் என்று கேட்டால் துணி இல்லை என்று சொல்வோம்.”

“எப்போது சந்திப்பது?”

“வளர்பிறை வரட்டும். சஷ்டியிலோ அல்லது சப்தமியிலோ சந்திக்கலாம். சப்தமி வியாழக்கிழமை நல்ல நாள். நல்ல ஹோரை பார்த்துச் சந்திப்போம். அல்லது சுக்கிரஹோரையில் அவரைப் பார்த்துப் பேசுவோம்.” வேகமாகக் கணக்குப் போட்டார்கள். தஞ்சையின் புறம்படியிலுள்ள திடலில் உட்கார்ந்து அபிப்ராயங் களைப் பரிமாறிக் கொண்டார்கள். பிறகு மெல்ல எழுந்து கோட்டைக் காலவர்களுக்கு முகமன் சொல்லி கோட்டைக்குள் நுழைந்து உள்ளாலைக்குள் நகர்ந்தார்கள். அங்குள்ள வீடுகளின் முன்பு ஸ்ரீஸுக்தம் சொன்னார்கள். காய்களும், பழங்களும் கிடைத்தன. யாரோ ஒரு வீட்டில் நிறைய தானியங்கள் கொடுத்தார்கள். கொண்டு வந்து ஒட்டுமொத்தமாக வைத்து, தங்களிடமுள்ள காசுகளுக்குக் கூடுதலாக தானியம் வாங்கி, சிறிய பானைகளில் காய்களை நறுக்கிப்போட்டு, அடுப்பு எரிய அரிசியையும் கொதித்து வைத்து, சோறு பொங்க வைத்தார்கள், சோறு பொங்கும் வரை ருத்ரம் சொன்னார்கள்.

ஊர் அடங்கியதும் வாழையிலைகளை ஏந்திக் கொள்ள பானையிலிருந்த சுதம்பசாதம் பரிமாறப் பட்டது. சிறுசிறு குழுக்களாகப் பிரிந்துபோய் மரத்தடியிலும், வீட்டுத் திண்ணை களிலும், கோவில் மண்டபங்களிலும் அயர்ந்து படுத்துத் தூங்கினார்கள்.

நடுநிசி நேரத்தில் ஊரைச் சுற்றி வந்த ஊர்க்காவல் படை யினர் ஐநூறுக்கு மேற்பட்ட அந்தணர்கள், அங்கங்கே கிடைத்த இடத்தில் தூங்குவதாகவும், பொங்கி உண்பதாகவும், சேனாதிபதியான கிருஷ்ணன் ராமன் என்கிற பிரம்மராயருக்குத் தகவல் சொன்னார்கள். உறங்கப் போகலாம் என்று அப்பாவும், பிள்ளையும் துண்டு உதறி எழுந்தபோது இந்தச் செய்தி வந்தது.

அருண்மொழிப்பட்டன் திகைத்தான். என்ன வயதிருக்கும் என்று கேட்டான்.

கோட்டைக்காவலர்கள் பத்திலிருந்து இருபது வயதுக்குள் அனேகம் பேர் இருக்கிறார்கள். பார்ப்பதற்கு சோர்வாக இருக்கிறார்கள். அவர்கள் எதிர்பார்த்த அளவிற்குத் தஞ்சை அந்தணர்கள் அவர்களைப் பராமரிக்கவில்லை என்ற வேதனையில் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

அருண்மொழிப்பட்டன் திரும்பி தகப்பனாரைப் பார்த்தான்.

"அந்த இளைஞர்களை நாம் கணக்கு எழுத உபயோகப் படுத்திக் கொண்டால் என்ன."

பிரம்மராயர் மௌனமாக இருந்தார்.

"உபயோகப்படுத்திக்கொள்ளவாம். ஆனால், அவர்களுடைய ஊர் சோழதேசம் இல்லை. தொண்டை நாடு."

"இருந்தால் என்ன. அது நம்முடைய சாம்ராஜ்ஜியத்திற்கு உட்பட்ட பகுதிதானே. நம்முடைய புலிக்கொடிதானே அங்கு பறக்கிறது."

"இருக்கலாம். வேலை செய்துவிட்டு தன்னுடைய ஊருக்குப் போகவேண்டுமென்று ஆவல் உள்ளவர்களை இவ்வளவு பொறுப்பான வேலையில் அமர்த்த வேண்டுமா என்றுதான் கேள்வி."

"தஞ்சை அந்தணர்கள் மறுத்துவிட்டால், இவர்களை உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று தான் கேட்டேன்."

"இதுவரை தஞ்சை அந்தணர்கள் மறுக்கவில்லை. அருண்மொழி, நீயாக எதையும் கிளறிவிடாதே. ஏற்கனவே அவர்கள் வாயால் கெட்டுப் போனவர்கள். நாமும் தேவையில்லாமல் ஏறி மிதிக்க வேண்டாம்."

"வைணவதாசனை இவர்களிடம் பேசச் சொன்னால் என்ன."

"பேசவாம் வைணவதாசன் இவர்களிடம் இருப்பிடம் எது என்று விசாரித்திருக்கிறான். எனவே என்னைப் பார்க்க வந்தாலும் வருவான்."

"நாளை காலை நான் அவர்களைப் பார்த்து வரவா."

"அது அதிகம் என்று தோன்றியது."

"தங்க இடமில்லாமல் சிரமப்படுகிறார்களாமே. பத்து இருபது என்றால் நமது வீட்டில் தங்க வைத்துவிடலாம். ஐநூறு பேர். எங்கு தங்க வைப்பது. திருவல்லம் கோட்டையில் பல கட்டடங்கள் வெறுமே பூட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. அங்குள்ளவர்கள் தஞ்சைப் பக்கம் குடி புகுந்துவிட்டார்கள்."

"இல்லை. எனக்கு விருப்பமில்லை. வேறு இடம் சொல்."

"அந்த ஐநூறு பேர்களையும் ஐந்தாகப் பிரித்துவிட்டால்."

"அவர்களே பிரிந்துதான் இருப்பார்கள். பத்தாகப் பிரித்துப்போடு."

"சரி. இன்று நான் முழுவதும் உற்சாகமாயிருந்தேன். சட்டென்று ஏனோ கஷ்டமாகி விட்டது. தஞ்சையைப் பற்றிக் கவலை வந்துவிட்டது."

"இன்னும் இருக்கிறது அருண்மொழி. மக்கள் வந்து குவியப்போகிறார்கள். எங்கிருந்து தானியங்கள் கொண்டு வரப்போகிறோம் என்று புரியவில்லை. அரிசி சிறிதும் மாமிசம் பெரிதுமாய் உணவு நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் ஜனங்கள் வருகிற வேகத்தைப் பார்த்தால் இந்த ஆடுகள் எவ்வளவு தூரம் தாக்குப்பிடிக்கும் என்பது தெரியவில்லை. ஆட்டு மந்தைகள் கரைந்து காணாமல் போய்விடுமோ என்று பயமாக இருக்கிறது.

இன்னும் இரண்டு வருடங்களுக்கு உணவு தட்டுப்பாடு இராது. அதற்குப்பிறகு வரலாம். நாம் ஏதேனும் செய்தாக வேண்டும். வானம் பொய்க்காமல் இருக்க வேண்டும். வானம் பொய்க்காமல் இருந்தால்தான் நடுநாட்டிலிருந்தும், திருமுனைப் பாடி நாட்டிலிருந்தும், தொண்டை நாட்டிலிருந்தும் தானியம் வரவு நன்றாக இருக்கும். தானியங்கள் மட்டும் போதாது. ஆடுகள் வேண்டும். இதற்காகவே ஒரு படையெடுப்பு நடத்தும்படியாக இருக்குமென்று எனக்குத் தோன்றுகிறது."

"மீண்டும் யுத்தமா."

"வெகு நிச்சயம். வெகு நிச்சயம் யுத்தம் வரும்."

"எந்த திசையில் யுத்தம் நடக்கும்."

"நீயே யோசித்துப் பார். பாண்டிய தேசத்தில் நம்முடைய ஆட்சி நடக்கிறது. அங்கு போய் கொள்ளையடிக்கலா முடியும். அவர்கள் உணவுக்கே தட்டுப்பாடு இருக்கிறது. நடுநாடும்,

திருமுனைப்பாடியும், இருக்கிறது. நடுநாடும், திருமுனைப் பாடியும், தொண்டைநாடும் நம்முடைய சாம்ராஜ்ஜியத்தில் அடக்கமானவை. அவைகளைப் போஷிப்பது நம்முடைய வேலை. சேர தேசத்தில் நமக்கு எதிரிகள் உண்டெனினும் அங்கு ஆடுகள் இல்லை. காடுகள் நிறைந்த இடத்திற்குப் போய் என்ன கொண்டு வருவது. சந்தன மரம் நெஞ்சை நிறைக்க வைக்கும். வயிற்றை நிறைக்குமா. எனவே...

“எனவே..”

“கங்க தேசத்தின் வழியாக மேலைச் சாளுக்கியத்தைத் தவிர நமக்கு வேறு வழியில்லை.”

“புரிகிறது தந்தையே, எப்பொழுது யுத்தம் வருமென்று சொல்கிறீர்கள்.”

“என்னுடைய கணக்குப்படி இன்னும் இரண்டு மூன்று வருடங்கள் பொறுத்து..”

“இதற்கு வேறு ஏதேனும் காரணம் இருக்குமா தந்தையே.”

“இருக்கும்.”

“என்ன.”

“இங்கே வேறு எவர் அமைதியாக இருந்தாலும் மேலைச் சாளுக்கியர்கள் அமைதியாக இருக்க மாட்டார்கள். கங்கர்களைத் தூண்டிவிடுவார்கள். ராஷ்டிரகூடர்களோடு கை கோர்த்துக் கொள்வார்கள். கீழச்சாளுக்கியத்திற்குத் தூதுவிட்டு அங்கிருந்தும் ஆட்களைச் சேர்ப்பார்கள். ஒட்டு மொத்தமாய் ஆட்களைத் தாக்குவதற்கோ அல்லது பாதுகாத்துக் கொள்வதற்கோ பெரும் முயற்சிகள் செய்யலாம்.”

“யுத்தமில்லாது இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஏதும் வழியில்லையா.”

“என்னுடைய புத்திக்கு எட்டிய வரை எந்த வழியும் இல்லை. கோயில் வளர வளர நாம் யுத்தத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதே பலரும் அறியாத உண்மை. இதைச் சமாதானக் காலமென்று எவர் சொன்னாலும் வாய்விட்டுச் சிரிக்கலாம்.”

“தந்தையே... நீங்கள் மட்டும் வேறுவிதமாய் சிந்திக்க, நிதர்சனத்தில் இருக்க எப்படிக் கற்றீர்கள். எந்த வயதில் கற்றீர்கள்.”

மகன் தந்தைக்கருகே போய் அவர் புஜத்தை ஆதரவோடு பிடித்துக் கொண்டான். கொஞ்சலோடு கேள்வி கேட்டான்.

தந்தை வயிற்றிலிருந்து மிகுந்த கருணை பொங்க, அந்தக் கருணையைக் கண்ணில் தேக்கி மகனை வாஞ்சையோடு பார்த்தார்.

"இது தேவியின் அனுக்கிரகம். நமது ஊரான அமண்குடி துர்க்கையின் ஆசீர்வாதம். ஒட்டப்பிடாரத்திலிருந்து வந்த அந்தணர்கள் நாம். ஒட்டப்பிடாரம் கூட நமது ஊரல்ல, இன்னும் வடக்கே தள்ளி இமயமலைச் சரிவில் வருடம் முழுவதும் மழை பெய்யும் காடுகளுக்கு நடுவே உள்ள இடத்திலிருந்து வந்தவர்கள். தட்சனுடைய யாகத்தில் தன் தேவியான அம்பாளை சிவபெருமான் பல துண்டங்களாக வெட்டி எறிய, அதில் தொப்புள் விழுந்த இடம் காஞ்சிபுரம். யோனி விழுந்த இடம் நமது மூதாதையர் நகரம். காமாக்யா என்று அந்த இடத்திற்குப் பெயர். சாக்த உபாசகம் என்பது நமக்குப் பரம்பரையாக வந்த விஷயம். அங்கிருந்து நகர்ந்து ஒட்டப்பிடாரம் வந்ததால் ஜெகன்னாதம் என்கிற விஷ்ணு அம்சத்தை வணங்கி நாம் வைணவர்களானோம். ஆனால் சாக்தனுக்குச் சைவ வைஷ்ணவ பேதம் இல்லை. எல்லாம் சக்தி ரூபம் என்று சொல்பவன். இந்தச் சாக்த உபாசகத்தைக் கைக்கொண்டவன், ஞாபக சக்தி உள்ளவனாகவும், வருங்காலம் உரைப்பவனாகவும் மாறி விடுகிறான். அவன் உள்ளுணர்வு பெருத்து பெருஞ்செடியாய் வளர்ந்து தினந்தோறும் மலர்களை மலர்விக்கிறது.

இது நான் கொண்டு வந்த சொத்தல்ல. நம் மூதாதையர் சொத்து. நமது ரத்தத்தில் ஊறியது. உன் உடம்பிலும் உன் புத்தியிலும் இந்த சூட்சுமம்தான் இருக்கிறது. இந்தச் சாக்த உபாசகத்தில் ஈடுபடுவதால் தான் நம் மத்திம வயதில் சற்று உடல் பருமனாக கண்கள் தெறிந்து விழுகின்றன அழகனாக, கூர்மையான மூக்கும், அகலமான நெற்றியும் உடையவனாக உள்ளங்கைகள் மிருதுவானவையாக இருப்பவனாக மாறிவிடு கிறோம். கட்டுடலும் தளர்ந்து வேறுவிதமாக மாறும். மாற சாக்த உபாசகத்தில் நீ கிளர்ந்து வந்து கொண்டிருக்கிறாய் என்று அர்த்தம்.

சாக்த உபாசகத்தில் தன்னை ஆழ்ந்து ஈடுபடுத்திக் கொண்டவர்களுக்கு அதாவது தங்களை அதில் வெறியாய் ஈடுபடுத்திக் கொண்ட ஆண்களுக்கு, பெண்களைப் போல மார்பகங்கள் வளர்வதையும் கவனித்திருக்கிறேன். வெளியே என்ன நடக்கிறது.

என்பதை உணர்வதற்கும், இனி என்ன நடக்கும் என்பதை உணர்வதற்கும் வெறும் புத்திசாலித்தனம் மட்டும் போதாது. வேறு ஏதோ ஒரு அகவிழிப்பு வேண்டும்."

"உங்கள் பேச்சு ஆச்சரியமாக இருக்கிறது. எனக்கும் அது வரும் என்று நீங்கள் சொல்வது இன்னும் வியப்பாக இருக்கிறது. இந்த விஷயம் அகவிழிப்பு மூலம் உங்களுக்கு... வேறு ஏதாவது உங்களுக்குத் தோன்றியிருக்கிறதா, இளவரசர் இராஜேந்திரருடைய எதிர்காலம் எப்படி இருக்கும்."

"அமோகமாக இருக்கும். சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரை விட ஒரு படி அதிகம் உயரமாக நிச்சயம் இருப்பார். அவரைப்போலவே கற்றளியும் எழுப்புவார். மிகப்பெரிய வீரராக சூரியர் சந்திரர் உள்ளவரை போற்றப்படுகின்ற அரசராகத் திகழ்வார்."

"அவர் ஆயுசு எப்படி."

"தீர்க்காயுசு."

"சக்ரவர்த்தியைப் பற்றிச் சொல்லுங்கள்."

"அவரும் நல்ல ஆயுள் உள்ளவர். நிறைந்த வாழ்க்கை வாழ்பவர்தான். சரித்திரத்தில் அழியாத புகழைப் பெற்றவர்தான்."

"சோழ தேசத்தின் வளர்ச்சி எப்படியிருக்கும்."

"எது வளர்ந்ததோ அது அழியும். ஆனால், சோழ தேசத்திற்கு இப்போதைக்கு எந்த அழிவும் இல்லை. அது கிடக்கிறது வெகு தொலைவில் நூறு வருடங்கள் போன பிறகுதான் சரிவின் எல்லை தெரியும்."

"வடக்கே இமயமலையில் ஒரு சந்து கண்டு பிடித்து அந்த மலைச்சந்து வழியாக யவனர்கள் உள்ளே வந்துவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறதே."

"வெகுகாலம் முன்பே வந்து விட்டார்கள். ஒவ்வொரு தலைமுறையிலும் பரத கண்டத்தை வந்து அடைவது அவர்களில் பலருக்கு வீரதீரச் செயலாக இருக்கிறது. பாலைவனத்து யவனர்களின் கண்ணுக்கு பரதக் கண்டத்தின் பசுமை மிகப்பெரிய தாபத்தைக் கொடுத்திருக்கிறது."

"அந்த யவனர்கள் இங்கும் வருவார்களா தந்தையே."

"வருவார்களப்பா. வருவார்கள்."

அருண்மொழி திகைத்தான். அவனுக்கு தஞ்சாவூர் பரஞ் சோதியின் மீது ஏனோ மெல்லியதாய் ஒரு கோபம் வந்தது.


தந்தை இரண்டாம் கட்டுக்கு நகர, முதற்கட்டிலுள்ள தன்னுடைய அறையைத் திறந்து அருண்மொழி சம்மணமிட்டு அமர்ந்து கொண்டான். ஆழமாய் இழுத்து சுவாசித்தான். அமர்ந்தபடியே மூளையைத் தூங்கு என்று கட்டளையிட்டான்.

எல்லாச் செயல்களையும் மூளை நிறுத்தியது. உறக்கம் போலும் ஒரு அமைதி அவனைத் தழுவியது. உறங்குகின்றேன் என்ற நினைப்பில் அவன் அமிழ்ந்து கிடந்தான். இது ஒருவித மான உறக்கம். இதற்கு அறிதுயில் என்று பெயர். அறிந்து தூங்கு வதுதான் அறிதுயில்.

விடிந்து வெளிச்சம் பரவும் நேரத்தில் எழுந்து நின்றான். அவனுடைய முதல் நினைப்பு திருமுனைப்பாடி தொண்டை நாட்டு அந்தண இளைஞர்கள் பற்றியதாகத்தான் இருந்தது.

# 134

இந்த வருடம் அவ்வப்போது மழை பெய்து கொண்டுதான் இருக்கிறது. வானத்தைப் பார்த்தால் வேலை செய்ய முடியாது. மண்ணைப் பார்க்க வேண்டும். ஈரத்தால் மண் இளகியிருக்கிறது. அஸ்திவாரங்கள் தோண்டுவது எளிது.



இப்படி களிமண் சுற்றுப்பாதை அமைத்து விமானம் எழுப்பப்பட்டது.

பெருந்தச்சருக்குக் கீழே பணிபுரியும் ஒரு கட்டடச் சிற்பி தனக்கு அளிக்கப்பட்ட கங்க இளைஞர்களிடம் பேசினான். அந்த வீரர்கள் விரைவாகப் பள்ளம் தோண்டினார்கள். செங்கல் சூளைகளுக்காக மண் சலித்து எடுக்கப்பட்டு, குழைக் கப்பட்டு, அடுக்கப்பட்டது. ஓவ் வொரு கல்லும் இரண்டு உள்ளங்கை அகலம் இருந்தது. ஆறு உள்ளங்கை நீளம் இருந்தது.

குணசீலன் எல்லா இடத் திற்கும் போய் வேலை பார்த்து வந்தான். மெல்லிய தட்டோடுகள்

வைக்கும் போது தட்டோடுகளின் ஒரு பக்கம் மேல் வளைவும், இன்னொரு பக்கம் கீழ் வளைவுமாக இரண்டு வளைவுகளும் வைத்தான். ஒரு வளைவில் ஆரம்பித்து தட்டோடு நீண்டு பிறகு அந்த வளைவு கீழ் வளைவாகத் திரும்பி களிமண்ணால் செய்யப் பட்டது. அடுக்கப்பட்டது. தீமூட்டி வைக்கப்பட்டது. ஓடுகள் வெந்து எடுக்கப்பட்டவுடன் பெருந்தச்சரிடம் போய் ஒவ்வொரு வளைவு ஓட்டையும் இணைத்துக்காட்ட அது மிக அழகாகப் பொருந்தியிருப்பதும். உள்ளுக்குள் நீரே வராத அளவுக்கு நெருக்க மாக இருப்பதும் புரிந்தது.

"வண்டிகளில் மாற்றம் செய்ய வேண்டுமென்று சொன்னாயே."

"ஆமாம். அந்த மாற்றங்கள் செய்வதற்கு முயற்சித்த போது வேறு ஒரு விஷயம் பிடிபட்டது. இரும்பை வளைத்து வில் மாதிரி செய்து வில் மீது வில் வைத்தால்."

"எனக்குப் புரியவில்லையே."

பெருந்தச்சர் அவனையே உற்றுப் பார்த்துக் கேட்டார்.

"ராமனுடைய கோதண்டம் என்று பல்லவர் காலச் சிற்பங்களை பார்த்திருக்கிறீர்களா. நடுவே கை பிடிக்கும் இடம் நேர்கோடாக இருக்கும். வில் பிறகு வளைந்து இரண்டு புறமும் இருக்கும். இந்த நேர்கோடாக இருக்கின்ற இடத்தில் வண்டி அச்சு வைத்து வில்லின் வளைந்த சுருண்ட முனையில் வண்டி தளத்தைப் பொருத்தி வைத்துவிட்டால் சக்கரத்தின் ஆட்டம் நேரடியாகப் பீடத்தைத் தாக்காது. வில் சுமையை ஏற்றுக் கொள்ளும். குலுக்கலைக் குறைக்கும். அதிகம் மேடு பள்ளங்கள் இல்லாத சாலைகளில் மிக அற்புதமாகத் தேர் போகும். இது பாரவண்டிகளுக்குச் சரிவருமா என்று தெரியவில்லை. யானை வேட்டைக்குப் போனால், சிங்கம் கிடைத்தது போல வேறு ஏதோ ஒன்று செய்ய இது கிடைத்தது."

குணசீலன் குதூகலமாய்ச் சொன்னான்.

மணலில் படம் வரைந்து பல்வேறு கோணங்களில் பெருந்தச்சர் யோசித்தார்.

"வண்டி ஒன்று செய்துவிடு, இழபதமாய்." என்று சொன்னார்.

கருமார்பட்டறையில் இதற்கு உதவி செய்யச் சொல்லுங்கள் என்று சொல்ல, தஞ்சைக்கு அடுத்து உள்ள கருத்தட்டாங்குடியில் உள்ள கருமார்களுக்குப் பெருந்தச்சர் ஓலை கொடுத்தார்.

குணசீலன் அவர்களுக்கு நடுவே போய் உட்கார்ந்து கொண்டான்.

"கை துருத்தி ஏன் போடுகிறீர்கள். கால் துருத்தி போடுங் களேன்." என்று சொல்ல, அவர்கள் வியப்போடு பார்த்தார்கள்.

நெருப்புக்கு அருகே துருத்தி இருந்தால் கங்கு எரிந்து விழுந்து துருத்தி சிரமமாகும். பெரிய துருத்தியாகச் செய்து குழாயைப் பூமிக்கு அடியிலே கொண்டு போய் அடுப்பில் சேர வைத்து விட வேண்டும். துருத்தி இடம் மேடாகவும், அடுப்பு இடம் சற்று பள்ளத்திலும் இருக்கலாம். இரண்டு மடிப்பு துருத்தி தானே. இப்பொழுது நான்கு மடிப்பு துருத்திகளைச் செய்து. கொள்ளலாம் என்று சொல்லி தோல் அறுத்து துருத்தியைத் தைக்கச் சொன்னான். அறுத்த இடத்திலிருந்து காற்றுப் புகாம லிருக்க தேன்மெழுகும், முருங்கைப்பிசினும் இட்டு அடைத் தார்கள்.

துருத்தியின் அடிப்பாகத்தை தரையில் பொருத்தி மேலே இருக்கின்ற கட்டையை அகலமாக்கும்போது, ஒருலர் பக்கத்தில் கம்பு ஊன்றி, கால்பிடித்து அழுத்த பெருங்காற்று கிளம்பி தூசு மூன்று ஆள் உயரத்திற்கு கிளம்பியது. கருமார்ச்சேரி கைகொட்டி ஆரவாரித்தது.

தாமிரக்குழாயைத் தரையில் பதித்து, துருத்தி லாயோடு இணைத்து, துருத்தி வாயில் களிமண் பூசி அதன் மீது வஜ்ஜிரமும் ஓட்ட, கல் பிணைக்கும் சாந்து தடவ, ஒரு சிறிய ஓட்டை கூட இல்லாமல் காற்று அடுப்பு மீது சீறிப்பாய்ந்தது. கரித்துண்டுகளும், மரக்கட்டைகளும் போட்டு கடவுளை வேண்டி கற்பூரம் நடுவில் வைத்து பற்றி எரிய ஆரம்பித்தவுடன் மெல்ல துருத்தியை அசைக்க, காற்று சட்டென்று அடுப்பு முழுவதும் பரவி தழலை வெளியே தள்ளிற்று. தழல் இடுப்பு உயரத்திற்கு எழுந்து. இரும்புக் குழம்பு காய்ச்சலதற்குப் பெரிய பாத்திரங்களை அங்கே கல்வைத்து இறக்கினார்கள். சுற்றிலும் மரக்கட்டைகள் வைத்தார்கள். மண்ணும், இரும்புத்தாதும் கலந்த உருக்கை உள்ளே போட்டார்கள். கால் நாழிகைக்கும் குறைவான நேரத்தில் குழம்பு கொதிக்க ஆரம்பித்தது. சற்று நேரத்திற்குப்பிறகு குழம்பு நல்ல பக்குலத்திற்கு வந்தது. குறுக்கே கம்பி கொடுத்து தோளில் தூக்கிக் கொண்டுபோய் அச்சில் ஊற்றினார்கள். மறுபடியும் தாது ஊற்றி

அடுப்பில் வைத்தார்கள். முன்னேயும்விட வேகமாக பல கருவிகளைச் செய்யலாம் என்ற நம்பிக்கை கருமார்களுக்கு வந்தது. தங்களுக்கு உதவி செய்த குணசீலனை அவர்கள் கொண்டாடினார்கள்.

"எங்களோடு இருந்துவிடுகிறாயா." என்று கருமார்ச் சேரியின் தலைவர் கேட்க, இல்லையென்று மெல்லத் தலையசைத்தான்.

"உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறேன். எனக்குப் பல்வேறு இடங்களில் வேலை இருக்கிறது." என்று பரிதாபமாகச் சொன்னான்.

அவன் சொன்னபடி இரும்பில் வில் செய்து கொடுத்தார்கள்.

அவன் இரும்பு வில்லோடு போவது பார்த்து மெய்க்காவல் படை குதிரை வீரர்கள் அவனைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள்.

"அடிமைதானே நீ. ஆயுதம் எடுத்துப் போகிறாயே."

மடக்கி வில்லைப்பிடுங்கி அவனைச் சுவரோரம் நிற்க வைத்தார்கள். குதிரையை வேறுபக்கம் எடுத்துப் போனார்கள்.

அது தஞ்சையின் உள்ளாலை. வணிகர்கள் இருக்கும் தெரு. வரிசையாய் அங்காடிகள் இருக்கின்ற இடம். ஒரு சிறு கூட்டம் கூடி குணசீலனை வியப்பாய் பார்த்தது. இடுப்பில் துண்டோடு இருந்த சில அந்தண இளைஞர்கள் அவனைப் பார்த்து தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

பாண்டியன் என்று எழுதி ஒட்டியிருக்கிறது என்று சொன்னார்கள்.

"எப்படிச் சொல்கிறாய்." என்று ஒருவன் கேட்டான்.

"உதடு. உடம்பின் கருப்பு. பெரிய விழிகள். காலை இடதும், வலதுமாய் அகட்டி வீசி நடக்கின்ற விதம். இவையெல்லாம் சட்டென்று இவன் பாண்டிய தேசத்தின் மறவன் என்று சொல்லிவிடுகின்றன."

"ஆனால் முகத்தில் ஒரு நல்ல தன்மையே இருக்கிறது."

"ராஜகளையே இருக்கிறது."

"எப்படிச் சொல்கிறாய்."

"நாசி விடைப்பு. முகலாய்ச்சுழி. நடுவே ஒரு குழி கன்னக்கதுப்புகள் சற்று வளைந்து சற்று புடைப்பாக இருக்கிறது. பாதங்கள் அகலமாக இருக்கின்றன. கட்டை விரலை விட அடுத்த விரல் நீளமாக இருக்கின்றது. விரல்கள் நீளமாகவும், நகங்கள் அழகாகவும் இருக்கின்றன. நெற்றியில் மூன்று கோடுகள் விழுகின்றது. இவன் சபிக்கப்பட்ட கந்தர்வன். துரதிர்ஷ்டத்தால் சாபத்தால் அடிமையாய் இருக்கிறான். இவனை அடிமை கொள்ள எவனாலும் முடியாது. இவன் நூறு பேரை அடிமை கொள்வான்" அந்த அந்தண இளைஞர்கள் வடமொழியில் பேசிக்கொள்ள சட்டென்று குணசீலன் அவர்களுக்கருகே போனான்.

"எனக்கும் அங்க சாஸ்திரம் சொல்லித் தருகிறீர்களா." என்று கேட்டான்.

அந்த அந்தணர்கள் துணுக்குற்று, சற்றுப் பின்னடைந் தார்கள். ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"நீ எந்த நட்சத்திரத்தில் பிறந்தாய். எந்த ஆண்டு. எந்த மாதம். வளர்பிறையா, தேய்பிறையா. எந்த திதி. எந்த ஹோரை..." என்றெல்லாம் கேட்டுக் கொண்டார்கள்.

அவன் வேகமாகப் பதில் சொன்னான்.

அவர்கள் அவனுக்கருகே தரையில் உட்கார்ந்தார்கள். கட்டம் போட்டார்கள். கிடுகிடு லென்று ஜாதகம் எழுதினார்கள்.

புதன் உச்சம். சனி உச்சம். சுக்கிரன் நட்பு. குரு பலவீனமடைந்திருக்கிறான். பன்னிரண்டில் மறைந்திருக்கிறான். அதுதான் இந்த வாழ்வு. இது இன்னும் ஏழு வருட காலத்திற்கு நீடிக்கும்.

அவர்களுக்குள்ளாகப் பேசிக் கொண்டதை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"இவனுடைய நட்சத்திரமும், நம்முடைய நட்சத்திரங்களும் ஒத்துப் போகின்றன. இவனும், நாமும் சந்தித்த இந்த வேளையும் நல்ல ஹோரையாக இருக்கிறது. இன்று அமிர்தயோகம். சப்தமி திதி. நட்புக்கு நல்ல நாள் இது. இவனோடு ஸ்நேகம் கொண்டால் என்ன." அவர்கள் சமஸ்கிருதத்தில் பேசினார்கள்.

குணசீலனுக்குத் துல்லியமாய் புரிந்தது.

"உங்களுக்கு என்ன குறை."

அவன் தமிழில் கேட்டான்.

அவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். மௌனமாக இருந்தார்கள். பிறகு மெல்ல ஒருவன் தலை நிமிர்த்தி, "ஒரு வேலையும் இல்லை. அது வேதனையாக இருக்கிறது. வாழ்க்கை இப்படியே வெறும் யாசித்துத் தின்று ஒழிந்து விடுமோ என்று பயமாக இருக்கிறது. ஒரு அமைப்பாக இருந்து பாடம் கேட்ட நாட்கள் முடிந்து விட்டன.'

"கேட்ட பாடத்தைப் பிரயோகப்படுத்த வேண்டாமா."

"அதற்கு வழி இல்லை. சோம்பித்திரிந்தே நாட்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. துருப்பிடித்து விடுவோமோ என்ற பயம் உள்ளே வந்துவிட்டது. உங்களுடைய சுறுசுறுப்பு எங்களுக்கு வேண்டும். வேலை வேண்டும். உணவு இல்லை. வீடு இல்லை. நல்ல உடைகள் இல்லை. இவைகளெல்லாம் இல்லாது போனாலும் பரவாயில்லை. நல்ல சங்கம் இல்லை. சத்சங்கம் இல்லாது செத்துப்போய் விடுவோம் என்று தோன்றுகிறது."

குணசீலன் கைகொட்டினான்.

"அடடா... அடடா... என்ன அற்புதமான ஏக்கம்." என்று சொன்னான்.

"என்ன... புரிந்தது போல் பேசுகிறீரே."

"ஆமாம். இது எனக்கு நன்றாகப் புரியும். என்னைத் திருவொற்றியூரில் சிறை வைத்திருந்தார்கள். என்னைச் சுற்றிப் பல மறவர்கள். ஆனால் எவருக்கும், எதிலுமே விருப்பமில்லை. கைது செய்யப்பட்டு விட்டோம் என்று வெறுப்பு மட்டும் இருந்தது. நான் அப்போது நினைத்தேன். துருப்பிடித்து விடுவோம். இப்படியே இருந்து விடுவோம். எதிர்காலம் இருண்டு விட்டது என்று நினைத்தேன். நல்லவேளை... ஏதோ ஒரு வகையில் வாழ்க்கை திசை மாறி இப்பொழுது நன்றாகப் போய்க் கொண்டிருக்கிறது."

"என்ன. என்னவாக இருக்கிறீர் சோழ தேசத்தில்."

"அடிமையாகத்தான்"

"அடிமையாக இருப்பது சந்தோஷமாக இருக்கிறதா."

"இல்லை. நான் அடிமை என்பது உண்மையாயினும் இவர்கள் என்னை அடிமையாக நடத்தவில்லை. என் திறமை

களை உபயோகப்படுத்திக்கொள்கிறார்கள். நானும் மனமுவந்து இந்தக் கோவில் பணியில் என்னை ஈடுபடுத்திக் கொண்டு விட்டேன்."

"அப்படியா.. கோவில் கட்ட ஆரம்பித்து விட்டார்கள் என்று சொல்கிறார்கள். அந்த இடத்திற்கு அனுமதிக்க மாட்டேன் என்கிறார்களே."

"ஒரு ரகசியமும் இல்லை. நான் கோயில் கட்டுகிற மாதிரி படங்களெல்லாம் கூடப் பார்த்துவிட்டேன்."

அப்படியா... எந்த விதமான கோவில். விமானம்தான் பெரியது என்கிறார்கள்."

"ஆமாம். கோபுரங்கள் சிறியவை. விமானம் மிக உயரம்."

"மிக உயரம் என்றால்."

"இது யானை."

மணலில் குணசீலன் ஒரு புள்ளி வைத்தான்."

"இது கலசம்."

ஒரு இடத்தைத் தொட்டுக் காட்டினான்.

பிறகு வேகமாக விமானம் வரைந்தான். கீழே சுவர் எழுப்பினான். அஸ்திவாரம் காட்டினான். படிகள் எப்படி என்று சொன்னான். சுற்றிலும் உள்ள தேவதைகளைச் சுட்டிக் காட்டினான்.

அவர்கள் அந்தக் குறுக்கு வெட்டுத் தோற்றம் பார்த்துவிட்டு அதிர்ந்து போய் நின்றார்கள்.

"இவ்வளவு உயரமா. செங்கல்லா.. கருங்கல்லா."

"கருங்கல்."

"இப்படி உயரத்திற்கு கருங்கல் எப்படி எழுப்புவார்கள். இது நீங்கள் சொல்கிறபடி பார்த்தால் ஆறு யானை எடை இருக்குமே. இந்த ஆறு யானை எடைக்கல் எப்படி மேலே அனுப்புவார்கள்."

"ஒரு வழி இருக்கிறதென்று சிற்பி சொல்கிறான். என்ன வழி என்று எனக்கு சொல்லப்படவில்லை."

"உங்களை என்ன விதமாக உபயோகப்படுத்துகிறார்கள்."

"சின்னச் சின்னதாய் இந்த கோயில் பணிகளுக்குண்டான விஷயங்களுக்கு உதவி செய்கிறேன். கருமார்களுக்குத் துருத்தி செய்து கொடுத்தேன். வண்டிகளுக்கு வில் அடிக்க முயற்சிக் கிறேன். அது எப்படி என்று தெரியவில்லை."

"வில் அடிப்பது என்றால் என்ன."

அவன் வில் வரைந்தான்.

அச்சு எங்கே இருக்கும். பீடம் எங்கே இருக்கும் என்று காட்டினான்.

"வில் வைத்தாகிவிட்டதல்லவா. இது கெட்டிக்காரத்தனம். ஆனால், இரண்டு சக்கரம் என்பது வில் குறுங்கும்போது குடைநாட்டி விடவாம். நாலு சக்கரம் வைத்துவிடலாமே."

"எப்படி...

குணசீலன் வியப்பாகக் கேட்டான்.

"இந்த அச்சக் கட்டையிலிருந்து ஒரு குறுக்குக் கட்டை பொருத்தி, அந்த குறுக்குக் கட்டைக்கு இரண்டு புறமும் சிறிய சக்கரங்கள் அமைத்து வைத்து விடுங்கள். அது வண்டி ஓட்டியின் இடமாக இருக்கட்டும். வண்டி ஒரு காலும் குடை சாயாது. சரிவில் போனாலும் பலமாக நிற்கும். நான்கு குதிரைகள் பூட்டி வேகமாக ஓட்ட முடியும்."

"அற்புதம்... அற்புதம்.. நீங்களும் விரைவாக யோசிக்கிறீர்கள். உங்களுக்கு என்ன தேசம்."

"எங்களுக்குத் தொண்டை நாடு."

"தொண்டை நாட்டில் எந்த இடம்."

"இவனுக்குத் திருக்கடல்மல்லை. எனக்குத் திருமயிலை."

"அடேயப்பா.. கேள்விப்பட்டிருக்கிறேன். மிக அழகான கிராமங்கள் என்று. கடல்மல்லை பெரும் துறைமுகமாமே."

"ஆமாம், யவனர்கள் புழங்குகின்ற இடம். மிகப்பெரிய குதிரைச் சந்தையும் இருக்கிறது."

"திருமயிலையில் நகை செய்பவர்களும், பாத்திரம் செய்பவர் களும் இருக்கிறார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன்."

"ஆமாம். கருவிகள் செய்பவரும் உண்டு. மூன்று ராட்டினங்கள் போட்டு நீர் இறைப்பார்கள்."

"ஏன் அப்படி."

"அதிகம் வலிவு கொடுக்க வேண்டாம். லேசாக இழுத்தாலே பெரிய குடம் கூட மேலே வந்துவிடும். ராட்டினங்கள் பளுவைத் தாங்கிக் கொள்ளும்."

"அந்தணர்களாகிய நீங்கள் வேதம் படித்தலை விட்டுவிட்டு வேறு என்ன தொழில் செய்துவிட முடியும்."

"என்ன தொழில் செய்ய முடியாது."

"தோல் துருத்தியைத் தைக்க முடியுமா? இரும்பைப் பழுக்கக் காய்ச்சி அடிக்க முடியுமா? மரமிழைத்துச் சக்கரம் பொருத்த முடியுமா? கல் பிளந்து கோவிலுக்குக் கொண்டு வந்து விட முடியுமா?"

"முடியாது. ஆனால், நீங்கள் செய்கின்ற வேலையைப் பார்த்து இதை இன்னும் எளிதாகச் செய்வதும், நறுவிசாகச் செய்வதும் எப்படி என்பதை எங்களால் கண்டுபிடித்துவிட முடியும். குறிப்பாய் இந்த வில் வண்டியை நீங்கள் செய்ய ஆரம்பிக்கும் போது நாங்களும் அருகே இருக்கப் பிரியப்படுவோம். அது என்ன விதமாகச் செய்யப்படுகிறது என்று ஒருமுறை பார்த்துவிட்டால் அதை வேறு விதமாக மேம்படுத்த எங்களால் முடியும்."

"உங்கள் பேச்சு சந்தோஷமாக இருக்கிறது. மிக மிக உற்சாகமாக இருக்கிறது. நல்ல உணவு கிடைக்கிறதா."

"சிரமம்தான்."

"கவலைப்படாதீர்கள். கோயில் பணிகளில் ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். நல்ல உணவுக்குப் பஞ்சமேயில்லை. கோயில் பணியாளர்களை, அரசர் கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொள்கிறார். நான் சக்ரவர்த்திக்கு அருகே நெருங்கி நின்று கொண்டு பலமுறை பேசியிருக்கிறேன்."

"அப்படியா."

அவர்கள் ஆச்சரியமடைந்தார்கள்.

அரை நாழிகையில் அவனுடைய வில் அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

குணசீலன் வாங்கிக் கொண்டு சிரித்தான்.

"என் குதிரை எங்கே." என்று கேட்டான்.

"உன் குதிரையை யார் எடுத்தார்கள்."

மெல்வ அவர்கள் அவனை முறைத்தார்கள்.

"சரி, என் குதிரை எங்கு வேண்டுமானாலும் போகட்டும் நான் நடந்தே போகிறேன்."

அவன் வில்லைத் தோளில் தூக்கி வைத்துக் கொண்டான்.

அவர்கள் முன்னும் பின்னும் அலைந்தார்கள்.

"இவன் குதிரை எங்கேடா."

ஒருவன் கேட்க, மற்றொருவன் வேறு ஒருவனைப் பார்க்க, அலன் ஓடிப்போய் ஒரு வீட்டுச் சந்திலிருந்து குதிரையைக் கொண்டு லந்தான். குதிரை குணசீலனைப் பார்த்து கனைத்தது. அருகே வந்து அலன் முதுகை மெவ்வ இடித்தது.

"ஆனாவ், இங்கு கடினமாக வேவை செய்கிறோமே தவிர, எவ்வாவித உரிமைகளும் எனக்குக் கொடுக்கப்படவில்லை. நான் உங்களை அழைத்துப் போகும் அளவுக்குத் தெளிவானவனல்ல. என்னுடைய நடவடிக்கைகளையே இவர்கள் அவ்வப்போது பதம் பார்க்கிறார்கள். நான் போய் நீங்கள் வரலேண்டும் என்று விண்ணப்பம் செய்கிறேன். கோயில் கட்டும் இடத்திற்கு நீங்கள் வரலாம். பெருந்தச்சர் இருக்கும் இடத்திற்கருகிவ் நான் இருப்பேன்."

"தங்க வசதி உண்டா."

"பெரிய குடிசை இருக்கிறது. கவலையே பட வேண்டாம். வந்து சேர்ந்துவிட்டாவ் போதும். உங்கள் நவத்தை நான் கவனித்துக் கொள்கிறேன்."

"சோழ தேசத்திவ் பாண்டிய வீரர் ஒருவர், இத்தனை நம்பிக்கையோடு பேசுவது ஆச்சரியமாக இருக்கிறது."

"அதற்குக் காரணம் உண்டு. சோழதேசத்தில் இந்தக் கோயில் கட்டுவது பிடிக்காது சிலபேர் முரண்டு செய்து கொண்டிருக் கிறார்கள். ஆர்வமாய் ஈடுபட்டவர்களுக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது."

"ஆனால், நீங்கள் சொன்னதுபோல எங்களுக்கு என்ன வேவை தெரியும். என்ன வேலை தெரியுமென்று நாங்கள் சொல்ல முடியும்."

"அப்படிச் சொல்லாதீர்கள். இங்கு கணக்கு எழுதும் வேலை இருக்கிறது. உங்களால் கணக்கு எழுத முடியாதா."

"கணக்கு எழுதுவதென்றால் வரவு செலவா.."

"இல்லை. எத்தனை கற்கள் கொண்டுவரப்பட்டன. எந்த கற்கள் எங்கே நடப்பட்டன. இன்னும் எத்தனை கற்கள் தேவை."

"இதற்கு ஓலையும் எழுத்தாணியுமே தேவையில்லை. மனதினாலேயே போட்டு விடலாமே."

"கணக்கு போடுவது மட்டுமல்ல. ஒரு ஓலையில் பதித்து கொண்டு அதைப் பெரிய சுவடியாய் நூல் போட்டு இறுக்கிக் கட்டிக்கொண்டு, அரசாங்க கணக்குப் புத்தகமாய் அதைக் கவனித்துவர வேண்டும். எப்பொழுது எவர் கேட்டாலும் இந்த நாள் இத்தனை கற்கள் இவர் வாங்கிக் கொண்டார் என்று சொல்லப்பட வேண்டும். அது மட்டுமல்ல ஆட்களுக்குக் கூலி கொடுப்பதற்கு ஒரு கணக்கு வேண்டுமென்று இவர்கள் நினைக்கிறார்கள். அதையும் உங்களால் செய்ய முடியாதா."

"செய்யலாமே. அது எந்த மாதிரிக் கணக்கு."

"சுமை தூக்குபவருக்கு ஒரு கூலி, பாறை வெட்டியெடுப்பவருக்கு ஒரு கூலி. பாறையைத் தட்டி சமன் செய்பவருக்கு ஒரு கூலி. பாறையில் அளவு எடுத்து அதை வர்ணத்தில் தீட்டுபவருக்கு ஒரு கூலி. அப்படி வர்ணம் தீட்டப்பட்ட பாறையைச் செதுக்கிச் சமன் செய்து உள்ளே இறக்குபவருக்கு ஒரு கூலி. அந்தப் பாறையைச் சரியான இடத்தில் சரியானபடி நடும் சிற்பிக்கு ஒரு கூலி என்று விதம்விதமாக நெல்லும் காசும் தருகிறார்கள். நெல் கணக்கு தனியாகவும், காசு கணக்கு தனியாகவும் இருந்து மொத்தம் இத்தனை மாதத்தில் இவ்வளவு செலவாயிற்று என்று சொல்ல வேண்டும்."

"இதையும் செய்யலாமே."

"ஆரம்பத்தில் சற்று தடுமாறும்."

"அப்படியெல்லாம் அவசியமில்லை. எந்தத் தடுமாற்றமும் இல்லாமல் செய்வதற்கு உங்களுக்கு உதவி செய்யப்படும். உண்மையாய் இருக்க வேண்டுமென்றுதான் எதிர்பார்க்கிறார்கள்."

"உடுக்க உடையும், உண்ண உணவும் கிடைக்குமல்லவா."

"நிச்சயம் கிடைக்குமய்யா. ஏன் திரும்பத் திரும்ப சந்தேகப்படுகிறீர்கள்."

"இல்லை, பொதுவாக உங்களுக்குச் செய்யும் உணவையே எங்களுக்குத் தந்துவிட்டால் அதை ஏற்க இயலாது என்று அஞ்சுகிறேன்."

"நீங்கள் தனியாக உணவுக்கு ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்."

"எத்தனை பேருக்கு வேலை இருக்கும்."

"இருக்கும். ஒரு ஆயிரம் பேருக்கு."

"ஆஹா... என்று பெருங்கூச்சலாய் திகைத்தார்கள்.

குணசீலன் அவர்களை வினோதமாகப் பார்த்தான்.

"ஏன் இப்படிக் கூச்சலிடுகிறீர்கள்."

"நாங்கள் ஐநூறு பேர்கள் நாய்படாதபாடு பட்டுக் கொண்டிருக்கிறோம்."

"அப்படியா_ நான் அருண்மொழிப்பட்டரிடம் பேசுகிறேன்."

"யாரது."

"பிரம்மராயரின் மகன். உபசேனாதிபதி. பிறகு இராஜேந்திரருடைய நெருங்கிய நண்பர். அவருக்கு இங்கு நல்ல செல்லாக்கு இருக்கிறது. உங்கள் விருப்பத்தைச் சொல்லட்டுமா."

"இப்படி நேரடியாக விருப்பத்தைச் சொல்வதைவிட அவருடைய அபிப்ராயம் என்னவென்று கேட்டுக் கொள்ளுங்கள். அதுமட்டுமல்ல. இதற்கு இடைஞ்சலாக வேறு எலரும் வராவண்ணமும் பார்த்துக்கொள்ள வேண்டும்."

"யார் இதற்கு இடைஞ்சலாக இருப்பார்கள்."

"தஞ்சை அந்தணர்கள்."

"ஆஹா... அதுலொரு பிரச்சினை இருக்கிறதல்லவா."

குணசீலன் வியந்தான். யோசித்தான்.

"இந்த விஷயத்தை நாம் கையாளுவதைவிட அருண்மொழிப்பட்டர் கையாளுவதுதான் நல்லது. நீங்கள் இங்கேயே இருங்கள். இன்னும் இரண்டு நாளில் உங்களுக்கு நல்ல செய்தி வரும்."

குணசீலன் கோயில் இருக்கும் திசை நோக்கி நகர, அவர்கள் புறம்படிக்கு வேகமாக நகர்ந்தார்கள். அங்குள்ள தங்கள் மற்ற நண்பர்களிடம் இதைக் காதோடு காதாய் சொன்னார்கள்.

அங்குள்ள அத்தனை பேர் முகங்களும் மலர்ந்தன.


ஒரு குழுவுக்கு ஒரு கலம் நெல், வாரக்கூலி. இன்னொரு குழுவுக்கு இரண்டு கலம் நெல் வாரக்கூலி, இன்னொரு குழுவுக்கு மூன்று கலம் நெல் வாரக்கூலி. இன்னொரு குழுவுக்கு நாலு கலம் நெல். ஒரு கலம் வாங்குகிறவர்கள் நூறு பேர். இரண்டு கலம் நெல் வாங்குகிறவர்கள் நூற்றியிருபத்தைந்து பேர். அவர்கள் விரிவாக உட்கார்ந்து அந்தக் கணக்குகளை எப்படிப் போடுவ தென்று விதம்விதமாக விவாதித்துக் கொண்டார்கள்.

மறுபடி கோயில் பக்கமோ, நார்த்தாமலை பக்கமோ நம்மைப் போகச் சொல்லி கணக்கு எழுதச் சொன்னால், நம் உணவுக்கு நாம் என்ன செய்வது. நாமே நம் உணவைத் தயார் செய்துகொள்ள வேண்டும். நம்மில் சிலரை உணவு தயார் செய்யும் முறைக்குப் பழக்கப் படுத்திவிட வேண்டும். அவர்கள் வெகுதூரம் நீந்துவதற்குத் தயாரானவர்கள் போல தொடை தட்டி அலைந்தார்கள். எதிர்நீச்சல் போட்டால்தான் வாழ்க்கையில் ஏதேனும் ஒரு இடத்திற்குப் போக முடியுமென்று அவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தது.

# 135

“**அ**து செங்காவி, இந்தச் செங்காவியோடு மஞ்சள் கலந்தால் ரத்தச்சிவப்பு வரும். இந்த மஞ்சளோடு வெள்ளை நிறம் கலந்தால் நல்ல சிகப்பு கிடைக்கும். இந்த சிகப்பில் கருநீலம் சேர், கருப்பு பளபளப்பாய் கிடைக்கும். இது மஞ்சள். இது பச்சை, இது மண்நிறம், இது அரக்கித் தேய்த்தால் பொன்னிறம். இந்த வர்ணங்கள் நன்கு சுவற்றில் பதியும்படியாய் ஒட்ட ஈரம் வேண்டும். நல்ல வெள்ளையைச் சுவர் முழுவதும் பூசி, அந்த வெள்ளைக்கு மேல் கோந்து தடவி, அந்த மருந்து ஈரம் காயும் முன்பு மடமடவென்று வரைந்து வர்ணம் தீட்டி விட்டால் வர்ணம் அழியாது. மங்காது.”

சீராளனின் அம்மா சொன்னாள். சீராளனின் இரண்டு சகோதரிகளும், ஒரு தம்பியும் இந்தப் பாடத்தைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.



*சீராளனின் தகப்பன் வெளியே உட்கார்ந்து செங்காவியைப் புடைத்துப் புடைத்து துணியில் சலித்து வஸ்திரகாயம் என்ற வித்தையைச் செய்து கொண்டிருந்தார். மிகமிக நுண்ணிய அளவில் செங்காவித்தூள் ஒரு மரக் குடுவையில் விழுந்து கொண்டிருந்தது. துணியில் நின்ற திப்பியை மறுபடியும் அம்மி யில் கொட்டிவிட்டார். மீண்டும் அரைக்கத் துவங்கினார்.*

*பாவம் பதினைந்து நாட்களாக அரைத்துக் கொண்டிருக் கிறார். இதற்குச் சரியான ஆட்கள் கிடைத்தால் போதும். அவர் ஓவியம் வரைய உட்கார்ந்து விடுவார். உங்களுக்குக் கோடுகள் பற்றி மிகத்தெளிவாகச் சொல்லிக் கொடுப்பார்."*

*"ஆனால், காற்றில் பட்ட ஓவியம் மெல்லமெல்ல களையிழக்கத்தானே செய்யும்."*

*ஒரு தங்கை கேட்டாள்.*

*சீராளன் அவளைப் பார்த்து புன்னகை செய்தான்.*

*கெட்டிக்காரி என்றான்.*

*"ஆமாம். அதனால்தான் ஓவியங்களை வெளியே வரையாது, உள்ளுக்குள்ளே கருவறை போன்ற இடங்களில் வரைவது வழக்கமாக இருக்கிறது."*

*"இப்போது நம்முடைய பணி என்ன? கோவிலில் ஓவியம் வரைவதா?"*

"இல்லை. கோவில் கட்டவே ஆரம்பிக்க வில்லையே."

"பிறகு ஓவியம் வரைவது எப்படி?"

"அப்படியானால் நமது பணி என்ன?"

"திரைச்சீலைகள் வரைவது. திரைச்சீலைகளில் கற்சிற்பங்களுக்கான மாதிரி ஓவியங்களை வரைவது."

கல்தச்சர் இப்பொழுது தான் சொல்லிவிட்டுப் போனார்.

"வரைந்து பழகுங்கள் துல்லியமான கோடாக இழுப்பதற்கும் தெரிந்து கொள்ளுங்கள் என்று சொன்னார்."

"எனக்குப் புரிய வில்லையம்மா."

"கோட்டுச் சித்திரங்கள் வரைந்து அதற்கு வர்ணம் தீட்டினால் புடைப்புச் சிற்பங்களாகவோ அல்லது முழு சிற்பங்களாகவோ செய்து விடுவார்கள்."

"புடைப்புச் சிற்பங்களாகச் செய்வதென்றால் பின்பக்கம் எப்படியிருக்க வேண்டும் என்பதை நாம் வரையத் தேவை யில்லை. ஆனால், முழுச் சிற்பங்களாக இருக்க வேண்டுமென் றால் பக்கவாட்டுச் சிற்பங்களையும் நாம் வரைய வேண்டி யிருக்கும். அதற்குத்தான் நீங்கள் பழகிக்கொள்ள வேண்டும்."

வெள்ளைத்துணிகள் அவர்கள் வீட்டில் அம்பாரமாய் குவிந்திருந்தன. அதை இறுக்கி கட்ட மடித்து தச்சர்கள் கொண்டு வந்து கொடுத்தார்கள். அதன்மீது வெள்ளை வர்ணம் அடித்து பெரிய ஓலைக் கொட்டகையில் தூசு படாமல் அதை வைத்திருந்தார்கள். ஈரம் போன பிறகு வெய்யிலில் வைத்து உலர்த்தினார்கள். வெள்ளைத் துணியில் வெளிச்சம்பட்டு அந்த இடமே பிரகாசமாக இருந்தது.

தெற்குப் பக்க புறம்படியில் கோட்டைக்கு உள்ளே போகின்ற ஒரு நுழைவாயில், அவர்களுக்கு மிகப்பெரிய குடிசைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. வைக்கோல் இரண்டு வண்டி கொண்டு வந்து அவர்களே பிரியாகக் கட்டி மேற்கூரை செய்து கொண்டிருந்தார்கள். உள்ளுக்குள் வெப்பமே வரக்கூடாது என்று ஓலைத் தடுக்குகளை வாங்கி வந்து கூரைக்குக் கீழ் இறுக்கக்கட்டி சதுரத் தடுப்பு போட்டிருந்தார்கள். கூரைகளை அதிகம் தாழ வைக்காமல் சற்று உயரமாகவே விட்டிருந்ததால் உள்ளே பகல் நேரத்தில் வெளிச்சம் நன்றாகவே இருந்தது. சமையல் அறையில் புகை போவதற்காக ஓலைத்தடுப்பைத் தூக்கிக் கட்டியிருந்ததால்

புகை வெளியே போயிற்று. ஓவியம் வரையும் இடம் மிகச் சுத்தமாக இருந்தது. சோமாஸ்கந்தர் படம் பெரிதாக வரைந்து அதைச் சட்டமிட்டு மாட்டியிருந்தார்கள். காலடியில் பூ கொட்டியிருந்தார்கள். வேறொரு இடத்தில் ஆள் உயரத்தில் விராட புருஷனின் ஓவியம் வரையப்பட்டிருந்தது. அதற்கு நெட்டியால் மாலை செய்து போட்டிருந்தார்கள். வீட்டு வாசலில் கருப்பு நிறத்தில் கணபதி வரைந்திருந்தார்கள். சரஸ்வதி தேவியின் படம் ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது.

வீட்டு வாசலில் குதிரை கட்டிவிட்டு குணசீலன் கீழே குதித்தான்.

"இது ஓவியர் வீடுதானே." என்று உள்ளே நுழைந்தான்.

குணசீலனை அவர்கள் வரவேற்றார்கள்.

''உங்களைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம்.'' என்று சந்தோஷமாகச் சொன்னார்கள்.

"என்ன உதவி செய்ய வேண்டும்." என்று பணிவாகக் கேட்டார்கள்.

"நான்கு சக்கரங்கள் கொண்ட ஒரு தேர் வரைய வேண்டும். வில்தான் தேரின் முக்கியப்பகுதி இதனுடைய நடுப்பகுதியில் அச்சு உட்காரும். மற்ற இரண்டு பகுதிகளில் பீடத்தினுடைய சட்டம் உட்காரும்." என்று சொல்ல, அவர்கள் வில்லை சுற்றிக் கொண்டு சோதித்தார்கள். வில்லைப் பார்த்து படம் எழுதினார்கள்.

மெல்ல மெல்ல தேர் அங்கு வடிவம் பெற்றது.

"அடேயப்பா... அந்த அந்தண இளைஞர்கள் கெட்டிக் காரர்கள். நடு அச்சிலிருந்து நேராக ஒரு கட்டை. அங்கே இரண்டு சக்கரம். அதன் மீது பீடம். அதன்மீது சாரதி அமர்வு. இந்த இடத்திலிருந்து இந்த இடம் வரை இடுப்பிலும், கழுத்திலும் அந்தக் கட்டையை இணைத்துவிட்டால்..."

"அற்புதம்.. அப்புறம்.."

அவன் வியந்தான்.

"வாசலில் உட்கார்ந்து வர்ணம் இடித்துக் கொண்டிருப்பது யார்."

"எங்கள் தகப்பனார்."

"ஏன்? அவர் இதைச் செய்து கொண்டிருக்கிறார். ஓவியம் வரைய அவர் ஏன் வரவில்லை?"

"இந்த இடிப்பது மிக நுணுக்கமான வேலை. அலட்சியமாக செய்யக்கூடாது. அதனால்தான் அவர் உட்கார்ந்து இடித்துக் கொண்டிருக்கிறார்."

"கடவுளே.. அத்தனை மூட்டை காவியையும் இடிப்ப தென்றால் வேறு வேலையே செய்ய முடியாமல் போய்விடுமே."

"ஆமாம். அந்தக் கவலை எங்களுக்கும் இருக்கிறது."

"சரி. நான் ஆட்கள் அனுப்புகிறேன். நல்ல இளைஞர்களை அனுப்புகிறேன். இடிக்கச் சொல்லிக் கொடுங்கள்."

அவன் வணங்கி திரைச்சீலையை வாங்கிக் கொண்டு வெளியேறினான். வெளியேறிய மூன்று நாழிகையில் அந்த வீட்டு வாசலில் நான்கு இளைஞர்கள் வந்து நின்றார்கள்.

அவர்களில் இரண்டு பேர் பாண்டிய வீரர்கள்.

ஒருவன் கங்க தேசத்தைச் சேர்ந்தவன். மற்றொருவன் நுளம் பாடி என்ற இடத்தைச் சேர்ந்தவன். அந்த வீரர்கள் ஓவியரின் காலில் விழுந்து வணங்கினார்கள்.

தங்கள் குலங்களையும், முன்னோர் செய்த தொழில்களை யும் சொன்னார்கள்.

சீராளனும், அவன் தந்தையும் அவர்களுக்கு வர்ணங்கள் இடிக்கச் சொல்லிக் கொடுத்தார்கள்.

பதினாறாவது பாரவண்டி தஞ்சை எல்லையைத் தொட்டது. பதினேழாவது பாரவண்டியில் முப்பதடி நீளமுள்ள பெருங்கல் ஒன்று வெளியே கிடத்தப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். சக்கரம் உடைந்து போனதை வருத்தத்தோடு தெரிவித்தார்கள். எப்பொழுது வந்து சேரும் என்று தெரியவில்லை என்று கவலைப்பட்டார்கள்.

பெருந்தச்சரும் கவலையானார்.

குணசீலன் வில் வண்டியைத் தயார் செய்தான்.

இரண்டு உயரமான பெண் குதிரைகளைக் கொண்டு வந்து வண்டியின் முன்பு கட்டினான். குதிரைகளை மெல்ல நடத்தி அழைத்துப் போனான். வண்டியின் சப்தத்திற்கு அவை பழக்கப்பட வேண்டுமென்று அவைகளை விரட்டாது நடத்திக்

கொண்டு போனான். பிறகு இரண்டு இளைஞர்களை வண்டியின் மீது நிற்கவைத்து அந்தக் கனத்தோடு வண்டியை இழுக்க வைத்தான். பிறகு குதிரை ஓட்டியின் ஆசனத்தில் அவன் அமர்ந்து வண்டிக்குள் மூன்று பேரை ஏற்றி மெல்ல குதிரையைத் தட்டிக் கொடுத்து ஓட்டினான்.

புல் வெளியில் குதிரை வேகமாக ஓடியது. அற்புதமாய் மேலேற்றி. மெல்ல குதிரைகளைத் திருப்பினான். குதிரைகள் திரும்பின. புல்சரிவில் வண்டி சுகமாகப் போக வீரர்கள் உற்சாகமாகக் கத்தினார்கள். குதிரைகள் மிரண்டன. கூச்சலிட வேண்டாம் என்று அவன் கட்டளையிட்டான். ஆனாலும், வீரர்கள் அவ்வப்போது சந்தோஷத்தில் இனம் புரியாத கூச்சல்கள் செய்து கொண்டுதான் வந்தார்கள்.

பெருந்தச்சர் வீட்டு வாசலில் வண்டியை நிறுத்தினான்.

பெருந்தச்சர் வண்டியைப் பரிசோதித்தார். தான் ஓட்ட விரும்பினார்.

"இல்லை. இன்னும் வண்டியைப் பற்றி திடம் எனக்கு ஏற்படவில்லை. நீங்கள் முக்கியமானவர். நீங்கள் இப்பொழுது பயணம் செய்ய வேண்டாம். வேறு யாரையேனும் அனுப் புங்கள்" என்று சொல்ல, மரத் தச்சர்கள் இப்பொழுது வண்டியில் ஏறிக்கொண்டார்கள்.

இன்னும் ஐந்து மரத்தச்சர்கள் குதிரையில் ஏறி வண்டியின் அச்சையே கவனித்துக் கொண்டு வந்தார்கள். குதிரையை நிறுத்தி சக்கரங்களுக்கும். வில்லின் நுனிகளுக்கும் மசக்கு எண்ணெய் விட்டார்கள். வண்டியின் தட்டையான பீடத்தைப் பிடித்துக் கொள்வதற்காக மூங்கில்களை நட்டு குறுக்காகவும் கட்டினார்கள். இப்பொழுது ஒரு கூண்டு போல அந்தப்பீடம் இருந்தது. உள்ளே போய் நின்று கொண்டார்கள்.

ஒரு புலிக்கொடியைக் கொண்டு வந்து நான்கு கம்புகளில் எது உயரமானதோ அதில் ஒரு மரத்தச்சன் இறுக்கக் கட்டினார். வண்டிய நன்றாக ஓடிற்று. ஒரு குலுக்கல் இல்லை. ஒரு ஆட்டமும் இல்லை. தூக்கித் தூக்கித் போடுதல் இல்லை. எல்லாவற்றையும் வில் தாங்கிக் கொண்டது.

மக்கள் அந்த விசித்திரமான தேரைப் பார்த்தார்கள்.

என்னமோ மிதந்து வருவதுபோல் இருக்கிறதே என்று வியந்தார்கள்.

இளவரசர் முன்னே அந்த வண்டி ஓட்டி காண்பிக்கப் பட்டது. இளவரசர் அந்தத் தேரை தான் ஓட்ட விரும்பினார். ஆனால், அவரையும் குணசீலன் பணிவாக மறுத்தான்.

அருண்மொழிப்பட்டன் குதிரையில் உள்ளே வர, இளவரசரும், அருண்மொழிப்பட்டனும் அருகே போய் அந்தத் தேரை பல்வேறு விதமாகப் பரிசோதித்தார்கள்.

"இளவரசர் தானே ஓட்டக்கூடாது. நான் ஓட்டலாம் அல்லவா." என்று அருண்மொழிப்பட்டன் வண்டியில் தவறி ஏறிக்கொண்டான்

"அப்படியானால் உங்கள் குதிரை மீது ஏறி நான் வரட்டுமா."

குணசீலன் அனுமதி கேட்டான். அருண்மொழிப்பட்டன் தலையசைத்து சரியென்று சொன்னான்.

இளவரசர் தன் குதிரையில் தாவி ஏறிக்கொள்ள, அவரைச் சுற்றி மெய்க்காவல் வீரர்கள் விரைவாக குதிரைகளில் அமர, வண்டி அரண்மனை விட்டு வெளியே போயிற்று. உள்ளாலை வழியாக துரிதகதியில் ஓடிற்று.

அருண்மொழிப்பட்டன் மிகச்சரியாக அமர்ந்து குதிரை களையும், சக்கரத்தையும் கவனித்து சரியானபடி வண்டியைத் திருப்பினான்.

குணசீலன் குதூகலமடைந்தான்.

"மிக நன்றாக ஓட்டுகிறீர்கள். ஆனால், விரைவாக ஓட்டுகிற போது இந்தத் தேர் என்ன கதியாகும் என்று தெரியவில்லை. எனவே, புறம்படியிலிருந்து சற்று விரைவாக ஓடத் துவங்கி விடலாம்." என்று சப்தமாகப் பேசினான்.

அருண்மொழிப்பட்டன் சரி அப்படியே செய்கிறேன் என்றான்.

மெய்க்காவல் வீரர்கள் குணசீலனை வியப்போடு பார்த்துக் கொண்டு வந்தார்கள்.

தஞ்சையிலிருந்து வடக்கு நோக்கி போகும் பாதையில் அந்தத் தேர் ஓடியது.

சொடுக்கிச் சொடுக்கி குதிரைகளை அருண்மொழி பட்டன் விரட்ட அற்புதமாக அமைந்த மண்சாலையில் பொறி பறக்க தேர் அற்புதமாக ஓடிற்று.

குதிரைகளைச் சட்டென்று நிறுத்தி, பாதைகளிலிருந்து இறக்கி, புல்வெளிகளிலும் ஓட்டி பல்வேறு விதமாக அருண்மொழிப்பட்டன் ஓட்ட இளவரசர் இராஜேந்திரர் மிகப் பெரிய கூச்சலோடு வண்டியைப் பின் தொடர்ந்து வந்தார்.

வண்டி ஒரு மாந்தோப்பின் நடுவே நிறுத்தப்பட்டது. வீரர்கள் கீழே இறங்கி வந்தார்கள். அமர்ந்திருந்த அருண் மொழிப்பட்டனுக்கு கை கொடுத்து கீழிறக்கினார்கள். இந்த குலுக்கல் வேறு விதமாக இருக்கிறது. இதனால் உடம்பில் ஒரு புதுவிதமான அசைவு ஏற்படுகிறது. வயிறு குழைகிறது.

குதிரைகளை வைத்து ஓட்டுகிறபோதே சுகமாக இருக்கிறது. அருகிலுள்ள கிராமத்திற்கு ஒரு மெய்க்காவல் படை வீரர் போய் கிராமத்து மக்களிடம் விஷயம் தெரிவிக்க, அந்த மக்கள் குடிநீர்ப் பானைகளோடும், பனை வெல்லங்களோடும், பட்சணங் களோடும் அந்த மாந்தோப்பு நோக்கி ஓடி வந்தார்கள்.

எல்லோருக்குமே ஏதோ ஒரு உணவு தேவைப்பட்டது. நல்ல வேளையாக பனை வெல்லம் ஒரு குடுவையில் தரப்பட இளவரசர் எடுத்து வீரர்களுக்கும், அருண்மொழிப்பட்டனுக்கும் வழங்கினார்.

குணசீலன் கையில் இரண்டு கருப்பட்டி கொடுத்து தானும் ஒன்றை வாயில் போட்டுக் கொண்டார். மக்கள் இன்னும் எடுத்துக்கொள்ளுமாறு வற்புறுத்த அமைதியாக இருக்கும்படி சைகை செய்தார். மக்கள் விலகி நின்றார்கள்.

இதில் என்ன குறை தெரிகிறது என்று குணசீலனை வினவ,

"நான் நினைத்த அளவுக்கு வில் வளையவில்லை. இன்னும் நன்றாக வில் வளைய வேண்டும். இன்னும் மெல்லியதாக உறுதியானதாக இருக்க வேண்டும்."

"வேறு ஏதோ கலவையோடு சொன்னான்.

"மரங்களும் இத்தனை கனமானதாக இருக்க வேண்டாம். தேக்கு மரங்களைத் தேர்களுக்கு போடுவது. நல்லதேயல்ல. மாறாய் இலுப்பைக்கட்டைகளும், மாம்பலகைகளும் இழைத்துச் செய்தால் உறுதியாகவும் இருக்கும். சற்று வளைவாகவும்

இருக்கும். மசக்கு எண்ணெய் தடவியது அற்புதம். வண்டி வழுக்கிக் கொண்டு ஓடுகிறது."

அருண்மொழிப்பட்டன் வியப்போடு வண்டியைச் சுற்றி வந்து சொன்னான்.

"இப்பொழுதே ஆண் குதிரைகளைக் கட்டிப் பார்க்கலாமா"

இளவரசர் பரபரத்தார்.

எல்லோரும் திகைத்து நின்றார்கள்.

மெய்க்காவல் படையிலுள்ள வீரர்களிடமிருந்து குதிரைகள் வாங்கி சேணம் மாட்டி அதை வண்டியில் கட்டினார்கள்.

குணசீலன் கலவரத்தோடு வண்டியைச் சுற்றிச்சுற்றி வந்தான். இந்தக் குதிரைகளுக்கும் வண்டியின் வேகத்திற்கும் இணையாகுமா என்ற யோசனை வருகிறது. வண்டியை நிறுத்த முடியாது போனால் என்ன செய்வது என்ற பயம் வருகிறது. அந்த அளவு வேகம் கூடிவிட்டால் மிக சிரமமாகவும் இருக்குமே என்பதும் ஒரு எண்ணம்.

ஆனால், இளவரசர் அவன் பேச்சைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. பெட்டைக் குதிரைகளுக்குச் சேணங்கள் மாற்றப்பட்டன.

இளவரசர் இப்பொழுது வண்டியில் உட்கார்ந்து கொள்ள அருண்மொழிப்பட்டன், "சற்று யோசியுங்கள், இப்பொழுது நீங்கள் கட்டியிருக்கிற குதிரைகள் மிகவும் முரடானவை. அருகே அமர்ந்து சேணத்தை இறுக்கினாலும் கூட திமிறி ஓடுபவை. நீங்கள் தொலைவில் உட்கார்ந்து சேணத்தை என்ன இறுக்கினாலும் அவை வேகம்தான் காட்டுமே தவிர உங்களுக்குக் கீழ்ப்படியாது. வண்டியினுடைய அமைப்பு வேறு எப்படியென்று தெரியவில்லை. நீங்கள் ஓட்ட வேண்டுமா. என்னிடம் விட்டு விடுங்கள்" என்று கெஞ்சினான்.

"நீ ஓட்டியது போதும். இப்பொழுது நான் ஓட்டுகிறேன்."

"ஓட்டுங்கள். பெண் குதிரையை விட்டு விட்டீர்களே. குதிரைகளை இடம் மாற்றி விட்டீர்களே. அதுதான் கவலையாக இருக்கிறது. களைத்த குதிரைகளையும் மறுபடியும் வண்டியில் போட்டு நான் விரட்டினால் ஓடவா செய்யும். ஆண் குதிரைகளும் வெகுதூரம் ஓடி வந்திருக்கின்றன. அதனால் முரட்டுத்தனம் காட்டாது. நான் ஓட்டுகிறேன்."

அவர் உட்கார்ந்து கொண்டார்.

வண்டி மாந்தோப்பைச் சுற்றி வெளியே போயிற்று. மக்கள் ஆரவாரம் செய்தார்கள்.

"என் குதிரைக்கு இடது கண் அவ்வளவாகத் தெரியாது."

அந்த மெய்க்காவல் படைவீரன் கொஞ்சம் தாழ்ந்த குரலில் குணசீலனிடம் பேசினான்.

"நாசமாகப் போயிற்று. குதிரையை வண்டியில் பூட்டும் வரை என்ன பிடுங்கிக் கொண்டாயிருந்தாய்."

சரக்கென்று குணசீலன் சீறினான்.

மெய்க்காவல் படைவீரர்கள் துணுக்குற்றார்கள்.

ஒரு பாண்டிய அடிமைவீரன் இவ்வளவு வேகமாகப் பேசலாமா என்பதுபோல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

குணசீலன் அருண்மொழிப்பட்டன் குதிரையில் ஏறி இளவரசருக்கு அருகே செலுத்தினான். ஒரு குதிரைக்கு இடது கண் தெரியாது என்று மெய்க்காவல் படைவீரன். சொல்கிறான்.

"இருக்கட்டுமே. குதிரைகள் நேராகத்தானே போக வேண்டும். ஒரு கண்ணால் அந்த குதிரை பார்த்துக் கொண்டு கழுத்து திருப்புவதை நானும் பார்த்து விட்டேன். அதை அனுசரித்துதான் நானும் வண்டி ஓட்டுகிறேன். இளவரசர் பதில் சொன்னார்.

"கவலைப்படாதே குணசீலா. எட்டு வயதிலிருந்து நான் குதிரையேற்றம் செய்கிறவன். தேரோட்டுகிறவன்."

ஆற்றை ஒட்டியபடி போகும் பாதையில் தேர் வேகமாகப் போயிற்று. குதிரை சண்டித்தனம் செய்வதால் எருக்கஞ் செடிகளை ஒடித்துக் கொண்டு நகர்ந்தது. அருண்மொழிப் பட்டன் வேகம் வேண்டாம். வேகம் வேண்டாம் என்று கத்திக் கொண்டே இளவரசரைக் கடந்து போக முயற்சித்தான்.

ஆனால், இளவரசர் அருண்மொழிப்பட்டன் தன்னை விடத் தாண்டி வேகமாகப் போகக்கூடாது என்பதில் மும்முரமாக இருந்து குதிரைகளை வேகமாக ஓட்டினார்.

மெய்க்காவல் படைவீரர்கள் அந்தத் தேரை துரத்திக் கொண்டு ஓடினார்கள். பெட்டைக் குதிரைகள் ஓட மறுத்தன.

அந்தத் தேர் வெகுதூரம் போயிற்று.

அருண்மொழிப்பட்டன் குதிரையை அடித்து விரட்டினான்.

இது தன்னுடைய குதிரையல்ல. இளவரசர் இராஜேந்திரருடைய குதிரை என்பது தெரிந்தது. இளவரசர் குதிரை அவனுக்குச் சரியாகக் கட்டுப்படவில்லை. இளவரசர் இல்லையென்று தெரிந்ததால் முன்னும் பின்னும் அலைந்தது. மரங்களில் உரசி நிற்க முயன்றது. குதிரையை அடித்தால்தான் சரியாக ஓடும் என்பதால் குதிரையை நன்றாக விளாசினான்.

தனியே பார்த்துக் கொண்டிருந்த குணசீலனை போ, இளவரசரைத் தொடர்ந்து போ. என் குதிரை உனக்குக் கட்டுப் படும் என்று சொன்னான்.

குணசீலன் தன் குதிரையை வேகமாகத் துரத்த இளவரசர் குதிரைகள் வெகுதூரம் போய்விட்டன.

தருமனுக்குத் தொண்ணூற்றாறு ஆடுகள் வழங்கப்பட்டிருந் தன. அந்த ஆட்டிலிருந்து கிடைக்கும் பாலைக் கடைந்து நெய்யெடுத்து அந்த நெய்யில் விளக்கேற்ற வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தது.

ஒரு நாளைக்கு ஆழாக்கு நெய் தரவேண்டுமென்று விதிக்கப்பட்டிருந்தது. ஆழாக்கு நெய் தருவது ஒன்றும் சிரமமல்ல. ஆடுகள் இனவிருத்தி செய்தால் அதிலிருந்து கிடைக்கும் பாலும், நெய்யும், கறியும் அவன் குடும்பத்திற்குப் போதுமானவை. ஆனால், ஆடுகள் நன்றாக மேய்ந்தால்தான் இனவிருத்தி செய்யும்.

அவன் ஆடுகளைப் புல்வெளியிலிருந்து பாதைக்கு ஏற்றி பாதையிலிருந்து அடுத்துப் புல்வெளிக்குப் போக முயற்சித்த போது பெரிய சத்தம் கேட்டது.

இரண்டு குதிரைகள் தேர்கட்டி மிக வேகமாக வந்தன.

என்ன செய்வது என்று தெரியாமல் தருமன் திகைத்தான். குதிரைகள் ஆட்டு மந்தையை நோக்கி வர ஒருவர் எழுந்து நின்று உரக்கக் கத்தினார். ஆட்டு மந்தைகளை அவன் பிரிக்க முயற்சித்தான். ஆனாலும் மூன்று ஆடுகள் இப்படியும், அப்படியும் அலைந்தன. குதிரை வண்டி வேகமாக ஓடி அந்த ஆடுகளைத் தூக்கி அடித்து துவைத்து ஓடிற்று. அப்படி ஓடுகிற பொழுது அந்த வண்டி எகிறி எகிறி அலைந்தது. வலப்பக்கமுள்ள ஒரு மண் வீட்டின் மீது இடித்து, பிறகு இடப்பக்கம் திரும்பி, முழு வேகத்தில் அங்குள்ள செடிகளுக்குள் போய் சிக்கி, வேகமாக

அடிபட்டு, பள்ளத்தில் விழுந்து, வேகமாக எகிறி, தடேரென்று வலப்பக்க ஏர்க்கால் உடைய தேரிலுள்ளவர் எகிறிப்போய் ஆற்றுக்குள் தலைகுப்புற விழுந்தார்.

தருமன் பதறினார்.

பத்துகோல் துரத்திவ் நடந்த இந்த விபத்து குணசீலன் கண்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

மழை பெய்திருப்பதால் ஆற்றில் தண்ணீர் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது.

குணசீவன் குதிரையைச் சட்டென்று இழுத்து நிறுத்தி, தரையில் குதித்து, ஆற்றின் கரைக்கு ஓடினான். நீரில் விழுந்த இளவரசர் தலைநிமிர்த்தி கரைநோக்கி கை போட்டு வருவதைப் பார்த்து சட்டென்று தன் இடுப்பு வேட்டியை அவிழ்த்து ஆற்றுக்குள் இறங்கி அவர் மீது ஒரு நுனியைப் போட்டான்.

அவர் நுனியை இறுக்கப்பற்றிக் கொள்ள வேகமாக கரைக்கு இழுத்தான்.

ஆறு பெரிய அகலமில்லை. அதனால் எளிதில் இருவரும் கரை சேர்ந்தார்கள்.

இளலரசர் கரையேறினார்.

தடுமாறி நின்றார். மெல்ல அமர்ந்தார். மல்லாக்க சாய்ந்து இரண்டு காவ்களையும் அகட்டி.

"இளவரசே இங்கே ஏதேனும் காயம்பட்டிருக்கிறதா."

கவலையோடு குணசீலன் கேட்டான்.

"எதுவுமில்லை. ஒரு சின்ன அதிர்ச்சி. அவ்வளவு தான். பாதைகளையும் சரி செய்து இப்படிப்பட்ட வண்டிகளையும் நாம் செய்துவிட்டால், சேர தேசத்திற்கு முன்னும், பின்னும் போய் வருலது எளிதாகும். குறிப்பாய் பெண்கள் அதிகம் பயணப்பட முடியும். குலுக்கலே இல்லை. குறிப்பாய் மாட்டு வண்டிகளுக்கு இப்படிப்பட்ட வில் பொருத்துவது மிகப்பெரிய உதவியை நீ செய்திருக்கிறாய் குணசீவா. உன் அறிவும், ஆர்வமும் என்னைப் பரவசப்பட வைக்கின்றன. நீ தவறிப்போய் பாண்டிய தேசத்தில் பிறந்துவிட்டாய். சோழ தேசத்தில் பிறந்திருக்க வேண்டியவன் நீ. அப்படியிருந்திருப்பின் சேனாதிபதியாகியிருப் பாய்."

"இல்லை ஐயா. நான் பாண்டிய தேசத்துக்காரன்தான். அந்த தேசத்தின் வளத்துக்காகத்தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எங்கள் பெண்டுகளும் இம்மாதிரி மிருதுவான வண்டியில் பயணம் செய்ய வேண்டும். நடந்து நடந்தே கால் எலும்புகள் தேய்ந்த அந்தப் பெண்டுகளுக்கு இந்தச் சுகம் வரவேண்டும் என்பதும் என் ஆசை."

"செய்வோம். நிச்சயம் செய்வோம்."

இளவரசர் அவன் தோளில் கை ஊன்றி எழுந்து நின்றார், அருண்மொழிப்பட்டன் அருகே வந்து குதிரையிலிருந்து கீழே குதித்தான். மெய்க்காவல் வீரர்கள் கீழிறங்கினார்கள்.

"என்ன ஆயிற்று, விழுந்து விட்டாரா."

"நல்லவேளை ஆற்றில் விழுந்துவிட்டார்."

"அருண்மொழிப்பட்டன் இந்த மாதிரி வில் வைத்த தேர்கள் இன்னும் ஆயிரம் செய்துவிட வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது."

"எதற்கு இளவரசே."

அருண்மொழிப்பட்டன் தள்ளாடி நடப்பவரை பார்த்துக் கேட்டான்.

அவர் திரும்பி குணசீலனைப் பார்த்தார்.

"சற்று விலகியிரும் குணசீலரே." என்று கட்டளையிட்டார்.

குணசீலன் சரக்கென்று எழுந்து விலகிப்போனான். அருண்மொழி குணசீலனுக்குக் கிடைத்த மரியாதையை மனதுள் குறித்துக் கொண்டான்.

"அருண்மொழி ஒரு தேரில் மூன்று வீரர்கள் ஒரு சாரதி. மூன்று பேரும் விற்களோடு தங்களைச் சுற்றி அம்புகள் நிறைந்த பைகளோடு பயணப்பட்டு படையெடுத்தால், ஒரு நாள் பயணத்தில் திருவொற்றியூர் போய்விடலாம். திருவொற்றியூரிலிருந்து இன்னும் நான்கு நாள் பயணம். கங்க தேசத்திலிருந்து நான்கு அல்லது ஐந்து நாட்கள் பயணம். மேலைச்சாளுக்கியரை துவம்சம் செய்து விடலாம்."

"இளவரசே... எதற்கு இன்னும் போர்பற்றியே சிந்திக்கிறீர்கள்."

"ஏன், போர் நின்று விட்டது என்று நினைக்கிறாயா. இல்லை அருண்மொழி, முன்னிலும் உக்கிரமான ஒரு போர் நடக்கு மென்று எனக்குத் தோன்றுகிறது."

"எதனால் அப்படி நினைக்கிறீர்கள்."

"திருவொற்றியூரில் போய் வா என்று விடை கொடுத்த போர் வீரர்கள் குறைந்த பட்சம் இரண்டு வருடத்தில் மற்றவர் களைத் தயார் செய்து படையெடுப்புக்கு வழிவகுத்து நம்மை நோக்கி நிச்சயம் வரத்தான் செய்வார்கள். இரண்டு வருடத் திற்குள் ஆயிரம் தேர் செய்து விட முடியாதா."

இளவரசர் கை ஊன்றி எழுந்திருந்தார்.

அருண்மொழிப்பட்டன் அவரைத் தூக்கி நிறுத்தினான்.

"செய்துவிட முடியும்." அவருக்கு உறுதி சொன்னான்.

"பிரம்மராயரிடம் சொல். நமக்கு இப்படிப்பட்ட தேர்கள் தேவைப்படும். உடைந்திருந்த தேரைக் குடந்தைக்கு அனுப்பு. குடந்தையில் தேர்கள் செய்யச் சொல். அந்தத் தேர்களை நாம் திருமுனைப்பாடி நாட்டிற்கும். தொண்டை நாட்டிற்கும் அனுப்பி அங்கும் செய்யச் சொல்லலாம். இங்குவிட நல்ல மரங்கள் கீழைச் சாளுக்கியத்தில் அதிகம். அங்கும் செய்யச் சொல்லலாம். அந்தத் தேர்கள் பரவலாக பல இடங்களில் செய்யப்பட வேண்டும். இடையறாது மரத்தச்சர்கள், பல்வேறு ஊர்களில், இப்படிப்பட்ட தேர்களைச் செய்து கொண்டே இருக்க வேண்டும்."

"இளவரசே இங்கு கோயில் பணிகள் அதிகம் இருக்கும் போது, இந்தப் பணிகள் அதிகமல்லவா."

"உனக்குப் புரியவில்லையா அருண்மொழி. வெறும் கோயில் பணிகள் மட்டும் செய்து கொண்டிருந்தால் போதாது, நம் எல்லைகளைப் பலப்படுத்த வேண்டுமெனில் இம்மாதிரியான வேகமாக செல்லும் வாகனங்கள் தேவை. அருண்மொழி இன்னொன்றும் சொல்கிறேன். குணசீலனைப் பத்திரமாகப் பார்த்துக்கொள். நமது மெய்க்காவல் படை வீரர்களே அவன் மீது பொறாமைப்பட ஆரம்பித்துவிடுவார்கள். அவன் வாராது போல வந்த மாணிக்கம். அவனுக்கு இன்னும் சிறப்பான பதவி கொடு. அவனைச் சோழ தேசத்தவன் என்று அறிவித்து விடு."

"அவன் ஏற்கமாட்டானே இளவரசே."

"அலன் என்ன ஏற்பது. அவன் சோழதேசத்தவன். இன்னும் நுணுக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் அவனுக்கு சோழ தேசத்துப் பெண்ணை மணமுடித்து இங்கேயே கட்டிப்போடு. அவன் என்ன கேட்டாலும் கொடு."

"உங்களால் நடக்க முடியுமா."

"முடியும். ஆனால், இடுப்பில் ஒரு லலி இருக்கிறது. நான் நேரே அரண்மனைக்குப் போகிறேன். என்னைத் தொடர வேண்டாம். குணசீலனோடு கோயில் பக்கம் போய்விடு."

மெய்க்காவல் வீரர்கள் குதிரையில் ஏறிக்கொள்ள, இள வரசர் தன் குதிரையில் நிதானமாக ஏறி அமர்ந்து கொண்டார். அவருக்கு இடுப்பு வலி அதிகமாக இருந்தது. குதிரையைச் சொடுக்கினார்.

அவர் குதிரை நிதானமாக அவரைச் சுமந்து கொண்டு தஞ்சை அரண்மனை நோக்கிப் போயிற்று.

தளிச்சேரி பெண்டிர்க்கான குடியிருப்பின் தென் திசையில் வீடுகள் எழுப்பினார்கள்.

"சுவர் எழுப்பி தரைசெய்து விடுங்கள். கூரை போட வேண்டாம்." என்று கற்றளி சிற்பிக்குத் தகவல் வந்தது.

"ஏன் வெட்டவெளியைப் பார்த்துக் கொண்டு நாங்கள் படுத்துக்கிடக்க வேண்டுமென்று சக்ரவர்த்தியின் ஆணையா." தளிச்சேரி பெண்டுகள் சீறினார்கள்.

"எல்லாவற்றிற்கும் கேலியாகவும், குதர்க்கமாகவும் பேசுவதை நீங்கள் நிறுத்திக்கொள்வது உங்களுக்கு நல்லது. உங்களுக்குக் கூரை வீட்டை விட தட்டோடு வைத்து தளமாகச் செய்யலாமா என்ற யோசனை இருக்கிறது. தட்டோடுகள் தயாராகிக் கொண்டிருக்கின்றன. அது மட்டுமல்லாது அந்தத் தட்டோடுகளின் மீது வேய்வதற்கு வேறு வடிவமான ஒரு கூரையையும் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். பரிட்சார்த்தமாக இங்கே செய்து பார்ப்பார்கள்."

"அடிசக்கை. ஒருவேளை இடிந்து விழுந்தால் தளிச்சேரி பெண்டுகளோடு முடியட்டும். அரசரோ, அமைச்சரோ, உபசேனாதிபதிகளோ இதில் பாதிக்கப்படாமல் இருப்பது நல்லது என்று நினைக்கிறீர்கள்."

"நான் சொல்வதைச் சொல்லிவிட்டேன். வாயைக் கொடுத்து மாட்டிக்கொள்வேன் என்பது உன்னுடைய தலையெழுத்து என்றால் அதைத் தடுக்க யாரால் முடியும். பேசப்பேச உங்களுடைய புத்தியின் கோணல் எல்லோருக்கும் தெரியவருகிறது. உங்களுடைய ஆட்டம், பாட்டத்திற்கப்பால் நீங்கள் கேவலமானவர்கள் என்பதை நீங்களாகவே வெளியே சொல்லிக்கொள்ள வேண்டாம்."

ஒரு சிற்பி உரத்த குரலில் கண்டிக்க, இன்னொருத்தி வாய் திறக்க ஆதிச்சன் வீணை வாசிப்பவன் மெல்ல அடக்கினான்.

"போதும். அவர் நன்மைக்காக செய்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். எங்கேனும் ஒரு இடத்தில் பரிட்சார்த்தமாகப் பார்க்கத்தானே வேண்டும். நன்றாக அமைந்து விட்டால் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு எங்களுக்கென்று தனியாகச் செய்து கொடுத்தார்கள் என்று ஊரெல்லாம் பெருமைப்படுவாய் அல்லவா. அதற்கும் தயாராய் இரு" என்று சொல்ல பெண்கள் அடங்கிப் போனார்கள்.

ஓடுகள் வந்து இறங்கி தளிச்சேரி பெண்டுகளும், மக்களும் ஆவலாகப் பார்த்தார்கள்.

குணசீலன் வந்து நின்றான். கட்டடச் சிற்பிகள் அவனைச் சுற்றிக் கொண்டார்கள்.

"பனந்துண்டங்களுக்கு பதிலாக நல்ல மரக்கட்டைகளை ஒரு உத்திரமாக அடுக்குகள். மெல்லிய மரப்பட்டைகளைக் குறுக்காக வையுங்கள். இந்த உத்திரங்கள் நிற்பதற்காக பெரும் உத்திரங்கள் போட்டு தூண் நடுங்கள். மெல்லிய மரப்பலகைகள் மீது தட்டோடுகளை அடுக்கிக் கொண்டு வாருங்கள். அந்தத் தட்டோடுகளுக்கு மேல் இரண்டு பக்கமும் வளைவு வைத்து ஒரு கோடாக இருக்கின்ற ஓடுகளை வையுங்கள். உச்சியில் வெறுமே உள்ளங்கை போல் குவிந்த வளைவு ஓடுகளை அடுக்கி விடுங்கள். மழை ஒரு சொட்டுக்கூட உள்ளே விழாது. இன்னொரு விஷயம் ஓடு வைக்கும் போது உள்ளுக்குள்ளே வெள்ளை வண்ணம் அடித்து விடுங்கள். ஆக, கூரை பிரகாசமாக இருக்கும். ஒரு விளக்கு அடியில் எடுத்து வைத்தால் வெள்ளையில் அடித்து திரும்ப வரும்."

"மரத்தில் வர்ணம் பூச வேண்டுமா."

"நிச்சயம் பூச வேண்டும். அது மரத்தைப் பாதுகாக்கும்."

"வர்ணத்திற்கு எங்கே போவது."

"சீராளனிடம் சொல்லுங்கள். அவன் மரத்திறகு எந்த வர்ணம் பூசுவது என்பதைத் தெளிவாகச் சொல்வான்."

குணசீலன் சொல்லிவிட்டுப் போனான்.

குணசீலன் சொல்லிவிட்டுப் போனபிறகு சீராளன் வந்து நின்றான்.

அந்த ஓவியனை எவலோருக்கும் தெரிந்திருந்தது.

தளிச்சேரிப் பெண்டுகள் அவனைச் சூழ்ந்து கொண்டு வரவேற்றார்கள். சிறு பெண்கள் இவனைப் பார்த்து நாணினார்கள். ஒளிந்தும், மறைந்தும், பிறகு நேரே வந்ததும் அவனுடைய கவனத்தைத் திருப்ப முயற்சி செய்தார்கள்.

"இந்த குணசீவர் ஒரு ஞானி, சகலகலா வல்லவர். எதையும் அவர் கூர்மையாகப் பார்க்கிறார். தெளிவாகச் சிந்திக்கிறார். இந்த தட்டோடு மிக அற்புதமான விஷயம். உள்ளுக்குள் சத்தமே வராது. வெப்பம் வராதிருக்க வேறு ஒரு விஷயம் இங்கு ஒரு கட்டடச்சிற்பி செய்தார்."

"யாரது."

கங்கதேசத்து கட்டடச் சிற்பி, அடிமை வீரன். இங்கு கரியமாணிக்கம் என்றொரு பெண். அவர் வீடு மிகுந்த வெக்கையாக இருந்தது. அவர் கூரையைத் தூக்கி உள்ளிருக்கும் காற்று வெளியே போக ஏற்பாடு செய்தார்.

சீராளனுக்குக் கரியமாணிக்கத்தின் வீடு காட்டப்பட்டது. எச்சமண்டை கதவுகளை அகலத்திறந்து சீராளனை மரியாதை யாக வரவேற்றார். எச்சமண்டையின் பணிவு வித்தியாசமாக இருந்தது. மற்ற தேவரடியார்கள் உதடு சுழித்தும், தோட்களைக் குலுக்கியும் குழைந்தும், தழைத்தும் பேச இந்தப் பெண் சாதாரணமாக இருப்பதும் போர்த்திக்கொண்டு நடப்பதும் ஆச்சரியமாக இருந்தது.

தளிச்சேரி பெண்டிரில் அமைதியானவர்கள் உண்டு என்பதை அவன் புரிந்து கொண்டான். கூரையைத் தூக்கியிருப் பது பார்த்தான்.

"இது தேவையில்லை. ஒரு வேளை பலத்தோடு காற்றடித்தால் உள்ளுக்குள் தூரல்கள் வரக்கூடும். எதிரும், புதிருமாய் சுவர்கள் கூம்பாக எழும்புகின்ற இடத்தில் வட்டமாக ஒரு துவாரம்

செய்துவிட்டு, அந்த துவாரத்திற்கு வெளிப்பக்கம் ஓடுகளைப் புதைத்து விட்டார் மழைநீர் உள்ளேயும் வராது. உட்கார்ந்து வெளியேயும் போகும். அடியிலிருந்து காற்று வந்து வெப்பமாய் மேலே எழும்பி அந்த வெப்பக்காற்று வெளியே போனால் குளிர்காற்று உள்ளுக்குள் வந்து கொண்டே இருக்கும்." என்று சொல்ல கட்டடச் சிற்பிகள்' ஆமாம்.. ஆமாம்.. என்று தலையசைத்தார்கள்.

அந்தப் புது வீட்டின் கூரைக்கு அருகே கூம்பு வடிவமாக எழுந்திருக்கும் இடத்தில் இரண்டு வட்டங்கள் பொருத்தப் பட்டன. உள்ளே ஏணி போட்டு எவரும் புகுந்து விடாதிருக்க என்று சொல்லி கம்பிகள் பொருத்தப்பட்டன. அதன் வழியாக வரவேண்டுமென்றால் கம்பிகளை அறுத்தால்தான் முடியும் என்று அந்த உறுதி சோதித்துக் காட்டப்பட்டது. இரண்டு நாட்கள் கழித்து வர்ணங்கள் பூசிய உத்திரக் கட்டைகளைத் தளிச்சேரி வீட்டிற்குக் கொண்டு வந்து இறக்கினார்கள். எல்லா உத்திரக்கட்டைகளுக்கும் பச்சை வர்ணம் அடித்திருந்தது. குறுக்கே போடப்பட்ட ஓடுகள் படிய வேண்டிய மெல்லிய மரப் பட்டைகளுக்கு வெள்ளை வர்ணம். அந்தக் கட்டைகளும் வெள்ளை வர்ணம் என்கிற போதே இரண்டும் ஒன்றோடு ஒன்று முயங்கி ஒரு விதமான பிரமையை ஏற்படுத்தின. கூரை இப்படித்தான் இருக்குமென்று தரையில் தட்டோடுகளைப்பரப்பி அதன் மீது ஓடு வைத்துக் காண்பித்த போது பலபேர் ஆச்சரியப்பட்டார்கள்."

"சோழதேசத்தின் முகமே மாறிவிடும் போலிருக்குதய்யா. அரசர் கோயில் கட்டினாலும் கட்டினார். கோயில் எழும்பு கிறதோ, இல்லையோ நம்முடைய வீடுகளெல்லாம் அற்புதமாக மாறுகின்றன."

"இதில் ஒரு அற்புதமும் இல்லை. நம் வீடுகள் என்று சொல்லும்போது ஒரு அலட்சியமாக பனைத்துண்டங்களும், வளைவு ஓடுகளும் என்று நம்மை நாமே இழிவுபடுத்திக் கொண்டு ஒரு பொந்துக்குள் வாழ்ந்து கொண்டிருந்தோம். இப்போது அந்த நிலைமை மாறி விட்டது. நல்ல விஷயங்கள் கைக்கு அருகே இருக்கின்றன. பயன்படுத்திக் கொள்கிறோம். அவ்வளவுதான்."

சீராளன் சாதாரணமாகப் பதில் சொன்னான்.

"ஆனால், நீங்களெல்லாம் இன்னும் ஓலைக் குடிசைக் குள்ளே இருக்கிறீர்களே."

“வரும். மெல்லக் கட்டிக் கொள்ளலாம்.”

“நீங்கள் கட்டிக்கொண்டு எங்களுக்கு கட்டினால் என்ன.”

ஒரு தளிச்சேரி இளம்பெண் சீராளனைப் பார்த்துக் கேட்டாள்.

“இல்லை, உங்களுடைய வீடுகளெல்லாம் பரிட்சார்த்த மானவை. நீங்கள் குதி குதியென்று வீட்டுக்குள் குதிப்பீர்கள். இப்படி குதிப்பவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்து உங்கள் குதியலுக்கே இந்த வீடு தாங்குகிறதென்றால், எங்களைப் போன்று மிருதுவாய் பேசுகிறவர்களுக்கு வீடு எப்படி கட்டிக் கொள்ள வேண்டும் என்று தெள்ளத் தெளிவாகத் தெரிந்துவிடும். வாசல் திண்ணை, அந்தத் திண்ணைக்குச் சிகப்பு நிறம், தூண்களுக்கு மெல்லிய வெள்ளை மணல் நிறம். கூடத்துத் தரைக்குச் சிகப்பு நிறம். மற்ற அறைகளின் தரைக்கு மஞ்சள் நிறம். முற்றத்திற்கு மட்டும் கருங்கள் தளம். கூடம் கழுவிய தண்ணீர் கலரின் அடி வழியே ஓடி வீட்டிற்கு பின்புறம் போய் விழ வேண்டும். கருங்கல் பலகைகள் அதிகம் கிடைக்கின்றன. சுவர் கட்டும்போதே இந்தக் கருங்கல் பலகைகளை பண்டங்களை வைக்கின்ற இடமாக, துணிகள் மடித்து வைக்கும் இடமாகச் செய்து விடலாம்.”

அலன் விதம்விதமாய் குறிப்புகள் எடுத்துக்கொண்டு போனான்.

குணசீலனும் அலனும் இரண்டு நாள் கழித்து ஒன்றாக வந்தார்கள். அந்த வீட்டைக் கட்டடச் சிற்பிகளோடு சுற்றிச்சுற்றி பார்வையிட்டார்கள். கட்டி முடித்த வீட்டின் திண்ணையில் உட்கார்ந்து பேசினார்கள்.

ஆண்களும், பெண்களும் அவர்கள் பேசுவதை வேடிக்கை பார்த்தார்கள்.

“முற்றத்துச் சுவரிலும் முள்கம்பிகள் பதிந்து விடலாம். பாதுகாப்பாக இருக்குமல்லவா.” என்று குணசீலன் சொல்ல, அவனை சீராளன் பாராட்டினான்.

கூடத்தில் பிறை மாடம், வழிநடையில் ஒரு திண்ணை. கதவில் முக்கோணமாய் ஓட்டைகள். உள்புற கதவுக்கு இரும்பு நாதாங்கி, சமையல் அறைக்குப் புகைபோக்கி. சமையல் அறைக்குள் ஒரு தாழ்ந்த ஜன்னல், தாழ்ந்த ஜன்னலுக்கப்பால் கொல்லைப்புறத்தில் அம்மியும், ஆட்டுக்கல்லும் அதற்கப்பால்

குளியலறை. அதற்கப்பால் சிறு தோட்டம் என்று வகைப்படுத்திக் கொடுத்தார்கள்.

கூடத்தில் உத்திரத்தில் ஊஞ்சல் மாட்டும் கொக்கிகள் பொருத்தினார்கள். நான்கு வீடுகள் ஒட்டு மொத்தமாய் தயாரானதும், இதுதான் கட்டுமான முறை என்று சிற்பிகளிடம் சொல்லிக் கொண்டு தளிச்சேரி பெண்டுகளிடம் விடுதலை பெற, தளிச்சேரி பெண்டுகள் குணசீலரின் சீராளனின் கைகளைப் பற்றிக் கொண்டு கண்ணில் ஒற்றிக் கொண்டு அழுதார்கள்.

“உங்களுக்காக ஒரு ஆட்டம் போடுகிறோம். வந்து பார்த்துவிட்டுப் போங்கள்.” என்று இடுப்பைக் கட்டிக் கொண்டு பேசினார்கள்.

“இல்லை. வேலைகள் அதிகம் இருக்கின்றன ஆடுங்கள். எல்லோரும் பார்த்து மகிழும்படி ஆடுங்கள். எந்தக் கலலையும் தீர்க்கும் வண்ணம் ஆடிப் பாடுங்கள். உங்களுடைய உற்சாகம் தான். இங்குள்ள வீரர்களை மிகப் பெரிய பணிக்கு ஆயத்தப் படுத்தும். உங்களை இந்தச் சிற்பிகளுக்காகவும், வீரர்களுக்காக வுமே தத்தம் செய்யுங்கள். அது போதும்” என்று சொன்னார்கள்.

தளிச்சேரிப் பெண்டுகளுக்கு அந்த வார்த்தைகள் பிடித்திருந்தன.

உபசேனாதிபதிகளும், கருமார்களும், நெசவாளர்களும், தையற்காரர்களும், தேவாரப் பண்பாடுகிறவர்களும் அந்த வீடுகளை லந்து பார்த்து வியந்து விட்டுப் போனார்கள். தஞ்சை நகரம் முழுவதும் தளிச்சேரி பெண்களுக்கு உண்டான புதிய வீடுகள் பற்றி பாராட்டி பரபரப்பாகப் பேசப்பட்டன.

தளிச்சேரிப் பெண்டுகள் மீது நீறு பூத்த நெருப்பாக பலருக்குப் பொறாமை வந்தது.

“பொறந்தா ஆட்டக்காரியா பொறக்கணும். நானும் பொறந்திருக்கேனே. நாய் ஜென்மம்.” என்று குலப்பெண்கள் அலுத்துக் கொண்டார்கள்.

வந்து பாருங்களடி இங்கே வாழ்க்கை கிழிந்து தொங்குவதை என்று தளிச்சேரி பெண்டுகள் பெரிதாக குலப்பெண்களிடம் அலட்டிக் கொண்டார்கள்.

ஆனால், முன்னெப்போதும் விட வாழ்க்கை ரம்மியமாய் மாறியிருக்கிறது என்பதை அவர்களுக்குள்ளாகவே பேசிக் கொண்டார்கள்.

“அவ்வப்போது ஊர் நினைவு வந்து லாட்டுகிறது. ஒரு நடை ஊருக்குப் போய் விட்டு வந்து விடலாம் என்று தோன்றுகிறது. நல்ல சாலைகள் போடுகிறார்களாமே.”

“ஆமாம். நாற்புறங்களிலிருந்தும் தானியங்கள் வரவேண்டு மல்லவா அதனால் கெட்டியாக நார்த்தா மலையிலிருந்து தஞ்சைக்குத் திருவல்லம் வழியாக சாலை போட்டதுபோல, நாலாபுறமும் போடுகிறார்கள். ஒரு மாட்டு வண்டியில் ஏறினால் இரண்டு நாளில் குடந்தை போய்விடலாம். இரண்டு நாளில் திருவாரூர் போய் விடலாம்.”

“குதிரை ஏறத் தெரியுமா. தெரிந்திருப்பின் ஒரே நாள் பயணம்.”

“தேர் ஓட்டுவது கடினமா.”

“இல்லவேயில்லை. நல்ல உயரமான பெட்டைக் குதிரைகள் சொன்னபடி கேட்கும்.”

“இப்பொழுது இன்னொன்று நடந்து கொண்டிருக்கிறதடி. மூன்று பேர்கள் அல்லது நான்கு பேர்கள் அமர்ந்து போகும் சிறுதேர்கள் செய்கிறார்களாம். ரெட்டைக் குதிரை பூட்டியிருக் கிறதாம். குலுக்கலே இல்லையாம். ஆற்று நீரில் பூக்கள் மிதந்து போகுமே அந்தப் பூவில் அமர்ந்து போனால் என்ன குலுக்கல் இருக்கும். அவ்வளவுதான் குலுக்கல். மரச்சக்கரங்கள் செய்ய, இடைவிடாது தச்சர்கள் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஓடுகளுக்கு அடியில் போடப் பட்டிருக்கிற கட்டைகளெல்லாம் அந்த ஆரங்கள் செய்யும்போது கழித்தவை.”

“ஆக, ஒன்று கூட வீணாவதில்லை என்று சொல்.”

“வீணா... சக்கைகளைக் கூட எடுத்துக் கொண்டு போய் எரிக்கிறார்கள்”

“எதற்கு.”

“சமையலுக்குத்தான். சுடுநீரில், சுக்கு தட்டிப் போட்டுக் குடிக்கக் கொடுத்தார்கள். பனைவெல்லமும் வந்துவிடும். அப்படி பனைவெல்லம் வந்துவிட்டால் இன்னும் அந்தச் சுவைநீர் நன்றாக இருக்கும்.”

“வாழ்க்கையே மாறிக் கொண்டிருக்கிறதல்லவா.”

“ஆமாம். எல்லார் வாழ்க்கையும் மாறிக் கொண்டிருக்கிறது.”

"இதற்குக் காரணம் கோவில் கட்டுவதா."

"இல்லை. போரில் வெற்றி பெற்றது."

"என்னடி சொல்கிறாய். இதற்கு முன் போர் நடந்த தில்லையா. போரில் வெற்றி பெற்றதில்லையா. இப்பொழுது கோவில் கட்டுவதால்தானே இத்தனை மாற்றங்கள் ஏற்படு கின்றன."

"போரில் இதுவரை வெற்றி பெற்றிருக்கிறோம். தோல்வியுற் றிருக்கிறோம். ஆனால், சக்ரவர்த்தி ஸ்ரீ இராஜராஜத்தேவர் ஆளுமைக்கு வந்தபிறகு தோல்வி என்பதே இல்லை. குடந்தை யிலிருந்து தஞ்சை வரை எல்லா கிராமங்களிலும் மூன்று நான்கு ஆட்டுப் பட்டிகள் இருக்கின்றன. ஆடுகள் அதிகமாகிவிட்டன. யாதவர்களுக்கு அதிகமான வேலை. திருவாரூரில் இடையர்கள் வாசலில் வந்து மாடு இருக்கிறதா? மாடு இருக்கிறதா? என்று கெஞ்சுவார்கள். இப்பொழுது அவர்களை மற்றவர்கள் கெஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். மேய்ப்பதற்கு யாதவர்கள் இல்லாததால் தாங்கள் வீட்டு எருமைகளையும், பசுக்களையும் பெண்களே ஓட்டிப்போய் மேய்த்துவிட்டு வருகிறார்கள். நீண்ட கயிறுகள் கொண்டு போய் மாட்டுக் கொம்பில் கட்டி முளையடித்து நிற்க வைத்து புள்வெளியில் விட்டுவிட்டு வருகிறார்கள். மாலை போய் அழைத்துவர ஏற்பாடாகிறது.

பாலும், வெண்ணெயும், நெய்யும் குறைவரக் கிடைக் கின்றன. மறவர்கள் ஆட்டு மாமிசம் சாப்பிடாத நாளே இல்லை என்பது போல் ஆகிவிட்டது. ஆனாலும், இந்த மாற்றங்கள் ஏனோ வயிற்றைப் பிசைய வைக்கின்றன. மாற்றங்கள் வெகு வேகமாக நடைபெறுகின்றனவே என்ற ஒரு பயம் உருவாகிறது.

என்னுடைய சொந்த ஊரான ஆயிரம்தளியில் மரங்கள் அதிகம் உண்டு. அந்த ஊர் சற்று பள்ளமான ஊர். நல்ல மழை பெய்தால் நீர் தேங்கும். அப்படித் தேங்கிய நீரை உறிஞ்சி மரங்கள் அகலமாய், உயரமாய் வளரும். எப்பொழுதுமே ஈரம் கலந்து மெத்தென்று கிராமம் முழுவதும் ஒரு குளுமை இருக்கும். நிழல் அதிகம் இருக்கும். விடியல் நேரம் கிழக்குப்பக்கம் வேசாக வெளுக்க பச்சை நெடியும், வைக்கோல் நெடியும் மூக்கைத் துளைக்க, நான் திண்ணையில் வந்து உட்கார்ந்து கொள்வேன்.

எத்தனை விதமான பட்சிகள். எவ்வளவு அழகான குரல்கள் நன்கு வெளிச்சம் வரும்வரை அவை விதம்விதமாய் பேசிக் கொண்டிருக்கும். எல்லார் வீட்டிலிருந்தும் கறவைகளை

அவிழ்த்து விடுவார்கள். கறவைகள் நன்கு விடிந்தபிறகு வேகமாக தெருக்களில் நடந்து புல்வெளி நோக்கிப் போகும். நாங்கள் எல்லோரும் போய் பசுக்கள் போனபிறகு அந்த இடத்தை விழுந்து வணங்குவோம். அதற்குள் பசுவிலிருந்து கறந்தபால் காய்ச்சப்பட்டிருக்கும். அதனுடன் தேன் சேர்த்து ஒரு சொம்பு முழுவதும் பருகுவோம். பிறகு காய்கறிகளை பச்சையாகத் தின்போம். நன்றாக வெய்யில் வரும் நேரத்தில் ஒரு ஆட்டம் ஆடுவோம். பிறகு குளிக்கப்போவோம். இங்கு அப்படி எதுவும் செய்யவே முடியவில்லை. தஞ்சையில் குயில்களே கூவுவ தில்லையோ என்று பயமாக இருக்கிறது. நகரைச் சுற்றியுள்ள மரங்களெல்லாம் வெட்டிச் சாய்க்கப்பட்டு பலகைகளாக அறுக்கப்பட்டு இப்படிக் கூரைகளாகவும், படுக்கைகளாகவும் மாறிக் கொண்டிருக்கின்றன. வீட்டு வாசலில் சரிவுக்கூரை போட்டிருப்போம். அங்கே வரிசையாக கயிற்றுக் கட்டில்கள் போட்டுப் பெண்கள் எல்லோரும் போர்த்திக் கொண்டு தூங்கு வோம். சிலுசிலுவென்ற உடம்பு முழுவதும் வருடிக் கொடுக்கிற காற்று வீசிக் கொண்டேயிருக்கும். தஞ்சையில் ஏனோ காற்று வெப்பமாகவே இருக்கிறது. ஒரு புழுக்கமாக நிரந்தரமாக இருக்கிறது"

"ஏன் எப்படி."

"மக்கள் கூட்டம் அதிகம் அதனால்தான்."

ஒருத்தி சொன்னாள்.

"அதுமட்டுமில்லை. ஓயாத உளிச்சத்தம். மனிதர்கள் சப்தம். மாட்டு வண்டிகளின் குதிரை வண்டிகளின் சப்தம், வீடெல்லாம் வசதிதான். ஆனால் நிம்மதியில்லை. மண் தரையின் சுகமில்லை. ஓலைக்குடிசையின் குளுமையில்லை. இந்த வீடு எனக்கு அன்னியமாக இருக்கிறது. என்னோடு ஒட்ட வில்லை."

வீட்டுக்குள் குடி புகுந்தவள் பேசினாள்.

"உனக்கு வயதாகிவிட்டதடி. ஏதோ ஒரு விதமாக வாழ்ந்து விட்டாய். அதையே மனம் பற்றிக் கொண்டிருக்கிறது. இங்குள்ள இளம் பெண்களைக் கேட்டுப்பார். பத்து வயதுதான் ஆகிறது. நெஞ்சே நிமிரவில்லை. இலவாகச் துணிக்கந்தையைச் சுருட்டி வைத்துக் கொண்டு நெஞ்சு வந்துவிட்டதுபோல, மேலே போர்த்திக் கொண்டு அலைகிறாள். அவளுக்கு இந்த வீடு மி கவும் பிடித்துவிட்டது. அவள் குயில் கூவுவதையோ, பச்சை மரங்களையோ, மழைநீர் தேக்கத்தையோ பார்க்கவேயில்லை.

அவளுக்குத் தெரிந்தது இந்தக் கூச்சல். கூரை, சிகப்புத் திண்ணை, நீ நிதானமாக உன் தாய் கொடுத்தபடிதானே ஆடுகிறாய். அவள் இன்னும் துரிதமாக செயல்படுகிறாள். மறவர்கள்... வேடுவன் வேடுவச்சி கைத்தட்டுவதைப் பார்த்துவிட்டாளல்லவா. இப்பொழுது விதம்விதமாக ஜோடிகள் ஆடுவதை அபிநயம் செய்கிறார்கள்."

"என்ன அபிநயம். ஒரே குதூகலமாக கூத்து ஆடுகிறார்கள். முழவையும், மத்தளத்தையும் துரிதமாக இசைக்கச் சொல்லி உடைகள் பறக்க ஆடுகிறார்கள். மறவர்கள் காசு அள்ளிப்போட வாரிக்கொண்டு ஓடுகிறார்கள். மொத்தமும் கொண்டு வந்து இங்கே கொடுப்பதில்லை. கொஞ்சம் அவர்களே வைத்துக் கொள்கிறார்கள். அப்படியொரு திருட்டுத்தனமும் நடக்கிறது. அந்தக் காசுக்கு வெள்ளி நகைகள் வாங்குகிறார்கள். பொன்முலாம் பூசிய செப்பு நகைகள் வாங்குகிறார்கள். சந்தன எண்ணெயும், குங்குமும் உதட்டுச் சாயமும், தலைக்கு வாசனைப் பொடியும் தடவிக் கொள்கிறார்கள். உள்ளாவைச் சந்தைகளில் புகுந்து புறப்பட்டு வருகிறார்கள்."

"எதுவும் கெடுதல் நடக்காதா."

"இதுவரை நடக்கவில்லை."

"மறவர்கள் ஏதாவது கேலி செய்வார்களே."

"இவர்களும் பதிலுக்குச் செய்துவிட்டு வருகிறார்கள்."

"வெட்கப்படாத ஒரு தளிச்சேரிப் பெண்கள் கூட்டம் உருவாகிவிட்டது என்று சொல்."

"அப்படித்தான் இருக்கிறது. பேச்சு... பேச்சு... ஓயாத பேச்சு. காலையில் கடுகஞ்சியைக் குடித்துவிட்டு மிச்சப் பொழுதுக்கு வந்து உணருந்தி தூங்கிவிட்டு மறுபடியும் புறப்பட்டுபோய் இரவு ஊரடங்கும் நேரத்திற்கு வருகிறார்கள். எப்பொழுது நாட்டிய மாடுவாய் என்று கேட்டால் வாரத்திற்கு இரண்டுமுறை நாட்டிய மாடினால் அது என்ன வகையில் சேர்த்தி. என்ன படிப்பு வரும். அவள் எங்குபோய் எந்த மேடையில் ஆடமுடியும் சில சமயம் வயிற்றுக்கு நடுவே ஒரு பயம் வந்து கவ்விக் கொள்கிறது. இந்தப் பெண் அசிங்கமாய் போய்விடுவாளோ என்ற கலவரம் ஏற்படுகிறது. பதியிலார்தான். தளிச்சேரி பெண்டிர்தான். ஆண்களின் கண்களை நேருக்கு நேர் பார்த்துப் பேசுகின்ற விஷயத்தைக் கற்றுக் கொண்டவள்தான். ஆனால், அதற்காகத்

தொட்டுத் தொட்டுப் பேசுலதா. அது ஆணை கிளர்ச்சியுறச் செய்யாதா."

"இப்படிச் சொன்னால் கோபம் வருகிறது. என்ன எவனுக்காவது திருமணம் முடித்துவிடு. அவனோடேயே வாழ்ந்து சாகிறேன் என்று உரக்கக் கத்துகிறாள். சாவதற்குத்தான் திருமணம் என்று இவளுக்கு யாரோ சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்."


அந்த இரண்டு தளிச்சேரி மத்திம வயதுப் பெண்களும் வெறுமே தரை பார்த்து நெடுநேரம் உட்கார்ந்து கொண்டிருந் தார்கள்.

# 136

**மொ**த்தம் நூறு அறுபத்தேழு பாறைக்கற்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அதில் நாம் விரும்பிய படி மூன்று கோல் உயரத்திற்கு நான்கு பாறைகள் கொண்டு லரப்பட்டிருக்கின்றன. அந்தப் பாறைகள் வருவதற்குத் தான் பதிமூன்று நாட்களாகி விட்டன. மூன்று மாடுகள் இறந்து போய், ஒரு யானை துலண்டு போய், பிறகு வேறு வண்டியில் மாற்றி கிட்டத்தட்ட இருநூற்றிப்பதினாறு பேர் முன்னும் பின்னும் அசைத்து அசைத்து இழுத்து வந்து, அந்தப் பாறைகளைக் கொண்டு வந்து சேர்த்திருப்பார்கள். நீங்கள் சொல்லும் அளவைப் பார்த்தால் இந்த வேலை மிகமிகப் பிரம்மாண்டமாய் போய்விடுமோ என்ற பயம் இருக்கிறது. நான் இந்த வார்த்தையைச் சொல்லுவதற்கு மன்னித்துக்கொள்ளுங்கள் பெருந்தச்சரே. இது முடியாது போகுமோ என்ற கவலையும் இப்போது எனக்கு வந்துவிட்டது."

சதாசிவாச்சாரி தனது குடும்பத்தை அழைத்துப் போவதற்காக வந்திருந்தவர் முழங்காலைத் தடவிக் கொண்டு பெருந்தச்சரோடு பேசினார்.

"இந்தப் பேச்சில் ஓரளவு உண்மை இருக்கிறது. இந்த வேலை குறிப்பாய் உங்கள் வேலை அலுப்பானதுதான். ஆனால், இது



முடியா வேலை அல்ல. வெளியே இந்தப் பக்கமுள்ள சிற்பிகள் கறுகறுப்பாக இருக்கிறார்கள். உங்கள் கற்கள் வந்து சேர்ந்தவுடன் எப்படி அதை அடுக்குவது என்று வெகுவேகமாக யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இன்று காலை நித்த வினோதப் பெருந்தச்சன், நம்முடைய குணவன் வேறு ஒரு விஷயத்தைச் சொன்னான். இப்படிப் பாறைகளைக் கொண்டு வந்து அடி மட்டத்திற்காக அவைகளைக் கிடத்துவதைவிட, இந்தப் பாறை களுக்கு பதிலாய் இங்கேயே கிடக்கின்ற வேறு ஒரு கல்லைப் பயன்படுத்தவாமே." என்று கொண்டு வந்து காட்டினான்.

"பூமியை நோண்டினால் இந்தச் செம்மண் இறுகிக் கிடக்கிறது. அது கிட்டத்தட்ட பாறையினுடைய வலியை ஒத்து இருக்கிறது. ஆனால், அது பாறையல்ல.. கல். ஒரு விதமான கல். செம்பூரான் கல் என்று இங்குள்ளவர்கள் சொல்கிறார்கள். இங்கு அஸ்திவாரம் தோண்டப்பட்ட போது சில இடங்களில் வீரர்களுடைய கருவிகளின் முனைகள் உடைந்துச் சிதறுவதைக் கண்டேன். இரும்பு உளியைப் பெயர்க்கும் படியாக அந்த இடம் கடினமாக இருந்தது. அதன் மேலே படர்ந்திருக்கின்ற இரண்டு கை உயரமுள்ள களிமண்ணை அகற்றிவிட்டால் கிடைக்கிறது. அதை உளிபோட்டு உடைக்காது. மரம் அறுப்பது போல் குணவன் அறுக்கச் சொன்னான். இரண்டு முழத்திற்கு இரண்டு முழம் என்று ஒரு கணக்கு வைத்து அறுக்க, அந்தச் செம்பூரான் கற்களின் மீது நீங்கள் கொண்டு வந்த பாறைகளை இறக்கச் சொன்னேன். ஆறு கரும் பாறைகளை அடுக்கிய பின்னரும் அந்தச் செம்பூரான் கற்கள் மிக உறுதியாக நிற்கின்றன. அந்தச் செம்பூரான் கற்களை இரண்டு மதிற்கவர்களாக அடுக்கி, நடுவே இடை வெளிவிட்டு, அந்த இரண்டு மதிற்கவர் பாறைகள் மீது கரும்பாறைகள் வைத்து, அதன் மீது மெல்ல யானையை ஏற்றி நிற்க வைத்து ஒரு அளவு நூல் கூட செம்பூரான் கல் கீழிறங்க வில்லை. எனவே சதாசிவாச்சாரி, அடிமட்ட கற்களுக்கு அஸ்தி வாரத்திற்கு இனி கரும்பாறைக் கற்கள் தேவைப்படாது. செம்பூரான் கற்களை நான் இரண்டு மதில் கவர்மீதுதான் பாறைப்பலகைகள் கிடத்தப்படும். அந்தப் பாறை பலகையின் மீதுதான் விமானம் எழும்."

"ஐயா... நீங்கள் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. மறுதலித் துப் பேசுவதற்கு மன்னித்துக் கொள்ளுங்கள். ஆறு செம்பூரான் கற்களின் மீது பாறையை வைத்து அதன்மீது யானையை வைத்தால் அது மிகப்பெரிய இடமல்ல. நாம் வைக்கப் போகின்ற விஷயம், ஏழு பனை உயரம். ஆரம்பத்தில் தாங்கவாம். மழை

பெய்து.. மழை பெய்து பூமி இளகும்போது விமானம் உள்ளுக்குள் அழுந்தாதா"

"இல்லை. அழுந்துகிற வண்ணமாய் செம்பூரான் கற்களின் மேலே சகலவிதமான கனமும் வராது. அந்தக் கனம் பரவப்படும். நான் சொல்வது உங்களுக்குப் புரியவில்லையா. இரண்டு மதில் சுவர்கள். அதாவது இரண்டு முழப் பாறையாய் நான்கு செம் பூரான் கற்கள் ஒரு மதில் சுவராக நிற்கும். அதாவது பதினெட்டு முழத்திற்கு ஒரு மதில் சுவர் உயரமாய் எழுப்பப்படும். நடுவே உள்ள இடைவெளியின் மீது பாறைப்பலகை கிடத்தப்படும் அதாவது அந்தப் பாறை பலகையில் இரண்டு முழம் ஒரு மதில் சுவற்றிலும், இன்னொரு இரண்டு முழம் ஒரு மதில் சுவற்றிலும் இருக்கும். அந்தப்பாறை செம்பூரான் கல் எல்வாம் ஒரு அடித்தளமாக உருவாகிவிட்டது. அதாவது அந்தப் பாறை இப்போது விமானம் தாங்கிக் கல். அடித்தளத்திலிருந்து பாறையைத் தாங்குகின்றன. உயரம் வரை மூன்று பனை உயரம். அதற்குப் பிறகு தான் கருங்கல் பலகை தேவைப்படும்.

"இது மன்னருக்குத் தெரியுமா."

"நேற்று சொல்லிட்டேன். மாக்கல்லில் இலத்தி ஒரு மாதிரி செய்து கொண்டிருக்கிறான். அந்த மாதிரியில் அஸ்திவாரம் எடுத்துக் காண்பித்தேன். கனம் சம அளவில் பரவி விட்டதை மன்னர் உணர்ந்துவிட்டார்."

"யாரும் எதிர்க்கவேயில்லையா."

"இந்தப் பாண்டிய தேசத்து இளைஞன் குணசீலன் மட்டும் மௌனமாக இருந்தான். இளவரசர் இராஜேந்திரர் மட்டும் அவனை விசாரிக்க. இதை சொரிகல் என்று மதுரையில் சொல்வார்கள். சொரி கல்லிவா கோயிவ் எழுப்புவது என்று சற்று வேதனையோடு கேட்டான். ஆனால் சக்ரவர்த்தி அதைத் துடைத்து எடுத்துவிட்டார். கருங்கல்லிலா கோயில் கட்டுவது. செங்கல்லில்தானே கட்ட வேண்டும். கருங் கல்லில் சமாதிதானே கட்டுவார்கள் என்று ஒரு காலத்தில் சொன்னோம். இப்பொழுது கருங்கல்லில் கோவில் கட்டுவது நம்முடைய கலாச்சாரமாகி விட்டது. அதேபோல செம்பூரான் கல்லும் பின்னால் ஒரு கலாச் சாரமாகும். சரியாக இருக்குமென்று தோன்றினால் கட்டுங்கள் என்று உத்தரவு கொடுத்து விட்டார்."

"அப்படியானால் நாம் நினைக்கும் அளவுக்கு வேலை இல்லை அல்லவா."

“ஆமாம். அதேசமயம் கற்பாறைகளைக் கொண்டு வந்து குவியுங்கள். அதைப் பலகை பலகையாக அறுத்து ஓரமாக வைத்துவிட்டால் பிறகு அடுக்குகின்ற வேலை எளிது. சரியாக அறுக்க வராத பாறைகள் படிக்கற்களாக, தளங்களாக மாறும். தூணுக்கென்று தனியாகப் பாறைகளைத் தேர்ந்தெடுத்து வைத்திருக்கிறார்கள். அந்த லேலைகளைச் சிற்பிகள் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். எனவே, முழு வீச்சில் கோயில் பணி நடந்து கொண்டிருக்கிறது.”

“இளைத்து விட்டீர்கள்.”

சதாசிவாச்சாரி பெருந்தச்சரின் முதுகைத் தடவியபடி சொன்னார்.

“நானா... நேற்று இரவுகூட என் இரண்டாவது மனைவி குண்டாகிவிட்டீர்கள், மூச்சு திணறுகிறது என்று சொன்னாள். சொல்லிவிட்டு லாய்விட்டு பெரிதாகச் சிரித்தார்.”

“அது சரி... ஆனால், முகத்தில் ஒரு வாட்டமிருக்கிறது. ஒருவேளை இது கவலையாகவும் இருக்கலாம்.”

“கவவைதான். கோவில் பணி முடியவேண்டுமே என்ற கவலை அல்ல சதாசிவம். அதற்கு உன்னைப் போன்ற சரியான ஆட்கள் எனக்கு எல்லா லேலைகளுக்கும் கிடைத்துவிட்டார்கள். மரத்தச்சர்களின் உதவி, கருமார்களின் உதவி அற்புதமாக இருக்கிறது. மற்றவர்களும் அதிகம் பிணக்கு காட்டவில்லை. கணக்கு வழக்குகளில் குளறுபடி நேருமா என்று எனக்கு ஒரு கவலை வந்திருக்கிறது.”

“நன்றாகச் சொன்னீர்கள். எனக்குக் கீழே ஒரு கல்தச்சுக் கரணத்தார் வேலை செய்கிறார். எந்நேரமும் பதட்டம் மிகுந்து காணப்படுகிறார். எப்பொழுதும் எல்லோரிடமும் சிடுசிடுப்பாகவே இருக்கிறார். தானும் சந்தோஷமாக இல்லாமல, மற்றவரையும் சந்தோக்ஷப்படுத்தாமல் எப்பொழுதும் எரிச்சலையும், கோபத்தையும், ஆத்திரத்தையும் பரப்பிக் கொண்டிருக்கிறார். சிலசமயம் அலர் கோபத்தில் துடிப்பதைப் பார்த்தால் ஹிருதயம் வெடித்து இறந்து விடுவாரோ என்ற பயம் ஏற்படுவதுண்டு. அவரைச் சமாதானப்படுத்தக்கூடத் தோன்றாமல் அவர் இருக்குமிடம் விட்டு அகன்று விடுகிறேன். அவர் லெகு சீக்கிரம் நோயுற்று விடுலார் என்பது என் எண்ணம். அப்படி சட்டென்று அவருக்கு ஏதேனும் ஆனால், அங்கே வேலைகள் ஸ்தம்பிக்கும் நிறைய காசு அலரிடம் இருக்கிறது. எவ்லளவு செலலழித்திருக்

கிறார். என்ன கணக்கு என்று எவருக்கும் தெரியாது. எனவே..." சதாசிவாச்சாரி நிறுத்தினார்.

"எனவே, இன்னொரு மனிதர் வேண்டும். ஒரு சரியான கணக்கர் வேண்டும் அல்லவா."

பெருந்தச்சர் நெடுமூச்செறிந்தார்.

"வெகு நிச்சயம் வேண்டும். கல்தச்சர்களைவிட, தூக்குகின்ற மறவர்களைவிட, இப்போது உடனடியாகத் தேவை நல்ல கணக்கர், கல்தச்சுகரணத்தார்கள்."


"கவலைப்படாதே. இதுவரைக்கும் நமக்கு விதம் விதமாக உதவி செய்த ஈசன் இதற்கும் உதவி செய்வான். தென்னாடுடைய சிவனே போற்றி.. எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி... ஒரு நல்ல வாக்கியம் சிவனைப்பற்றிப் புகழும் பாடலில் இருக்கிற தென்று சொன்னார்கள். அவனருளாலே அவன் தாள் வணங்கு வதற்குகூட அவன் அருள் வேண்டும். அப்படியிருக்க, அவனுக் காக எழுப்பப்படும் கோயிலில் நாம் என்ன செய்கிறோம். அவன் கணக்கர் அனுப்புவான்."

உண்மையிலேயே ஒரு பணிவு பெருந்தச்சரின் நெஞ்சுக்குள் சுற்றிக் கொண்டது. அந்தப் பணிவின் கனிவு அவர் முகத்தில் கண்களில் இமையில் தெரிந்தது. சதாச்சிவாச்சாரி பக்தியுடன் பெருந்தச்சரைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டார்.

எங்கும் பரந்த இறை என்ற விஷயம் சில சமயம் மனிதருக் குள் இறங்கி தன் பணியைத் தானே செவ்வனே நடத்திக் கொள்கிறது என்று சதாசிவாச்சாரிக்கும் புரிந்து போயிற்று.

# 137

கருவூர்த்தேவரும் அவரது சீடர்களும் தஞ்சையின் புறம்படி யில் விரைவாய் நடந்துவர கோட்டைக் காவலைச் சேர்ந்த வீரர்கள் துடிப்பானார்கள். ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு குனிந்து வரவேற்றார்கள். மறுபடியும் ஆயுதங்களை எடுத்துக் கொண்டார்கள். உள்ளே போக வேண்டும் என்று கருவூர்த் தேவரின் சீடன் ஒருவன் சைகை செய்ய, அவர்கள் சட்டென்று கோட்டைக் கதவைத் திறந்துவிட்டார்கள். கருவூர்த் தேவரும் அவரது மூன்று சீடர்களும் கோட்டைக்குள் நுழைந்தார்கள். கோட்டைக்காவலர் நான்கு பேர்கள் அவர்களை மரியாதை யாகப் பின் தொடர்ந்தார்கள்.



சந்திரன் மிகப்பிரகாசமாக இருக்கின்ற அந்த வேளையில், ஊர் முழுவதும் குளிர் பரவி போர்த்தியிருந்த அந்த நேரத்தில், அந்தச் சிறிய கூட்டம் அரண்மனையை அடைந்தது. அரண்மனை காவலர்கள் தீப்பந்தங்களைக் கீழே இறக்கி கருவூர்த் தேவரை அடையாளம் கண்டு கொண்டார்கள்.

"வெகு தொலைவிலிருந்து வருகிறீர்களா." என்று சீடனைக் கேட்க, 'ஆமாம்' என்று தலையசைத்தார்கள்.

"சம்பிரதாயமாகக் கேட்கிறோம். ஆயுதங்கள் இருக்கின்றனவா." என்று மரியாதையாக வினவ 'இல்லை' என்று அவர்கள் சொன்னார்கள்.

கருவூர்த்தேவர் அரண்மனைக்குள் நுழைந்தார்.

"உங்கள் வருகையைச் சொல்லிவிடவா. கட்டியம் கூறவா." என்று சொல்ல, "மிக ரகசியமாகச் சக்ரவர்த்தியிடம் பேச வேண்டும். பஞ்சவன்மாதேவியை முதலில் எழுப்பி விவரம் சொல். பிறகு சக்ரவர்த்தியின் உடல் நிலை பார்த்துப் பேசலாம்." என்று கருவூர்த்தேவர் முணுமுணுப்பாய்ப் பேச பஞ்சவன் மாதேவிக்குச் செய்தி சொல்லப்பட்டது.

பஞ்சவன்மாதேவி மெல்ல சக்ரவர்த்தியின் நெற்றியைத் தடவி, தோளை வருடி 'ஐயா' என்று இனிமையாகக் கூப்பிட்டாள்.

சக்ரவர்த்தியின் மனம் விழித்தது. உடம்பு அசைந்தது. மெல்லக் கண்கள் திறந்தார். பஞ்சவன்மாதேவியைப் பார்த்து புன்னகை செய்தார்.

என்ன என்று கேட்டார்.

பஞ்சவன்மாதேவி விபரம் சொல்ல, சற்று நேரம் கண்மூடி இருந்துவிட்டு சரக்கென்று எழுந்திருந்தார். கை கால்களைக் கழுவிக்கொண்டு உடம்பு முழுவதும் ஈரத்துணியால் துடைத்து,

திருநீறு இட்டு வாசனைப் பொடியை உடம்பில் தடவிக்காண்டு, மேலே சால்வை போர்த்தி, சரசரவென்று படியில் இறங்கி பஞ்சவன்மாதேவி பின் தொடர, அரண்மனை கூடத்திற்கு வந்து, அங்கிருந்து அரச சபைக்கு நகர மெல்லிய குரலில் அரசசபை காவல்காரன் கட்டியம் சொன்னான்.

கோலால் தரையில் மூன்று முறை தட்டினான்.

வீரர்கள் விரைப்பானார்கள். 'சோழம்- சோழம்.. சோழம்..'' என்று கத்தினார்கள். சபைக்குள்ளே கைகூப்பியவாறு நுழைந்து சபையின் முன் வரிசையில் பிரம்மராயருடைய நாற்காலியில் அமர்ந்திருந்த கருவூர்த் தேவர் அருகே போய் கிழக்குப் பக்கமாகப் பார்த்து அவர் காலில் தலைவைத்துப் பணிந்து அவர் மெல்ல எழுந்தார்.

பிரம்மராயருக்கு அடுத்த நாற்காலி மூவேந்த வேளாருடையது. அந்த நாற்காலியிவ் அரசர் அமர, மற்றவர்கள் அனைவரும் நின்றார்கள்.

"சோழதேசம் முழுவதும் விரைவாக ஒரு சுற்று போய்விட்டு வந்தேன். எங்கேயும் எந்த விதமான ஆட்டமும் இல்லை. எல்லா இடங்களும் அமைதியாக இருக்கின்றன. மக்கள் உன் மீது மிகப் பெரிய காதலோடும், நம்பிக்கையோடும் இருக்கிறார்கள். கருமார்களுடைய கோரிக்கைகள் தேவையற்றது என்பது என் அபிப்ராயம். ஆனாவ், மறவர்களைக் காட்டிலும் தாங்கள் பின் தங்கியிருக்கிறோமோ, தங்களுக்கு மறவருக்குண்டான மதிப்பு இல்லையோ என்ற பயம் கருமார்களுக்கு இருக்கிறது. கருமார்களுடைய போட்டி அந்தணர்கள் அல்ல- மறவர்கள். தான் கொடுத்த வாளும், வேலும் வைத்து மற்றவர்கள் ஜெயித்து வருகிறார்கள். நான் வேல் கொடுக்கா விட்டால் மறவன் என்ன ஆவான். வெட்டுப்பட்டுச் சாவான் என்று கருமார்கள் நினைத்து, தங்களுக்கும் மறவர்களுக்கும் சம உரிமை வேண்டுமென்பதை நேரடியாகச் சொல்லாது, வேறுவிதமாகச் சொல்கிறார்கள். மறவருக்கு இணையான தகுதி கொடு என்று சொன்னாவ் மறவர்கள் முறைப்பார்கள். முஷ்டியை மடக்குவார்கள் என்று யோசித்து அந்தணருக்கு இணையாகக் கொடு என்று சொல்லி விட்டார்கள்.

இளவரசர் இராஜேந்திரர் கொஞ்சிப் பேசுகிறார். கூட அமர்ந்து உணவு எடுத்துக் கொள்கிறார். குழந்தைகளைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு தலையைத் தடவுகிறார். பெண்டிர் களோடு சிரித்துப் பேசுகிறார். நலம் விசாரிக்கிறார். தொடர்ந்து

உதவிகள் செய்ய வேண்டுமென்று வேண்டுகிறார் என்பதாலேயே அவர்கள் அதைச் சாதகமாக்கிக்கொள்ள முயற்சிக்கிறார்கள். இளவரசர் தங்களுக்கு நெருக்கமாக இருக்கிறார் என்பதை எப்படிச் சொல்வது, ஏதேனும் சலுகை வாங்கினால்தானே சொல்ல முடியும். அப்பொழுது தானே நெஞ்சு நிமிர்த்த முடியும். இதனால் வந்த அசட்டுக் கூச்சல் அது.. அந்தணர்கள் இதைக் கேட்ட பிறகு சிரித்துவிட்டு சும்மாயிருந்திருக்கலாம். இதை எப்படி எதிர்ப்பது என்று யோசிக்க ஆரம்பித்தது அவர்கள் பலவீனம். இதில் சிற்பிகள் கலந்துகொள்ள வில்லை விராட புருஷனுடைய வம்சத்தில் வந்த கல்தச்சர்கள் இதில் அக்கறை காட்டவில்லை என்பது, இரும்புத் தொழிலாளர்களான கருமார்களுக்குக் கடும் கோபம். இதைக் கேலியும் செய்கிறார்கள் என்று கேள்விப்பட்டு, ஒருவேளை எங்களுக்குக் கிடைத்து விட்டால் அப்போது குஞ்சரமல்லப் பெருந்தச்சன் என்ன செய்வான். தாம்புக் கயிற்றில் பூணூல் போட்டுக் கொள்வானா என்று கேள்வி கேட்கிறார்கள்.

அவர்கள் பக்கம் உலோகம் வார்த்து சிற்பங்கள் செய்கின்ற, இறைவன் திருவுருவங்கள் செய்கின்ற உலோகச் சிற்பிகள் இருக்கிறார்கள். ஆமாம், நாம் சிவிகையில் போனால் என்ன. நாம் செய்கின்ற உருவங்கள் சிலைகளில் போகும்போது, நாம் போனால் என்ன என்று கேள்வி கேட்கிறார்கள். இராஜராஜா, இதைச் சொல்லவா என்னை இத்தனை காலையில் எழுப் பினீர்கள். இது எனக்குத் தெரிந்த செய்திதானே என்று சொல்ல லாம்.

இராஜராஜா, சமயப்பிணக்கைவிட மோசமானது, ஜாதிப் பிணக்கு. இது பெரிசாகுமோ என்ற கவலை எனக்கு இருக்கிறது. ஒரு ஒற்றுமையின்மையில் விஷவேர் சோழதேசம் முழுவதும் நிரம்பிக்கிடக்கிறது. ஒரு ஊருக்குள் ஒருவன் நுழைந்ததுமே என்ன ஜாதி என்று கேட்கப்படுவது இயல்பாகிவிட்டது. சைவ சமயமோ, வைணவ சமயமோ அது முக்கியமில்லை. அவன் ஜாதியென்ன என்பதன் மூலம்தான், உன்னோடு நட்புகொள்ள முடியும் என்பதாகப் பேசுகிறார்கள். இது தேசத்தைப் பாழ்படுத்தும். பொருளாதாரச் சிக்கல் வரவும் வழிவகுக்கும். ஒருவேளை இளவரசர் இராஜேந்திரர் தன் ஆட்சி காலத்தில் இதைச் செய்தால், இவர்கள் பல்லக்கில் போவது மிக ஆரவார மாகும். அந்த ஆரவாரத்தை வேறு எந்த ஜாதியினரும் சகித்துக் கொள்ள மாட்டார்கள். எனவே, அம்மாதிரி உள்நாட்டுப் பிரிவினைகள் ஏற்படாதிருக்க வலிந்து யுத்தம் செய்ய வேண்டி

யிருக்கும். வலிந்து யுத்தம் செய்வதில் பல உயிரிழப்புகள் ஏற்படும். பல குடும்பங்கள் அழும்.

போதும் இராஜராஜா... ராஷ்டிரக்கூடன் இறந்தால் என்ன... சோழன் இறந்தால் என்ன... பாண்டியன் இறந்தால் என்ன... விதவையாவது ஒரு பெண்தானே. அனாதையாவது குழந்தைகள் தானே. போர் எதற்கு இராஜராஜா. அற்புதமான பணியைத் துவக்கிக் கொண்டிருக்கிறாய். இதில் இந்த விஷயத்தைப் பெரிது படுத்தாது வெறுமே சமாதானமாகப் போவதுதான் நல்லது. கருமார்களுக்கு இதைப் புரியும் வண்ணமாகச் சொல்ல எனக்குத் தெரியும். அவர்கள் வெகுளிகள். வேறு எங்கிருந்தோ இந்தத் தூண்டுதல் வ்ந்திருக்குமோ என்று நான் நினைக்கிறேன்.

பாண்டியர்களில் சிலர் கருமார்களாகச் சேர்ந்திருக் கிறார்கள். எந்த ஊர் என்று கேட்டால் தொண்டை நாடு என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே சரியான ஒற்றர்கள் அனுப்பி, யார் இதை வேகமாகப் பேசுவது, யார் இதை அமைதியாகக் கொள்வது, யார் இதற்குப் பலியாவது என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும். இந்தக் கூச்சல் ஆரம்பித்த இடம் கருந்தட்டாங்குடி அல்ல. குடந்தை. குடந்தைக்கு அருகேயுள்ள கருமார்புலச்சேரி எனவே, இந்த விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டுமென்று சொல்வதற்காக வந்தேன். மாதேவடிகள் சூட்கம சக்திகளை அடக்கத் தெரிந்தவர். ஆளத் தெரிந்தவர். எனவே, மாதேவடி களோடு எந்தப் பிணக்கும் வேண்டாம். அவளை நீ மகள் என்று கொள்ள வேண்டாம். மறு சமயத்தைச் சேர்ந்தவர் என்றும் தள்ள வேண்டாம். பழைய விஷயங்கள் அனைத்தையும் மறந்துவிட்டு மாதேவடிகளை ஒரு சாதுவாக, ஒரு சந்நியாசினியாக, ஒரு சித்தப் பெண்மணியாக நினைத்துக்கொள், இராஜேந்திரர் ஏதேனும் ஒரு வகையில் அவளை இழிவுபடுத்தி விடுவானோ என்ற பயத்தினாலும் இனத உனக்கு எச்சரிக்கையாகச் சொல் கிறேன்.

உங்கள் அரண்மனைப் பெண்டிரும் மாதேவடிகளை மரியாதையாக அணுக வேண்டுமென்று சொல்லிவிடு. கற்கள் பிடுங்கப்பட்டபோது, ஒரு நரபலி நிகழ்ந்தது பற்றிக் கவலைப் படாதே. அது இயல்பு. மலை பலி கேட்கும். மண் பலி கேட்கும். நார்த்தமாலையில் ஒரு ராஷ்டிரக் கூடன். இங்கே ஒரு பெண் யானை. இரண்டு உயர்ந்த உயிர்கள். யானையின் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டும் நந்தா விளக்கு வைக்கலாம். தீபமாக இல்லாமல் தீப்பந்தமாக ஒன்று இடையறாது எரிந்து கொண

டிருக்கட்டும். உன்னுடைய உடல்நலம் குறித்து கூடுதலான அக்கறை உனக்கு வேண்டும். அவ்வப்போது உபவாசமிருத்தல் உனக்கு பலம் தரும். உபவாசம் இருக்கும்போதே தனிமையில் இருப்பதும் நல்லது. குறிப்பாய் எல்லா பௌர்ணமியின் போதும், ஏதேனும் ஒரு தோட்டத்தில் குடிநீர்ப் பானையும், இரண்டு பிடி அரிசியும் எடுத்துக் கொண்டு போ. மிகவும் பசித்தால் அரிசி சாப்பிடு. இல்லையெனில் அந்த அரிசியை அங்கேயே இறைத்து விட்டு வா..

மேலைச்சாளுக்கியர் மறுபடியும் படையெடுப்புக்கு வெகு நிச்சயமாய் தங்களைத் தயார் செய்து கொள்வர், ரகசியமாய் படைகள் திரட்டுவர். சேரதேசத்து அந்தணர்களை வைத்து வில் அம்புகள் எய்தப் பழகுவார்கள். எனவே, இடையறாது மேலைச் சாளுக்கியத்தின் மீது ஒரு கண் வைத்திரு. அந்தணர்களைத் துங்கபத்திரா நதிக்கரை வரை யாத்திரை போகச் சொல். அதற்குண்டான வசதிகளோடு அனுப்பு. குறிப்பாய் பிரம்மராய ருடைய ஒற்றன் வைணவதாசன், இம்மாதிரியான காரியங் களுக்கு மிகச் சிறந்தவன். கீழைச் சாளுக்கியம் வழியாக மேலைச் சாளுக்கியம் போனால், அவன் யாரென்று எவராலும் கண்டு பிடிக்க முடியாது. வைணவதாசன் இங்குள்ள சில அந்தணர் களோடு மேலைச்சாளுக்கியம் போனால், அது மிகப் பெரிய பலன் தரும். எல்லா அந்தணர்களையும் நீ இழிவாக நினைத்து விடாதே. தர்மத்திற்குக் கட்டுப்பட்டு தேசபக்தியும் சமய பக்தியுமாய் இருக்கின்ற அந்தணர்களும் உண்டு. வைணவ தாசனும், பிரம்மராயரும் இந்தச் சோழ தேசத்தைக் கண்ணின் கருமணி எனக் காக்கிறார்கள்.

நார்த்தாமலைக்கும் தெற்கேயுள்ள மறவர் சீமையில், நாஞ்சில் தேசத்தில், வலுவான மறவர்கள் உண்டு. அந்த தேசங்கள் பராமரிப்பில்லாமல் குறுநில மன்னர்களால் சிதறுண்டு கிடக்கின்றன. நம் அதிகாரிகள் அந்தப்பக்கம் போக வேண்டும். சோழதேசத்தின் தர்மத்தை அங்கே நிலைநாட்டு. அந்த ஊர்களுக் குப் பாதைகள் இல்லை. பாதைகளைச் செப்பனிட முதலில் ஏற்பாடு செய். இங்கிருந்து விதை நெல்லும் அடிக்கரும்பும் அனுப்பி அங்கிருந்து மறவர்களைக் கொண்டு வா. அவர்கள் மதுரைப் பாண்டியர்களைப் போல கோபமானவர்கள் அல்ல. சைவ சமயத்தின் மீது மிகுந்த பற்றுள்ளவர்கள். சிவனுக்குத் தொண்டு செய்ய வாருங்கள் என்றால் மிகப்பெரிய சிலிர்ப்போடு வந்து நிற்பார்கள். பாண்டிய தேசத்தில் அமைதி நிலவுகிறது. ஆனால் சேர தேசம் அப்படி இல்லை. சிலரைத் திரட்டிக்

கொண்டு கடல் கொள்ளையராக மாற்றுகின்ற வண்ணம் சேரதேசத்து அரசனுக்கு இருக்கிறது. ஆனால் அந்த தேசத்துப் பரதவர்கள் அரசனின் கட்டளையை ஏற்க மறுக்கிறார்கள். எங்களை அதிகம் இழிவுபடுத்தி விட்டீர்கள் என்று பிணங்கு கிறார்கள். அவன் சமாதானம் செய்து ஒரு நிலைக்கு வர வெகு நாளாகும். ஆனாலும் இராஜராஜா, உன்னுடைய கடற்படை என்ன நிலையில் இருக்கிறது என்பதை. நீ எப்போதேனும் சோதித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். இந்தப் பணியில் இராஜேந்திரனை நீ ஈடுபடுத்தலாம்.

கடைசியாக ஒரு விஷயம். இராஜேந்திரருக்குச் சோழ தேசத்தின் எல்லைகளில், அதாவது மீன் சுருட்டியில், பிரம்மதேசத்தில், எண்ணாயிரத்தில், காஞ்சிபுரத்தில், மேல் பாடியில், திருவொற்றியூரில் மிகப்பெரிய ஆதரவு இருக்கிறது. அந்த தேசத்து இளைஞர்களும், யுவதிகளும், மக்களும் இராஜேந் திரரைத் தெய்வமாகவே வழிபடுகிறார்கள். இராஜேந்திரர் அமர்ந்த ஆசனத்தின் மீது இராஜேந்திரரைப் போல உருவம் வரைந்து வைத்து அதற்கு மாலை சார்த்தி தினமும் கொண் டாடுகிறார்கள். தினமும் அவர் பெயரை உரக்கச் சொல்லி வாழ்த்துகிறார்கள். எப்போது நமது இளவரசர் அரசராவார் என்று குழந்தைகள் கேட்கும்போது, பெரியவர்கள் அதட் டினாலும், அவர்களுக்குள்ளும் எத்தனை வயதாகியும் இளவரசர் இராஜேந்திரர் இன்னும் இளவரசராகவே இருக்கிறாரே என்கிற ஏக்கம் இருக்கிறது.

சக்ரவர்த்தி இராஜராஜரைக் கேட்டால் நடக்காத விஷயங்கள். இளவரசர் இராஜேந்திரரைக் கேட்டால் நடக்கும் என்கிற எண்ணமும் இருக்கிறது. இந்தப் பிரிவினை இயல்பு. இளவரசர் இளமையாக இருப்பதும் ஒரு கவர்ச்சியான விஷயம். எதிர்கால இராஜேந்திரர் தானே என்ற தந்திரமும் அதில் கலந்துதான் இருக்கும்.

எனவே, இராஜேந்திரரோடு பிணக்கு என்பதை வெகுவாக நீ குறைத்துக்கொள்வது நல்லது. நீ மட்டுமல்ல குறிப்பாய் பஞ்சவன்மாதேவி எந்தப் பிணக்குமற்று இருப்பது உத்தமம். அதுமட்டுமல்ல இராஜேந்திரரை நீங்கள் பல்வேறு விஷயங்களில் ஈடுபடுத்த வேண்டும். கோவில் கட்டுவது தேவையற்றது என்று அவர் பதட்டப்படுவதற்குக் காரணம். எல்லைகளில் நாம் இன்னும் உறுதியாக இல்லையென்று அவர் நினைப்பதுதான்.”

"ஆனால், அப்படியல்ல. மேலைச்சாளுக்கியம் தவிர வேறு எங்கிருந்தும் சோழ தேசத்திற்கு இப்போதைக்கு எந்தத் தீங்கும் வராது."

"ஈசான சிவபாத பண்டிதரைப் பிரம்மதேசத்தில் சந்தித்தேன். திருமுனைப்பாடி தேசத்திலிருந்து என்னை அழைத்துச் செல்ல சகல ஏற்பாடுகளும் செய்திருந்தார். அவரும், நானும் பிரம்மதேசத்து அந்தணர்களும் சோழதேசம் பற்றி உட்கார்ந்து பேசினோம். குடந்தை, தஞ்சை அந்தணர்களின் போக்கு அவர்களுக்கும் பிடிக்கவில்லை. ஆனால், அந்தக் கூட்டத்தினரிடையே தர்மம் மிக்கவர்களும், வேதத்தின் சகல நுணுக்கங்களை அறிந்தவர்களும், மிக விளக்கமாக அதுபற்றி பாடம் சொல்பவர்களும் இருக்கிறார்கள். எனவே, அவர்கள் எல்லோரையும் வாட விடலாகாது. போஷாக்காக வைத்திருக்க வேண்டுமென்று கருதுகிறார். அரசியல் செய்கின்ற சிலரை மட்டும் கண்டு பிடித்து களையெடுக்கும் பணியைத் தானே செய்யப் போவதாகச் சொல்லியிருக்கிறார் இதனால்தான் தொண்டை நாட்டிலுள்ள அந்தணர்களையும், திருமுனைப்பாடி அந்தணர்களையும் மிகவும் ஆதரித்து, வேத பாடசாலைகளை அங்கங்கே துலக்கி பிரம்மதேசத்திற்கும் அழைத்து வந்து, பல உன்னதமான விஷயங்களைக் கற்றுக் கொடுக்கிறார். இராஜராஜா அங்கே வசதிகள் மிகக் குறைவு. கிராம மக்களின் ஆதரவில்தான் அந்த வேதபாடசாலை நடந்து கொண்டிருக்கிறது. நீ ஏதேனும் அந்த வேதபாடசாலைக்குச் செய்தாக வேண்டும். கிட்டத்தட்ட ஆயிரத்து சொச்சம் இளைஞர்கள் படிக்கிறார்கள் மூன்று வேளையும் நீர்த்த கஞ்சிதான். எப்போதேனும் தான் சோறு கிடைக்கிறது. கீரையும், வெஞ்சினமும், கூட்டும், கறியுமாய் சோறு சாப்பிட்டால் பாடம் ஏறாது தூக்கம்தான் வரும். இது போதும் என்று சொல்கிறார். ஆயினும் இன்னும் சற்று வளமாக அந்த இடம் இருக்கலாம் என்பது என் எண்ணம். ஒரு போகம் பயிராகிற இடம் அந்த பிரம்மதேசம். மற்ற நேரங்களில் வறட்சி கொல்கிறது. விளக்கு எரிக்கும் எண்ணெயையும், அந்த இளைஞர்களுக்கு உடுத்திக்கொள்ள ஆடைகளையும் நீ அனுப்பித்தான் ஆக வேண்டும். அதுமட்டுமல்ல தங்குமிடங்களைச் சீர் செய்வதற்கு யாரையேனும் ஆட்களை அனுப்பு. மிகப்பெரிய கொட்டகைகள் அவர்களுக்கு உதவும். பல இளைஞர்கள் மரத்தடியிலேயே தூங்கிக் கறுத்துப்போய் கிடக்கிறார்கள். புழுதிக்காலும், தலையெல்லாம் சடையுமாக இருக்கிறார்கள். இது என் வேண்டுகோள். நான் சொல்ல வந்ததைச் சொல்லி

விட்டேன். விடை பெறுகிறேன்." சரக்கென்று எழுந்திருக்க, இராஜராஜர் மண்டியிட்டு அவர் கால்களைக் கட்டிப்பிடித்துக் கொண்டு முழங்காலில் முகம் வைத்துக் கொண்டார்.

"போதும் இராஜராஜா நீ சக்ரவர்த்தி.. கைகூப்பி வணங்கினால் போதும். இது தேவையில்லப்பா. எழுந்திரு." மெல்ல மிருதுவாய் அவர் தலையைத் தடவ, பஞ்சவன்மாதேவியும் விழுந்து வணங்கினாள். அவர் கால்களைத் தடவி கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

"காடு மலையெல்லாம் சுற்றி, கழனியெல்லாம் கடந்து, பல்வேறு இடங்களுக்குப் போய் இந்தச் சோழ தேசத்தின் வளத்திற்காக இந்த வயதிலும் அலைகிறீர்களே... இதற்கு என்ன கைமாறு செய்வேன். எதைச் சொல்லி இந்தக் கடனைத் தீர்ப்பேன். இனி இந்தப் பணிதல் தவிர, உங்கள் முழங்கால்கள் முத்த மிடுதல் தவிர, உங்கள் புறங்கால்களைத் தடவி அந்த தூசுகளை என் நெற்றியில் தரிப்பேனே தவிர, வேறு எதுவும் எனக்குச் செய்யத் தோன்றவில்லை."

"இராஜராஜா... நானும் முக்கியமில்லை. நீயும் முக்கிய மில்லை. இங்கே இந்தச் சோழ தேசத்து கலாச்சாரமும் முக்கியம். இந்த நாகரிகம் முக்கியம். இந்த நாகரிகத்திலிருந்து கிளம்பிய சைவ சமயமும், தமிழும் மிக முக்கியம். இராஜராஜா நம்மில் மிக உன்னதமான மனிதர்கள் வாழ்ந்தார்கள் என்பதை உன் கோயில் சொல்லும். சந்திரசூரியர் இருக்கும் வரை இந்தச் சோழ தேசத்தின் பெருமைபற்றி உன் கோயில் சொல்லும். மனித நாகரிகத்தின் உன்னதமான இடம், இங்கேயே இருந்திருக்கிற தென்று உன் கோயில் சொல்லும். இதற்கு என்னாலான ஒரு சிறு உதவி அவ்வளவே. இது உனக்குச் செய்ததல்ல. இது சோழ தேசத்திற்கு... செந்தமிழிற்கு... சைவத்திற்கு... இந்த எளிய நாய் செய்த பணி. இராஜராஜா காலை விடு. எழுந்து நில். நான் சொன்னவைகளை பஞ்சவன்மாதேவியோடு அமர்ந்து என்ன செய்ய முடியுமோ அதைச் செய். நான் இப்போது சேரதேசம் நோக்கி பயணப்படலாம் என்றிருக்கிறேன். நான் வந்து போனது தெரிந்தால் என்ன... என்ன... என்று கேள்வி வரும். என் வருகையை எவருக்கும் தெரிவிக்க வேண்டாம் என்ற எண்ணத்திலேயே இந்த நேரத்தில் உள்ளே நுழைந்தேன். இப்பொழுதே விடை பெறுகிறேன். வாழ்க சோழதேசம். வாழ்க என் இராஜராஜர். வாழ்க இராஜராஜரின் குடும்பம். வாழ்க இராஜேந்திரர். தென்னாட்டுடைய சிவனே போற்றி... எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி."

அவர் இராஜராஜரைக் கட்டி அணைத்துக் கொண்டார்.

பஞ்சவன்மாதேவியின் சிரசில் கை வைத்தார்.

அவரும், அவருடைய சீடர்களும் மடமடவென்று அரண் மனை விட்டுக் கிளம்பினார்கள்.

அரண்மனையின் கதவு மெல்லியதாகத் திறக்க அவர்கள் வெளியே நகர்ந்தார்கள்.

இராஜராஜரும், பஞ்சவன்மாதேவியும் திகைத்து அவர் களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அரண்மனைக் கதவு மூடப்பட்டது. மெல்ல தொலை தூரத்தில் குயில் கூவ வானம் வெளுக்கத் துலங்கியது.

சக்ரவர்த்தி ஸ்ரீ இராஜராஜத்தேவர் படுக்கையில் போய்ச் சாய்ந்தார். அவருக்கருகே பஞ்சவன்மாதேவி நெருங்கிப் படுத்துக் கொண்டு, தன்னுடைய கைகளால் அவருடைய நெஞ்சை நீவினாள்.

"வரம் பெற்ற மனிதர்கள் என்று புராணங்களும், இதிகாசங் களும் சிலரைச் சொல்கின்றன. நீங்கள் வரம்பெற்ற மனிதர். இல்லையெனில் இப்பேர்ப்பட்ட ஒரு சித்த புருஷர் இத்தனை செயல்களை விரைவாய் செய்து முடித்துவிட்டு உங்களுக்கும் தகவல் சொல்லி கண் இமைக்கும் நேரத்தில் காணாமல் போவாரா. உங்களைத் தேடித்தேடி இத்தனை மனிதர்கள் வந்து நிற்பதின் சந்தோஷம் எனக்கு உடம்பு முழுவதும் பரவியிருக் கிறது. எப்பேர்ப்பட்ட புருஷனை நான் அடைந்திருக்கிறேன் என்று கிறக்கம் வருகிறது. ஆண்டாள் பாசுரங்கள் பற்றி நான் கேள்விப் பட்டிருக்கிறேன். கிருஷ்ணன்ராமனான பிரம்மராயர் விவரமாய்ச் சொல்லியிருக்கிறார். அவருக்கு ஆண்டாள் மீது மிகப்பெரிய பக்தி. அவள் சொல்கிறாளாம்.

"என்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உந்தனோடு
உற்றோமே ஆவோம் உமக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்"

என்று கதறுகிறாளாம். எனக்கும் அப்படித்தான் எண்ணத் தோன்றுகிறது. என் புருஷனான உங்களோடு என்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பின் தொடரவேண்டும். உமக்கே நான் ஆட்பட வேண்டும். உமக்கே நான் தொண்டு செய்ய வேண்டும். அதுமட்டுமல்ல இவை செய்வதற்கு வேறு எதுவும் இடைஞ்சல் வந்துவிடக் கூடாது. மற்ற எல்லா ஆசைகளும் என்னை விட்டு

ஒழிந்தால்தானே இப்படிப் பற்றிக்கொள்ள முடியும். ஆகவே மற்றை நம் காமங்கள் மாற்று என்று சொல்லியிருக்கிறார்கள். இது அவனருளாவே அவன்தாள் வணங்கி என்பது போன்ற பாட்டு. அடுத்த பிறவி என்று ஒன்று இருக்குமாயின் என்னை நீங்கள் அழைத்துக்கொள்ள வேண்டும். உங்கள் அகமுடையாளாக வரித்துக்கொள்ள வேண்டும். இது என் வேண்டுகோள்."

இராஜராஜர் மெல்ல வாய்விட்டுச் சிரித்தார். கைகளை அவர் கழுத்தடியே விட்டு இழுத்து இறுக்க அணைத்துக் கொண்டார். கன்னங்களில் முத்தமிட்டார். மெல்லத் தழுவி உறங்கிப் போனார். நன்கு விடியும் வேளையில் சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜ ராஜத்தேவர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார் பஞ்சவன்மாதேவி அவர் மீது மெல்லிய போர்வையைப் போர்த்திவிட்டு, வாடைக் காற்று வீசும் ஜன்னல் கதவுகளை மெல்லச் சார்த்தி விட்டு வெளியே லந்தாள்.

அரண்மனை வாசலில் வேதகோஷம் கேட்டது.

குடந்தையிலிருந்தும், தஞ்சையிலிருந்தும் அரசரைப் பார்க்க அந்தணர்கள் வந்திருப்பதாகச் சொல்லப்பட்டது.

என்ன செய்வது என்று தெரியாமல் பஞ்சவன்மாதேவி திகைத்தாள். திரும்பி சக்ரவர்த்தி ஆழ்ந்து உறங்குலதைப் பார்த்தாள்.

அவர் உறக்கத்தைக் கலைக்க அவளுக்கு விருப்பமில்லாது போயிற்று.


# 138

**வா**ழைப்பழங்களும், வெல்லச் சர்க்கரையும் கொடுத்து அமர வைத்திருக்கிறேன். மோரில் இஞ்சிச் சாறும், தேனும் கலந்து குடிப்பதற்கு கொடுத்திருக்கிறேன். குடித்துக் கொண்டிருக்கிறார்கள். மொத்தம் நாற்பத்தோரு அந்தணர்கள்.

சில சாகைகள் வேதம் சொல்லி குடித்தபிறகு சற்று ஓய்வாக வெற்றிலை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

"எப்பொழுது வந்து பார்க்கிறீர்கள். அவர்களுக்கு நான் என்ன பதில் சொல்லட்டும்."

"எனக்குச் சந்திக்க விருப்பமில்லை பஞ்சவன்மாதேவி."



சக்ரவர்த்தி குனிந்து முதுகு காட்ட ஒரு சேடி வேகமாக முதுகு முழுவதும் எண்ணெய் தடவினாள்.

"அப்படிச் சொல்லக் கூடாது. ஒரு குறிப்பிட்ட வகுப்பினரை நீங்கள் பார்க்க மறுப்பது, வெளியே தெரிய வந்தால் மக்களும் அவர்களை மறுப்பார்கள். தயவுசெய்து இப்படி செய்து விடாதீர்கள்."

"அவர்களுக்கு என்ன வேண்டும்."

"பேச வேண்டுமாம்."

"போய் தஞ்சையின் தென்புறத்தில் இருக்கின்ற புல்வெளியில் கோயில் அஸ்திவாரம் தோண்டுகின்ற இடத்தில நின்று சிலநேரம் வேதம் சொல்லிவிட்டு, ஊருக்குத் திரும்பிப் போகச் சொல். போவதற்குண்டான தட்சனை கொடுத்துவிடு."

"என்ன. என்ன கோபம். ஏன் இப்படி முரட்டுத்தனமாக பேசுகிறீர்கள்."

"எனக்குக் கோபமில்லை. வருத்தம்."

"யார் மீது."

"குடந்தை தஞ்சை அந்தணர்கள் மீது."

"கடவுளே... அவர்கள்தான் தங்கள் நிலைமையைத் தெளிவாகச் சொல்லி விட்டார்களே... இன்னும் கோபம் போகவில்லையா."

"எப்படிப் போகும். தமிழுக்கும், சைவத்திற்கும் எதிரானவர்களோடு கை கோர்த்துக் கொண்டதும், தமிழிசையும், சைவத்தையும் ஆதரிக்க மாட்டேன் என்று, வேறு ஏதோ விஷயங்களைப் பேசிச் சிரித்ததும் எப்படி என் மனதிலிருந்து போகும். வேத ஆகமங்களைப் போற்றுங்கள் அது போதும், என்று எனக்கு அறிவுரை சொன்ன அந்தணன் முகம் இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. செந்தமிழ் முக்கியமில்லையென்று அவன் சொல்லாமல் சொன்னான். அன்று மனதுக்குள் ஒரு

முடிவெடுத்தேன். இவர்களை எங்கு வைக்க வேண்டுமோ அந்த இடத்தில் வைக்க வேண்டுமென்று, ஆனால் அந்த இடத்தில் நான் கொண்ட கோபம்தான் எனக்கு இரண்டு லாபத்தைக் கொண்டு வந்து சேர்த்தது. ஒன்று நீ- இன்னொன்று அரசபதவி. நான் அன்று அவர்களோடு முரண்பட்டு வாக்குவாதம் செய்து எனக்கு தேவாரம், திருவாசகங்கள் வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்காமல் இருந்திருப்பேனானால் இந்த அரசும் கிடைத் திருக்காது. நீயும் கிடைத்திருக்கமாட்டாய். அந்த நாட்கள் ஞாபகம் வைத்திருக்கிறாயா பஞ்சவன்மாதேவி."

சாய்ந்திருந்த சக்ரவர்த்தி சட்டென்று எழுந்திருந்து கேட்டார்.

"அதை அப்புறம் யோசித்துக் கொள்ளலாம். இப்போதைக்கு அந்தணர்களைப் பார்க்க தயவுசெய்து கீழே வாருங்கள்."

"இல்லை. அந்த அந்தணர்கள் அத்தனை பேரும் எங்கு கோயில் கட்டப்படுகிறதோ, அந்த இடத்திற்குப் போய் அங்கு சிவ நாளினககள் வேதம் சொல்லட்டும். பிரம்மராயருக்குத் தகவல் அனுப்பி அவர்களை அவர் வீட்டுக்குப் போய் உணவிட ஏற்பாடு செய்யச் சொல். எனக்கு இன்றைக்கு அந்தணர்களைச் சந்திக்க விருப்பமில்லை. அவசியமெனில் நாளை சந்திக்கிறேன்."

"இது மிகப்பெரிய முரட்டுத்தனம்."

"இந்த அருண்மொழி மிக எளிமையானவன். எனக்கு உண்மையாக ஒருவர் இருந்துவிட்டால் நான் பல மடங்கு உண்மையாக இருந்திருப்பேன். எனக்கு துரோகம் செய்தால் பதிலுக்கு நான் உங்களை என்ன வேண்டுமானாலும் செய்து விடுவேன். நான் சதய நட்சத்திரக்காரன். இடது அல்லது வலது என்ற இரண்டு இடம்தான் தெரியும்.

"அது தவறல்லவா. ஒரு அரசர் நடுநிலையில் இருக்க வேண்டாமா."

"நடுநிவையில் நின்று கொண்டிருந்தால் செயல்கள் நடைபெறாது. இடதோ, வலதோ ஒருவர் தன்னுடைய நகர்வைச் செய்தேயாக வேண்டும். நடுநிலைமை என்பது சாதுக்களின் செயல். நான் அரசன். ஏதேனும் ஒரு முடிவுக்கு நான் வரவேண் டிய கட்டாயமுள்ளவன்."

"அதேசமயம் உங்களுக்கு ஒன்று சொல்கிறேன். இந்த நேரம் அந்தணர்களைப் பகைத்துக்கொள்ள வேண்டாம். மிகப்பெரிய

பணி ஒன்று கையில் இருக்கும் போது எலரையும் தூஷணை யாகப் பேசிவிட வேண்டாம்."

"பஞ்சலன்மாதேவி ஒன்றைப் புரிந்து கொள், கோயில் பணிகளில் உங்களை ஈடுபடுத்திக்கொள்ளப் போகிறீர்களா என்று கேள்வி கேட்டிருந்தோமல்லவா, முடியாது... இல்லை என்று சொல்ல அலர்கள் லந்திருக்கிறார்கள். அதற்கான காரணங்களை அடுக்குகிறார்கள். இப்போது நான் என்ன செய்ய வேண்டு மென்று நினைக்கிறாய். கட்டிக் கொண்டு கொஞ்சவா. கழுத்தில் மாலை போட்டு வாழ்க என்று சொல்லவா, என்ன செய்ய வேண்டும் பஞ்சவன்மாதேவி."

அரசர் குரலில் மெல்ல காரம் ஏறியது.

"நேரடியாகக் கோயில் பணிகளில் ஈடுபடாதோர் பலர் உண்டு. அந்தணர்களை மட்டும் குறி பார்த்துப் பேசாதீர்கள். வேளாளர்களுக்கும், கோயில் பணிக்கும் என்ன சம்மந்தம். அவர்கள் வயலில் உழுகிறார்கள். நெல் விளைவிக்கிறார்கள். கதிர் அறுத்து போர் அடித்துக் கொண்டு வந்து விற்கிறார்கள். நாம் அவர்களை அழைத்தோமா அல்லது வரச்சொன்னோமா இல்லையே. அப்போது நாம் அந்தணர்களை மட்டும் சொல் வானேன். அந்தணர்களுக்கு என்ன லேலை உண்டோ, அதைச் செவ்வனே திறம்பட செய்து கொண்டிருக்கிறார் களல்லவா. குயவர்களையெல்லாம் கூப்பிட்டு இங்கு ஏதேனும் லேலை இருக்கிறது என்று சொன்னோமா இல்லையே. அவர்கள் வேலை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. அங்கிருந்து பானை வாங்கி இங்கே கொண்டு லந்து விற்கிறோம் அல்லவா. கல் தூக்கினால்தான் கோயில் பணி என்று நீங்கள் நினைப்பது நல்லதல்ல. வேறு யாரேனும் அப்படிப் பேசலாம். நாம் பேசி விடக்கூடாது."

"பஞ்சலன்மாதேவி உன் பேச்சில் ஒரு சிறிய தவறு இருக்கிறது. கோயில் பணிக்கு நான் அழைத்தேன் வரமறுக் கிறார்கள். வேளாளர்களை அழைக்கவில்லை. அவர்கள் வரவும் மறுக்கவில்லை. என்ன பேசுகிறாய். ஏன் விஷயத்தைத் திசை மாற்றுகிறாய். எனக்குக் கணக்கு எழுத ஆள் வேண்டும். உங்களுக்கு எழுதப்படிக்கத் தெரியும். வா என்று சொன்னால் லரமுடியாது என்று சொல்வதற்கு யாருக்கு உரிமை இருக்கிறது. அப்பொழுது வரிகட்டு என்று சொல்வேன். தாங்க முடியாது. அப்பொழுது இறையிலியாக லரி கொடுக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் இல்லாத நிலமாக, இந்தச் சோழதேசத்தில் எதுவும்

இருக்காது. குறிப்பாய் அந்தணர்கள் அத்தனை பேர் நிலத்திற்கும் அதிக வரி வசூல் நடைபெறும்."

"நானே விஷயத்தைக் கெடுத்து விடுவேனோ என்று பயமாக இருக்கிறது. எனக்குப் பேசத்தெரியவில்லை. ஆயினும் இப்போது நீங்கள் பேசாமல் இருப்பதே நல்லது. இந்தக் கோபத்தை வைத்துக் கொண்டு அவர்களிடம் பேச ஆரம்பித்தால் நிச்சயம் சகலமும் கெட்டுப்போகும்."

"அதற்குத்தான் சொல்கிறேன். நாளை அல்லது நாளை மறுநாள் அல்லது அதற்கும் மறுநாள் நான் அந்தணர்களை ஒரு வேளை சந்திக்கக் கூடும்."

"உங்களை மடக்க என்னால் ஆகாது. இந்த விஷயத்தை பிரம்மராயரிடமோ அல்வது கருவூர்த்தேவரிடமோ சொல் கிறேன். ஆனால், கருவூர்த்தேவர் எச்சரித்தும் நீங்கள் கேட்க வில்லை என்பதுதான் வினோதமாக இருக்கிறது."

"அதைவிடு பஞ்சவன்மாதேவி. உன்னை நான் முதன்முதலில் எங்கு சந்தித்தேன். ஞாபகம் இருக்கிறதா. சிதம்பரத்தில் நடராஜர் சன்னதிக்கு நேர் எதிரே பூக்கூடையைக் கொண்டு வந்து தரையில் போட்டு என் காலெல்லாம் பூக்களைப் பரவச் செய்தாயே."

"ஐயோ.. கடவுளே அது கைதவறிக் கீழே விழுந்தது."

"தரையில் கொட்டிய பூக்களை வாரி எடுத்து மேல் துணியில் இட்டு முடிச்சாக்கி, எதுவும் சொல்வாமல் நடந்து போனாயே, அதுவும் ஞாபகம் இருக்கிறது. நான் யாரென்று உனக்குத் தெரியாது. நீ யாரென்று எனக்குத் தெரியாது. மறுநாள் காலையில் அதே பூக்கூடையுடன் நீ அதே சன்னதியில் வந்து நின்றதும், நான் துணுக்குப் பக்கம் நகர்ந்து கொண்டேன். என்னைப் பார்த்துவிட்டு நீயும் நகர்ந்து கொண்டாய். கால் நாழிகை நானும் நகரவில்லை. நீயும் நகரவில்லை. நீ போக வேண்டும் என்று நான் நிற்க, நான் உள்ளே போக வேண்டும் என்று நீ நிற்க, இரண்டு பேரும் வெவ்வேறு தூணுக்கருகே நின்று கொண்டிருந்தோம். இரண்டு பேரும் காலெடுத்து வைத்து போகவாமே என்று ஒரு சேர ஒரே குரலில் சொன்னோம். வேறு எங்கேனும் வேறு எவரிடத்தேனும் இப்படியொரு நிகழ்ச்சி நடைபெறுமா.

அன்று திருவாதிரை நட்சத்திரம். சிவபெருமானுடைய நட்சத்திரம் அது. அங்கே ஆட்டபாட்டங்கள் நடந்து கொண்

டிருக்க, நீ கருவறைக்கு அருகே நின்று தோடுடைய செவியன் பாடினாய். அந்தப் பாட்டை நான் அப்போது தான் முதலில் கேட்டேன். மிக மிக அழகாக இருந்தது. இந்தப்பாடலை எழுதிக் கொடுக்க வேண்டுமென்று உன்னைக் கேட்பதற்கு வாய் திறந்த போது, சட்டென்று ஒரு ஓலைச் சுருகை நீட்டினாய். என்ன என்று பார்த்தால் அந்தப் பாடல். எப்படி உனக்குத் தெரியும் என்று வியப்போடு நான் விழிகள் விரிக்க, இந்தப்பாடல் பாடின இடங்களிலெல்லாம் இதைப் பிரதியெடுத்துக்கொள்ள வேண்டும் என்று பலர் கேட்கிறார்கள். எனவே ஒவ்வொரு நாளும் மூன்று பிரதியெடுத்து. இப்பாடல் பாடி எவரேனும் கேட்டால், அவர்களுக்குக் கொடுப்பது என் வழக்கம் என்று சொன்னாய். என்ன குரல், என்ன பாரம், என்ன அருமையான சிவத் தொண்டு. என்ன வயது அப்போது உனக்கு."

"பதினெட்டு."

"ஒரு பதிகம் எழுதி கையில் வைத்துக்கொண்டு அதைக் கோயிலில் பாடி யாரேனும் வியந்தால், சட்டென்று அப்பதிகத் தைக் கையில் கொடுத்து படித்துக் கொள்ளுங்கள் என்று நீட்டுகிற இந்தப்பாங்கு, இந்தப்புத்தி, எப்படி வந்தது ஒரு பெண்ணுக்கு என்று ஆச்சரியப்பட்டுப் போனேன். வயது கொடுத்த இறுமாப்போ, கர்வமோ எதுவுமில்லை. நீ மெல்ல அழகாய் வெளியே போய்க் கொண்டிருந்தாய். அப்பொழுதுதான், நீ யார் என்று விசாரித்தேன். பழுவேட்டரையருடைய தேசத்திலிருந்து வருகிறார். சிதம்பரத்தின் தலைக்கோலியாக இருக்கிறார். மிகச் சிறந்த தலைக்கோலிகளெல்லாம் சிதம்பரத்தில்தான் இருக்க வேண்டும் என்று உத்தமசோழன் கட்டளையிட்டதால் இங்கு வந்திருக்கிறாய் என்று எனக்கு சொல்லப்பட்டது. ஆனாலும் உன் முகத்தில் ஒரு கலவை இருக்கிறது என்பதை நான் புரிந்து கொண்டேன். உன்னைப்பார்க்க உன் வீட்டிற்கு வந்தேன். முதன் முதலில் உன்னைப் பார்க்க உன் வீட்டிற்கு வந்தது ஞாபகம் இருக்கிறதா... பஞ்சவன்மாதேவி."

பஞ்சவன்மாதேவி மெல்லச் சிரித்தாள். சக்ரவர்த்திக்கு அருகே நெருங்கி அமர்ந்து கொண்டாள். அவர் தோளில் முகம் சாய்த்தாள். அவர் நெஞ்சு தடவி விட்டாள். நிமிர்ந்து கன்னத்தில் முத்தமிட்டாள்.

"என்னைக் கிறங்கடிக்க வேண்டுமென்று இன்று சபதம் செய்து விட்டீர்களா, அந்தணர்களை வெறுக்கின்ற கையோடு

இந்த அடிமையைக் கொண்டாட வேண்டுமென்று ஒரு ஆசையா."

"போதும். அடிமை என்றெல்லாம் பேச வேண்டாம். உன்னை உன் வீட்டில் சந்தித்த நான் என் வாழ்வின் திருப்புமுனை." சக்ரவர்த்தியின் கை மெல்ல அவள் இடுப்பைச் சுற்றி வளைத்து இறுக்கிக் கொண்டது. அவர்கள் அசைவற்று அமர்ந்திருந்தார்கள்.

காதலின் மிடுக்கோ, காமத்தின் ஆரவாரமோ அல்லது எந்தத் தூண்டலின் வேகமோ இல்லாது, மிகுந்த பிரேமை மட்டும் வழிந்தொழிய, அந்தப் பிரேமையைச் சின்னச் சின்ன தொடல்களின் மூலம் வெளிப்படுத்துகின்ற சுகம்தான் அவர்களிடையே இருந்தது.

# 139

**அ**ப்போதெல்லாம் பரமன் மழபாடி தான் இளவரசர் அருண்மொழிக்கு மிக நெருங்கிய நட்பு. அப்போது பரமன் மழபாடி ஒரு சேனாபதி. மும்முடிச்சோழ மாராயன் என்கிற பட்டம் இப்போது அவனுக்கும் உண்டு. ஆனால், மழபாடி என்ற சிறிய ஊரிலிருந்து வந்த பரமன் அப்போது வெறும் போர்வீரன். தாமிரக் கேயூரங்கள் மட்டும் அணிந்த பரமன் மழபாடியின்



தந்தை பெயர் வைத்திய நாததேவர். தாய் பெயர் சுந்தராம்பாள். உத்தமசோழருக்கு ஆட்சியைக் கொடுத்து விட்டு, பழையாறையி லிருந்து மெல்ல நகர்ந்து, தஞ்சைப் பக்கம் வந்து விடலாம் என்று நினைத்து திருவையாறில் குடி வந்தபோது, பரமன் வீட்டோடு ஸ்நேகிதம் ஏற்பட்டது. இளவரசர் அருண்மொழியின் தந்தை யான சுந்தர சோழரிடம் கோட்டைக் காவலாக இருந்தவர் பரமனுடைய தகப்பனார். சுந்தரசோழரின் மரணத்திற்குப் பிறகு மனம் நொந்து வேலை வேண்டாம் என்று சொந்த ஊரான மழவர்பாடிக்கு வந்துவிட்டார். காவிரியின் வட கரையில், திருவையாறுக்கு அருகே இருக்கிற அந்த ஊர் மிகச்செழிப்பாக இருந்தது. காவிரியிலிருந்து ஒரு பெரிய கால்வாய் ஊரை ஊடறுத்துப்போக மழைக்காலங்களில் பயிர் நன்கு வளர்ந்தது.

சத்திரங்களிலோ, கோயில் மண்டபங்களிலோ தங்க வேண்டாம், என் வீட்டிற்கு வந்துவிடுங்கள் என்று பரமன் வற்புறுத்தி அழைத்து வந்தான். வைத்தியநாத தேவர் வீட்டு வாசலில் பொற்குடம் ஏந்தி வரவேற்றார். காலிற்கு ஜலம் ஊற்றினார். மேலே பட்டு போர்த்தினார். மேல் துண்டைத் தரையில் விரித்து அதில் நடந்து வாருங்கள் என்று வேண்டினார். அருண்மொழி திகைத்தபோது, இல்லை அருண்மொழி தயவுசெய்து வாருங்கள், இது வயதல்ல. பதவி, நீர் இளவரசர். நான் உமது சேவகன். வயதில் மூத்தவனாக இருப்பினும் உம்மை நான் வணங்குவது சரி. என் துண்டு மிதித்து வாரும். என் இல்லத்திற்கு எழுந்தருளும்,'' என்று பணிவாகக் கேட்டுக் கொண்டார். அந்தக் குரலின் இனிமை, சொற்களின் கோர்வை, அந்தப்பணிவின் உண்மை அருண்மொழிக்குப் பிடித்திருந்தது. மெல்ல பரமன் தோளில் கை வைத்தபடி துண்டில் கால்வைத்து நடந்து வர, மெல்ல பரமனின் தாய் தரையில் விழுந்து வணங்கினாள்.

அருண்மொழிக்குச் சிரமமாக இருந்தது.

“தாயே, நீங்கள் ஐம்பத்தைந்து வயது மூதாட்டி தலை நரைத்தவர். பிள்ளைகள் பல பெற்றவர். நான்...' என்று தயங்கி நிற்க, அவள் மெல்ல அருகே வந்து முகம் வழித்து விரல் சொடுக்கி, “அப்பா எத்தனை கண்ணேறு.” என்று சொன்னாள்.

அருண்மொழியின் பேச்சைக் காதிலே வாங்கி கொள்ளா தவர் போல், வைத்தியநாததேவரும் விழுந்து வணங்கி வரவேற்று, நடுக்கூடத்தில் ஆசனமிட்டு, அவர் வீட்டுப் பெண்கள் விசிற, பரமனின் மனைவி நீர்க்குவளையில் நீர் கொண்டு வர, பரமனின்

சிறுமகள் வெல்லக்கட்டிகளை எடுத்துவர, பரமனின் பெரிய மகள் அகில் புகைபோட்டு விசிற, அந்த வீடு அருண்மொழியைக் கோலாகலமாய் வரவேற்றது.

"எனக்குச் சங்கடமாக இருக்கிறது பரமா. என்னை சாதாரணமாக நடத்த மாட்டீர்களா." என்று இரைஞ்சலாகக் கேட்டபோது, "அதுவும் நடக்கும்" என்று அழுத்தம் திருத்தமாகப் பரமனின் அம்மா சொன்னாள்

"எப்போது" என்று அருண்மொழி கேட்க, "அரசர் என்ற மரியாதையைக் கொடுத்துவிட்ட பிறகு அன்பு வெளிப்பாடாய் எங்களுடைய, அத்துமீறலும் நடக்கும்." என்று சொல்ல வீடு சிரித்தது.

அருண்மொழியும் வாய்விட்டுச் சிரித்தார்.

"சீக்கிரம் அத்துமீறுங்களேன்." என்று சொல்ல மறுபடியும் வீடு சிரித்தது.

அருண்மொழி ஆசனத்தைவிட சற்று தாழ்ந்த ஆசனத்தை அருண்மொழிக்கருகே வைத்தியநாதர் போட்டுக் கொண்டார்.

"ஏன் சோழதேசத்தை உத்தமசோழனுக்கு விட்டுக் கொடுத்தீர்கள். உத்தமசோழனுக்கு என்ன தெரியும். எந்தப் போரில் கலந்து கொண்டிருக்கிறான். கூட வந்து உரக்கக் கத்தினால் அது போரில் கலந்து கொண்டதற்கு அர்த்தமா. எந்தத் திட்டமிடலாவது உண்டா. என்ன செய்ய வேண்டுமென்றாலது தெரியுமா. வெறுமே அரச குலத்தில் பிறந்துவிட்டால் அரசாளும் யோக்கியதை உண்டா. எத்தனை கடுமையாய் யோசனை செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு கோட்டைக்காவல் என்பதே மூச்சுத் திணறவைக்கின்ற விஷயமாக இருக்க, ராஜ்யபாரம் எவ்வளவு பெரியது. இது பற்றிய எந்த ஞானமும் இல்லாத உத்தமசோழருக்குச் சோழ தேசத்தை வாரிக் கொடுத்துவிட்டு நாடோடி போல் வருகிறீரே. இது நியாயமா. எனக்கு மனம் ஆறவில்லை சொல்லிவிட்டேன்."

"வேறு என்ன செய்வது."

அடிக்குரலில் அருண்மொழி கேட்டார்.

"கத்திமுனையைக் கழுத்தில் வைத்து பரதேசம் போ. இல்லை. சிவலோகம் போ... என்று விரட்டியிருக்க வேண்டும். மணிமுடியை நீங்கள் தரித்திருக்க வேண்டும்."

"இல்லை. இது மிகப்பெரிய அநியாயமாக மக்களிடையே பரப்பப்பட்டுவிடும். அப்போது உள் நாட்டுக் கலவரங்கள் உண்டாகலாம். சேரதேசத்துக் கூலிப்படைகளை வைத்து சோழதேசத்து எல்லைகளில் உள்ள கிராமங்களை இவர்கள் சூறையாடலாம் அல்லது காசுக்கு ஆசைப்படும் இளைஞர்களை வளைத்து கலவரம் ஏற்படுத்தலாம். சோழதேசத்தில் அப்படியொரு நிலைமை ஏற்பட்டால் பாண்டியர்களுக்குக் கொண்டாட்டமாகும். சேரதேசத்திலிருந்தும் படையெடுப்பு நடக்கும். மேலைச்சாளுக்கியமும், கீழைச்சாளுக்கியமும் ஒருவேளை கோர்த்துக் கொண்டால், அதைவிட மிகப்பெரிய ஆபத்து எதுவும் இருக்காது. நாம் பலஹீனமடைந்தால் இந்த மேலைச்சாளுக்கிய, கீழைச்சாளுக்கிய சந்திப்பும் கைகோர்த்தாலும் நடைபெற்றுவிடும். பிறகு ஈழத்திலிருந்தும் தாக்குதல் வரும். சோழதேசம் சின்னாபின்னமாகும்."

"இதற்காகவா, அரசபதவியை விட்டுக் கொடுத்தீர்கள். நீங்கள் அரியணை ஏறினால் இது அத்தனையும் துடைத்து எறிந்திருப்பீர்கள்."

"இல்லை. அந்த நம்பிக்கை எனக்கு இப்போதும் இல்லை."

"என்ன இப்படிச் சொல்கிறீர்கள்."

"சோழதேசத்தின் நீளமும், அகலமும் தெரியாது உத்தம சோழனைப் போலவே நானும் இருக்கிறேன். சோழதேசத்து மக்களின் தன்மை உத்தமசோழருக்குப் புரியாதது போலவே எனக்கும் புரியவில்லை. இந்தச் சோழதேசத்தை நன்கு ஆட்சி செய்ய வேண்டுமென்றால், சோழதேசத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு அரசன் போயிருக்க வேண்டும். சக்ரவர்த்தியாக ஒருவன் பதவியேற்றால் அப்படிப் போவதில் சிரமம் இருக்கிறது. எனவே, இந்தச் சக்ரவர்த்தி பதவி என்கிற சுமையை அவன் தலையிலே வைத்து விட்டு ஊர் மக்களைச் சந்திக்கும் பணியை நான் மேற்கொண்டிருக்கிறேன்.

வைத்தியநாதரே.. நான் சோழதேசத்தைத் துறந்துவிடவில்லை. சோழதேசத்தின் மணிமுடியையும் வெறுத்துவிடவில்லை. சிறிதுகாலம் என்னை சில பயிற்சிகளில் ஈடுபடுத்தி, வலுவேற்படுத்திக் கொண்ட பின் வகையாய் மணிமுடி சூடுவேன். ஒன்று கண்டுபிடித்தேன் வைத்தியநாதரே. சக்ரவர்த்தியாக, அரசனாக ஒருவர் கிராமத்தில் நுழையும்போது பல விஷயங்கள் மறைக்கப்படுகின்றன. தவறுகள் அழுத்தி பொய்கள் முன்னே வந்து நிற்கின்றன.

எந்த அகங்காரமும் இல்லாமல் சாதாரண போர் வீரனா ஒரு கிராமத்திற்குள் நுழைய மக்கள் மனம் திறந்து போகிறார்கள். குதூகலமாய் பழகுகிறார்கள். நல்லது கெட்டதுகளைத் தெரிவிக்கிறார்கள். இது எனக்கு மிகப்பெரிய அரசியல் தெளிவைக் கொடுக்கிறது."

"உதாரணம் சொல்லுங்கள்."

வைத்தியநாதர் முகம் சுருக்கிக் கொண்டு கேட்டார்.

பெண்டுகளும், ஆண்களும் சுற்றி அமர்ந்தார்கள்.

"மதுரையிலிருந்து படையெடுப்பென்றால் முதலில் தாக்கப்படுவது திரிசிரபுரம். குறிப்பாய் உறையூர். பிரமாண்டமான காவேரி நாலாபக்கமும் பாய்ந்திருந்தாலும் திரிசிரபுரத்து விவசாயிகள் விதைக்கும் போதே இந்த நெல் எனக்கோ, வேறு எவனுக்கோ என்றுதான் விதைக்கிறார்கள். இது என்ன அபத்தம். தான் அறுக்கத் தான் விதைக்கிறோம் என்று ஒரு விவசாயிக்குத் தெரியவில்லையென்றால், ஒரு பசு, கன்று போட்டது தனக்குத்தான் என்று இடையருக்குத் தெரிய வில்லையென்றால், வேறு எவரேனும் இதைப் பிடுங்கிக் கொள்வார்கள் என்று நினைத்தால் இது சரியாக வருமா. ஏன் இப்படிப் பேசுகிறீர்கள் என்று அவரிடம் கேட்டேன். நான்கு வருடத்திற்கு முன்பு இம்மாதிரி நன்றாக விளைச்சல் இருந்தது. கதிர் தலைசாய்த்தது. அப்பொழுது ஒரு படையெடுப்பு நடந்து என்னுடைய வயல்களிலெல்லாம் யானைகளையும், குதிரைகளையும், எருமைகளையும், பசுக்களையும் மேயவிட்டார்கள். நான் உண்ண வேண்டிய உணவு மொத்தமும் மிருகங்கள் உண்டு போயின. இதுதான் படையெடுப்பின் முதல் பலியாக இருக்கிறது. என்று நொந்து சொன்னார்கள். ஒரு முறை இது நடந்தாலும் வாழ்நாள் முழுவதும் வலிக்கிறது. அந்த நேரத்து இழப்பைத்தான் இன்னமும் விவசாயிகள் தங்கள் தலையில் சுமந்து கொண்டிருக்கிறார்கள். அதற்குப்பிறகு மூன்று முறை நெல் அறுத்தும் ஞாபகம் விடவில்லை. நான்கு வருடத்திற்கு முன்பு நெல்லை யானைக்குப் பலிகொடுத்தோம். பாண்டியர்கள் வந்து அழித்து விட்டுப் போனார்களே என்கிற பயம்தான் முதன்மையாக நிற்கிறது. அடிக்கடி படையெடுப்பில் சிக்கிச் சீரழிவதால் அவர்கள் நம்பிக்கை இல்லாதவர்களாக இருக்கிறார்கள். எல்லைப்புரத்து கிராம மக்களுக்கு நம்பிக்கையில்லையெனில் அந்த தேசத்தில் வியாதி இருக்கிறது என்று அர்த்தம். கண்ணிலும், மூக்கிலும் காயம் இருக்கிறது என்று சொன்னால் அது விகாரமாகத்தானே

இருக்கும். மிகப்பெரிய வேதனையைத்தானே தரும். அந்த இடங்களைப் பலப்படுத்த வேண்டியது என் பொறுப்பு என்பது தெள்ளத் தெளிவாகப் புரிந்து போயிற்று."

"எப்படிப் பலப்படுத்தினீர்கள். அருண்மொழி."

வைத்தியநாதருடைய அனுபவம் கூர்மையான கேள்விகளாக நின்றது.

"ஒரு மாத காலம் அங்கு தங்கி இருந்தேன். பாண்டியர் வரும் வழியில் இரு பாதைகளிலும் முள்வேலி வைத்தேன். அந்த முள்வேலிகளை பாதையில் எப்படி திருப்பி வைத்து அடைப்பது என்பதைச் சொல்லிக் கொடுத்தேன். எல்லைப் புறத்திலுள்ள அத்தனை பேரும் படைப்பயிற்சி பெறவேண்டும் என்று கற்றுக் கொடுத்தேன். பெண்களை எப்படி அப்புறப்படுத்த வேண்டும் என்றும், யார் யார் எந்தப் பகுதியில் காவல் காக்க லேண்டு மென்று ஒரு விவரம் சொன்னேன். இருபது முறை, ஒரு படையெடுப்பு நடந்தால், எப்படி ஓட வேண்டுமென்று, தினமும் காலையில், எக்காளமும் முரசும் கொண்டு அவர்களை ஓடிப்போய் அவரவர் இடத்திவே ஆயுதங்களோடு தயாராக இருக்கச் சொன்னேன். மக்கள் திகைத்துப்போய் வேடிக்கை பார்த்தார்கள். முழுவதுமாய் பங்கு பெற்றார்கள். தங்கள் கிராமத்தைத் தங்களால் காத்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கைப் பெற்றார்கள்.

திரிசிரபுரத்திலிருந்து தஞ்சைக்கு இடையே பதினாறு கிராமங்களைத் தேர்ந்தெடுத்து, பதினாறு குதிரை வீரர்களை வைத்திருக்கிறேன். பதினாறு கிராம அதிகாரிகள் குதிரை மாற்று குதிரை ஏறி, ஆள் மாற்றி ஆள் படையெடுப்பைத் தஞ்சைக்கு வந்து சொல்வார்கள். திருவல்லத்திற்கு வந்து சொன்னாலும் போதும். அங்கிருந்து ஒரு பெரும்படை கிளம்பி ஓரே நாளில் திரிசிரபுரத்தை அடைந்துவிடும். அன்னியப் படைகள் வந்தடைந்த மறுநாளில் காலாட்படையும், யானைப்படையும் வந்து நிற்கும், திரிசிரபுரத்திலிருந்து மதுரைக்குப் போகும் வழியில் படையெடுப்பின் விவரம் பற்றி, பவம் பற்றி தகவல் சொல்லவும் ஆட்கள் வைத்திருக்கிறேன். மூவருக்கும் கிராம சபையிலிருந்தே சன்மானம் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். இது வலி வேலை அல்வ. உயிர் காக்கும் தொழில் என்றும் சொல்லியிருக்கிறேன். இப்படி காவல் காக்கிற மற்றவர்களுக்கு முதல் மரியாதை எல்லா இடத்திலும் தரப்பட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறேன். தங்களைத் தகுதியானவர்களாக்க இந்த மறவர்கள்

இடையறாது முயற்சி செய்ய வேண்டுமென்று குடிபோதையில் இருப்பதோ அல்லது வேறு குழப்பத்தில் ஈடுபடுவதோ மிகப்பெரிய தண்டனைக்கு வழிவகுக்கும் என்றும் எச்சரித்திருக்கிறேன். அதுமட்டுமல்ல அங்கிருந்து கல்லணைக்கும், கல்லணை வழியாக பழமர்நேரிக்கும், பழமர்நேரி வழியாக திருவையாற்றுக்கும் திருவையாற்றிலிருந்து பழையாறைக்கும் செய்தி சொல்ல ஆட்கள் நியமித்திருக்கிறேன் தஞ்சைக்கு ஆட்கள் வருவார்கள். பழையாறைக்கும் ஆட்கள் வருவார்கள்.

இரண்டு பக்கத்திலிருந்தும் படைகள் கிளம்பி திரிசிரபுரத்தை அடையும் என்று சொல்லியிருக்க மக்கள் மிக நிம்மதியாக இருக்கிறார்கள். மூன்று முறை இதைச் செயலாற்ற முடியும் என்பதையும் அவர்களுக்கு நிரூபித்துக் காட்டினேன். வேறுவிதமாகச் சொல்வதென்றால் தஞ்சையிலிருந்து திரிசிரபுரத்திற்கும், திரிசிரபுரத்திலிருந்து பழையாறைக்கும் நான் இரண்டு முறை பயணம் செய்துவிட்டேன். வழிநெடுக இருக்கின்ற எல்லா கிராமங்களையும் நான் நன்கு அறிவேன். எல்லா கிராம அதிகாரிகளின் பெயர்கூடத் தெரியும். இது எனக்கு நம்பிக்கையைக் கொடுத்தது."

"அடாடா.. அடாடா.. என்ன அற்புதம்." அருண்மொழியின் கையைத் தடவி வைத்தியநாதர் கண்ணில் ஒற்றிக் கொண்டார்."

"ஆனால், உத்தமசோழரிடம் பதவியைக் கொடுத்து விட்டீர்களே. அவர் இதைத் தொடர்ந்து நடத்துவாரா."

"இற்கும் பழையாறை அரண்மனைக்கும் எந்த சம்பந்தமுமில்லை. இது உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்ளும் வழி. ஆனால், பாண்டியர் படையெடுப்பு இருக்காது என்றும் தோன்றுகிறது என்று சொல்லிவிட்டு வந்தேன். ஏன் என்று கேட்டார்கள். பாண்டிய தேசத்துப் பெண்மணியை உத்தம சோழர் மணந்திருக்கிறார். அந்த அரசகுலத்திலிருந்து பெண் எடுத்திருக்கிறார். எனவே, தாக்குதல் அந்தப் பக்கத்திலிருந்து வரவாய்ப்பில்லை. சோழதேசத்திற்கு ஆபத்து. இனி மேலைச் சாளுக்கியம், கங்க தேசத்திலிருந்துதான் இருக்கும் என்று சொல்ல அவர்களும் நிம்மதியாகப் பெருமூச்சுவிட்டார்கள்."

"உங்களுக்குச் சக்ரவர்த்தியாக மாறும் எண்ணம் உண்டா."

"நிச்சயம் உண்டு. இது என் பொருட்டல்ல. என் தேசத்தின் பொருட்டு. உத்தமசோழரின் ஆட்சி மிகச்சிறப்பாக இருந்திருக்குமாயின் என் வேலை குறைந்திருக்கும். ஆனால், உத்தமசோழர்

உறங்கிக் கொண்டிருக்கிறார் என்பது என் அபிப்ராயம். எனவே, இடையறாது நான் நகர்ந்து கொண்டேயிருக்க வேண்டியிருக்கிறது."

"ஆதித்தகரிகாலனை அநியாயமாகக் கொன்றார்கள். அது யார் என்று இதுவரை கண்டுபிடிக்கப்படவேயில்லையே. இதுகுறித்து நீங்கள் எந்த முயற்சியும் செய்யவில்லையா."

"பல்வேறு முயற்சிகள் செய்திருக்கிறேன். யூகமாகத் தெரிகிறதே தவிர, இன்னார் என்று தெளிவாகக் கைவைக்க முடியவில்லை."

"மக்கள் யாரைச் சந்தேகப்படுகிறார்கள் என்று அறிவீர்களா."

"உத்தமசோழரைச் சந்தேகப்படுகிறார்கள். ஆனால் நான் எப்படிச் சந்தேகப்படுவது. எப்படிக் குற்றம் சுமத்துவது."

"அங்கு உண்மையில் ஆட்சி செய்வது யார் என்று உனக்குத் தெரியுமா அருண்மொழி."

"நீங்கள் கேட்கும் கேள்வி எனக்குப் புரிகிறது. உத்தம சோழரின் பெயரைச் சொல்லி ரவிதாஸனும். பரமேஸ்வரனும் இங்கு ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்றுதானே சொல்ல வருகிறீர்கள்."

"ஆமாம். சேரதேசத்து முன் குடுமி அந்தணர்களின் ஆட்சிதான் நடந்துவருகிறது. அந்த அதிகாரம் சகிக்க முடியவில்லை. தொட்டதெற்கெல்லாம் சவுக்கடிகள், ஏளனம், இழிவு படுத்தல், கிராம அதிகாரிகளைத் தரையில் உட்காரவைப்பது. அவர்கள் ஊர் அந்தணர்களை ஆசனம்போட்டு அமரச் செய்வது. பொதுக் கணக்குகளைச் சோதனையிட அந்தணர்களுக்கு உரிமை தருவது. அந்தணர்கள் என்ன சொல்கிறார்களோ அதையே முக்கியமாக ஏற்றுக்கொள்வது. மற்றவர் பேச்சை மறுப்பது என்று ஒரு அயோக்கியத்தனமான முரட்டுத்தனம் நடந்து கொண்டிருக்கிறது. ஒரு வயலில் கரும்பு போடுவதா, நெல் போடுவதா என்பதை அந்தணரா முடிவு செய்வது. அந்த நிலத்து வேளாளர்களல்லவா. அந்த வேளாளன்கூட தானாக முடிவு செய்யமாட்டான். அந்த நிலத்தில் சேற்றில் காலூன்றி நடக்கின்ற கூலி ஆட்களைக் கூட்டி வந்து உட்கார வைத்து என்ன செய்யலாம் என்று ஆலோசனை கேட்பான். ஆனால், இங்கே அந்தணர்கள் ஒருவருக்கொருவர் வடமொழியிலேயே பேசி, வடமொழியிலேயே முடிவு சொல்கிறார்கள். நெல்விதை,

*கரும்பு விதை என்று சொல்லிவிட்டுப் போகிறார்கள். நூற்றுக்கு முப்பது பங்கு வரி வசூலிக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒன்றின் கீழ் மூன்று பாகம் வரியாகப் போகிறது. எதிர்த்துக் கேள்வி கேட்பவர்களைச் சவுக்கால் அடிக்கிறார்கள். இதில் என்ன கொடுமை என்றால் எந்த மறலர்களாலும் அவர்களை வெற்றிகொள்ள முடியவில்லை. இதுதான் மிகப்பெரிய கோரம்.*

*அந்த சேர அந்தணர்கள் அற்புதமாய் கத்தி சுழற்றுகிறார்கள். நெல்முனை கூட பிசகாமல் ஈட்டி எறிகிறார்கள். அடக்க முடியாத முரட்டுக் குதிரைகளைத் தட்டித்தட்டி பேசிப்பேசி அடக்குகிறார்கள். கட்டிப் பிடித்து புரட்டிச் சாய்த்து தரையில் சரித்து விடுகிறார்கள். கால்களைக் தட்டி இரண்டு நாட்கள் மூன்று நாட்கள் குதிரைகளை எழவொட்டாமல் பட்டினி போடுகிறார்கள். பட்டினி போட்டு மூன்று நாட்களுக்குப் பிறகு எழுந்து தள்ளாடுகின்ற குதிரையைச் சவுக்கால் அடித்து உணவு கொடுக்கிறார்கள். குதிரையின் முரட்டுத்தனம் காணாமல் போகிறது."*

*"ஆனால், இது குரூரமல்லவா. மிருகவதையல்லவா."*

*"சேரதேசத்து வீரர்களின் வலிவு அபாரமாக இருக்கிறது. மஞ்சு விரட்டல் நடைபெற்றது. இந்த மஞ்சு விரட்டுதல் நடைபெறுவதின் நோக்கம் என்ன. மாட்டை அடக்கி ஆள்வது. நம் சொல்லுக்கு மாடு கட்டுப்படுவது. ஓடுகின்ற மாட்டைக் கயிறு வீசி இறுக்கி நிறுத்துவது. முட்டவரும் மாட்டைக் கொம்பு பிடித்து திருப்புவது அதுதானே. இவர்கள் மிக பயங்கரமான வர்கள்."*

*"என்ன செய்தார்கள் வைத்தியநாதரே."*

*அருண்மொழி அடிக்குரலில் கேட்டார்.*

*"மாட்டின் கழுத்தை ஒடித்துக் கொன்று விடுகிறார்கள்."*

*"எப்படி."*

*அருண்மொழி முகம் சுருக்கிக்கொண்டு கேட்டார்.*

*"அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. எந்த இடத்தில் மாடு திரும்பினால் மாடு எதிர்திசை நோக்கி தலை திருப்புகிறபோது அந்தத் திசை நோக்கியே வேகமாகத் திருப்பி சட்டென்று எதிரே வளைத்துவிடுவார்கள். மாட்டின் கழுத்து பட்டென்று உடைந்து அதே இடத்தில் மாடு சுருண்டு செத்து விடுகிறது. இரண்டு கூரான அம்புகளை எடுத்துக் கொள்கிறார்கள். திமிலுள்ள மாடு*

முட்ட வருகிறபோது சட்டென்று நகர்ந்து அதன் திமில் மீது அந்த இரண்டு அம்பையும் முழு பலத்தோடு எறிகிறார்கள். திமிலுக்கருகே இருதயம் இருக்கிறதல்லவா. சட்டென்று ரத்த நாளங்கள் வெட்டி முதுகுவழியே ரத்தம் வழிந்து மாடு அலைகிறது. மாட்டைத் திரும்பத் திரும்ப அலையவைக்கிறார்கள். அதன்மீது படாமல் நகர்ந்து கொள்கிறார்கள். மாடு களைத்துப் போய் முட்டி தரையில் சாய்கிறது. உயிரைக் கொல்வதை வெற்றி என்று கொண்டாடுகிறார்கள். உங்கள் உணவுக்காகத் தான் கொன்றேன் எடுத்துக் கொள்ளுங்கள் என்று மற்றவர்களை நோக்கி கைகாட்டுகிறார்கள். இறந்த மாடு உங்களுக்கே என்று பரிகாசம் பேசுகிறார்கள். நெஞ்சு வலிக்கிறதய்யா. இரவு தூக்கம் வராமல் நெஞ்சு வலிக்கிறதய்யா. இரவு தூக்கம் வராமல் நெஞ்சு வலிக்கிறது. ஏன் இந்த தேசத்தில் பிறந்தோம் என்கிற வேதனை யில் நெஞ்சு வலிக்கிறது. இவ்வளவு தப்பான ஆட்கள் நம் தேசத்தை ஆட்சி செய்கிறார்களே இது சரியா என்ற புலம்பல் வருகிறது.

மாடுகளுக்குப் பிறகு தாசிகள் படும்பாடுதான் சொல்லத் தரமற்றது. அந்த சேரதேசத்து வீரர்களுக்கு வீடுகளில் தங்க பயம். எவரேனும் நெருப்பு வைத்து விடுவார்களோ, சுற்றித் தாக்கி விடுவார்களோ, தப்பிக்க முடியாதுபோகுமோ என்ற பயம். எனவே வெட்ட வெளியில்தான் படுக்கிறார்கள். வெட்ட வெளியில் பெண்டுகளைக் கொண்டு போய் நிற்க வைத்து துணி உரித்து அம்மணமாக்கி அனுபவிக்கிறார்கள். எவ்வளவு வேதனை இருக்கும் அவர்களுக்கு. சுற்றிலும் தீப்பந்தம் நட்டு அம்மணமாக ஆடு என்று வற்புறுத்தினார்கள். அப்பெண்கள் பரத்தையர்கள் தான். அப்படி ஆடுகிறவர்கள் தான். ஆனால், வெட்ட வெளியில் ஆடச் சொன்னால் எப்படியிருக்கும். மறுத்தால் ஓங்கி வந்து கன்னத்தில் அடிக்கிறார்கள். ஆடுடி என்று சகலமும் அவிழ்த்து எறிகிறார்கள். வேறு வழி பெண்கள் ஆடுகின்ற கேவலமும் நடக்கிறது. மதுவைக் குடிக்கச் சொல்லி வற்புறுத்தி குடிக்க வைத்துவிட்டு, ஆடச் சொல்லி விட்டு, வயல் வெளியிலேயே கூடிப்புணர்ந்து விட்டு, பிறகு விடியல்நேரம் குதிரை ஏறிப் போய் விடுகிறார்கள். குடித்த பெண்கள் வெய்யில் வர எழுந்திருக் கிறார்கள். இடுப்பில் துணியே இல்லாமல் அலறுகிறார்கள். ஊர் போய் சமாதானப்படுத்திக் கூட்டி வருகிறது. இதுவும் கேவலமல்லவா. இதைக் கேட்பார் எவருமில்லை. கேட்பதற்கு எவருக்கும் வழி தெரியவில்லை அதட்டிக் கேட்ட மறவர்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டார்கள்.

அப்படியா, வா... உடனே இதை அரசரிடம் சொல், இவர்கள் செய்தது பிசகுதான் என்று சொல்லி கூட அழைத்துப் போகிறார்கள். ஊரைவிட்டு ஐந்து கல், ஆறு கல் தாண்டியதும் வாள் உருவிக் கொண்டு அரசரிடம் செல்லதற்கு முன் என்னை எதிர்த்து சண்டையிட்டு விட்டு அரசரிடம் போய்ச் சொல் என்கிறார்கள். வலுச்சண்டைக்குக் கூப்பிடுகிறார்கள். நான்கு பேர் சூழ்ந்து அடித்துக் கொல்கிறார்கள். இதையும் கேட் பாரில்லை.

இளவரசே... நீங்கள் அவசியம் சிதம்பரம் போக வேண்டும் சிதம்பரத்தில்தான் இவர்கள் ஆட்டத்தின் உச்சகட்டம். அதைவிட மிக முக்கியமான தகவல் ஒன்றைச் சொல்கிறேன். சிதம்பரத்திலிருந்து பூம்புகாருக்கு அருகே கீழைச்சாவை என்ற ஒரு கிராமம் இருக்கிறது. இந்தக் கீழைச்சாவை கிராமத்தில் இவர்களுக்கு கட்டுப்பட்ட மறவர்களுக்கும், பரதவர்களுக்கும் ஆயுதப் பயிற்சி கொடுக்கிறார்கள். கடற் பயணம் செய்வதற்குத் தயாராகிறார்கள். எதற்கு என்று புரியவில்லை. ஒரு வேளை ஈழத்தோடும் ரகசியமாய் ஸ்நேகமாக இருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. உங்களுக்கு இது தெரியுமா."

"தெரியும். செய்தி வந்தது."

"எதற்காக அவர்கள் கடற்பயணம் மேற்கொள்வதாக நீங்கள் நினைக்கிறீர்கள். இளவரசே ஈழம் போகத்தானே."

"இல்லை."

"ஒருவேளை சுற்றி சேரதேசம் போகவா."

"தேவையில்லை."

"பிறகு."

"கீழைச்சாளுக்கியத்தின் மீது அவர்களுக்குக் கண் இருக் கிறது. கீழைச்சாளுக்கியத்தோடு ஸ்நேகம் கொள்வதற்கு இந்தப் பரதவர்களைப் பிடித்து அந்தப் பரதவர்களோடு சேர்ந்து, அந்தப் பரதவர்கள் மூலம் கீழைச்சாளுக்கியத்திற்கு நுழைய வேண்டு மென்று நினைக்கிறார்கள்."

"ஆஹா... உண்மையா அருண்மொழி அவர்களே...

"ஆமாம்."

"ஆமெனில் தங்களுடைய பலத்தைக் கீழைச் சாளுக்கியத் திடம் பரப்ப வேண்டிய எண்ணத்திற்கு வந்து விட்டார்களா."

"நிச்சயமாய்."

"என்ன செய்யப்போகிறீர்கள் அருண்மொழி."

"நான் இளவரசன் என்ன செய்ய முடியும். அரசர் என்ன நினைக்கிறாரோ அதற்குத் துணையாகத்தானே இருக்க வேண்டும்."

"அருண்மொழி. ஏன் என்னிடம் இப்படிப் பேசுகிறீர்கள். நான் என்ன வேவு பார்க்கிறவனா. உத்தமசோழருக்கு ஒற்றனா."

"இருக்கலாம். யார் கண்டது."

"என்ன அருண்மொழி. இப்படிப் பேசுகிறீர்கள். என் வயதென்ன. இந்த தேசத்திற்கு நான் செய்திருக்கிற சேவைகள் என்ன என்பது புரியாமலா பேசுகிறீர்கள்."

"புரிந்தும் பேசுகிறேன்."

"என்ன."

"எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறது என்று எவருக்கும் தெரியாது. எனவே இது குறித்துப் பேசாதிருப்பது நலம்."

"புரிகிறது. நான் பேச்சை நிறுத்திக் கொண்டேன். இந்தச் சோழ தேசத்திற்குப் பாதுகாவலாய் நீங்கள் தெரிகிறீர்கள். எனக்குப் பெரிய நிம்மதி. இந்தப் பரமனை கூடவே வைத்துக் கொள்ளுங்கள். இவன் வெகுளி, சத்தியசந்தன். சோழதேசம், சோழ குலம் தவிர வேறு எதுவும் முக்கியமில்லை என்று நினைப்பவன். உத்தம சோழரிடம் நெருங்க வேண்டாமென்று நான்தான் சொல்லியிருக்கேன். தயவு செய்து அவனை நீங்கள் தத்தெடுத்துக் கொள்ளுங்கள். உங்களுள் ஒருவனாக அவனை வைத்துக் கொள்ளுங்கள். ஒருவேளை உங்கள் கொடி உயரப் பறக்க நேரிட்டால், அந்தப் பிள்ளைக்கும் ஒரு சிறு பதவி கொடுங்கள். அவன் வாழ்க்கை சௌக்கியமாக இருக்கட்டும்." கை கூப்பினார். எழுந்து நின்று மனைவியோடு காலில் விழுந்து வணங்கினார். மொத்த பரமன் குடும்பமும் அந்தக் கூடத்தில் அருண்மொழியின் காலில் விழுந்தது.

அருண்மொழி மெல்ல எழுந்து நின்றார். நாலா புறமும் பார்த்தார். எழுந்திருங்கள் என்று அடிக்குரலில் சொன்னார்.

"எனக்குச் சத்தியம் செய்து கட்டுப்பட்டவர்களை நான் ஒரு நாளும் கைவிடேன். எனக்கு நீங்கள் வேண்டும். வெகு நிச்சயம் வேண்டும். ஆனால் இப்போது இது குறித்தெல்லாம்

அதிகமாக பேசிக் கொண்டிருப்பதை விட செயலில் இருப்போம். இப்பொழுது நாம் செய்ய வேண்டியது என்ன."

"உண்பது."

பரமனின் மகன் சொல்ல வீடு மறுபடியும் சிரித்தது.

அருண்மொழி பரமனின் மகனை அருகில் அமர்த்திக் கொண்டார். இடதுபுறம் பரமனை வைத்துக் கொண்டார். எதிர்புறம் பரமனின் தகப்பனும், மற்ற உறவினர்களும் அமர, அந்த வீடு அற்புதமாய் சமைக்கப்பட்ட அசைவ உணவை உறிஞ்சியும், கடித்தும் சம்பரமாக உண்டது. இதில் கொஞ்சம் போடுங்கள் அதில் கொஞ்சம் போடுங்கள் என்று கேட்டுக் கேட்டு அருண்மொழி உண்டார்.

அன்று இரவு பரமனும், அருண்மொழியும் திருவையாறி லிருந்து சிதம்பரம் நோக்கி சிறுபடையோடு குதிரையில் போனார்கள்.

எந்தச் சீருடையும் உடுத்தாது பல வர்ணங்களில் உடை அணிந்திருந்த அருண்மொழியின் மெய்க்காவல் படை சிதம்பரத் தின் எல்லையில் மெல்லக் கலைந்தது.

இரண்டு வீரர்கள் முன்னே போக, இரண்டு வீரர்கள் கூட வர, இன்னும் இரண்டு வீரர்கள் சற்று தொலைவே இடைவெளி விட்டுவர, அந்த இடைவெளிவிட்டு நான்கு குதிரை வீரர்கள் வர, ஒருவர் அசைவை ஒருவர் தொலைதூரத்திலிருந்து பார்த்த படியே வழிப்போக்கர்கள் போல, சிதம்பரத்திலிருந்து கடற்கரைச் சாலை ஏறி தொண்டைநாடு போகிறவர்கள் போல நடந்து வந்தார்கள்.

அருண்மொழி அருகே பரமன்மழபாடி ஒரு நண்பனைப் போல பயணப்பட்டான்.

இளவரசர் என்று சொல்லாமல், அருண்மொழி, என்று கூப்பிடாமல் ஐயா என்று சாதாரணமாக விளித்து அவரோடு பழகிவந்தான்.

பஞ்சவன்மாதேவியின் சுந்தரர் பற்றிய நடனம் சிதம்பரத் துக்கு வந்த இரவில் கண்டு திகைத்தார்கள். உயிரைப் பிழிகிற கதை. உண்மையான, உவப்பான நடனம். அருண்மொழி மறுபடி மறுபடி பரமனிடம் பாராட்டினார்.

பஞ்சவன்மாதேவி பூக்கூடை விட்டதும் மறுநாள் அதற்கு மறுநாள் சந்தித்து, நீங்கள் போங்கள் என்று பேசியதும் கவனித்து விட்டுச் சிரித்தான் அவளைச் சந்திக்க வேண்டுமென்று அருண் மொழி ஆசைப்பட்டதும் கண்சிமிட்டினான்

அவள் பேரழகி, கண்ணும், மூக்கும், முகவாயும் செதுக்கி வைத்ததுபோல் இருக்கிறது. ஆனால், உடம்பில் சதைப்பிடிப்பே இல்லையே, நோயுற்ற பெண் போலவ்வவா மெலிந்திருக்கிறாள். ஒரு தளிச்சேரி பெண்டு காஞ்சம் பூசினது போல் இருக்கலா மல்லவா.

இல்லை. உள்ளே ஏதோ கவலை அல்வது வளப்பமாய் இருக்க விருப்பமில்லை. சில பெண்கள் வேண்டுமென்று உணவெடுத்துக் கொள்ளாமல் மெல்லியதாக இருக்க விரும்பு லார்கள். இவள் அந்த ஜாதியாக இருக்கவாம்.''

“எதற்கு அந்தப் பெண்ணைப் பார்க்க வேண்டும். தேவார, திருவாசகங்கள் கற்றுக் கொள்ளவா.''

“இல்லை, அந்தப் பெண்ணிடம் ஏதோவொரு செய்தி இருக்கிறது. நான் அவரைச் சந்திக்க விரும்புவதைவிட அவள் என்னைச் சந்திக்க விரும்புகிறாள் என்று தோன்றுகிறது. ஒரு காரணமாக நான் போகுமிடங்களிலெல்லாம் அவள் இருக் கிறாள் என்று நினைக்கிறேன். அவள் தளிச்சேரிப் பெண். நீங்கள் அரசர் குவம். வசதிக்கு இணைய ஆசைப்பட்டிருக்கலாம்.

இல்லை. அவள் நினைத்திருந்தால் மிகப்பெரிய வசதிகள் கிடைத்திருக்கும். அங்கு எங்கோ ஒதுங்கி அதிகம் பேர் கண்ணில் படாமல் சாரைப்பாம்பாய் நகர்கிறாள். சபைக்கு நடுவே லர விரும்பாது தனியே ஒரு தூணுக்கருகே அமர்ந்து பாட்டுப்பாடிக் கொண்டிருக்கிறாள். அவள் ஆடத்துவங்கினால் பல பேர் அவள் இடத்தில் நின்று பார்ப்பார்கள். சிதம்பரத்திற்கு வந்து அவள் ஆடவில்லையென்று யாரோ சொன்னதை நான் கேட்டிருக் கிறேன். ஆட முடியாத பெண்ணா. “இல்லை. ஆட விருப்பமி வ்லாத பெண். அழகில்லாத பெண்ணா இல்லை. அழகுபடுத்திக் கொள்ளாத பெண். அவளிடம் தேவார திருவாசகங்கள் வாங்கிப் படித்திருக்கிறீர்களா என்று சிலரிடம் கேட்டேன். அப்படி யொன்றும் கொடுத்ததாகத் தெரியவில்லையே என்று சொல் கிறார்கள். அப்படியானால் அந்தத் தேவாரம் தோடுடைய செவியன் என்ற பாடல் திருஞானசம்மந்தரின் பதிகம் எனக்கு மட்டும்தான் கொடுக்கப்பட்டது. ஏன், இன்னும் வேறு பதிகங்கள்

இருக்கிறதா என்று நான் ஆராய்வதற்கு இது அடித்தளம். நான் ஆராய்வேன் என்ற நம்பிக்கை. வேறு பாடல்கள் உள்ளதா என்று கேட்டு வீட்டிற்குள் வருவேன் என்ற ஒரு எதிர்பார்ப்பு. காரணமில்லாமல் இந்த அழைப்பு இருக்குமா. எதற்கோ கூப்பிடுகிறார்கள். அதேநேரம் வெளிப்படையாகச் சொல்ல பயப்படுகிறார்கள். எனவே வீட்டிற்குப் போய் பார்ப்பதே புத்திசாலித்தனம்."

"அடேயப்பா... கூட வந்த எனக்கு இது எதுவும் புரியவில்லை. நீங்கள் இப்படி யோசிக்கிறீர்களே எதனால்."

"அதனால்தான் நீ பரமன். நான் அருண்மொழி."

பரமன் வாய்விட்டுச் சிரித்தான். உண்மையென்று ஒத்துக் கொண்டான்.

அவர்கள் இருவரும் தளிச்சேரி பெண்டுகள் இருக்கும் இடம் நோக்கி, "எங்கே அந்தப் பழுவூர்ப்பெண் பஞ்சவன்மாதேவி" என்று கேட்டார்கள்.

தஞ்சையில், குடந்தையில், திருமுனைப்பாடியில், விக்ரம சிங்கபுரத்தில், நாகப்பட்டினத்தில் இளவரசர் அருண்மொழியைத் தெரிந்திருந்தது. ஆனால், சிதம்பரத்தில் அதிக மக்களுக்கு அருண்மொழியைத் தெரியவில்லை. சுந்தரசோழரையும், பராந்தகரையும் அவர்கள் பெருமை பேசினார்கள். கண்டாரதித்தரைப் பற்றி பலபேர் சிலாகித்தார்கள்.

ஆனால், இளவரசர் அருண்மொழியைப் பற்றியோ, அவருக்கு ஒரு மகன் இருக்கிறான் என்றோ, அவன் பெயர் இராஜேந்திரன் என்றோ தெரியவில்லை. இளவரசரும் தன்னை இளவரசர் என்று காட்டிக்கொள்ளவில்லை. அரசாங்க அதிகாரிகள் விசாரித்தால், ஆமாம் நான் அருண்மொழிதான். ஆனால், சைவ திருத்தலங்களைத் தரிசிப்பதற்காக வந்திருக்கிறேன். எனவே, அதிகம் கண்டுகொள்ளாதே. என்னைக் கண்டு கொண்டால் உன்னை ஒருவேளை வெறுத்தாலும் வெறுப்பார்கள் என்று சொல்லி நகர்ந்து வந்தார். இப்போது ஆட்சி செய்கின்ற உத்தம சோழரை விட அருண்மொழி அதிகத் தகுதி உள்ளவர் என்றாலும், அதற்குள் உத்தமசோழர் வந்துவிட்டார் என்று புரிந்து கொண்ட அதிகாரிகள் இளவரசரிடம் பேசினால் ஒரு வேளை எவரேனும் சீறக்கூடுமோ என்று அவர் சொல் கேட்டு விலகியிருக்கிறார்கள்.

பிரம்மராயர்களான ரவிதாஸனுக்கும், பரமேஸ்வரனுக்கும் இளவரசரோடு நெருக்கமில்லை என்பதாலும் அமைதி

காத்தார்கள். இளவரசர் எங்கும் சிதம்பரத்தில் எளிதாக நகர முடிந்தது.

"நீங்கள் யார் வணிகரா."

"ஆமாம்.' என்று கேட்டவனைப் பார்த்து தலையசைத்தார்.

"பார்த்தாலே தெரிகிறது உங்களுக்கு மயிலாடுதுறைதானே."

'ஆமாம்' என்று இளவரசர் தலையசைத்தார்.

"எதற்கு அந்தப் பழுவூர்ப்பெண். காஞ்சிபுரத்துப் பெண்கள் பலபேர் இருக்கிறார்கள். என்ன குலுக்கு என்ன தளுக்கு. ஒற்றைப் பொற்காசுக்கு உடம்பு முழுவதும் பிடித்து விடுகிறார்கள். இன்னொரு பொற்காசு கொடுங்கள். உலகத்தையே கருட்டி உங்கள் காலடியில் வைத்து விடுவார்கள். ஆனந்தத்தின் பெட்டகம் அந்தப் பெண்கள். அதில் பல பேருக்கு அகவை பதினாறு. அழகில் ரதி. பார்த்தால் வேறு எந்தப் பெண்ணையும் கேட்கவே மாட்டீர்கள். பெயரே மறந்து போகும். ஏற்பாடு செய்யவா."

கடைசி வாக்கியத்தைக் காதோரம் கிசுகிசுத்தான்.

இளவரசர் அருண்மொழி அவனை வெறித்துப் பார்த்தார்.

பழுவூர்ப்பெண் என்று மெல்லிய குரலில் சொன்னான்.

"அவள் சிடுமூஞ்சிஐயா. பாட்டுப்பாடவே மீனம், மேஷம் பார்ப்பாள். காசு கொடுத்துவிட்டு பாட்டு கேட்டுவிட்டா வருவீர். அதற்குமேல் அவள் எதுவும் செய்யமாட்டாள்."

"நான் பாட்டிற்காகத்தான் பழுவூர்ப்பெண்ணைக் கேட்கிறேன்."

"அடடா... நம்பியாண்டார் நம்பி அனுப்பினாரா. அப்படிச் சொல்லுங்கள். பழைய பாடல்கள் சேகரிக்கின்ற ஆசை உங்களுக்கு இருக்கிறதா. நம்பியாண்டார் நம்பியிடம் இந்தப் பெண் போய் பல பாடல்கள் கேட்டுக் கொண்டு வருகிறது. இங்குள்ள பெண்களும் போய் பல பாடல்கள் கேட்டுக் கொண்டு வருகிறார்கள். தோடுடைய செவியன் என்ற பாட்டுபாடும். மிக நன்றாக இருக்கும். மற்ற சில பாடல்களெல்லாம் சுமார் ரகம் தான். என்ன தேவாரம் என்ன திருவாசகம் குரவைக் கூத்துக்கு கூத்தில் அபாரமான திறமைசாலி. அப்பெண்ணின் அம்மாவும், சித்தியுமாய் ஆடுவார்கள். அப்படிப் பார்க்கலாம். ஏற்பாடு செய்யலா."

அருண்மொழியின் காதோரம் கேட்டான்.

இளவரசரின் இடது கை வாளை இறுக்கப் பிடிப்பதிலிருந்து அவருக்குக் கோபம் அதிகமானதைப் பரமன் கண்டு கொண்டான்.

இந்தப் பக்கம் வாரும் என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறேன் என்று அந்த மனிதனைப் பரமன் அழைத்துக் கொண்டு போனான்.

“அவர் சிலநெறிச் செல்வர். அவரிடமிருந்து திருநீறு வாங்கிக் கொள்வது உமக்கு நல்லது. காசு எதிர் பார்க்காதீர்கள். அவரிடம் ஒரு ஙக திருநீறு வாங்கிக் கொண்டு பழுவூர்ப்பெண் வீட்டிற்கு வழி சொன்னால் வாழ்வு மொத்தமும் சீரடையும். எனவே, அதிகம் பேசாது அவர் என்ன கேட்டாரோ அதை மட்டும் செய்து விடுங்கள்.”

“ஒரு கை திருநீறுக்கா.”

“ஆமாம்.”

“முடியாது என்றால் என்ன செய்வார்.”

“மோதிர விரலை அழுத்திப்பிடித்து.”

“என்ன ஒடித்து விடுவாரா.”

“அவன் பயத்தோடு கேட்டான்.

“வன்முறையே அவருக்குப் பிடிக்காது. மோதிர விரலை அழுத்திப்பிடித்து உன்னை உற்றுப் பார்ப்பார். உன் தலை யெழுத்து என்ன என்று சொல்லி விடுவார். உனக்கு வரப்போகிற துன்பங்களைப் பட்டியலிடுவார். அதைத் தாங்கிக் கொள்ள முடியுமா. அவர் பார்ப்பதற்குத்தான் வியாபாரி போல் இருக் கிறாரே தவிர, உண்மையில் அவர் ஒரு சித்தபுருஷர். பரமயோகி.”

“நான் நினைத்தேன். அவர் முகம் அப்படித்தான் சொல்லி யது. அவர் உடம்பிலிருந்து விபூதி வாசனை வந்தது. எனக்கு விபூதி கொடுக்கட்டும். கூடவே வழிச்செலவுக்கு ஏதாவது...

“அவரிடம் காசு வாங்கினால் உமக்கு நல்லதல்ல என்று சொல்கிறேன்.”

“நான் என்னய்யா கேட்கப்போகிறேன். இரண்டு அப்பம் ஒரு பெரிய வடை. மூன்று அரிசி மாவுப் பணியாரம் இவ்வளவு தானே. வாங்கித்தரக்கூடாதா.”

"பழுவூர்ப்பெண்ணை அறிமுகப்படுத்திவிட்டுக் கேள். அப்போது கூடவே கிடைக்கும்."

"நானும் காலையிலிருந்து பார்க்கிறேன். எவ்லோரும் தாண்டிப் போகிறார்களே தவிர என்னிடம் வந்து முட்டுல தெல்லாம் வெறும் விபூதிப் பையாகவே இருக்கிறது. லாருமய்யா."

அவன் அலுத்துக்கொண்டு, துண்டு உதறி தோளில் போட்டுக் கொண்டு வேகமாக நடந்தான். இடதும் வலதும் பார்த்தபடி அவன் நடந்து போவதைப் பார்க்க இளவரசருக்குச் சிரிப்பு வந்தது.

கரும்புக் காட்டுக்குள் ஒரு நரி நுழைலதுபோல் என்ற வாக்கியம் தோன்றியது. கரும்பின் ருசி நரிக்குத் தெரியாது. இடையறாத தந்திர குணம்தான் நரிக்குத் தெரியும். எங்கு போனாலும் பதுங்கிப் பதுங்கித்தான் போகும். மனிதர்களில் பலபேர் நரியாகத்தான் வாழ்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டார்.

குதிரைகள் சிறிய திண்ணைகள் உள்ள ஒரு ஓட்டு வீட்டை அடைந்தான்.

"அவன் உள்ளே போய் உனக்காக ஆள் கொண்டு வந்தேன் என்று சொவ்வான். எனவே வாசலோடு மடக்கி திருப்பி அனுப்பு."

இளலரசரின் புத்திக்கூர்மை பரமனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவர் சொன்னதுபோல அவன் உள்ளே தாவிப் போக முற்பட பரமன் ஓடிப்போய் அவனைத் தடுத்து நிறுத்தினான்.

"இதுதான் பழுவூர்ப் பெண் வீடா."

"ஆமாம்."

"உரக்கக்கூப்பிடு."

அவன் பரமனை முறைத்துப் பார்த்தான்.

"பஞ்சவன்மாதேவி... என்று உரக்க அழைத்தான். உள்ளே போக முயற்சி செய்ய, மறுபடியும் பரமனால் தடுக்கப்பட்டான்.

உள்ளிருந்து யாரது என்று பலகீனமான குரல் வந்தது.

இதோ லந்துவிட்டேன் என்று பெண்குரல் ஒன்று கூவிற்று.

இருட்டிலிருந்து வெளியே வந்த மின்னல் போல், மேகத்திலிருந்து வெளியே வந்து நிலவுபோல், வெள்ளைச் சுவரின் மறைவிலிருந்து சடக்கென்று வெளியே வந்தாள்.

அவள் வருகை அங்குள்ளவர்களுக்கு மெல்லிய அதிர்ச்சியைக் கொடுத்தது. மனிதர்கள் நல்லவர்களோ, கெட்டவர்களோ அத்தனைபேரும் விதி வசத்திற்கு ஆட்பட்டவர்கள்.

அம்மா... பஞ்சவன்மாதேவி உனக்கு நான் நல்லது செய்ய வந்திருக்கிறேன். கூட்டிக்கொண்டு போன அந்த ஆள் மிக மிருதுவாகப் பதில் சொன்னான்.

அவன் சொன்ன வேளை நல்ல வேளை சுக்கிரஹோரையின் உச்சக்கட்டம். அந்தச்சந்திப்பு அந்த வருகை மிக நல்ல விஷயமாய் அவளுக்கும் அருண்மொழிக்கும் நடந்தது.

என்ன நல்லது. யாரால் என்று நிமிர்ந்து பார்த்த பஞ்சவன் மாதேவி இளவரசர் அருண்மொழியைப் பார்த்ததும் திகைத்தாள். மலர்ந்தாள். விழிவிரிய நீங்களா என்ற ஆச்சரியத்தோடு பார்த்தாள். இவர் யார் என்று பரமனை உற்று நோக்கினார். பரமனும் அவரோடே வந்தவர் என்று புரிந்து கொண்டாள். வாசற்கதவை விரியத் திறந்தாள்.

"உள்ளே வாருங்கள்."

வாசற்படிக்கு அந்தப்பக்கமிருந்து கைகூப்பினாள். பின்னடைந்தாள்.

வீட்டிற்குள் அழைத்துவந்தவன் முன்னேற பரமன் தடுத்தான்.

"போய் வாரும். இனி நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்."

"அது அப்படி வழக்கமில்லை."

"அடிபடுவாய், மரியாதையாகப் பின்னடைந்து விடு."

அடிக்குரலில் பரமன் எச்சரித்தான்.

"என்ன."

"ஒன்றுமில்லை. பொற்காசுகள் தானே."

"வேறு எதற்குக் கஷ்டப்படுவது."

அவன் பதிலுக்குக் கேட்டான்.

"கஷ்டப்பட்டது போதும். இனி சுகப்படு அவர் போகட்டும். நான் உனக்குப் பொற்காசுகள் கொடுக்கிறேன்." தன் இடுப்பைத் தடவியபடிச் சொன்னான். அவன் புஜத்தை இறுக்கப்பிடித்து வெளியே அழைத்துப் போனான்.

இளவரசர் அருண்மொழி உள்ளே நுழைந்தார்.

முற்றமும், கூடமும் சேர்ந்த வீடு. முற்றத்தில் உப்பில் நனைந்த காய்கறிகள் உலர்த்தப்பட்டிருந்தன. இரண்டு மூன்று பருப்புகள் பரப்பப்பட்டிருந்தன. நெல் உலர்த்தப்பட்டிருந்தது. முற்றத்தில் மீது வலைப்பின்னி போடப்பட்டிருந்தது. முற்றத்தின் வெளிச்சம் கூடத்தின் வெள்ளைச் சுவர்மீது பட்டு கூடத்தைப் பிரகாசமாக வைத்திருந்தது. கூடத்தின் சுவர்களில் காவி நிற, பச்சை கோடுகள் இடைவெளிவிட்டு இழுக்கப் பட்டிருந்தன. ஒரு வெள்ளைச் சுவருக்கு நடுவே ஒரு பெரிய பிறையில் நல்ல வெளிர் நீல வர்ணம் அடிக்கப் பட்டு, அந்த வெளிர் நீல வர்ணத்திற்கு நடுவே தீபம் எழுதப்பட்டிருந்தது. மஞ்சள், சிகப்பு, கருஞ்சிவப்பு என்று அடுக்கடுக்காக தீப வரிசையின் லர்ணங்கள் எழுதப்பட்டிருந்தன.

அந்த தீபத்தையே உற்றுப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் எழுந்தது. சிரமப்பட்டு கண்களைப் பெயர்த்தெடுத்து மற்ற இடங்களைப் பார்க்க அங்கு மர ஊஞ்சலும், மர ஊஞ்சலுக்குச் சற்று தள்ளி மர ஆசனங்களும் போடப்பட்டிருந்தன. வீட்டிற்குத் தலைவர் ஊஞ்சலில் அமர்ந்து பேசுலார் போலும். ஊஞ்சலை நோக்கியிருந்த மர ஆசனங்கள் காலியாக வைக்கப்பட்டிருந்தன. வீட்டின் முன்புறமும், பின் புறமும் கதவுகள் இருந்தன. முற்றத்தி லிருந்து தெரியும் கொல்லைப்புறக் கதவைப் பார்க்கும்போது நீள அகலங்கள் பிடிபட்டன. மெல்லிய குழம்பு வாசனையும், தாளித்த வாசனையும், சோறு பொங்கியதின் மணமும் மூக்கை நெருடின.

இப்போதுதான் உணவு முடித்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தின. முற்றத்திலிருந்து கொல்லைக்குப் போகும் வழியில் மரக்குதிருக்குச் சற்றுதள்ளி லாழைக்குலை தொங்கவிடப்பட்டிருந்தது. வாழைக்குலைக்கு மறுபுறம் பரணை போன்ற பலகையில் வாழை இலைகளும் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. மெல்லிய கம்பிகளால் பின்னப்பட்ட காய் கறிக்கூடை ஒன்றும் வேறுபக்கம் தொங்கிக் கொண்டிருந்தது. கொல்லைக்குப் போகும் லழியிலேயே இரண்டு தண்ணீர் பானைகள் இருந்தன. கொல்லைக்குப் போகும் இடைகழி பாதையின் வழியில் மூங்கில் கம்புகள் கொடிகளாகப் போடப்

பட்டு அதில் புடவைகளும், வேட்டிகளும் தொங்கிக் கொண்டிருந்தன. வேட்டிகளின் நீள அகலம் பார்க்கும்போது யாரோ ஒரு ஆண் வீட்டில் இருக்கிறார் என்பது தெரிந்து போயிற்று. மூங்கிலின்மீது லெற்றிலைப் பெட்டி இருந்தது. அனேகமாய் அம்மாதிரி பித்தளை வெற்றிலைப் பெட்டிகளை ஆண்கள்தான் உபயோகப்படுத்துலார்கள்.

"அமருங்கள்." என்று பஞ்சவன்மாதேவி நாற்காலியைக் காட்ட இளவரசர் அருண்மொழி கீழிறங்கி முற்றத்தில் இருந்த பெரிய கனமான லெங்கலப் பானையிலிருந்து நீர் மொண்டு காலைக் கழுவிக் கொண்டார். முகம் துடைத்துக் கொண்டார்.

நீர் சுத்தமாக இருந்தது. சொம்பு கழுவி வைக்கப்பட்டிருந்தது. முகத்தில் ஈரத்தைத் துண்டால் துடைத்துக் கொண்டார், படியேறினார்.

பஞ்சவன்மாதேவி ஓடி வந்து திருநீறும், குங்குமமும் ஊஞ்சல் பவகையில் லைக்க திருநீறு இட்டு நடுவே குங்குமம் தரித்தார். அதை எடுத்துக் கொண்டு போய் மறுபடியும் அதே இடத்தில் வைத்துவிட்டு வெற்றிலைப் பெட்டியைத் திறந்து சிறு முக்காலியின் மீது வைத்தாள். அந்த முக்காலி மர ஆசனத்திற்கு அருகே இருந்தது.

"வெற்றிலை போட்டுக் கொள்ளுங்கள்." என்று உபசரித்தாள். மெல்ல நடந்து அந்த மர ஆசனத்திற்கு போய் கைப்பிடியுள்ள அந்த ஆசனத்தில் அமர்ந்து முக்காலியில் வைக்கப்பட்டிருந்த வெற்றிலையிலிருந்து ஒரு சிறிய கிராம்புத் துண்டும் பாக்கும் எடுத்து வாயில் போட்டுக் கொண்டார்.

"எனக்கு வெற்றிலை போடும் பழக்கமில்லை. என் மனைவி உலகமகாதேவி வற்புறுத்தும்போது சிலசமயம் போட்டுக் கொள்வதுண்டு. மற்றபடி சுத்தமாகவும், வெண்மையாகவும் பற்கள் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்."

"என்னைத் தேடியா வந்தீர்கள்."

பஞ்சவன்மாதேவி வியப்போடு கேட்டார்கள்.

"ஆமாம்."

"எதற்கு."

"லேறுசில பதிகங்கள் உங்களிடம் இருக்குமோ என்று கேட்பதற்கு."

"பதிகங்கள் பரம்பரை பரம்பரையாய் பாடப்பெற்று சில ஓலைகளிலும் எழுதப்பட்டு அங்கொன்றும், இங்கொன்றுமாய் கிடைக்கின்றன."

"தஞ்சைக்கு அருகேயுள்ள சிற்றூரில் நம்பியாண்டார் நம்பி என்று ஒரு இளைஞர் இருக்கிறார். அவருக்கு பதிகங்கள் சேர்ப்பதுதான் வேலை. பல ஊர்களுக்குப் போய், பல புலவர் களுக்குத் தெரிந்த பதிகங்களை எழுதிக்கொண்டு தொகுத்து வருகிறார். அவரிடமிருந்து என் தாய் வாங்கி வந்ததைத் தான் நான் ஓலையில் எழுதி வைத்து எலருக்கு விருப்பம் இருப்பினும் கொடுத்து வருகிறேன். மற்றபடிக்கு நான் பதிகங்கள் சேர்த்து வைக்கின்ற பழக்கமுடையவளல்ல."

"தோடுடைய செவியனின் அடுத்த பாட்டாவது தெரியுமா."

"பத்தும் தெரியும்."

"அவைகளை எழுதி வாங்கிக் கொள்ளவாம் என்றுதான் வந்தேன்."

"ஆஹா.. நிச்சயம் தருகிறேன். நீங்கள் யாரென்று நான் தெரிந்து கொள்ளலாமா."

"நானா.. நான் ஒன்றும் பெரிய ஆள் இல்லை பெண்ணே. சாதாரமானவன்."

"இல்லை என்று என் மனம் சொல்கிறது. உங்கள் முகம் பார்க்கும்பொழுது நீங்கள் மிகச்சிறப்பானவர் என்ற எண்ணம் எழுகிறது."

"என் அலங்காரங்கள் அப்படி ஏதேனும் தெரிவித்திருக்கும்.

"இல்லை. நீங்கள் எந்த அலங்காரமும் செய்து வருவதில்லை. திருநீறு இடுவதும், நெற்றியில் பொட்டு இடுவதும், இடுப்பில் ஒரு உடைவாள் தரிப்பதும் பெரிய அலங்காரங்களில்லை. உங்களுடைய வேட்டிகளும், அதன் கரைகளும் சாதாரணர் என்று சொன்னாலும், உங்கள் நடையும், பேச்சும், கண் அசைவும் கற்றிப் பார்க்கின்ற பார்வையும், அழுந்த நடக்கின்ற கம்பீரமும், உதட்டு மடிப்பும், தீவிர சிந்தனையைக் கொடுக்கும் நெற்றிச் சுருக்கங்களும். காது விடைப்பும், கன்னத்துச் செழுமையும் தோள்களில் தெரிகின்ற தழும்புகளும் நீங்கள் அரச பரம்பரையைச் சேர்ந்தவர் என்று தெரிகிறது. உங்கள் விரலி லுள்ள மோதிரத்தில் ஒரு இலச்சினை இருக்கிறது. அனேகமாக அது புலி இலச்சினையாக இருக்கலாம். ஆமெனில் நீங்கள்

சோழப்பரம்பரை சேனாதிபதியோ என்று சந்தேகித்தேன். எந்தச் சேனாதிபதியும் கேயூரங்கள் இல்லாமல் வெளியே வருவதே யில்லை. உங்கள் கைகளில், புஜங்களில் கேயூரங்களின் தழும்பு களே இல்லை. கழுத்தில் இருப்பது அற்புதமான வெண்முத்து மாலை, நெல்லிக்காய் அளவுக்கு வெண்முத்துக்கள் பாண்டிய தேசத்தில்தான் கிடைக்கிறது. எனவே, அப்படிப்பட்ட வெண் முத்து மாலையைச் சோழ தேசத்தின் மிகச்சிறந்த வணிகர்கூட அணிய முடியாது. அரச பரம்பரையைச் சார்ந்தவர்கள் மட்டுமே அணிய முடியும்.

எனக்கு சோழதேசத்து அரசியல் விஷயங்கள் அவ்வளவாகத் தெரியாது. தெரிந்து கொள்ளும் ஆர்வமும் வரவில்லை. அதட்டலும், உருட்டலுமான அதிகாரிகளையும், அரசகுலத்தை யும் பார்க்கும்போது எதற்கு இவர்கள் முகத்தில் விழிப்பது என்ற வெறுப்புதான் வருகிறது. அதுவும் தவிர தோடுடைய சிவனை நீங்கள் நன்றாக ரசித்தீர்கள். பீடுடைய பிரம்மாபுரம் என்று பாடியபோது விழிகளை உயர்த்தினீர்கள். தான் பிறந்த ஊரைத் திருஞானசம்பந்தர் எப்படிச் சொல்கிறார் என்று அருகிலிருந்தவரிடம் அடுத்தபடி பேசினீர்கள். தன் ஊர் பீடு மிகுந்த ஊர் என்று குதூகலாய்ச் சொல்கிறார் என்று பரிமாறிக் கொண்டீர்கள். நீங்கள் பேசியதும், ரசித்ததும் எனக்குப் பிடித்தது. நல்ல பண்டிதராய் இல்லாவிட்டால், இனத இந்த நுணுக்கத்தை ரசிக்க முடியாது. ஒரு வேளை நீங்கள் சோழதேசத்தின் அரச வம்சமாக இருந்தால் உங்களோடு ஒரு விஷயத்தைக் கலந்தாலோ சிக்கவாமே என்ற எண்ணத்தில்தான் உங்களைக் கொஞ்சம் சுற்றி வந்தேன். ஆனாலும் என்னை வெளிப்படுத்தத் தயக்கமாக இருந்தது. எனவே, தயவு செய்து இப்பொழுது சொல்லுங்கள். நீங்கள் சோழவம்சத்தில் என்னவாக இருக்கிறீர்கள். நீங்கள் யார்."

அவள் கடைசி கேள்வியைக் கேட்டபோது பரமன் உள்ளே நுழைந்தான். அவனும் கைகால்கள் கழுவிக் கொண்டான். இளவரசர் அருண்மொழியை உற்றுப் பார்த்தான். இளவரசர் சிரித்தபடி அமர்ந்திருப்பதைப் பார்த்து, தன்னை அவர் இன்னும் வெளிப்படுத்திக் கொள்ளவில்லை என்று தெரிந்து கொண்டான். அருகே போய் அவருடைய பக்கத்தில் நின்று கொண்டான்.

"நீங்கள் யார் என்று இவரைக் கேட்கிறீர்களா. அவர் இன்னும் சொல்லவில்லையா. நான் சொல்கிறேன். நீங்கள் சிறு பெண். தஞ்சைக்கு வந்திருக்க மாட்டீர்கள். பழையாறை பார்த் திருக்க மாட்டீர்கள். குடந்தை பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்

காது. எனவே, இவர் யார் என்று தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அதுவுமின்றி இவர் அதிகம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள வும் இல்லை. வெளிப்படுத்திக் கொண்ட இடம் பழையாறையும், தஞ்சையும் மட்டுமே. உடையார்குடியில் பல நாட்கள் தங்கிவிட்டதால் இவரைப்பற்றி சோழ தேசத்தில் பல பகுதி மக்களுக்குத் தெரிவதில்லை. மற்றவர்கள் சொன்னால் தான் தெரிகிறது. உங்களுக்கு நான் சொல்கிறேன். இங்கே அமர்ந்திருப் பது சோழ தேசத்தின் குவக்கொடி இளவரசர் அருண்மொழி. உத்தமசோழர் கையில் இளவரசர் பட்டம் சூட்டப் பெற்றவர். சுந்தரசோழரின் மகன். ஆதித்த கரிகாலனின் தம்பி. அக்கா குந்தவையைத் தெய்வமாக மதிக்கின்ற அருமைச் சகோதரர். நல்ல பண்டிதர். போரில் வல்லவர். உரிமைப்படி அது உத்தம சோழரைத்தான் சேர வேண்டுமென்று மக்களுக்கு அறிவித்து தான் பின்வாங்கி உடையார்குடியிலிருந்து அங்கே இராஜேந்திரர் என்ற அழகிய பிள்ளைக்குத் தந்தையாகி, அவருக்கும் பலவித பயிற்சிகள் சொல்லிக் கொடுத்து, சோழதேசம் முழுவதும் சுற்றிப் பார்த்து அங்குள்ள சிவாலயங்களைத் தரிசித்து, சோழ மக்களின் மனங்களைக் கொள்ளையடித்துக் கொண்டிருப்பவர். அவர் இங்கு வந்ததற்கும் காரணம் உண்டு."

"இளவரசர் அருண்மொழியா...

அறைக்குள்ளிருந்து குரல் கேட்டது. ஒருக்களித்திருந்த கதவு விரியத் திறந்தது.

நல்ல உயரமாய் ஆஜானுபாகுவாய் வயதான தோற்றத் தோடு ஒரு மறவர் மெல்ல வெளியே வந்தார். கையில் ஊன்று கோல் இருந்தது. நடக்க சிரமப்பட்டு லருலது தெரிந்தது. அவர் நடக்க சிரமப்படுவது பார்த்து இளவரசர் அருண்மொழி வேகமாக எழுந்தார். பஞ்சவன்மாதேவி ஓடிப்போய் அவருக்குக் கை கொடுக்க பஞ்சவன்மாதேவியின் தோளில் கை போட்டுக் கொண்டு மெல்ல நடந்து இளலரசர் அருண்மொழிக்கு அருகே வந்து உற்றுப்பார்த்தார்.

"ஆ... நினைவிருக்கிறது. உங்களை உங்களின் சின்ன லயதில் நான் பார்த்திருக்கிறேன். உங்களுக்குக் குதிரையேற்றம் சொல்லிக் கொடுத்திருக்கிறேன். நீங்கள் கேடயத்தைத் தவறாகப் பிடித்துக் கொண்டிருக்கும்போது மாற்றி அமைக்குமாறு எனக்குக் கிருஷ்ணன் ராமனான பிரம்மராயர் கட்டளை சொல்ல, நான் கேடயத்தை மாற்றி அமைத்தேன். என் நெஞ்சிலே தொங்கிக் கொண்டிருக்கின்ற சங்கிலியைப் பார்த்து விட்டு நீங்களும்

அப்படிப் போட்டுக்கொள்ள வேண்டுமென்று விரும்பினீர்கள். உங்கள் தோள்கள் அது தாங்காது என்றும், நான் சங்கிலியை எப்படித் தடுப்பாக பயன்படுத்துகிறேன் என்றும் உங்களிடம் பேசினேன். நீங்களும் நானும் பேசியது ஒரு அரைநாள்தான். என்னோடு உணவும் அருந்தினீர்கள். நான் செங்காளி. பழை யாறை கோட்டையின் வடபுற காவல் தலைவன். இது என் மகள் பஞ்சவன்மாதேவி. எனக்குச் சொந்த ஊர் மேலப்பழுவூர். மேலப்பழுவூரில் உள்ள பழுவேட்டரையர் பரம்பரையில் வந்த வர்கள் நாங்கள். சுந்தரசோழர் காலத்தில் சோழதேசம் பெருகி பரவிய போது எங்களைத் தஞ்சையோடு இணைத்துக் கொண் டோம். சோழ தேசத்தினர் என்று சொல்லிக் கொண்டோம்.

முத்தரையர் பரம்பரையான உங்களோடும் எங்களுக்கு ஆரம்பத்தில் பிணக்கு இருப்பினும் பிறகு வெகுவாகக் குறைந்து முற்றிலும் மறைந்து போயிற்று. பழுவேட்டரையர்களைச் சுந்தர சோழரும், அதற்கு முன் இருந்தவர்களும் மிகவும் கொண்டாடி வைத்திருப்பதால் எங்களுக்கும் சோழதேசத்தின்மீதும், உங்கள் அரசகுலத்தின் மீதும் மிகுந்த பிடிமானமும் அன்பும், மரியாதை யும் ஏற்பட்டுவிட்டன. பிரிக்கமுடியாத உறவாக வந்துவிட்டது. இளவரசர் அருண்மொழி என் இல்லத்திற்கு வந்தது நான் செய்த பாக்கியம். சோழக் குலக்கொடியே, நீ எப்பேர்ப்பட்ட தியாகி என்பதை நான் அறிவேன். சோழதேசத்தின் அரசியல் விஷயங்கள் பஞ்சவன்மாதேவிக்குத் தெரியாது. நான் சொல்லிக் கொடுக்கவும் இல்லை. நாட்டியத்தில் மிகுந்த வல்லவளான அவளை வேறு பக்கம் திசை திருப்ப எனக்கு விருப்பமில்லை.

இப்போது சோழதேசத்தின் அரசியல் அயோக்கியர்களின் புகலிடமாகப் போய்விட்டது. எனவே, எப்போதும் என் மகளுக் குக் காவலாய் இருக்கின்ற நிலைமைக்கு நான் ஆட்பட்டிருக் கிறேன்.”

“உங்கள் குரலில் ஏதோ வருத்தம் தெரிகிறதே... என்னவென்று சொன்னால் நான் அந்த வருத்தத்தை தீர்க்க முயற்சிக்கிறேன்.”

“வேண்டாம். இந்த விஷவலையில் நீங்கள் சிக்காதீர்கள். நடனமாடுபவள் என்றால் தளிச்சேரிப் பெண். தளிச்சேரி பெண் என்றால் அரசவையை அலங்கரிக்கின்ற மாது என்று நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். சோழதேசத்து நாகரிகத்தை வேறு விதமாக மாற்றியமைக்க முயற்சித்துக் கொண்டிருக்கின்றார்கள். விருப்பப்படாதப் பெண்களை எந்தச் சோழதேசத்து ஆணும் வற்புறுத்தியதேயில்லை. தளிச்சேரி பெண்ணாக இருந்தாலும்.

வெறுமே கோவில் கூட்டுகின்ற தேவரடியராக இருந்தாலும் அல்லது பரத்தையராக இருந்தாலும் வேண்டாமெனில் சட்டென்று விலகிப் போய்விடுவார்கள். இந்த இளைஞன் என்னைத் தொந்திரவு செய்கிறான் என்று சொன்னால் ஊர் மக்கள் ஒன்று கூடி ஏன் அப்படி, எதற்காக என்று கோபமாய் அவனைத் தண்டிக்க முயல்வார்கள். ஆனால், இப்போதைய சேனாதிபதிகள் குலப்பெண்களைத் தூக்கிக் கொண்டு வர மெய்க்காவல் படையை உபயோகப்படுத்துகிறார்கள்."

"எவரும் தடுக்க முயற்சி செய்யவில்லையா."

"முயற்சி செய்தார்கள். முயற்சி செய்தவரைச் சவுக்கால் அடித்தார்கள்."

"எப்படி."

"இதோ இப்படித்தான்."

மேலிருந்து சால்வையை மெல்ல வழியவிட்டு திரும்பி முதுகு காண்பித்தார். செங்காளியின் உடம்பு முழுவதும் பட்டை பட்டையாய் தழும்புகள் இருந்தன. மூன்று விரல் அகலத்திற்குச் சோழ இலச்சினை பழுக்கக் காய்ச்சி சூடு வைத்த தழும்பும் இருந்தது.

"தடுக்கக்கூடாது என்று அடித்தார்களா."

"இல்லை."

"பிறகு."

"இளவரசர் ஆதித்த கரிகாலனை நான் கொல்ல முயற்சித்ததாகவும், அந்த வகையில் விசாரிக்க பிடித்ததாகவும் ஊர் மக்களிடம் சொல்லி கயிறு கட்டி இழுத்துப் போய் அடித்தார்கள்."

"ஊர் மக்கள் எதிர்க்கவில்லையா."

"கிராம அதிகாரிகள் விசாரித்தபோது ஏன் ஆதித்த கரிகாலனின் கொலையை விசாரிக்கக்கூடாதா. விசாரித்தால் யார் கொலையாளி என்று தெரிந்து விடுமே என்று பயப்படுகிறீர்களா. இளவரசர் அருண்மொழியே தடுத்தாலும் இந்த விசாரணை நடைபெறும் என்றெல்லாம் பேசினார்கள்."

"அவர்கள் இப்படிப் பேசுகிறார்கள் என்று கேள்விப் பட்டேன். நீங்கள் சிக்கியிருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரிய

வில்லை. ஆனால் ஆதித்த கரிகாலன் கொலையின் போது நீங்கள் எங்கிருந்தீர்கள்."

"பழையாறையிலிருந்தேன். இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் எங்களுக்குச் செய்தி தெரிந்தது. துடித்துப் போனோம். ஆவேசப்பட்டோம். தஞ்சையை நோக்கிப் போகலாமென்று நாங்கள் முடிவு செய்தபோது போகக் கூடாது என்று பிரம்ம ராயர்கள் உத்தரவு போட நாங்கள் மடக்கப்பட்டோம். பிரிந்து தனித்தனியாகப் போனோம். தஞ்சையில் எங்களை யெல்லாம் லருக வருகலென்று வரவேற்று தனிக் கொட்டடியில் அடைத்து பின்னியெடுத்தார்கள். தஞ்சையில் கலகம் நடக்கிறது போகலாம். போகவாம் என்று சோறும், தண்ணீரும் இல்லாமல் சாகடித் தார்கள். ஊருக்குள் வரவொட்டாது மறுபடியும் எங்களைக் குடந்தை நோக்கி திருப்பினார்கள். அப்போதே எங்களுக்குத் தெரிந்து விட்டது. இவர்கள் தஞ்சைக்குப் பொது மக்கள் லருலதை விரும்பவில்லை. ஏன், நாங்கள் குழப்பினோம். நாங்கள் அதிகம் வேதனைப்பட்ட நிகழ்ச்சி ஆதித்த கரிகாலன் கொலையல்ல."

"லேறென்னா."

இளலரசர் அருண்மொழி கூர்மையாகக் கேட்டார்.

"அரச பதவியை நான் ஏற்க இயவாது. உத்தம சோழரே அரசர் என்று நீங்கள் உங்கள் வாயால் அறிவித்ததாக எல்லா கிராமத்திற்கும் பறையறிவித்தார்கள். அப்போது நெஞ்சடைத்துப் போனது. மக்கள் உங்களைப்பற்றியும் இழிலாகப் பேசினார்கள்."

"என்ன பேசினார்கள்... என்ன பேசினார்கள்."

மறுபடியும் அருண்மொழி ஆவலோடு கேட்டார்.

"லேண்டாம். அதை மறந்து விடுங்கள்."

"இல்லை. மக்களுடைய மனோநிலையைத் தெரிந்து கொள்ளக் கேட்கிறேன். மக்கள் அந்த நேரம் என்னைப் பற்றி என்ன இழிவாகப் பேசினார்கள்."

"வேண்டாம்... என்னால் சொல்ல இயலாது."

"சொல்லுங்கள் அப்பா, உங்கள் அபிப்ராயமா சொல் கிறீர்கள். அங்கு மக்கள் என்ன பேசினார்கள் என்பதைத்தானே சொல்லப் போகிறீர்கள். பதினைந்து வருடங்களுக்கு முன்பு பொதுமக்கள் என்ன அரற்றினார்களோ... அதைத்தானே சொல்லப் போகிறீர்கள். சொல்லுங்களப்பா."

"இளவரசர் அருண்மொழியைப் பேடி என்று சொன்னார்கள். துரோகி என்று சொன்னார்கள். அரசாங்கச் சொத்தும், உடையார்குடி அரண்மனையும், அந்தப்புரத்தில் நான்கு பெண்களும் இருந்தால் போதும். எதற்கு உடைவாள், எதற்கு அரசபதவி என்று இருந்து விட்டார் என்று சொன்னார்கள்."

"இதை மற்றவர்கள் நம்பினார்கள்."

"ஒரு சாரார் நம்பினார்கள். ஒரு சாரார் பலமாக மறுத்தார்கள்."

"என்னவென்று மறுத்தார்கள்."

"அருண்மொழி புலி. அது பதுங்குகிறது என்றும் சொன்னார்கள்."

"அப்படிச் சொன்னவர்களைக் கேலி செய்தவர்கள் என்ன விதமாகக் கேள்வி கேட்டார்கள்."

"அது பெரிய கதை ஐயா. எவ்வளவு நாள் பதுங்கும் என்று கேட்டார்கள். ஒவ்வொரு வருடமும் ஆதித்த கரிகாலன் இறந்த நாளை நினைவு வைத்துக்கொண்டு அருண்மொழி புலி பதுங்குகிறதா. படுத்துத் தூங்கி விட்டதா என்று கேட்டார்கள். பதுங்கத் தான் போயிற்று. இப்போது படுத்துத் தூங்கப் போயிருக்கிறது என்றும் உரக்கச் சொல்லிச் சிரித்தார்கள்."

"அதற்கு வேறு எவரேனும் மறுமொழி கொடுத்தார்களா."

"தூங்குகின்ற புலி ஊர் ஊராகப் பயணப்படாது."

"மக்களோடு பேசித் திரியாது. ஈழம்போய் ஈழத்திலிருந்து குமரிமுனை போய் குமரிமுனையிலிருந்து திருவொற்றியூர் வரை சேரதேசத்தின், பாண்டிய தேசத்தின் எல்லா எல்லைகளையும் தொட்டு எல்லா கிராமங்களுக்கும் போய் பேசி வருவாரா என்று கேள்வி கேட்டது. என்ன பேசி என்ன பண்றது என்றும் பதிலுக்குக் கேட்டார்கள்.

"அப்போது நீங்கள் என்ன நினைத்தீர்கள் செங்காளி."

"நான் குந்தவைப் பிராட்டியைப் போய் பார்த்து வந்தேனய்யா."

"ஏன்."

"எனக்குப் பழையாறைக் கோட்டை காவலில் பல சிக்கல்கள் இருந்தன. வல்லவரையர் வந்தியத் தேவரோடு குந்தவை

பிராட்டி திருவல்லத்திற்கு அருகே ஒரு அரண்மனையில் குடியிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு அங்கு போய் நான் இங்கு கோட்டைக் காவலுக்கு வந்துவிடட்டுமா என்று கேட்டேன். அவர்களோடு நான் ஒரு வருடம் இருந்தேன். பிறகு அவர்கள்தான் என்னைச் சிதம்பரத்திற்குப் போய் இரு. குடந்தைச் செய்திகள் ஏதேனும் வந்தால் சட்டென்று ஆள் மாற்றி செய்தியை நீ எடுத்து வா என்று கட்டளையிட்டார்கள். அவர்களுக்கு நம்பகமான ஆளாய் என்னை வைத்துக் கொண்டார்கள். அதேசமயம் வெளியே எவருக்கும் விஷயம் தெரியாது. சிதம்பரத்தில் எனக்கு கோட்டைக்காவல் கூட அல்ல. கோயில் காவல்."

"செங்காளி பெரிய போர்வீரர் அல்லவா. பழுவேட்டரையர் பரம்பரை அல்லவா. ஏன் காவல் வேலையில் ஈடுபட்டீர்."

இளவரசர் அருண்மொழி புருவங்களைச் சுருக்கிக் கொண்டு கேள்வி கேட்டார்.

"உங்கள் தந்தை சுந்தரசோழரோடு பதினாறு வயதில் நான் போர்க்களம் புகுந்தேன். பதினோரு போர்களில் நான் ஈடுபட்டிருக்கிறேன். மேலைச் சாளுக்கியர்கள் படையெடுத்து ஒரு முறை வந்தபோது மிகக் கடுமையாகச் சண்டையிட்டு படைகளைத் துரத்தினோம். மேலைச் சாளுக்கியர்கள் விஷ ஈட்டியையோ, விஷக்கத்தியையோ பயன்படுத்துவதில்லை. ஆனாலும், அந்தப் போரில் என் மீது விஷ அம்பு எறியப்பட்டது. நான் எரிச்சலில் அலற, விஷ அம்பு என்று புரிந்து கொண்டு சுந்தரசோழரைக் கவசங்களால் மறைத்து, எந்த அம்பும்படாமல் காப்பாற்றினார்கள். சுந்தரசோழர் என்னைக் காப்பாற்றும்படி பலமுறை உத்தரவிட என்னை எடுத்துக்கொண்டுபோய், என் விஷத்திற்கு முறிவு கொடுத்தார்கள். மருத்துவர்கள் கொடுத்த மருந்தால் விஷம் முறிந்து விட்டது. எனினும் உடலில் ஒரு நடுக்கம் இருக்கிறது. நடையில் சற்று தளர்வு வந்துவிட்டது. கண் பார்வையில் சற்று மங்கல் ஏற்பட்டுவிட்டது. இரு முறை சுழன்று திரும்பினால் நான் பொத்தென்று கீழே விழுந்து விடுவேன். அதாவது அந்த விஷம் மிக மெல்லியதாய் மூளையின் பின்பக்கம் தாக்கிவிட்டது என்று மருத்துவர்கள் சொன்னார்கள். என்னைக் கோட்டைக் காவலுக்குச் சுந்தரசோழர்தான் மாற்றினர்."

"இளவரசே உங்களிடம் ஒரு கேள்வி."

பஞ்சவன்மாதேவி இடையில் புகுந்தாள்.

என்ன என்பதுபோல் இளவரசர் திரும்பி உட்கார்ந்தார்.

"எதற்காக என் தந்தையை இப்படிக் கேள்வி கேட்கிறீர்கள். அவர்கள் மீது ஏதும் சந்தேகமா. அவர்களுடைய சோழதேச விசுவாசத்தின் மீது அவநம்பிக்கையா."

"உன் தந்தையோடு எனக்குப் பரிச்சயமில்லை பஞ்சவன் மாதேவி. விதம்விதமாகக் கேள்விகள் கேட்க கேட்கத்தான் இவரைப் பற்றித் தெரிகின்றது. இவரைப் பற்றித் தெரிந்த இந்த விஷயங்களை நான் வெளியேயும் விசாரிப்பேன். இது சரியாக இருப்பின் செங்காளியை நான் வேறு சில விஷயங்களுக்குப் பயன்படுத்த வேண்டுமென்ற எண்ணம் உண்டு."

"அப்படியெல்லாம் அதிகமாகப் பயன்படுத்திவிட முடியாதப்பா. அவ்வளவு வலுவு இல்லை. வயதாக வயதாக மூளையின் திறன் குறைந்து வருகிறது. உடம்பின் வலுவு அதிகமாக ஆட்டம் கண்டுவிட்டது. என் வயது ஒத்த கிழவர்கள் பலபேர் இன்னும் உற்சாகமாக இருக்க, என்னால் அவ்வளவு விரைவாக இருக்க முடியவில்லை. இதற்குக்காரணம் நான்பட்ட ரணங்களும் அந்த விஷ அம்பும் என்று சொல்கிறார்கள். இன்னொரு முறை அந்த மருந்தை உட்கொண்டு பார்க்கிறாயா என்று வைத்தியர் கேட்கிறார். சரியென்று சொன்னேன். ஆனால் அதில் ஒரேயொரு ஆபத்து இருக்கிறது. அந்த விஷத்திற்குக் கொடுக்கின்ற விஷம் உன் உயிருக்கே ஆபத்து விளைவித்தாலும் விளைவிக்கும் அல்லது உன்னை பலப்படுத்தினாலும் படுத்தும். நீ தயாராக இருக்கிறாயா என்று கேட்க பஞ்சவன்மாதேவி வேண்டாம் என்று மறுத்துவிட்டாள். நான் மருந்து சாப்பிடாமலேயே அல்லாடிக் கொண்டிருக்கிறேன்."

"தந்தையைப்பற்றி வேறு எங்கு விசாரிப்பீர்கள்."

பஞ்சவன்மாதேவி மறுபடியும் இளவரசரைக் கூர்மையாகப் பார்த்துக் கேட்டாள்.

"அவர் சொன்ன விஷயங்களும், அவர் வேலை செய்த மனிதர்களும் எனக்கு அதற்கு உதவி செய்வார்கள் பஞ்சவன் மாதேவி, இப்படி விசாரித்ததாலேயே கோபமடைந்து விடாதே. இதற்கு அர்த்தம் உன் தந்தை அவநம்பிக்கையானவர் என்பதல்ல. எவ்வளவு நம்பிக்கையானவர், எவ்வளவு திறமையானவர் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். பஞ்சவன்மாதேவி வெறுமே தேவாரம் தேடிக்கொண்டு நான் இங்கு வரவில்லை. பஞ்சவன்மாதேவியினுடைய அழகில் கவரப்பட்டு இங்கு அமரவில்லை. இந்த இடத்தின் மீது எனக்கு பலத்த சந்தேகம்

இருக்கிறது. யாரை நம்புவது. யாரை நம்பக்கூடாது என்று அவசல் எனக்குள் இருக்கிறது. செங்காளியை நம்பலாம் என்று என் உள்மனம் சொல்லிற்று. அவர் மகள் இங்கே தலைக்கோலி யாகவும், இன்றைய ஆட்சியாளருக்கு எதிராகவும் இருக்கிறாள் என்ற செய்தியும் கிடைத்தது. அதனால்தான் இங்கு உன் வீட்டில் அமர்ந்திருக்கிறேன். என்னுடைய தேடல் மிகப் பெரிது பஞ்சவன்மாதேவி. அதுவெறும் பெண்களைத் தேடுவதல்ல."

"இளவரசே நான் ஒருகாலும் அப்படிப் பேச வில்லையே."

"அப்படி உள்ளுக்குள் எண்ணமிருந்தால் துடைத்து எடுத்துவிடு என்று சொல்லத்தான் நான் முயற்சிக்கிறேன்."

"உங்கள் தேடல் எதைப்பற்றியது."

செங்காளி அமைதியாகக் கேட்டார்.

"ஆதித்தகரிகாலனைக் கொன்றது யார்."

"என்னைக் கேட்கிறீர்களா அல்லது விசாரிக்க வந்திருக் கிறீர்களா."

"இரண்டுமில்லை. எனக்குத்தெரிந்துவிட்டது உறுதிப்படுத்திக் கொள்ள அலைகிறேன்."

"அதற்கு இந்தச் செங்காளி எப்படி உதவ முடியும்."

"உனக்குத் தெரிந்ததை என்னிடம் சொன்னால் எனக்குத் தெரிந்ததை வைத்து என்ன என்று விசாரிக்க முற்படலாம்."

"இளவரசே சோதிக்க வேண்டியது இப்போது என் முறை. உங்களுக்கு என்ன தெரியும்."

"என்னைச் சோதிக்கும் அதிகாரம் உனக்கு உண்டா செங்காளி."

"இளவரசே நீங்கள் உத்தமசோழரின் கை ஆளாக இருந்து விட்டால் நான் என்ன செய்வது. ஆதித்த கரிகாலனைக் கொன்ற தில் உங்களுக்கும் பங்கு இருந்துவிட்டால் என் நிலைமை என்ன ஆவது."

சட்டென்று இளவரசர் அருண்மொழி எழுந்து நின்றார். அவர் கையில் இடுப்பிலிருந்து குத்துவாள் உருவப்பட்டு மின்னிற்று.

"செங்காளி மக்களில் எவரேனும் இப்படியும் பேசினார் களா."

"இளவரசரே அமைதியாக இருங்கள். விசாரணை என்று வந்துவிட்டால் எல்லாவிதமான பேச்சும்தான் பேசப்படும். அதும் தவிர..."

"அதும் தவிர.." இளவரசர் சீறினார்."

"அப்படியொரு செய்தி பரப்பப்பட்டது இளவரசே-"

"யாரால்."

"சிதம்பரத்து முன்குடுமி அந்தணர்களால்."

"இது உமக்கு எப்படித் தெரியும்."

"அங்கே கூட்டம் போட்டு இப்படிச் செய்ய வேண்டுமென்று தீர்மானம் செய்தார்கள்."

"நீரும் அந்தத் தீர்மானத்தில் இருந்தீரோ."

"நான் சிதம்பரத்தின் கோவில் காவல். இங்கே என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்லதற்காகத்தான் வல்லவரையர் வந்தியத்தேவர் இங்கு அனுப்பினார். நான் அறியாது இங்கு எதுவும் நடக்காது."

"நீர் அறிவதை அவர்கள் அறிவார்களா."

"இல்லை. நான் தூங்கு மூஞ்சி. உடம்பு நடுங்குகின்ற காவலாளி. உதவாக்கரை."

"புரியவில்லை."

"என்னை அவ்விதம்தான் இங்குள்ள சிதம்பர தீட்சிதர்கள் அழைப்பார்கள். நான் வேண்டுமென்றே கூடுதலாக ஆடுலேன். தாம்பாளம் தவறவிடுவேன். கைகோல் நழுவ விடுவேன். கூப்பிட்டால் கேளாதது போல் இருப்பேன். பார்லை மங்கலாக இருக்கிறதென்று கைகள் குவித்து யாரது? சாம்பசில தீட்சிதரா என்ற விசாரிப்பேன்."

"ஆக ஒற்றர்"

"இல்லை. இவ்வை கோவில் காவல். லவ்லவராயர் வந்தியத் தேவர். ஆள் அனுப்பும்போது அவருக்குத் தகவல்கள் அனுப்பு வேன். மற்றபடி வெறுமே இவர்கள் ஆட்டத்தைப் பார்த்து உள்ளுக் குள் புழுங்கிக் கொண்டிருப்பவன்."

"லேறு என்னவிதமான ஆட்டங்கள் இங்கு நடைபெற்றன செங்காளி."

"பெண்களின் பாடுதான் மிக மோசமாக இருந்தது. தளிச்சேரி பெண்டுகளும், தேவரடியார்களும் மட்டுமல்ல. அந்தணப் பெண்டுகள் கூட இவர்களின் முரட்டுத்தனத்திற்கு முன்பு பயந்து அடிபணிந்து அலறினார்கள். பெண்களை அடிமை போல நடத்துவதில் இவர்கள் ஆனந்தம் கொண்டார்கள். ஆனால், ஒரு விஷயம் பாராட்ட வேண்டும்."

"என்ன."

"கடும் உழைப்பாளிகள், சிதம்பரத்தின் ஒரு பகுதியில் இறுக்கமாக மூங்கில்வேலி அமைத்து உள்ளுக்குள் காலையும், மாலையும் இடையறாது களறிப்பயிற்சி செய்து கொண்டிருந்தார்கள். சேர தேசத்து யானைகள் நூற்றுக் கணக்கில் வந்து சிதம்பரம் சுற்றியுள்ள கிராமங்களில் தங்க வைத்து, அந்த யானைகளை வேகமாகச் செலுத்துகின்ற பயிற்சியைத் தினம் செய்தார்கள். அந்த வாயில்லா மிருகத்தை அதிகம் வதைத்தார்கள்."

"வேறென்ன."

"மந்திர தந்திரங்கள் அதிகமிருந்தன. இடையறாது ஹோமம் நடந்தது.

"எதற்காக.'

"உத்தம சோழரைப் பலப்படுத்த, வளப்படுத்த, நீண்ட நாள் ஆயுளோடு இருக்க என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், அத்தனையும் அபிசார ஹோமங்கள் மிளகாயும், கடுகும் போட்டு ஹோமங்கள் செய்வார்கள்."

"யாருக்கெதிராக."

"என்னுடைய அபிப்ராயம் உத்தமசோழருக்கு எதிராக... உத்தமசோழர் பலவீனமடையவேண்டும் என்பதற்காக."

இளவரசர் அருண்மொழி செங்காளியை உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"செங்காளி உனக்கு என்ன தெரியும்."

"முழுவதுமாகத் தெரியவில்லை ஐயா. ஒரு முறை கோவில் காவலிலிருந்து நான் சிதம்பரம் சிறைக் கோட்டத்திற்கு மாற்றப்பட்டேன்."

"ஏன்."

"சிதம்பரம் நடராசர் கோவில் அறைகளைத் திறந்து பார்க்க நான் ஆசைப்பட்டேன். இரவு நேரத்தில் அந்த பூட்டுகளுக் குண்டான சாவிகளைச் சேகரித்து, எந்த அறையில் என்ன இருக்கிறதென்றும் தேடினேன்."

"என்ன தேடினீர்கள்."

"பல அறைகள் பல வருஷங்களாகப் பூட்டப்பட்டே இருக் கின்றன. என்ன இருக்கிறதென்றே எவருக்கும் தெரியவில்லை. தெரிந்து கொள்கின்ற விருப்பமும் எலருக்கும் இல்லை. ஆனால், இத்தனை அறைகள், இத்தனை பூட்டுகள் பல வருடங்களாக தொங்குகின்றனவே இலைகளில் என்ன இருக்கிறதென்று பார்ப்பதற்கு விரும்பினேன்."

"பிறகு."

"ஒரு அறையைத் திறந்தேன்."

"பிறகு."

"அது முழுவதும் பல்வேறுவித உலோகச் சிலைகள் இருந்தன."

"என்ன உலோகச் சிலைகள்."

"எனக்குச் சொல்வத் தெரியவில்லை. எல்லாமும் படுக்க வைக்கப்பட்டிருந்தன. அவைகளெல்லாம் சிவனடியார்கள் போலத்தான் இருந்தது. சித்தர்கள் போல சில சிலைகளும் இருந்தன. சிவபெருமான் தவிர வேறு யாருக்கும் எந்தவிதமான உபசரணையும் தேவையில்லை என்று சொல்லிவிட்டார்கள்."

"கண்ணப்ப நாயனார் சிலை இருந்திருக்குமே."

"அம்மாதிரியான முனிவருடைய சிலையும் இருந்தது. அந்தச்சிலையும் படுக்க வைத்திருந்தார்கள்."

"பிறகு...

"அந்த அறையை யார் திறந்தது என்று கேள்வி கேட்டு என்னை விசாரித்து, நான் தெரியாது என்று சொன்னதும் என்னை நம்பாமல் என்னைக் கோயில் பணியிலிருந்து சிறைக் கூடத்திற்கு மாற்றினார்கள்."

"பிறகு.."

"அந்தச் சிறைக்கூடத்தில் நான் ஒருவனைச் சந்திக்க நேர்ந்தது. அலன் பித்துப்பிடித்தலனாக இருந்தான். பித்துப்

பிடித்ததற்குக் காரணம் அவனைக் கடுமையாக கொடுமைப் படுத்தியிருக்கிறார்கள். விதவிதமாக சித்திரவதைப்படுத்தியிருக் கிறார்கள். அவன் திரும்பத் திரும்ப தனக்குத்தானே உரத்த குரலில் பேசிக் கொள்வான். காட்டிக் கொடுத்து விடுவேன். எப்பேர்ப்பட்ட மகாபாதகம் செய்தீர்கள் என்று கத்துவான். நான் அவனுக்குத் தினமும் வாழைப்பழம் கொடுப்பேன்."

"எதற்கு."

"வாழைப்பழம் வயிற்றுச் சிக்கலைத் தீர்க்கும். நன்றாகக் குடலை சுத்தம் செய்யும். குடல் சுத்தம் ஏற்பட்டால் நுரையீரல் கள் நன்கு வேலை செய்யும். நுரையீரல்கள் நன்கு இயங்கினால் ஹிருதயமும் அதன் துடிப்பும் சரியாக இருக்கும். ஹிருதயத்துடிப்பு சரியாக இருப்பின் ரத்த ஓட்டம் சீராக அமையும். ரத்த ஓட்டம் சீராக இருப்பின் மூளைக் கொதிப்பு நிச்சயம் குறையும். மூளைக் கொதிப்பு குறைவதற்குண்டான மருந்தும் அந்த வாழைப்பழத் தில் வைத்தேன். கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்குப் பிறகு அவன் கொதிப்பு மிகவும் குறைந்தது. அவன் மிக நன்றியோடும், அன்போடும் என் கைகளைப் பிடித்துக் கொண்டு கண்ணில் ஒற்றிக் கொள்வான். தம்பி.. தம்பி.. என்று பேசுவான் என் உடம்பு நடுக்கத்தின் காரணம் கேட்டு கண்ணீர் விடுவான் என்ன சொல்கிறாய். ஏன் இப்படிப் பேசுகிறாய்.. என்ன உண்மை.. யார் கயவர்கள் என்று கேட்டபோது, ஆதித்தகரிகாலனைப் பற்றிய உண்மை என் நெஞ்சுக்குள் இருக்கிறது. இதை வெளியில் சொல்லிவிடுவானோ என்று நினைத்துதான் என்னைச் சிறையில் அடைத்திருக்கிறார்கள். உன்னைக் கொன்று போட்டிருக்கலாமே என்று கேட்க, இல்லை. அவர்களுக்கு நான் மிகவும் உதவி செய்தேன். பல்வேறு விதங்களில் நான் அவர்களுக்கு உண்மை யானவனாக இருந்தேன். ஆனால், அவர்கள் என்னைப்பற்றி பயம் கொண்டார்கள்.

படையோடு என் வீடு சுற்றிக் கொண்டு என் வீட்டிற்குள் நுழைந்து வாளெடுத்து என்னைக் கொல்ல முயன்றபோது என் மனைவி அவர்கள் காலைப் பற்றிக் கொண்டு மாங்கல்ய பிச்சை தருமாறு வேண்டினாள். சரி இவனைக் கொண்டு போய் சிறையில் அடையுங்கள். மரணபரியந்தமும் இவன் சிறையில் இருக்கட்டும் என்று என்னை இங்கு கொண்டு வந்து தள்ளி விட்டார்கள். நான் உளறவேண்டும் என்பதற்காகவே பல்வேறு விதமாக மருந்துகள் கொடுத்து என்னை என் பேச்சை உளறலாக மாற்றினார்கள். விதம்விதமாக சித்ரவதையும் செய்தார்கள்.

காரணமில்லாமல் செய்ய மாட்டார்களே. நீர் என்ன செய்தீர் என்று கேட்டேன்.

அவன் மௌனமாக இருந்தான். இல்லை. அது உனக்குத் தேவையில்லை என்று சொல்லி விலகி விட்டான். பிறகு நான் வாழைப்பழம் கொடுத்தபோதும் வாங்க மறுத்துவிட்டான். ஏன் மறுக்கிறாய் என்று கேட்டேன்.

நீ ரவிதாஸனுடைய ஆள். எனக்குத் தெரிந்து விட்டது. எனக்கு வாழைப்பழம் கொடுத்து அதில் மருந்து வைத்து உண்மை பேச வைக்கிறாய். என்னைக் கொல்ல முயற்சிக்கிறாய். எனக்குத் தெரிகிறது. ரவிதாஸன் சொல்லித்தானே இங்கு வந்திருக்கிறாய் என்னைப் பார்க்காதே போ என்று சொல்லி விட்டான். பிறகு லற்புறுத்தவில்லை. பிறகு, சிறைக்காவலிலிருந்து என்னை மாற்றி குதிரைக்காவல் என்று கேட்டார்கள்."

"அதென்ன குதிரைக்காவல்."

"சிதம்பரத்திற்கு வரும் அந்தணர்கள் கோவில் வாசலில் குதிரைகளைக் கட்டி வைப்பார்கள். நான் அந்தக் குதிரைகளைப் பாதுகாக்க வேண்டும்."

ஒரு ஏளனச் சிரிப்போடு செங்காளி சொல்ல மெல்லியதாய் இளவரசர் அருண்மொழி முகம் சுளித்தார்.

"என் சிவனே... பழுவேட்டரையர் குலத்தில் பிறந்து விட்டு என்னவெல்லாம் அவமானப்பட்டிருக்கிறீர் ஐயா. மறவர்களின் வேதனை ஏன் யாருக்கும் புரியவில்லை என்பதுதான் ஆச்சரிய மாக இருக்கிறது."

"வேறு ஒரு வித்தை விவரமாகவும், விஷமத்தனமாகவும் நடந்தது. சேரதேசத்திலிருந்து வந்த அந்த இரண்டு அந்தணர்களும் தங்களை பிரம்மராயர்களாகச் சொல்லிக்கொண்ட அடுத்த நாளே, தங்களுக்கு வேண்டப்பட்ட மறவர் யார், வேண்டாத மறவர் யார் என்று பிரித்து வேண்டாதவர்களை வேகமாக ஓரங் கட்டினார்கள். அது தெரிந்து பல சேனாதிபதிகள் தாங்களாகவே நகர்ந்துவிட்டார்கள். குறிப்பாக கிருஷ்ணன்ராமனான பிரம்மராயர் மேற்படிப்பு என்று போய்விடவில்லையா. அப்படி அவர்கள் போனதெல்லாம்கூட எங்களுக்குப் பயம் கொடுத்தது."

"புரிகிறது."

"வேண்டாதவர் பக்கம் இருந்தீரா. எதனால் அப்படி உங்களைத் தீர்மானித்தார்கள்."

"இளவரசர் அருண்மொழி என்று உரக்கக்கத்தி உங்கள் பெயரைச் சொல்லி சுந்தரசோழரை ஸ்லாகித்து இருந்தோ மென்றால் எங்களை வேறு என்ன செய்வார்கள். இளவரசர் அருண்மொழியைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும் என்று கேட்கிறீர்களா? அல்லது என்னைப் போன்றவர்களுக்கு என்ன தெரியும் என்று கேட்கிறீரா?"

செங்காளி கண்சிமிட்டியபடி கேட்டான்.

"உனக்குத்தான்... உனக்குத்தான் செங்காளி என்ன தெரியு மென்று சொல்."

"ஆயிரம் ஆண்டிற்கு ஒருமுறை பிறக்கின்ற ஒரு மனிதன் என்று உங்களை, மகத்தான ஒரு மனிதர் சொன்னபிறகு, நான் வேறு யாரைப்போய் கேட்க, என்னவென்று பேச.."

"அப்படியா... என்னைப்பற்றியா அப்படிச் சொன்னார்கள். யார்.. பிரம்மராயரா...

"இல்லை. பிரம்மராயர் எது சொன்னாலும் கேள்வி கேட்பதுதான் எங்கள் வழக்கம்."

சொல்லிவிட்டு செங்காளி உடல் குலுங்கிச் சிரித்தார். இளவரசரும் சிரித்தார்.

"உங்களைப்பற்றி அவ்விதம் சொன்னவர். ஆயிரம் வருடங் களுக்கு ஒருமுறை பிறக்கின்ற மாமனிதன் என்று சொன்னவர் கருவூர்த்தேவர்."

சட்டென்று இளவரசர் தலைகுனிந்தார். அவர் கண்களுக் குள் நீர் கட்டியது. மெல்ல மூக்கை உறிஞ்சி கண்ணில் தளும்பிய நீரை உள்ளுக்குள் விழுங்கிக் கொண்டார். இடப்புறம் திரும்பி வாசற்புரத்து வெளிச்சத்தைத் திரும்பிப் பார்த்தார்.

மனம் கை கூப்பியது. கருவூர்த்தேவரை நோக்கி நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து வணங்கியது.

'இது உண்மையா குருநாதா. நான் அப்படிப்பட்டவனா. அப்படிப்பட்ட அம்சம் ஏதேனும் என்னுள் உண்டா. எந்த உத்தேசமும் இல்லாமல், எந்தப் பொறுப்பும் இல்லாமல் மனம் போனதில்லை. அலைந்து கொண்டிருக்கிறேன். எந்த இடத்திலும் வேர் பரவாமல் பரவிக் கிடக்கிறேன் என்னையா மகத்தான மனிதன் என்கிறீர்கள் என்று உள்ளுக்குள் மருகினார்."

"இளவரசருக்குக் கருவூர்த் தேவர் வார்தைகளில் சந்தேகம் வருகிறதோ."

"ஆமாம்."

இளவரசர் செங்காளியின் பேச்சுக்குத் தலையசைத்தார்.

"அதனால்தான் நீங்கள் மகத்தான மனிதர். பாமரனாக இருப்பின், பண்பு இல்லாதவராக இருப்பின், நான் மகத்தான மனிதன் என்று தன்னைத்தானே அங்கீகரித்து அலைந்திருப்பார். அந்த இடத்தில் சந்தேகம் வருவதால் தான்." நீ மகத்தான மனிதர் என்பதைக் காட்டுகிறது."

"செங்காளி என்னிடம் இவ்வளவு மனம்விட்டு ஏன் பேசுகிறீர்."

"நான் ஒரு ஆட்சி மாற்றத்தை விரும்புகிறேன். உத்தமசோழர் இனியும் இருக்கலாகாது."

"ஏன்."

"ஒரு அரசர்தான் அரசாள வேண்டும். அந்த அரசர் தெளிவானவராய் இருத்தல் வேண்டும். வளம் மிகுந்த சோழதேசத்திற்கு, அரசியலைபபற்றி எதுவும் தெரியாத சேரதேசத்து அந்தணர்களா ஆளுமை செய்வது. உத்தமசோழரை வெறும் பொம்மையாக உட்கார வைத்து ரவிதாஸனும், பரமேஸ்வரனும் ஆண்டு கொண்டிருப்பதை எத்தனை நாள் நாங்கள் பொறுத்துக் கொள்வது. வெகுநாள் பொறுத்துவிட்டோம். உத்தம சோழரும் சோழப் பரம்பரைதானே என்று வெகுநாள் பொறுத்துவிட்டோம். இப்பொழுது ஆள்வது சோழப் பரம்பரை அல்ல. சேரதேசம், வெறும் அந்தணர்கள். அவர்கள் வெறும் அந்தணர்களும் அல்ல. வாளும், வேலும்; சவுக்குக் கையில் ஏந்திய அந்தணர்கள். உத்தமசோழர் பதவியேற்ற அதே வருடத்தில் சேர தேசத்திலிருந்து அறுபது குடும்பங்களை, கிட்டத் தட்ட ஐநூறு அந்தணர்களைச் சிதம்பரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் குடியேற்றம். செய்து விட்டார்கள்.

என்னமாய் யோசிக்கிறார்கள் தெரியுமா இளவரசே. அபாரமான புத்தியுடையவர்கள். தஞ்சை அவர்களுக்குப் பிடிக்கவில்லை. ·வெறும் செம்மண் காடு என்று சொல்கிறார்கள். திருவையாறும், குடந்தையும் அவர்களுக்கு ரசிக்கவில்லை. குடந்தையில் வேரூன்றி விட்ட தமிழ்க்கலாச்சாரத்தை அவர்களால் அழிக்க முடியும் என்று தோன்றவில்லை. அந்தணர்கள் கூட தமிழின்

மீது காதலாக இருப்பது பார்த்துவிட்டு பொருமுகிறார்கள். இப்படி இருத்தலாகாது என்று அந்த அந்தணர்களை எச்சரித்து விட்டு இந்தப்பக்கம் உடையார் குடிக்கு வந்து விட்டார்கள். என்ன அற்புதமான ஊர் தெரியுமா. காவிரியில் வெள்ளம் வந்து அந்த வெள்ளம் கொள்ளிடம் வழியாகப் பாய்ந்து. அந்தக் கொள்ளிடத்து நீர் வந்து தங்குகின்ற வீரநாராயணபுரம் ஏரியின் கரைமுழுவதும் வயல்கள். அலை உடையார்குடி வயல்கள். இங்கு மூன்று போகம் பயிர். ஊடுபயிராக பயறுகள். அகத்திக் கீரைகள், வெற்றிலைக் கொடிகள். நாலு விரல் பருமனுள்ள கரும்புகள் நிறைந்த வயல்கள்."

"இது மட்டும்தான் காரணமா உடையார்குடியில் அமர்வதற்கு."

"இல்லை இளவரசே. உடையார் குடியிலிருந்து குதிரை ஏறிப் பயணப்பட்டால் அரை நாளில் பூம்புகாரைத் தொட்டுவிடலாம். பூம்புகாரில் கிழைச்சாலை என்று ஒன்று ஏற்படுத்தி, அங்கு இவர்கள் போர்முறையான களறிப் பயிற்சி கற்றுக் கொடுக்கிறார்கள். பரதவர்களைத் தங்கள் பக்கம் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை சோழ தேசத்தில் ஏதாவது கலவரம் வந்து, இவர்களுக்கு எதிராக மறவர்கள் வாள் உயர்த்தினால் தப்பித்துப் போவதற்கு அந்தப் பரதவர்களும் கிழைச் சாலையும் அங்குள்ள படகுகளும் உதவி செய்யும்."

"தப்பித்து எங்கே போவது."

"ஈழத்திற்குப் போவார்கள். ஈழத்து அரசன் இவர்களோடு நட்போடு இருக்கிறான். இவர்கள் மதுரை வழியாக சேரதேசம் போவதை விரும்பவில்லை. அது ஆபத்து என்று நினைக்கிறார்கள். கங்கதேசம் வழியாக சேரதேசம் போகவும், பூம்புகாரில் படகேறி ஈழம்போய் அங்கிருந்து குமரிமுனையில் கால்வைத்து, குமரி முனையிலிருந்து சேரதேசம் விரையவும் இவர்கள் புதுப்பாதை வகுத்திருக்கிறார்கள். மூக்கு நுனியில் தமிழ் பேசுகிறார்கள். அதிகம் சமஸ்கிருதத்தைத் தங்கள் மொழியில் கலக்கிறார்கள். பரிபாஷையாகப் பேசுகிறார்கள். சேரதேசத்துப் பெண்களுக்கு முத்து என்றால் விருப்பம். எனவே, பாண்டிய தேசத்து முத்துக்கள் பலதும் வாங்கி அங்கு அனுப்புகிறார்கள். மயிலையிலிருந்து பித்தளைப் பாத்திரங்களும், மரச்சாமான்களும் இடையறாது நாவாய்கள் வழியாகத்தான் போய்க் கொண்டிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் இழைத்த கற்பலகைகளைச் சேர தேசத்திற்கு பெரும் பாரவண்டிகளில் எடுத்துப் போகிறார்கள்.

கேட்டால் மாளிகை கட்ட என்கிறார்கள். அந்தக் கற்களைப் பார்த்தால் மாளிகை கட்டுகின்ற கற்களாக இல்லை. அந்தக் கற்களின் அளவுகள் கோட்டை கட்டுகின்றபடி தான் இருக்கின் றன. பொதுவாகச் சொல்லதென்றால் கிட்டத்தட்ட பதினைந்து வருடங்களாக சேரதேசத்தை பலம் பொருந்திய நாடாக மாற்ற என்னவெல்லாம் முடியுமோ அத்தனையும் நடந்து கொண்டிருக் கின்றன.

குறிப்பாக காந்தளூர்ச்சாலையை மிகச்சிறந்த ஒரு பாது காப்பு அரணாகவும், வீரர்களைத் தயாரிக்கும் கடிகையாகவும் மாற்றி இருக்கிறார்கள். சேரதேசத்து காந்தளூர்ச்சாலை கடிகையில் தயாரான வீரர்கள் இதோ இந்தக் கோயிலுக்கு வந்து, இந்தக் கூட்டத்தாரோடு பழகி சேரதேசத்தைக் காப்பேன் என்று இங்கே சங்கல்பம் செய்து கொள்கிறார்கள். இங்கே சோழ தேசத்து அதிகாரியாக, உபசேனாதிபதியாக பட்டம் ஏற்கிறார்கள். சிதம்பரம்தான் நமது தலைமையிடம் என்று இவர்கள் சொல்லிக் கொள்கிறார்கள். இதெல்லாம் கேட்கக் கேட்க வயிறு எரிகிறது. நெஞ்சு கொதிக்கிறது. ஆனால் என் நடுக்கம் அதிகமாகிறது. என்னால் இனிமேல் வாளெடுத்துப் போரிட முடியாது. வெட்டி வீழ்த்த முடியாது. வெட்டி வீழ்த்துப்பவர் எவரோ அவர் காலைப் பற்றிக்கொண்டு இந்த சோழ தேசத்தைக் காப்பாற்று என்று நெஞ்சில் அறைந்து கொண்டு கதறவேண்டும் போல் இருக்கிறது. இன்னும் ஐந்து அல்லது பத்து வருடங்கள் இவர்களுடைய ஆட்சி தொடர்ந்து இருப்பின், சோழதேசத்தைக் கீழைச் சாளுக்கியத்தி லிருந்து பிரித்து மேலைச்சாளுக்கியத்திற்கு அடமானம் வைத்து விடுவார்கள் என்பதில் எனக்கு நெல்முனையிலும் சந்தேகமி ல்லை.

இப்பொழுதே கீழைச்சாளுக்கியத்தையும், மேலைச் சாளுக் கியத்தையும் இணைக்கின்ற வகையைச் செய்து கொண்டிருக் கிறார்கள். திருமணபந்தங்கள் நடத்த வேண்டுமென்று விரும்பு கிறார்கள். பங்காளிச் சண்டையால் அன்னியனை வரவிட லாமா. மேலைச் சாளுக்கியன் பங்காளி அல்லவா. சோழதேசம் அன்னியமல்லவா என்று இவர்கள் சொல்ல, அவர்கள் கைகட்டிக் கொண்டு கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். சோழ தேசத்தின் நடுமையத்தில் அமர்ந்து, சோழ தேசத்தின் உப்பைத் தின்று, சோழ தேசத்தின் கழிவை விரும்பும் அந்தத் துரோகிகளை என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை. இளவரசே. நான் வெறும் கோட்டைக்காவல். கோவில் காவல். எனக்கு அரசியல் அறிவு எதுவுமில்லை. ஆயினும், இங்கு நடப்பனவற்றையெல்லாம்

பார்க்கப் பார்க்க ஏதேனும் செய்தாக வேண்டுமென்ற பெரும் வெறி ஆத்திரம் வருகிறது. இது எதுவும் பலிக்கவில்லை எனில் வேறு ஒரு திட்டம் இருக்கிறது."

"என்ன திட்டம்"

"பஞ்சவன்மாதேவியைப் பலி கொடுக்கத் திட்டம்."

"என்ன உளறுகிறாய் செங்காளி."

"நீங்கள் நினைப்பதுபோல வெட்டிக் கொடுக்கப் போவதில்லை. பஞ்சவன்மாதேவியை நீ போய் ரவிதாஸனோடு, பரமேஸ்வரனோடோடு ஸ்நேகமாய் இருந்து அவனைக் குத்திக் கொன்றுவிட்டு நீயும் செத்துப் போ என்று விடை கொடுத்தனுப்புவது. அதற்காக கத்தியைப் பரிசாகக் கொடுப்பது."

"அடேயப்பா.. இதெல்வாம் செய்யத் தெரிந்தவர்கள் தானா இவர்கள்."

இளவரசர் மெல்வ கேலியோடு பஞ்சவன்மாதேவியைச் சுற்றிப் பார்த்துவிட்டுக் கேட்டார். பஞ்சலன்மாதேவி எந்த முகபாவமும் காட்டாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தாள்.

"ஆனால், பஞ்சவன்மாதேவியை விரட்டுவதாக அல்லவா நான் கேள்விப்பட்டேன்."

"ஆமாம். நன்றாக நடனம் ஆடத் தெரிந்தாலும், நாட்டியம் பற்றி அதிகம் அக்கறை எடுத்துக்கொள்ளாது பாடுதலையே தன்னுடைய முக்கியமான' வேலையாக நினைத்து நம்பியாண்டார் நம்பியிடம் பதிகங்கள் வாங்கி தேவார திருவாசகங்கள் கற்று, பதிகங்களையே பாடிக் கொண்டிருக்கிறவளைப் பரமேஸ்வரன் பார்த்துவிட்டு, இவளை என் அண்ணனுக்குப் பரிசாகக் கொடுப்பேன் என்று துரத்தியிருக்கிறான்."

"அது எப்படி தடுக்கப்பட்டது."

"நம்பியாண்டார் நம்பி தடுத்தார்."

"எவ்விதம்."

இளவரசர் புருவத்தைச் சுருக்கிக் கொண்டு கேள்வி கேட்டார்.

"தான் தேவார திருவாசகங்களை ஊர் ஊராகப் போய் சேகரித்து வருவதாகவும், அப்படி சேகரித்து வந்த திருவாசகங்களையும், தேவாரங்களையும் பிரதியெடுக்க தமிழறிந்த இசை

யறிந்த பெண் தேவை. இந்தப் பெண் சூட்டிகையாக இருக்கிறாள். இவளை அதற்கான பணிக்கு அனுப்புங்கள் என்று சொல்ல, அவருக்குப் பயந்து சரி என்று சொல்லி விட்டார்கள்."

"நம்பியாண்டார் நம்பி பற்றி அவர்களுக்கு நன்றாகத் தெரியுமா."

"ஆமாம். ஊர் ஜனங்கள் சொல்லக் கேள்விப் பட்டிருக் கிறார்கள். அலர் வாழைப்பழங்கள் நீட்ட கல்லால் செய்யப் பட்ட விநாயகர் உருவம் தும்பிக்கை நீட்டி வாங்கி உண்டது என்பதை ஊர்மக்கள் அடித்துச் சொல்ல மிரட்சியோடு பார்த்தார்கள்."

"எனதயும் எளிதில் நம்பமாட்டார்களே."

"இல்லை நம்பும்படியாகவும் சிலதை நம்பியாண்டார் நம்பி செய்தார்."

"என்ன... என்ன அது."

இளவரசர் ஆவலானார்.

"அந்தப் பரமேஸ்லரனைப் பார்த்தவுடன் உன்னுடைய நட்சத்திரம் இது. உன் ஜாதகத்தில் குரு இங்கு இருக்கிறது. ராகு இங்கு இருக்கிறது. கேது இங்கு இருக்கிறது. இதனால் நீ இந்த குணமுடையவன். இந்த குரு இங்கு இருப்பதால் சந்திரனுடைய இடம் இது. சந்திரன் இங்கு இருப்பதால் புதனும், சூரியனும் இங்கே இருக்கிறார்கள். என்று பார்த்த மாத்திரத்தில் சொன்னார். அவன் திகைத்தான். பிறகு அவனைத் தனியே அழைத்துப் போய் காதோரம் இகஇகப்பாக இப்படித்தான் நடந்திருக்கும் என்று சொல்ல, அலன் முகம் வியர்த்துக் கொட்டியது. இனி என்ன நடக்கும் என்று கேள்வி கேட்க, பதினாலரை லருடம் உன்னு டைய அற்புதமான நேரம் முடிந்து விட்டது. இனி சோதனைக் காலம்தான். மரணத்திற்கு நேரான கண்டங்கள் ஏற்படும் காலம் இது என்று சொன்னார்.

•எனக்கொரு சாட்சியங்கள் கொடுங்கள் என்று அதட்டி னான். இங்கிருந்து மூன்று தப்படி போ உன்னை காகம் மூன்று முறை தீண்டும் என்று சொன்னார். அவன் போனதும் மூன்று முறை காகம் அவன் தலையில் கொட்டியது. அவன் அரண்டு போனான். மெல்ல வந்து அவர் தாளில் பணிந்தான். அவர் சொல்லியபடியே பஞ்சவன்மாதேவியை விட்டான். பிறகு தொந்தரவு ஏதும் செய்யவில்லை."

“நம்பியாண்டார் நம்பி என்னைப்பற்றி என்ன சொல்கிறார்.”

“ஏன், கேள்வி கேட்பனத நிறுத்தவே மாட்டீர்களா.”

பஞ்சவன்மாதேவி சரக்கென்று ஒரு கோபத்தோடு பேசினார்.”

இளவரசர் சிரித்து. “என்ன சொல்லுங்கள்” என்று பஞ்சவன் மாதேவியைப் புறக்கணித்து செங்காளியைப் பார்த்துக் கேட்டார்.”

“உங்களை அவர் சிவபாதசேகரன் என்றுதான் சொல்கிறார். சைவ சமயத்தின் சுடர்விளக்கு என்று தான் அழைக்கிறார். உங்களால் மகத்தான காரியங்கள் ஆகும் என்று சொல்கிறார்.”

“நான் நாடோடியாகலல்லவா இருக்கிறேன்.”

“அவருடைய கணக்கு பிசகேயில்லை.”

“எப்படிச் சொல்கிறாய்.”

“பதினாலரை வருடங்கள் உத்தமசோழருடைய உன்னதமான காலம். அது முடிவுக்கு வந்துவிட்டது. உங்களுடைய பொற்காலம் ஆரம்பமாகிவிட்டது.”

“நீ சொல்கிறாயா... அவர் சொல்கிறாரா.”

“போன பௌர்ணமியில் அவர் வீட்டுக் கூட்டத்தில் அமர்ந்து பேசும்போது அலர் சொன்னது இது.”

“அவர் ஊரில் இருக்கிறாரா.”

“இல்லை.”

“எங்கே போயிருக்கிறார்.”

“ஈசான சிவபண்டிதரைப் பார்க்க எசாளம், எண்ணாயிரம், பிரம்மதேசம் என்று போயிருக்கிறார்.”

“அப்படியென்ன... எல்லாமும் எசாளமும், பிரம்மதேசம் போகிறார்கள்.”

“அங்கு அந்தணர்கள் ஒன்று கூடி விவாதித்து புதிய ஆகம விதிகளை, ஹோமயாக விதிகனளச் சீர்செய்து தருகிறார்கள். அஸ்வமேதயாகம் எப்படி செய்வது என்பது குறித்து விலாதம் ஒரு வருடம் நடைபெற்று இன்னவிதமாகத்தான் நடத்தப்பட வேண்டும் என்று எழுதப்பட்டுவிட்டது. இது மிகப்பெரிய விஷயம் என்ன அந்தணர்கள் சொலகிறார்கள்.”

"இந்தச் சிதம்பரத்து தீட்சிதர்களைப்பற்றி பிரம்மதேசத்தில் அமர்ந்திருக்கின்ற ஈசான சிவபண்டிதர் என்ன சொல்கிறார்."

"தெரியவில்லை."

"குடந்தை அந்தணர்கள் என்ன சொல்கிறார்கள்."

"பயந்து என்ன சொன்னாலும் தலையாட்டிக் கொண்டிருக்கிறார்கள்."

"நம்பியாண்டார் நம்பி அவர்களின் கருத்து என்ன."

"இவர்களோடு போராட்டமாக இருக்கிறதே. ஒவ்வொரு விஷயத்திற்கும் இவர்களோடு முரண்பட வேண்டியிருக்கிறதே என்று அலுத்துக்கொள்கிறார்."

"வேறு என்ன விஷயங்களில் முரண்."

"தில்லை நடராஜருக்கு நைவேத்தியம் செய்து வை. அந்தணர் தவிர வேறு எலருக்கும் வழங்கப்பட மாட்டாது. க்ஷத்திரியர்களுக்கும் அதில் பங்கு இல்லை. கோவில் மடப்பள்ளியில் தயாராகும் சில பட்சணங்களை மட்டும் பிரசாதங்கள் என்று வினியோகிக்கிறார்கள். அவிஸ் என்னை சொல்லப்படும் நெல்லுச் சோற்றை அவர்கள் மட்டுமே பங்கு போட்டுக் கொள்கிறார்கள்."

"ஏன்."

"இறைவனின் பிரசாதம் சாப்பிட, அந்தணர் தவிர வேறு எவருக்கும் யோக்கியதை இல்லை என்கிறார்கள்."

"என்ன அபத்தம் இது."

"இதே லார்த்தையைத்தான் நம்பியாண்டார் நம்பி அந்தச் சிதம்பரத்து தலைமை தீட்சிதரிடம் பேசினார். ஈசனலன் எல்வுயிர்க்கும் இயல்பானான் சாழேலோ என்று சொன்னார். பஞ்சலன்மாதேவி அந்தப்பாட்டை இளலரசருக்குச் சொல்லிக் காண்பி." இளலரசர் ஆவவோடு பஞ்சவன்மாதேவி நோக்கித் திரும்பினார்.

"இரண்டு பெண்கள் சாழல் என்று விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். கல்லை மேலே தூக்கிப்போட்டு கீழே இருக்கிற கல்லை வாரி எடுப்பதற்கு அப்படிப்பெயர். ஒரு கேள்வியாக ஒரு பெண் கேட்டு விளையாட பதிலாக இன்னொரு பெண்பாடி அந்தச் சாழல் விளையாட்டு நடைபெறுகிறது. அந்தப் பெண்கள் சாழல் விளையாட்டு ஆடிக் கொண்

டிருக்கும்போது தெருவிலே ஒருவர் பட்டை பட்டையாய் உடம் பெல்லாம் திருநீறும், புஜங்களில் பொன்னால் செய்யப்பட்ட ஆரமும், முகத்தில் மறை ஓதுதலின் தேஜஸுமாய் நடந்து போகிறார். அந்தப் பெண் பாடுகிறாள்.

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம் பேசுவதும் திருவாயான்மறை போலும் காணேடி என்று அவளைப் பார்க்கச் சொல்கிறாள். உடம்பெல்லாம் திருநீறு பூசி பொன் அரவத்தைக் கையிலே தரித்து பேச்செல்லாம் மறையாக இருக்கின்ற அவனைப் பார்த்தாயா என்று கேட்க, எதிரே இருந்த பெண் சாழல் விளையாடியபடி பதில் சொல்கிறாள்.

பூசுவதும், பேசுவதும், பூண்பதுவும் கொண்டென்னை ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழேலோ.

இப்படிப் பூசிக் கொள்வதாலும், பூண்டுவிடுவதாலும் இறைவனுடைய அண்மை வந்துவிடுமா. ஈசன் எல்லா உயிர்க்கும் இயல்பாக இருக்கிறான். அவனுக்கு உயர்வு, தாழ்வு என்றபேதம் இல்லை என்று மறைமுகமாய் இந்தப்பாடல் சொல்கிறது."

"அடேயப்பா... அடேயப்பா... என்ன சிந்தனை. என்ன தெளிவு. என்ன திடம். என்ன இறைப்பற்று."

இளவரசர் அருண்மொழி கைகூப்பினார். இடக்கை நீட்டி மெல்ல பஞ்சவன்மாதேவியின் இடக்கை தொட்டார். பிறகு தன் வலக்கையால் பஞ்சவன் மாதேவியின் கைகள் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

மிகுந்த கனிவோடு அவரைப் பார்த்தாள். பஞ்சவன் மாதேவியின் உடம்பில் மெல்லிய சிலிர்ப்பு ஏற்பட்டது. தன் பெரிய விழிகளை உயர்த்தி இளவரசர் அருண்மொழி உற்று நோக்கினாள். விழிகளைச் சார்த்திக் கொண்டாள்.

அவள் மனம் இறைஞ்சத் துவங்கிற்று.

அரசியல் சாமர்த்தியமும், கூர்த்த மதியும், அதே நேரம் இறைவனைப் பற்றிய சிறிய லாக்கியத்திற்குக் கூட நெகிழ்ந்து போகின்ற பக்குவமும் நேர்மையும் திறனும் மிக்க இவனையே எனக்கு இறையே புருஷனாக்கு என்று வேண்டினாள்.

நிமிர்ந்து அவள் வீட்டிலிருக்கின்ற நடராஜர் ஓவியத்தைப் பார்த்தாள்.

ஓவியத்தில் சார்த்தியிருந்த சரத்தின் வலது பக்கம் சரக்கென்று நழுவி ஊசலாடியது. நின்றது. அலன் கண்கள் மூடி நன்றி... நன்றி... என்று உள்ளுக்குள்ளேயே அரற்றத் துலங்கினான்.

"செங்காளி... உன்னுடைய பாதுகாப்பிற்கும், உன் மகளுடைய பாதுகாப்பிற்கும் இந்த அருண்மொழி பொறுப்பு. சோழ தேசத்திற்காக விஷ அம்பு தாங்கியும், பல வேதனைகள் அனுபவித்தும் இந்தக் குடும்பம் பேரவஸ்தை பட்டிருக்கிறது. அதற்கு நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். செங்காளி... யுத்தம் என்பது வாளெடுத்து எதிரிகளைத் தேடிப்போய் லெட்டி வீழ்த்துலது மட்டுமல்ல... உள்ளுக்குள்ளே எந்தக் கரையானும் நுழையாது சுத்தமாகவும், கவனமாகவும் வீட்டை வைத்திருக்க லேண்டும். நான் சோழ தேசத்தைச் சுத்தம் செய்யப் போகிறேன்.

உன்னிடம் கேட்ட கேள்விகளெல்லாம் உனக்கு என்ன தெரியுமென்று அறிலதற்காகவே கேட்கப்பட்டவை. நீ சொன்ன தைக் காட்டிலும் அதிக விஷயங்கள் எனக்குத் தெரியும். யார் என்ன செய்கிறார்கள். எங்கே நகருகிறார்கள். ஏன் நகருகிறார்கள் என்பதை நானும் அறிவேன். செங்காளி மறுபடியும் ஒரு போருக்கு நீ தயாராக வேண்டும். உன்னைப் பொருத்தவரையில் இதுதான் கடைசி போராக இருக்கும். இந்தப் போரில் நாம் ஜெயித்துவிட்டால் உன்னை மிகச்சரியான இடத்தில் வைப்பேன். உன் மகளை இன்னும் பத்திரமாய் நான் பாதுகாப்பேன்.

செங்காளி உன் வீட்டிற்குள் அமர்ந்து உன் மகளோடு தேவார திருவாசகம் படிக்கிறபொழுது என்னுடைய மனதின் வேதனைகளெல்லாம் சுத்தமாய் துடைத்தது போல மறந்து விடுகிறது. செங்காளி பட்டமகிஷி உட்பட எனக்கு மூன்று மனைவிகள். பழுவேட்டரையரின் குலத்தில் தோன்றிய இந்த அற்புதமான பெண்ணையும் நான் மனைவியாக வரிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். உனக்கு உன் மகளைப் பற்றி, அவள் திருமணம் பற்றி வேறு அபிப்ராயம் இருப்பின் இதை மறுப்பதற்கும் உனக்கு உரிமை உண்டு. இளவரசர் என்கிற முறையிலோ, சோழ அரசர் குலத்தைச் சேர்ந்தலர் என்கிற முறையிலோ நான் இதைக் கேட்கவில்லை. சைவ சமயத் திருத் தொண்டு செய்வதற்கும். இந்த சோழதேசத்தை நான் வளமாக வைத்துக்கொள்லதற்கும் இந்தப் பெண் மிகவும் உதவியாக இருப்பாள்." என்று இளவரசர் சொல்ல பஞ்சவன்மாதேவி அஞ்சிப் பின்னடைந்தாள்.

அவளால் அவன் காதுகளை நம்பமுடியவில்லை. அவன் இருப்பதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

'நானா. உனக்கா மனைவியாகவா மறுபடி சொல். மனைவி யென்றா சொன்னாய். பட்டமகிஷியோடும் மற்ற மனைவிய ரோடும் வைத்திருக்கவா விரும்புகின்றாய். சிதம்பரத்திற்கு வந்து சுகித்துவிட்டுப் போவாய். உனக்கு ஆட்பட்ட பெண்ணாக இருக்கலாம் என்றல்லவா நினைத்தேன். உன் மனம் கனிந்த தளிச்சேரிப் பெண்டாக வாழலாம் என்றல்லவா கனவு கண்டேன். நீ ஏன் எனக்குத் தங்க லர்ணம் கொடுக்கிறாய். எனக்கு எதற்கு அரண்மனை வாழ்வு. ஓட்டுக் கூரையும், தேக்கு கட்டிலும் பெரிய திண்ணையும், நடனமாடக்கூடமும், அதற்குப் பின்புறம் கொல்லைப் புறமும், அங்கே செடிகொடிகளும், அங்கே ஊஞ்சலும், படிக்க தேவார திருவாசகங்களும் போதும் என்றல்லவா நினைத்தேன். என்னை உன் குதிரையில் ஏற வைத்து இடுப்பு இறுக்க வேறெங்கோ அழைத்துப் போகப் போகிறாயா. எந்த இடம் உடையார்குடியா... குடந்தையா- பழையாறையா... இல்லை தஞ்சைக்கே அழைத்துப் போய் விடுவாயா. சற்றுமுன் நாடோடி என்று சொன்னாய். எதுவு மில்லாத இளவரசர் என்றாய், இப்பொழுது என்னை மனைவி யாக்கிக்கொள்ள என்ன காரணம்.

அருண்மொழி நீ பெரிய ஆள். என் மனதை என் கண்களி னூடே படித்துவிட்டு, என் மனதைத் திருடிக் கொண்டு போகும் உள்ளம் கவர் கள்வன். ஏய்... சிவபாதசேகரா... நிஜம்தானா இல்லை இன்று இரவு சுகிப்பதற்காக இவ்வளவு வார்த்தைகளை இறைக்கிறாயா. என்னைக் காயப்படுத்தாதே. கலவரப் படுத் தாதே.. அலைக்கழிக்கப் பட்டவள். சிவனருளால் தப்பித்தவள். நீ அழைத்துப் போய் கூறு போட்டு விடாதே. ஒரு தளிச்சேரிப் பெண்டாக, தேவரடியாராக, உன் காமக்கிழத்தியாக, அணுக்கி யாக வைத்திரு. அதுபோதும் மனைவி என்பது எவ்வளவு மகத்தான வார்த்தை. சோழசாம்ராஜ்ஜியத்தின் குலக்கொடி என்னைத் துணையாக ஏற்கிறதென்றால் அது எவ்வளவு பெரிய பாக்கியம். உண்மையில் நான் அதற்குத் தகுதியானவளா. என்னைத் தெரிந்து கொண்டு பேசுகிறாயா. தெரியாமல் பேசுகிறாயா.'

அவன் மெல்ல பின்னடைந்து கொல்லைப்புறம் ஓடிப்போய் குனிந்து மேடையில் தலை கவிழ்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

கால்களை கட்டிக்கொண்டு முழங்கால்களின் மீது முகவாயை வைத்து 'சிவனே.. சிவனே' என்று அரற்றினான்.

"இளவரசே... நான் பழுவேட்டரையன் பரம்பரை. ஆனால், பஞ்சவன்மாதேவியின் தாய் தளிச்சேரிப் பெண். தலைக்கோலி. மிக நன்றாக நாட்டியமாடுபவள். என்னைவிட பதினாறு வயது சிறியவள் நாங்கள் இரண்டு பேரும் காதலித்து மணந்தோம். பல யுத்தங்களுக்குத் தொடர்ந்து போனதால் எனக்கு முறையாகத் திருமணம் செய்ய நேரம் இல்லை. பாண்டிய தேசத்தின் எல்லையில் சேரதேசத்தை நோக்கி நெடுநாள் காவல் புரிந்ததால் சோழதேசம் வருகின்ற எண்ணம் இல்லை. பாண்டிய தேசத்துப் பெண்களைத் திருமணம் செய்யும் எண்ணம் இல்லை. இங்கு வந்தபிறகு இவள் தாயோடு பழக்கம் ஏற்பட, இவள் தாயை மட்டுமே நான் மணந்தேன். வீட்டில் எதிர்த்தார்கள். திருமணம் செய்து கொள். இவளும் இருக்கட்டும் என்றார்கள். நான் மறுத்துவிட்டேன்."

"என் மனைவி போன வருடம்தான் மரணமடைந்தாள். பெண்ணுக்குத் திருமணம் செய்யாமல் போகிறேனே. இவளை ஆண்போல வளர்த்து விட்டாயே என்று மிகவும் நொந்து கொண்டிருந்தாள். மரணத்தினத்தன்று காலை என்னை அழைத்து நம் மகள் சம்மந்தமாய் உங்களை நான் ஏசியிருந்தால் மன்னித்து விடுங்கள். நமது மகள் மிக உயர்ந்த பதவியில் இருப்பாளென்று எனக்கு என் மூதாதைகள் தெரிவித்திருக்கிறார்கள். அம்மாவின் அம்மா, என் பாட்டி நான் பார்த்துக் கொள்கிறேனடி பஞ்சவன் மாதேவியை என்று கை உயர்த்தி சத்தியம் செய்தாள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அப்பொழுது நான் என்ன செய்யட்டும் என்று கேட்டேன். வந்துவிடு என்றாள். எனவே, எனக்கு இன்று மாலைக்குள் மரணம் ஏற்பட்டுவிடும். பஞ்சவன்மாதேவி பற்றி கவலையே வேண்டாம். என்னுடைய மூதாதையர்களும், உங்களுடைய மூதாதையர்களும் அவளைக் காப்பாற்றி மிக உயர்ந்த நிலையில் வைப்பார்கள். இது நிச்சயம் என்று சொல்லி குழந்தையின் உச்சியில் நல்ல வெளிச்சம் இருக்கிறதென்று கண்களை மூடி சிவன் நாமம் சொல்லியபடி உயிர் நீர்த்தாள் அவள் வாக்கு பலித்திருக்கிறது."

என் மகள் பஞ்சவன்மாதேவி உங்கள் அடிமை. இந்த செங்காளியம் உங்கள் அடிமை. என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள்."

"சொல்லுகிறேன் செங்காளி. வேறு சில தகவல்களைத் தெரிந்து கொண்டு உன்னைச் சந்திக்கிறேன். என்னுடைய மெய்க் காவல் வீரர்கள் இரண்டு பேர் ரகசியமாய் உன் வீட்டைக் காவல் இருப்பார்கள் விறகுக்கட்டை விற்பவர்கள்போல், காட்டு வாசிகள் போல காட்சியளிப்பார்கள். அவர்கள் கொண்டையில் ஒரு புலிக்காக ஒளிந்து வைத்திருப்பார்கள். அதுதான் அடை யாளம். அவர்களை நீ நம்பலாம். ஆனால், பேசவேண்டாம்."

"அவர் குதிரை ஏறிப்போனார். அவர் குதிரை ஏறிப்போன அடுத்த சில நொடிகளில் இரண்டு வீரர்கள் உள்ளே நுழைந் தார்கள்.


"யாரது... இளவரசர் அருண்மொழியா. இத்தனை நேரம் இங்கு என்ன செய்து கொண்டிருந்தார்." என்று செங்காளியைப் பார்த்துக் கேட்டார்கள்."

என் மகளைப்போய் கேளுங்கய்யா என்று அவர் கொல்லைப்புறத்தைக் காட்ட..... கொல்லைப்புறத்தில் அவள் சுருண்டு படுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து. நன்கு விளை யாடி விட்டுப் போகிறார் போலும் என்று உரத்துச் சொல்வ. இன்னொருவன் வாய்விட்டுச் சிரிக்க.... செங்காளி ஆ மென்று தலையசைத்தார். உள்ளுக்குள் வேதனை சட்டென்று பொங்கி வழிந்தது. கூடுதலாக நடுங்கி சுவர் பிடித்துக்கொண்டு உள்ளே போனார். அந்த வீரர்கள் வெளியேறினார்கள்.

# 140

ஒரு மெய்க்காவல் வீரன் வந்தியத்தேவருக்கு ரகசிய ஓலை எடுத்துக் கொண்டு போனான். அந்த ஓலை குதிரைச் சேணத்தில் வைத்துத் தைக்கப்பட்டிருந்தது. சிதம்பரம் எல்லையைத் தாண்டிய வுடன் அவனை சேரதேசத்து அந்தண வீரர்கள் மடக்கி உடம் பெல்லாம் தடவி ஓலை ஏதும் இருக்கிறதா என்று விசாரித்து, எங்கு போகிறாய் என்று கேட்டு அவனிடம் எதுவுமில்லை யென்று அனுப்பினார்கள். வந்தியத்தேவருடைய வீட்டில் போய் சேணத்தினுடைய நூலைப்பிரித்து அதற்கு நடுவே இருந்த ஓலைகளை எடுத்து அவரிடம் கொடுத்தான்.

"ஆதித்த கரிகாலனைக் கொன்றதின் சம்மந்தமாக எனக்கு சில தகவல்கள் கிடைத்திருக்கின்றன. நான் கிளறி வெளியே கொண்டு வந்து உத்தமசோழரைப் பதவியறக்கத் தீர்மானித்திருக் கிறேன். உம் உதவி தேவை. சிறுபடையோடு சிதம்பரத்திற்கு



லரவும். மக்களோடு படைகள் கலந்து சிதம்பரத்தில் தங்கிக் கொள்ளட்டும்." குந்தவை வந்தாலும் நல்வது." என்று எழுதியிருந்தது. வந்தியத்தேவர், அன்று மாலையே சிதம்பரம் நோக்கி திருவல்வத்திலிருந்து பயணப் பட்டார்."

"நம்பியாண்டார் நம்பி ஊரில் இல்லை. ஏழு நாட்களில் வந்து விடுவேன் என்று சொன்னவர் இதுகாறும் வரவில்லை. அவர் போய் ஏழு நாட்களாகி விட்டன." வீட்டிலுள்ளோர் கலலைப்பட்டார்கள். தாயும், தந்தையும் இளவரசர் அருண்மொழியைப் பார்த்துவிட்டு கைகளைப் பற்றிக் கொண்டனர்.

"அரசாங்க எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொள்வானோ என்ற பயம் இருக்கிறது. அடித்துக் கொன்று விடுவார்களோ என்ற பயம் இருக்கிறது. அப்படி ஒரு உயிர், சிவன் சொத்துக்காகப் போவதென்றால் போகட்டும். தேவார திருவாசகங்களைச் சேகரிப்பது என் பணி என்று இடையறாது ஊர் ஊராய் அலைந்து கொண்டிருக்கிறான். புலவர்களையெல்லாம் பார்த்துப் பேசி யாருக்கு எந்தப்பாட்டு ஞாபகம் இருக்கிறதோ... அதை எழுதிக் கொண்டிருக்கிறான். பாடல்களில் சில திருத்தங்கள் செய்கிறான். பிழையாகப் பாடுகிறார்களே என்று கட்டிக்காட்டுகிறான். பிழையின்றிப்பாட அவர்களுக்குப் போதித்துவிட்டு வருகிறான். நன்றாக உண்பதில்லை. உறங்குவதில்லை. முன்னூற்று அறுபத்தேழு பாடல்கள் பத்துப் பத்து பிரதிகளாக எடுத்து கட்டி வைத்திருக்கிறான். எந்த இடத்தில் இவைகளைச் சேர்க்க வேண்டுமென்று இடையறாது தொட்டுத் தொட்டு பார்த்து பேசிக்கொண்டிருக்கிறான். இவன் வாழ்க்கை எப்படி முடியுமென்று தெரியவில்லை ஐயா." என்று நம்பியாண்டார் நம்பியின் தந்தை குமுறினார்."

"இளவரசர் அருண்மொழி ஆறுதல் சொல்லிவிட்டு வந்தார்.

"சிதம்பரம் விட்டு வெளியேறுவதாய்ச் சொல்லி வந்தியத் தேவர் வந்தால் உபசரிக்க வைசியர்களை ஏற்பாடு செய்துவிட்டு

கீழைச்சாளுக்கியம் போய் அங்கு என்ன நடக்கிறது என்று பரதவராக வேடமிட்டு பேசிவிட்டு வந்தார்.

முழு வீச்சில் போர்ப்பயிற்சி நடந்து கொண்டிருந்தது. மிக எளிதாக நானூறு வீரர்கள் தேறுவார்கள் என்று கணக்கு சொல்லப்பட்டது. அவருடைய தனிப்பட்ட ஒற்றர்களை அங்கு நிறுத்தி வைத்தார். அங்கிருந்து எந்தச் சலனம் ஏற்பட்டாலும் உடனடியாகச் சொல்ல வேண்டும் என்று கட்டளையிட்டார். ஒரு தாக்குதலுக்குத் தயாராக இருங்கள் என்றும் அவர்களுக்குச் சொல்லப்பட்டது.

திருவொற்றியூரிலுள்ள இராஜேந்திரர் படைகளை கடற்கரை ஓரமாக நடந்து வரச்சொல்லி திரிப்பாதிரிப் புலியூரிலும், மேல்பாடியிலும், திருலல்லத்திலும் தனக்குக் கட்டுப்பட்ட படைகளைத் தயாராக இருக்க லைத்தார். பெரிய கை விலங்கு களையும், கழுத்துச் சங்கிலியையும் செய்து கொண்டு லருகின்ற கருமார் கூட்டத்தோடு கலந்து கொண்டார். சிறை அதிகாரிகள் சங்கிலிகள் தேவைப்படும் என்று சொல்லி, இரண்டு நாள் நிற்க வைத்து, சிதம்பரத்திலுள்ள சேனாதிபதிகளிடம் காசு வாங்கி, சங்கிலிகளைச் சுவற்றில் பதிக்க, கருமார்களைச் சிறைக்கூடத்திற்கு அழைத்துப் போனார்கள். சிறைச் சாலையில் இரண்டு காவலர் களுக்குப் பணமுடிப்பு தரப்பட்டது.

பைத்தியக்காரனின் மனைவி சாகக் கிடக்கிறாள். அலனை மூன்று நாள் அழைத்துப் • போய் வந்து விடுகிறேன் என்று கேட்கப்பட்டது. அவனுக்குப் பதிலாக இவனை அடையாளம் காட்டுங்கள் என்று அதேசாயல் உள்ளவனை, வீரர்கள் கொண்டு லந்து கொடுக்க, அவன் தம்பியைப் போன்றலன் சிறைக்குள் புக, பைத்தியக்காரனை மெல்ல அழைத்துக் கொண்டு போனார்கள். தம்பிக்கு கழுத்துச் சங்கிலியும், கால் சங்கிலியும் பூட்டப்பட்டன. ஆனால், அவை புதுச் சங்கிலிகள். அலைகளை எப்படி கழற்றி எறிவது என்பது அவனுக்கு ரகசியமாய் போதிக்கப்பட்டது. அன்று இரவு அவன் சங்கிலியைக் கழற்றிவிட சிறைச்சாலையின் லெளிச்சவரிவ் ஓட்டைப் போட்டு தயாராக வைத்திருந்தார்கள். அவன் தட்டியவுடன் கல்லைப் பெயர்த்து அவனை வெளியே இழுத்து, மறுபடியும் கல்லை வைத்து மூடிவிட் டார்கள். அந்தப்பையன் குதிரை ஏறி திருவொற்றியூர் நோக்கிப் பறந்துவிட்டான். உத்தம சோழரிடம் விகலாசமாக இருந்த பைத்தியக்காரனை மெல்ல மனம் தேற்றி, போஷாக்கான உணவு கொடுத்து என்ன நடந்தது என்று இளவரசர் கேட்க, இளவரசர்

அருண்மொழியை அவன் அடையாளம் கண்டு கொண்டு முகம் பொத்திக்கொண்டு அழுதான்.

மெல்ல மெல்ல கதை சொன்னான்.

"என் பெயர் கார்மேகம். எனது ஊர் உடையார்குடி. தஞ்சைக்கு அருகேயுள்ள திருவையாற்றை மிகப்பெரிய நெல் வயல்கள் உள்ள வளமான பிரதேசம் என்று சொல்வார்கள். திரிசிரபுரத்துக் காவிரிப் படுகையை மூன்று போகம் பயிர். செய்யுமிடம் என்று சொல்வார்கள்.

ஆனால், அங்கெல்லாமும் சாகுபடி பொய்த்துப் போகவாம். இங்கு வீரநாராயணபுரம் ஏரிக்கரையில் இருக்கின்ற இந்த உடையார்குடி வயல் மூன்று போகம் விளையும். அதுதவிர பல்வேறு பயிர்கள் பயிரிட முடியும். எந்த நேரமும் ஏரியிலிருந்து சலசவத்தபடி நீர் பாயும். எண்பது கண்மாய்கள் வைத்து எல்லாப்பக்கமும் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. கொள்ளிடத்து நீர் அங்கு புகுந்து தங்கி தளும்பதளும்ப மிகப்பெரிய ஏரி முழுலதும் நீர் நிறைந்திருக்கும். கோடைக்காலங்களில் பெய்கின்ற மழையும் ஏரியை நிரப்பும், ஏரி வற்றியதே இல்லை. அப்படிப் பட்ட ஊரில் நான் கிராம அதிகாரியாக இருந்தேன்.

எனக்கு நிலங்களும், தோப்புகளும் இருந்தன. சிதம்பரத்தி லிருந்து குதிரை ஏறினால் உடையார்குடி ஒரு நாழிகைப் பயணம். சிதம்பரத்திற்கு வந்து குடியேறிய முன்குடுமி தீட்சிதர்கள் பலர் உடையார்குடியில் வந்து தங்க வேண்டுமென்று விரும்பினார்கள். வாரத்திற்கு ஒருமுறை கோயிலுக்குப் போய் பூஜை செய்து விட்டு மற்ற நாட்களில் வீட்டில் அமர்ந்து ஹோமங்கள் செய்வதை தங்கள் வழக்கமாகக் கொண்டிருந் தார்கள். அவர்களிடம் பொற்காசு புழங்கியது. அந்தணருக்கு நாம் தானே தானம் தர வேண்டும். ஆனால், அவர்கள் நமக்கு தானம் தருவார்கள். காசு என்ன காசு காசைவிட மிகப்பெரிய பொக்கிஷம் என் ஆசிர்வாதம்தான். உனக்கு என் ஆசிர்வாதங்கள் பலநூறு. பொற்காசு ஒன்று என்று தருவார்கள். ஒரு பொற்காசு உடையார்குடியில் நான்கு எருமைகள் வாங்கலாம். ஊர் இவர்கள் வருகைக்குப் பிறகு அலண்டுபோனது. இவர்கள் பின்னாலேயே சுற்றிக் கொண்டிருந்தது. இவர்கள் வந்து நின்றால் ஊர் முழுவதும் எழுந்து நின்றது.

இவர்கள் முதலில் உடையார்குடியில் வீடு வாங்கினார்கள். காவிரிகூட அவ்வப்போது பொய்த்துப்போகிறது. உடையார்

குடியில் நிரந்தரமாக நீர் இருப்பதால் நாங்களும் இங்கு வந்து தங்கிவிடலாம் என்றிருக்கிறோம் என்று காரணம் சொன்னார்கள். உடையார்குடி கோவில் அதிகாரமோ, ஊர் அதிகாரமோ கையில் எடுத்துக் கொள்ளவேயில்லை. வீடுகளில் இடையறாது ஹோமம் செய்தார்கள். சிவ விசேஷ பூஜைகளும் செய்தார்கள். அம்மாதிரி செய்யும் போது அந்தணர்களுக்குத் தனி வரிசையாகவும், க்ஷத்திரியர்களுக்குத் தனி வரிசையாகவும், மற்றவர்களுக்கு வாசலில் பந்தல் போட்டு அங்கு வாழை மட்டையில் உணவு கொடுத்து உபசரித்தார்கள். பிரதிமாதமும் அன்னதானம் நடந்தது.

கரும்புச்சாற்றிலும் தேனிலும் பலாப்பழத்தைத் தோய்த்து எல்லார் இலையிலும் வைத்தார்கள். எவ்வளவு கேட்டாலும் கொடுத்தார்கள். அண்டை அயலில் இருந்ததெல்லாம் இவர்கள் பூஜை நடக்கும் போது, ஒருநாள் முழுவதும் காத்திருந்து, ஜனங்கள் இம்மாதிரியான தின்பண்டங்களை வாங்கிக் கொண்டு போனார்கள்.

அவர்கள் பூஜையில்லாத நேரங்களில் ஊர் நிலங்களைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள்.

இந்த நிலம் யாருடையது. அந்த நிலம் யாருடையது என்று கேட்டு, சொன்ன விலைக்கு அதிகமாகக் காசு கொடுக்கத் தயாராக இருந்தார்கள். ஏமாந்தார்கள் என்று ஊர் நினைத்தது. தள்ளிவிடு என்று நில உரிமையாளரிடம் சொல்லியது.

நூறு பொற்காசுகள் கொடுத்து பெரும் நிலத்தை கையகப் படுத்திக் கொண்டார்கள். அதே கூலி ஆட்களை வைத்துக் கொண்டார்கள்.

நாங்கள் உணவுக்காக வயல் வாங்குகிறோமே தவிர வேறு எதுவுமில்லை என்று சொன்னார்கள். மேலும் அந்தணர்கள் உள்ளே வந்தார்கள். அவர்களும் வீடு வாங்கினார்கள். அவர்களும் நிலங்கள் வாங்கினார்கள். அவர்களும் பூஜை செய்தார்கள். ஒவ்வொரு முறையும், ஒவ்வொரு அந்தணரும் நிலம் வாங்கும் பொழுது, கிராம அதிகாரியான எனக்குப் பெருத்த சன்மானம் கொடுத்தார்கள். நடுநிசியில் ஆள் வந்தாலும் நான் எழுந்திருந்து அவர்கள் வீட்டுக்கு ஓடுவேன். காசு கொடுக்கிறார்கள் அல்லவா. கிராம அதிகாரியாக நான் கைகட்டி நின்று கொள்வேன். அவர்கள் எங்கள் வீட்டுக் கட்டிலில் சாய்ந்து கொண்டு இந்த ஊர் பற்றி விசாரிப்பார்கள். உடையார்குடியின் எல்லா நிலங்களையும் கையகப்படுத்த வேண்டுமென்று தங்கள் விருப்பத்தைத்

தெரிவித்தார்கள். இதை ரகசியமாக வைத்துக்கொள்ளச் சொன்னார்கள். எனக்கு நல்ல சன்மானம் தருவதாகவும், அதற்கு முன் பணமாகவும் பெருந்தொகை கொடுத்தார்கள். நீயும் நிலம் வாங்கிக் கொள் என்று சொன்னார்கள். எனக்குத் தலைகால் புரியவில்லை. என் வாழ்நாளில் அவ்வளவு காசு பார்த்ததில்லை. எல்லா காசுகளும் சோழதேசத்தின் காசுகள். ஆனால், அவர்கள் நிலம் வாங்கும்பொழுது ஆச்சாரியன் பார்க்க வேண்டும். ஆச்சாரியன் சரியென்று சொல்ல வேண்டும் என்று அடிக்கடி சொல்வார்கள். அந்த ஆச்சாரியன் யார் என்று தெரியவில்லை. எங்கிருந்து அவர் சரியென்று சொல்வார் என்பதும் புரியவில்லை. பிற்பாடு ஒருநாள் ரவிதாஸனும், பரமேஸ்வரனும் உடையார் குடிக்குள் நுழைந்தபோது அவர்கள் அத்தனைபேரும், அந்த இரண்டு பேருக்கும் காட்டிய மரியாதை பார்த்து ஊர் வியந்து சகல வல்லமையும் உள்ள கடவுளுக்கு நிகரான மனிதர்கள் இவர்கள் என்று எங்களுக்கு அறிமுகப்படுத்தப் பட்டார்கள். நாங்கள் அஞ்சி அடிபணிந்தோம். அவர்கள் ஆசிர்வதித்தார்கள்.

விளைநிலங்கள் வாங்கியதாகச் சொன்னதும், இந்த ஊர் விளை நிலங்களை நீங்கள் ஏன் வாங்குகிறீர்கள். இவர்கள் என்ன செய்வார்கள். பொற்காசு இருந்தால் போதுமா என்று ஊருக் காகப் பரிதாபப்பட்டார்கள். விளை நிலங்களை அதிகப்படுத்த வாமே என்று சொல்லி கால்வாய்களை அகலப்படுத்தவும், கெட்டிப்படுத்தவும் இன்னும் வெகுதூரம் இழுத்துக் கொண்டு போகவும், தானே ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள்.

ஊர் அதிர்ந்து போயிற்று.

அரசர் செய்ய வேண்டியதை, அரசாங்கம் செய்ய வேண் டியதை ஒரு அந்தணர் செய்கிறாரே என்று வியந்தது. ஒருவர் கேள்வியும் கேட்டார்.

ஒவ்வொருவரும் தான் இருக்கும் இடத்தை வளமாகச் செய்வதுதான் தன்னுடைய அடுத்த தலைமுறைக்குச் செய்யும் உதவி. இது எங்கள் பூமியல்ல, ஆனாலும் நாங்கள் இங்கு வந்து வசிக்க வேண்டியிருப்பதால் இந்த பூமியை வளமாக்க ஆசைப்படுகிறோம். உங்களுக்கு ஆட்சேபணை இருந்தால் நான் செய்யாது விலகிக்கொள்கிறேன் என்றார். ஊர் மறுபடியும் காலில் விழுந்து உதவி செய்யுங்கள் என்று கேட்டது.

அருகிலுள்ள திருவக்கரையிலிருந்து பாறைகள் கொண்டு வந்து. அதை அறுத்து பலகைகளாக்கி, சதுரப் பலகைகளைக்

கால்வாய் நெடுகப் பதிய வைத்து வேலைகளைத் துவக்கினார்கள். ஊர் திகைத்தது. கால்வாயை நீளப்படுத்தினார்கள்.

ஆனால், அவர்கள் எவ்வளவு நிலம் வாங்கியிருக்கிறார்களோ அந்த தூரத்திற்குத்தான் கற்கள் பதிக்கப்பட்டன. அவர்கள் அதை ஊருக்காகச் செய்யவில்லை. தங்களுக்காகச் செய்தார்கள் என்பது ஊருக்குப் புரிய மூன்று ஆண்டுகளாயின. ஆனால், அடுத்தபடி அரசர் யார் என்று லெகுவாக மக்களிடம் பேச்சு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது உடையார்குடிக்கு குதிரை வீரர்கள் வருவதும் போவதுமாய் இருந்தார்கள். ரகசியமாக கூடிப் பேசுவது என்பதை இடையறாது செய்தார்கள். அவர்களுடைய அக்ரஹாரத்தில் என்னை மட்டுமே அனுமதித்தார்கள். வேறு எவரையும் வரக் கூடாது என்று சொல்லிவிட்டார்கள். ஏன் என்று கேட்ட போது, இது சூட்சும சக்திகள் நடமாடுகின்ற இடம். நாங்கள் யாகம் செய்து, அந்த சூட்சும சக்திகளை அருகே அழைத்திருக்கிறோம். சிலசமயம் அவைகள் உங்களையும் தாக்கக்கூடும் என்று சொன்னார்கள்.

அதெல்லாம் இல்லை என்று ஒரு உடையார்குடி அந்தணர் சொன்னபோது; அப்படியே சுருண்டு விழுந்து செத்துப் போனான். ஊர் பயந்துபோய் அலறிற்று.

ஆனால், அவர்கள் எனக்குச் சொன்னார்கள். சிறிய வில்லி லிருந்து ஒரு ஊசியை அம்பாக தொடுத்து அவர்கள் அவனுடைய விலாவில் அடித்திருக்கிறார்கள். அது சரக்கென்று போய் அவனுடைய இடுப்புப் பகுதியில் தைத்திருக்கிறது. அந்த எஃகு ஊசி விஷம் நிரம்பியது. இவர்கள் ஓடிப்போய் சுருண்டு விழுந்தவனைத் தாங்கிய போது ஊசியை உருவிக் கொண்டு வேறு ஒரு இடம் போய் விட்டார்கள். இவனை வெறுமே கொண்டு வந்தார்கள். ரத்தம் வரும் இடத்தில், சட்டென்று ஏதோ போட்டு அடைத்து விட்டார்கள். அவனைக் குட்டிச் சாத்தான் அடித்து விட்டது என்று சொன்னார்கள் இங்கேயே தகனம் பண்ணிவிடு. இல்லையென்றால் உன் வீட்டிற்குள் நுழையும் என்றார்கள். அவனை வீட்டிற்கே எடுத்துப் போகவில்லை. அப்படியே காட்டிற்குப் போய் தகனம் செய்துவிட்டார்கள்.

எந்தத் தடயமும் எவருக்கும் கிடைக்கவில்லை.

ஊர் பிறகு அக்ரஹாரத்தின் பக்கமே தலைவைத்துப் படுக்கவில்லை.

திருவொற்றியூர் வழியே கங்கதேசம் போன ஆதித்த கரிகாலன், இங்கு வந்து தங்கி, 'என்னடா நடக்கிறது இங்கே.' என்று ஏகத்திற்கு கேலியாகக் கெட்ட வார்த்தைகளால் இவர்களை ஏசிவிட்டுப் போனார்.

ஊர் ஜனம் அப்படிப் பேசவேண்டாம் என்று வேண்டிற்று. ஆனால், சேரதேசத்து அந்தணர்கள் கொண்டு வந்து கொடுத்த பூர்ணகலசத்தை எட்டி உதைத்தார்.

என்ன உத்தமசோழனுக்கு ஆதரலாக ஆடுகிறீர்களா. ஓட்ட நறுக்கி விடுவேன் என்று மிரட்டினார். எங்களுக்கு அரசியல் மீது எந்த நாட்டமும் இல்லை என்று அவர்கள் சத்தியம் செய்தார்கள். வேதத்தின் சாட்சியாக எங்களுக்கு விருப்பமில்லை என்றார்கள்.

ஆதித்தகரிகாலன் சமாதானமடைந்து மீன் கருட்டி வழியாகப் பழையாறை திரும்பினார். ஆனால், இவர்கள் மிகவும் கோபமானார்கள். எட்டி உதைத்த பூர்ண கலசத்தைக் கொண்டு போய் உடையார்குடி கோவில் வாசலில் மூங்கிலில் நட்டு மந்திரம் ஜபித்தார்கள். ரவிதாஸனும், பரமேஸ்வரனும் உடையார்குடியில் நுழைந்த ஆறு மாதத்திற்குள் அந்தணர்கள் பல்வேறு விஷயங்களில் ஈடுபட்டுள்ளார்கள். போர்ப்பயிற்சி நடத்தினார்கள். உடையார்குடியிலிருந்து சிதம்பரம் வரை கையில் கோல் எடுத்து வரிசையாய் ஓடுவார்கள். ஸோஹம்... ஸோஹம்... என்று கூவியபடியே ஓடுவார்கள்.

யாருக்கு ஸோஹம்... என்ன விதமான ஸோஹம் என்று நான் அவர்களைக் கேட்டேன். அது வருத்தத்தைச் சொல்லும் வார்த்தையல்லவாம். உள்ளுக்குள் இருக்கிற காற்றை வேகமாக தள்ளுகின்ற விஷயமாம். காற்று உள்ளே கொஞ்சம் தங்கி இருப்பது நல்லதல்ல. உள்ளுக்குள் இருக்கிற காற்றை வெளிக்குள் வேகமாக தள்ளுவதுதான் மனித யத்தனம். அப்போது உள்ளுக்குள் காற்று தானாக நிரம்ப முடியும்.

உனது எதிரியை வெளியே துரத்து. உனக்கு வரவேண்டியவை உள்ளே வரும் என்று சிரித்தபடி சொன்னார்கள். எனக்கு அப்போது புரியவில்லை. பிற்பாடு புரிந்தது. இரவோடு இரவாக எவரும் அறியாது வண்ணம் எந்த முழக்கமும் இல்லாமல் ரவிதாஸனும், பரமேஸ்வரனும் உடையார்குடி வந்தார்கள். கூடிப் பேசினார்கள்.

என்னையும் இன்னும் இரண்டு நம்பிக்கையான மறவர் களையும் உடையார்குடியிலிருந்து அழைத்துக் கொண்டார்கள். கடம்பூர் நோக்கிப்போனார்கள். என்ன வேலை.. என்ன வேலை என்று நான் கேட்டேன். கடம்பூரில் எங்களுக்கு எதிரி ஒருவன் இருக்கிறான். அவன் மிகப்பெரிய மந்திரவாதி. அவன் எங்களை தூஷணை செய்கிறான். எங்களுக்கு துர்தேவதைகளை ஏவி விடுகிறான் என்று சொல்ல, நாங்கள் நம்பினோம். தப்பித்து ஓடப் பார்ப்பான். அப்போது நான் அவனை நோக்கி கூச்சலிடு வேன். கொஞ்சமும் வெட்கப்படாமல் அவனை வெட்டி எறிந்து விடு என்று எனக்குக் கட்டளையிட்டார்கள்.

சற்று தயங்க ஒரு வேளை உன்னை நோக்கி ஓடி வந்தால் வெட்டி விடு. இல்லாவிட்டால் உன் மீது பிசாசு ஏவி விடுவான் என்று சொன்னார்கள். நான் பதட்டத்தோடு அவர்களுடன் போனேன். கடம்பூர் அரண்மனையில் நடுநிசியில் கதவு திறக்கக் கேட்டோம். நான்தான் போனேன். விடியலில்தான் கதவு திறக்கப்படும். இப்போது இல்லை என்று சொல்லி விட்டார்கள். நாங்கள் சுவரேறிக் குதித்து உள்ளே போனோம். எதற்கு அப்படிப் போகிறார்கள் என்று தெரியவில்லை. கோட்டையினுடைய பின் பக்கத்திலிருந்து உள்ளே குதித்து, கோட்டையைச் சுற்றி நடந்து, குதிரைகளுக்கு நடுவே புகுந்து புகுந்து போய் அரண்மனைக்குள் நுழைந்து, விளக்குகள் எரிகின்ற ஒரு அறைக்குள் போனோம். அந்த அறைக்குள்ளிருந்து அரச குடும்பத்தினர் வெளியே வந்து கொண்டிருக்க, அந்த அறைக்கதவை விரியத் திறந்து சாளரத்தை திறந்து குறுக்கும் நெடுக்குமாக ஒரு மனிதர் நடந்து கொண்டிருந் தார். என்னுடன் வந்தவர் அதுதான் ஆதித்தகரிகாலன் என்று சொன்னார். அதுவரை நான் ஆதித்த கரிகாலனைப் பார்த்த தில்லை. உயரமான உடம்பு, கூர்மையான மூக்கு, மெல்லிய மீசை, பூனை போன்ற கண்கள், சற்று கீச்சுக்குரல், உதடு சற்று கோணவாகவும், துருத்திக் கொண்டும் இருந்தது. சாளரத்திற்கு அருகே நிற்பதும், பிறகு வாசற்படிக்கருகே வருவதும், வாசற்படி கதவை மூடுவதும், பிறகு திறப்பதும், குறுக்கே கோல் கொண்டு வைப்பதும் என்று ஒரு தவிப்போடு இருந்தார். ரவிதாஸனும், பரமேஸ்வரனும் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர் காற்று வரவேண்டுமென்று வாசற்கதவைத் திறந்து வைத்து, வாசற்கதவுக்கு குறுக்கே இரண்டு வேல் கம்புகளையும், யாரேனும் வந்தால் இடறி விழட்டும் என்று மர ஆசனங்களை யும் அதன்மீது பாத்திரங்களையும் வைத்தார்.

நாங்கள் வாசற்கதவு வழியாக போகாமல் கோட்டை தளத்திற்கு ஏறி சாளரத்தின் வழியாக உள்ளே புகுந்தோம். நாங்கள் நகருகின்ற சத்தம் கேட்டு அவர் உரக்க குரல் கொடுத்தார். என்னுடைய அசைவு கண்டு பிடித்து என் மீது கத்தி எறிந்தார். நான் நகர்ந்து கொண்டேன். பிறகு அவர் வேறு ஒரு படியின் மூலம் கீழே இறங்க, ரவிதாஸனும், பரமேஸ்வரனும் சட்டென்று சாளரத்தில் குதித்து, பின்னாலேயே தொடர்ந்தார்கள். நான் சற்று தாமதித்தேன். என்னை வரச் சொல்லவில்லையே என்ன செய்வது என்று யோசித்தேன். என் மீது ஏதேனும் துர்தேவதை பாய்ந்து விட்டால் என்ன செய்வது என்று நினைத்தேன். ஆனால், உள்ளே பெரும் சப்தம் கேட்டது. எனவே நான் சாளரத்தின் வழியாக அந்த அறைக்குள் நுழைந்து சுற்றும் முற்றும் பார்த்தேன். ஆதித்த கரிகாலருடைய நகைகள் அங்கு கழற்றி வைக்கப்பட்டிருந்தன. புலிநகம் ஒன்றும், காசுகளோடு கூடிய கயிறு ஒன்றும் இருந்தது. புலி நகத்து தங்கச் சங்கிலியையும், அம்மன் காக நகைகளையும் நான் சட்டென்று கருட்டி இடுப்பில் வைத்துக் கொண்டேன். எது பார்த்தாலும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற ஆவல் எனக்கு எப்போதும் உண்டு. சிதம்பரத்தில் விற்று காசாக்கவாம். பிறகு குடிக்கவாம். பெண்களோடு களிக்கலாம் என்ற எண்ணத்தில்தான் வழிச்செலவுக்காக அதை எடுத்தேன். அவர் இறங்கிய பக்கம் போனேன். மிகவும் இருட்டாக இருந்தது. சட்டென்று ஒரு கனுந்து நெடியும், ஓசையும் கேட்டன. ஆதித்த கரிகாலன் கையில் தீப்பந்தத்தோடு நின்று கொண்டிருந்தார். அந்த அறை சாமான்கள் வைக்கும் அறை. மேலேயிருப்பது போல கீழே இருக்கின்ற கூடம். ஆனால், அதை உபயோகப்படுத்தாமல் பாத்திரம் பண்டம் வைக்கும் இடமாக வைத்து விட்டார்கள். நிறைய மரப்பெட்டிகளும், நிறைய பல்லக்குகளும் உடைந்த சிம்மாசனங்களும் அங்கு இருந்தன. யார் யார் நினைவாகவோ இருக்கின்ற விஷயங்கள் என்று எனக்குப் பட்டது. அழுக்கு நெடி மூக்கைத் துளைத்தது. அங்கு ஒரு துர்வாசனை இருந்தது. சுளுந்து சரியாக எரியவில்லை. உதறி உதறி அவர் சரியாக எரிய வைத்தார். அப்போது எனக்கு வெகு அருகேயிருந்த ஒரு ஊஞ்சல் பலகையின் பின்னாலிருந்து ரவிதாஸன் மெல்ல வெளியே வந்தான் களுந்து உயரப்பிடித்து அவர் ஒரு ஆள் உயரத்தில் தேடிக் கொண்டிருந்தபோது, அவன் மண்டியிட்டபடியே முன்காலால் நடந்து போனான். இருட்டு கீழே அதிகமாகவும், மேலே வெளிச்சமாகவும் இருந்ததால் அவன் நடந்து அவர் அருகே போனது தெரியவில்லை. ஆனால், ஏதோ ஒரு கணத்தில் அவர் விழித்துக் கொண்டு சட்டென்று

களுந்து தாழ்த்த, கீழே உட்கார்ந்திருந்த ரவிதாஸனைக் கண்டு விட்டு அலர் உரக்கக் கத்தினார்.

ரவிதாஸனும் சட்டென்று அந்த இடத்திலிருந்து மாயமாய் மறைந்து போனான். நான் ஆச்சரியத்தோடு பயந்தேன். அது கண்கட்டு வித்தையல்ல. ஒரு மாதிரியான பயிற்சி குத்திட்டு உட்கார்ந்தவன் உள்ளங்கையை அழுந்த ஊன்றி சட்டென்று கையில் பலம் சேர்த்து அப்படியே வட்டமடித்து வேறு ஒரு சந்திற்குள் புகுந்துவிட்டான். ஆறடிக்கும் உயரமான ரவிதாஸன் மூன்றடி அளவுக்கு தன் உடம்பைச் சுருக்கிக்கொள்ள முடிந்தது. அவர் பதட்டத்தினால் நாலாபுறமும் தேட இப்பொழுது பரமேஸ்வரன் வெளிப்பட்டு அவரைப் பார்த்துச் சிரித்தான். யார் என்று கேட்க, வீரபாண்டியனின் ஆபத்துதவிகள். என் பெயர் பரமேஸ்வரன். அது என் அண்ணன் ரவிதாஸன். தூங்கிக் கொண்டிருந்த எங்கள் தலைவனை வெட்டிக் கொன்றாயேடா பாவி. ஜுரத்தில் தவித்தவனை எழுப்பி அவன் தலையைச் சீவினாயடா சண்டாளா. நீயொரு ஆண்மகனா.. உனக்கு உடம்பில் நல்ல ரத்தம் ஓடுகிறதா.. என்று இழிவான வார்த்தைகள் பேச, ஆதித்த கரிகாலன் பயத்தில் அலறினார். முன்னும் பின்னும் அலைந்தார். நல்ல ஆயுதத்தைத் தேடினார். அது தட்டுமுட்டு சாமான்கள் வைக்கும் இடம். எந்த ஆயுதமும் அவர் கைக்குக் கிடைக்க வில்லை. தப்பித்து ஓட முயற்சித்தார். கையிலிருந்த சுளுந்தைத் தான் ஆயுதமாக வைத்துக்கொண்டு அவனை நோக்கி வீசிய படியே முன்னே வந்தார். ஆனால், அவன் மிக அழகாக நகர்ந்து கொண்டான். அவன் இடுப்பிலிருந்த கட்டாரியை எடுத்து கழற்றி, வேகமாக ஆதித்த கரிகாலன் மீது வீசினான். ஆதித்த கரிகாலன் மீது குத்தி வெளியே வந்தது. அவர் வலியில் அலறினார். சிம்மாசனத்தின் அடியில் படுத்துக் கொண்டிருந்த ரவிதாஸன் வேகமாக முன்னேறி குனிந்து அலறியபடி இருந்த ஆதித்தகரிகாலன் வயிற்றில் தன் நீண்ட வாளை வேகமாய்ச் சொருகினான். அதுதவிர பரமேஸ்வரன் முன்னேறி தன் வாளினுடைய பட்டைப் பகுதியால் அவர் முகத்தில் வேகமாக அடித்தான். ஆதித்த கரிகாலன் முன் பற்கள் இரண்டும் உடைந்து விழுந்தன. மூக்கும், நெற்றியும் அறுபட்டன. அவர் அலற பரமேஸ்வரன் தன் வாளை நெஞ்சில் சொருகினான். நீண்ட கூச்சலோடு ஆதித்த கரிகாலன் கீழே விழுந்தார். வலியில் துடித்தார். புரண்டார்.

ரவிதாஸன் அருகே நடந்து போய் கீழே கிடந்தவருடைய கணுக்கால்களில் ஏறி நின்று கொண்டான். அவரைப் பார்த்து

கோரமாகச் சிரித்தான். சுளுந்து இப்போது ஒரு மரநாற்காலியில் விழுந்து எரிந்து கொண்டிருந்தது. ஆதித்தகரிகாலனின் கணுக் காலில் தன் முழு பலத்தை வைத்து நின்று கொண்டிருந்த ரவி தாஸன், குனிந்து ஆதித்த கரிகாலனுடைய சிகையைப் பிடித்து இழுத்தான். சட்டென்று முழு இடுப்பும் முறிந்தது. அவர் முகத்தை இழுத்து அருகே பார்த்து வேகமாக அவர் முகத்தில் துப்பினான். பலம் கொண்ட மட்டும் அந்த உடம்பை தரையில் அடித்தான். ஆதித்தகரிகாலனின் பின் மண்டை தரையில் நச்சென்று மோதுவதை என்னால் உணர முடிந்தது. என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து கவரோடு கவராக நின்றிருந்தேன்." அந்தப் பைத்தியக்காரன் கார்மேகம் நிறுத்தி மூச்சு வாங்கினான்.

சட்டென்று இளவரசர் அருண்மொழி எழுந்து நின்றார், பல்லைக் கடித்துக் கொண்டு வெளியே போய் வெறிக்கப் பார்த்தார். அவர் உடல் ஆடியது. ஆவேசம் ஏற்பட்டது.

இப்போது இல்லை. இப்போது இல்லை. கோபப்பட வேண்டாம் ஐயா என்று பரமன் மழபாடி அவர் முகத்தைத் தடவினான். தலையைத் தடவினான். இன்னும் இறுக்கிக் கொண்டான். மெய்க்காவல் வீரர்கள் இறுக்கிக் கொண்டார்கள்.

வந்தியத்தேவர் அருகே வந்து நின்று உச்சந்தலையில் கைவைத்து அமைதி... அமைதி... அமைதி என்று பலமுறை சொன்னார். இளவரசர் கண்களை மூடிக்கொண்டு நீண்ட பெருமூச்சு விட்டார். மெல்ல கண் திறந்து வந்தியத்தேவரின் தோளில் சாய்ந்து கொண்டார். அழத்துவங்கினார்.

வந்தியத் தேவருக்கும் கண்களிலிருந்து நீர் பொங்கியது. அவரும் அழுதார். மெய்க்காவல் வீரர்களும் அழுதார்கள்.

கார்மேகம் மட்டும் தரையில் அமர்ந்து அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"வந்தியத்தேவரே... வந்தியத்தேவரே... எந்தச் சக்தி இந்த தேசத்திற்குள் புகுந்து என் தமையனைத் துடிக்கத் துடிக்க கொன்றதோ, இடுப்பு உடைத்ததோ முகம் சிதைத்ததோ, அந்த சக்தியை வேரோடு அழிப்பேன். கூட்டத்தைச் சிதைப்பேன். ஆணாயினும், பெண்ணாயினும், குழந்தையாயினும், கிழவனா யினும் நான் அடித்து நொறுக்குவேன். அந்த வம்சம் வளர வொட்டாது அழிப்பேன். இது சத்தியம். இது செய்யாது நான்

மரணமடைவது இல்லை" என்று பல் கடித்துக் கொண்டு உரக்கக் கத்தினார்.

அந்த இருட்டில் மரங்களும், பறவைகளும், ஓநாய்களும், அங்குள்ள மனிதர்களும் அந்த சத்தியத்தைக் காதாரக் கேட்டார்கள்.

காற்று ஊளையிட்டு அவர்களைக் கடந்தது.

மறுபடியும் அவர்கள் வந்து கார்மேகத்தைச் சுற்றி வட்டமாக உட்கார்ந்து கொண்டார்கள்.

"பிறகு நடந்த ஆட்சி மாற்றம்தான் உங்களுக்குத் தெரியுமே. நீங்கள்தானே உத்தமசோழருக்கு விட்டுக் கொடுத்தீர்கள். ஆதித்த கரிகாலன் இறந்த பிறகு நீங்கள் பதவிக்கு வருவீர்கள் என்று பலரும் நினைத்தார்கள். ஆனால் உத்தமசோழர் வந்துவிட்டார். ஆச்சரியமாக இருந்தது. எனக்குச் சந்தோஷமாக இருந்தது.'

"ஆனால், உன்னை ஏன் சிறையில் அடைத்தார்கள்."

வந்தியத்தேவர் கூர்மையாகப் பார்த்துக் கேட்டார்.

"நான் ஒரு தவறு செய்தேன்."

"என்ன."

"எனக்குப் பெரும் காசு கொடுத்தார்கள். அதில் இன்னும் திருமணங்கள் செய்து கொண்டேன். குடித்துவிட்டு அக்ரஹாரத் திற்குப் போய் எனக்கு நிலம் வாங்க இன்னும் காசு வேண்டும் என்று கேட்டேன். அவர்கள் என்ன இப்படி வருகிறாய் என்று சீறினார்கள். இல்லையெனில் உங்களைப் பற்றிச் சொல்வேன் என்று அங்குள்ள வயதான தீட்சிதரிடம் மிரட்டினேன். அவர்கள் பயந்து போனார்கள். ரவிதாஸனுக்கும், பரமேஸ்வர னுக்கும் அவர்கள் ஆள் அனுப்பினார்கள். நிலம் வாங்கிக்கொள் என்று எனக்கு அரைமூட்டை தங்க நாணயம் கொடுத்தார்கள். ஆனால், ஊரில் விற்பதுக்கு நிலமே இல்லை. எல்லா நிலமும் அந்தணர்கள் நிலங்களாக இருந்தன.

ஊர்மக்கள் என்னைப் பார்த்துச் சிரித்தார்கள். காசைக் கொண்டு போய் குப்பையில் கொட்டு என்றார்கள். உடையார் குடியில் பொற்காசு மதிப்பு இழந்தது தெரிந்தது. இது நடந்த மூன்றாம் நாள் சட்டென்று நடுநிசியில் வீட்டிற்குள் அந்தணர்கள் புகுந்தார்கள். என்னைத் தூணில் கட்டினார்கள். பிரம்பால் விளாசினார்கள்.

குடித்துவிட்டு அக்ரஹாரம் வருவாயா. காசு கேட்பாயா. இல்லையெனில் காட்டிக் கொடுப்பேன் என்பாயா. என்ன திமி ரடா உனக்கு.. என்று உதடுவீங்கக் குத்தினார்கள். வயிறு, முழங் கால், பிருஷ்டம் என்று எல்லா இடத்திலும் அடித்தார்கள். என் மனைவியும், குழந்தைகளும் அலறினார்கள். என் மனைவி ஓடிப்போய் ரவிதாஸனின் காலைப் பற்றிக் கொண்டாள். என் தாலியைப் பறிக்காதீர்கள். இவர் உங்களுக்கு எத்தனை உதவிகள் செய்திருக்கிறார். இந்த உடையார்குடி அந்தணர்கள் அத்தனை பேரும் இவரால் அல்லவா நிலம் வாங்கினார்கள் இவரைப் போய் கொல்ல முயற்சிக்கிறீர்களே என்று அழுதாள்.

ரவிதாஸன், சரி இவனை நிரந்தரமாக சிறையில் வையுங்கள். இவள் சுமங்கலியாக இருக்கட்டும் என்று உத்தரவிட்டார். பதினைந்து வருடங்களாகி விட்டன நான் சிறைச்சாலைக்கு வந்து... என் மனைவி இறந்து விட்டாள். என் மகன்கள் ஊர் விட்டு ஓடிப்போய் விட்டார்கள். என் வீடு, என் தாய்வழி உறவுகளால் கையகப்படுத்தப்பட்டு, அதுவும் மழையில் இடிந்து விழுந்துவிட்டது.

இளவரசே.. காசுக்காக சோழதேச அரச குடும்பத்திற்கு நான் துரோகம் செய்தேன். இப்போது என் வீடு இருக்கும் இடம் குப்பைமேடு. ஆடுகளும், மாடுகளும், பன்றிகளும் அலைகின்றன. நான் படுத்துறங்கும் இடத்தில் எருக்கஞ்செடி முளைத்திருப்ப தாக எனக்கு ஒருவன் சொன்னான். என்னை வைத்துப் பிழைத்த வர்கள் உச்சாணிக் கொம்பில் இருக்க, நான் அழிந்து போனேன். நான் துரோகி, சோழக்குல துரோகி என்னை வெட்டிக் கொன்று விடுங்கள். என்னால் சரியாகச் சிந்திக்க முடியவில்லை. என்னைக் குத்திக்கொன்று விடுங்கள். மரணம்தான் எனக்கு மிகப் பெரிய விடுதலை. உங்கள் கையில் அது நடக்கட்டும்."

அவன் அவர் கால்களைப் பிடித்துக்கொண்டு அழுதான்.

"இல்லை நான் உன்னைக் கொல்ல முடியாது. உன்னை மதித்து நல்ல பதவியில் உட்கார வைக்கப் போகிறேன். ஒரு நாளும் இது குறித்து கவலைப்பட வேண்டாம். உனக்கு குழந்தைகள் பிறக்கும். நீ ராஜபோகமாக வாழ்வாய். உன்னுடைய மோசமான கால கட்டம் முடிந்துவிட்டது. கவலைப்படாதே" என்று மெல்ல அணைத்துக் கொண்டார்.

எவ்வளவு அன்பு. சகோதரனைக் கொல்ல உதவியவனைக் கூட மன்னித்து விடுகிறாரே.

வந்தியத்தேவர் வந்து முதுகு தடவினார்.

அவன் அழத் துவங்கினான்.

எல்வார் காலிலும் விழுந்து வணங்கினான்.

மெய்க்காவல் படையை அழைத்து, இவனை மிகப் பத்திர மாகப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கட்டளையிட்டார். இவனை ஊரைவிட்டு வேறு இடத்திற்கு அழைத்துப் போகும் படியும் விவரம் சொன்னார்.

அவர்கள் அப்போதே பயணப்பட்டார்கள்.

இப்போது என்ன செய்வது.

இளவரசரும், வந்தியத்தேவரும் யோசித்தார்கள்.

"தஞ்சைக்குப் போய் உத்தமசோழரைக் கேட்கலாமா." என்று சொல்ல, "இல்லை. தஞ்சைக்குப் போகும் முன் நம்பியாண்டார் நம்பியைப் பார்த்துவிட விரும்புகின்றேன். இரண்டுமுறை முயற்சித்தும் இவரைச் சந்திக்க முடியவில்லை. எங்கெங்கோ வெவ்வேறு ஊர்கள் சுற்றிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அவரைப் போய் சந்தித்துவிட்டு பிறகு ஊருக்குப் போகலாம் என்றிருக்கிறேன். வந்தியத்தேவரே. பதட்டமான என் தமையன், எவ்வளவு மோசமாக மரணமடைந்திருக்கிறான் பார்த்தீரா. ஒன்று புரிகிறது. இனி இந்த அருண்மொழி எது குறித்தும் பதட்ட மாக மாட்டான். எப்பேர்ப்பட்ட பிரச்சினைகள் வந்தாலும், எப்படிப்பட்ட எதிரிகள் நின்றாலும் மிக அமைதியாக யோசிக்க எனக்கு உள்ளுக்குள்ளே ஓரு தீர்மானம் ஏற்பட்டு விட்டது. இது அனுபவ பாடம். என் தமையன் பட்ட அனுபவத்திலிருந்து நான் கற்றுக் கொண்ட பாடம்." அடிக்குரலில் இளவரசர் நிதான மாகச் சொன்னார்.

மறுபடியும் அவர் கண்களில் நீர் கட்டி மெல்ல கன்னம் இறங்கியது.

வந்தியத்தேவர், இளவரசர் அருண்மொழியை அணைத்துக் கொண்டு மெல்ல நடந்தார். அவர் அணைப்பிலிருந்த இளவரசர் அருண்மொழி. அவர் கையை மெல்ல விலக்கி, நான் சற்று தனியே இருக்க விரும்புகிறேன் என்று சொன்னார்.

இருட்டில் ஒரு புல்வெளியில் வானத்தில் மேகங்கள் நிறைந்திருந்த அந்த நேரத்தில் ஊதற்காற்றுக்கு நடுவே, இடுப்பில் வாளோடும், தோளில் சால்வையோடும், கண்களில் வேதனை

யோடும், கோபத்தோடும், தொலைதூரம் பார்த்தபடி சோழ தேசத்தின் வாரிசான விஷ்ணுவின் அம்சம் நிரம்பிய அந்த இளைஞன் இளவரசர் அருண்மொழி அந்த இருட்டில் விடியும்வரை அவருள் மூழ்கிக் கிடந்தார்.

“பஞ்சவன்மாதேவி... இளவரசர் அருண்மொழி வந்திருக் கிறாராமே சிதம்பரத்திற்கு.” நம்பியாண்டார் நம்பி தடதட லென்று உள்ளே ஓடிவர, ஊஞ்சலில் சாய்ந்து பாடிக் கொண் டிருந்த பஞ்சவன்மாதேவி திடுக்கிட்டு எழுந்தாள். அருகேயிருந்து செங்காளி பரபரப்போடு வெளியே வந்தார்.

“எங்கே அருண்மொழி... எங்கே அருண்மொழி... என்று உடம் பெல்லாம் திருநீறு பூசிய நம்பியாண்டார் நம்பி பதட்டமாய்க் கேட்க, செங்காளி அவரை ஆசுவாசப்படுத்தினார்.

நம்பியாண்டார் நம்பிக்கு முப்பது வயதிருக்கும் கழுத்தில் ருத்ராட்ச மாலைகளும், சிறிய குடுமியும் கட்டுத்தளராத ஒரு உடம்பும், பெரிய கண்களும் தேஜஸ் மிக்க முகமும் அகலமாக, அழுத்தமான தூசுகள் கிளம்பிய பாதங்களோடும் அவர் நின்றிருந்தார். சற்றும் பழுப்பான ஒரு வேட்டி அவர் இடுப்பில் இருந்தது. அதேபோல பழுப்பான ஒரு மேல்துண்டு அவர் மேல் இருந்தது.

“சிதம்பரத்தில் இருக்கிறார். என்ன விஷயம் ஏன் இவ்வளவு பதட்டம்.”

“பஞ்சவன்மாதேவி ஒரு பெரிய ரகசியம் எனக்குத் தெரிந்தது. ஒரு அந்தணன் எனக்குச் சொன்னான். கோயிலில் வேலை செய்கிறவன். ஆனால், தஞ்சை தேசத்து அந்தணன் தீட்சிதர்களோடு பேசிப்பேசி, அவர்கள் பேசுவதுபோன்ற பாஷை யைத் திறம்படப் பேசுகிறவன் சாக்த உபாசகன். கோயிலைச் சுற்றியுள்ள உட்பிரகாரத்திலுள்ள ஒரு அறையில் ஆயிரக்கணக் கான ஓலைச்சுவடிகள் இருக்கின்றனவாம். அந்த அறையிலிருந்து எறும்புகள் வருகிறது என்று சொல்லி தண்ணீர் விட்டு கழுவு வதற்கு கதவுதிறந்தபோது. அந்த ஓலைச் சுவடிகளின் மீது புற்று படர்ந்திருந்திருந்ததாம். என்ன ஓலை என்று பார்த்தார்களாம். மருத்துவம் சம்மந்தப்பட்ட ஓலை என்று அவர்களுக்கு சொல்லப் பட்டதாம். இவன் அங்கிருந்த ஓலை இரண்டை எடுத்து வந்திருக் கிறான். அவை தேவாரங்கள். திருஞானசம்மந்தர் எழுதிய தேவாரங்கள்.

சங்கநிதி, பதுமநிதி இரண்டும் தந்து... என்று அந்த ஓலைச்சுவடியில் உள்ள பாட்டு ஆரம்பிக்கிறது.

அப்படியானால் அந்த இடம் முழுவதும் தேவாரத் திருவாசகங்கள் நிரம்பியிருக்க வேண்டும். அப்படித் தேவார திருவாசகங்கள் இருந்தனத, ஓதுவார்களை நீக்கிவிட்டு அவர் களிடமிருந்த ஓலைகளை வாங்கி உள்ளே வைத்துப் பூட்டி விட்டார்கள். இனி இங்கே தமிழ்ப்பாடல்கள் பாடக்கூடாதென்று இவர்கள் சொல்லி விட்டார்கள் என்று முன்பே ஒருமுறை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இவைகள் அங்கு பாடப் படுவதில்லை என்று எனக்குத் தெரியும். அந்த அறையைத் திறந்து பார்க்க வேண்டும். நர்ன் போய் இப்படி ஓலைச்சுவடி இருக்கிறதாமே. நான் பார்க்க வேண்டும் என்று சொன்ன போது முடியாது என்று சொவ்லிவிட்டார்கள். ஏன் என்று கேட்டபோது, இது நீங்கள் எழுதிய ஓலைச்சுவடியா என்று கேட்டார்கள். இல்லை என்று சொன்னேன். அப்படியானால் உங்களுக்கு எதற்கு இன்னொருவர் சொத்து என்று கேட்டார்கள்.

இல்லை ஐயா, அது தமிழ்ச் சொத்து, தனிச்சொத்து, நம்முடைய நாகரிகத்தின் சொத்து என்று சொன்னால், எங்கள் நாகரிகம் வேறு நாகரிகம் என்று சொன்னார்கள். உங்கள் நாகரிகம் அல்ல என்று அவர்கள் பதில் சொன்னார்கள். சரி, ஏதோ ஒரு நாகரிகம் ஆனால் அது நாகரிகமல்லவா. அந்தப் பாடல்கள் லேண்டாமா என்று கேட்டபோது, இவ்லை சம்மந்தப் பட்டவர் லந்தாலொழிய தரமுடியாது என்று சொல்கிறார்கள், யார் சம்மந்தப்பட்டலர் `என்று கேட்டால், யார் எழுதினார் களோ அவர்சளை வரச் சொவ்லுங்கள் என்று சொன்னார்கள். நால்வர்கள் எழுதினார்கள் என்று கேள்விப்பட்டிருக்கின்ற அந்த நான்கு பேரையும் அழைத்து வாருங்கள், கதவு திறக்கிறோம் என்று சொல்லி விட்டார்கள்.

எனக்கு என்ன செய்லதென்று தெரியவில்லை. கெஞ்சி னேன். கூத்தாடினேன். அழுது புலம்பினேன் பஞ்சவன் மாதேவி, அந்தத் தலைமை தீட்சிதர் பாதங்களில் விழுந்தும் கேட்டேன். அவர் மறுத்து விட்டார். நம்பியாண்டார் நம்பி என்றதால் விடுகிறேன். லேறு எலரேனும் இப்படித் தொந்தரவு செய்திருந் தால் என் கழி பேசியிருக்கும் என்று கழியை உயர்த்தி மிரட்டி னார். அடிக்க வருவதுபோல் நின்றார். எனக்கு என்ன செய்வ தென்று தெரியவில்லை. லந்துவிட்டேன் தாயே. உள்ளுக்குள் பாடல்கள் இருக்கின்றன. என்னைப் பலநூறு அடிகள்

அடித்தாலும் பரவாயில்லை. அந்தப் பாடல்களைக் கொடுத்தால் வாங்கிக் கொள்வேன்.

ஆனால், அவர்கள் தரமறுக்கிறார்களே. என்ன செய்வதென்று தெரியவில்லையே, அதனால்தான் அருண்மொழியைத் தேடுகிறேன். அருண்மொழி சொன்னால் திறப்பார்களல்லவா."

பஞ்சவன்மாதேவி திகைத்தாள்.

"இருங்கள். இங்கேயே இருங்கள். எங்கும் போய் விடாதீர்கள். இளவரசர் எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை. நான் தேடி வருகிறேன்." கொல்லைப்புறம் ஓடினாள். குதிரைச் சேணம் பூட்டினாள். மேலே தாவி ஏறினாள். குதிரையை வீட்டின் இடப் பக்கம் வழியாக ஓட்டிக்கொண்டு வந்தாள். தோட்டம் தாண்டினாள். தெருவில் வேகமாகக் குதிரையைச் செலுத்தினாள்.

பஞ்சவன்மாதேவி குதிரையில் வேகமாகப் போவதை அந்தத் தளிச்சேரிப் பெண்டிர் தெரு பார்த்தது.

நாம் எல்லோரும் இந்தக் கைதியோடு உத்தம சோழனைப் பார்க்கப் போகிறோம் என்று இளவரசர் சொல்ல ஆரம்பித்ததும், பஞ்சவன்மாதேவி வந்து இறங்கினாள்.

இளவரசருக்கு அருகே போய் சட்டென்று அமர்ந்து கொண்டாள். சுற்றியுள்ளவர்களைப் பார்த்தாள். மெய்க்காவல் படையைத் தயவுசெய்து நகர்ந்து கொள்ளுங்கள் என்று சொன்னாள். அவள் வந்த வேகமும், நகர்ந்த வேகமும் மிக முக்கியமான செய்தியைச் சொல்கிறாள் என்று தெரிந்தது. இளவரசர் காதில் கை வைத்துக் கொண்டாள். அவருக்கருகே இருந்த வந்தியத்தேவர் என்ன என்று கேட்க, அவரையும் அருகே அழைத்தாள்.

இரண்டு பேருக்கும் நடுவே நம்பியாண்டார் நம்பி கதறிய விஷயத்தைச் சொன்னாள்.

அவர்கள் திகைத்தார்கள்.

இளவரசர் தலைகுனிந்து யோசித்தார்.

"இப்பொழுது என்ன செய்வது."

"இதைப் பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம் அருண்மொழி. தஞ்சைக்குப் போவோம். அங்கு ஆட்சி மாற்றம் நடந்தால் சிதம்பரமும் வசப்படுமல்லவா."

"இல்லை. ஆட்சி மாற்றம் எப்போது வேண்டுமென்றாலும் செய்து கொள்ளலாம். அங்கே கரையான்கள் ஓலைகளைத் தின்று கொண்டிருக்கின்றன. நான் போய் ஆட்சி மாற்றம் நடப்பதற்குள் இன்னும் நூறு ஓலைகளை கரையான்கள் தின்றுவிடும். எவ்வளவு சீக்கிரம் எடுக்க வேண்டுமோ, அவ்வளவு சீக்கிரம் இவைகளை எடுக்க வேண்டுமென்பது என்னுடைய ஆசை. எனவே நாம் ஆதித்தகரிகாலனைக் கொன்றதை மறந்துவிட்டு, ஆட்சி மாற்றம் பற்றி மறந்துவிட்டு, நம்பியாண்டார் நம்பிக்கு உதவி செய்வோம் வாருங்கள், நம்மைவிட, நாம் ஆட்சியை விட, நாம் அரசாட்சி செய்வதைவிட தமிழ் முக்கியம். தேவார திருவாசகங்கள் முக்கியம். சைவ சமயம் முக்கியம்."

விலுக்கென்று அந்த வேகமுள்ள இளைஞர் இளவரசர் அருண்மொழி எழுந்திருந்தார்.

பஞ்சவன்மாதேவி திகைத்தாள்.

"என்ன.. என்று வந்தியத்தேவரை கேட்டாள்.

"யார் கொன்றார்கள் என்று தெரிந்துவிட்டது. ஆதித்த கரிகாலனை எப்படிக் கொன்றார்கள் என்றும் தெரிந்து விட்டது. அவர்களிடம் கூட இருந்தவன், தெள்ளத் தெளிவாகக் கதை போலச் சொல்லிவிட்டான். இளவரசர் கதறி அழுதுவிட்டார். இரவு முழுவதும் தனித்திருந்தார். ஆனாலும் இப்பொழுது திட்டத்தை மாற்றிக் கொள்கிறார் என்று சொல்ல பஞ்சவன் மாதேவிக்குப் புரிந்தது.

'என் ஐயனே. உன்னைவிட தமிழ் முக்கியமா உனக்கு. உன்னைவிட சைவசமயம் முக்கியமா உனக்கு. என் ஐயனே... எப்பேர்ப்பட்ட உத்தம புருஷன் நீ. எப்பேர்பட்ட சிந்தனைச் செம்மல் நீ. எப்பேர்ப்பட்ட பக்திமான் நீ. அவர் அமர்ந்த இடத்தைத் தடவி நெற்றியில் திருநீறாய் இட்டுக் கொண்டாள். அவரைப்பின் தொடர்ந்தாள்.

நாவ்வர் சிலைகளுள்ள அறை இரவோடு இரவாக உடைக்கப்பட்டு, அங்கிருந்த பஞ்சவன்மாதேவியிடம் கொடுக்கப் பட்டு, பஞ்சவன்மாதேவியாலும், செங்காளியாலும், மற்ற தளிச்சேரிப் பெண்டுகளாலும் புளியும் வேறு சில மூலிகைகளும் போட்டு பளபளப்பாக துடைக்கப்பட்டு புதிய வஸ்திரங்கள் சார்த்தப்பட்டு, சந்தனக் குங்குமம் இடப்பட்டு, மாலைகள் போடப்பட்டு வைக்கப்பட்டிருந்தன.

கோவிலிலிருந்து ஒற்றைப் பல்லக்கு பெரிதாய் கொண்டு வரப்பட்டது. எதற்கு என்று கோவில் அதிகாரிகள் கேட்டபோது, சும்மாயிரு என்று அவரை வந்தியத்தேவர் நெட்டித் தள்ளினார்.

தள்ளுவது வந்தியத்தேவர் என்பதால் அவருக்கு எதுவும் செய்யத் தெரியவில்லை. பல்லக்கில் பஞ்சவன் மாதேவி வீட்டிலிருந்த சிலைகள் அமர்த்தப்பட்டன. கயிற்றால் இறுக்கிக் கட்டப்பட்டன. மெய்க்காவல் வீரர்கள் வேட்டியை மடித்து தோள் கொடுத்தார்கள். வேறு சில வீரர்கள் குடியானவர்கள் போலச் சுற்றிக் கொண்டார்கள். தளிச்சேரி பெண்டுகள் முன்னே நடனமாடினார்கள். குடைகள் விரிக்கப்பட்டன. பதாகைகள் பறந்தன. இளவரசர் அருண்மொழி குளித்துவிட்டு இடுப்பில் விபூதிப் பையுடன், தோளில் சால்வையுடனும், வெறும் காலோடு அந்த ஊர்வலத்திற்கு முன்னேவர.. உடைவாளோடும், கவசத் தோடும், குறுவாளோடும் போர்க்கோலம் பூண்டு வந்தியத் தேவரும், பரமனும் மற்ற வீரர்களும் சுற்றி நடந்து வந்தார்கள். கோவிலுக்கு வந்ததும் எக்காளங்களும், பறைகளும் முழங்கப் பட்டன. முரசு அதிர்ந்தது.

அந்தணர்கள் சீற்றமானார்கள். என்ன இந்த நேரத்தில் என்றார்கள்.

ஒரு மறவர் ஓடிப்போய் காண்டாமணியை அசைக்க ஊர் முழுவதும் அந்தச் சப்தம் கேட்டது.

என்ன இப்போது மணி அடிக்கிறதே என்று அந்தணர்கள் பரபரத்தார்கள்.

அங்கங்கு இருந்தவர்கள் கோவிலுக்குள் ஓடி வந்தார்கள். உறங்கியிருந்த தலைமை தீட்சிதரைத் தட்டி எழுப்பினார்கள்.

தலைமை தீட்சிதர் வந்து அருகே நின்றார்.

"என்ன இது. பிற்பகல் நேரத்தில் மணி அடிக்கக் கூடாது. முரசு ஒலிக்கக்கூடாது. இது இறைவன் தூங்குகின்ற நேர மல்லவா."

"நீங்கள் தூங்குகிறீர்கள் என்று சொல்லுங்கள். இறைவன் தூங்காதவன். ஒரு போதும் கண் அயராதவன். உங்கள் தூக்கம் கெட்டுவிடாதா. வாரும் இப்படி" என்று இளவரசர் அருண் மொழி அதட்ட, "இளவரசரா, வணக்கம் வருக வருக. எங்கே பூர்ணகும்பம்." என்று நீட்ட, "எனக்குப் பூர்ணகும்பம் தேவை



சேனாதிபதி கிருஷ்ணன்
ராமனான பிரம்மராயர்

யில்லை. என்னை விடவும் பெரியவர்கள் வந்து நிற்கிறார்கள்." என்று சொல்ல யார் என்று அவர் கேட்கிறார்.

இளவரசர் திரைச்சீலைகளை விலக்க உள்ளுக்குள் நால்வர் இருந்தார்கள்.

"என்ன இது." என்று கேட்க. "என்ன இது என்று கேட்கிறீர்களே. யார் இவர்கள் என்று கேளுங்கள்."

"யார் இவர்கள்."

"இவர் திருஞானசம்பந்தர். ஆளுடைப்பிள்ளை என்று அன்பாக அழைப்பார்கள். இலர் சுந்தரர், மிக அழகானவர். இறைவனுக்குத் தோழர். இவர் மாணிக்க வாசகர். சக்தி வடிவம். நெருப்பு. இவர் அப்பர். திருநாவுக்கரசர் என்ற பெயரும் உண்டு. மனமுருகி இறைவனைப் பாடுவதில் வல்லவர். ஆளுடைப் பிள்ளை காவத்தவர். இவர்கள் உங்களைக் காண வந்திருக்கிறார்கள்"

"இவர்கள் என்றால் இந்தச் சிலைகளா."

"இல்லை. இவர்கள் இறைவனுடைய அடியார்கள் அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர் என்று இறையடியார்கள் உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்கள்."

"எதற்கு"

"அவர்கள் எழுதிய பாடல்களைத் திரும்பப் பெறுவதற்கு."

"ஓ... அப்படி வருகிறீர்களா. நேற்று நம்பியாண்டார் நம்பி வந்து ஆடிவிட்டுப் போனானே. அதனுடைய தொடர்ச்சியா."

“உங்களை விடவும் உத்தமரை 'ன்' விகுதி போட்டுப் பேசுவது அழகல்ல.”

“ஆனால், என்னிலும் இளையவன்தானே.”

“இல்லை. வயதால் இளையவராக இருப்பினும் வாழ்க்கையில் மிகப்பெரியவர். இறைவனை நீர் கண்டதுண்டா. உமக்கு அவர் ஏதேனும் கொடுத்ததுண்டா. இறைவன் அவர் கையில் உணவு உண்டிருக்கிறார். எனவே, உம்மைவிடப் பல மடங்குப் பெரியவர். எனவே நம்பியாண்டார் நம்பியை மரியாதையாக அழையும். மறுத்தால் அழைக்க வைக்கப்படுவீர்” இளவரசர் சிரிப்பான ஆங்காரத்தோடு பேசினார்.

தலைமை தீட்சிதர் முகவாய் சொரிந்தார். இடமும் வலமும் பார்த்தார். மற்றவர்கள் கைகட்டி இருந்தார்கள்.

என்ன என்பதுபோல் மற்றவர்களை நோக்க, அவர்கள் தொடர்ந்து பேசுங்கள் என்று தலையசைத்தார்கள்.

“வெறுஞ்சிலைகளைக் கொண்டு வந்து மனிதர்கள் என்று சொன்னால் எப்படி ஏற்பது. இவை பஞ்சலோகத்தால் செய்யப் பட்ட பொம்மைகள்.”

“அப்படியா... உண்மையாகவா.”

“என்ன சந்தேகம். இவை பேசுமா.. பாடுமா.. உணவு, உண்ணுமா.. உம்மைப்போல இடுப்பில் கை வைத்துக் கொண்டு கர்ஜிக்குமா. எதுவும் பண்ணாது. பொம்மைகள்.”

“என்னடா இது. இது பொம்மைகள் என்று இவ்வளவு படித்தவர் சொல்கிறாரே. இது பொம்மைகள் இல்லை ஐயா அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர்.”

“இல்லை. பொம்மைகள்.”

“அப்பொழுது உள்ளே இருப்பது, அதுவும் பொம்மைதானே. நடராஜரும் பொம்மைதானோ. பஞ்ச உலோகம்தானோ அவன் சிரிப்பானா பேசுவானா. இப்படிக் கைவைத்து நிற்பானா. உணவு உண்பானா. ஒன்றும் செய்யாத பொம்மைதானா. அந்த பொம்மைக்கா இப்படி ஆடிக் கொண்டிருக்கிறீர்கள். சிவனே.. சிவனே... என்று கூறிக் கொண்டிருக்கிறீர்கள். ஒரு வேளை அவனை முன் வைத்து நீங்கள் கொட்டிக் கொண்டிருக்கிறீர்களோ. பஞ்சபட்ச பரமான்னம் வைத்து நக்கித் தின்று கொண்டிருக்கிறீர்களோ.”

பேச்சில் காரம் ஏறியது.

தலைமை தீட்கிதர் பின்னடைந்தார்.

"இளவரசர் ஏன் கோபமாக இருக்கிறீர்."

"கோபமாக இல்லை. நீர் குதர்க்கமாக இருப்பதால் நானும் குதர்க்கமாகப் பேசுகிறேன். உள்ளே இருப்பது கடவுள் எனில் இவர்களும் அடியார்கள், உள்ளே இருப்பது பொம்மை எனில் இதுவும் பொம்மை. தலைமை தீட்சிதரே இப்பொழுது சொல்லும். உள்ளுக்குள் இருப்பது கடவுளல்ல. சிதம்பரம் நடராஜர் அல்ல. அவனுக்கு ஒன்றும் செய்ய முடியாது. வெறும் பொம்மை. யார் வேண்டுமானாலும் தலையில் கால் வைத்து ஏறி நிற்கலாம் என்று சொல்லும். உரக்க இத்தனை பேர் கூடியிருக்கிறார்கள். இவர் களுக்கு முன்னே உள்ளிருப்பது ஒரு குப்பையும் இல்லை என்று சொல்லும்."

"இது அப்படியல்ல. நாங்கள் பூஜிப்பது."

"நீங்கள் பூஜித்தால் உயிருள்ளது. இன்னொருவர் பூஜித்தால் உயிரற்றதா. என்ன பேச்சு இது. அது உண்மையெனில், அது சத்தியமெனில் இதுவும் சத்தியம். நால்வர் வந்திருக்கிறார். தாங்கள் சொத்துக்களான தேவார, திருவாசகங்களைத் தேடி...

"இளவரசே. அந்தக் குப்பைகள் எதற்கு. அற்புதமான ரிக் வேத சாகை."

"தேவையில்லை. அது உங்கள் வழிபாட்டுக்குண்டான விஷயம். அதை நான் மறுக்க வில்லை. அதை எரிக்கவில்லை. அதைக் கரையானுக் குப் பலியிட வில்லை. இங்குள்ளோர் படித்து பரவசமாகின்ற தமிழ் வேதத்தைக் கேட்கின்றேன். அதைக் கரையானுக்குப் பலியிட்டுவிட்டு தரமுடியாது என்று சொல் கிறீர்கள். இது அயோக்கியத்தனத்தின் உச்சக் கட்டம். இது உள்ளி ருப்பது எனக்குத் தெரிந்திருப்பின் நான் எப்போதோ எடுத்தி ருப்பேன். தயவு செய்து உடனடியாக அந்தக் கதவைத் திறந்து விடுங்கள்."

"கதவு திறந்துவிட மறுத்தால்."

"உடைத்து எடுக்கப்படும்."

"அவ்வளவு தூரம் கோபமுற்ற பிறகு நான் எப்படி மறுப் பேன், யாரங்கே, சாவி கொண்டு வாருங்கள். பூட்டி வெகு நாளாயிற்று. அதைத் திறக்க முடியுமா என்று தெரியவில்லையா."

"திறக்க முடியாவிட்டால் என்ன. அறுத்து விடுகிறோம்."

"எதை."

"எது தடுக்கிறதோ அதை... எது மறிக்கிறதோ அதை...

"எல்லாவற்றிற்கும் துணிந்து விட்டீர் போலிருக்கிறது."

"ஆமாம்."

"ஐந்து வருடமாகப் பயந்திருந்தவர்கள் இப்பொழுது சீறிக் கிளம்புகிறார்கள்."

வேறு ஒரு அந்தணர் சொல்ல, "இல்லை, பதுங்கியது பாயத் தயாராகி விட்டது. அடி உதைகளுக்குக் கவலைகளே இல்லை. விழும். வாங்கிக் கொள்ளும்."

அவர்கள் பல்வக்கோடு அந்த அறைநோக்கி ஓடினார்கள். கதவுக்குப் பல்வேறு சாவிகள் போடப்பட்டன. எண்ணெய் விடப்பட்டது. திறக்க முடியவில்லை என்றதும் தன்னுடைய உடைவாளை சட்டென்று நாதங்கியில் விட்டு முழு பலத்தோடு இளவரசர் அருண்மொழி இழுத்தார். நாதாங்கி பிய்ந்துகொண்டு படேர் என்று விழுந்தது. இளவரசர் பின்னடைய அவரைப் பரமன் தாங்கிக் கொண்டான்.

நம்பியாண்டார் நம்பி திபுதிபுவென்று ஓடி வந்தார். தாவி அந்தச் சுற்றுப் பிரகாரத்தில் ஏறினார்.

'இவன்தான்... இவன்தான்..' அந்தணர்கள் பல்லைக் கடித்தார்கள்.

நம்பியாண்டார் நம்பி கதவுக்கருகே வந்து நின்றார்.

திறவுங்கள் என்று இளவரசர் அருண்மொழியைத் பார்த்து கை காட்டினார்.

இளவரசர் இரண்டு கைகளாலும் அழுத்தி அழுத்தி மிக மெதுவாக, மிக மிருதுவாக கதவு திறந்தார். உள்ளுக்குள் குனிந்து எல்லோரும் எட்டிப்பார்த்தார்கள். புகையாய் தூசு மண்டியிருந்தது. உள்ளே மலை போல ஒரு கரையான் புற்று இருந்தது.

"என் கடவுளே... என் கடவுளே... கரையான் புற்று கட்டி விட்டதே. ஓலைகள் பாழாய் இருக்குமே."

நம்பியாண்டார் நம்பி அழுதார்.

மெல்ல உள்ளே புகுந்தார். உள்ளே போய் புற்று மண்ணில் கை வைத்தார். பொல பொலவென்று உதிர்ந்தது. இன்னும் தள்ளினார். பல ஓலைகள் அப்படியே பொடித்து விழுந்தன. இன்னும் தள்ளினார். இன்னும் ஓலைகள் பொடித்து விழுந்தன.

அவர் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து கொண்டார்

"நான் இனிமேல் கை வைக்கமாட்டேன். இருப்பதையும் நான் கலைத்து விடுவேனோ என்று பயமாக இருக்கிறது."

"என்ன செய்தால் சரியா வரும்."

இளவரசர் பரபரத்தார்.

"எண்ணெய் விட வேண்டும். நிறைய தைலம் விட வேண்டும். தைலம் விட்டு புற்றை மெல்ல கரைக்க வேண்டும்." என்று சொல்ல, பரமன் உள்ளே ஓடினான்.

மடப்பள்ளிக்குப் போய் இரண்டு அண்டாக்கள் உள்ள தைலத்தைத் தூக்கினான். யாரோ தடுத்தார்கள்.

வந்தியத்தேவர் உள்ளே போய் தடுத்தவன். முகத்தில் அறைந்தார். அவன் சுருண்டு விழுந்தான். அவரும் ஒரு தைலப் பானையைத் தூக்கிக் கொண்டார். சிறுசிறு சொம்புகள் மெய்க்காவல் வீரர்கள் கொண்டு ·வந்தார்கள். தைலப்பானை உள்ளே போயிற்று. மெல்ல சொம்பில் தைலத்தை மொண்டு புற்றின் மீது நிதானமாக நம்பியாண்டார் நம்பி ஊற்றினார்.

அந்தணர்கள் வெளியே குவிந்தார்கள். சில பேர் கையில் வாளும், வேலும் மின்னின. யாரோ உரத்த குரலில் கர்ஜித்தார் கள்.

"என்ன திமிர். எங்களுடைய இடத்திற்கு வந்து யார் இந்த அதிகாரம் செய்வது." என்று ஒரு அந்தணர் சொல்ல, இளவரசர் வாள் உருவி வெளியே வந்தார்.

"வெட்டி வீழ்த்துவேன். எவனடா அது. வா." என்று கீழே இறங்கினார்.

"அந்தணரைக் கொல்வது பாபம்."

"கடிக்கவருவது பாம்பாக இருந்தால் விட்டு விடுவோமா. நசுக்கிக் கொல்லுவோம். முட்ட வருவது ரிஷபமாக இருந்தால் விட்டுவிடுவோமா. கழுத்தில் அறைந்து நிற்க வைப்போம். கலைந்து போங்கள்."

*உத்தரவிட்டார்.*

*அந்தணர்கள் கலைந்து போனார்கள்.*

*மூன்று அந்தணர்கள் குதிரை ஏறி தஞ்சை நோக்கிப் பயணமானார்கள். அன்று இரவு முழுவதும் தைவக் காப்பு நடந்தது. பிறகு மெல்வ ஒரு ஓலையை உருவி விரலால் வழித்து நம்பியாண்டார் நம்பி படிக்கத் துவங்கினார்.*

"அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை
அணுவை யார்க்கும் தெரியாத தத்துவனை
தேனை பாலை திகழ் ஒளியை தேவர்தம் கோனை
மற்றைக் கரியானை நான்முகனை கனலை காற்றை
கனைகடலை குலவரையைக் கலந்து
நின்ற பெரியானை
பெரும்பற்றப் புலியூரானை பேசாத
நாளெல்லாம் பிறவாநாளே."

*புரிந்தவர்கள் கண்களில் ஜலம் வழிய நின்றார்கள். கை கூப்பினார்கள். இளவரசர் மனம் கரைந்தார்.*

*அவன் விடியலில் தன் சிறு படையோடும், பஞ்சவன் மாதேவியோடும், செங்காளியோடும், தான் மீட்டு வந்த கைதியோடும் பயணமானார்.*

*அவர் காப்பாற்றிய தமிழும், சைவ சமயமும் அவர் பின்னே தொடர்ந்து வந்தன. இளவரசர் அருண்மொழியை உயர்த்துவோம் என்று வாழ்த்தின.*

*பஞ்சவன்மாதேவிக்கு மிக அருகே தலையணையை உயர்த்திப்போட்டு அதன் மீது முழங்கை வைத்து, தொலைதூரம் பார்த்தபடி சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தார்.*

*இருபத்துமூன்று வருடங்களுக்கு முன்பு பஞ்சவன்மாதேவியைப் பார்த்ததும், பஞ்சவன்மாதேவியின் துணையோடு ஆதித்த கரிகாலனைக் கொன்றது யார் எனக் கண்டு பிடித்ததும், அவள் கொடுத்த உற்சாகத்தில் சிதம்பரத்திலுள்ள தனியறையில் பூட்டி வைக்கப்பட்டிருந்த தேவார திருவாசகங்களைக் கதவு உடைத்து வெளிக்கொண்டு வந்து, நம்பியாண்டார் நம்பியிடம் கொடுத்து தொகுக்கச் சொன்னதும், பிறகு உத்தம சோழரைப் பதவியிறக்கியது பற்றியும் விரிவாக பேசிக் கொண்டிருந்தார்கள்.*

ஞாபகம் இருக்கிறதா.. ஞாபகம் இருக்கிறதா.. என்று கேட்டுக் கேட்டு பல விவரங்கள் அவர் சொல்ல, அவர் மறந்த விஷயங்களை பஞ்சவன்மாதேவி எடுத்துக் கொடுக்க பழம் நினைவுகளில் இரண்டு பேரும் திளைத்துக் கிடந்தார்கள்.

பெரும்படையோடு நான் தஞ்சையை நோக்கி வருகிறேன் என்று தெரிந்ததும் உத்தமசோழனைக் காக்க வேண்டிய அந்த இரண்டு பிரம்மராயர்களும் குதிரை ஏறி தப்பித்து வேறு வழியாக உடையார்குடிக்குப் போய் விட்டார்கள். உடையார் குடியிலுள்ள அந்தண வீரர்களையும், கீழைச்சாளுக்கியத்திலுள்ள வீரர்களையும் ஒன்றாக்கி என்னைத் தாக்கலாம் என்று திட்டமிட்டார்கள்.

அரசராக வீற்றிருக்கின்ற சிற்றப்பனான உத்தம சோழரைப் பார்த்து ஏன் இப்படிச் செய்து விட்டீர்கள் என்று கேட்க, உத்தம சோழர் நான் ஒன்றும் செய்யவில்லையே என்று சமாதானம் சொல்ல, அப்படியானால் ஆதித்த கரிகாலனைக் கொன்றது யார் என்று கேட்க, தனக்குத் தெரியாது என்று சொல்ல, சிரித்தபடியே ஆதித்த கரிகாலனைக் கொன்றது, நீ பிரம்மராயராகப் பதவி கொடுத்து வைத்திருக்கின்ற ரவிதாஸனும் பரமேஸ்வரனும் என்று சொல்ல, அதை உத்தமசோழர் மறுக்க, உத்தமசோழருக்கு முன்னே அந்தக் கைதியை நிறுத்திப் பேச வைக்க உத்தமசோழர் மௌனமாக அமர்ந்திருந்தார்.

"சரி, நான் இப்போது பரமேஸ்வரனையும், ரவிதாஸனையும் தேடிப் பிடித்து இந்தச் சபைக்கு கொண்டு வருகிறேன். இந்தச் சபையில் அவர்களை வைத்து உத்தமசோழருக்கும், இதற்கும் சம்மந்தமுண்டா என்று விசாரிக்கிறேன். அவர்கள் இருக்கிறது. ஆதித்த கரிகாலனைக் கொன்றது உத்தமசோழருடைய தூண்டுதல் பேரில்தான் என்று சொன்னால், நீங்கள் என்ன செய்வீர்கள்... என்று வினவ உத்தமசோழர் எழுந்து கைகூப்பினார்.

"உன்னைத் தாண்டி என்னைப் பதவியில் ஏற்றுவதாய் ரவிதாஸனும், பரமேஸ்வரனும் சொன்னார்கள். அவர்கள் முதலில் என் தாய் செம்பியன்மாதேவியைத் தொடர்பு கொண்டு, பிறகு என் தாய்மூலம் என்னை வந்து பார்த்தார்கள். இந்த அரசாட்சி எனக்குக் கிடைக்காது. அது உன் கைக்குத்தான் போய் சேருமென்று நான் நினைத்திருந்தேன். ஆனால் அருண்மொழியைத் தாண்டி, இந்த அரசாட்சிக்கு நாங்கள் வர உதவுகின்றோம். எங்களை பிரம்மராயராக வைப்பாயா என்று கேட்டார்கள். நான் ஆவல் காரணமாக சரி என்று சம்மதித்தேன். நான் சம்மதிப்பதற்கு என் தாயும் காரணம். உன்னுடையது

தானே அரசாட்சி. உனக்கு உதவ ஆள் இல்லாததனால் தானே சோம்பிக் கிடக்கிறாய். இதோ உதவ கடவுள் ஆள் அனுப்பி விட்டார் என்று சொன்னார்கள். நானும் சரியென்று தலை யசைத்தேன். இதற்கு யார் இடைஞ்சலாக இருக்கிறார்களோ, அவர்களை அப்புறப்படுத்திவிட்டு பிறகு வருகிறோம் என்று போனார்கள். இதற்கு என்ன அர்த்தம் என்று எனக்குத் தெரியவில்லை. இதற்கு இடைஞ்சலாக இருப்பவர் ஆதித்த கரிகாலன்தான் என்றும் சொன்னார்கள். நான் வேறு தேசத்திற்கு விரட்டி விடுவார்கள் என்று நினைத்தேன். இப்படிக் குத்திக் கொல்வார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

ஏன் குத்திக் கொன்றீர்கள் என்று கேட்க, தங்களைக் குத்த வந்ததாகச் சொன்னார்கள். நான் நம்பவில்லை. அவர்கள் பாண்டியரின் ஆபத்துதவிகள் என்று பிற்பாடு எனக்குத் தெரிந்தது. நான் அதுபற்றி விசாரித்த போது, உனக்கு நான் ஏதேனும் துரோகம் செய்தேனா, எந்த இழிவும் செய்தேனா, நான் பாண்டியனின் ஆபத்துதவி தான். ஆனால் உன்னுடைய பிரம்மராயன் உனக்கு விசுவாசமாகத் தானே இருக்கிறேன் என்று சொல்லி விட்டார்கள். எனக்கு அவர்களை மீற முடியவில்லை. மீறவொட்டாது பல்வேறு விஷயங்களில் என்னைக் கட்டுப் படுத்தியிருந்தார்கள். என்னைவிட என் தாய் மீது அதிக நம்பிக்கை வைத்திருந்தார்கள்.

ஆதித்த கரிகாலனைக் கொல்லச் சொல்லி நான் சொல்ல வில்லை. ஆதித்த கரிகாலன் இறந்தது எனக்கு வருத்தம்தான். ஆனால், என் தாயின் கைப்பாவையாக நானிருக்க, என் தாயை அவர்கள் தங்கள் கைப்பாவையாக மாற்றிக் கொண்டார்கள். எனவே, சோழதேசம் அவர்களிடம் வந்துவிட்டது. அடுத்த வருடம் அடுத்த வருடம் என்று நகர்ந்து அவர்கள் பலம் பொருந் திய வீரர்களாக மாறி விட்டார்கள். எல்லா இடத்திலும் அந்தண வீரர்களும் அந்தண ஒற்றர்களும், அந்தண மந்திரிகளுமே இருப்பதைப் பார்த்து நானும் புழுங்கினேன். மீற முடியவில்லை. நான் எந்த மரியாதையும் இழக்காததால் தொடர்ந்து அரசனாக இருந்தேன். ஆனால், அந்த அரசாட்சி இப்போது அலுத்து விட்டது. இப்படியொரு அரசனாக இருப்பதற்கு பதிலாய், எங் கேனும் யாத்திரை போகலாம் என்றுதான் நான் எண்ணி யிருந்தேன். நீயே வந்துவிட்டாய். இது உன் அரசவை. இது உன் ஆட்சிப் பீடம். நீயே மன்னனாக இரு. நீயே சோழ தேசத்தை வளமான, பலமான நாடாக மாற்று. அவர்களை நீ என்ன செய்தாலும் எனக்கு அக்கறையில்லை.

ஒருவேளை என்னைக் கொல்ல வேண்டும் என்று விரும் பினாலும் நான் அதற்கும் முற்படுகிறேன். ஆனால், என் மகன் கண்டராதித்தனை நீ தயவு செய்து உயிரோடு வைத்துக் காப் பாற்ற வேண்டும். ஒருநாளும் அவனுக்கு ஒரு தீங்கும் ஏற்படாது நீ வளர்த்துவர வேண்டும். இது மட்டும்தான் என் கோரிக்கை." கைதட்டி கண்ணீர் வழியச் சொல்ல, இளவரசர் அருண்மொழி மனம் நொந்தார். வெகுநேரம் சிந்தித்தார்.

சட்டென்று தன்னை சுதாரித்துக் கொண்டு வந்தியத் தேவரோடும், பழுவேட்டையரோடும் மூவேந்த வேளாளரோடும், செங்காளியோடும், பஞ்சவன் மாதேவியோடும் கலந்து ஆலோசனை செய்தார்.

நல்ல நாளில், நல்ல நேரத்தில் ஈசான சில பண்டிதரை முன் நிறுத்தி தன்னை சோழதேசத்து சக்ரவர்த்தியாக பிரகடனம் செய்து கொண்டார். அது மட்டுமல்லாதும் உடனடியாய் உடையார்குடிக்கு ஸ்ரீ முகம் அனுப்பினார். ரவிதாஸனையும் பரமேஸ்வரனையும் துரோகிகள் என்று சொல்லி அவர்களுடைய பெண்டுகளையும், குழந்தைகளையும் பெற்றோர்களையும், அவர்கள் வீட்டு பிள்ளைகளுக்கு, பெண் கொடுத்தவர்களையும், பெண் கொடுத்த வேட்டகத்தார்களையும் உடனடியாய் சகல உறவுகளையும் துறந்துவிட்டு ஊர்விட்டுப் போக வேண்டுமென்று கட்டளையிட்டார். அந்த நிலங்களுக்கு ஒரு விலை போட்டு அதற்குண்டான காசை கிராமத்தினரே கொடுத்துவிட வேண்டும் என்று சொல்லி தனியாக ஒரு மூட்டை பொற்காசு அனுப்பினார்.

ஸ்ரீ முகம் கொண்டு போனது பரமன். பரமனுக்குப் பின் பழுவேட்டரையர் ஒரு பெரும்படையோடு போய் உடையார் குடியைச் சுற்றி வளைத்துக் கொண்டார். உடையார்குடி சுற்றி காவல் வீரர்களும், உடையார்குடிக்குள் இருக்கின்ற மறவர்கள் சீறி நிற்பதும் தெரிந்து கொண்டு ரவிதாஸனும், பரமேஸ்வரனும் அந்த ஸ்ரீ முகத்தில் சொன்னதற்கேற்ப ஊர் விட்டுப் போகத் தயாராக இருங்கள்.

குதிரைகளை விட்டுவிட்டு கால்நடையாக வயதான பெற்றோர்களையும், குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு மேற்கு நோக்கி நகர்ந்தார்கள்.

கருவூர் வழியாக மலைகள் ஏறி சேரதேசம் போனார்கள். ஊர் முழுவதும் மக்கள் வரிசையாக நின்று இழிவு படுத் தினார்கள். கொன்றுவிட வேண்டும் என்ற கோபம் சோழதேசத்

தின், எல்வா பக்கத்திலிருந்தும் வந்தது. பழுவேட்டரையர்தான் மிகத் துடிப்பாக இருந்தார். ஆனால், மேலே ஒரு துரும்புகூட படக்கூடாது. எந்தவித அவமானத்திற்கும் அலர்கள் ஆட்படக் கூடாது என்று சக்ரவர்த்தி உறுதியாகக் கட்டளையிட்டு, பரமன் மழபாடி துணையோடு சோழதேச எல்லைவரை அவர்களை வழியனுப்பி லைத்தார்.

சோழதேசம் எல்லை தாண்டியவுடன் மறைத்திருந்த வில்லையும், அம்பையும் எடுத்து நாணேற்றி சோழதேசம் நோக்கி பல அம்புகளை செலுத்தி மண்ணில் குத்தியதாகவும், அங்கிருந்தே உரத்தகுரலில் கையசைத்து ஒரு நாள் மீண்டும் வருவேன் என்று சொன்னதாகவும் சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரிடம் தெரிவித்தார்.

சக்ரவர்த்தி படை திரட்டினார். பயிற்றுவித்தார். மரங்கள் வெட்டும் பல்வேறு கருவிகளை கருமார்களை விட்டுச் செய்யச் சொன்னார். ஆயுதங்களும், அம்புகளும் செய்யப்பட்டன.

பதவியேற்ற ஒன்பதாம் மாதம் மிகப்பெரிய படை சேரதேசத்திற்குள் நுழைந்து காந்தளூர்ச்சாலை கடிகையை உடைத்து தரைமட்டமாக்கி, எதிர்ப்பட்ட அத்தனை பேரையும் கொன்றது, அத்தனை பேரையும் அடித்துத் துலைத்தது. பல் கடித்த அத்தனை பேரையும் முகத்தில் அறைந்தது.

ரவிதாஸனும், பரமேஸ்வரனும் தப்பித்துப் போனார்கள். பல்லாயிரக்கணக்கான அந்தண வீரர்கள் அடிபட்டு இறந்து போனார்கள். அதற்குப்பிறகு சேரதேசத்திலிருந்து எந்தவிதமான லாலாட்டமும் இல்லை.

நம்பியாண்டார் நம்பி மிகக் கவனமாக ஓலைகளைத் தேர்ந்தெடுத்து, எடுத்தலைகளைப் பிரித்துப் படித்து பொருள் புரிந்து பல்லேறு பிரதிகள் எடுத்து சோழ தேசம் முழுலதும் தேவார திருவாசகம் படிப்பதற்குண்டான ஆட்களை நியமித்தார்.

சைவ சமயம் கொடிகட்டிப் பறந்தது.


சோழதேசம் செழிப்பாக வளர்ந்தது.

காந்தளூர்ச்சாலை கடிகையை அடித்துத் துவைத்து மீண்டு வந்த சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் பழு வூருக்குள் நுழைந்தது, அங்கே பஞ்சவன்மாதேவியை மேலப் பழுவூர் கோவிலில் திருமணம் செய்து கொண்டார்.

அதே குதிரையில் ஏற்றி தன்னோடு அரண்மனை அழைத்து வந்தார்.

பட்டமகிஷியிடமும் அறிமுகப்படுத்தின

பஞ்சவன்மாதேவியின் கொடி அந்த ரண்மனை பட்டொளி வீசி பறந்தது. அன்றிலிருந்து வரை விதமான இடர்பாடும் இல்லாமல் அந்தக் டி இன் சிறப்பாக, இன்னும் உயரே பறந்து கொண்டு இருக்கி



சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீராஜராஜத்தேவர் மனைவியருடன்

